# இணைக்கப்பட்டது

PEOPLE'S LEASING

THE TRUSTED LEADER

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி
ஆண்டறிக்கை

# 2021/22

# இணைக்கப்பட்டது

தொற்றானது ஒரு தனிப்பட்ட படிப்பினையினை அறிவுறுத்தியுள்ளதென்றால், அது வலுக்கட்டாயத்தின் கீழானாலும் சாத்தியத்தின் நோக்கெல்லையினை விரிவாக்கும் ஒரு தகவமைப்பு மூலோபாயத்தின் முக்கியத்துவமாகும். டிஜிட்டல் வழியாக மிகவும் மேம்பட்ட சாத்தியமான முறைகளில் எமது வணிகநாமத்தினை விரிவாக்குவதிலும், அதேவேளை நீடிப்புத்திறனின் அடிப்படைகளை பராமரித்தல் என்பவற்றுக்கான எமது பணிநோக்கினை சுற்றி எமது மூலோபாயம் காணப்பட்டது. இவ்வாண்டில், எமது முன்னேற்றத்திற்கான மூலகாரணம் எமது திடமான டிஜிட்டல் பிரசன்னம் என்பதுடன், இதனூடாக வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்தியதுடன் நிச்சயமற்ற நேரங்களில் இது மேலான அணுகத்தினையும் சௌகரியத்தினையும் கொண்டுவருகின்றது.

எனவே நிச்சயமற்ற இந்தக் காலத்தில் நாம் தொடர்ந்தும் எமக்கும் எமது பங்காளிகளுக்கும் இடையேயான இணைப்பினை நாடி பராமரிப்பதுடன் இதன் விளைவாக நாம் முன்னேற்றத்தினை மேற்கொள்ளும்போது எமது நிலைபேறுள்ள இணைப்புக்களை இது பலப்படுத்தும்.

இந்த ஆண்டறிக்கையானது எமது இணையத்தளத்திலும் கிடைக்கின்றது.
www.plc.lk/pdf/ar/plc-annual-report-2021-22-English.pdf

இயங்கலையில் மேலும் பார்க்கவும் www.plc.lk

# இணைக்கப்பட்டது

ஒரு சுருக்கவடிவம்

# தலைவரின் செய்தி



"பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி இலங்கை மக்களுக்கு 25 வருடங்கள் சேவையாற்றியுள்ளதுடன், பரஸ்பரமான இலக்குகள் மற்றும் பேரார்வங்களை அடைவதற்காக அவர்களுடன் ஒன்றாக பயணித்துள்ளது. இந்த வருடத்தின் செயற்திறனானது முதலாவது கூட்டாண்மை வழிநடத்தும் கொள்கைக்கான எமது கடப்பாட்டின் ஒரு பிரதிபலிப்பாகும். இது ஒரு மிகவும் கடினமான சவால் மிக்க ஆண்டில் முன்நிகழ்ந்திராத வாடிக்கையாளர்களுக்கு துணைபுரிவதற்கான பல சலுககைகளூடாக கம்பனியினால் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த வரிக்கு பிந்திய இலாபமான ரூபா 4.66 பில்லியனை நாம் வழங்கியுள்ளோம். உலக மீட்டலுடன் ஒத்திசைவாக ஒரு நிலைபேறுள்ள மற்றும் மீளெழுச்சியான பொருளாதாரம் நோக்கிய முன்னேற்றத்தில் பன்முக சிக்கல்கள் மற்றும் சுமைகளை வெற்றிகொள்வதற்காக நாடு ஒன்றுசேர்ந்துள்ள இந்த நேரத்தில் இந்த கொள்கையானது மிகவும் முக்கியமாக காணப்படுகின்றது.

டிஜிட்டல் மயமாக்கல் வருடத்தின் மூலோபாய முன்னுரிமை என்பதுடன் நாம் எமது செயல்முறைகளை சீரமைப்பதற்காக உள்நோக்கிப் பார்ப்பதனை ஆரம்பித்தோம். தொடர்ந்து வந்த விரைவான வெற்றியினை காண்பதில் சபையானது மகிழ்வடைவதுடன் அதிக திட்ட மைற்கற்களை விநியோகிப்பதற்கான கடப்பாட்டினால் ஊக்கமளிக்கப்பட்டது. இந்த நிலைமாற்றமானது நாம் கிரயச் செயற்திறன்களை அதிகரித்து இயக்கும்போது எமது அடுத்த அத்தியாயத்திற்கு இது அவசியம் என்பதுடன் இது வாடிக்கையாளர்களுடன் பயனுறுதியுடன் ஈடுபடுவதற்கும் எமது முதலாவது கொள்கையில் குறிப்பிட்டது போன்று அவர்களை மெய்யாகவே வலுவளித்தலினை நாம் இவ்வருடத்தில் அடைந்தவற்றுக்கான இணைப்புக் கருப்பொருளாக நான் பயன்படுத்தியுள்ளேன்."



**சுஜீவ ராஜபக்ஷ**
*தலைவர்*

# பி.நி.அ. இன் செய்தி



“31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கு பீபள்ஸ் லீசிங் அதன் அதியுயர்ந்து வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 4.66 பில்லியனை பதிவுசெய்தமையை அறிக்கையிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன் - இது மக்களுக்கான 25 வருடங்கள் சேவையினை கொண்டாடும் சமயம் ஏற்பட்ட பொருத்தமான ஒரு மைற்கல்லாகும். இந்த நேரத்திற்கு உகந்ததாக பகிரப்படும் செல்வம் காணப்படுவதுடன், பீபள்ஸ் லீசிங் ஆனது வாடிக்கையாளர்கள் மற்றும் அதன் பணியாட்களுடன் பணிபுரிந்துள்ளது. இது தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக உறுதியற்றதன்மை மற்றும் விரிவடையும் முறிவுப்பாதையாக காணப்பட்ட இவ்வாண்டில் அவர்களுக்கு முன்நிகழ்ந்திராத பெறுமதியினை உருவாக்குவதற்காகும். அதன் விளைவுகள் இந்த நிறுவனத்தினை இயக்கும் மக்களின் வெல்லமுடியாத மனநிலைக்கான சாட்சியாகும் என்பதுடன், எமது தொலைநோக்கினை நிறைவேற்றுவதற்காக எமது விழுமியங்களை வாழுதல்.

எமது திட்டங்கள் ஒரு முற்றுமுழுவதுமான மற்றும் பயனுறுதிமிக்க டிஜிட்டல் உருமாற்றத்திற்காகும் என்பதுடன், எமது உள்ளக மற்றும் வெளிவாரி பங்காளிகள் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்துடன் ஒத்திசைவாக காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் மற்றும் உருமாற்றல் செயல்முறையானது நோக்கத்திற்கு பொருத்தமானதாகவும் வாடிக்கையாளர் சௌகரியம், வலுவளித்தல் மற்றும் விரைவான சுழற்சி நேரங்கள் ஆகிய மூன்றினையும் வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்குமாகும். இவ்வருடத்தின் விரைவான வெற்றிகள் ஊக்கமளிப்பதாகக் காணப்பட்டதுடன் முன்னோக்கிய வருடத்தில் எமது உருமாற்றலில் நாம் மேலும் முன்னேற்றமடைவதற்கு எதிர்பார்க்கின்றோம்.”



**சமிந்திர மார்சலீன்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்*

# நிதியியல் மூலதனம்

**ரூ. 4.66 பில்லியன்**
வரிக்கு பிந்திய இலாபம்
(2020/21 - ரூ. 4.03 பில்லியன்)

**ரூ. 13.05 பில்லியன்**
தேறிய வட்டி வருமானம்
(2020/21 - ரூ. 11.92 பில்லியன்)

**ரூ. 180.76 பில்லியன்**
மொத்த சொத்துக்கள்
(2020/21 -ரூ. 164.55 பில்லியன்)

## முதலீட்டாளர் தகவல்கள்

**சந்தை மூலதனவாக்கம்**

| ஆண்டு | (ரூ.பில்லியன்) |
|---|---|
| 2020/21 | 20.11 |
| 2021/22 | 15.29 |

**பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள்**

| ஆண்டு | ரூ. |
|---|---|
| 2020/21 | 20.15 |
| 2021/22 | 20.57 |

**பங்கொன்றிற்கான சந்தை இறுதி விலை**

| ஆண்டு | ரூ. |
|---|---|
| 2020/21 | 11.80 |
| 2021/22 | 8.10 |

**பங்கிலாபச் செலுத்தல் விகிதம்**

| ஆண்டு | (%) |
|---|---|
| 2020/21 | 24.22 |
| 2021/22 | 46.79 |

**வலுக்குன்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள்**




**பங்குதாரர் நிதியம்**




**வைப்புகள்**




**கடன்கள் மற்றும் வருமதிகள் தேக்கம்**



# உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்

## மாகாணவாரியான கிளை பங்களிப்பு

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | சாளரக் காரியாலயம் | தங்கக்கடன் செயற்படும் கிளைகள் |
|---|---|---|---|
| வடமாகாணம் | 7 | 6 | 6 |
| வட மேல் மாகாணம் | 11 | 7 | 4 |
| மத்திய மாகாணம் | 11 | 7 | 8 |
| வட மத்திய மாகாணம் | 7 | 6 | 4 |
| கிழக்கு மாகாணம் | 8 | 8 | 3 |
| மேல் மாகாணம் | 36 | 4 | 15 |
| சபரகமுவ மாகாணம் | 9 | 10 | 2 |
| ஊவா மாகாணம் | 6 | 5 | 1 |
| தென் மாகாணம் | 16 | 9 | 3 |

ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் தொகுப்பு



# அறிவுசார் மூலதனம்

**ரூ. 6.51 பில்லியன்**
வணிகநாமப் பெறுமதி
(2020/21 - ரூ. 8.13 பில்லியன்)

**ரூ. 21.97 மில்லியன்**
அருவச் சொத்துக்கள்
(2020/21 - ரூ. 146.45 மில்லியன்)

**18,000 வருடங்களுக்கும் மேலான**
பணியாட்களின் திரண்ட சேவை
(2020/21 - 17,000 வருடங்களுக்கும் மேலான)

டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் தொகுப்பு (பருமன்)




# மனித மூலதனம்

**2,245**
பணியாட்களின் மொத்த எண்ணிக்கை
(2020/21 - 2,343)

**90.16%**
நிறுத்திவைத்தல் விகிதம்
(2020/21 - 93.80%)

**144**
புதிய ஆட்சேர்ப்புகள்
(2020/21 - 81)

புதிய ஆட்சேர்ப்புகளின் தொகுப்பு



# சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

**125,789**
கடன்வழங்கல்
வாடிக்கையாளர்கள்
(2020/21 - 117,773)

**ரூ. 27.53 மில்லியன்**
சமூக வெளிக்கள கூசபொ
இலான முதலீடு
(2020/21 - ரூ. 17.60 மில்லியன்)

**309,977**
வைப்பு வாடிக்கையாளர்கள்
(2020/21 - 291,319)

**382,913**
மொத்த வாடிக்கையாளர்கள்
(2020/21 - 353,414)

வாடிக்கையாளர்களின் பூகோளரீதியான பங்களிப்பு




# இயற்கை மூலதனம்

**4,681.72**
கம்பனியின் கரிம அடிச்சுவடு
($tCO_2e$)
(2020/21 - 3,810.88 $tCO_2e$)

**5,182.58**
குழுமத்தின் கரிம அடிச்சுவடு
($tCO_2e$)
(2020/21 - 4,381.67 $tCO_2e$)

**ரூ.1.87 மில்லியன்**
சூழல் பாதுகாப்பிலான முதலீடு
(2020/21 - ரூ. 2.77 மில்லியன்)

## ஒரு நிலைபேறுள்ள பெறுமதி உருவாக்கல் செய்கைமுறைக்கான எமது ஒருங்கிணைத்த அணுகுமுறை

ஒரு சுருக்கவடிவம்

| செயற்படும் சூழலின் தாக்கம் | பொருண்மை தலைப்பு | பெறுமதி உருவாக்கல் செய்கைமுறையில் நீஅஇ இலான முன்னிறுத்தம் | பெறுமதி உருவாக்கம்/பாதுகாப்பு மற்றும் இழப்பு | மூலோபாயக் கட்டாயங்கள் | முக்கிய மூலதன ஈடுபாடுகள் |
|---|---|---|---|---|---|
| நவீன பொருளாதாரத்தின் உலகளாவிய போக்காக மற்றும் வளர்ச்சிக் காரணியாக டிஜிட்டல்மயமாக்கல் | டிஜிட்டல்மயமாக்கல் | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE<br>11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES | டிஜிட்டல் மயமாக்கல் பணியாட்களின் வினைத்திறனை அதிகரிக்க உதவுவதுடன் அவர்களது ஆக்கத்திறனை மேம்படுத்துகின்றது. அத்துடன் இது பீபள்ஸ் லீசிங்கினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக மேம்பட்ட சுழற்சி நேரத்திலிருந்து நலனடைந்து வாடிக்கையாளர்கள் வளர்ச்சியடையும் பலவிதமான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு வலுவளிக்கின்றது. | நிலைபேறுள்ள வளர்ச்சியினை பின்பற்றுதல்<br>வாடிக்கையாளர் அனுபவத்தினை பெருக்குதல் | நிதியியல் மூலதனம்<br>உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்<br>அறிவுசார் மூலதனம்<br>மனித மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் |
| துறைசார் பங்குபற்றுநர்களிடையே அளவற்ற போட்டி | வாடிக்கையாளர் அனுபவம் | 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS | நிலைபேறுள்ள வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல் தேக்கங்களின் வளர்ச்சிக்கு மற்றும் கம்பனியின் வணிகநாமம் மற்றும் நற்பெயருக்கு துணையளிப்பதற்கு வாடிக்கையாளர் அனுபவம் ஒரு முக்கிய ஒப்பீட்டு அனுகூலமாகும் | வாடிக்கையாளர் அனுபவத்தினை பெருக்குதல் | நிதியியல் மூலதனம்<br>அறிவுசார் மூலதனம்<br>மனித மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் |
| உலகளாவிய பொருளாதார மந்தநிலை<br>படிப்படியாக இறுக்கமடையும் நாணயக்கொள்கை<br>நாட்டின் பொருளாதாரத்தில் தொற்றின் மோசமான தாக்கம்<br>துறையானது ஒரு மெதுவான வேகத்தில் வளர்ந்தது | நிலைபேறுள்ள நிதியளிப்பினூடாக நிலைபேறுள்ள வளர்ச்சி | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE | நிலைபேறுள்ள நிதியளித்தல் கருவிகள் வாடிக்கையாளர்கள் சமூக மற்றும் சூழல் வரன்முறைகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதுடன், அவர்களது செயலுக்கு பொறுப்பாயிருப்பதன் அவசியத்தில் வாடிக்கையாளர் விழிப்புணர்வினை மேம்படுத்துகின்து. | நிலைபேறுள்ள வளர்ச்சியினை பின்பற்றுதல்<br>வாடிக்கையாளர் அனுபவத்தினை பெருக்குதல்<br>எமது மக்களூடாக வேறுபடுத்துதல் | மனித மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்<br>இயற்கை மூலதனம் |

| | இலக்குவைக்கப்பட்ட முக்கிய பங்காளிகள் | எமது பதில் | தாக்கம் | இடர் வகை | உஅமு தலைப்புகளை விளித்துரைத்தல் |
|---|---|---|---|---|---|
| | வாடிக்கையாளர்கள்<br>பணியாட்கள் | பௌதீக இயற்பியல் கோட்பாடுக்கு மாத்திரம் வரையறை செய்யப்படாத புதிய வாடிக்கையாளர் அனுபவம் (PLC Touch/QR/ DCHEQUE/CAPP) | பெறுமதி சேர்க்கப்பட்ட கருவிகள் மற்றும் தனிச்சிறப்பான சேவையினூடாக திடமான வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் நிலைபேறுள்ள ஒப்பீட்டு அனுகூலம்<br>புத்தாக்கமான மொத்த தீர்வுகளூடாக வணிக நாமத்தினை பலப்படுத்தும் வலுவளிக்கப்பட்ட மற்றும் கடப்பாடுடைய தொழிற்சேனை | செயற்பாட்டு இடர்<br>த.தொ. மன்றும் தகவல் பாதுகாப்பு இடர் | |
| | வாடிக்கையாளர்கள்<br>பணியாட்கள் | கருவிகளது புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் மையத்தினை மேம்படுத்துதல் | பெறுமதி சேர்க்கப்பட்ட கருவிகள் மற்றும் தனிச்சிறப்பான சேவையினூடாக திடமான வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் நிலைபேறுள்ள ஒப்பீட்டு அனுகூலம்<br>திடமான வணிகநாமப் பெறுமதி மற்றும் திடமான சந்தை பங்களிப்பு, பங்காளிகளைக் கவர்ந்து அவர்களது நம்பிக்கையினை தக்கவைத்தல் | நற்பெயர் இடர் | GRI 417 |
| | உள்ளூர் சமூகங்கள்<br>வாடிக்கையாளர்கள் | நிலைபேறுள்ள நிதியளித்தல் கொள்கைகளுக்கு அமைவாக பீப்பள்ஸ் லீசிங் தொடர்ந்தும் பசுமைக் கடன்வழங்கல்களை ஊக்குவிப்பதுடன் நுசிநநி மற்றும் நுண்முயற்சியாளர்களுக்கு நிதிக்கான அணுக்கத்திற்கு வசதியளிப்பதற்கு பல்வேறு கருவிகளைக் கொண்டுள்ளது. மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதி மற்றும் நிவாரணம் என்பன நிலைபேறுள்ள நிதியளிப்பிற்கு துணைபுரிவதில் அதன் கடப்பாட்டினை உறுதிசெய்கின்றது. | இலாபகரத்தன்மை மற்றும் வணிக பருமன்களில் வளர்ச்சியானது, ஒரு திடமான மற்றும் பலமான கம்பனிக்கு இட்டுச்செல்கின்றது.<br>சமூக பொருளாதார உறுதியின்மைக்கு மத்தியில் நிலைபேறுள்ள வணிக வளர்ச்சி பின்பற்றப்பட்டது. | கடன் இடர்<br>மூலோபாய இடர் | GRI 201 |

## ஒரு நிலைபேறுள்ள பெறுமதி உருவாக்கல் செய்கைமுறைக்கான எமது ஒருங்கிணைத்த அணுகுமுறை (தொடர்ச்சி...)

ஒரு கருத்தவடிவம்

| செயற்படும் சூழலின் தாக்கம் | பொருண்மை தலைப்பு | பெறுமதி உருவாக்கல் செய்கைமுறையில் நீஅஇ இலான முன்னிறுத்தம் | பெறுமதி உருவாக்கம்/பாதுகாப்பு மற்றும் இழப்பு | மூலோபாயக் கட்டாயங்கள் | முக்கிய மூலதன ஈடுபாடுகள் |
|---|---|---|---|---|---|
| நாடானது ஒரு கடுமையான பொருளாதார சிக்கலினை அனுபவித்துக் கொண்டுள்ளது. | நிதியியல் ஸ்திரத்தன்மை | 1 NO POVERTY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE<br>10 REDUCED INEQUALITIES<br>11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES<br>12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION | நாட்டில் பொருளாதார சிக்கலின்போது பீபள்ஸ் லீசிங் திடமாக இருப்பதனையும் அனைத்து பங்காளிகளது அக்கறைகளைப் பாதுகாப்பதனையும் உறுதிப்படுத்துதல் | நிலைபேறுள்ள வளர்ச்சியினை பின்தொடருதல்<br><br>எமது மக்களினூடாக வேறுபடுத்தல் மூலம் நிறைவேற்றல் தனிச்சிறப்பினை அடைதல் | நிதியில் மூலதனம்<br>அறிவுசார் மூலதனம்<br>மனித மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் |
| உலகளாவிய தொற்று | ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு | 3 GOOD HEALTH AND WELL-BEING<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS | மார்ச் 2020 இலிருந்து நாடானது கோவிட்-19 தொற்றினால் பீடிக்கப்பட்டதுடன் இது வணிகங்களுக்கு பரவலான இடையூறுகளை விளைவித்துள்ளது. எமது பணியாட்களுக்கு ஒரு பாதுகாப்பான பணியிடச் சூழல் மற்றும் வாடிக்கையாளர்களது வணிகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஒரு பாதுகாப்பான இடத்தினை உறுதிப்படுத்துதல் ஒரு முக்கியமான முன்னுரிமையாகும். | நிலைபேறுள்ள வளர்ச்சியினை பின்தொடருதல்<br><br>சூழல் மற்றும் சமூகக் காரணிகளை ஒருங்கிணைத்தல் | மனித மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் |
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறுள்ள அபிவிருதத்தி இலக்குகளுடன் இணங்கியொழுகுதல் | வளங்களது உகப்பாக்கம் | 3 GOOD HEALTH AND WELL-BEING<br>6 CLEAN WATER AND SANITATION<br>7 AFFORDABLE AND CLEAN ENERGY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES<br>12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION<br>13 CLIMATE ACTION<br>14 LIFE BELOW WATER<br>15 LIFE ON LAND | வளங்களது உகப்பாக்கம், வினைத்திறன்கள் மற்றும் இலாப விடுமிகைகள் ஆகியவற்றை இயக்குதல் மற்றும் பங்காளிகளுக்கு வழங்கப்படும் பெறுமதியினை அதிகரித்தல் ஆகியவற்றிற்கு முக்கியம் என்பதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனையின் மையமுமாகும். | சூழல் மற்றும் சமூகக் காரணிகளை ஒருங்கிணைத்தல் | நிதியில் மூலதனம்<br>உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்<br>அறிவுசார் மூலதனம்<br>இயற்கை மூலதனம் |

| இலக்குவைக்கப்பட்ட முக்கிய பங்காளிகள் | எமது பதில் | தாக்கம் | இடர் வகை | உஅமு தலைப்புகளை விளித்துரைத்தல் |
|---|---|---|---|---|
| உள்ளூர் சமூகங்கள்<br>வாடிக்கையாளர்கள்<br>முதலீட்டாளர்கள்<br>பணியாட்கள்<br>வணிகப் பங்காளிகள்<br>அரசாங்கம் மற்றும் முறைமைப்படுத்துபவர்கள் | புதிய வாகனங்களது குத்தகைக்கு அப்பால் கருவித் தேக்கத்தினை பன்முகப்படுத்தல் மற்றும் புதிய கருவிகளுடன் இணைந்துள்ள இடர்களை முகாமைப்படுத்துதல் | நிதியியல் ஸ்திரத்தன்மை என்பது நீண்டகால நிலைபேறுள்ள வணிக வளர்ச்சியின் மிகவும் முக்கியமான தோற்றங்களில் ஒன்றாகும். | மூலோபாய இடர் | |
| பணியாட்கள்<br>வாடிக்கையாளர்கள்<br>உள்ளூர் சமூகங்கள் | கோவிட் சிகிச்சை மற்றும் கவனிப்பினை பலப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் கோவிட் இடைநிலை கவனிப்பு மத்திய நிலையங்களுக்கு அவசியமான மருத்துவ மற்றும் மருத்துவமல்லாத உபகரணங்களை கொடையளித்தமை<br><br>லேடி ரிஜ்வே வைத்தியசாலை மற்றும் அபேக்ஷா வைத்தியசாலை -மஹாரகம ஆகியவற்றில் நோயாளி தோழமையான சூழலை உருவாக்குவதற்கு மீன் காட்சியகங்களை பராமரித்தல்<br><br>தலைமைக்காரியாலயம் மற்றும் கிளைகளில் கோவிட் பர்துகாப்பிற்கான விசேட ஏற்பாடுகள்<br><br>தங்காலை ஆதார வைத்தியசாலையின் அடிப்படை கவனிப்பு பிரிவின் முன்பக்கத்தினை புதுப்பித்தல் மற்றும் இரண்டு சக்கர நாற்கலிகளை கொடையளித்தமை | சமூக பொருளாதார உறுதியின்மைக்கு மத்தியில் நிலைபேறுள்ள வணிக வளர்ச்சியினை பின்தொடருதல் | செயற்பாட்டு இடர்<br><br>மனிதவள இடர் | GRI 403<br>GRI 410<br>GRI 416<br>GRI 418 |
| உள்ளூர் சமூகங்கள்<br>வாடிக்கையாளர்கள்<br>முதலீட்டாளர்கள் | நீண்ட காலத்தில் பசுமையான கிளைக் கோட்பாடு<br><br>சீகிரிய கற்குகை தம்புள்ள மற்றும் பொலன்னறுவை கல் விஹாரவில் திண்மக்கழிவு வேறாக்கல் அலகுகளை நிறுவுதல்<br><br>பின்னவல யானைகள் சரணாலயத்தில் கல்வி விழிப்புணர்வு பலகைகள் காட்சிப்படுத்தல் அலகினை நிறுவுதல்<br><br>பெத்தகான சதுப்பநில பூங்காவில் ஒரு சூழல் உணர்வுள்ள கூட்டாண்மை பங்காளியாக சூழலமைப்பு சீராக்கலில் சூழல் விளம்பரப் பலகைகளை நிறுவுதல் | டிஜிட்டல்மயமாக்கல் உள்ளடங்கலான தாள்களற்ற முள்ளெடுப்புகள் மற்றும் வளங்களது பாதுகாப்பு நோக்கிய திட்டங்களின் கிரயச் சீர்படுத்தல்கள் | செயற்பாட்டு இடர்<br><br>மூலோபாய இடர்<br><br>நற்பெயர் இடர் | GRI 302<br>GRI 305<br>GRI 306 |

## ஒரு நிலைபேறுள்ள பெறுமதி உருவாக்கல் செய்கைமுறைக்கான எமது ஒருங்கிணைத்த அணுகுமுறை (தொடர்ச்சி...)

ஒரு கருக்கவடிவம்

| செயற்படும் சூழலின் தாக்கம் | பொருண்மை தலைப்பு | பெறுமதி உருவாக்கல் செய்கைமுறையில் நீஅஇ இலான முன்னிறுத்தம் | பெறுமதி உருவாக்கம்/பாதுகாப்பு மற்றும் இழப்பு | மூலோபாயக் கட்டாயங்கள் | முக்கிய மூலதன ஈடுபாடுகள் |
|---|---|---|---|---|---|
| உள்ளூர் பொருளாதாரங்களை மேம்படுத்துவதற்காக அரசாங்கமானது தனியார் மற்றும் அரச உடைமை நிறுவனங்களிடமிருந்து உதவியினை வலியுறுத்தியுள்ளது | உள்ளடக்கப்பட்ட நிதியளித்தல் மற்றும் ஆகக்குறைந்த சமத்துவமின்மை | 1 NO POVERTY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE<br>10 REDUCED INEQUALITIES | எமது இருப்புமையின் பகிரப்பட்ட நோக்கம் மற்றும் நாட்டில் உள்ளடக்கமான வளர்ச்சி நோக்கிய ஒரு பாரிய முன்னெடுப்பாகும். | வாடிக்கையாளர் அனுபவத்தினை பெருக்குதல் | நிதியியல் மூலதனம்<br>அறிவுசார் மூலதனம்<br>மனித மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் |
| தற்போது நிலவுகின்ற போட்டித்தன்மை அழுத்தத்திற்கு சிறந்த பொருத்தமான ஆற்றலை கவர்ந்து தக்கவைத்தல் | மனித ஆற்றல் அபிவிருத்தி | 4 QUALITY EDUCATION<br>5 GENDER EQUALITY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>10 REDUCED INEQUALITIES | எமது சேவையின் தூதர்களாக எமது பணியாட்கள் காணப்படுவதுடன், பயிற்றுவித்தலானது பணியாட்களின் செயற்திறன், ஈடுபாடு, நிறுத்திவைத்தல் மற்றும் வளர்ச்சியினை மேம்படுத்துகின்றது. நாம் சமூகத்தினை ஒட்டு மொத்தமாக மேம்படுத்தும் அதன் தாக்கத்தினையும் இனங்கண்டுள்ளோம். நாம் உயர்ந்த தரத்திலான கல்விக்கு மதிப்பளிப்பதுடன் பலவிதங்களில் கல்வி மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்கின்றோம். | எமது மக்களூடான வேறுபடுத்தலின் மூலம் நிறைவேற்று தனிச்சிறப்பினை அடைதல் | நிதியியல் மூலதனம்<br>அறிவுசார் மூலதனம்<br>மனித மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் |
| ஒழுங்குவிதிகளை பின்பற்றுதல் மற்றும் ஒரு வெளிப்படையான நிறுவனமாக இருத்தல் இலங்கையில் நிதித்துறையின் ஒரு அவசரத் தேவையாகும். | நெறிமுறை, நேர்மை மற்றும் இணக்கப்பாடு | 1 NO POVERTY<br>5 GENDER EQUALITY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>10 REDUCED INEQUALITIES<br>16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS<br>17 PARTNERSHIPS FOR THE GOALS | ஒரு முறைமைப்படுத்தப்பட்ட துறையில் செயற்படும்போது, நெறிமுறைகள், நேர்மை மற்றும் இணக்கப்பாடு என்பன எமது செயற்பாடுகளின் ஒவ்வொரு தோற்றத்திலும் தாக்கத்தினை செலுத்துகின்றது. | ஒரு நெறிமுறையான, திறந்த மற்றும் வெளிப்படையான வணிகச் சூழலைப் பராமரிப்பதன் மூலம் பொறுப்புள்ள பாரபத்தியத்தினை உருவகப்படுத்தல்<br>செயற்பாட்டு மற்றும் சமூக காரணிகளை ஒருங்கிணைத்தல் | நிதியியல் மூலதனம்<br>அறிவுசார் மூலதனம்<br>மனித மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் |

| இலக்குவைக்கப்பட்ட முக்கிய பங்காளிகள் | எமது பதில் | தாக்கம் | இடர் வகை | உஅமு தலைப்புகளை விளித்துரைத்தல் |
|---|---|---|---|---|
| உள்ளூர் சமூகங்கள்<br>வாடிக்கையாளர்கள் | எமது கருவிகளில் பல உள்ளடக்கிய நிதியளிப்பிற்கும் இலகுவான கொடுக்கல் வாங்கலுக்கும் துணைபுரிகின்றது | சமூக மற்றும் சூழல் சமத்துவமின்மைகளை முகாமைப்படுத்தல்<br>பொறுப்புள்ள நிதியளிப்பு மற்றும் சமூகங்களிலான முதலீடுகளூடாக சமூகங்களுக்கு வலுவளித்தல் | கடன் இடர் | |
| பணியாட்கள் | 110,764 பயிற்றுவித்தல மணித்தியாலங்கள் ( LMS பயிற்சி உள்ளடங்கலாக)<br>ஊக்குவிப்புத் திட்டங்கள் (தலைமைக் காரியாலயம் மற்றும் நாடுபூராவுமுள்ள கிளைகள்)<br>ஜூலை மற்றும் ஜனவரியில் அடித்தள மற்றும் இடைநிலை மட்ட பரீட்சைகளுக்கு 2ஆம் நிலை தகுதிவரிசை பரிசுகளை வழங்குவதற்கு AAT பரிசு நிதியத்திற்கு நிதி உறுதுணை வழங்கப்பட்டது. | வலுவளிக்கப்பட்ட மற்றும் கடப்பாடுடைய தொழிற்சேனை புத்தாக்கமான மொத்த தீர்வுகளூடாக வணிக நாமத்தினை பலப்படுத்துதல்<br>உயர் ஈடுபாடுள்ள, திருப்திகரமான மற்றும் ஊக்கமளிக்கப்பட்ட தொழில் சேனையினை விருத்தி செய்தல்<br>மிகவும் பொருத்தமான ஆற்றலினை கவர்ந்து தக்கவைத்துக்கொள்ளல் | ம.வ. இடர் | GRI 401<br>GRI 404<br>GRI 405<br>GRI 406<br>GRI 407 |
| அரசாங்கம் மற்றும் முறைமைப்படுத்துபவர்கள் | திடமான கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளை பராமரித்தமை<br>எமது வெளிப்படைத்தன்மையான அறிக்கையிடல் முறைமைகள் காலாகாலம் அங்கீகரிக்கப்பட்டு வெகுமதியளிக்கப்பட்டது. | கடுமையான ஆளுகை, இறுக்கமான முறைமைப்படுத்தல் கட்டுப்பாடு மற்றும் மேம்பட்ட இடர் முகாமைத்துவத்திற்கான கேள்வி<br>நிலைபேறுள்ள பகிர்ந்த பெறுமதியினை உருவாக்குவதற்கு தேசிய மற்றும் உள்ளூர் சமூக முன்னுரிமைகளை விளித்துரைத்தல் | இணக்கப்பாட்டு இடர் | GRI 205<br>GRI 207<br>GRI 307<br>GRI 308<br>GRI 413<br>GRI 414<br>GRI 419 |

## ஒரு நிலைபேறுள்ள பெறுமதி உருவாக்கல் செய்கைமுறைக்கான எமது ஒருங்கிணைத்த அணுகுமுறை (தொடர்ச்சி...)

ஒரு சுருக்கவடிவம்

| செயற்படும் சூழலின் தாக்கம் | பொருண்மை தலைப்பு | பெறுமதி உருவாக்கல் செய்கைமுறையில் நீஅஇ இலான முன்னிறுத்தம் | பெறுமதி உருவாக்கம்/பாதுகாப்பு மற்றும் இழப்பு | மூலோபாயக் கட்டாயங்கள் | முக்கிய மூலதன ஈடுபாடுகள் |
|---|---|---|---|---|---|
| தற்போதைய வலுசக்தி சிக்கல் மற்றும் உயர் பணவீக்க அழுத்தமானது சமூகத்தின் செலவழிக்கக்கூடிய வருமானத்தினை குறைத்துள்ளது. | வாடிக்கையாளர் நிதியியல் மீளெழுச்சி | 1 NO POVERTY<br>8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>10 REDUCED INEQUALITIES<br>11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES | தற்போதைய வலுசக்தி சிக்கலினால் பாதிப்படைந்து பயணிகள் போக்குவரத்து துறைக்கான கம்பனியின் வெளிப்பாடானது கணிசமானது என்பதுடன் கடன் இடரினை முகாமைப்படுத்துவதற்கு செயற்திறனான அணுகுமுறைகளை பயன்படுத்தி இந்த வாடிக்கையாளர்களுக்கு துணையளிப்பது முக்கியமாகும். | நிலைபேறுள்ள வளர்ச்சியினை பின்பற்றுதல் | நிதியியல் மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் |
| நாட்டின் வலுசக்தி சிக்கலின் காரணமாக இலங்கையின பயணிகள் போக்குவரத்து துறையானது கணிசமானளவு தாக்கமடைந்துள்ளது. | வணிகத் தொடர்ச்சி | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE<br>12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION | வஅறிநி பொது அவசியமான சேவைகளாகக் கருதப்படுவதனால் வணிக அமைவிடங்கள் செயற்பாட்டில் நிலைத்திருக்கும் அவசியம் காணப்படுகின்றது. தொடர்ச்சியான வலுசக்தி சிக்கலானது, போக்குவரத்து மற்றும் வலுசக்தி வழங்கல்கள் தடைப்படுவதனால் பீபள்ஸ் லீசிங் இன் செயற்பாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம் என்பதனால், வணிகத் தொடர்ச்சியினை ஒரு முக்கிய முன்னுரிமையாகக் கருதுதல் | நிலைபேறுள்ள வளர்ச்சியினை பின்பற்றுதல் | நிதியியல் மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்<br>மனித மூலதனம் |
| காலநிலை மாற்றத்திலான உலகின் அக்கறை | காலநிலை செயற்பாடு | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br>9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE<br>11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES<br>12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION<br>13 CLIMATE ACTION | பீபள்ஸ் லீசிங் ஒரு குறைந்த கரியமில பொருளாதாரத்திற்கான நிலைமாற்றலுக்கு துணை புரிவதற்கு கடப்பாட்டுடன் உள்ளதுடன் இது அதன் சொந்த செய்கைமுறைகளிலான மாற்றங்கள் மற்றும் நிதிக் கருவிகளுக்கான அதன் அணுக்கத்தினூடாக மாற்றத்திற்கான அவசியத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல். | சூழல் மற்றும் சமூக காரணிகளை ஒருங்கிணைத்தல் | நிதியியல் மூலதனம்<br>அறிவுசார் மூலதனம்<br>மனித மூலதனம்<br>சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்<br>இயற்கை மூலதனம் |

| இலக்குவைக்கப்பட்ட முக்கிய பங்காளிகள் | எமது பதில் | தாக்கம் | இடர் வகை | உஅமு தலைப்புகளை விளித்துரைத்தல் |
|---|---|---|---|---|
| வாடிக்கையாளர்கள்<br>உள்ளூர் சமூகங்கள் | பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு மறுசீரமைத்தல்களுடன் நிவாரணம் வழங்குவதற்காக "ஹித்தமித்துரு" திட்டத்தினை ஆரம்பித்தல் | எதிர்கால-பொருத்த வணிகத்தின் அபிவிருத்திக்கு துணையளித்தமை | கடன் இடர் | |
| பணியாட்கள்<br>வாடிக்கையாளர்கள் | பிபள்ஸ் லீசிங் ஆனது அதன் வணிகத் தொடர்ச்சி திட்டங்களை மீள்பரிசீலனை செய்துள்ளதுடன் நடைமுறை சவால்களை பிரதிபலிப்பதற்காக அவற்றை சீரமைப்பு செய்தது. | வணிக மூலோபாயமானது நாட்டின் மிகவும் சமீபத்தைய பொருளாதார மாற்றங்களுடன் ஒத்திருப்பதுடன் வணிகத் தொடர்ச்சியினை உறுதிப்படுத்துகின்றது. | செயற்பாட்டு இடர்<br>மூலோபாய இடர் | |
| உள்ளூர் சமூகங்கள்<br>வாடிக்கையாளர்கள் | பெத்தகான சதுப்புநில பூங்காவில் உயிரின வாழ்வியல் அமைப்பினை மீட்டமைப்பதற்கு ஒரு சூழல் உணர்வுடைய கூட்டாண்மை பங்காளியாக பாதுகாப்பதில் சூழல் தகவல் பலகைகளை நிறுவியமை<br>நீண்டகால பசுமை கிளைக் கோட்பாடு<br>தாள்களற்ற காரியாலய முன்னெடுப்புகள் | பணியிட கலாச்சாரத்தினுள் ஒரு குறைவான கரியமில பொருளாதாரத்திற்கான அவசியத்தில் ஒரு புரிந்துணர்வினை ஒருங்கிணைத்தல் | | GRI 302<br>GRI 305<br>GRI 306 |

# எதிர்கால கண்ணோட்டம்

விளைவு எதிர் இடரினை
உச்சப்படுத்துவதற்காக நிதியினை ஒரு
வினைத்திறனான விதத்தில் பயன்படுத்தல்




ஒரு ஆற்றலுடைய தேக்கத்தினை
விருத்திசெய்வதனூடாக திடமான
தலைமைத்துவ தயார்படுத்தல்

| | | | |
|---|---|---|---|
| கடன் தரத்தினை மேம்படுத்துதல் | ஆரோக்கியமான திரவச் சொத்துக்களைப் பராமரித்தல் | வைப்பு வளர்சியினை கடன் வழங்கல் வளர்ச்சியுடன் ஒத்திசைதல் | புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களின் நிலைபேறுள்ள பயன்பாடு |

# உள்ளடக்கம்


## 01
**நிறுவனக் கண்ணோட்டம்**
இந்த அறிக்கையினைப் பற்றி **1**
எம்மைப் பற்றி **3**
எமது பயணம் **10**
தலைவரின் செய்தி **14**
பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி **18**

## 23
**பெறுமதி உருவாக்கல் மாதிரி**
பெறுமதி உருவாக்கல் மாதிரி **26**
பங்காளிகள் ஈடுபாடு **28**
செயற்பாட்டுச் சூழல் **31**
பொருண்மை **34**
எமது மூலோபாயம் **40**

## 44
**முகாமைத்துவ கலந்துரையாடலும் பகுப்பாய்வும்**
குழும வணிக வரிசை மீளாய்வு **45**
நிதியியல் மூலதனம் **60**
உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம் **76**
அறிவுசார் மூலதனம் **80**
மனித மூலதனம் **88**
சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் **96**
இயற்கை மூலதனம் **106**

## 116
**பாரபத்தியம்**
பணிப்பாளர்கள் சபை **117**
கூட்டாண்மை முகாமைத்துவம் **121**
கூட்டாண்மை ஆளுகை **124**
கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை **156**
சபை கணக்காய்வுக் குழுவினது அறிக்கை **162**
மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் அறிக்கை **164**
தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவின் அறிக்கை **166**
பெயரிடல் குழுவின் அறிக்கை **168**
சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் அறிக்கை **170**
இணக்கப்பாட்டு இடர் முகாமைத்துவம **173**
இடர் முகாமைத்துவ மீளாய்வு **176**

## 198
**நிதியியல் அறிக்கைகள்**
நிதியியல் நாள்காட்டிr **199**
நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு **200**
நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான சுயாதீன உறுதிமொழி அறிக்கை **202**
நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களின் கூற்று **203**
பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் பிரதம நிதியியல் அதிகாரியினதும் பொறுப்புக் கூற்று **204**
சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை **205**
நிதிக் கூற்றுக்கள் - உள்ளடக்க அட்டவணை **208**
இலாபம் அல்லது நட்டக் கூற்று **209**
விரிவான வருமானக் கூற்று **210**
நிதி நிலைமைக் கூற்று **211**
உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று **212**
காசுப் பாய்ச்சல் கூற்று **214**
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் **215**

## 340
**துணை அறிக்கைகள்**
காலாண்டுப் பகுப்பாய்வு **341**
பத்து வருடச் சுருக்கம் **343**
US $ இல் இலாபம் அல்லது நட்டக் கூற்று **345**
US $ இல் நிதி நிலைமைக் கூற்று **346**
நிலைபேறுள்ள அறிக்கையிடலிலான சுயாதீன உறுதிமொழி அறிக்கை **347**
உஅமு உள்ளடக்கச் சுட்டி **349**
சுருக்கக்குறியீடு **352**
விகிதாசாரங்களின் அடிப்படை **354**
கூட்டாண்மைத் தகவல்கள் **355**
கூட்டத்திற்கான அறிவித்தல் **356**
பதிலாள் படிவம் **357**

# இந்த அறிக்கையைப் பற்றி

GRI | 102-10, 102-12, 102-45, 102-46, 102-48, 102-49, 102-50, 102-51, 102-52, 102-53, 102-54, 102-56




31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் 9ஆவது ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கையினை முன்னிலைப்படுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். நாம் எமது செயற்திறனின் ஒரு சமநிலையானதும் முழுமையானதுமான மீளாய்வினை ஒரு சுருக்கமான விதத்தில் வழங்குவதற்கு முனைவதுடன் இது கடந்த வருடங்களுடனும் ஒத்த நிறுவனங்களுடனும் ஒப்பிடுவதற்கு வசதியளிக்கின்து. கூட்டாண்மை அறிக்கையிடலில் தனிச்சிறப்பிற்கான எமது வேட்கையினை தொடர்வதில் 2020/ 21 இல் நிறைவடைந்த வருடத்திற்கான வருடாந்த ஒருங்கிணைக்கப்பட்ட எமது முன்னைய அறிக்கையில் அர்த்தமுள்ள மாற்றங்களை மேற்கொள்வதில் நாம் முன்னிறுத்தம் செய்துள்ளோம்.

### தயாரிப்பிற்கான அடிப்படை

**நோக்கெல்லையும் வரம்புகளும்**

- நிதி அறிக்கையிடல் வரம்பானது தாய் நிறுவனத்தினையும் ஆறு சட்டபூர்வமான நிறுவனங்களையும், கூட்டாக 'குழுமம்' என குறிப்பிடுபவை, உள்ளடக்குகின்றது.
- இந்த அறிக்கையின் நிலைபேறுள்ள அறிக்கையிடல் வரம்பானது தாய் நிறுவனமான, பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இனது, 'கம்பனி" என்றும் குறிப்பிடப்படுகின்றது, செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

**முறைமைப்படுத்தல் வரம்புறுகை**

- 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
- 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வழங்கும் பணிப்புரைகள்
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்
- பதிவுசெய்யப்பட்ட நிதி குத்தகை நிறுவனங்களுக்கான பணிப்புரைகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகள்
- கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகள்
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்

**மனமுவந்து கடைப்பிடிக்கப்பட்ட வரம்புறுகைகள்**

- <ஐஆ> சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் சபையினால் வழங்கப்பட்ட வரம்புறுகை 2021
- உலகளாவிய நிலைபேறுள்ள நியமங்கள் சபையினால் (உநிநிச) வழங்கப்பட்ட உஅமு நியமங்கள்
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைக்கான கோவை
- ஐக்கிய நாடுகள் நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்குகள்

இவ்வறிக்கையானது உஅமு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளது: முக்கிய தெரிவுரிமை.

### உறுதிமொழி

சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையானது இலங்கையின் கணக்காய்வு தலைமை அதிபதி அவர்களினால் வழங்கப்பட்டுள்ளதுடன் அவரது அறிக்கையானது பக்கங்கள் 205 முதல் 207 வரை வழங்கப்பட்டுள்ளது. அவர் இலங்கை மத்திய வங்கிக்கு கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைகளுடன் கம்பனியின் இணக்கப்பாட்டிலான வெளிவாரி உறுதிமொழியினையும் வழங்கியுள்ளார். நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் மீளாய்வு செய்யப்பட்டதுடன் அது பக்கம் 202 இல் வழங்கப்பட்டுள்ளது. உஅமு தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாட்டிலான உறுதிமொழியானது ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதுடன் இது பக்கங்கள் 347 முதல் 348 வரை வழங்கப்பட்டுள்ளது.

### சூழல் சமூக ஆளுகை (சூசஆ) மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனைக்கான கடப்பாடு

15 வருடங்களுக்கு முன்னரே உஅமு அறிக்கையிடலினுள் நுழைந்தமையானது நிறுவனத்தினுள்ளே சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை கொள்கைகளை பதிப்பதற்கு உதவியதுடன், அதன் கூட்டாண்மை தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறைகளில் ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனைக்கு வசதியளித்தது. எமது அமைப்புமுறைகள் காலப்போக்கில் நம்பகமான நிதியியல் மற்றும் நிதியியலல்லாத தகவல்களை தோற்றுவித்துள்ளதுடன் இவை அறிவுபூர்வமான மற்றும் குறிக்கோளான தீர்மானம் மேற்கொள்வதற்கு துணைபுரிவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய, பங்காளிகளது அக்கறைகளை புரிந்துகொள்வதற்கும் எமது பங்காளிகளுக்கு நிலைபேறுள்ள பெறுமதியினை உருவாக்கும் எமது ஆற்றலில் நாம் செயற்படும் சூழலில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கும் அமைப்புமுறைகள் உள்ளன. ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனையூடான நிறுவனத்தின் மீளெழுச்சியினை பலப்படுத்துவது நோக்கி நாம் பணியாற்றும்போது வளங்களது ஒதுக்கீட்டு தீர்மானத்தினை வடிவமைக்கும் சாத்தியமான அச்சுறுத்தல்களையும் வாய்ப்புக்களையும் மதிப்பிடுவதற்கு இச்செயல்முறை வசதியளிக்கின்றது.

# இந்த அறிக்கையைப் பற்றியது

## எமது அறிக்கைக்கான வழிசெலுத்தல்

**மூலதனங்கள்**

- நிதியியல் மூலதனம்
- உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்
- அறிவுசார் மூலதனம்
- மனித மூலதனம்
- சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்
- இயற்கை மூலதனம்

**பங்காளிகள்**

- வாடிக்கையாளர்கள்
- பணியாட்கள்
- முதலீட்டாளர்கள்
- வணிகப் பங்காளிகள்
- அரசாங்கம் மற்றும் முறைமைப்படுத்துபவர்கள்
- உள்ளூர் சமூகங்கள்



## நிலைபேறுடைய தகவல்கள்

கம்பனியில் நிறுவப்பட்டுள்ள முகாமைத்துவ தகவல்களிலிருந்து அறிக்கைக்கான உள்ளடக்கம் பிரித்தெடுக்கப்பட்டுள்ளதுடன் இது மனிதவள தகவல்கள் அமைப்புமுறை, சூழல் முகாமைத்துவ வரம்புறுகைகளை உள்ளடக்குவதுடன் இவை பங்காளிகளது கருத்துக்களை அகப்படுத்தும் செயல்முறையினை வைத்திருப்பதற்குமாகும். இவை பொருண்மையினை தீர்மானிக்கும் செயல்முறை மற்றும் பொருத்தமான நிலைபேறுள்ள முன்னெடுப்புகளை உருவாக்குதல், ஒருங்கிணைக்கப்பட்ட சிந்தனை மற்றும் அறிக்கையிடலை ஊக்குவித்தல் என்பவற்றுக்கு உள்ளீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

## வருடத்திலான முக்கியமான மாற்றங்கள் மற்றும் மறு அறிக்கைகள்

நிறுவனத்திற்கோ அல்லது வழங்கல் சங்கிலிக்கோ எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றங்களும் காணப்படவில்லை மற்றும் அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் நிதியியல் அல்லது நிலைபேறுடைய தகவல்களை மறு அறிக்கை செய்வதற்கு அவசியமான மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை.

மேலும், முன்னைய அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியில் நோக்கெல்லை மற்றும் தோற்ற வரம்புகளில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றங்களும் அறிக்கையிடப்படவில்லை. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களது முன்னிலைப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தலானது, பொருத்தமானவாறு சிறந்த முன்னிலைப்படுத்தலுக்கும் நடப்பு ஆண்டுடன் ஒப்பிடுவதற்காகவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

## முன்னோக்கிய பார்வையுடைய கூற்றுக்கள்

மூலோபாயங்களின் முகாமைத்துவ மதிப்பீடு, வணிகத் தொடர் மீளாய்வுகள், காலாகால மூலதன இலக்குகள், இடர் முகாமைத்துவ மீளாய்வு உள்ளடங்கலாக இந்த ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில தகவல்கள் புலனுணர்வுகள், எதிர்பார்ப்புகள், மதிப்பீடுகள், அனுமானங்கள், எதிர்வுகூறல்கள் எமக்கு தற்போது கிடைக்கக்கூடிய வெளிவாரி மற்றும் உள்வாரி தகவல்களிலான அபிப்பிராயங்கள் மற்றும் கருத்துக்கள் போன்ற முன்னோக்கிய பார்வையுடைய கூற்றுக்களையும் உள்ளடக்குகின்றன. இந்த முன்னோக்கிய பார்வையுடைய கூற்றுக்கள் குழுமத்தின் எதிர்கால செயற்திறனின் மதிப்பீட்டிற்கு துணைபுரிவதற்காக வழங்கப்பட்டுள்ளன. இவை அவற்றுடன் இணைந்துள்ள வேறுபாடான அளவிலான நிச்சயமற்றதன்மைகளை கொண்டுள்ளபோதிலும், இவற்றின் துல்லியமானது அவை எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாலான எதிர்கால நிகழ்வுகள், விளைவுகள் மற்றும் தாக்கங்களுடன் தொடர்புபட்டதனால் பின்னூட்டத்தின் உதவியுடனேயே உறுதிப்படுத்தமுடியும். மேலும், அத்தகைய உறுதியின்மைகள் எதிர்காலங்களின், குழுமத்தின் மெய்யான செயற்திறன் மற்றும் நிதியியல் விளைவுகள் அத்தகைய முன்னோக்கிய பார்வையுடைய கூற்றுக்களினால் வெளிப்படுத்தப்படும் அல்லது மறைமுகமாக தெரிவிக்கப்படும் எதிர்கால செயற்திறன் அல்லது விளைவுகளின் எதிர்வுகூறலிலிருந்து பொருண்மையாக வேறுபடலாம். கோவிட்-19 தொற்றின் சமூகபொருளாதார தாக்கங்களுடன், முன்நிகழ்ந்திராத பொருளாதார, வணிக மற்றும் சந்தை நிலவரங்கள், உறுதியின்மைகளை வழக்கமான மட்டங்களுக்கும் பார்க்க அதிகரிப்பதுடன், அறிக்கையிடப்படும் திகதியிலும் கூட தகவல்கள் மிகவும் நெகிழ்வுடையதாகவும் நிலையற்றதாகவும் காணப்படுவதனால் இந்த அறிக்கையின் பயனாளர்கள் அவர்களது சொந்த தீர்மானங்களை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். ஒப்பீட்டளவில் இந்த தகவல்களின் உயர்ந்த மட்டத்திலான உறுதியின்மையின் நிமித்தம் தகவல்களானது சபைக்கு அல்லது ஆண்டறிக்கையினை தயாரித்த ஏனையோர்களுக்கு எந்தவிதமான பொறுப்பினை அல்லது பரிகாரத்தினை சுமத்தாது வழங்கப்படுகின்றன.

## பின்னூட்டமும் விசாரணைகளும்

நாம் உங்களது பின்னூட்டத்தினை மதிப்பு செய்வதுடன் அவற்றை, ஆரம்பித்துள்ள வருடத்திற்கான ஆண்டறிக்கையினை மேம்படுத்துவதற்கு பயன்படுத்துவோம். ஆண்டறிக்கை தொடர்பான விசாரணைகளுக்கு தயவுசெய்து பின்வரும் நபரை தொடர்புகொள்ளவும்.:

பிரதான முகாமையாளர் - நிதி
**பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி**
இல. 1161, மருதானை வீதி,
கொழும்பு 8, இலங்கை.
தபால் குறியீடு: 00800
தொலைபேசி: +94 11 263 1631

## ஏற்பளிப்புகள்

இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள அனைத்து தகவல்களும் கம்பனியின் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் உள்வாரியாக மீளாய்வு செய்யப்பட்டதுடன், இந்த அறிக்கையின் “கூட்டாண்மை ஆளுகை” பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் முறைமைக்கு அமைய சுயாதீனமாகவும் சரிபார்க்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கையானது, ஆண்டறிக்கை தொடர்பான பணிப்பாளர்களது பொறுப்புக்களின் ஒரு ஏற்பளிப்பினையும் உள்ளடக்குகின்றது. ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையின் நேர்மையினை உறுதிப்படுத்துவதற்கான அவர்களது பொறுப்பினை பணிப்பாளர்கள் சபையானது ஏற்றுக்கொள்வதுடன் 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையானது <உஅ> வரம்புறுகை 2021 இற்கமைய முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது என்ற அபிப்பிராயத்தினையும் கொண்டுள்ளது.

**சுஜீவ ராஜபக்ஷ**
*தலைவர்/பணிப்பாளர்கள் சபை*

**சமீந்திர மார்சலீன்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி/பொதுமுகாமையாளர்*

# எம்மைப் பற்றியது

GRI | 102-4, 102-16

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி (பீபள்ஸ் லீசிங்/கம்பனி) இலங்கையிலுள்ள வங்கியல்லாத ஒரு முன்னணி நிதி நிறுவனமாகும் என்பதுடன் நாட்டிலுள்ள பாரிய அரச வங்கிகளில் ஒன்றான மக்கள் வங்கியின் ஒரு துணை நிறுவனமாகும், ஒரு விசேட குத்தகை கம்பனியாக 1996 இல் செயற்பாடுகளை ஆரம்பித்த பீபள்ஸ் லீசிங் 2011 இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டது. பீபள்ஸ் லீசிங் தொடர்புடைய பிரிவுகளில் விசேடத்துவம் உடைய, பங்களாதேஷில் ஒரு வெளிநாட்டு முயற்சி உள்ளடங்கலாக ஆறு துணைக்கம்பனிகளுடன் ஒரு பன்முகப்படுத்தப்பட்ட வங்கியல்லாத நிதியியல் சக்தி நிலையமாக வளர்ச்சியடைந்துள்ளது.

## தொலைநோக்கு

நிதியியல் சேவைகள் காட்சியில் வாடிக்கையாளர் தோழமையான புத்தாக்கமான மற்றும் மொத்த தீர்வுகளை வழங்கும் ஒரு புகழ்பெற்ற வழங்குநராக வருவதற்கு



## பணிநோக்கு

ஒரு நிலைபேறுள்ள ஒப்பீட்டு அனுகூலத்தினை பராமரிக்கும்வேளை நிறுவன சேவை தனிச்சிறப்பினை அடைவதற்காக அர்ப்பணிப்புடனான பெறுமதி சேர்க்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை

## விழுமியங்கள்

பொருளாதார வாழ்தகவு | சமூக பொறுப்புக்கூறல் | சுற்றுச்சூழல் பொறுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஒரு மக்களது வணிகம் | 382,913<br>வாடிக்கையாளர்கள் | 2,245<br>பணியாட்கள் | 111<br>கிளைகள் |
| சந்தைப் பங்களிப்பு | 11.37%<br>மொத்த சொத்துக்கள் | 12.89%<br>வைப்புகள் | 12.47%<br>கடன்களும் முற்பணங்களும் |

*31.03.2022 இல் உள்ளவாறான இ.ம.வ. இன் புள்ளிவிபரங்களிலிருந்து பெறப்பட்ட வஅநி துறை தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| முக்கிய பெறுமதியிடல்கள் | ரூ. 15.29 பில்லியன்<br>சந்தை மூலதனவாக்கம் | ரூ. 6.51 பில்லியன்<br>வணிகநாம பெறுமதியிடல் | ரூ. 38.82 பில்லியன்<br>தேறிய சொத்துக்கள் |

# எம்மைப் பற்றியது

GRI 102-5

**ஒரு உள்ளடங்கலான நிதிச் சேவைகள் குழுமம்**

உள்ளடங்கலான கொள்கைகளில் ஸ்தாபிக்கப்பட்ட பீபள்ஸ் லீசிங், நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெழும்பான வணிக ஆரம்பித்தல், நுண்முயற்சியாளர்கள் மற்றும் சி.ந.நி. ஆகிவற்றிற்கான நிதி அணுக்கத்திற்கான ஒத்தகருத்தாகும். மக்கள் வங்கியின் ஒரு துணை நிறுவனமாக, தாய் நிறுவனத்தின் பலமான உள்ளூர் கிளைகளிலிருந்தான நன்மைகள் ஆரம்ப வருடங்களில் அதன் வளர்ச்சிக்கு துணைபுரிந்தது. 25 வருட கால செயற்பாடுகளில், பீபள்ஸ் லீசிங் முக்கிய வணிகத்தினை முழுமையாக்கும் விசேட கருவிகளை அதன் துணைநிறுவனங்கள் வழங்குவதுடன் ஒரு நிதியியல் சக்தி நிலையமாக வளர்ச்சியடைந்துள்ளது.




| துணைநிறுவனம் | பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | பீபள்ஸ் மைக்ரோ-கொமர்ஸ் லிமிட்டட் | பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் | பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட் | லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் |
|---|---|---|---|---|---|---|
| உரித்துடைமை | 75% | 100% | 100% | 100% | 100% | 51% |
| பிரதான நடவடிக்கைகள் | பொது காப்புறுதி வணிகத்தை மேற்கொள்ளுதல் | சம்பிரதாய வங்கியியலுக்கான அணுக்கத்தினை கொண்டிராத தனிநபர்கள் மற்றும் நுண் நிறுவனங்களுக்கு வங்கியல்லாத நிதியியல் சேவைகளை வழங்குதல் | வாகனத்தொகுதி முகாமைப்படுத்தல், வாகன பெறுமதியிடல், வாகன விற்பனை, காப்புறுதி மதிப்பீடு மற்றும் வாகனத் திருத்தம் | கலப்பின அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் ஆதன அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | ஒரு காரியாலய வளாகத்தினை செயற்படுத்துதல் | அசையும் மற்றும் அசையா சொத்துக்களுக்கு குத்தகையினை வழங்குதல் மற்றும் கடன்களை வழங்குதல் |
| ஒருங்கிணைக்கப்பட்ட நாடு | இலங்கை | இலங்கை | இலங்கை | இலங்கை | இலங்கை | பங்களாதேஷ் |
| பணியாட்களின் எண்ணிக்கை | 615 | 171 | 65 | 7 | 2 | 43 |
| வரிக்கு பிந்திய இலாபம் (ரூ. மில்லியன்) | 778.51 | 181.58 | 152.99 | 240.76 | 102.22 | 110.42 |
| சொத்துக்கள் (ரூ.மில்லியன்) | 12,102.54 | 3,070.80 | 444.79 | 2,738.09 | 2,655.37 | 14,544.08 |

## எமது சமூகபொருளாதார தாக்கம்

எமது சமூகபொருளாதார தாக்கம் பன்முகத்தன்மையுடையதுடன் வரைபடம் ஊடாக கீழே வழங்கப்பட்டுள்ளது.




பொதுவாக, எமது கடன்களின் அளவு சிறிது என்பதுடன் ஒரு பாரிய எண்ணிக்கையிலான மக்களை எட்டுவதுடன் இவர்கள் நாளை வெற்றியான வணிகமாக மாறுகின்றார்கள். எமது உள்ளடங்கல் அணுகுமுறையானது எமது கருவிகள் தொகைகள், காலங்கள் உள்ளடங்கலான வாடிக்கையாளர் தேவைப்பாடுகளுடன் ஒத்திருப்பதனை உறுதிசெய்வதுடன் இஸ்லாமிய கருவிகள் ஷரியா சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கின்றன.

### பெறுமதி அடிப்படையில் கடன்கள், குத்தகைகள் மற்றும் ஏனைய முற்பணங்களின் எண்ணிக்கை




நாடுபூராவும் பிரசன்னத்தினைக் கொண்ட ஒரு முன்னணி வஅநிநி ஆக, சனத்தொகையின் பெரும்பான்மையோரால் உடனடியாக புரிந்துகொள்ளக்கூடிய செல்வ உருவாக்கம் மற்றும் முதலீட்டிற்கான கட்டமைக்கப்பட்ட கருவிகளுடன் குறைவங்கியியலுடைன மக்களை நாம் எட்டுகின்றோம்.

### பெறுமதி அடிப்படையில் நிலையான வைப்புகளின் எண்ணிக்கை




### மாகாண ரீதியான நிலையான வைப்புத் தளம் (ரூ. மில்லியன்)




### மாகாண ரீதியான கடன்கள், குத்தகைகள் மற்றும் ஏனைய முற்பணத் தேக்கங்கள் (ரூ. மில்லியன்)



# எம்மைப் பற்றியது

பீபள்ஸ் லீசிங் கடந்த மூன்று வருடங்களில் அதிர்வுடைய அதிர்ச்சிகளூடாக வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக துணைபுரிந்ததுடன், இவை நாட்டின் பொருளாதார வீழ்ச்சியினை விரைவுபடுத்தியதுடன் தற்போதும் தொடர்கின்றன.

கடன் காலந்தாழ்த்தி தீர்த்தல்களின் எண்ணிக்கை




- முதலாவது க.கா.தீ.
- இரண்டாவத க.கா.தீ.
- மூன்றாவது க.கா.தீ.
- நான்காவது க.கா.தீ.
- ஐந்தாவது க.கா.தீ.

வழங்கப்பட்ட ஹித்தமித்துரு வசதிகள் (பஸ் சலுகைத் திட்டம்)




- மத்திய மாகாணம்
- கிழக்கு மாகாணம்
- வட மத்திய மாகாணம்
- வட மேல் மாகாணம்
- வட மாகாணம்
- சபரகமுவ மாகாணம்
- தென் மாகாணம்
- ஊவா மாகாணம்
- மேல் மாகாணம்

நாம் உள்ளடங்கலான டிஜிட்டல்மயமாக்கலுக்கு கடப்பாடுடன் உள்ளதுடன், மக்களுக்கு பல்வேறு தொழில்நுட்பங்களின் தாங்குமை மற்றும் அணுக்கத்தினை கருத்திற்கொண்டு எமது வாடிக்கையாளர்களை இந்த பயணத்தில் எடுத்துச் செல்கின்றோம்.

**9,736**
தரவிறக்கங்கள்

**ரூ. 3,981.60 மில்லியன்**
செயலியூடாக செயற்படுத்திய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி

**99,179 எண்ணிக்கை**
செயலியூடாக செயற்படுத்திய கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை

நாடுபூராவுமான பிரசன்னமானது 2,245 பணியாட்களுக்கு நாடுமுழுவதும் வேலையினை உருவாக்கியுள்ளது. இது அனைத்து மாகாணங்களும் பொருளாதார முன்னேற்றத்தில் பங்குபற்றுவதனை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கியுள்ளது.



பொருளாதாரத்திற்கு சேர்க்கப்பட்ட பெறுமதியானது கீழ்காணும் பெறுமதி சேர்த்தல் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

GRI 201-1

### பொருளாதார பெறுமதி சேர்க்கை (பொ.பெ.சே.)

சராசரி 365 நாட்கள் திறைசேரி உண்டியல்களுடன் 2% இடர் வட்டத்தினைச் சேர்த்து அதற்கு சமனான ஒரு பொருளாதார கட்டணத்தினைக் கருத்திற்கொண்டு, பீபள்ஸ் லீசிங் இனால் நிதியாண்டு 2021/22 க்கு சேர்க்கப்பட்ட பொருளாதார பெறுமதி ரூபா 845.48 மில்லியன் ஆகும். இது சவால் மிக்க சூழலின் மத்தியில் பங்குதாரர்களுக்கு பொருளாதார விளைவு வீதத்திற்கு மேலாக நாம் உருவாக்கிய பெறுமதியினை பிரதிபலிக்கின்றது.

### பொருளாதார பெறுமதி சேர்க்கை

| ஆண்டிற்கானது | 2021/22<br>ரூ.மில்லியன் | 2020/21<br>ரூ.மில்லியன் |
|---|---|---|
| பங்குதாரர்களது நிதிகள் | 38,818.31 | 34,341.43 |
| கூட்டு - வலுக்குன்றல் கட்டணங்களுக்கான திரண்ட ஏற்பாடு | 9,887.57 | 9,267.94 |
| கூட்டு - திரண்ட சந்தை கட்டியெழுப்புதல் செலவினங்கள் | 425.25 | 560.43 |
| கழி: ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | (1,146.73) | (415.84) |
| | **47,984.40** | **43,753.96** |
| உடைமையாக்கத்தக்க இலாபம் | | |
| பங்குதாரர்கள் | 4,659.01 | 4,033.02 |
| கூட்டு: வருடத்திற்கான சந்தை கட்டியெழுப்புதல் செலவினங்கள் | 189.63 | 39.06 |
| கூட்டு: வலுக்குன்றல் ஏற்பாடு | 619.63 | 517.70 |
| கூட்டு: வருடத்திற்கான ஒத்திவைக்கப்பட்ட வரிக் கட்டணங்கள் | (673.45) | (69.51) |
| | **4,794.82** | **4,520.27** |
| பொருளாதார கிரயம் % ( சராசரி திறைசேரி உண்டியல் வீதம் + 2 % இடர் வட்டம்) | 8.61% | 7.29% |
| பொருளாதாரக் கிரயம் | 3,949.34 | 3,027.95 |
| பொருளாதார பெறுமதி சேர்க்கை | **845.48** | **1,492.32** |

### சந்தைப் பெறுமதி சேர்க்கை (சபெசே)

வருடம் பூராவும் காணப்பட்ட மூலதனச் சந்தையின் மந்தமான செயற்திறனின் நிமித்தம், கம்பனியின் பங்கொன்றின் பெறுமதி வீழ்ச்சியடைந்து 31 மார்ச் 2022 இல் சந்தை பெறுமதி சேர்க்கையில் ஒரு வீழ்ச்சியினை ஏற்படுத்தியது.

### சந்தைப் பெறுமதி சேர்க்கை

| வருடத்திற்கானது | 2021/22<br>ரூ.மில்லியன் | 2020/21<br>ரூ.மில்லியன் |
|---|---|---|
| சந்தை மூலதனவாக்கம் / உரித்துவத்தின் சந்தைப் பெறுமதி | 15,286.28 | 20,114.31 |
| | | |
| கழி: பங்குதாரர்களது நிதிகள் | 38,818.31 | 34,341.43 |
| | | |
| சந்தைப் பெறுமதி சேர்க்கை / (வீழ்ச்சி) | **(23,532.03)** | **(14,227.12)** |

# எம்மைப் பற்றியது

## பெறுமதி சேர்க்கையின் பகிர்ந்தளிப்பு

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது உருவாக்கப்பட்ட பொருளாதார பெறுமதியானது பிரதானமாக வட்டி வருமானத்திலான வீழ்ச்சியின் காரணமாக மிகக் குறைவாக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், பணியாட்கள், அரசாங்கம் மற்றும் சமூகத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பொருளாதார பெறுமதியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை குறிக்கின்றது. வைப்பு வைத்திருப்பவர்களுக்கு செலுத்தப்பட்ட வைப்பு அடிப்படையிலான வட்டியின் ஓரளவு வீழ்ச்சியுடன் இது 23.71% வீழ்ச்சியினை பிரதபலித்தவேளை இவ்வருடத்தில் உரித்துடைமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபமானது குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை காண்பித்தது.

| | 2021/22 ரூ.மில்லியன் | 2020/21 ரூ.மில்லியன் |
|---|---|---|
| உருவாக்கப்பட்ட நேரடியான பொருளாதார பெறுமதி | | |
| வட்டி வருமானம் | 23,881.53 | 24,983.45 |
| கட்டணமும் தரகு வருமானமும் | 1,876.52 | 1,818.68 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 983.33 | 301.68 |
| உருவாக்கப்பட்ட பொருளாதார பெறுமதி | 26,741.38 | 27,103.81 |
| பகிர்ந்தளிக்கப்பட்ட பொருளாதார பெறுமதி | | |
| மூலதனம் வழங்கியோர்களுக்கு | | |
| உரித்துடைமையாளார்களுக்கு பங்கிலாபம் | 2,179.93 | 976.62 |
| கடன் பெறுகைகளுக்கு வட்டி | 3,029.26 | 2,835.85 |
| வைப்பு வைத்திருப்பவர்களுக்கு வட்டி | 7,802.92 | 10,228.46 |
| | 13,012.11 | 14,040.93 |
| பணியாட்களுக்கு | | |
| சம்பளம் மற்றும் ஏனைய நலன்கள் | 4,002.41 | 3,465.37 |
| | 4,002.41 | 3,465.37 |
| அரசாங்கத்திற்கு | | |
| வருமான வரிச் செலவினங்கள் | 2,664.54 | 1,909.08 |
| நிதிச் சேவைகளிலான வரி | 1,645.11 | 1,222.63 |
| செலுத்தப்பட்ட ஏனைய வரிகள் | 48.51 | 18.37 |
| | 4,358.16 | 3,150.08 |
| சமூகத்திற்கு | | |
| கூட்டாண்மை சமூகப் பொறுப்பு முன்னெடுப்புகளில் | 29.40 | 20.37 |
| | 29.40 | 20.37 |
| செயற்பாட்டுச் செலவினம் | | |
| பெறுமானத்தேய்வும் பெறுமதிகுறைப்பும் | 700.04 | 722.99 |
| கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் | 777.04 | 1,143.05 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | 2,056.59 | 1,590.08 |
| | 3,533.67 | 3,456.12 |
| பகிர்ந்தளிக்கப்பட்ட பொருளாதார பெறுமதி | 24,935.75 | 24,132.87 |
| நிறுத்திவைக்கப்பட்ட பொருளாதார பெறுமதி | 1,805.63 | 2,970.94 |

பகிர்ந்தளிக்கப்பட்ட பொருளாதார பெறுமதி
**2021/22**




- பங்குதாரர்கள்
- கடன் வழங்குநர்கள்
- வைப்பீட்டாளர்கள்
- பணியாட்கள்
- அரசாங்கம்
- சமூகம்
- செயற்பாட்டு கிரயம்
- நிறுத்திவைக்கப்பட்ட பெறுமதி

பகிர்ந்தளிக்கப்பட்ட பொருளாதார பெறுமதி **2020/21**




- பங்குதாரர்கள்
- கடன் வழங்குநர்கள்
- வைப்பீட்டாளர்கள்
- பணியாட்கள்
- அரசாங்கம்
- சமூகம்
- செயற்பாட்டு கிரயம்
- நிறுத்திவைக்கப்பட்ட பெறுமதி

PEOPLE'S LEASING
පීපල්ස් ලීසිං | பீப்பள்ஸ் லீசிங்
THE TRUSTED LEADER

# ஒரு நோக்கம் கொண்ட வணிகமாக எமது கூட்டாண்மை வழிநடத்தும் கொள்கைகள்

**01** சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் உள்ளடங்கலாக வணிகங்களுக்கு வலுவளிப்பதற்கும் வாழ்வாதாரங்களுக்கு துணைபுரிவதற்குமான நிதியில் உட்படுத்துகையினை ஊக்குவித்தல் மற்றும் ஆலோசனைத் தீர்வுகளை வழங்குவதும் எமது நோக்கமாகும்

**02** எமது நோக்கத்தினை நாம் விநியோகிக்கும் வேளை வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை பாதுகாக்கும் ஒரு உள்ளடக்கமான ஆளுகை முறையினை நாம் கொண்டுள்ளோம்.

**03** பொறுப்புள்ள, நெறிமுறையான மற்றும் உள்ளடக்கமான நிதியியல் தீர்வுகளை வழங்குவதன் மூலம் மற்றும் எமது பங்காளிகளுக்கு சமமான விளைவுகளை உறுதிசெய்வதன் மூலம் எமது நோக்கத்தினை அடைவதற்கு நாம் கடப்பாடுடன் உள்ளோம்.

**04** பொருளாதார வாழ்தகவு, சூழல் பொறுப்பு மற்றும் சமூக பொறுப்புக்கூறல் என்பன எமது அனைத்து வணிகச் செயற்பாடுகளில் உள்ளார்ந்துள்ள முக்கிய விழுமியங்களாகக் காணப்படுகின்றன.

**05** எமது முக்கிய விழுமியங்கள் எமது முகாமைத்துவ செயல்முறைகளில் உட்பொதிந்திருப்பதனை நாம் உறுதிசெய்யும்வேளை, இது சிறந்த கூட்டாண்மை பிரஜைக்கான கலாச்சாரம் நோக்கி பங்களிப்புசெய்யும்.

**06** நிலைபேறுள்ள வளங்கள் உகப்பாக்கம் மற்றும் பொறுப்பான கடன் வழங்களூடாக சூழலிலான எமது தாக்கத்தினை நாம் குறைப்பதற்கு முயற்சிசெய்கின்றோம்.

**07** வருடம் பூராவுமான பங்காளிகளுடனான ஈடுபாட்டினூடாக இனங்காணப்பட்ட பங்காளிகளது அக்கறைகளுக்கு பதிலளிப்பதன் மூலம் செயற்படுவதற்கான எமது சமூக உரிமத்தினை நாம் பெற்றுள்ளோம்.

**08** டிஜிட்டல் அறிவு உள்ளடங்கலாக எமது பணிபாட்களின் கொள்திறனை, அவர்கள் ஒரு அதிசிறந்த சேவை அனுபவத்தினை விநியோகிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக, நாம் கட்டியெழுப்புகின்றோம்.

**09** செயல்நோக்கமுடன் நிர்ணயிக்கப்பட்ட எமது வணிக இலக்குகளை சந்திப்பதில் எமது பணியாட்களின் தனியான மற்றும் குழுமப் பங்களிப்பினை மதிப்பிடுவதன் மூலம் நாம் எமது நோக்கான வணிக வளர்ச்சியினை கொண்டாடுகின்றோம்.

**10** நிலைபேறுள்ள அபிவிருத்தியினை ஊக்குவிக்கும் தேசிய மற்றும் உலகளாவிய வரம்புறுகைகளது மேம்பாட்டிற்கு நாம் துணை புரிகின்றோம்.

**சமிந்திர மார்சலீன்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி ஃபொது முகாமையாளர்*

# எமது பயணம்



## 1995
தனியார் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக ஒருக்கிணைக்கப்பட்டது.

## 1996
மக்கள் வங்கியின் முழுவதும் உரித்துடைமையான துணை நிறுவனமாக 31 மே 1996 இல் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்தமை

**3 பணியாட்கள்**
**கிளை வலையமைப்பு** - கிளைகள் இல்லை
**மொத்த உரித்துவம்** - ரூ. 10 மில்லியன்
**வைப்புகள்** - ஏற்றுக்கொள்ளப்படவில்லை
**பன்முகப்படுத்தல்** - துணைநிறுவனங்கள் ஏதும் இல்லை
**கருவிகளது வீச்செல்லை** - குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு மாத்திரம்

## 1997/98
லட்சியமான வளர்ச்சி திட்டங்களின் முதற் படியாக கண்டியில் முதலாவது கிளை திறந்து வைக்கப்பட்டது.

## 2011/12
பங்குச் சந்தையின் வரலாற்றில் இரண்டாவது பாரிய ஆரம்ப பொது வழங்கலூடாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பிரதான பலகையில் பட்டியிலிடப்பட்டது.

## 2012/13
2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் கீழ் நிதி வணிகத்தினை நடாத்துவதற்கான உரிமம் பெறப்பட்டது.

## 2013/14
அதன் துணை நிறுவனமான பீபள்ஸ் வைனான்ஸ் பிஎல்சி உடனான அதன் ஒருங்கிணைப்பினை வெற்றிகரமாக பூர்த்திசெய்தமை

## 2015/16
கடன்கள் மற்றும் வருமதிகள் தேக்கமானது ரூ. 100 பில்லியன் இலக்கினை கடந்தது.

## 2016/17
20ஆவது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது / பங்களாதேஷில் ஒரு முயற்சிக்கான அடித்தளம் ஆரம்பிக்கப்பட்டது / 100 ஆவது கிளை நிறுவப்பட்டது

## 2017/18
பங்களாதேஷ் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன / "பிஎல்சி இயங்கலை செயலி" ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## 2020/21

25 ஆவது ஆண்டுவிழா

வைப்புகள் - வஅநிநி துறையில் அதிகூடிய வைப்புத் தளம்

## 2021/22

அதியுயர்ந்த வரிக்கு பிந்திய இலாபம் ரூ. **4.66** பில்லியன்

டிஜிட்டல் நிலைமாற்றம்

- பிஎல்சி டச் ஆரம்பிக்கப்பட்டது
- பீபள்ஸ் பே வே
- CAPP இன் ஆரம்பம்
- செயலியின் ஆரம்பம்

பணியாட்களின் திரண்ட சேவைக்காலம்

18,000 வருடங்களுக்கு மேல்

பன்முகப்படுத்தல் - **6** துணைநிறுவனங்கள் (ஒரு பொது பட்டியலிடப்பட்ட கம்பனி உள்ளடங்கலாக மற்றும் ஒரு வெளிநாட்டு துணைக் கம்பனி)

கருவிகளின் வீச்செல்லை - பன்முகப்படுத்தப்பட்டது

- கடன் வழங்கல் கருவிகள்
- நிலையான வைப்புகளும் சேமிப்புகளும்
- இஸ்லாமிய கடன்வழங்கல் கருவிகள்
- இஸ்லாமிய வைப்புக் கருவிகள்

## 2009/10

ஒரு முழுவதும் உரித்துவமுடைய துணைக்கம்பனியாக பீபள்ஸ் இன்சூரன்ஸ் லிமிட்டட் உருவாக்கப்பட்டதுடன் கம்பனியின் நிலையினை ஒரு பன்முகப்படுத்தப்பட்ட நிதிச் சேவை வழங்குநராக ஒன்றிணைத்தமை.

## 2008/09

புதிய வணிக முயற்சிகளுக்கு பன்முகப்படுத்தியமை, பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் ஆகிய இரண்டு துணைக்கம்பனிகள் உருவாக்கப்பட்டன.

## 2002/03

ஏழு வருடங்கள் செயற்பாடுகளினுள் குத்தகைத் துறையில் சந்தை முதல்வராக வந்தமை

## 2007/08

மக்கள் வங்கியின் கிளைகளில் சாளரக் காரியாலய தனித்துவமான எண்ணக்கருவானது ஆரம்பிக்கப்பட்டது.



எமது விரிவான வாடிக்கையாளர் சேவையுடன் இணைக்கப்பட்டுள்ளது.



# தலைவரின் செய்தி

GRI | 102-14



# “சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் உள்ளடங்கலாக வணிகங்களுக்கு வலுவளிப்பதற்கும் வாழ்வாதரங்களுக்கு துணைபுரிவதற்குமான நிதியியல் உள்ளடங்கலை ஊக்குவித்தல் மற்றும் ஆலோசனைத் தீர்வுகளை வழங்குதல் எமது நோக்கமாகும்”

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இலங்கை மக்களுக்கு 25 வருடங்கள் சேவையாற்றியுள்ளதுடன், பரஸ்பரமான இலக்குகள் மற்றும் பேரார்வங்களை அடைவதற்காக அவர்களுடன் ஒன்றாக பயணித்துள்ளது. இந்த வருடத்தின் செயற்திறனானது முதலாவது கூட்டாண்மை வழிநடத்தும் கொள்கைக்கான எமது கடப்பாட்டின் ஒரு பிரதிபலிப்பாகும். இது ஒரு மிகவும் கடினமான சவால் மிக்க ஆண்டில் முன்நிகழ்ந்திராத வாடிக்கையாளர்களுக்கு துணைபுரிவதற்கான பல சலுககைகளூடாக கம்பனியினால் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த வரிக்கு முந்திய இலாபமான ரூபா 4.66 பில்லியனை நாம் வழங்கியுள்ளோம். உலக மீட்டலுடன் ஒத்திசைவாக ஒரு நிலைபேறுள்ள மற்றும் மீளெழுச்சியான பொருளாதாரம் நோக்கிய முன்னேற்றத்தில் பன்முக சிக்கல்கள் மற்றும் சுமைகளை வெற்றிகொள்வதற்காக நாடு ஒன்றுசேர்ந்துள்ள இந்த நேரத்தில் இந்த கொள்கையானது மிகவும் முக்கியமாக காணப்படுகின்றது.

பீபள்ஸ் லீசிங் குழுமமானது ஒரு மீளெழுச்சியான செயற்திறனை பதிவுசெய்ததுடன், இலாபமாக ரூபா 4.82 பில்லியனை வழங்கியதுடன், இது தாய் நிறுவனத்தின் செயற்திறனால் திடமாக துணையளிக்கப்பட்டது. பீபள்ஸ் மைக்ரோ-கொமர்ஸ் லிமிட்டட், மற்றும் பிபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் ஆகியனவும் திடமான செயற்திறனை பதிவுசெய்து அவற்றின் உயர்ந்த இலாபமாக முறையே ரூபா 181.58 மில்லியன் மற்றும் ரூபா 152.99 மில்லியனை வழங்கியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 13.90% வீழ்ச்சியானது, குழுமத்தின் பாரிய துணைக் கம்பனியான பீபள்ஸ் இன்சூரன்ஸின் இலாபத்திலான வீழ்ச்சியானது பாரியளவு பங்களித்துள்ளது.

### மற்றுமோர் அச்சுறுத்தும் வருடம்

பெப்ரவரி 2021 இல் ஆரம்பித்த நாடுபூராவுமான தடுப்பூசி திட்டத்திற்கு மத்தியில் கோவிட்-19 இன் மூன்றாம் அலையானது நிதியாண்டில் ஆரம்பித்தது. இலங்கைக்கு இது மூன்றாவது தொடர்ச்சியான பொருளாதார அழுத்தம் மிக்க ஆண்டாவதுடன் ஆண்டு முன்செல்லும்போது முறிவுப்பாதையானது தொடர்ந்தும் விரிவடைந்தது. வருடம் பூராவும் இடம்பெற்ற இடைவிட்டு நிகழும் தடங்கல்கள், வருட இறுதியில் காணப்பட்ட எரிபொருள் விலை உயர்வு, முன்நிகழ்ந்திராத எரிபொருள் பற்றாக்குறைகள் என்பன பிரயாணிகள் போக்குவரத்து நடவடிக்கையினை தொடர்ந்தும் பாதித்தது. ஜனவரி 2020 முதல் நாடானது சுற்றுலாத்துறைக்கு திறந்திருந்தபோதிலும், சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையானது நவம்பர் 2021 இலேயே அதிகரிக்க ஆரம்பித்ததுடன் மார்ச் 2022 வரை ஒரு வளர்ச்சி உத்வேகத்தினை பராமரித்தது. மார்ச் 2022 இல் சமூக அமைதியின்மையானது முக்கிய வளச் சந்தைகள் பயண ஆலோசனைகள் வழங்குவதனை விளைவித்தது. உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறைகள் சுற்றுலாப் பயணிகளை ஊக்கம் கெடுத்ததுடன் பாரியளவு எண்ணிக்கையிலான ரத்துசெய்தல்களுக்கு வழிசமைத்தது. தொலை தொடர்பாடல் அறிக்கையிடும் வருடத்திலும் தொடர்ந்ததுடன், தொற்றின் பரவல் இடரினை குறைப்பதற்காக அவசியமான பணியாளர்கள் மாத்திரமே வணிக இடங்களுக்கு செல்லவேண்டியதனால் முடக்கக் காலம் முழுவதும் வணிகத் தொடர்ச்சியினை தொடர்வதற்காக இது தொடரப்பட்டது.

இந்த பின்னணிக்கு எதிராக, இவ்வருடத்தில் பொருளாதார குறிகாட்டிகள் பலவீனமடைந்ததுடன் ஏப்ரல் 2022 இல் இதன் உச்சகட்டமாக வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட கடன்கள் அரசாங்கத்தினால் தவறுதல் செய்யப்பட்டது. வரலாற்றில் ஒரு கடுமையான காலத்திற்குள் இலங்கை நகர்ந்ததுடன், எமது வாழ்நாள் ஞாபகத்தில் பெரும்பாலும் மிகவும் சிரமம் மிக்கதாக காணப்பட்டது. தேநுவிசு இனால் அளவிடப்பட்ட பணவீக்கமானது, மார்ச் 2022 இல் திடமாக 21.5% ஆக உயர்வடைந்து ஏப்ரல் 2022 இல் 33.8% ஆக பாய்ந்ததுடன் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு பொருளாதார நெருக்கடியினை ஏற்படுத்தியது. உணவுப் பணவீக்கமானது மார்ச் 2022இல் காணப்பட்ட 29.5% இலிருந்து ஏப்ரல் 2022 இல் 45.1% ஆக உயர்வடைந்தது. அதேகாலப்பகுதியில் உணவல்லாத பணவீக்கமும் உயர்வடையும் போக்கினை பராமரித்து 14.5% இலிருந்து 23.9% ஆக நகர்ந்தது. வருடத்தின் ஆரம்பத்தில் முன்னெப்போதும் காணப்படாதளவுக்கு தாரள நாணயக்கொள்கையின் நிமித்தம் குறைவாகக் காணப்பட்ட வட்டி வீதமானது விரிவடையும் முறிவுப்பாதையினை முகாமைப்படுத்துவதற்காக அரசாங்கம் நாணயக் கொள்கையினை இறுக்கமாக்கியதுடன் 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் வட்டிவீதம் ஓரளவுக்கு அதிகரித்தது. எவ்வாறாயினும், பொருளாதாரத்தினை சரியான பாதையில் இட்டுச்செல்வதற்கு மிகவும் தீவிரமான நடவடிக்கைகள் தேவைப்பட்டதுடன், கொள்கை வட்டி வீதங்கள் இலங்கை மத்திய வங்கியினால் 8 ஏப்ரல் 2022 இல் 700 அடிப்படை புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டன. மார்ச் 2021 இல் 5.11% ஆக காணப்பட்ட 364 நாட்கள் திறைசேரி உண்டியலானது மார்ச் 2022 இல் 12.28% ஆக உயர்வடைந்து ஏப்ரல் 2022 இல் 24.09% ஆக அதிகரித்தது. இது நிதியாண்டு நிறைவடைந்ததன் பின்னர் அனுபவித்த தீவிரமான நிலையற்ற தன்மையினை பிரதிபலித்தது. இதற்கேற்றாற்போல் சராசரி நிறையிடப்பட்ட முதன்மை வட்டிவீதமானது (AWPR) அதேபோன்று மார்ச் 2021 இல் காணப்பட்ட 9.85% இலிருந்து ஏப்ரல் 2022 இல் 16.38% ஆக மேலுயுர்ந்தது. அதேசமயம் சராசரி நிறையிடப்பட்ட வைப்பு வட்டி வீதமானது (AWDR) பின்தங்கிக் காணப்பட்டது. வாடிக்கையாளர்களுக்கு கடன் பெறுதலின் கிரயத்தினை அதிகரித்தமையானது விலை ஸ்திரத்தன்மயினை சீராக்குவதற்கான ஒரு அவசியமான திருத்தமாகும்.

நிதியாண்டின் 11 மாதங்களில் ஒரு குறுகிய பட்டையில் முகாமைப்படுத்தப்பட்ட நாணயமாற்று வீதமானது மார்ச் 2022 இல் அதிவேகமாக அதிகரித்துடன் ஏப்ரல் 2022 இல் மேலும் அதிகரித்து ஏப்ரல் 2022 இன் இறுதியில் நாணயமாற்று வீதமானது ஒரு அமெரிக்க டொலருக்கு ரூபா 319.44 வரை கொண்டுசெல்லப்பட்டது. மார்ச் இறுதியில் நாட்டின் அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் US$ 1.9 பில்லியனாகக் காணப்பட்டவேளை இதில் US$ 1.5 பில்லியன் நிபந்தனைகளுக்கு உட்பட்டதுடன், பயன்படுத்தக்கூடிய ஒதுக்கமாக வெறுமனே US$ 0.4 பில்லியனே எஞ்சியிருந்தது. நாணயக் கொள்கை உருவாக்குபவர்களின் ஆகக் குறைந்த அக்கறையாக வாகன இறக்குமதிகளின் மறு ஆரம்பம் காணப்பட்டது என்பதை கூறுவதற்கு அவசியமில்லை ஏனெனில் நாடானது முன்னைய ஆண்டிலும் பார்க்க மிகவும் குறைந்த விளைச்சல் எதிர்வுகூறப்பட்டதனால் ஏற்படுகின்ற உணவுப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு சிரமப்பட்டதுடன் இது அரிசி இறக்குமதிக்கான அவசியத்தினை ஏற்படுத்தியது.

வேலையின்மையானது 5.5% இலிருந்து 5.1% ஆக விழ்ச்சியடைந்த போதிலும், இதன் சாதகமான விளைவானது தொழிற்சேனை பங்குபற்றல் சதவீதத்தின் வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டதுடன் இது 2020 இல் காணப்பட்ட 50.6% இலிருந்து 2021 இல் 49.9% ஆக வீழ்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் நாம் தற்போது முன்னிறுத்தம் செய்யவேண்டிய ஒன்றாகும். இது ஆக்கவளமுடைய தொழிலில் பங்குபற்றாத சனத்தொகையானது பங்குபற்றும் சனத்தொகையிலும் பார்க்க அதிகமாகக் காணப்படுவதனாலாகும்.

### பங்காளிகளது அக்கறைகளை சீரமைத்தல்

முன்னைய ஆண்டைப் போன்று, நாம் எமது மூலோபாயங்களை, எமது பங்காளிகளது அக்கறைகள் மற்றும் அழுத்தத்திற்கான ஆரம்ப அறிகுறிகளை காட்டிய ஒரு செயற்பாட்டு சூழலுடன் சீரமைத்தோம். முன்னைய ஆண்டில், பீபள்ஸ் லீசிங் 2020/21 இல் 59,000 க்கும் அதிகமான கடன் காலம்தாழ்த்தி

# தலைவரின் செய்தி

செலுத்துவதற்கான வசதிகளை அளித்ததுடன் நாம் பலபேருக்கு கடன் காலம்தாழ்த்திச் செலுத்துவதிலிருந்து வெளியேறுவதற்கு துணைபுரிந்தோம். எவ்வாறாயினும், எமது வாடிக்கையாளர்களுள் பலபேர் இடைவிட்டு நிகழும் முடக்கங்களினால், வாகனத்தொகையின் குறைவான கொள்திறன் பயன்பாடு மற்றும் சொத்துக்களது உற்பத்தி மற்றும் பணவீக்கம் என்பவற்றால் தொடர்ச்சியாக பாதிப்படைந்தார்கள். இதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நாம் வாகனங்களை கைப்பற்றுதல் நடவடிக்கையினை இடைநிறுத்தியதுடன் கடன் வசதிகளை மீள்அட்டவணைப்படுத்தும் ஒரு செயற்திறனான அணுகுமுறையினை கடைப்பிடித்தோம். முக்கியமாக. தவறுதல் வட்டியினை மீட்கும் செயற்பாட்டினை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நாம் ஒரு தீர்மானத்தினை மேற்கொண்டதுடன் இது வாடிக்கையாளர் மீள்வதற்கு அவசியமான கால அவகாசத்தினை அவர்களுக்கு வழங்குகின்றது. இந்த நடைமுறைகள் எமது வாடிக்கையாளர்களின் உடனடி தேவைகளை விளித்துரைப்பதுடன் கடனானது சுமையாக மாறி மீட்டலுக்கான அவர்களது சந்தர்ப்பத்தினை கெடுப்பதனை தவிர்க்கும்.

### செயற்பாட்டுச் சூழல் எண்களில் 2021/22

**பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏனைய குறிகாட்டிகள்**

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| | மதிப்பீடு | எதிர்வுகூறல் | |
| **உலகம்** | 6.1% | 3.6% | 3.6% |
| வெளித்தோன்றும் மற்றும் அபிவிருத்தியடையும் ஆசியா | 7.3% | 5.4% | 5.6% |
| இலங்கை | 3.6% | 2.6% | 2.7% |
| பங்களாதேஷ் | 5.0% | 6.4% | 6.7% |
| **பண்டங்களின் விலைகள்** | | | |
| எண்ணெய் | 67.3 | 54.7% | -13.3% |
| எண்ணெய் அல்லாதவை | 26.8% | 11.4% | -2.5% |
| **நுகர்வோர் விலைகள்:** | | | |
| வெளித்தோன்றும் மற்றும் அபிவிருத்தியடையும் ஆசியா | 2.2% | 3.5% | 2.9% |
| இலங்கை | 6.0% | 17.6% | 12.9% |

*மூலம்: உலக வங்கியின் கண்ணோட்டம் ஏப்ரல் 2022*

| | 2021 | 2020 | % |
|---|---|---|---|
| மொ.உ.உ. (US$ பில்லியன்) | 84.5 | 81.0 | 4.32 |
| தலா வருமானம் (US$) | 3,815 | 3,695 | 3.25 |
| தொழிற்சேனை பங்குபற்றல் சதவீதம் (%) | 49.9 | 50.6 | (0.7) |
| வேலையின்மை (%) | 5.1 | 5.5 | (0.4) |
| **துறைவாரியான மொ.உ.உ. (ரூ.பில்லியன்)** | | | |
| விவசாயம் | 686.48 | 672.93 | 2.01 |
| கைத்தொழில் | 2,557.00 | 2,427.87 | 5.32 |
| சேவைகள் | 5760.31 | 5,595.18 | 2.95 |

| | April 2022 | March 2022 | March 2021 |
|---|---|---|---|
| பணவீக்கம் (%) | 33.8 | 21.5 | 5.1 |
| 364 நாள் திறைசேரி உண்டியல் வட்டிவீதம் (%) | 24.09 | 12.28 | 5.11 |
| AWDR (%) | 5.52 | 5.17 | 5.20 |
| AWPR (%) | 16.38 | 9.85 | 5.78 |
| நாணயமாற்று வீதம் (ரூ.:1US$) | 319.44 | 255.81 | 196.98 |
| அந்நிய செலாவணி ஒதுக்கங்கள்(US$ பில்லியன்) | 1.81 | 1.92 | 4.06 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளின் வைப்பீட்டாளர்களது அக்கறைகளை பாதுகாப்பதற்காகவும் துறையின் மீளெழுச்சியினை பலப்படுத்துவதற்காகவும் இலங்கை மத்திய வங்கி நிதியியல் துறை ஒருங்கிணைத்தல் பெருந்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு ஆரம்பித்தது. பீபள்ஸ் லீசிங் இச்செயல்முறையில் ஈடுபடுவதற்கு ஆயத்தமாயுள்ளதுடன் எமது பங்காளிகளுக்கு பெறுமதி உருவாக்கக்கூடிய கையகப்படுத்தல் குறித்து கவனஞ் செலுத்துகின்றது.

பணியாட்களது அக்கறைகளுடன் சீரமைப்பதானது எமது மூலோபாய இலக்குகளை தொடர்வதற்கு முக்கியமானதாகும் என்பதுடன், கம்பனியானது நிறுவனத்தினை சரியான அளவுக்கு கொண்டுவருவதற்கும், எமது பணியாட்களை விருத்திசெய்தல், தக்கவைத்தல் மற்றும் ஊக்கமளித்தல் என்பவற்றை உறுதிசெய்வதற்காகவும் ஒரு விரிவான திட்டவேலையினை ஆரம்பித்தது. வருடம் பூராவும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு முக்கிய அக்கறையாகக் காணப்பட்டதுடன், அவர்களது ஆரோக்கியத்தினை பாதுகாப்பதற்காக அமுல்படுத்தப்பட்ட பாதுகாப்பு வரைமுறைகளை மேலும் சீர்திருத்தியது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விளைவுகளை வழங்குவதற்கு எமது மக்கள் மூலோபாயம் முக்கியம் என்பதுடன் அவர்களது சிக்கல்களை விளித்துரைப்பது முதலீட்டாளர்கள் உள்ளடங்கலாக அனைத்து பங்காளிகளதும் சிறந்த நலனுக்காகும்.

#### டிஜிட்டல் மயமாக்கல்

டிஜிட்டல் மயமாக்கல் வருடத்தின் மூலோபாய முன்னுரிமை என்பதுடன் நாம் எமது செயல்முறைகளை சீரமைப்பதற்காக உள்நோக்கிப் பார்ப்பதனை ஆரம்பித்தோம். தொடர்ந்து வந்த விரைவான வெற்றியினை காண்பதில் சபையானது மகிழ்வடைவதுடன் அதிக திட்ட மைற்கற்களை விநியோகிப்பதற்கான கடப்பாட்டினால் ஊக்கமளிக்கப்பட்டது. இந்த நிலைமாற்றமானது நாம் கிரயச் செயற்திறன்களை அதிகரித்து இயக்கும்போது எமது அடுத்த அத்தியாயத்திற்கு இது அவசியம் என்பதுடன் இது வாடிக்கையாளர்களுடன் பயனுறுதியுடன் ஈடுபடுவதற்கும் எமது முதலாவது கொள்கையில் குறிப்பிட்டது போன்று அவர்களை மெய்யாகவே வலுவளித்தலினை நாம் இவ்வருடத்தில் அடைந்தவற்றுக்கான இணைப்புக் கருப்பொருளாக நான் பயன்படுத்தியுள்ளேன்.

#### முதலீட்டாளர்களுக்கு பெறுமதியினை விநியோகித்தல்

பீபள்ஸ் லீசிங் - கம்பனி

தவறுதல் வட்டியினை தள்ளுபடி செய்தபோதிலும், தேறிய வட்டி வருமானத்திற்கு துணையளித்த வட்டிச் செலவினங்களிலான வீழ்ச்சியானது இலாபகரத்தன்மையில் கம்பனி திடமான வளர்ச்சியினை வழங்குவதற்கு காரணியாயிருந்தது. ஒவ்வொரு கிரயம் அல்லது முயற்சியானது இனங்காணப்பட்ட ஒரு பங்காளிக்கு பெறுமதியினை உருவாக்குவதனை உறுதிப்படுத்துவதற்காக நாம் பெறுமதி சேர்க்காத நடவடிக்கைகளை குறைத்ததுடன் இந்த கிரய முகாமைத்துவமானது ஒரு முக்கிய பங்கினை வகித்தது. செயற்திறனற்ற சொத்துக்களின் வீதமானது 9.21% இலிருந்து 8.78% ஆக வீழ்ச்சியடைந்தது. இது வருடத்தில்

அனுபவித்த பன்முகமான சவால்களுக்கு மத்தியிலும் கடன் இடரினை முகாமைப்படுத்துவதற்கான முயற்சிகள் மற்றும் செலுத்தப்பட்ட வளங்களை பிரதிபலித்தது. கடன்கள் மற்றும் வருமதிகளிலான வலுக்குன்றல் கட்டணங்களும் ரூபா 1,043.84 இலிருந்து 37.21% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 655.43 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இதன் காரணமாக ஏற்பாட்டுக் காப்பு வீதமானது 2020/21 இல் காணப்பட்ட 64.16% இலிருந்து 2021/22 இல் 72.99% ஆக முன்னேற்றமடைந்தது.

ஐந்தொகையானது இவ்வருடத்தில் கட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியான 9.86% இனை பிரதிபலித்தது. இது செயற்பாட்டு சூழலுக்கமைவாக புதிய கடன்வழங்கல்களில் மற்றும் வாடிக்கையாளர்களது மிகை கடன்சுமையினை தவிர்ப்பதற்காக நாம் ஒரு எச்சரிக்கையான அணுகுமுறையினை பராமரித்தமையினால் ஏற்பட்டது. பத்திரப் பங்கிலாபங்களை வழங்குவதன் மூலம் மூலதன நிலைமைகளை பலப்படுத்தும் மூலோபாயத்தினை நாம் தொடர்ந்தோம். இவ்வாண்டில், நாம் ரூ. 2,179.93 மில்லியனை பத்திரப் பங்கிலாபமாக வழங்கியதுடன், இதன் காரணமாக மூலதன விகிதாசாரங்கள் பலப்படுத்தப்பட்டு முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கும் மிகையாக காணப்பட்டன.

## பீபள்ஸ் லீசிங் - குழுமம்

குழுமச் செயற்திறனும் கம்பனியினைப் பின்பற்றி 2021/22 நிதியாண்டில் வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 4.82 பில்லியனை பதிவுசெய்தது. தேறிய வட்டி வருமானம், வலுக்குன்றல்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் முகாமைப்படுத்தப்பட்டவேளை பீபள்ஸ் இன்சூரன்ஸிலான கோரல்களும் நன்மைகளும் 21.22% ஆல் அதிகரித்து ரூ. 3.23 பில்லியனை அடைந்தது. இது பீபள்ஸ் இன்சூரன்ஸ ின் செயற்திறனை மோசமாக பாதித்ததுடன் குழுமத்தின் இலாபகரத்தன்மையினை குறைத்தது.

அடுக்கு 1 மற்றும் மொத்த மூலதன விகிதாசாரங்கள் முறையே முன்னைய ஆண்டில் காணப்பட்ட17.72% மற்றும் 18.58% இலிருந்து 18.76% மற்றும் 19.67% ஆக முன்னேற்றமடைந்து குழுமத்தின் மீளெழுச்சியின் கட்டியெழுப்பலிலான முன்னிறுத்தத்தினை பிரதிபலித்தது. விட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிட்டட் பீபள்ஸ் லீசிங்க்கு A+ (lka) தரத்தினை உறுதிப்படுத்தியது. எவ்வாறாயினும், இலங்கையில் காணப்படுகின்ற அதிகரித்த பொருளாதார மற்றும் நிதிச் சந்தைகள் உறுதியின்மைகளுக்கு மத்தியில் வஅநிநி கடன் தோற்றுருவங்களுக்கான உயர்ந்த வீழ்ச்சி இடரினை பிரதிபலிப்பதற்காக சமீபத்தில் பீபள்ஸ் லீசிங் உள்ளடங்கலான 12 வஅநிநி எதிர்மறையான தரக் கவனிப்பில் இட்டது.

## பங்காளிகள் முன்னிறுத்திய தலைமைத்துவம்

செயற்படும் சூழலானது நிலையற்றும் உறுதியற்றும் காணப்பட்டவேளை சபையானது இவ்வருடத்தில் மிகவும் விழிப்புடன் இருந்தது. இவ்வருடத்தில் இடர் முகாமைத்துவம் முன்னிறுத்தம் செய்யப்பட்ட ஒரு முக்கியமான பிரிவாகும் என்பதுடன் அச்சுறுத்தல் மட்டங்கள் உயர்ந்ததினால் வீழ்ச்சியடையும் சாத்தியம் உயர்வடைவதிலும் பார்க்க அதிகமாக காணப்பட்டது. நிச்சயமற்றதன்மையூடாக ஒரு தெளிவான பாதையில் செல்வதற்கு மூலக் காரணங்களை விளித்துரைப்பதற்காக முழுமையான தீர்வுகள் அவசியப்படுகின்றன. வளர்ச்சி உத்வேகத்தினை முடுக்கிவிடுவதற்கு முன்னர் எமக்கு ஒரு நிலைபேறுள்ள மீட்பு தேவைப்படுகின்றது. திருத்தியமைப்புகள் மற்றும் புதிய கொள்கைகளின் அறிமுகத்துடன் கொள்கை வரம்புறுகையினை பலப்படுத்துவதற்கு பணி தொடரப்பட்டது. மூலோபாய திசையினை முகாமைப்படுத்துவதற்கு செயற்திறனின் மேற்பார்வையானது முக்கியமானது என்பதுடன், இது பங்காளிகளுக்கு நிலைபேறுள்ள பெறுமதி உருவாக்கம் மற்றும் எமது ஒட்டுமொத்த இலக்கினை நோக்கி நாம் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகும்.

வழங்கப்பட்ட செயற்திறனைக் கருத்திற்கொண்டு சபையானது 2021/22 இற்கு பங்கொன்றிற்கு ஒரு பத்திரப் பங்கிலாபமாக ரூ. 1.25 இனை பிரகடனப்படுத்தியதுடன் இது மொத்தமாக ரூபா 2,179.93 மில்லியன் ஆகும். சபையானது ஒரு இறுதிப் பங்கிலாபமாக ரூ. 0.50 இனை பரிந்துரைப்பதுடன் இது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களது அங்கீகாரத்திற்கு விடப்படும்.

## உத்வேகத்தினை உருவாக்குதல்

2021 ஆம் ஆண்டானது சாத்தியமான வளர்ச்சி உத்வேகத்தினை உருவாக்கியதுடன், மதிப்பீடு செய்யப்பட்ட உலக வளர்ச்சியானது ஏப்ரல் 2021 இன் எதிர்வுகூறலான 6% க்கு ஒத்ததாகக் காணப்பட்டதுடன் இது வருடத்தின் பெரும்பகுதியில் துணையளிக்கும் நாணயக் கொள்கையினாலாகும். எவ்வாறாயினும், அனேகமான மத்திய வங்கிகள் அதிகரித்த மற்றும் வெளித்தோன்றும் பணவீக்க அழுத்தங்கள் காரணமாக நாணயக் கொள்கையினை இறுக்கியவேளை தற்போது முறிவுப்பாதைகள் விரிவடைகின்றன. ரஷ்ய - உக்ரேனிய யுத்தமானது எதிர்வுகூறல்களை மந்தநிலையாக்கி 2022 மற்றும் 2023 க்கான உலக வளர்ச்சி எதிர்வுகூறல்கள் 3.6% ஆக கீழ்நோக்கி சீரமைக்கப்பட்டுள்ளன. மனிதாபிமான சிக்கல்களுக்கு அப்பால், யுத்தமானது உணவு மற்றும் எரிபொருள் விலைகளில் உயர்வடையும் அழுத்தத்திற்கு பங்களிப்பு செய்துள்ளது ஏனெனில் இவ்விரு நாடுகளும் பாரியளவு கோதுமை மற்றும் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளாகும். ரஷ்யாவுக்கான தண்டனை காணப்படுவதனால் மற்றும் உலகளாவிய வங்கியியல் முறைமைக்கான வரையறை செய்யப்பட்ட இணைப்பின் காரணமாக உலக வர்த்தகமும் பாதிப்படையும்.

மேலே விபரித்துள்ளவாறு நாட்டின் நிலைமையானது அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. இதன் விளைவாக, எமது திட்டங்கள் நெகிழ்ச்சியுடையதாகவும் பங்காளிகள் முன்னிறுத்தமுடையதாகவும் இருத்தல் வேண்டும். ஏனெனில் நாம் வெற்றியடைந்தால் மாத்திரமே யாரேனும் ஒரு பங்காளி வெற்றியடையமுடியும். பகிரப்பட்ட செல்வமே முன்னோக்கிய பாதைக்கு அவசியமானதாகும். எமது பங்காளிகளை முன்னிறுத்திய மூலோபாயங்கள் கடந்த இரண்டு வருடங்களில் எமக்கு நன்மை அளித்துள்ளதுடன் இதுவே முன்னோக்கிய பாதை என நாம் உறுதியாயுள்ளோம். கட்டுப்பாடுடனான வளர்ச்சி, கடன் இடரினை முகாமைப்படுத்துவதற்கான ஒரு செயற்திறனான அணுகுமுறை, மூலதனவாக்கம் மற்றும் திரவத்தன்மை ஊடாக மீளெழுச்சியினை கட்டியெழுப்புதல் என்பவற்றுடன் உடனடி தேவையாக ஏற்புத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுடைய தலைமைத்துவம் அடித்தளமாகக் காணப்படுகின்றது.

மேலும், தற்போதைய நிலைமையானது குழும மட்டத்தில் எம்மை போட்டித்தன்மையற்ற சந்தையினை பின்பற்றும் மூலோபாயத்திற்கான அவசியத்தினை ஏற்படுத்தியுள்ளதுடன், இது போட்டியாளர்கள் குழுவிலிருந்து எம்மை வேறுபடுத்திக்கொள்வதற்கும் மற்றும் நடைமுறையிலுள்ள அச்சுறுத்தலை எமது அனைத்து பங்காளிகளுக்கும் தொடர்ச்சியான பெறுமதியினை வழங்கக்கூடிய வாய்ப்புக்களாக மாற்றியமைப்பதாகும்.

ஒரு திடமான ஐந்தொகையானது எமது திட்டங்களுக்கு துணைபுரிவதுடன், சமிக்ஞைகள் சாத்தியமானதாக மாறும்போது நாம் முன்னோக்கிச் செல்வதற்கு தயாராயுள்ளோம். பொருளாதாரத்தின் முதுகெழும்பாகக் காணப்படும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை வலுவளித்து அவற்றின் மீட்பிற்கு துணையளித்து அவர்களை உலகளாவிய வாய்ப்புக்களுடன் இணைப்பதன் மூலம் தேவையான வளர்ச்சி உத்வேகத்தினை உருவாக்குவதற்கான வாய்ப்புக்களை நாம் தொடர்ந்தும் பயன்படுத்திக்கொள்வோம்.

## ஒப்புகைகள்

நிறைவாக நான் சபையின் சக அங்கத்தவர்களுக்கு இந்த சவால்மிக்க நேரத்தினூடாக கம்பனியினை வழிநடத்துவதற்கான அவர்களது கடப்பாட்டிற்கு நான் நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அத்துடன், குறிப்பிடத்தக்க உறுதியற்ற ஒரு வருடத்தில் ஒரு திடமான செயற்திறனை வழங்குவதற்கு தலைமைத்துவம் அளித்த திரு. சமிந்திர மார்சலீனை நான் பாராட்டுகின்றேன். முன்நிகழ்ந்திராக சவால்களுக்கு மத்தியில் கம்பனியின் வரலாற்றில் அதியுயர்ந்த வரிக்கு பிந்திய இலாபத்தினை பதிவுசெய்ததன் மூலம் நிறுவனங்களை பலப்படுத்துவதற்காக கூட்டாக பணியாற்றிய மற்றும் எமது வளர்ச்சியின் அடுத்த அத்தியாயத்திற்கு தயாராயுள்ள பீபள்ஸ் லீசிங் குழுமத்திலுள்ள குழுக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

நிறைவேற்றமான மற்றும் வெகுமதியான கால் நூற்றாண்டு பயணத்தில் எமது பயணத்தில் பங்கெடுத்து வடிவமைத்தமைக்காக எமது பங்காளிகளுக்கு நான் நன்றியினை தெரிவிக்கின்றேன். இந்த சந்தர்ப்பத்தில் நான் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கு அவர்களது ஒத்துழைப்பிற்கு எனது நன்றியினை தெரிவிக்கும்வேளை கடந்த 25 வருடங்களாக தொடர்ச்சியான நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மைக்கு எமது பங்குதாரர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**சுஜீவ ராஜபக்ஷ**
*தலைவர்*

26 ஜூலை 2022
கொழும்பு

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி



## "பீபள்ஸ் லீசிங் அதன் வரலாற்றில் அதியுயர்ந்த வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 4.66 பில்லியனை அடைந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 15.52% அதிகரிப்பாகும்."

அன்புள்ள பங்காளிகளே,

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கு பீபள்ஸ் லீசிங் அதன் அதியுயர்ந்த வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 4.66 பில்லியனை பதிவுசெய்தமையை அறிக்கையிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன் - இது மக்களுக்கான 25 வருடங்கள் சேவையினை கொண்டாடும் சமயம் ஏற்பட்ட பொருத்தமான ஒரு மைற்கல்லாகும். இந்த நேரத்திற்கு உகந்ததாக பகிரப்படும் செல்வம் காணப்படுவதுடன், பீபள்ஸ் லீசிங் ஆனது வாடிக்கையாளர்கள் மற்றும் அதன் பணியாட்களுடன் பணிபுரிந்துள்ளது. இது தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக உறுதியற்றதன்மை மற்றும் விரிவடையும் முறிவுப்பாதையாக காணப்பட்ட இவ்வாண்டில் அவர்களுக்கு முன்நிகழ்ந்திராத பெறுமதியினை உருவாக்குவதற்காகும். அதன் விளைவுகள் இந்த நிறுவனத்தினை இயக்கும் மக்களின் வெல்லமுடியாத மனநிலைக்கான சாட்சியாகும் என்பதுடன், எமது தொலைநோக்கினை நிறைவேற்றுவதற்காக எமது விழுமியங்களை வாழுதல்.

### ஒரு வெள்ளி விழா

பீபள்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டட்டாக 31 மே 1996 இல் ஒருங்கிணைக்கப்பட்டு, இது ஒரு விசேட குத்தகைக் கம்பனியாக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களது விசேட தேவைகளுக்கு சேவையாற்றுவதற்காக உருவாக்கப்பட்டதுடன், தற்போது கம்பனியானது மிகவும் போட்டித்தன்மையுள்ள ஒரு துறையில் 11.37% சந்தை பங்களிப்பினைக் கொண்ட ஒரு முற்றுமுழுதான நிதிக் கம்பனியாக நிலைமாறியுள்ளது. நாம் இதனை அடைந்துள்ளது உள்ளார்ந்த வளர்ச்சியூடாக என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இது நிதியியல் உள்ளடக்கம் எனும் தத்துவத்தினால் அடித்தளமிட்டதாகும் என்பதுடன் இது 111 கிளைகளுக்கு வளர்ச்சியடைந்து முழு நாட்டிலும் எமது காலடி பதிக்கப்பட்டது. எமது வளர்ச்சிக்கு எமது பணியாட்கள் உந்துதளித்ததுடன் வருடம் நிறைவடையும்போது பணியாட்களது எண்ணிக்கை 2,245 ஆக வளர்ச்சியடைந்து எமது வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த நியமங்களுடைய சேவை பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குமாகும்.

வாடிக்கையாளர் மையமான நிறுவனமாக எமது கருவித் தேக்கங்கள் வளர்ச்சியடையும் வாடிக்கையாளர் தேவைகளைச் சந்திப்பதற்காகும். இதற்கமைய, தங்கக் கடன்கள், உபகரணக் குத்தகை மற்றும் எல்லைக்கடன் வர்த்தகம் என்பன எமது வளர்ச்சிக்கு துணையளிப்பதற்காக சேர்க்கப்பட்டன. பீபள்ஸ் லீசிங் 2011 இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டதுடன் அதன் ஆண்டறிக்கைகளுக்கு பலதரப்பட்ட விருதுகளை வென்று வெளிப்படைத்தன்மைக்கான ஒரு பெருமைமிக்க சாதனையினை வைத்துள்ளது. 2012 இல் உரிமமானது ஒரு நிதிக் கம்பனியாக மேம்படுத்தப்பட்டதுடன், பீபள்ஸ் லீசிங்கில் நம்பிக்கையினை வளர்த்துள்ள குறை வங்கிப் பயன்பாட்டுத் துறையின் வைப்பு மற்றும் முதலீட்டுத் தேவைகளுக்கு சேவையாற்ற எம்மை இயலுமையாக்கியது. இது 2022 இல் வணிக நாம வருடாந்த விருதுகள் 2021 இல் நாட்டின் மிகவும் விருப்பமுள்ள குத்தகை நாமமாக பீபள்ஸ் லீசிங் தெரிவுசெய்யப்பட்டமையானது உறுதிப்படுத்தப்பட்டதுடன் இது எமது வாடிக்கையாளர்களுடனான திடமான பிணைப்பினை பிரதிபலிக்கின்றது.

நாம் தற்போது எமது அடுத்த சகாப்தத்திற்கான வளர்ச்சிக்கு நிலைமாற்றமடைவதுடன் அது வழங்கும் சாத்தியங்கள் குறித்து நாம் உற்சாகமாயுள்ளோம். எமது திட்டங்கள் நிதியியல் உள்ளடக்கத்தினை மீள்வரையறுத்தல் மற்றும் எமது பொருளாதாரத்தின் முதுகெழும்பினை வளர்ப்பதற்கு வாடிக்கையாளர் மையமுள்ளதாகவும் மற்றும் நாட்டின் ஆக்கத்திறனை அதிகரிப்பதற்கு ஒரு புதிய முயற்சியாளர்கள் சந்ததியினை ஊக்கமளித்தல் மற்றும் பகிரப்பட்ட செழிப்பிற்கான ஒரு புதிய யுகத்திற்கு அதன் வளர்ச்சிக்கு வலுவளித்தல் என்பவையாகும்.

### உருமாற்றதினூடான முன்னேற்றம்

நாம் எமது டிஜிட்டல் உருமாற்றப் பயணத்தினை கடந்த வருடத்தில் ஆரம்பித்தோம். இது தொற்று தொடர்பான முடக்கல்களுடன் டிஜிட்டல் மேடைகளுக்கு நகர்வதற்கு பதிலளிக்கும் முகமாக ஏற்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 22 மில்லியன் இணையச்சேவை சந்தாதாரர்கள் காணப்பட்டார்கள்.

முதலாவது படியாக, நாம் எமது உள்ளக டிஜிட்டல் உருமாற்றலை ஆரம்பித்தோம், இது அதிகமான வாடிக்கையாளர் உருமாற்றல்களுக்கு வருவதனை உறுதிப்படுத்துவற்காகும். எமது உள்வாரி பங்காளிகள் ஒரு டிஜிட்டல் யுகத்தில் பயனுறுதியுடன் செயற்படுவதற்கு வலுவளிக்கப்படுதல் மற்றும் இயலுமையாக்குதல் அவசியத்தினைக் கொண்டிருந்தார்கள். நாம் கடன் செயலி (CAPP) இனை ஆரம்பித்தோம், இது எமது விற்பனை குழுக்கள் ஒரு இயங்கலை வாசலூடாக கடன் பிரேரணைகளை முன்னெடுப்பதற்கு வலுவளித்ததுடன் கைமுறை கடன் அங்கீகார முறையிலிருந்து இயங்கலை அங்கீகாரத்திற்கு மாறுவதற்கும் வசதியளித்ததுடன் வாடிக்கையாளர் திருப்ப காலத்தினை மேம்படுத்தியது. நாம் DCHEQUE எனப்படும் ஒரு புத்தாக்கமான காசோலை கொடுப்பனவு செயல்முறையினை ஆரம்பித்ததுடன் இது மக்கள் வங்கியினூடாக பீபள்ஸ் லீசிங் இனது கொடுப்பனவுகளை விரைவாக செயல்முறைப்படுத்துவதனை இயலுமையாக்கியதுடன் வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகளில் காணப்பட்ட தாமதங்களை அகற்றியது.

வாடிக்கையாளர் முகங்கொடுக்கும் உருமாற்றங்களை பார்க்கும்போது, நாம் எமது பாரிய துணை நிறுவனமான பீபள்ஸ் இன்சூரன்ஸ் உடனும் எமது தாய் நிறுவனமான மக்கள் வங்கியுடனும் கூட்டுசேர்ந்து பீபள்ஸ் பே வே எனும் ஒரு பன்முக சேவை வலையமைப்பினை அனைத்து வாடிக்கையாளர் கொடுப்பனவுகளுக்கும் ஆரம்பித்து வாடிக்கையாளர் வசதியினை மேம்படுத்தினோம்.

எமது திட்டங்கள் ஒரு முற்றுமுழுவதுமான மற்றும் பயனுறுதிமிக்க டிஜிட்டல் உருமாற்றத்திற்காகும் என்பதுடன், எமது உள்ளக மற்றும் வெளிவாரி பங்காளிகள் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்துடன் ஒத்திசைவாக காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் மற்றும் உருமாற்றல் செயல்முறையானது நோக்கத்திற்கு பொருத்தமானதாகவும் வாடிக்கையாளர் சௌகரியம், வலுவளித்தல் மற்றும் விரைவான சுழற்சி நேரங்கள் ஆகிய மூன்றினையும் வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்குமாகும். இவ்வருடத்திலான விரைவான வெற்றிகள் ஊக்கமளிப்பதாகக் காணப்பட்டதுடன் முன்னோக்கிய வருடத்தில் எமது உருமாற்றலில் நாம் மேலும் முன்னேற்றமடைவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

### வேகங்களூடாக வழிசெலுத்துதல்

வருடமானது மற்றுமோர் கோவிட்-19 தொற்றின் அலையுடனும் உரம் மற்றும் வேளாண் வேதிப்பொருட்களது இறக்குமதி தடையுடனும் ஆரம்பித்தது. தடுப்பூசி திட்டங்கள் வெற்றியளித்தவேளை இறக்குமதி தடைகள் ஏற்கனவே காணப்பட்டன, விசேடமாக மோட்டார் வாகனங்களுக்கான தடைகள், புதிய மோட்டார் வாகனங்களது இறக்குமதியின்றி தொடர்ச்சியாக இது மூன்றாவது ஆண்டாகும். ஆண்டானது கடந்து செல்லும்போது தொற்றானது மோசமடைந்து நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் நாம் எதிர்மறையான வளர்ச்சியினை பதிவுசெய்தோம். ஆனால் மூன்றாம் காலாண்டில் பொருளாதார நடவடிக்கையானது மீண்டும் ஆரம்பித்து 2021 ஆம் ஆண்டிற்கு நாடு 3.7% பொருளாதார வளர்ச்சியினை

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

பதிவு செய்தது. இருந்தாலும், வர்த்தகப் பற்றாக்குறையானது விரிவடைந்து ஜூலை 2021 மற்றும் ஜனவரி 2022 இல் செலுத்தவேண்டிய கடன் மீள்செலுத்துகைகளின் நிமித்தம் அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் அழுத்தத்திற்கு உள்ளாகின. நாட்டின் இறையாண்மை தரப்படுத்தலானது நிதியாண்டில் மேலும் தரமிறக்கம் செய்யப்பட்டதனால் இடர் தோற்றுருவத்தின் காரணமாக கடன்பெறுதல் மேலும் கடினமாக்கப்பட்டது. நாணயமாற்று வீதமானது இலங்கை மத்திய வங்கியின் தலையீட்டுடன் நிதியாண்டின் முதல் 11 மாதங்களில் ஒரு குறுகிய பட்டையினுள் பராமரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இலங்கை ரூபாயானது மார்ச் 2022 இல் கணிசமானளவு பெறுமதியிறக்கம் செய்யப்பட்டது. அதிகரித்த பணவீக்கம் காரணமாக நாணயக் கொள்கை இறுக்கமடைந்ததனால் வருடத்தின் இரண்டாம் பாதியில் வட்டி வீதங்கள் உயர்வடையத் தொடங்கியதுடன் மார்ச் 2021 இல் 5.78% ஆக காணப்பட்ட AWPR மார்ச் 2022 இல் 9.85% ஆக உயர்வடைந்தது.

முறைமைப்படுத்தப்பட்ட / முறையான வழிகளின்றி, முறைசாரா வழிகளூடாக கணிசமானளவு வெளிநாட்டு பணமனுப்பல்கள் மேற்கொள்ளப்பட்டதனால் இவ்வருடத்தில் நாணயத்திற்கான முறையற்ற சந்தையின் வளர்ச்சியினை காணக்கூடியதாயிருந்தது. நவம்பர் 2021 இலிருந்து சுற்றுலாத் துறையானது முன்னேற்றமடைந்து மார்ச் 2022 இல் 106,500 வருகையாளர்களைக் கண்டது. மார்ச் 2022 இல் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியினால் (தேநுவிசு) அளவிடப்படும் பணவீக்கமானது 21.5% ஆக திடமாக உயர்வடைந்தது. எவ்வாறாயினும், வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் மாதாந்த இறக்குமதி பட்டியல்களுக்கு துணையளிப்பதற்கு போதுமையின்றி காணப்பட்டதுடன் இதன் காரணமாக மார்ச் 2022 அளவில் எரிவாயு மற்றும் எரிபொருள்களின் பற்றாக்குறை ஏற்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்ட மின்வெட்டுக்கும் இட்டுச்சென்றது. இந்த அனைத்து காரணிகளும் மக்களின் செலவழிக்கக்கூடிய வருமானத்தினைக் குறைத்து கணிசமானளவு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதுடன் இது நாடுபூராவும் எதிர்ப்புப் போராட்டங்கள் போன்ற சமூக குழப்பநிலைக்கு இட்டுச்சென்றது.

சுதந்திரமடைந்ததன் பின்னரான இலங்கைக்கு இது மிகவும் கடினமான ஒரு காலமாகும். திடமான இடர் முகாமைத்துவ முறைகள் கூர்மையான நுண்ணறிவுகள் மற்றும் நேரகாலத்துடனான எச்சரிக்கை சமிக்ஞைகளை வழங்கியதுடன் இந்த கடினமான வருடத்தில் எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாட்களுக்கு துணையளிப்பதற்காக நாம் பொருத்தமான பதில்வினைகளை உருவாக்கினோம். இவ்வருடத்தினை நாம் ஒரு திடமான ஐந்தொகையுடனும் ஊக்கமளிக்கும் செயற்திறனுடனும் ஆரம்பித்ததுடன், எமது பங்காளிகளுக்கு அசாதாரணமான பதில்வினைகளை உருவாக்குவதற்காக எமக்கு சில சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

### துறைசார் கண்ணோட்டம்

வஅநிநி துறையானது நிதியாண்டில் ஒரு திடமான செயற்திறனை பதிவுசெய்ததுடன், இலாப வளர்ச்சியானது முன்னைய ஆண்டில் காணப்பட்ட 124.22% இன் பின்னர் இவ்வாண்டில் 101.71% ஆல் அதிகரித்து ரூபா 59.82 பில்லியனை எட்டியது. தேறிய வட்டி வருமானமானது 11.54% ஆல் அதிகரித்து ரூபா 128.25 பில்லியனை அடைந்ததுடன் இது மொத்த செயற்பாட்டு வருமானத்தின் 74.68% ஆகும். வட்டியல்லாத வருமானமானது 8.43% ஆல் அதிகரித்து ரூபா 43.48 பில்லியனை அடைந்ததுடன் இது மொத்த செயற்பாட்டு வருமானமான ரூபா 171.72 பில்லியனின் எஞ்சிய 25.32% க்கு கணக்கீடு செய்தது. வலுக்குன்றலுக்கான கட்டணங்கள் 76.72% ஆல் கணிசமானளவு வீழ்ச்சியடைந்து முன்னைய ஆண்டின் ரூபா 26.68 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 6.21 பில்லியனாக குறைவடைந்து அதிகரித்த இலாபகரத்தன்மைக்கு துணையளித்தது. இதன் பிரகாரம், வரிக்கு முந்திய இலாபமானது 74.91% ஆல் அதிகரித்து ரூபா 85.12 பில்லியனை எட்டியது.

வஅநிநி துறையின் மொத்த சொத்துக்கள் 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டில் 14.28% ஆல் அதிகரித்து ரூபா 1,589.84 பில்லியனை அடைந்தது. இது பெரும்பாலும் அடமானம் மற்றும் கடன்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பினாலாகும். இத்துறையின் நிதியியல் மீளெழுச்சியானது உரித்துவ நிதியளித்தல் தொகையான ரூபா 333.67 பில்லியனுடன் மேம்பட்டு முன்னைய ஆண்டின் 20.32% நிதியளிப்புடன் ஒப்பிடும்போது 22.15% இற்கு கணக்கீடு செய்யப்பட்டதுடன் துறையின் மூலதனவாக்கமானது 24.87% ஆல் அதிகரித்தது. வைப்புக்களின் வளர்ச்சியானது 5.88% ஆக மட்டுப்படுத்தப்பட்டு ரூபா 801.67 பில்லியனாகக் காணப்பட்டு நிதியளிப்பின் 53.23% இனை கணக்கீடு செய்தது. இது முன்னைய ஆண்டின் 57.59% இலிருந்து ஓர் வீழ்ச்சியாகும் என்பதுடன் வைப்பீட்டாளர்களுக்கான விவேகமான வெளிப்பாட்டு முகாமைப்படுத்தலை பிரதிபலிக்கின்றது. துறையின் கடன் பெறுகைகள் 27.71% ஆல் அதிகரித்து ரூபா 370.83 பில்லியனாகக் காணப்பட்டு 2020/21 இல் மொத்த பொறுப்புக்களின் 25.83% ஆக காணப்பட்டது இவ்வருடத்தில் 29.52% ஆக அதிகரித்துக் காணப்பட்டது.

மைய மூலதன விகிதமும் இடர் நிறையிடப்பட்ட சொத்துக்கள் விகிதத்திற்கான மூலதன அடித்தளமும் முறையே 14.17% மற்றும் 15.44% இலிருந்து 16.15% மற்றும் 17.68% ஆக முன்னேற்றமடைந்தது. இது துறையின் மேம்பட்ட மீளெழுச்சியினை பிரதிபலிக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது வஅநிநி களை ஒன்றிணைக்கும் திட்டத்தினை ஆரம்பித்ததுடன் இவ்வருடத்தில் இதில் முன்னேற்றம் காணப்பட்டது. இதன் விளைவாக இவ்வருடத்தில் மூன்று இணைப்புகள் / கையேற்புகள் ஏற்பட்டதுடன் இதில் ஒன்று வஅநிநி துறையில் பாரிய நிறுவனமாக காணப்பட்ட எம்மை வரிசைப்படுத்தலில் பின்தள்ளியது. பீபள்ஸ் லீசிங் ஒருங்கிணைத்தல் திட்டத்தில் பங்குபற்றும் ஆனால் ஏதேனும் சாத்தியமான இணைப்புகள் அல்லது கையேற்புகள் மிகவும் கவனமாக ஒரு சரியான பொருத்தத்தினை உறுதிப்படுத்துவதற்காக உரிய விடாமுயற்சியினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### எமது வாடிக்கையாளர்களுக்கு

நாம் இந்த வருடத்தில் எமது கடன் தேக்கத்தில் கடன் காலம் தாழ்த்தி செலுத்தும் தொகையான ரூபா. 24.90 பில்லியனுடன் (18.18%) ஆரம்பித்ததுடன் இதனை நாம் எமது சொந்த கிரயத்தில் வழங்கினோம். இவ்வருடத்தில் நாம் தவறுதல் வட்டித் தொகையான ரூபா 1,268.79 பில்லியனை நாம் தள்ளுபடி செய்தோம். எமது வாடிக்கையாளர்களில் அனேகமானோர் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளதனால் செயற்பாட்டு சூழலானது மிகவும் சவால்மிக்கதாய் வந்துள்ளதனால் வாடிக்கையாளர்கள் அதிக கடன்படுகையினை தவிர்ப்பதற்காக செய்தோம். தனியார் பயணிகள் போக்குவரத்து வாடிக்கையாளர் பிரிவிற்கு தொற்றினைத் தொடர்ந்து அவர்கள் தங்களது வணிகத்தினை மீள் கட்டியெழுப்புவதற்காக ஒரு சலுகையான குறைந்த வட்டி நிவாரணத் திட்டமான “ஹித்த மித்துரு” இனை நாம் முன்னெடுத்தோம். இவ்வருடத்தில் இந்த நலனுடன் 2000 இற்கும் அதிகமான வசதிகள் ரூபா 5,127.48 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டன.

### ஒரு திடமான ஓட்டம்

#### பீபள்ஸ் லீசிங் - கம்பனி

பீபள்ஸ் லீசிங் அதன் வரலாற்றில் அதியுயர்ந்த வரிக்குப் பிந்திய இலாபமாக ரூபா 4.66 பில்லியனை அடைந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 15.52% அதிகரிப்பாகும். இது வட்டி வருமானமானது 4.41% ஆல் வீழ்ச்சியடைந்ததன் மத்தியில் பெறப்பட்டதுடன், இதனை ஈடுசெய்யும் வகையில் வட்டிச் செலவினமானது 17.09% ஆல் வீழ்ச்சியடைந்து தேறிய வட்டி வருமானமாக ரூபா 13.05 பில்லியனை விளைவித்ததுடன் இது 2020/21 உடன் ஒப்பிடும்போது 9.48% அதிகரிப்பாகும். மொத்த செயற்பாட்டு வருமானமானது 13.32% ஆல் அதிகரித்து ரூபா 15.91 பில்லியனை எட்டியதுடன் வலுக்குன்றல் கட்டணமானது 37.21% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 655.43 மில்லியனாகக் காணப்பட்டதுடன் தேறிய செயற்பாட்டு வருமானத்தினை ரூபா 15.13 பில்லியனுக்கு கொண்டு சென்றது. மொத்த செயற்பாட்டு செலவினங்கள் 17.85% ஆல் அதிகரித்தது. இது பெரும்பாலும் ஆளணிச் செலவினங்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்களில் காணப்பட்ட அதிகரிப்பினாலாகும். நிதிச் சேவைகளிலான வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபமானது 16.91% ஆல் அதிகரித்து ரூபா 8.30 பில்லியனை அடைந்தது. நிதிச் சேவைகளிலான வரியும் வருமான வரிச் செலவினமும் முறையே 34.56% மற்றும் 8.24% ஆல் அதிகரித்து ரூபா 1.65 மில்லியனாகவும் ரூபா 1.99 பில்லியனாகவும் காணப்பட்டன. இதன் விளைவாக, வரிக்கு பிந்திய இலாபமானது 15.52% ஆல் அதிகரித்து ரூபா 4.66 பில்லியனை எட்டியதுடன் இது கம்பனியின் வரலாற்றில் அடைந்த அதியுயர் இலாபமாகும். இதன் விளைவாக பங்கொன்றிற்கான உழைப்பானது ரூபா 2.14 இலிருந்து ரூபா 2.47 ஆக அதிகரித்தது.

#### பீபள்ஸ் லீசிங் - குழுமம்

மீளாய்வுக் காலப்பகுதியில் குழுமத்தின் வரிக்கு பிந்திய இலாபமானது முன்னைய ஆண்டின் தொகையான ரூபா 5.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது ஒரு வீழ்ச்சியினை பதிவுசெய்து ரூபா 4.82 பில்லியனாகக் காணப்பட்டது. இந்த வீழ்ச்சியானது பிரதானமாக குழுமத்தின் காப்புறுதி வணிகமான, பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி

"எமது அடிச்சுவட்டினை ஒருங்கிணைத்தல் மற்றும் எமது மெய்நிகர் பிரசன்னத்தினை விரிவுபடுத்தல் என்பவற்றில் எமது திட்டங்கள் முன்னிறுத்தம் செய்யப்படுவதுடன், இது குழுமத்தினை அளவிடக்கூடிய மற்றும் வினைத்திறனான ஒரு புதிய யுகத்திற்கு கொண்டுசெல்லும்."

மீளாய்வாண்டில் உயர்ந்த காப்புறுதி கோரல்களின் விளைவாக குறைவான இலாபகரத்தன்மையினால் ஏற்பட்டதாகும். குழுமமானது தேறிய வட்டி வருமானமாக ரூபா 14.72 பில்லியனை பதிவுசெய்ததுடன் மொத்தத்தில் 88% இனை பீபள்ஸ் லீசிங் கணக்கீடு செய்தது. பீபள்ஸ் இன்சூரன்ஸ் இன் தேறிய உழைத்த தவணைப்பணமானது சற்றே 1.78% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 4.94 பில்லியனை எட்டியதுடன் இதனை ஈடுகட்டும் விதத்தில் கட்டணம் மற்றும் தரகு வருமானமானது 10% ஆல் அதிகரித்து ரூபா 1.40 பில்லியனை அடைந்து மொத்த செயற்பாட்டு வருமானத்தினை ரூபா 21.43 பில்லியனுக்கு கொண்டு சென்றதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 5.70% அதிகரிப்பாகும். வலுக்குன்றல் நட்டங்கள் 29.63% ஆல் வீழ்ச்சியடைந்து ரூபா 951.76 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இதன் விளைவாக குழுமமானது ஒரு தேறிய செயற்பாட்டு வருமானமாக ரூபா 20.35 பில்லியனை பதிவுசெய்ததுடன், இது 2020/21 ஆண்டுடன் ஒப்பிடும்போது 8.15% அதிகரிப்பாகும். இவ்வருடத்தில் நலன்கள், கோரல்கள், ஒப்புரவளித்தல் செலவினங்கள், ஆளணிச் செலவினங்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக மொத்த செயற்பாட்டு செலவினங்கள் அதிகரித்து நிதிச் சேவைகளிலான வரிக்கு முந்திய இலாபத்தினை ரூபா 8.93 பில்லியனுக்கு கொண்டு சென்றதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு சிறிய வீழ்ச்சியான 1.91% ஆகும். நிதிச் சேவைகளிலான வரியானது 33.90% ஆல் அதிகரித்ததுடன் வருடத்திற்கான வருமான வரிச் செலவினமானது 7.73% ஆல் அதிகரித்தது.

குழுமத்தின் ஏனைய துணை நிறுவனங்களான, பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட் என்பன இவ்வருடத்தில் சிறப்பாக செயற்பட்டதுடன், பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட் ஆகியன ஒரு சாதனை மிக்க செயற்திறனை அடைந்து அவை நிறுவப்பட்டதிலிருந்து அதியுயர் வரிக்கு பிந்திய இலாபத்தினை அடைந்தன. குழுமத்தின் வெளிநாட்டு முயற்சியான லங்கன் எலாயன்ஸ் பைனான்ஸ் லிமிட்டட்டும் பங்களாதேஷில் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட கோவிட்-19 அலைகளின் காரணமாக குறிப்பிடத்தக்க சவால்களை சந்தித்ததுடன் இவற்றுக்கு மத்தியில் ஒரு மெச்சத்தக்க செயற்திறனை அடைந்தது.

### இடர்களை முகாமைப்படுத்தல்

இடர் முகாமைத்துவமானது பீபள்ஸ் லீசிங்கிற்கு தொடர்ந்தும் முன்னிறுத்தம் செய்யப்படும் ஒரு முக்கிய பிரிவாகும் என்பதுடன் இந்த செங்குத்தில் நாம் அதிகளவில் முதலீடு செய்துள்ளோம். ஐந்து புதிய கொள்கைகளின் அமுலாக்கலுடன் இடர் முகாமைத்துவ வரம்புறுகையானது பலப்படுத்தப்பட்டது. நாம் முறைப்பட்ட கலந்துரையாடல்களை அறிமுகப்படுத்தியதுடன், இங்கு நாம் நேரகாலத்துடனான எச்சரிக்கை சமிக்ஞைகளை இனங்காணும் நோக்கில் எமது வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான அபிவிருத்திகளை புரிந்துகொள்வதற்காக கடன் இடரினை நாம் கலந்துரையாடினோம். பலப்படுத்தப்பட்ட முக்கிய இடர் பிரிவுகள், குழுமத்தின் பாரிய வெளிப்பாடான கடன் இடரினை உள்ளடக்குவதுடன், செயற்பாட்டு இடர், தகதொ இடர் மற்றும் குழும இடர் என்பனவாகும்.

கடன் இடருக்கான ஆகக்கூடிய வெளிப்பாடானது இவ்வருடத்தில் 9.51% ஆல் அதிகரித்து கம்பனிக்கு ரூபா 181.11 பில்லியனாகவும் 14.15% ஆல் அதிகரித்து குழுமத்திற்கு ரூபா 207.76 பில்லியனாகவும் காணப்பட்டது. வருடத்தின் இறுதியில் கடன் தேக்க செறிவுகள் கம்பனியினை பொறுத்தளவில் போக்குவரத்துத் துறைக்கு 21.79% ஆகவும் விவசாயத் துறைக்கு 20.21% ஆகவும் காணப்பட்டவேளை இந்த துறைகளுக்கான குழுமத்தின் வெளிப்பாடுகள் 20.24% ஆகவும் 19.50% ஆகவும் காணப்பட்டன. எரிபொருள் பற்றாக்குறையின் தாக்கத்தின் காரணமாக போக்குவரத்துத் துறையானது குறிப்பிடத்தக்களவு கட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுக்கின்றது. இது தொற்றின் காரணமாக 2 வருடங்களாக காணப்பட்ட இடைவிட்ட முடக்கல்கள் மற்றும் குறைவான சுமைக் காரணிகளினால் ஏற்பட்டதுடன், விவசாயத் துறையானது உரத்திற்கான தடை மற்றும் தொடரும் எரிபொருள் பற்றாக்குறையினால் பாதிப்படைந்துள்ளது. எவ்வாறாயினும், இந்தக் கடன் தேக்கங்கள் நெருக்கமாகக் கண்காணிக்கப்படுவதுடன் வாடிக்கையாளர்கள் பாதிப்படையாதிருப்பதற்காகவும் செயற்பாடுகளை வழமைக்கு கொண்டுவருவதற்கு துணையளிப்பதற்காக செயற்திறனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய கடன் வசதிகளின் கடன் தரமானது குறிப்பிடத்தக்களவு மேம்பட்டுள்ளவேளை மரபுவழி புத்தகமானது ஒரு சிக்கலாக உள்ளது. மரபுவழி புத்தகத்தினை முகாமைப்படுத்துவதற்கு நாம் ஒரு தனிப்பயனுடைய கடன் முகாமைத்துவ அலகினை நிறுவும் செயல்முறையில் உள்ளதுடன் இது இவற்றை மீட்டெடுப்பதில் முன்னிறுத்தம் மேற்கொள்ளும்.

திரவத்தன்மை இடரானது விவேகமான திரவத்தன்மை விகிதாசாரங்களூடாக முகாமைப்படுத்தப்படுவதுடன் இவை முறைப்படுத்தல் தேவைகளிலும் பார்க்க அதிகமாகவே காணப்படுகின்றன. சந்தை இடர் முகாமைத்துவமானது விரிவான சூழ்நிலைக்காட்சி மற்றும் உணர்திறன் பகுப்பாய்வினூடாக கண்காணிக்கப்படுவதுடன் இவை கம்பனி மற்றும் குழுமத்தின் இலாபகரத்தன்மைக்கு வட்டி வீதங்களிலான அதிகரிப்பு சாதகமாக காணப்படும் என உறுதிப்படுத்துவதுடன் இவை குத்தகை பொறுப்புக்களில் ஒரு எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தலாம். சந்தை இடரின் ஏனைய கூறுகள் உயர்வாகக் காணப்படவில்லை என்பதுடன் தங்கக் கடன்களைப் பொறுத்தளவில் பண்டங்களின் விலை இடரானது பாதுகாப்பான பெறுமதிக்கான கடன் விகிதத்துடன் முகாமைப்படுத்தப்படுகின்றன.

### எதிர்காலத்திற்கு ஒரு குழுவினை கட்டியெழுப்புதல்

குழுவானது இன்னுமோர் விதிவிலக்கான செயற்திறனை வழங்குவதற்கு ஒன்றுசேர்ந்ததுடன், நாம் அவர்கள் நன்றாக கவனிக்கப்படுவதனை உறுதிசெய்தோம். நிலுவையாயிருந்த சம்பள அதிகரிப்புகள் நிறைவேற்றப்பட்டதுடன் சம்பளங்கள் மற்றும் நலன்கள் பயிற்றுவிக்கப்பட்ட ஆற்றலுக்கான அதிகரிக்கும் இறுக்கமான சந்தையில் போட்டித்தன்மையுடையனவாக மேம்படுத்தப்பட்டன.

எமது பணியாட்கள் எதிர்காலத்திற்கு பொருத்தமாக இருப்பதற்கும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான திறன்கள் மற்றும் அறிவினை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியானது பயிற்றுவித்தலில் ஒரு சாதனை மிக்க தொகையினை முதலீடு செய்தது. நாம் பயிலுதல் முகாமைத்துவ முறைமையில் முதலீடு செய்ததுடன், இது பணியாட்கள் அவர்களது சௌகரியத்திற்கேற்ப அணுகிப் பயிலக்கூடிய, தற்போது மிகவும் பிரபல்யமாகும் இயங்கலை பயிலுதலுக்கு வசதியளிக்கின்றது. பணியாட்களுக்கு நிதியியல் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளுக்கு (மு.செ.கு.) மேலாக நிதியியலல்லாத மு.செ.கு. வழங்கப்பட்டதுடன், இது அவர்களது பங்களிப்பிற்கு நோக்கத்தினைக் கொடுப்பதுடன் செயற்திறனின் ஒரு முற்றுமுழுதான பார்வையினை ஊக்குவிக்கின்றது. முக்கியமாக, பதவியுயர்வுகளை விரைவாக்குவதற்காக நாம் ஆற்றல் தேக்கங்களை இனங்கண்டோம்.

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

இனங்காணப்பட்ட முகாமையாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக வெளிவாரி பயிற்சியாளர்கள் கொண்டு வரப்பட்டார்கள். இவற்றுள் சில திட்டங்கள் மிகையான லட்சியமுடையதாய் காணப்பட்டவேளை, இவை பணியாட்களை உயர்மட்டத்தினை அடைவதற்காக தள்ளப்பட்டதுடன், அவை பயனளித்தன. வாடிக்கையாளர் சேவை பயிற்சியில் குறிப்பிடத்தக்களவு கவனம் செலுத்தப்பட்டதுடன், நாம் உயர்ந்த மட்டத்திலான சேவையினை நிலைநிறுத்துவதனை இது உறுதிசெய்தது.

### சமூகங்களுடன் ஐக்கியமாதல்

நாம் செயற்படும் சமூகங்களுடன் ஐக்கியமாகவும் ஒத்திசைவாகவும் இருப்பதனை தொடர்ந்தோம். இந்த வருடத்தில் நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலைகளுக்கு துணைபுரிவதில் நாம் முன்னிறுத்தம் செய்ததுடன், ரூபா 25.92 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை கொடையாக வழங்கினோம்.

### கண்ணோட்டம்

இலங்கைக்கான கண்ணோட்டம் இதனை எழுதும்போது உறுதியற்றுக் காணப்படுகின்றது. எரிபொருள், எரிவாயு, வலுசக்தி, உணவு மற்றும் மருந்துகள் என்பற்றின் பற்றாக்குறையினால் பொருளாதார நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. கடன் நிலைபேறின் சவால்களிலிருந்து எழுகின்ற சிக்கல்கள் எம்மைச் சூழ்ந்துள்ள கடுமையான பாதிப்பினை பிரதிபலிக்கின்றன. எதிர்வரும் மாதங்களில் கிடைக்கக்கூடிய விளைச்சல் போதுமையற்றதனால் உணவுப் பாதுகாப்பானது ஒரு முக்கிய அக்கறையாகும் என்பதுடன் இந்த உருப்படிகளின் அவசியமான இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கு அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் போதுமையின்றி காணப்படுகின்றன. கொள்கை வட்டி வீதங்கள் 8 ஏப்ரல் 2022 இல் 700 அடிப்படை புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டதன் விளைவாக வட்டி வீதங்களில் கூரிய உயர்வடையும் அசைவு காணப்பட்டது. பணவீக்கமானது அதிவேகமாக அதிகரித்து ஏப்ரல் 2022 இல் 33.8% ஆக காணப்பட்டதுடன் ரஷ்ய-உக்ரேன் யுத்தமானது எரிபொருள் மற்றும் உணவு விலைகளை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்றுமதிகள் நிலையாக காணப்பட்டன ஆனால் சற்று முன்னேற்றமடைந்த சுற்றுலாத்துறையானது நாட்டில் காணப்பட்ட அரசியல் உறுதியின்மையுடன் மீண்டும் மந்த நிலைக்கு திரும்பியது. நாணயமாற்று வீத தளம்பல் மற்றும் அதிகரிக்கும் எரிபொருள் விலைகளுடன் அந்நிய செலாவணி திரவத்தன்மையும் பாரிய சிக்கல்களாகக் காணப்படுகின்றன. செலவழிக்கக்கூடிய வருமானமானது சுருக்கமடைவதுடன், இது கேள்வியில் அவசியமான சுருக்கத்திற்கு இட்டுச்செல்கின்றது. வருமான வரிக் குறுமட்டம் குறைக்கப்பட்டதுடன், PAYE மற்றும் சமூகப் பாதுகாப்பு கட்டணம் மீள்அறிமுகப்படுத்தப்பட்டு பெறுமதி சேர்த்தல் வரி (பெ.சே.வ.) வீதம் அதிகரிக்கப்பட்டதுடன், இவை அரசாங்கத்தின் வருமான திரட்டினை பலப்படுத்தும். அரசாங்கமானது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுவதுடன் இவை நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இன்றியமையாததாகும். இதற்கும் மேலாக, பொருளியலாளர்கள் உலகளாவிய பின்னடைவினை எதிர்வுகூறியுள்ளவேளை இலங்கையின் பொருளாதார இன்னல்கள் இடம்பெறுவதுடன், இவை பொருளாதார கொந்தளிப்பு மற்றும் நிலையற்றதன்மையினை விளைவிப்பதுடன் சில வாய்ப்புக்களையும் வழங்கலாம். மேலும், இவ்வருடத்தில் விவசாயத்துறையானது எழுச்சிபெற்று நாட்டில் உணவுப் பாதுகாப்பினை மீள்நிலைப்படுத்தும். அமுல்படுத்தப்படும் முன்னெடுப்புகள் பல உணவுப் பொருட்களில் தன்னிறைவிற்கு திரும்புவதளை இயலுமையாக்கும் என நாம் நம்புவதுடன், இது மஞ்சளில் நாம் அடைந்த வெற்றியினை பிரதிபலிக்கும். மஞ்சளுக்கான இறக்குமதி தடைசெய்யப்பட்டபோது இது நாட்டில் வளர்க்கப்பட்டு விவசாயிக்கு ஒரு நியாயாமான விலை கிடைப்பதுடன் நுகர்வோருக்கும் ஒரு தாங்கத்தக்க விலையில் தற்போது கிடைக்கின்றது.

எமது திட்டங்கள் எமது அடிச்சுவட்டினை ஒருங்கிணைப்பதிலும் எமது இணைய பிரசன்னத்தை விரிவாக்குவதிலும் முன்னிறுத்தம் செய்யப்படுவதுடன் இது குழுமத்தினை அளவிடக்கூடிய மற்றும் வினைத்திறனான ஒரு புதிய யுகத்திற்கு கொண்டுசெல்லும். நாம் எமது கருவித் தேக்கங்களை மீளாய்வு செய்து, குழுமத்தின் இடர் தேவைக்கேற்ப நாட்டின் சூழ்நிலைக்கு பொருத்தமான கருவிகளை ஊக்குவிப்போம். இந்த வருடத்தின் இலாபத்திற்கு மீட்டல்கள் கணிசமானளவு பங்களிப்பு செய்ததுடன் நாம் இலாபகரத்தன்மை மற்றும் சொத்தின் தரம் ஆகியவற்றை முன்கொண்டு செல்வதற்கான இந்த முக்கியமான பிரிவில் தொடர்ந்தும் முன்னிறுத்தம் செய்வோம். மேலதிகமாக, கடன் செயல்முறைகளை பலப்படுத்துவதில் நாம் தொடர்ந்தும் முன்னிறுத்தல் செய்வோம், சபையின் கடன் குழுவானது ஒரு முன் நிர்ணயிக்கப்பட்ட குறுமட்டத்திற்கு மேல் காணப்படும் வசதிகளை தொடர்ந்தும் மீளாய்வு செய்வதுடன் இது கடன் இடர் ஏற்புமையினை பலப்படுத்தும். மரபுவழி புத்தகத்தினை முகாமைப்படுத்தல் வேறாக்கப்பட்டு உயர் தரத்திலான கடன் சொத்துக்களது வளர்ச்சிக்கு இது அனுமதியளிக்கும். எவ்வாறாயினும், வாடிக்கையாளர் மீட்டலிற்கு துணைபுரியும் ஒரு வரம்புறுகையினுள் பணிபுரிவதற்கு நாம் தீர்மானமாயுள்ளவேளை நாம் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெழுப்பிற்கு நிதியளிக்கின்றோம் என்பதனையும் நாம் புரிந்துகொண்டுள்ளோம். திரவத்தன்மையானது முக்கிய முன்னுரிமை என்பதுடன் தேவையான மட்டத்திலான திரவத்தன்மையினை பராமரிப்பதற்காக நாம் பொருளாதார இலாபத்தினை ஈடுகட்டுவோம். எமது முதிர்வுத் தோற்றுருவங்கள் விவேகமாக ஒத்திசைவாக காணப்படுவதுடன் திரவத்தன்மை விகிதங்கள் முறைமைப்படுத்தல் மட்டங்களுக்கும் மேலாக காணப்படுவதுடன் இவை வருடம் பூராவும் கவனமாக கண்காணிக்கப்படும்.

துறையின் ஒருங்கிணைப்பானது இணைப்புகள் மற்றும் பொறுப்பேற்புகளுக்கான வாய்ப்புக்களை வழங்கும் வேளை இது தொடர்பில் சரியான வாய்ப்புக்களுக்காக நாம் அவதானமாய் உள்ளோம். கடன் இடர், திரவத்தன்மை இடர், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு உள்ளடங்கலான செயற்பாட்டு இடர், ததொ மற்றும் சைபர் இடர்கள் என்பன எதிர்வரும் வருடத்தில் உயர்வடைந்திருக்கும் என்பதனால் நாம் இந்த இடர்களை முகாமைப்படுத்துவதற்காக, அறிக்கையிடும் ஆண்டிலிருந்து பெற்ற எமது அனுபவத்தினை பயன்படுத்தி எமது செயல்முறைகளை பலப்படுத்தியுள்ளோம்.

### ஒப்புகைகள்

இந்த சந்தர்ப்பத்தில் நான் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் சபைக்கும் தாய் நிறுவனமான மக்கள் வங்கிக்கும் அவர்கள் வழங்கிய வழிகாட்டுதலுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன். கடந்த வருடத்தின் முதன்மையான செயற்திறனை மீண்டும் ஒரு முறை வழங்குவதனை இயலுமையாக்கிய குழுவினை வழிநடத்தியமையானது எனது சிறப்புரிமையாகக் கருதுவதுடன் அவர்களது ஒத்துழைப்பு மற்றும் கடப்பாட்டிற்கு நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எம்மை நாட்டின் சிறந்த நேசமான குத்தகை நாமமாக கருதிய எமது வாடிக்கையாளர்களது ஆதரவிற்கு நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் எதிர் வருடத்தில் எமது தொடர்ச்சியான உறுதுணையினை அவர்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கின்றேன். நான் எமது வணிகப் பங்காளிகள் மற்றும் எமது முதலீட்டாளர்களுக்கு பீபள்ஸ் லீசிங் குழுமத்தின் வளர்ச்சியில் அவர்களது தொடர்ச்சியான நம்பிக்கைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் இலங்கை மத்திய வங்கியின் மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் உறுதுணைக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எதிர்வரும் ஆண்டானது முன்னைய ஆண்டை விட கடினமாகக் காணப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஒரு திடமான செயற்திறன், போதுமான திரவத்தன்மை ஆகியவற்றுடன் கடந்த மூன்று வருடங்களின் சிக்கல்களிலிருந்தான ஞானத்துடன் நாம் இந்த வருடத்தில் நுழைகின்றோம். இதற்கும் மேலாக, எமது அமைப்பு முறைகள் எமக்கு ஆழமான நுண்ணறிவினை வழங்குவதுடன் எம்மை மிகவும் ஆற்றல்மிக்கதாக்கி செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ மட்டங்களில் எமது செயல் வல்லமையினையும் மேம்படுத்துகின்றது. எதிர்வரும் வருடத்தினை கையாள்வதற்கு நாம் தயாராயுள்ளதுடன் எமது விழுமியங்கள் அல்லது ஸ்திரத்தன்மையினை விட்டுக்கொடுக்காது போட்டியிடக்கூடியதாயிருக்கும். எமது அனைத்து பங்காளிகளையும் எம்முடன் இணைந்து ஒன்றாகச் செயற்பட்டு எதிர்வரும் மாதங்களில் காணப்படக்கூடிய உறுதியின்மை மற்றும் நிலையற்றதன்மைக்கு அப்பால் வெற்றிகொள்வதற்கு அழைக்கின்றேன்.



**சமிந்திர மார்சலீன்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர்*

26 ஜூலை 2022
கொழும்பு

# பெறுமதி உருவாக்கல் மாதிரி

பெறுமதி உருவாக்கல் மாதிரி 26
பங்காளிகள் ஈடுபாடு 28
செயற்படும் சூழல் 31
பொருண்மை 34
எமது மூலோபாயம் 40



அணுக்கத்திற்கான எமது சௌகரியமான பாதையுடன் இணைத்தல்



# பெறுமதி உருவாக்கல் மாதிரி

நிலைபேறுள்ள பெறுமதி உருவாக்கம்

எமது செயற்பாடுகளுக்கு பொருத்தமான நி.அ.இலக்குகள்

முப்பரிமாணச் செயற்திறன்

## உள்ளீடுகள்

**நிதியியல் மூலதனம்**

- மொத்த சொத்துக்கள்: ரூ. 164.55 பில்லியன்
- மொத்த பொறுப்புக்கள்: ரூ. 130.21 பில்லியன்
- உரித்துவம்: ரூ. 34.34 பில்லியன்
- மொத்த கடன்பெறல்கள்: ரூ.20.26 பில்லியன்

**மனித மூலதனம்**

- வலுவளிக்கப்பட்ட மற்றும் கடப்பாடுடைய தொழிற்சேனையான 2,343 பணியாட்கள்

**சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்**

- **353,414** வாடிக்கையாளர்கள்
- **38,890** வணிகப் பங்காளிகள்
- சமூக உறவுகள்

**அறிவுசார் மூலதனம்**

- எமது தாய் நிறுவனத்தின் பலம்
- வணிகநாமப் பெறுமதி ரூ. 8.13 பில்லியன்
- ரூ.36.76 மில்லியன் பெறுமதியான மென்பொருள்
- சான்றளிப்புகளும் விருதுகளும்
- நிறுவன அமைதியான அறிவு
- அறிவினைப் பகிரும் கலாச்சாரம்

**உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்**

- எமது கிளை வலையமைப்பான 104 கிளைகள் ரூ. 1,049.25 பெறுமதியான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**இயற்கை மூலதனம்**

- எமது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நுகரப்பட்ட இயற்கை வளங்கள்
- கம்பனியின் கரியமில தடம் **3,810.88 $tCO_2e$**

## பெறுமதி உருவாக்கம்

தொலைநோக்கு | பணிநோக்கு | விழுமியங்கள்

முக்கிய செயற்பாடுகள் மற்றும் ஆக்க உணர்வுகள்

வாடிக்கையாளர்களுக்கு வட்டியினை உழைக்கும் ஒரு பரவலான கருவிகளூடாக வைப்புக்களை திரட்டுதல்

முதலீடு, தொழிற்படு மூலதனம் மற்றும் நுகர்வுத் தேவைகளுக்கு நிதியியல் மூலதனத்தினை வழங்குவதுடன் அதற்கு வாடிக்கையாளர்கள் வட்டியினை அல்லது ஒரு ஒத்த கட்டணத்தினை செலுத்துகிறார்கள்




வாடிக்கையாளரது பெறுமதி முன்னீடுகளை துணைச்சேவைகள் வழங்கும் நிறுவனங்களிலான முதலீட்டுடன் விரிவாக்குதல்

வளர்ச்சிக்கு வசதியளிப்பதற்காக பன்முக மூலங்களிலிருந்து சலுகையான கடன் வசதிகளுக்கான அணுக்கத்துடன் வாடிக்கையாளர்களுக்கு துணையளித்தல்

செயற்படும் சூழலிருந்தான தாக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| பொருளாதார பின்னவை மற்றும் உறுதியின்மை | தொற்று | அரசாங்கக் கொள்கை | அதிகரித்த எந்திரமயமாக்கல் |

## விளைவுகள்

**கருதப்பட்ட கருவிகள்**

- குத்தகைகள்
- கடன்கள்
- வைப்புகள்
- எல்லைக்கடன் வர்த்தகம்
- தங்கக் கடன்கள்
- இஸ்லாமியக் கருவிகள்

**கருதப்படாத பக்க விளைவுகள்**

- உமிழ்வுகள்
- இ-கழிவு
- தாள் கழிவு
- ஏனைய கழிவு

நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட பெறுமதி மற்றும் விளைவுகளின் காரணமாக எமது பங்காளிகளுக்கான பெறுமதி உருவாக்கம், அரித்தல், பாதுகாத்தல் நோக்கிய எமது பதிலளிப்பு

## விளைவுகள்

**நிதியியல் மூலதனம்**
- திடமான ஐந்தொகை
- பங்குதாரர்களுக்கு உரித்துடைமையான இலாகம் ரூ.4,659.01 மில்லியன்
- உரித்துவத்தினை ரூ. 38,818.31 மில்லியனுக்கு அதிகரித்தமை

**மனித மூலதனம்**
- பணியாட்களுக்கான கொடுப்பனவுகள் ரூ.4,002.41 மில்லியன்
- பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு ரூ.14.77 மில்லியன்
- தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள்
- பணியாட்கள் திருப்தி
- ஆக்கத்திறன்

**சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்**
- முதிர்வு உருமாற்றம்
- அதிகரித்த நம்பிக்கை
- பயனாளர் சமூகங்கள்

**அறிவுசார் மூலதனம்**
- வணிகநாமப் பெறுமதி ரூ.6.51 பில்லியன்
- தடையற்ற மற்றும் வினைத்திறனான முறைமைகள்
- அதிகரித்த உள்ளார்ந்த அறிவு

**உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்**
- உற்பத்திசெய்யப்பட்ட மூலதனத்தின் பெறுமானத்தேய்வு முதலீடுகளை விஞ்சியுள்ளது

**இயற்கை மூவலதனம்**
- கம்பனியின் கரியமில அடிச்சுவடு அதிகரித்தது **870.84 $tCO_2e$**
- அதிகரித்த டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள்
- மீள்சுழற்சி செய்யப்பட்ட தாள் **13,146** கிலோ கிராம்

## தாக்கங்கள்

**வாடிக்கையாளர்களுக்கு உருவாக்கப்பட்ட பெறுமதி**

| அளவுசார் குறிகாட்டிகள் | 2021/22 | 2020/21 |
|---|---|---|
| மறுசெயல் வாடிக்கையாளர்கள் | 39.66% | 36.93% |
| மொத்த வைப்பு வாடிக்கையாளர்கள் | 309,977 | 291,319 |
| மொத்த கடன்பெற்ற வாடிக்கையாளர்கள் | 125,789 | 117,773 |
| செயற்திறனற்ற கடன் வீதம் | 8.78% | 9.21% |
| வழங்கப்பட்ட கடன் காலம் தாழ்த்திச் செலுத்தல்கள் எண். | 32,975 | 59,952 |
| வணிக சலுகைகளின் எண். | 2,004 | - |

- மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சௌகரியம்
- மேம்படுத்தப்பட்ட புத்தாக்கக் கருவிக்கான ஆற்றல் மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தல்
- தனிப்பயன் கருவிகளும் சேவைகளும்
- அன்பான மற்றும் அக்கறையான வாடிக்கையாளர் உறவு
- டிஜிட்டல் சௌகரியத்துடன் தனிப்பயனான, பெறுமதி சேர்க்கப்பட்ட நிலைபேறுள்ள நிதிச் சேவைகளை வழங்குதல்

**பணியாட்களுக்கு உருவாக்கப்பட்ட பெறுமதி**

| அளவுசார் குறிகாட்டிகள் | 2021/22 | 2020/21 |
|---|---|---|
| பணியாட்கள் நிறுத்திவைப்பு | 90.16% | 93.80% |
| பணியாளொருவருக்கான சொத்து (ரூ.) | 80.52 மில்லி. | 70.23 மில்லி. |
| பணியாளொருவருக்கான இலாபம் (ரூ.) | 2.08 மில்லி. | 1.72 மில்லி. |
| பணியட்டொகுதி புரள்வு | 9.84% | 6.20% |

- தொழில் முன்னேற்றம்
- கம்பனியின் "குரல்"
- நம்பகமான மற்றும் பொறுப்பான ஒரு தொழிற்சேனை
- தொழில் வாழ்க்கை சமநிலை
- சம வாய்ப்புடைய பணிக்கொள்பவர்
- திறமையுள்ள ஒரு தொழிற்சேனை

**முதலீட்டாளர்கள் மற்றும் நிதியளிப்பவர்களுக்கு உருவாக்கப்பட்ட பெறுமதி**

| அளவுசார் குறிகாட்டிகள் | 2021/22 | 2020/21 |
|---|---|---|
| பங்கொன்றிற்கான பங்கிலாபம் (ரூ.) | 1.25 | 0.60 |
| வரிக்குப் பிந்திய இலாபம் (ரூ.) | 4,659.01 மில்லியன் | 4,033.02 மில்லியன் |

- உச்சநிலை இடர் விளைவு ஈடுகட்டல்
- மேம்பட்ட இலாபகரத்தன்மை
- வெளிப்படைத்தன்மை
- சிறந்த ஆளுகை
- திடமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை

**வணிகப் பங்காளிகளுக்கு உருவாக்கப்பட்ட பெறுமதி**

| அளவுசார் குறிகாட்டிகள் | 2021/22 | 2020/21 |
|---|---|---|
| செயலுறு வணிகப் பங்காளிகள் (எண்.) | 46,560 | 38,890 |
| வாகன வழங்குநர்கள் (எண்.) | 40,118 | 31,665 |
| கொள்முதல் செலவினம் (ரூ.) | 131,515.92 மில்லியன் | 82,880.45 மில்லியன் |

- நிலையான பரஸ்பரமான நலனுடைய உறவுமுறைகள்
- வழங்குநர்களது வணிகத்தினை விரிவாக்குவதற்கு அவர்களுடன் கூட்டுச்சேருதல்
- எமது இடங்கள் பற்றிய இற்றைப்படுதப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு மேம்பட்ட தொழில் நுட்பத்தினை கருதுதல்
- வெளிப்டைத்தன்மை

**அரசாங்கத்திற்கு உருவாக்கப்பட்ட பெறுமதி**

| அளவுசார் குறிகாட்டிகள் | 2021/22 | 2020/21 |
|---|---|---|
| செலத்தப்பட்ட வரி (ரூ.) | 2,791.99 மில்லியன் | 4,203.03 மில்லியன் |

- நிதித்துறை ஸ்திரத்தன்மை
- பயனுறுதியான மூலதன உருவாக்கம்
- வறுமையினை குறைத்தல்

**உள்ளூர் சமூகத்திற்கு உருவாக்கப்பட்ட பெறுமதி**

| அளவுசார் குறிகாட்டிகள் | 2021/22 | 2020/21 |
|---|---|---|
| தொடர்சியான தொழில் வாய்ப்பு (எண்.) | 2,245 | 2,343 |
| கூ.ச.பொ. திட்டங்களிலான முதலீடு (ரூ.) | 29.40 மில்லியன் | 20.37 மில்லியன் |

- நிலைபேறுள்ள வணிகச் செயற்பாடுகளுக்கான கடப்பாடு
- உள்ளூர் சமூகங்களுக்கு வலுவளித்தல்
- பொறுப்பான கடன் வழங்கல்
- மேம்பட்ட உள்ளூர் திறன் செயல்வல்லமை
- தேசிய முன்னுரிமைகளை விளித்துரைத்தல்

**சூழலுக்கு உருவாக்கப்பட்ட பெறுமதி**

| அளவுசார் குறிகாட்டிகள் | 2021/22 | 2020/21 |
|---|---|---|
| டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள் (எண்.) | 472,782 | 466,877 |
| குழும கரியமில அடிச்சுவடு ($tCO_2e$) | 5,182.58 | 4,381.67 |

- சூழல் சட்டங்கள்/நியமங்களுடன் இணக்கப்பாடு
- மேம்பட்ட சூழல் பாதுகாத்தல் முன்னெடுப்புகளுக்கு பணியாட்களுடனான ஈடுபாடு
- தாள்களற்ற பணிச் சூழல் நோக்கிய கலாச்சார நகர்வு
- அதிகரித்த பணிப்பாய்வு தன்னியக்கம்

# பங்காளிகளுடனான ஈடுபாடு

GRI | 102-40, 102-42, 102-43, 102-44

ஒரு சேவை நோக்கான வணிகமாக, ஒரு பரந்தளவிலான பங்காளிகளுடன் தொடர்புகளை பராமரித்தல் முக்கியம் என நாம் புரிந்துகொண்டுள்ளோம் என்பதுடன் அவர்களுக்கு பெறுமதியினை உருவாக்குவதற்கு மூலோபாய வலியுறுத்தலை மேற்கொண்டுள்ளோம். பெறுமதி உருவாக்கத்தில் மிகவும் முக்கியமான பங்காளிகளையும் நிறுவப்பட்ட செயல்முறைகள் மற்றும் ஒரு பங்காளிகள் ஈடுபாடு பொறிமுறையினூடாக எமது நடவடிக்கைகளினால் மிகவும் பாதிக்கப்படுபவர்களையும் நாம் இனங்கண்டு முன்னுரிமை அளிப்போம். இவ்வாண்டில் காணப்பட்ட செயற்பாட்டு நிலைமைகளின் கணிசமானளவு நகர்வானது பங்காளிகளது அக்கறைகளது ஒரு செயற்திறனான புரிந்துணர்வு அவசியமானதுடன் கம்பனியானது ஈடுபடல் செயல்முறையினை மேலும் பலப்படுத்தியது.

## முதலீட்டாளர்கள்

சிற்றளவு பங்குதாரர்கள், நிறுவன முதலீட்டாளர்கள், முறிகளை வைத்திருப்பவர்கள், நிதியியல் பகுப்பாய்வாளர்கள் மற்றும் தரப்படுத்தல் முகவர்கள் ஆகியோருக்கு பொறுப்பேற்ற இடருக்கு ஏற்ற விளைவினை வழங்குவதற்காக நாம் எமது வணிகத்தினை முகாமைப்படுத்துகின்றோம்.

### ஈடுபாட்டின் குறிப்பிட்ட முறைகள்

- ஆண்டறிக்கைகள்
- ஆண்டுப் பொதுக் கூட்டங்கள்
- இடைக்கால நிதிக் கூற்றுக்கள்
- கொ.ப.ப. இற்கான வெளிப்படுத்தல் மற்றும் அறிவித்தல்கள்
- நேருக்கு நேரான சந்திப்பு

### தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள்

- பொறுப்பான மற்றும் சமநிலையான வணிக நடத்தை மற்றும் திடமான சூ.ச.ஆ. நடைமுறைகள்
- நிலைபேருள்ள இலாபம்
- திருப்திகரமான பங்குதாரர் விளைவுகள்
- விலை உணர்திறன் தகவல்களது நேரத்துடனான வெளிப்படுத்தல்
- வெளிப்படைத்தன்மை
- நிலைபேறுள்ள வளர்ச்சி மூலோபாயத்துடனான தொடர்வுத் திட்டம்
- பலமான இடர் முகாமைத்துவ முறைமை

### எமது பதிலளிப்பு

- பொறுப்பான பங்கிலாபக் கொள்கையும் போதுமையான பங்குதாரர் விளைவுகளும்
- திடமான ஐந்தொகை
- ஒருங்கிணைந்த செயற்திறனிலான பிரசுரிக்கப்பட்ட தகவல்கள்
- நிலைபேறுள்ள பெறுமதியினை வழங்குவதற்கு விருத்திசெய்யப்பட்ட மூலோபாயங்கள்
நிலைபேறுள்ள நிதி மற்றும் நெறிமுறையான கடன்வழங்கல்
- திடமான நிதிச் செயற்திறன்
- விவேகமான இடர் முகாமைத்தவ முறைமை

### கோவிட் பதிலளிப்பு

- சவால் மிக்க வணிகச் சூழலின் மத்தியில் விலை உணர்திறன் தகவல்களது நேரகாலத்துடனான வெளிப்படுத்தல்
- திரவத்தன்மை, கடன் இடர், ஆகியவற்றை முகாமைப்படுத்தல் மற்றும் நிதியியல் மீளெழுச்சியினை பராமரித்தல்

## வாடிக்கையாளர்கள்

தனிநபர் வாடிக்கையாளர்களும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களும் வணிக வளர்ச்சியினை இயக்கும் முக்கியமானவர்கள்

### குறிப்பிட்ட விதத்திலான ஈடுபாடு

- அச்சு, இலத்திரணியல் மற்றும் சமூக ஊடகம்
- எழுத்துமூல தொடர்பாடல்
- தகவல் அழைப்பு மையம்
- கிளை வலையமைப்பு
- தொழில்நுட்ப அடிப்படையான மேடைகள்
- வாடிக்கையாளர் விஜயங்கள்
- நாளாந்த வணிக ஊடாட்டங்கள்
- வெளிக்கள கூசபொ முன்னெடுப்புகள்
- நேருக்கு நேரான கலந்துரையாடல்
- வாடிக்கையாளர் முறையீடுகள்

### தேவைகளும் எதிர்பார்ப்புகளும்

- புத்தாக்கமான நிதியியல் தீர்வுகள் மற்றும் சேவைகள்
- வாடிக்கையாளரது தெரிவான மேடைக்கு வசதியளிப்பதற்கான ஆற்றல்
- அணுக்கம் மற்றும் சௌகரியம்
- பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல்களுடன் வெளிப்படையான விலையிடல்கள்
- தெளிவான மற்றும் நேர்த்தியான கருவித் தகவல்கள் மற்றும் ஆலோசனையினை பெறுவதற்கான ஆற்றல்
- சேவை பயனுறுதித்தன்மை
- பரிவான மற்றும் தோழமையான சேவை

### எமது பதிலளிப்பு

- தொற்றின் மத்தியில் பாதுகாப்பான சேவை அனுபவத்தினை வழங்குதல்
- மேம்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்குவதற்கு டிஜிட்டல் வழிமுறைகளுக்கு இடம்பெயர்வு (PLC Touch/ CAPP/QR Code/DCHEQUE)
- "PLC Online" உள்ளடங்கலாக நடைமுறையிலுள்ள தொடர்பு இல்லாத கருவிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தியமை
- வாடிக்கையாளர்களை எட்டுவதற்கு மிகவும் வசதியான மற்றும் இலகுவான வழியாக சமூக ஊடகத்தினை இனங்கண்டு அவற்றிலான அதிகரித்த பிரசன்னம்
- தாய் நிறுவனத்துடனான மேம்பட்ட மூலோபாய கூட்டுறவுகள் மற்றும் ஒரு பரவலான அனுபவததிற்காக வாய்ப்புக்களை உருவாக்கியமை

### கோவிட் பதிலளிப்பு

- புதிய வழமையான சூழ்நிலையினை சமாளிப்பதற்காக வெற்றிகரமாக சேவைத் தரத்தினை உறுதிப்படுத்தியமை
- எமது வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்விற்கு முன்னுரிமை அளித்தல்
- கோவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசாங்க முன்னெடுப்புகளுக்கு துணைபுரிதல்
- இந்த சவால்மிக்க காலப்பகுதியில் எமது வாடிக்கையாளர்களது வாழ்க்கையினை மீள் நிறுவுவதற்கான உதவிக்கரம் நீட்டல்

**அனைத்து பங்காளிகளுக்கிடையேயான பொது அக்கறைகள்**

- நியாயமான கொடுக்கல் வாங்கல்கள்
- நிலைபேறுள்ள உழைப்புக்களின் வளர்ச்சி
- நிதியியல் ஸ்திரத்தன்மை
- வினைத்திறன்
- இணக்கப்பாடு

**ஈடுபாட்டிற்கான பொதுவான வழிமுறைகள்**

- இணையத்தளம்
- ஆண்டறிக்கை
- நேரடியான மற்றும் இணையவழி கூட்டங்கள்
- செய்தித்தாள் வெளியீடுகள்
- சமூக ஊடகம்
- ஊடக வெளியீடுகள்
- கடிதத்தொடர்பு
- இலத்திரணியல் ஊடகம்

## பணியாட்கள்

எமது செயற்திறனை முக்கியமாக இயக்குவது எமது குழுவின் 2,245 தனிநபர்கள்.

**ஈடுபாட்டின் குறிப்பிட்ட முறைகள்**

- முகாமைத்துவக் குழு கூட்டங்கள்
- மூலோபாய திட்ட அமர்வுகள்
- சமூக ஊடக குழுக்கள் மற்றும் கூட்டாண்மை தொடர்பாடல்கள்
- தொழில்நுட்பத்தினால் இயக்கப்படும் மேடைகள்
- பீபள்ஸ் லீசிங் பணியாட்கள் சங்கம்
- செயற்பாட்டு வழிகாட்டிகள் மற்றும் கொள்கைகள்
- பணியாட்கள் மனக்குறைகளை கையாளுதல்

**தேவைகளும் எதிர்பார்ப்புகளும்**

- வணிகத் தொடர்ச்சி மற்றும் நிலைபேறுள்ள வளர்ச்சி
- நியாயமான வேதனம் மற்றும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு உள்ளடங்கலான நலன்கள்
- வினைத்திறனான செயற்திறன் முகாமைத்துவம் மற்றும் அங்கீகாரம்
- பாதுகாப்பான மற்றும் உள்ளடங்கலான தொழில்புரியும் சூழல் வாய்ப்புக்கள் மற்றும் தொழில் முன்னேற்றத்தினால் துணையளிக்கப்படுகின்றது.
- பணியாட்கள் திறனை உயர்த்துதல்
- தொழில் பாதுகாப்பு
- தன்னியக்க பணிப்பாய்வுகள், நெகிழ்வான மணித்தியாலங்கள் மற்றும் தொழில் இடங்களுக்கு இடம்பெயர்தல்
- இரகசியத்தன்மை மற்றும் திறந்த தகவுக் கொள்கை

**எமது பதிலளிப்பு**

- தொற்றிற்கு மத்தியில் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்
- கடுமையான ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு விதிமுறைகள் உள்ளன
- தன்னியக்க பணிப்பாய்வுகள் மற்றும் ஓர் நெகிழ்வான தொழில்புரியும் சூழல் WFH ஒழுங்குபடுத்தல் ஊடாக
- டிஜிட்டல் மேடைகளூடாக பயிற்றுவித்தல் மற்றும் அறிவுப் பகிர்வு
- பணியாட்களுடனான ஈடுபாடு
- பணியாட்கள் பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக புதிய கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை அமுல்படுத்தல்
- பலப்படுத்தப்பட்ட ஆளுகை

**கோவிட் பதிலளிப்பு**

- செயல்முறையினை டிஜிட்டல் மயமாக்கல் செய்வதூடாக செயற்திறனான வழிமுறைகளை அமுல்படுத்தும்வேளை அவசியமான உறுதுணையினை வழங்கல் மற்றும் நிலைபேறுள்ள தொலைவிடத்திலிருந்து பணிபுரிவதற்கான உருமாற்றம்
- கோவிட் செயற்பணிக் குழுவினை அமுல்படுத்தி தேவைக்கேற்ப தொடர்ச்சியாக நிலைமையினை கண்காணித்து இற்றைப்படுத்தல்
- பணியாட்களது மனவுறுதியினை ஊக்குவிப்பதற்காக டிஜிட்டல் மேடைகளூடாக தொடர்ச்சியாக பணியாட்கள் ஈடுபாட்டினை மேம்படுத்தல்
- பணியாட்கள் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பில் தொடர்ச்சியாக விழிப்புணர்வினை பராமரித்தல்
- பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வட்டியற்ற கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் உலர் உணவுப் பொருட்களை வழங்குதல்

## வழங்குநர்கள் மற்றும் வணிகப் பங்காளிகள்

தரகர்கள், முகவர்கள் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்கள் உள்ளடங்கலான ஏனைய நிதியியல் இடையீட்டாளர்களுடன் நிலைபேறுள்ள உறவினைப் பராமரித்தல்

**ஈடுபாட்டின் குறிப்பிட்ட முறைகள்**

- நேரடியான கலந்துரையாடல்
- வழங்குநர் மதிப்பீடுகள்
- வழங்குநர் பதிவீடு
- கள விஜயங்கள்
- புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
- சேவை உடன்படிக்கைகள்

**தேவைகளும் எதிர்பார்ப்புகளும்**

- பொறுப்பான கொள்முதல் மற்றும் நேரகாலத்துடனான தீர்ப்பனவு
- போட்டித்தன்மையுடைய விலையிடல் மற்றும் விலைக்கோரல் செயல்முறை
- நியாயமான கையாளுகை மற்றும் வெளிப்படைத்தன்மை
- சி.ந.நி. க்கான வணிக வாய்ப்புக்கள்
- உடனடியான பதிலளிப்பு

**எமது பதிலளிப்பு**

- ஒரு வெளிப்படையான கொள்முதல் செயல்முறை
- கொடுப்பனவு செயல்முறையினை சீரமைத்தல்
- செயற்திறனை கண்காணிப்பதற்காக வழங்குநர்களுடனான வழக்கமான ஈடுபாடு
- பொறுப்புள்ள வணிக நடைமுறைகளை உறுதிசெய்வதற்காக வழங்குநர்களை சல்லடையிடல்
- நெறிமுறையான வழங்குநர்களை தெரிவுசெய்வதற்காக சான்றுகளை மீளாய்வு செய்து இற்றைப்படுத்தல்
- ஆலோசனைச் சேவைகள் மற்றும் சேவை விநியோக பின்னூட்ட கூட்டங்கள் உள்ளடங்கலான வழங்குநர் அபிவிருத்தி மற்றும் உறுதுணை
- சி.ந.நி. இருந்து தொடர்ச்சியாக கொள்முதல் செய்தல்
- நியாயமான கொள்முதல் நடைமுறைகள்
- செயல்முறைகளை சீரமைப்பதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

**கோவிட் பதிலளிப்பு**

- டிஜிட்டல் மேடைகளூடாக கொடுப்பனவுகளை நேரத்திற்கு வழங்குதல்

# பங்காளிகளுடனான ஈடுபாடு

## அரசாங்கம் மற்றும் முறைமைப்படுத்துபவர்கள்

நாம் அரசாங்கத்துடனும் இ.ம.வ., கொ.ப.ப., இ.பி.ப.ஆ. உள்ளடங்கலான தொடர்புடைய முறைமைப்படுத்துபவர்களுடனும் சர்வதேச அங்கங்கள் மற்றும் சங்கங்களுடனும் நல்ல உறவினைப் பராமரிக்கின்றோம்.

### குறிப்பிட்ட விதத்திலான ஈடுபாடு

- இ.ம.வ. இனால் தளத்திலான மீளாய்வு
- கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் முறைமைப்படுத்துபவர்களுடன் கலந்துரையாடல்
- பணிப்புரைகள் மற்றும் சுற்றறிக்கைகள்
- மீளாய்வுக் கூட்டங்கள்
- இணக்கப்பாட்டு அறிக்கைகள்
- தளத்திற்கப்பாலான மீளாய்வு

### தேவைகளும் எதிர்பார்ப்புகளும்

- வணிகத் தொடர்ச்சி
- விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு
- முறைமைப்படுத்தல் திருத்தங்கள் நோக்கிய உடனடி பொறுப்புணர்ச்சி
- வஅறிநி துறையினை மீட்டிடுவதற்கு முறைமைப்படுத்துபவருடன் கூட்டுசேர்தல்
- துறையின் சகாக்களுடன் திடமான பங்களிப்பு மற்றும் செயற்திறனான கூட்டுசேர்தல்
- தேசிய முன்னுரிமைகள் நோக்கிய பங்களிப்பு
- வாடிக்கையாளர்களுக்கு நியாயமான கவனிப்பு
- நெறிமுறையான வணிக நடைமுறைகள் மற்றும் பணிச் சூழல்கள்

### எமது பதிலளிப்பு

- முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் மாற்றங்களுடன் வெளிப்படையான மற்றும் பயனுறுதிமிக்க பின்பற்றுதல்
- நேரடி மற்றும் மறைமுகமான வரிப் பங்களிப்புகளூடாக தேசத்திற்கான பங்களிப்புகள்
- வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துவதற்கு சபை உப குழுக்களை விரிவாக்கியமை
- செயல்முறையினை சீராக்குவதற்காக கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை விருத்திசெய்தமை

### கோவிட் பதிலளிப்பு

- கோவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசாங்க முன்னெடுப்புகளுக்கு துணைபுரிதல்
- பொறுப்புடைய ஒரு கூட்டாண்மை நிறுவனமாக வரிக் கொடுப்பனவுகளூடாக அரசாங்கத்திற்கு பங்களித்தல் மற்றும் சமூக அபிவிருத்திக்கு ஏனைய நிதி உதவிகள்
- பொருளாதாரத்திற்கு தொடர்ச்சியான உறுதுணையின் மூலம் செயற்பாட்டு ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்தல் மற்றும் வணிக மீளெழுச்சியினை பராமரித்தல்
- இ.ம.வ. இன் பணிப்புரைகளுக்கு மேலாக சலுகைகளை வழங்குதல்

## சூழல் மற்றும் சமூகம்

நாடு முழுவதும் காணப்படும் பரவலான சமூகங்களுடனும் எம்மைச் சுற்றியுள்ள சமூகங்களுடனும் ஆரோக்கியமான உறவினை நாம் வளர்க்கின்றோம்.

### குறிப்பிட்ட விதத்திலான ஈடுபாடு

- வெளிக்கள கூசபொ முன்னெடுப்புகள்
- கரியமில அடிச்சுவட்டுத் தரவு தடமறிதல் செயலாக்கம்
- நிறுவனங்கள், சமூக முதல்வர்கள் மற்றும் சமூக அடிப்படையான ஒழுங்கமைப்புகளுடனான கலந்துரையாடல்கள்
- ஏற்பாதரவுகள்

### தேவைகளும் எதிர்பார்ப்புகளும்

- நிஅமு இன் மேம்படுத்தல்
- தேசிய அபிவிருத்தி திட்டங்களைக் கடைப்பிடித்தல்
- சமூக வலுவளிப்பும் கொள்திறன் கட்டியெழுப்பலும்
- காலநிலை மாற்றங்களுக்கான பதிலளிப்பு
- வணிகச் செயற்பாடுகளிலிருந்து ஆகக்குறைந்த நேரடி சூழல் தாக்கம்
- வழங்கப்படும் கருவிகள் மற்றும் சேவைகளிலான உரிய நேரத்திலான மற்றும் பொருத்தமான தகவல்கள்

### எமது பதிலளிப்பு

- எமது செயற்பாடுகளிலிருந்து ஆகக்குறைந்த நேரடி சமூக மற்றும் சூழல் தாக்கங்களை உறுதிப்படுத்தியமை
- சமூக அடிப்படையிலான தேசிய முன்னுரிமைகளுக்கு துணைபுரிந்தமை
- சூழல் தோழமையான வணிக நடைமுறைகளில் பணியாட்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான தொடர்ச்சியான அறிவூட்டல்
- பொதுச் சேவை மேம்பாட்டில் முதலீடு செய்தமை
- நிஅமு இன் மேம்பாடு நோக்கி பங்களிப்பு செய்தமை

### கோவிட் பதிலளிப்பு

- கோவிட்-19 சிகிச்சை மற்றும் கவனிப்பினை பலப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் கோவிட்-19 இடைநிலை கவனிப்பு மையங்களுக்கு அவசியமான உபகரணங்களை கொடையளித்தமை

# செயற்பாட்டுச் சூழல்

### பொருளாதார வளர்ச்சி

2020 இல் தொற்றினால் ஏற்பட்ட இடையூறுகளைத் தொடர்ந்து உலகம் முழுவதுமான பொருளாதாரங்கள் ஒரு சமனற்ற மீட்சிப் பாதையினை தொடர்ந்தன. 2021 இல் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியானது 6.1% ஆக காணப்பட்டதுடன் இதற்கு புதிய வழக்கத்திற்கான பொருளாதார நடவடிக்கைகளுக்கான திடமான கொள்கைகள் மற்றும் திருத்தங்களினால் துணையளிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2021 இன் இறுதிப் பாகத்தில் காணப்பட்ட மோசமான அபிவிருத்திகள் உலகளாவிய பொருளாதாரத்தின் கண்ணோட்டத்தினை கணிசமானளவு மந்தமாக்கியதுடன் ச.நா.நி. எதிர்வுகூறலின் பிரகாரம் உலகின் பொருளாதார வளர்ச்சியானது 2022 இல் 3.6% ஆக குறைவடையும்.

2020 இல் 3.6% ஆல் சுருங்கிய இலங்கையின் பொருளாதாரமானது 2021 இல் ஒரு அடக்கமான மீட்புடன் 3.6% ஆக வளர்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், 2021 இன் இறுதிப் பாகத்தில் நாடானது பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு மந்தநிலையினை கண்டதுடன் அந்நிய செலாவணி ஒதுக்கங்களின் பற்றாக்குறை, இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் உயர்வடையும் பணவீக்கம் என்பவற்றுடன் போராட வேண்டியிருந்தது. அந்நிய செலாவணி சிக்கலின் தீவிரத்துடன் 2022 இன் முதல் காலாண்டில் விட்ச் ரேட்டிங்கிஸ் இனால் நாட்டின் நீண்டகால வெளிநாட்டு நாணய தவறுதல் தரமானது சி தரத்திற்கு தரமிறக்கப்பட்டது.

மொ.உ.உ.




### நீடித்த தொற்று

சர்வதேச எல்லை மூடல்கள், முடக்கங்கள், உலகளாவிய வழங்கல் சங்கிலிக்கான இடையூறுகளை விளைவித்த தொற்றினைத் தொடர்ந்து வணிக சூழ்நிலையானது தொடர்ந்தும் தோற்றுவித்ததுடன் வணிகங்களில் கணிசமானளவு அழுத்தங்களை உருவாக்கிய நுகர்வோர் வாழ்க்கை முறையிலான இயக்கநிலை மாற்றத்தையும் கண்டது. ஆரோக்கியமும் பாதுகாப்பும் முக்கிய அக்கறையாக வந்ததனால் மக்கள் பொருட்கள் மற்றும் சேவைகளை அணுகுவதற்கு இயங்கலை மேடைகளுக்கு இடம்பெயர்ந்தார்கள். இயங்கலை மேடைகளுக்கான இடம்பெயர்வினை வணிகங்களும் தழுவியதுடன் இணையவழி கூட்டங்கள் வழக்கமாக வந்தன.

2021 இன் இறுதிப்பாகத்தில் தடுப்பூசிகளைத் தொடர்ந்து கோவிட்-19 நோயாளிகள் குறைவடைந்ததுடன் தொற்று நிலைமையானது முன்னேற்றமடைந்தபோதிலும் வணிகங்கள் நீண்டகாலத்தில் ஒரு சிறந்த தொழில் வாழ்க்கை சமநிலையினை உருவாக்குவதற்காக சில வகையான தொலைதூர பணிபுரிதலை கடைப்பிடிப்பதற்கு முனைவதுடன் தன்னியக்கமயமாக்கல் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் செயல்முறைகளில் கணிசமானளவு முதலீடுகளை மேற்கொள்கின்றன.

மொத்த தடுப்பூசி 1ஆம் அளவு
(12 சனத்தொகையிலும் மேலானவர்களில்)
**97%**

மொத்த தடுப்பூசி 2ஆம் அளவு
(12 சனத்தொகையிலும் மேலானவர்களில்)
**82%**

பூஸ்டர் தடுப்பூசியின் மொத்தம்
(முற்றாக தடுப்பூசி பெற்றவர்களில்)
**55%**

### பணவீக்கம்

உயர்ந்த உணவு பணவீக்கத்தினாலும் உணவல்லாத பணவீக்கத்திலான சில அதிகரிப்பும் வருடத்தில் பணவீக்கம் துரிதமடைவதற்கு காரணியாயிருந்தன. வழங்கல் சங்கிலி இடையூறுகள், உலகளாவிய பண்டங்களில் விலை உயர்வுகள், நாணயமாற்று வீதத்தின் பெறுமதியிழப்பு மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் என்பன பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்திய பிரதான காரணிகளாகும்.

பணவீக்கம்




### வட்டி வீதங்கள்

இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையில் கடைப்பிடித்த தாராள நிலைப்பாட்டினை மாற்றி ஆகஸ்ட் 2021 இல் கொள்கை வட்டி வீதங்களை உயர்த்தியது. இது நாடு முகங்கொடுக்கும் அந்நிய செலாவணி சிக்கலுக்கு மத்தியில் உயர்ந்த பணவீக்கத்தினை கட்டுப்படுத்துவதற்காகும். இதன்பிரகாரம் நிலையியற் வைப்பு வசதி வட்டிவீதம், நிலையியற் கடன் வழங்கல் வசதி வட்டிவீதம், சட்டரீதியான ஒதுக்க வீதம் மற்றும் வங்கி வீதம் என்பன அதிகரிக்கப்பட்டதுடன் இதன் விளைவாக சந்தை வட்டி வீதங்கள் உயர்வடைந்தன.

வட்டி வீதங்கள்




### வெளிவாரித்துறையும் நாணயமாற்று வீதமும்

சுற்றுலாத்துறை உழைப்புகள் மற்றும் வெளிநாட்டில் பணபுரிபவர்களின் பணமனுப்பல்கள் கடுமையான வீழ்ச்சியினைக் கண்டதனால் வெளிவாரித்துறையானது குறிப்பிடத்தக்க அழுத்தத்திற்குட்பட்டதுடன், இது கணிசமானளவு வெளிநாட்டு நாணய கடன் செலுத்தல் கடப்பாடுகளின் மத்தியில் நிகழ்ந்தது. அந்நிய செலாவணியினைப் பாதுகாப்பதற்காக, இறக்குமதிக் கட்டுப்பாடுகள், ஏற்றுமதி வருவாய்களின் கட்டாய பரிமாற்றம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகளுக்கு 100% பண விடுமிகைத் தேவைப்பாடு உள்ளடங்கலான பன்முகமான கட்டுப்பாடுகள் முறைமைப்படுத்துபவர்களினால் விதிக்கப்பட்டன. வீழ்ச்சியடையும் ஒதுக்கங்களினால் மார்ச் 2022 இல் இலங்கை ரூபாயினைப் பாதுகாக்கும் நிலையிறுத்தல் பரிமாற்றல் வீதத்தினை கைவிட்டது. இது ரூபாயின் பெறுமதியில் மேலும் வீழ்ச்சியினை உருவாக்கியதுடன் மார்ச் 2022 இல் ஒரு அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி ரூபா 364.91 ஆக வீழ்ச்சியடைந்தது.

நாணயமாற்று வீதங்கள்



# செயற்பாட்டுச் சூழல்

### துறையின் பகுப்பாய்வு

வஅநிநி துறையானது கோவிட்-19 தொற்றிலிருந்து எழுந்த சவால்களுக்கு மத்தியில் மீளெழுச்சியுடன் காணப்பட்டதுடன் வருடத்தில் வணிகங்கள் மற்றும் தனிநபர்கள் மூழ்காது இருப்பதற்காக ஏனைய பாரிய பொருளாதார நிலைமைகள் முக்கிய பங்கு வகித்தன. ஒரு தனிப்பட்ட மட்டத்தில் குறிப்பிட்ட நிறுவனங்கள் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை சந்திப்பதில் சிரமங்களை எதிர்நோக்கிய போதிலும் ஒட்டுமொத்த துறையானது ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கும் மேலாக மூலதனம் மற்றும் திரவத்தன்மை என்பவற்றை ஆரோக்கியமான மட்டங்களில் பராமரித்து திடமாக காணப்பட்டது.

துறையின் செயற்திறனானது கடன் வளர்ச்சி மற்றும் இலாபகரத்தன்மை ஆகியவற்றைப் பொறுத்தளவில் கணிசமானளவு முன்னேற்றத்தினை பதிவுசெய்தது. புதிய வணிக மாதிரிகள், டிஜிட்டல் விநியோகம், வலுவான இடர் முகாமைத்துவம் என்பவற்றை கடைப்பிடிக்கும் துறையின் ஆற்றல் மற்றும் செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிக்கும்வேளை சந்தை இயக்கநிலைக்கு பதிலளித்தல் என்பன வர்த்தக மற்றும் சமூக நீடிப்புத்திறனை தொடர்வதனை உறுதிப்படுத்துவதற்கு முக்கியமானதாகும். மேலும், மத்திய காலத்தில் பலமான மற்றும் நிலையான உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளை கட்டியெழுப்புவதற்கான நிதியியல் துறை ஒருங்கிணைப்பு பெருந்திட்டத்தின் அமுலாக்கலானது தற்போது இடம்பெறுவதுடன் இது நாட்டினுள் வங்கியியல் அல்லாத நிதி நிறுவனங்களின் வைப்பீட்டாளர்களைப் பாதுகாக்கும் குறிக்கோளினைக் கொண்டதாகும்.

| | மார்ச்-20 | மார்ச்-21 | மார்ச்- 22 |
|---|---|---|---|
| மொத்த கடன்களுக்கு மொத்த செயற்திறனற்ற கடன்கள் சதவீதமாக (%) | 11.37 | 11.29 | 9.11 |
| மொத்த கடன்களுக்கு தேறிய செயற்திறனற்ற கடன்கள் சதிவீதமாக (%) | 3.79 | 2.81 | 1.90 |
| மொத்த சொத்துக்களுக்கு மொத்த தேறிய கடன்கள் (%) | 77.25 | 76.26 | 76.29 |
| ஏற்பாட்டு காப்பு விகிதம் (%) | 54.72 | 64.21 | 69.36 |

### மூலதனமும் திரவத்தன்மையும்

இவ்வருடத்தில் இத்துறையானது தொடர்ந்தும் மீளெழுச்சியுடன் காணப்பட்டதுடன் மூலதனமானது ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலும் பார்க்க அதிகமான பராமரிக்கப்பட்டன. இவ்வருடத்தில் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை சந்திப்பதற்காக பல உநிக இனால் மேற்கொள்ளப்பட்ட புதிய மூலதன உட்செலுத்தல்களினால் துறையின் மைய மூலதன விகிதம் மற்றும் இடர் நிறையிடப்பட்ட சொத்துக்களுக்கான மூலதன அடித்தள விகிதமானது முறையே 14.17% மற்றும் 15.44% இலிருந்து 16.15% ஆகவும் 17.68% ஆகவும் மேம்பட்டன.

### இலாபகரத்தன்மை

இந்நிதியாண்டில் வஅநிநி துறையினால் இலாபங்கள் 101.71% ஆல் அதிகரித்து ரூபா 59.82 பில்லியனை எட்டி ஒரு திடமான செயற்திறன் பதிவுசெய்யப்பட்டது. மொத்த செயற்பாட்டு வருமானத்தில் 74.68% கணக்கிடும் தேறிய வட்டி வருமானமானது 11.54% ஆல் அதிகரித்து ரூபா 128.25 பில்லியனை எட்டியவேளை மொத்த செயற்பாட்டு வருமானமான ரூபா 171.72 பில்லியனின் எஞ்சிய பங்கினை பிரதிபலிக்கும் வட்டியல்லாத வருமானம் 8.43% ஆல் அதிகரித்து ரூபா 43.48 பில்லியனை அடைந்தது. இலாபகரத்தன்மையானது வலுக்குன்றல்களுக்கான கட்டணங்களின் 76.72% வீழ்ச்சியினால் துணையளிக்கப்பட்டதுடன் இக்கட்டணங்கள் ரூபா 6.21 பில்லியனாகக் காணப்பட்டவேளை முன்னைய நிதியாண்டில் இது ரூபா 26.68 பில்லியனாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் வரிக்கு முந்திய இலாபமானது 74.91% ஆல் அதிகரித்து ரூபா 85.12 பில்லியனாகக் காணப்பட்டது.

### சொத்துக்கள்

துறையின் சொத்துத் தளமானது 14.28% ஆல் அதிகரித்து 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த வருடத்தில் ரூ. 1,589.84 பில்லியனாகக் காணப்பட்டது. இவ்விரிவாக்கமானது பிரதானமாக அடமானம் மற்றும் கடன் தேக்கங்களின் அதிகரிப்பினால் இயக்கப்பட்டது.

### நிதியளித்தல்

வைப்பீட்டாளர்களுக்கான விவேகமான முகாமைத்துவ வெளிப்பாடானது இவ்வருடத்தில் துறையின் நிதியியல் மீளெழுச்சியினை மேம்படுத்தியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது உரித்துவ நிதியளிப்பானது 20.32% இலிருந்து 22.15% ஆக அதிகரித்த வேளை துறையின் நிதியளிப்பிற்கு வைப்புகள் 53.23% பங்களிப்பினை அளித்தன.

சொத்துக்கள்

ரூ.மில்லியன்




- காசும் வங்கியும்
- கடன்களும் முற்பணங்களும்
- நிலையான சொத்துக்கள்
- முதலீடுகள்
- வர்த்தகப் பங்குகள்
- ஏனைய சொத்துக்கள்

நிதியளித்தல்

ரூ.மில்லியன்




- உரித்துவம்
- கடன் பெறுகைகள்
- வைப்புகள்

உழைப்புகள்

ரூ.மில்லியன்




- பூச்சியம்
- கடன் இழப்பு ஏற்பாடு
- வட்டியல்லாத வருமானம்
- PBT
- வட்டியல்லாத செலவினம்
- PAT

## அ.பொ.ச.தொ.சூ.ச. பகுப்பாய்வு

### அரசியல்

- அரசியல் ஸ்திரத்தன்மையானது நாட்டில் மிகவும் அவசியமான முதலீட்டாளர் நம்பிக்கையினைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஒரு திடமான நிதியியல் முறைமைக்கு துணைபுரிவதற்கு பலமான கொள்கை முன்னெடுப்புகள் காணப்படுகின்றன.
- இரசாயன உரம் மற்றும் களைக்கொல்லி என்பவற்றிலான தடையானது விவசாயத் துறையில் ஒரு தாக்கத்தினை உண்டாக்கியது.

### பொருளாதார

- சுற்றுலாத்துறையின் வீழ்ச்சி, தொழிலாளர்கள் பணமனுப்பலிலான வீழ்ச்சி என்பவற்றால் ஏற்பட்ட அந்நிய செலாவணியின் பற்றாக்குறை, மற்றும் விரிவடையும் வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் கடன் மீள்செலுத்துகைகள் நாட்டின் பொருளாதாரத்தில் கணிசமானளவு அழுத்தத்தினை உருவாக்கின.
- குறுகிய மத்திய காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க இடராக அந்நிய செலாவணி சிக்கல் காணப்படுவதுடன் இது ஏனைய குறிகாட்டிகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தும்.
- பொருளாதார சூழலில் காணப்படும் தளம்பல் நிலையானது நிதியியல் துறையின் இலாபகரத்தன்மையில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

### சமூக

- உயர் பணவீக்கத்தின் காரணமாக சனத்தொகையின் செலவழிக்கும் வருமானத்திலான வீழ்ச்சி
- ஏப்ரல் 2022 இல் 700 அடிப்படை புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்ட கொள்கை வட்டி வீதங்களுடன் நிதியளித்தலின் தாங்குமை கூர்மையாக வீழ்ச்சியடைந்தது.
- எரிபொருள், எரிவாயு, உணவு மற்றும் வலுசக்தி என்பவற்றின் பற்றாக்குறையானது மக்களுக்கு கணிசமான நெருக்கடியினை ஏற்படுத்தியுள்ளதுடன், இதன் விளைவாக நாட்டில் சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் ஸ்திரமற்றதன்மை.
- உர இறக்குமதியிலான தடையின் காரணமாக விவசாயிகளின் விளைச்சல் பாதிப்படைந்து கணிசமான நெருக்கடியினை விளைவித்துள்ளது.

### தொழில்நுட்பம்

- நவீன தொழில்நுட்பங்களிலான தொடர்ச்சியான முதலீடுகள் துறை முழுவதும் செயற்பாடுகள் மற்றும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்தியுள்ளன.
- தொற்றின் பின்னர் இ-வர்த்தகம் மற்றும் இயங்கலை செயல்வழிகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்படுகின்றது.
- பாரிய தரவு மற்றும் வணிக நுண்ணறிவு பகுப்பாராய்ச்சிகள் கம்பனிகள் வாடிக்கையாளர்களது போக்குகள் மற்றும் நடத்தை மாதிரிகளை முன்கணிப்பதற்கு வசதியளித்ததுடன் சிறந்த வள ஒதுக்கீட்டிற்கும் வசதியளிக்கின்றது.

### சூழல்

- காலநிலை மாற்றத்தின் தாக்கமானது தொடர்ச்சியாக வலுப்பெறுவதால் முக்கிய சூழல் விடயங்களை விளித்துரைத்தல் நோக்கி பங்களிப்பு செய்வதற்கு நிறுவனங்கள் அதிகரித்த அழுத்தத்தின் கீழ் உட்பட்டுள்ளன.
- முன்னிறுத்தும் செய்யவேண்டிய முக்கிய பிரிவுகள், செயற்பாடுகளினுள் வலுசக்தி செயற்திறனை மேம்படுத்தல், நேரடியான மற்றும் வாடிக்கையாளர்களது கரியமில அடிச்சுவட்டினை குறைத்தல் நோக்கி இயக்குதல் மற்றும் அதிகரித்த தன்னியக்க பணிப்பாய்வுகளுடன் தாள்களற்ற ஒரு சூழல் நோக்கி இயக்குதல் என்பனவாகும்.

### சட்ட

- ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளில் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகள் மற்றும் நிதியியல் துறை ஒருங்கிணைப்பிற்கு இட்டுச்செல்லும் சாத்தியமான சட்டங்கள்
- சான்றளிப்புகள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அமுலிலுள்ள ஏனைய சட்ட உடன்படிக்கைகள் என்பவற்றை குழுமமானது கடைப்பிடித்தல் இந்த இடரினை கணிசமானளவு குறைக்கின்றது.

# பொருண்மை

GRI 102-46

## பொருண்மையினை தீர்மானிப்பதற்கான ஒரு செயல்முறை

பங்காளிகளது முன்னுரிமைகள், செயற்பாட்டுச் சூழல், இடர் மற்றும் வாய்ப்புக்களுக்கான எமது பதிலளிப்புகள் மற்றும் எமது தெரிவுசெய்யும் மூலோபாயங்கள் உள்ளடங்கலான பல்வேறு காரணிகள் பெறுமதி உருவாக்கும் எமது ஆற்றலினை பாதிக்கின்றன. குறுகிய, மத்திய மற்றும் நீண்டகாலத்தில் பெறுமதி உருவாக்கும் எமது ஆற்றலில் செல்வாக்கு செலுத்துபவை பொருண்மையான விடயங்கள் என்பதுடன், இவை ஒரு உத்தியோகபூர்வ பொருண்மை தீர்மானச் செயல்முறையினூடாக நிர்ணயிக்கப்படுகின்றது. எமது வணிகத்தில் ஒருங்கிணைந்த சிந்தனையினை உட்புகுத்துதல் எமது முயற்சியின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாகும்.

எமது பொருண்மைச் செயல்முறையானது பின்னோக்கியது மற்றும் முன்னோக்கியது என்பதுடன், மீளாய்வாண்டில் வணிகங்களுக்கு சேர்த்த பெறுமதியின் மதிப்பீட்டிற்கு வசதியளித்தல் மற்றும் எதிர்வரும் வருடத்தில் பெறுமதி சேர்ப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதாகும்.

1. பிஎல்சி நிஅஇ வரம்புறுகையின் அடிப்படையில் நீண்ட பட்டியலை தயாரித்தல்
2. நீண்ட பட்டியலை மதிப்பிட்டு மற்றும் முன்னுரிமைப்படுத்தி குறுகிய பட்டியலை தயாரித்தல்
3. கலந்துரையாடல்கள் மற்றும் முன்னிலைப்படுத்தல் ஊடாக குறுகிய பட்டியலை உறுதி செய்தல்
4. மூலோபாய திட்டமிடல் செயல்முறையுடன் ஒருங்கிணைப்பூடாக பதலளித்தல் மற்றும் கண்காணித்தல்

### வரம்புறுகைகளின் மீளாய்வு

- ஐநா நிலைபேறுள்ள அபிவிருத்தி இலக்குகள்
- நீடிப்புத்திறனை அறிவிப்பதற்கான கொ.ப.ப. இன் பரிந்துரை
- உஅமு நியமங்கள்
- கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைகளின் கோவை
- நீடிப்புத்திறன் கணக்கீட்டு நியமங்கள் சபை (நீகநிச)

### கருத்திற்கொண்டு இனங் காணப்பட்ட சாத்தியமான விடயங்கள்

- செயற்பாட்டுச் சூழல் (பக்கங்கள் 31 முதல் 33 வரை)
- மூலோபாய முன்னிறுத்தப் பிரிவுகள்/கட்டாயமானவை (பக்கங்கள் 40 முதல் 41 வரை)
- பங்காளிகள் தேவைப்பாடுகள் (பக்கங்கள் 28 முதல் 30 வரை)
- நிலைபேறுள்ள அபிவிருத்தி இலக்குகள் நோக்கிய பங்களிப்பு (பக்கங்கள் 60 முதல் 113 வரை)
- குறிப்பிட்ட மதிப்பீடுகள்

### பட்டியலின் ஏற்புடையாக்கல் செயல்முறை பின்வருவனவற்றினூடாக

- உலகளாவிய மற்றும் உள்ளூர் போக்குகள், மற்றும் துறைசார் சகா மீளாய்வு
- பல்வேறு உள்ளக கடமைகளுடன் ஈடுபாடு: மூலோபாயம், இடர், முதலீட்டாளர் உறவுகள், ஆளுகை, நீடிப்புத்திறன் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு

### மதிப்பீடு

- விரிவான வணிகச் சூழல் மதிப்பீடு இடர் மற்றும் வாய்ப்புக்களுடன்
- ஆழமான மூலோபாய மீளாய்வு செயல்முறை (பக்கங்கள் 40 முதல் 41 வரை)
- நிலையற்ற நுகர்வோர் தேவைகளுக்கும் இயக்காற்றல்களுக்குமான பதிலளிப்பு
- வளத் தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்தல் மற்றும் வளங்களின் கிடைக்கக்கூடியதன்மை
- சாத்தியமான பதில்களுக்கிடையே ஈடுகட்டலை சரிசெய்தல்
- நேர வரையறை மற்றும் நிறைவேற்றல் திட்டம்

### முன்னுரிமைப்படுத்தல்

- இச்செயல்முறை முழுவதும் பீபள் லீசிங்கிற்கு எது மிகவும் முக்கியமோ அதற்கான பதிலுடன் நாம் வந்தோம். எமது தொலைநோக்கினை அடைவதற்கு மற்றும் எமது பங்காளிகளுக்கு நிலைபேறுள்ள பெறுமதியினை உருவாக்குவதற்கு மிகவும் பொருண்மையான விடயங்கள்.

### உறுதிப்படுத்தல்

- கூட்டாண்மை அங்கத்தவர்களது சம்மதத்துடன் பொருண்மையான அக்கறைகளை முன்னுரிமைப்படுத்தல் எமது மூலோபாயங்களுக்கு முறையாக பதிலளிப்பதற்கு இயலுமையாக்குகின்றது.

### மூலோபாய திட்டமிடல் செயல்முறைக்கு ஒருங்கிணைத்தல்

- சாத்தியமான வாய்ப்புகள் மற்றும் இடர்களை அவை எழும்போது இனங்காண்பதற்கு எம்மை இயலுமையாக்கும் மூலோபாய திட்டமிடல் செயல்முறைக்கு பொருண்மையான விடயங்கள் ஒரு முக்கிய உள்ளீடாகும்.
- பொருண்மையான விடயங்களை விளித்துரைப்பதற்கு உரிய மூலோபாயத் தூண்களில் பொருத்தமான பதிலளிப்புகள் உருவாக்கப்பட்டன.
- பின்வரும் முக்கிய பொருண்மையான விடயங்கள் மூலோபாய திட்டமிடல் செயல்முறைக்கான முக்கிய உள்ளீடாகும்.
  - டிஜிட்டல்மயமாக்கல்
  - வாடிக்கையாளர் அனுபவம்
  - நிலைபேறுள்ள நிதியூடாக நிலைபேறுள்ள வளர்ச்சி
  - ஆரோக்கியமும் பாதுகாப்பும்
  - வள உச்சப்பயன்பாடு
  - உள்ளடக்கமான நிதி மற்றும் ஆகக்குறைந்த சமத்துவமின்மை
  - மனித ஆற்றல் அபிவிருத்தி
  - நெறிகள், நேர்மை மற்றும் இணக்கப்பாடு
  - நிதியியல் ஸ்திரத்தன்மை
  - வாடிக்கையாளர் நிதியியல் மீளெழுச்சி
  - வணிகத் தொடர்ச்சி
  - காலநிலைச் செயலாக்கம்

முன்னுரிமைப்படுத்தப்பட்ட குறுகிய பட்டியலானது காலாகாலம் மாற்றங்களை மதிப்பீடு செய்வதற்காக மீளாய்வு செய்யப்படுகின்றது. வருடத்தின் இறுதியிலுள்ள முன்னுரிமைப்படுத்தப்பட்ட குறுகிய பட்டியலானது கீழே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.




| | | | |
|---|---|---|---|
|  | டிஜிட்டல்மயமாக்கல் |  | மனித ஆற்றல் அபிவிருத்தி |
|  | வாடிக்கையாளர் அனுபவம் |  | நெறிகள், நேர்மை மற்றும் இணக்கப்பாடு |
|  | நிலைபேறுள்ள நிதியினூடாக நிலைபேறுள்ள வளர்ச்சி |  | நிதி ஸ்திரத்தன்மை |
|  | ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு |  | வாடிக்கையாளர் நிதியியல் மீளெழுச்சி |
|  | வளங்களின் உச்சப்பயன்பாடு |  | வணிகத் தொடர்ச்சி |
|  | உள்ளடங்கிய நிதி மற்றும் சமத்துவமின்மைகளைக் குறைத்தல் |  | காலநிலை செய்கை |

# பொருண்மை

GRI | 102-47, 103-1, 207-3, 416-1

## எமது பொருண்மையான விடயங்கள்

| நிலை | பொருண்மையான விடயங்கள் | பெறுமதி உருவாக்கத்திலான தாக்கம் | பாதிக்கப்பட்ட மூலதனங்கள் | மிகவும் பாதிக்கப்பட்ட பங்காளிகள் |
|---|---|---|---|---|
| 1 | **டிஜிட்டல்மயமாக்கல்** | டிஜிட்டல் மயமாக்கலானது பணியாட்களுக்கு மேம்பட்ட செயற்திறனுடன் துணைபுரிவதுடன் அவர்களது ஆக்கத்திறனை மேம்படுத்துகின்றது. அத்துடன் வாடிக்கையாளர்கள் கிளைக்கு விஜயம் செய்யாது பலவிதமான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு வலுவளிப்பதுடன் பீபள்ஸ் லீசிங் இனால் வழங்கப்படும் கருவிகள் மற்றும் சேவைகளுக்கான நிறைவேற்றல் நேரத்திலான மேம்பாட்டிலிருந்தும் நன்மையடையலாம். | | |
| 2 | **வாடிக்கையாளர் அனுபவம்** | பீபள்ஸ் லீசிங் இன் வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல் தேக்கங்களின் நிலைபேறுள்ள வளர்ச்சி மற்றும் அதன் வணிக நாமம் மற்றும் நற்பெயர் என்பவற்றுக்கு துணைபுரியும் வாடிக்கையாளர் அனுபவம் என்பது ஒரு முக்கிய போட்டிசார் மேம்பாடாகும். | | |
| 3 | **நிலைபேறுள்ள நிதியூடாக நிலைபேறுள்ள வளர்ச்சி** | நிலைபேறுள்ள நிதியியல் கருவிகள் சமூக மற்றும் சூழல் வரன்முறையுடன் வாடிக்கையாளர் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதுடன் வாடிக்கையாளர்கள் அவர்கள் செய்பவற்றுக்கு பொறுப்பாளியாகும் தேவை குறித்து வாடிக்கையாளர்களது விழிப்புணர்வினை மேம்படுத்துதல். | | |
| 4 | **நிதியியல் ஸ்திரத்தன்மை** | நாட்டில் பொருளாதார சிக்கல் காணப்படும்போது பீபள்ஸ் லீசிங் நிதியியல் ரீதியாக திடமாக இருப்பதை உறுதிசெய்தல் மற்றும் அனைத்து பங்காளிகளதும் நலன்களை பாதுகாத்தல். | | |
| 5 | **ஆரோக்கியமும் பாதுகாப்பும்** | மார்ச் 2020 முதல், நாடானது கோவிட்-19 தொற்றின் அலைகளுடன் சமாளித்தவேளை இவை வணிகங்களுக்கு பரவலான இடையூறுகளை உருவாக்கின. இவ்வருடத்தில் காணப்பட்ட முக்கிய முன்னுரிமையாக எமது பணியாட்களுக்கு ஒரு பாதுகாப்பான பணிபுரியும் சூழலை மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வணிகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு ஒரு பாதுகாப்பான இடத்தினை வழங்குதல் என்பனவாகும். | | |
| 6 | **வளங்களது உச்சப்பயன்பாடு** | பயனுறுதித்தன்மை, இலாப வரம்புகள் ஆகியவற்றை இயக்குவதற்கு வளங்களது உச்சப்பயன்பாடு முக்கியமானதாகும் என்பதுடன் பங்காளிகளுக்கு வழங்கப்படும் பெறுமதியினை அதிகரித்தல் என்பன ஒருங்கிணைத்தல் சிந்தனையின் மையமாகும். | | |

● உயர் ● குறைவு

| வாய்ப்புக்கள் மற்றும் இடர்களை விளித்துரைப்பதற்காக எடுக்கப்பட்ட செய்கை | தாக்கம் | | உஅமு பொருண்மை குறிகாட்டி இலக்கம் மற்றும் தலைப்பின் பெயர் | நிஅஇ |
|---|---|---|---|---|
| | நிறுவன அக்கறைகள் | பங்காளிகள் அக்கறைகள் | | |
| • CAPP மற்றும் DCHEQUE என்பன உள்ளக செயல்முறை வினைத்திறன்களை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டன.<br>• பீபள்ஸ் Payway கடன் மற்றும் குத்தகை தவணைப்பணங்களின் கொடுப்பனவிற்கு வசதியளிப்பதற்கான ஒரு குழுமவாரியான முன்னெடுப்பாகும். | உயர் | உயர் | | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES |
| • ஒரு சௌகரியமான பயனாளர் அனுபவத்திற்கு வசதியளிப்பதற்காக பீபள்ஸ் லீசிங் சமீபத்தில் அதன் மொபைல் செயலியான PLC Touch இனை வெளியிட்டது. | உயர் | உயர் | • GRI 417 – சந்தைப்படுத்தலும் குறியிடலும் | 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS |
| • பீபள்ஸ் லீசிங் பசுமை கடன் வழங்கலை ஊக்கவிப்பதுடன், நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் நுண் முயற்சியாளர்களுக்கு நிதியளிப்பிற்கான அணுக்கத்திற்கு வசதியளிப்பதற்காக பல எண்ணிக்கையிலான கருவிகள் காணப்படுவதுடன் இவை நிலைபேறுள்ள நிதியளித்தல் கொள்கைகளுக்கு இணங்க காணப்படுகின்றன. மேலும், கடந்த மூன்று வருடங்களாக வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய கடன் காலம் தாழ்த்திச் செழுத்தும் வசதி மற்றும் நிவாரணம் என்பன நிலைபேறுள்ள நிதியளிப்பிற்கு துணைபுரியும் அதன் கடப்பாட்டினை உறுதிப்படுத்துகின்றது. | உயர் | உயர் | • GRI 201 – பொருளாதாரச் செயற்திறன் | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE |
| • கட்டண மற்றும் தரகு அடிப்படையான வருமானத்தினை அதிகரித்தல்<br>• புதிய வாகனங்களின் குத்தகைக்கு அப்பால் கருவிகளின் தேக்கத்தினை பன்முகப்படுத்துதல்<br>• புதிய கருவிகளுடன் இணைந்து இடர்களை முகாமைப்படுத்தல் | உயர் | உயர் | | 1 NO POVERTY; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 10 REDUCED INEQUALITIES; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION |
| • அனைத்து வணிக இடங்களிலும் பணியாட்களுக்கு விழிப்புணர்வு திட்டங்கள் நடாத்தப்பட்டு கடுமையான கோவிட்-19 பாதுகாப்பு நெறிமுறைகள் அமுல்படுத்தப்பட்டு வலியுறுத்தப்பட்டன.<br>• நோய் கண்டறியப்பட்ட பணியாட்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் மற்றும் மருத்துவ காப்புறுதி உள்ளடங்கலான கவனிப்புப் பொதிகள் வழங்கப்பட்டன.<br>• கோவிட்-19 விடயங்கள் இடர் முகாமை முன்னெடுப்புகளாக கண்காணிக்கப்பட்டு எதிர்கால தொற்றின் தாக்கத்தினை குறைப்பதற்காக திட்டங்கள் விருத்திசெய்யப்பட்டுள்ளன. | குறைவு | குறைவு | • GRI 403 – தொழில்சார் ஆரோக்கியமும் பாதுகாப்பும்<br>• GRI 410 – பாதுகாப்பு நடைமுறைகள்<br>• GRI 416 – வாடிக்கையாளர் ஆரோக்கியமும் பாதுகாப்பும்<br>• GRI 418 - வாடிக்கையாளர் இரகசியம் | 3 GOOD HEALTH AND WELL-BEING; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS |
| • டிஜிட்டல்மயமாக்கல் உள்ளடங்கலான தாள்களற்ற காரியாலய முன்னெடுப்புகள்<br>• கிரயப் பகுத்தறிவாக்கல் திட்டங்கள்<br>• குழுமவாரியான ஆக்கத்திறன் முன்னெடுப்புகள் | குறைவு | குறைவு | • GRI 302 – வலுசக்தி<br>• GRI 305 – உமிழ்வுகள்<br>• GRI 306 – கழிவு | 3 GOOD HEALTH AND WELL-BEING; 6 CLEAN WATER AND SANITATION; 7 AFFORDABLE AND CLEAN ENERGY; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION; 13 CLIMATE ACTION; 14 LIFE BELOW WATER; 15 LIFE ON LAND; 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS |

# பொருண்மை

| நிலை | பொருண்மையான விடயங்கள் | பெறுமதி உருவாக்கத்திலான தாக்கம் | பாதிக்கப்பட்ட மூலதனங்கள் | மிகவும் பாதிக்கப்பட்ட பங்காளிகள் |
|---|---|---|---|---|
| 7 | **சமத்துவமின்மைகளை குறைப்பதற்காக உள்ளடக்கப்பட்ட நிதியளித்தல்** | நிதியளிப்பிற்கான அணுக்கத்தினூடாக சமத்துவமின்மைகளை குறைப்பதற்கு நாம் முயற்சிக்கும்போது உள்ளடக்கப்பட்ட நிதியளிப்பிற்கு வசதியளிக்கும் ஒரு கருவிகளின் தேக்கமானது எமது வளர்ச்சிக்கும் முக்கியமானதாகும். | | |
| 8 | **மனித ஆற்றல் அபிவிருத்தி** | ஒரு நிறுவனத்தின் அபிவிருத்திக்கு ஆற்றல் அபிவிருத்தி என்பது மிகவும் முக்கியமானதாகும், குறிப்பாக நாம் நிதிச் சேவைகள் நிறுவனமாக டிஜிட்டல் யுகத்திற்கான செயற்பாடுகளுக்கு நிலைமாறும்போது அது உத்தமமான செயற்திறனை வழங்குவதற்கு மேலதிக திறன்களை தேவையாய்க் கொண்டுள்ளது. | | |
| 9 | **நெறிமுறைகள், நேர்மை மற்றும் இணக்கப்பாடு** | ஒரு முறைமைப்படுத்தப்படும் துறையில் செயற்படும்போது நெறிமுறைகள், நேர்மை மற்றும் இணக்கப்பாடு என்பன எமது செயற்பாடுகளின் அனேகமாக ஒவ்வொரு தோற்றத்தினையும் பாதிக்கின்றது. | | |
| 10 | **வாடிக்கையாளர் நிதியியல் மீளெழுச்சி** | நடைமுறையில் காணப்படும் வலுசக்தி சிக்கலினால் பாதிப்படைந்த பயணிகள் போக்குவரத்துத் துறைக்கான கம்பனியின் வெளிப்பாடானது கணிசமானது என்பதுடன் செயற்திறன்மிக்க அணுகுமுறைகளைப் பயன்படுத்தி இந்த வாடிக்கையாளர்களுக்கு துணைபுரிதல் கடன் இடரினை முகாமைப்படுத்துவதற்கான ஒரு முன்னுரிமையாகும். | | |
| 11 | **வணிகத் தொடர்ச்சி** | வலுநிறி பொதுவாக அத்தியாவசிய சேவைகளாகக் கருதப்படுவதனால் வணிக அமைவிடங்கள் செயற்பாட்டில் இருக்கவேண்டிய அவசியம் காணப்படுகின்றது. தொடர்ச்சியான வலுசக்தி சிக்கலானது கம்பனியின் செயற்பாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம் ஏனெனில் போக்குவரத்து மற்றும் வலுசக்தி வழங்கலானது இடையூறுக்குட்படலாம் என்பதுடன் அது வணிகத் தொடர்ச்சியினை ஒரு முக்கிய முன்னுரிமையாக்கின்றது. | | |
| 12 | **காலநிலை செயற்பாடு** | பீபள்ஸ் லீசிங் அதன் சொந்த செய்கைமுறைகளுக்கான மாற்றங்களூடாக மற்றும் ஒரு மாற்றத்திற்கான அவசியத்தின் விழிப்புணர்வினை அதன் நிதிக் கருவிகளுக்கான அணுக்கத்தினூடாக இயக்குவதுடன் ஒரு குறைவான கரியமில பொருளாதார நிலைமாற்றலுக்கு துணைபுரிகின்றது. | | |

| வாய்ப்புக்கள் மற்றும் இடர்களை விளித்துரைப்பதற்காக எடுக்கப்பட்ட செய்கை | தாக்கம் நிறுவன அக்கறைகள் | தாக்கம் பங்காளிகள் அக்கறைகள் | உஅமு பொருண்மை குறிகாட்டி இலக்கம் மற்றும் தலைப்பின் பெயர் | நிஅஇ |
|---|---|---|---|---|
| • பல எண்ணிக்கையிலான கருவிகள் உள்ளடக்க நிதியளிப்பிற்கும் கொடுக்கல் வாங்கலின் எளிமைக்கும் துணைபுரிகின்றன. | ○ | ○ | | 1 NO POVERTY; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 10 REDUCED INEQUALITIES |
| • பயிற்றுவித்தல் தேவைப்பாடுகளது பகுப்பாய்வு வருடாந்தம் நடாத்தப்படுவதுடன் அதற்கமைய பயிற்றுவித்தல் திட்டங்களை வரையப்பட்டு பயிற்றுவித்தல் மற்றும் திறன் அபிவிருத்திக்கு ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையினை இயலுமையாக்குகின்றது. | ○ (orange) | ○ | • **GRI 401** - பணிகொள்ளல்<br>• **GRI 404** - பயிற்சியும் கல்வியும்<br>• **GRI 405** - பன்மயமும் சமத்துவ வாய்ப்பும்<br>• **GRI 406** - பாகுபாடற்ற<br>• **GRI 407** - சேர்க்கைக்கான மற்றும் கூட்டு பேரம் பேசலுக்கான சுதந்திரம் | 4 QUALITY EDUCATION; 5 GENDER EQUALITY; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 10 REDUCED INEQUALITIES |
| • திடமான கூட்டாண்மை ஆளுகை, இடர் முகாமைத்துவம் மற்றும் ஒரு நெறிமுறைக் கோவை என்பன பீபள்ஸ் லீசிங்கில் ஒரு இணக்கப்பாட்டு கலாச்சாரத்தினை வலுவூட்டுகின்றது.<br>• வெளிப்படைத்தன்மை மற்றும் கூட்டாண்மை அறிக்கையிடலில் இலங்கையிலுள்ள 75 பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் முதல் 20 கம்பனிகளினுள் காணப்படுகின்றமை | ○ | ○ | • **GRI 205** - ஊழல் எதிர்ப்பு<br>• **GRI 207** - வரி<br>• **GRI 307** - சூழல் இணக்கப்பாடு<br>• **GRI 308** - வழங்குனர் சூழல் மதிப்பீடு<br>• **GRI 413** - உள்ளூர் சமூகங்கள்<br>• **GRI 414** - வழங்குனர் சமூக மதிப்பீடு<br>• **GRI 419** -சமூக பொருளாதார இணக்கப்பாடு | 1 NO POVERTY; 5 GENDER EQUALITY; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 10 REDUCED INEQUALITIES; 16 PEACE, JUSTICE AND STRONG INSTITUTIONS; 17 PARTNERSHIPS FOR THE GOALS |
| • பயணிகள் போக்குவரத்து வாகனங்களின் மீள்கையகப்படுத்தல் நிறுத்தப்பட்டமை<br>• மீள்தவணையிடப்படலுடன் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஹித்தமித்துரு திட்டத்தின் ஆரம்பம் | ○ | ○ | | 1 NO POVERTY; 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 10 REDUCED INEQUALITIES; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES |
| • பீபள்ஸ் லீசிங் அதன் வணிகத் தொடர்ச்சித் திட்டங்களை மீள்பார்வையிட்டு நடைமுறையிலுள்ள சவால்களை பிரதிபலிப்பதற்காக மறுசீரமைத்துள்ளது. | ○ (orange) | ○ | | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION |
| • தீவிர காலநிலை நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கான சலுகைகள்<br>• கரியமில அடிச்சுவட்டினை அளவிடுதல் மற்றும் முகாமைப்படுத்தல்<br>• காலநிலை தொடர்பான நிதியளிப்பிற்கான வாய்ப்புக்களை மீளாய்வு செய்தல் | ○ | ○ (orange) | • **GRI 302** - வலுசக்தி<br>• **GRI 305** - உமிழ்வுகள்<br>• **GRI 306** - கழிவு | 8 DECENT WORK AND ECONOMIC GROWTH; 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE; 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES; 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION; 13 CLIMATE ACTION |

# எமது மூலோபாயம்

பீபள்ஸ் லீசிங் அதன் ஐந்தாண்டு மூலோபாயத் திட்டத்தினை 2021 இல் ஆரம்பித்தது, இது உள்வாரி மற்றும் வெளிவாரி செயற்பாட்டுச் சூழலிலான ஒரு தீவிரமான பகுப்பாய்வின் பின்னராகும். தொற்றின காரணமாக வணிகச் சூழலலானது ஒரிரவில் பலதரப்பட்ட மாற்றங்களுக்கு உட்பட்டதுடன் அதன் தாக்கமானது தொடர்ந்தும் வணிக மனப்பான்மையினை பாதிக்கின்றது. இந்த இயக்காற்றல் செயற்பாட்டுச் சூழலில் கம்பனியின் மூலோபாய குறிக்கோள்களை தொடர்வதற்கு புதிய மூலோபாய திட்டமானது ஒரு திடமான அடித்தளத்தினை வழங்குவதுடன், முக்கிய பங்காளிகளது தேவைப்பாடுகளை நிறைவேற்றும் வேளை நாம் தனிச்சிறப்பினை அடைவதற்கு கடப்பாட்டுடன் உள்ளோம். எமது நீண்டகால மூலோபாயத் திட்டங்கள் மாற்றமின்றி காணப்படும்வேளை, கம்பனியானது தற்போதைய பொருளாதார மற்றும் சந்தை நிலைமைகளது சூழமைவில் கம்பனியானது அதன் குறுங்கால செயற்திட்டங்களை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்கின்றது.







### மூலோபாய அவசியங்கள்

- நிலைபேறுள்ள வளர்ச்சியினை தொடருதல்
- வாடிக்கையாளர் அனுபவத்தினை பெரிதாக்குதல்
- எமது மக்களூடாக வேறுபடுதலின்மூலம் நிறைவேற்று தனிச்சிறப்பினை அடைதல்
- சூழல் மற்றும் சமூக காரணிகளை ஒருங்கிணைத்தல்
- ஒரு நெறிமுறையான, திறந்த மற்றும் வெளிப்படையான வணிகச் சூழலினை பராமரிப்பதன் மூலம் பொறுப்புமிக்க பாரபத்தியத்தினை உருவகப்படுத்தல்

செயற்திட்டங்கள் 2022-2026 இலிருந்து

### வணிக மூலோபாயம்

**வளர்ச்சி சாத்தியமான துறைகளை முன்னிறுத்திய கடன்வழங்கல் கருவி அபிவிருத்தி**

**பொறுப்புக் கருவி அபிவிருத்தி**
- புத்தாக்கமான வழிகளூடாக சேமிப்பு தளத்தினை கட்டியெழுப்புதல்
- காப்புறுதி / விசுவாச நலன்களுடன் சிரேஷ்ட வைப்புகளை அறிமுகப்படுத்தல்

**இணைப்புகளும் பொறுப்பேற்புகளும் கிரய வினைத்திறன்**
- கிளைகளை சரியான அளவாக்கல்
- தரைவெளிகளின் உச்சப்பயன்பாடு
- பின் அலுவலகம்:முன் அலுவலக விகிதாசாரத்தினை மீள் கட்டியெழுப்புதல்

**வாடிக்கையாளர் மையம்**
- வாடிக்கையாளர் முறையீடு முகாமைத்துவம்
- வாடிக்கையாளர் சேவை தனிச்சிறப்பு

**சந்தைப்படுத்தல்**
- டிஜிட்டல் சந்தைப்படுத்தல் திட்டம்
- ஒத்துழைப்புகளூடாக கருவிகளது சந்தைப்படுத்தல்
- இயங்கலை வாகன விற்பனை மேடை

**தன்னியக்கமயமாக்கல்**
- கைமுறை செயல்முறைகளை டிஜிட்டல்மயமாக்கல்
- இ- ஆவணப்படுத்தல்

**துணைநிறுவன மூலோபாயங்கள்**



**இணக்கப்பாடும் இடர் மூலோபாயமும்**

**இடரகற்றல்**
- மீட்டல் மூலோபாயங்களை மறுசீரமைத்தல் - வாகன ஏலச் செயல்முறை / இயங்கலை ஏலச் செயல்முறை

**கடன்**
- ஒரு கடன் குழுவின் உருவாக்கம்
- கவலை வழித்தல் கண்காணிப்பு
- செயற்பாட்டு இடர் மீளாய்வு கூட்டங்கள்
- கடன் சாலை நிகழ்ச்சிகள்

**இணக்கப்பாடு**
- உங்களது வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் (KYC)/ வாடிக்கையாளர் தகவல் சேகரிப்பு (CDD) மீள்சீராக்கம்
- பணம் சலவை செய்தலுக்கெதிரானவை

**பீபள் மூலோபாயம்**

**வெளிக்கொணரும் கலாச்சாரம்**
- மனக்குறை கையாளுதல் செயல்முறை
- மனிதவள ப்ளொக்
- தவிர்ப்பு மட்ட கூட்டங்கள்

**வெகுமதிகள், அங்கீகாரம் மற்றும் நிறுவன அபிவிருத்தி முன்னெடுப்புகள்**
- பணியாட்கள் வேதனம் மற்றும் பணி மதிப்பீட்டினை மீளாய்வு செய்தல்
- செயற்திறன் மதிப்பீட்டு செயல்முறையினை மீளாய்வு செய்தல்
- தொழில் விவரணை(JDs)
- வாடிக்கையாளர் சேவை தொடர்பான பணியாட்கள் அங்கீகாரத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறையான செயல்முறை மேம்படுத்தல் யோசனைகள் / முன்னெடுப்புகள்

**தொழில் அபிவிருத்தி**
- பயிற்சி மற்றும் தனிப்பட்ட அபிவிருத்தி - வாடிக்கையாளர் சேவை தனிச்சிறப்பு, முகாமைத்துவ அபிவிருத்தித் திட்டம், மரியாதை முறை பயிற்சிகள், விசேட தொழில்நுட்ப பயிற்சிகள், பயிலுதல் முகாமைத்துவ முறைமை, தொழில்நுட்ப/ நுண்திறன் திட்டங்கள்/ இணக்கப்பாடு மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள், உள்ளீட்டெல்லை தலைமைகளுடன் ஆற்றல் கலந்துரையாடல் முன்னெடுப்பு மற்றும் தேவையான அபிவிருத்தி இடையீடுகளை இனங்காணுதல் ( முகாமைத்துவ தரம் மற்றும் அதற்கு மேல்) மற்றும் வழிப்படுத்தல் திட்டங்கள்

**பணியாள் ஈடுபாடு மற்றும் நல்வாழ்வு**
- பிராந்தியங்களுக்கிடையேயான ஊடாட்டங்களை ஊக்குவித்தல்
- விளையாட்டு மற்றும் நல்வாழ்க்கை நிகழ்வுகள்
- குழந்தை காப்பகம் / பாலர் பராமரிப்பு வசதி

**செயல்முறை மேம்பாடு**
- மனிதவள தகவல் முறைமை தன்னியக்கமாக்கல்
- மனிதவள வலைவாசல் திருத்தம்
- நடைமுறையிலுள்ள ம.வ. கொள்கைகள், செயல்முறைகளை மீளாய்வுசெய்து தேவையானபோது இற்றைப்படுத்தல்

**தற்போதுள்ள முன்னேற்றத்தடைகளை குறுங்காலத்தில் முகாமைப்படுத்துவதற்கான மூலோபாயங்கள்**

**திரவத்தன்மை**
நடைமுறையிலுள்ள நிதியளித்தல் வசதிகளைப் பெறுவதன் மூலம் மற்றும் மாற்றீட்டு நிதியளித்தல் தெரிவுகளூடாக திரவத்தன்மை இடரினை முகாமைப்படுத்துவதற்கான உயர்ந்த முன்னுரிமை

**வைப்புக்கள்**
வட்டி வீதங்களுக்கான இ.ம.வ. இன் பணிப்புரைகளை பராமரிக்கும்வேளை வைப்புத் தளத்தினை அதிகரித்தல்

**பிரித்தளித்தல்கள்**
புதிய பிரித்தல்களை கட்டுப்படுத்தல் நிதிகளுக்கான கிரயம் மற்றும் திரவத்தன்மை நிலைமைகளை கருத்திற்கொண்டு கடன்வழங்கல் வட்டிவீதங்களை உயர்த்துதல்

**சேகரிப்புகள்**
மாதங்களுக்குரிய சேகரிப்புகளை நெருக்கமாக கண்காணித்தல்

**வெளிப்பாட்டு முகாமைத்துவம்**
குறுங்கால முதிர்வுகளுடனான கருவிகளில் முன்னிறுத்தம்

பிரதிநிதித்துவமும் விழிப்புணர்வும்
பணியாட்கள் / வாடிக்கையாளர்களுக்கு விழிப்புணர்வினை மேற்கொள்ளுதல்

**நெருக்கடி முகாமைத்துவம்**
தவறாமல் மற்றும் நெருக்கமாக சந்தை வட்டிவீத அசைவு, திரவத்தன்மை மற்றும் வணிக மனப்பான்மைகள் என்பவற்றை நெருக்கடி முகாமைத்துவ குழுவினூடாக கண்காணித்தல்

மனித வள மூலோபாயம்
கவனமாக மீளாய்வின் பின்னர் பணிக்கமர்த்தல் மீள்நிரப்புதல்
பணியாட்கள் பல் திறனுக்காக மீள்பகிர்வு



எமது டிஜிட்டல் இயக்க முயற்சியுடன் இணைத்தல்



# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

## குழும வணிகத்தின் மீளாய்வு

அடுத்துவரும் பிரிவானது குழும வணிகம் தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதுடன் குழுமத்தின் பார்வையிலிருந்தான ஒவ்வொரு பிரிவின் விளைவினையும் எண்கள் பிரதிபலிக்கின்றன. எவ்வாறாயினும், வைப்புகள், வெளிநாட்டு செயற்பாடுகள் மற்றும் நுண்கடனளித்தல் போன்ற சில வணிகங்கள் குழுமத்திற்கான இப்பிரிவுகளின் அதிகரித்த முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு தனியாக விபரமான விளக்கமளிக்கப்பட்டுள்ளன. இவை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள குழுமத்தின் பிரிவுவாரியான பகுப்பாய்வில் தனியாக வெளிப்படுத்தப்படாத போதிலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

கடன்கள் மற்றும் குத்தகைகள் 46
வைப்புகள் 48
இஸ்லாமிய நிதி 50
காப்புறுதி 52
வெளிநாட்டுச் செயற்பாடுகள் 54
நுண் நிதியளித்தல் 56
ஏனைய வணிகப் பிரிவுகள் 58

## மூலதனங்கள் அறிக்கை

நிதியியல் மூலதனம் 60
உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம் 76
அறிவுசார் மூலதனம் 80
மனித மூலதனம் 88
சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் 96
இயற்கை மூலதனம் 106

# Group Business Line Review



# குழும வணிக மீளாய்வு

## கடன்களும் குத்தகைகளும்

எமது விரிவான குத்தகை மற்றும் கடன் கருவிகளது தேக்கமானது நாடு பூராவுமுள்ள 100,000 க்கும் அதிகமான தனிநபர்கள், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் கூட்டாண்மைகள் ஆகியவற்றின் தேவைகளுக்கு சேவையாற்றுகின்றன. சாவல்மிக்க செயலாற்றல் நிலைமைகளுக்கு மத்தியில் இப்பிரிவானது இவ்வருடத்தில் ஒரு மெச்சத்தக்க செயற்திறனை பதிவுசெய்தது.

**செயற்திறன் சிறப்பம்சங்கள் 2021/22**

தேறிய வட்டி வருமானம்
ரூ. 12,211.08 மில்லியன்
(2020/21- ரூ. 11,115.47 மில்லியன்)

பிரிவின் விளைவு/PBT
ரூ. 7,393.00 மில்லியன்
(2020/21- ரூ. 6,565.53 மில்லியன்)

கடன்கள் மற்றும் குத்தகைத் தேக்கம்
ரூ. **143,526.77** மில்லியன்
(2020/21- ரூ. 134,656.13 மில்லியன்)

செயற்திறனற்ற சொத்துக்கள்
**8.84%**
(2020/21- 9.22%)




| பெறுமதி உருவாக்கம் | |
|---|---|
| நிதியியல் மூலதனம் | • கடன் தரத்திலான முன்னிறுத்தம்<br>• வணிகர் வலையமைப்பினை விரிவாக்குதல்<br>• தெரிவுசெய்யப்பட்ட சொத்துப் பிரிவுகளிலான வளர்ச்சி |
| அறிவுசார் மூலதனம் | • முழுவதும் டிஜிட்டல்மயமாக்கப்பட்ட மேடைகளுக்கான உருமாற்றம்<br>• 'PLC touch' மற்றும் 'People's Pay Way' ஆகியவற்றின் ஆரம்பம் |
| மனித மூலதனம் | • மனித மூலதனத்தின் வினைத்திறனான முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக்கு வசதியளிப்பதற்காக ஒரு விரிவான மனிதவள கொள்கை வரம்புறுகை விருத்தி செய்யப்பட்டுள்ளது. |
| உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம் | • பிராந்திய எண்ணக்கருவின் ஆரம்பம்<br>• கிளைகளை ஒன்றிணைத்தல்<br>• செலவினச் சீரமைப்புத் திட்டங்கள் |
| சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் | • பயணிகள் போக்குவரத்து வாகனங்களது மீள்கைப்பற்றுதல் இல்லை<br>• ஹித்தமித்துரு திட்டத்தின் ஆரம்பம்<br>• கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியூடாக 31,725 கடன் வசதிகளுக்கு துணையளித்தல் மற்றும் ஏனைய நிவாரண வழிமுறைகள் |

**கண்ணோட்டம்**

குத்தகைகள் மற்றும் கடன் தேக்கங்களின் கடன் தரத்தினை மேம்படுத்துதல் ஒரு முக்கியமான முன்னுரிமையாக இருப்பதுடன், நாம் இந்த இலக்கினை அடைவதற்காக எமது கடன் மதிப்பீடு மற்றும் கண்காணித்தல் செயல்முறையினை தொடர்ந்தும் பலப்படுத்துவோம். அதேசமயம், குறைந்த இடர் மற்றும் உயர் வளர்ச்சி சொத்துப் பிரிவுகளை உள்ளடக்கும் எமது கருவிகளது கலப்பினை மறுசீரமைப்பதன் மூலம் எமது கடன் தேக்கங்களை தொடர்ந்தும் மூலோபாயமான விதத்தில் விரிவாக்குவோம். எவ்வாறாயினும், நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு கம்பனியானது புதிய கடன் வழங்கல்களை மட்டுப்படுத்தும் எண்ணத்தைக் கொண்டுள்ளதுடன் இந்த மூலோபாயத்தினையும் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளையும் காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கின்றது. 2021/22

## 2021/22 இலான அபிவிருத்திகள்

இவ்வாண்டில் காணப்பட்ட சவால்மிக்க செயற்பாட்டு நிலைமைகளின் மத்தியில், நாம் எமது கடன் வழங்கல் நடடிவடிக்கைகளில் ஒரு எச்சரிக்கையான அணுகுமுறையினை கடைப்பிடித்ததுடன் தங்கக் கடன்கள் போன்ற பாதுகாப்பான சொத்து வகுப்பினை வளர்ப்பதில் முன்னிறுத்தம் செய்ததுடன் உயர் பெறுமதி சொத்துக்களுக்கு நிதியளிப்பதிலிருந்து சிற்றளவு பிரிவிற்கு நகர்ந்தோம். முச்சக்கர வண்டிப் பிரிவு போன்ற குறைந்த இடர் மற்றும் உயர் வளர்ச்சி பிரிவுகளில் எமது தேக்கத்தினை தொடர்ந்தும் வளர்த்தோம். எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியினால் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கான கடன் வீதமான 80% உடன் ஒப்பிடும்போது இந்த அதிக இடருள்ள சொத்துப் பிரிவிற்கான எமது வெளிப்பாட்டினை குறைப்பதற்காக குறைவான பெறுமதிக்கான கடன் வீதத்தினை நாம் கடைப்பிடித்தோம். பிராந்திய வாரியாக கிளைகளை திரளாக்குவதனை உள்ளடக்கும் "பிராந்திய எண்ணக்கரு" உடன் பிராந்திய முகாமையாளர்களுக்கு அதிக அதிகாரத்தினை வழங்கியமையானது பிராந்திய வாரியாக மிகவும் முன்னிறுத்தமான வளர்ச்சிக்கு துணைபுரியும்.

இவ்வருடத்தில் கடன் தேக்கத்தின் தரமானது ஒரு முக்கிய கரிசனையாகும். கடன் தேக்கத்தின் தரத்தினை அளவிடுவதற்காக விரிவான மு.செ.கு. அறிமுகப்படுத்தப்பட்டன மற்றும் தேவையாயின் செயல்திறனான நடவடிக்கையினை எடுப்பதற்காக நாம் தொடர்ச்சியாக மீட்டல்களை நெருக்கமாக கண்காணித்தோம்.

இவ்வருடத்தில் நாம் எமது வாகன வணிகர் வலையமைப்பினை வளர்ப்பதன் மூலம் எமது பிரசன்னத்தினை விரிவாக்கினோம். 224 வணிகர்கள் உட்சேர்க்கப்பட்டதுடன் 2000 க்கும் அதிகமான வாடிக்கையாளர் தொடு புள்ளிகளாக விரிவடைந்தன. அதேசமயம், விசேடமாக அடிமட்ட நிலையில் எமது கருவிகளை ஊக்குவிக்கவும் வணிகநாமப் புலப்பாட்டினை அதிகரிப்பதற்கும் நாடுபூராவுமான ஒரு விளம்பர பிரச்சாரம் நடாத்தப்பட்டது.

செயற்பாட்டு வினைத்திறன்களை மேம்படுத்துவதிலும் நாம் முன்னிறுத்தம் செய்தோம். "பிராந்திய எண்ணக்கரு" இன் கிளை திரளுக்கும் மேலாக, மூலோபாயமாக இனங்காணப்பட்ட கிளைகள் பாரிய இணைதிறன்களை இயக்குவதற்காக ஒன்றிணைக்கப்பட்டன. அனைத்து வாடிக்கையாளர் கொடுப்பனவுகளுக்கான ஒரு பன்முக சேவை வலையமைப்பான எமது மொபைல் செயலி 'PLC touch' மற்றும் 'People's Pay Way', ஆகியவற்றின் தொடக்கத்துடன் இவ்வருடத்தில் டிஜிட்டல்மயமாக்கல் முயற்சிகள் தொடர்ந்தன. நாம் தொடர்ச்சியாக முழுவதும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட மேடைகள் நோக்கி நகர்ந்ததுடன் இது அதிகாரிகள் கோப்புகளை தொலைவிலிருந்து செயல்முறைப்படுத்துவதனை இயலுமையாக்குவதுடன் இதன் மூலம் ஆக்கத்திறனை கணிசமானளவு மேம்படுத்தும். இவ்வருடத்தில் வருமானத்திற்கான கிரய மு.செ.கு. உள்ளடங்கலாக கடுமையான செலவினக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதேசமயம், பணியாட்களிடையே, நாம் தொடர்ந்தும் ஒரு விற்பனையினால் இயக்கப்படும் கலாச்சாரத்தினை வளர்ப்பதுடன், இது வணிக வளர்ச்சிக்கு கவர்ச்சிகரமான ஊக்குவிப்புகளை வழங்குவதுடன் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் திறன்களை மேம்படுத்துவதற்காக தொடர்ச்சியான பயிற்சியினையும் வழங்குகின்றது.

கோவிட்-19 தொற்றுக்குள்ளான வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண வழிமுறைகள் இவ்வருடத்திலும் தொடர்ந்தன. இ.ம.வ. இன் வழிகாட்டிகளின் பிரகாரம் கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதிகள் 31,000 க்கு அதிகமான வசதிகளுக்கு வழங்கப்பட்டன. அதேசமயம், இவ்வருடத்தில் சலுகையான குறைந்த வட்டி நிவாரணத் திட்டமான "ஹித்த மித்துரு" அறிமுகப்பட்டதுடன் இதன் குறிக்கோள் தனியார் பயணிகள் போக்குவரத்து வாடிக்கையாளர் பிரிவிற்கு அவர்கள் கோவிட்-19 இன் பின்னர் அவர்களது வணிகத்தினை கட்டியெழுப்பும்போது துணைபுரிவதற்காகும்.

## செயற்திறன்

இவ்வருடம் முழுவதும் காணப்பட்ட குறைவான வட்டி வீதங்களினால் விடுமிகைத்தல்கள் தொடர்ந்தும் அழுத்தத்திற்குட்பட்ட போதிலும் கருவிகளது கலப்பினை முகாமைப்படுத்துவதற்கான நிலைபேறுள்ள முயற்சிகள் இப்பிரிவு விடுமிகைகளிலான தாக்கத்தினை குறைப்பதனை இயலுமையாக்கியது.

குத்தகை மற்றும் கடன் தேக்கமானது ஒரு மிதமான வளர்ச்சியான 6.59% இனை பதிவுசெய்தது. இவ்வருடத்தில், முச்சக்கர வண்டிகள் மற்றும் தனிப்பட்ட வாகனங்கள் போன்ற உயர் கேள்வியுடைய சிற்றளவு வாகனப் பிரிவுகளுக்கு எமது தேக்கத்தினை விரிவாக்குவதில் நாம் முன்னிறுத்தம் செய்தவேளை, வர்த்தக வாகனங்கள் மற்றும் ஆடம்பர வாகனங்கள் போன்ற உயர் பெறுமதியான பிரிவுகளுக்கான கேள்வியானது அடக்கமாகக் காணப்பட்டன.

கடன் தேக்க வளர்ச்சியானது தங்கக் கடன் வளர்ச்சியினால் துணையளிக்கப்பட்டதுடன், இது 31 மார்ச் 2022 இல் 33.36% ஆல் வளர்ச்சியடைந்து ரூ. 2,658.47 மில்லியனை எட்டியது. இப்பிரிவிலான வட்டி வருமானமானது 20.61% ஆல் வளர்ச்சியடைந்து இவ்வருடத்தில் ரூ. 292.02 மில்லியனாகக் காணப்பட்டது.

இவ்வருடத்தில் கொழும்பு பங்குச் சந்தையில் காணப்பட்ட சாத்தியமான அசைவுகளுக்கு ஏற்றாற்போல் கம்பனியின் எல்லைக்கடன் வர்த்தகத் தேக்கத்தில் வருடத்திலிருந்து வருடம் கணிசமானளவு வளர்ச்சியாக 73.56% சதவீதம் காணப்பட்டதுன் 31 மார்ச் 2022 இல் இது ரூ. 8,387.79 மில்லியனாகக் காணப்பட்டது. 2021/22 வருடத்திற்கு இக்கருவியினால் உருவாக்கப்பட்ட வட்டி வருமானமானது ரூபா 782.39 மில்லியன் ஆகும்.

காரணியாக்கல் கருவியானது இடரகற்றப்பட்டு தற்போதைய சந்தை நிலவரங்கள் இத்தகைய கருவிகளுக்கு சாதகமாக இல்லாததால் அதன் செயற்பாடுகள் குறைக்கப்பட்டன. எனவே, இத்தேக்கமானது தீர்ப்பனவுகளின் மூலம் குறைக்கப்படுவதுடன் எவ்விதமான புதிய வணிகங்களும் வழங்கப்படவில்லை. 2021/22 நிதியாண்டில், வருடத்திலிருந்து வருடம் 57.05% வீழ்ச்சியுடன் காரணியாக்கல் கருவியானது வட்டி வருமானமாக ரூ. 136.54 மில்லியனை உருவாக்கியது.

கடுமையான மீட்டல் முயற்சிகளினால் கடன்கள் மற்றும் குத்தகைப் பிரிவிலான செயற்திறனற்ற கடன்களின் வீதமானது மார்ச் 2021 இல் காணப்பட்ட 9.22% உடன் ஒப்பிடும்போது 8.84% ஆக வீழ்ச்சியடைந்தது.

குத்தகை மற்றும் கடன் பகிர்வுகள்




குத்தகை மற்றும் கடன் தேக்கம்




வட்டி வருமானம் மற்றும் பிரிவின் விளைவு



# குழும வணிக மீளாய்வு

## வைப்புகள்

வ.அ.நி.நி. துறையின் ஒரு சந்தை முதல்வராக எமது வைப்புத் தளமானது எமது திடமான வணிகநாம கிளைகளினால் துணையளிக்கப்பட்டு இவ்வருடத்தில் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்தது. இவ்வருடத்தில் வைப்புக்களின் வளர்ச்சியினை இயக்குவதற்காக குறுக்கு விற்பனை மற்றும் எமது சிற்றளவு வாடிக்கையாளர் தளத்தினை விரிவாக்குவதில் நாம் தொடர்ந்தும் முன்னிறுத்தம் செய்தோம்.

**செயற்திறன் சிறப்பம்சங்கள் 2021/22**

வைப்புத் தளம்
ரூ. 103,367.90 மில்லியன்
(2020/21 - ரூ. 101,502.93 மில்லியன்)

வைப்புக்களின் வளர்ச்சி / (வீழ்ச்சி)
1.84%
(2020/21 – (4.87%))




| பெறுமதி உருவாக்கும் | |
|---|---|
| நிதியியல் மூலதனம் | • நிலையான வைப்புக்களின் வளர்ச்சி 2.31% |
| மனித மூலதனம் | • கருவிகளின் அறிவு மற்றும் மென்திறன்களில் பணியாட்களுக்கு தொடர்ச்சியான பயிற்சி<br>• தொழிலிலான பயிற்சி<br>• தொழில் பெருக்கம் / தொழில் செறிவூட்டம் |
| உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம் | • தொலைதூர கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக டிஜிட்டல் மேடைகளில் முதலீடுகள் |
| சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் | • டிஜிட்டல் வழங்கல்களான (PLC touch, PLC online) ஆகியவற்றை பலப்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் சௌகரியத்தினை மேம்படுத்தியமை |
| அறிவுசார் மூலதனம் | • டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தன்னியக்க மயமாக்கல் ஊடாக பல்வேறு செயல்முறை மேம்பாடுகளை அறிமுகப்படுத்தியமை |
| இயற்கை மூலதனம் | • டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகள் மற்றும் நிலைபேறுள்ள முயற்சிகள் ஊடாக தாள் நுகர்வினை குறைத்தமை |

### கண்ணோட்டம்

வைப்பு வளர்ச்சியினை கடன் வளர்ச்சிக்கு சீரமைத்தலில் எமது முன்னிறுத்தம் காணப்படுகின்றது. சந்தையில் கூர்மையாக அதிகரிக்கும் வட்டி வீதங்களின் சூழமைவில் நாம் குறைந்த கிரயத்துடனான நிதி தளத்திற்கு நகர்வதற்கு தொடர்ந்தும் முன்னிறுத்தம் செய்வோம் என்பதுடன் இதனை நாம் சேமிப்பு வளர்ச்சியினை இயக்குவதற்காக எமது சிற்றளவு வாடிக்கையாளர் தளத்தினை அதிகரிப்பதுடன் இலங்கையர்களிடையே சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவிப்போம்.

## 2021/22 இல் அபிவிருத்திகள்

காலாகால முடக்கங்கள் மற்றும் அசைவுமை கட்டுப்பாடுகள் என்பவற்றினால் செயற்பாடுகள் தொடர்ச்சியாக பாதிக்கப்படுவதினால் நாம் ஆகக் குறைந்த இடையூறுகளுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு இடையீடற்ற சேவையினை உறுதிப்படுத்துவதில் முன்னிறுத்தம் செய்தோம். இதற்கும் மேலாக, விரைவாக மாற்றமடையும் வீட்டிலிருந்து பணிபுரியும் தேவைக்கும் எமது டிஜிட்டல் மேடையானது எமது வழக்கமான சேவைகளை இடையீடின்றி தொடர்ச்சியாக வழங்குவதனை இயலுமையாக்கியதுடன் வாடிக்கையாளர் சௌகரியத்தினை மேம்படுத்துவதற்காக நாம் எமது டிஜிட்டல் சேவை வழங்கல்களை பலப்படுத்தினோம். இவ்வாண்டில், நாம் PLC touch மற்றும் PLC online போன்ற எமது டிஜிட்டல் மேடைகளூடாக தொலைதூர கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளித்தவேளை வாடிக்கையாளர்களுக்கு துணைபுரிவதற்காக மின்னஞ்சல்களூடான வேண்டுதலூடாகவும் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளித்தோம்.

வினைத்திறன் மட்டங்கள் மற்றும் ஒட்டுமொத்த வாடிக்கையாளர் சௌகரிய மட்டங்களை மேம்படுத்துவதற்காக பல செயல்முறை மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய செயல்முறை மேம்பாடுகள் பக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன. செயல்முறைகளை சீராக்கும் இந்த முயற்சிகள் செலவு மற்றும் நேரம் போன்றவற்றிலான சேமிப்பினை விளைவித்துள்ளது மாத்திரமன்றி எமது தாள்களற்ற செயற்பாட்டிற்கும் கணிசமானளவு பங்களித்துள்ளது.

| வாடிக்கையாளர் சௌகரியத்தினை மேம்படுத்தல் |
|---|
| PLC Online |
| PLC Touch |
| தொந்தரவற்ற நிதி மாற்றல்கள் |
| CDM கள் ஊடாக சுய இ-காசு வசதிகள் |
| QR வசதிகள் |
| தொடர்பற்ற கொடுக்கல் வாங்கல்கள் |

| வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி முன்னீட்டினை உருவாக்கிய இவ்வருடத்திலான செயல்முறை மேம்பாடுகள் |
|---|
| • நி.வை. சான்றிதழ் வழங்கும் நேரத்தினை குறைப்பதற்காக ஒரு புதிய வருடல் முறைமையினை அமுல்படுத்தல் |
| • வாடிக்கையாளர்கள் படிவங்களை நிரப்புவதற்கு செலவிடும் நேரத்தினைக் குறைப்பதற்காக வாடிக்கையாளர் தகவல்களை டிஜிட்டல்மயமாக்கல் |
| • நேரத்தினை சேமிப்பதற்காக அச்சிடப்பட்ட நியமனதாரர் உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| • வாடிக்கையாளர்களுக்கு தன்னியக்கமாக்கப்பட்ட புதுப்பித்தல் ஆலோசனைகள் |
| • அவசியமற்ற தாள் விரயத்தினை தவிர்ப்பதற்காக இ-அலுவல் குறிப்பு முறைமையின் அறிமுகம் |
| • நி.வை. மற்றும் சேமிப்புகளுக்கு இ-பதிவேடுகளை பராமரித்தல் |
| • தாள் நுகர்வினை மட்டுப்படுத்துவதற்கான இ-கையொப்ப முறைமை |

இவ்வருடத்தில் காணப்பட்ட முக்கியமான முன்னிறுத்தம் நடைமுறையிலுள்ள எமது கிளை வலையமைப்பினூடாக சிற்றளவு வாடிக்கையாளர் தளத்தினை அதிகரிப்பதாகும். இதற்காக, எமது சேமிப்புகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட வைப்புக் கருவிகளை ஊக்குவிப்பதற்காகவும் எமது டிஜிட்டல் வழங்கல் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குவதற்கும் பல விளம்பரப் பிரச்சாரங்கள் நடாத்தப்பட்டன. அதேசமயம், எமது குத்தகை மற்றும் கடன் வாடிக்கையாளர்களிடையே சேமிப்புக் கருவிகளை ஊக்கமளிப்பதன் மூலம் குறுக்கு விற்பனையில் நாம் தொடர்ந்தும் முன்னிறுத்தம் செய்தோம். இந்த முயற்சிகளுக்கு துணைபுரிவதற்காக, கருவிகளது அறிவினை மேம்படுத்தவும் திறன்களை மேம்படுத்தவும் அனைத்து கிளை பணியாட்களுக்கும் பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### செயற்திறன்

இவ்வருடத்தில் நாம் தொடர்ந்தும் வைப்புக்களிலான வளர்ச்சியினை இயக்கினோம் ஏனெனில் கம்பனிக்கு நிலைபேறுள்ள குறைவான கிரய நிதித் தளத்தினை பெற்றுக்கொடுக்கும் எமது வைப்புத்தளத்தினை அதிகரிப்பதற்கான ஒரு ஒருங்கிணைந்த முயற்சியின் விளைவாக இவ்வருடத்தில் வளர்ச்சியானது அடையப்பட்டது. இது பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கையினை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.



பஹாபர அனாகதய நிவெரதி தேரிம, பீபள்ஸ் லீசிங் இனால் வழங்கப்படும் புதிய நிதிச் சேவைகளை அறிமுகப்படுத்துவதற்காக நாடுபூராவுமான விளம்பர பிரச்சாரம் நடாத்தப்பட்டது.

ஸ்திரத்தன்மை மற்றும் திடமான சிற்றளவு பிரசன்னம் என்பவற்றுக்கான எமது நற்பெயரானது சவால் மிக்க சந்தை நிலைமைகளின் மத்தியில் வைப்புக்களை கவர்வதனை இயலுமையாக்கியது. சந்தையில் நீண்டகால விளைவு வீதங்கள் குறைவாக காணப்படுவதனால் எமது வைப்புத்தளமானது 12 மாதங்களுக்குக் குறைவான முதிர்வுகளை நோக்கிச் சாய்ந்துள்ளது.

வைப்புத் தளம்




முதிர்வு அடிப்படையிலான வைப்புத் தளம்
**2021/22**




முதிர்வு அடிப்படையிலான வைப்புத் தளம்
**2020/21**



# குழும வணிக மீளாய்வு

## இஸ்லாமிய நிதி

2005 ஒக்டோபரில் செயற்பாடுகளை ஆரம்பித்த அல்-சவா என்றழைக்கப்படும் இஸ்லாமிய நிதிச் சேவைகள் அலகானது, தற்போது நாட்டில் உள்ள இஸ்லாமிய நிதிச் சேவைகள் வழங்குநர்களில் ஒரு முன்னணி அலகாகும். சமத்துவம் மற்றும் நியாயத்தன்மை எனப்படும் ஷரிஆ கொள்கைகளுக்கு அமைவாக எமது கருவித் தேக்கங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன், எமது வாடிக்கையாளர்கள் கூட்டாண்மைகள், சி.ந.நி., உயர் நிகர மதிப்புடைய தனிநபர்கள் மற்றும் நாடு முழுவதுமுள்ள பல்வேறு வணிகத் துறைகளிலுள்ள தொழில்வல்லுநர்கள் ஆகியோரை உள்ளடக்குகின்றன.

### செயற்திறன் சிறப்பம்சங்கள் 2021/22

**நிதியளித்தல் வருமானம்**
ரூ. **1,035.74** மில்லியன்
(2020/21- ரூ. 1,180.18 மில்லியன்)

**பிரிவின் விளைவு/PBT**
ரூ. **353.38** மில்லியன்
(2020/21- ரூ. 338.49 மில்லியன்)

**பிரிவின் சொத்துக்கள்**
ரூ. **8,524.80** மில்லியன்
(2020/21- ரூ. 5,156.38 மில்லியன்)

**செயற்திறனற்ற கடன்கள்**
**7.64%**
(2020/21- 9.07%)




| பெறுமதி உருவாக்கம் | |
|---|---|
| நிதியியல் மூலதனம் | • பிரிவின் விளைவு ரூ. 353.38 மில்லியன் |
| உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம் | • மேற்கொள்ளப்பட்ட முறைமைகள் மேம்படுத்தல்களின் விளைவாக முதாரபஹா நி.வை. மற்றும் சேமிப்புக்களுக்கு உயர்ந்த இலாபங்கள் வழங்கப்பட்டன. |
| சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் | • விளம்பர நடவடிக்கைகளூடாக தனிப்பயனுடைய கிளைகள் பலப்படுத்தப்பட்டதுடன் வாடிக்கையாளர் அணுக்கத்தினை விரிவாக்குவதற்கு சாத்தியமான கிளைகளை இனங்காணுதல்<br>• 1,250 வசதிகளுக்கு கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியானது வழங்கப்பட்டது. |
| மனித மூலதனம் | • கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியின் நீடிப்பு |

### கண்ணோட்டம்

- புதிய கருவி அபிவிருத்திகள் (வாடிஹா - தங்கக் கடன் கருவிகள் / குறைவடையும் முஷாரக்கா/ பிஎல்சி முதலீட்டுத் திட்டம் மற்றும் வக்காலா முதலீட்டுக் கருவிகள் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன)
- இஸ்லாமிய நிதிச் சேவைகள் அலகினை முனைப்பான வணிச சாத்தியங்களுக்கு இடமாற்றல்
- இருப்பிடம் மற்றும் வணிக செயற்பாட்டினை விரிவாக்குதல் மற்றும் இலக்குகளை சந்திப்பதற்கு தேவையான வசதிகளை நிறைவேற்றல்
- புதிய "பார்க்லேன்ட்" கிளையினை ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டாண்மை குவியமாக மாற்றுதல்
- இஸ்லாமிய நிதிச் சேவைகளை விரிவாக்குவதற்காக சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் சாத்தியமான பீபள்ஸ் லீசிங் கிளைகளில் நிறுத்தப்படுவார்கள்

## 2021/22 இலான அபிவிருத்திகள்

பல்வேறு செயற்பாட்டு சவால்களுடன் காணப்பட்ட ஒரு சிரமமான ஆண்டின் மத்தியில், அ.இ.நி. அலகானது, பெரும்பாலும் சி.ந.நி. வாடிக்கையாளர்களை உள்ளடக்கிய அதன் வாடிக்கையாளர்களுக்கு இடையூறற்ற சேவைகளை வழங்குவதற்கு இயலுமையாயிருந்தது. இது பீபள்ஸ் லீசிங் இன் பொதுவான கிளைகள் வலையமைப்பு மற்றும் இஸ்லாமிய நிதிச் சேவைகளை வழங்கும் தனிப்பயனுடைய ஏழு கிளைகளினூடாக மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது. அதேசமயம், பார்க்லேன்ட் கிளையானது ஒரு புதிய கருத்துவடிவ முன்னிறுத்தத்துடன் விருத்திசெய்யப்பட்டதுடன், வாடிக்கையாளரது உடனடி தேவைகளுக்கு பொருத்தமான கருத்துருவத்துடன் செயற்படுகின்றது.

இவ்வாண்டில், அ.இ.நி. அலகானது இ.ம.வ. இன் கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியினை அதன் வாடிக்கையாளர்களுக்கு தொற்றின் 1ஆம் மற்றும் 2ஆம் அலைகளின்போது வழங்கியதுடன், வைரஸின் நீடிப்புத்தன்மையின் காரணமாக அனேகமான வாடிக்கையாளர்கள் இன்னமும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். ஒரு புதிய தங்க பாதுகாப்பு கருவியான, பிஎல்சி வாடியா கணிசமானளவு வளர்ச்சிச் சாத்தியத்தினைக் கொண்டிருப்பதுடன் ஷாரிஆ மேற்பார்வை சபையினால் விருத்திசெய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இந்தக் கருவியானது குறுகிய காலத்தில் எமது பெறுமதியான வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கக்கூடும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இவ்வருடத்தில் எமது செயல்முறைகளில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

**முறைமை மேம்பாடுகள்**

- முஷாரக்கா மற்றும் முதாரபஹா கருவிகளது கையியக்க ஆவண அச்சிடலானது முறைமையாக்கப்பட்டன.
- ஆவணங்களது பௌதீக காப்பகப்படுத்தல்

**பிரதான அல்-சாவா கிளையின் இடமாற்றம்**

**அல்-சாவா கிளை**

- யூனியன் ப்ளேசிலுள்ள பிரதான கிளையானது பார்க்வீதி பார்க்லேன்ட் இற்கு இவ்வருடத்தில் இடமாற்றம் செய்யப்பட்டது. புதிய கிளையானது நவீன தொழிற்நுட்பங்களுடன் வாடிக்கையாளர்களுக்கு சௌகரியங்களை வழங்குகின்றது.

**விளம்பரப் பிரச்சாரங்கள்**

- டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் மற்றும் விளம்பரங்கள்
- இஜாரா குத்தகை முச்சக்கர வண்டிகள் பிரச்சாரங்கள்
- QR பிரச்சாரங்களும் விளம்பரங்களும்
- சேமிப்புப் பிரச்சாரங்களும் விளம்பரங்களும்

## எமது செயற்திறன்

அ.இ.நி. அலகானது இவ்வருடத்தில் மெச்சத்தக் செயற்திறனை பதிவுசெய்து இலாபமானது 4.40% ஆல் வளர்ச்சியடைந்து ரூ. 353.38 மில்லியனை அடைந்தது. மொத்த வருமானமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு வீழ்ச்சியாக 11.14% இனை பிரதிபலித்ததுடன், இது பிரதானமாக நிதியளித்தல் வருமானத்திலான வீழ்ச்சியனாலாகும். நிதிச் செலவினங்கள் கடன் வசதிகளிலான நிதி வருமானத்துடன் ஒப்பிடும்போது ஒரு உயர்ந்த சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன் விளைவாக முன்னைய ஆண்டின் ரூ. 583.71 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூ. 589.77 மில்லியனை தேறிய நிதி வருமானமாக அடைந்தது. இவ்வருடத்திலான மேம்பட்ட மீட்டல்கள் கடன் நட்டங்களின் வலுக்குன்றல் தொகையான ரூ. 23.07 மில்லியன் திருப்பலினை விளைவித்ததுடன் இஸ்லாமிய நிதிப் பிரிவின் இலாபத்திலான அதிகரிப்பிற்கு பங்களித்தது.

சவாலான செயற்பாட்டு சூழலுக்கு மத்தியில் அலகானது ரூ. 5,366.27 மில்லியன் பெறுமதியான புதிய வணிக பருமன்களை உருவாக்கியதுடன், இது தேக்கத்தில் 15.09% வளர்ச்சியினை விளைவித்தது. செயற்திறனற்ற கடன்கள், உரிய நேரத்தில் மீட்டல்களை உறுதிப்படுத்துவதற்கான முன்னிறுத்தத்தின் காரணமாக 7.64% இற்று மட்டுப்படுத்தப்பட்டது.



### நிதி வருமானமும் பிரிவின் விளைவும்




### கடன் தேக்கம் மற்றும் செ.க. வீதம்




### புதிய கடன் வழங்கல்கள்



# குழும வணிக மீளாய்வு

## காப்புறுதி

எமது துணைக்கம்பனியான பீபள்ஸ் இன்சூரன் பிஎல்சி (பீ.இ.) ஒரு முழுநீள ஆயுளல்லாத காப்புறுதிக் கம்பனியாகும். கம்பனியானது மோட்டார், தீ மற்றும் பொறியியில், கடல்சார் உள்ளடங்கலான கருவிகளையும் மற்றும் நானாவித காப்புறுதித் தீர்வுகளையும் சிற்றளவு மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. பலவருடக் காலப்பகுதியில், கம்பனியானது அதன் திடமான வணிகநாமத்தினை பயன்படுத்தி அதற்கென ஒரு வளப்பாங்கினை, தனித்துவமான விநியோக மூலோபாயம் மற்றும் குறைவான கிரய விநியோக மாதிரி என்பவற்றை உருவாக்கியுள்ளதுடன், நாட்டில் காணப்படும் மிகவும் இலாபகரமான ஆயுளல்லாத காப்புறுதி வழங்குநராக வந்துள்ளது.

**செயற்திறன் சிறப்பம்சங்கள் 2021/22**

தேறிய உழைத்த தவணைப்பணங்கள்
ரூ. **5,123.00** மில்லியன்
(2020/21- ரூ. 5,198.69 மில்லியன்)

பிரிவின் விளைவு/PBT
ரூ. **995.84** மில்லியன்
(2020/21- ரூ. 1,507.22 மில்லியன்)

பிரிவின் சொத்துக்கள்
ரூ. **12,102.54** மில்லியன்
(2020/21- ரூ. 11,133.86 மில்லியன்)

பிரிவின் பொறுப்புக்கள்
ரூ. **7,353.49** மில்லியன்
(2020/21- ரூ. 6,266.78 மில்லியன் )

கோரல்கள் விகிதம்
**58.50 %**
(2020/21- 50.91%)




| பெறுமதி உருவாக்கம் | |
|---|---|
| நிதியியல் மூலதனம் | • இவ்வருடத்தில் பிரிவின் விளைவு ரூ. 995.84 மில்லியன் என்பதுடன் தாய் நிறுவனத்திற்கு பகிரப்பட்ட பங்கிலாபமானது ரூ. 675 மில்லியன் ஆகும். |
| உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம் | • டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் தன்னியக்கமயமாக்கல் உடன் செயல்முறை அபிவிருத்திகள் |
| சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் | • ஒரு வாடிக்கையாளர் மையமான சூழலினை உருவாக்குவதன் மூலம் சேவை தனிச்சிறப்பினை அடைவதில் முன்னிறுத்தம் செய்யப்படுகின்றது. |
| இயற்கை மூலதனம் | • சூரியப் பலகங்களுக்கான காப்புறுதி காப்புகள் மற்றும் தாள்களற்ற காரியாலய சூழலின் அறிமுகத்துடன் சூழல் நீடிப்புத்திறனை ஊக்கமளித்தல் |

**கண்ணோட்டம்**

உள்ளூர் பொருளாதாரத்தில் காணப்பட்ட பலவீனமடையும் பாரிய பொருளாதார நிலைமைகள் வாடிக்கையாளர் தாங்குமையில் தாக்கத்தினை ஏற்படுத்தும். எனவே, பீ.இ. குறைந்த கிரயமுள்ள காப்புறுதிக் கருவிகளை அறிமுகப்படுத்துவதனை பார்க்கின்றது. பீ.இ. வாடிக்கையாளர்களுக்கு அதன் பெறுமதி முன்னீட்டினை மேம்படுத்துவதற்காக அதன் டிஜிட்டல் ஆற்றல்களை துரிதப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும்வேளை பணியாட்களது தொழில்நுட்ப திறன்கள் மற்றும் வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவம் ஆகியவற்றை மேம்படுத்துவதனை முன்னிறுத்தி அவர்களது திறன்களை வளர்க்கின்றது.

## 2021/22 இலான அபிவிருத்திகள்

காப்புறுதிப் பிரிவானது இவ்வருடத்தில் தொற்றின் நீடித்த தன்மை மற்றும் அதன் விளைவான பொருளாதார மந்தநிலையின் காரணமாக எழுந்த நிலையற்ற செயற்பாட்டு நிலைமைகளின் மத்தியில் மீளெழுச்சியினை காண்பித்தது. தீ, கடல்சார் மற்றும் நாட்டின் பொதுக் காப்புறுதித்துறையின் நானாவித பிரிவுகளிலான வளர்ச்சியானது மொத்த எழுதப்பட்ட தவணைப்பணத்தின் (மொ.எ.த.) வளர்ச்சிக்கு துணைபுரிந்ததுடன் மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கான தடையினால் மோட்டார் காப்புறுதிப் பிரிவானது கணிசமானளவு பாதிக்கப்பட்டது. அதேசமயம், வருடத்தின் அனேகமான பகுதியில் காணப்பட்ட குறைந்த வட்டிவீத சூழலானது முதலீட்டு வருமானத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

**+4% பொது மொ.எ.த. இல் வளர்ச்சி**

- -0.03% மோட்டார் காப்புறுதி
- +39% தீ காப்புறுதி
- +37% கடல்சார் காப்புறுதி

**+14% கோரல்களிலான வளர்ச்சி**

- +1% மோட்டார் காப்புறுதி
- +10% தீ காப்புறுதி
- +108% கடல்சார் காப்புறுதி

பீபள்ஸ் இன்சூரன்சில் அனைத்து பங்காளிகளதும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை காப்பதற்காக விரிவான பாதுகாப்பு நடைமுறைகளை அமுல்படுத்தியவேளை எமது செயற்பாடுகள் எவ்வித இடையூறுமின்றி தொடர்வதனை நாம் உறுதிபடுத்தினோம். தொற்றின் ஆரம்பத்தில் ஓரளவு தொலைதூர பணிபுரிதல் மாதிரியினை தழுவிய நாம் இந்த பிரிவில் டிஜிட்டல் வழிமுறைகளை பலப்படுத்தும் தொடர்ச்சியான அழுத்தத்தினூடாக டிஜிட்டல்மயமாக்கல் இயக்கத்தினை விரைவு படுத்தினோம்.

இவ்வாண்டில், சுற்றுலாத்துறையினை மீட்டெடுக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு துணைபுரிவதற்காக அனைத்து உள்வரும் பயணிகளுக்கும் ஒரு கட்டாய கோவிட்-19 காப்பீட்டினை ஆரம்பித்தோம். எமது முன்னிறுத்தமானது நடைமுறையிலுள்ள தேக்கக் கருவிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் ஆகியவற்றில் இருந்ததானால் எவ்விதமான புதிய கருவிகளும் அறிமுகப்படுத்தப்படவில்லை. சமூக ஊடக பிரச்சாரங்கள் மற்றும் செய்தித்தாள் விளம்பரங்கள் ஊடாக நாம் எமது வணிகநாம உரித்துவத்தில் பெருமளவு முதலீடு செய்தோம். எமது கூட்டாண்மை கருப்பொருளான, அன்புடன் அரவணைத்தல் இனை எமது வணிகநாம விழிப்புணர்வின் கீழ் பன்முக ஊடக வழிமுறைகளூடாக வணிக நாம விழிப்புணர்வினை கட்டியெழுப்புவதற்காக மேலும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**2021/22 இல் மறுசீரமைக்கப்பட்ட கருவிகள்**

- மருத்துவக் காப்புறுதி
- சூரியப் பலகக் காப்புறுதி

ஒரு வாடிக்கையாளர் மையமான சூழலை உருவாக்குவதன் மூலம் கம்பனியானது வாடிக்கையாளர் சேவையில் தனிச்சிறப்பினை அடைவதற்கு கடும் முயற்சி செய்கின்றது. இவ்வாண்டில் நாம் வாடிக்கையாளரின் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு வசதயளிப்பதற்காக செயல்முறைகளை உருவாக்கி அபிவிருத்தி செய்வதில் முன்னிறுத்தம் செய்தோம். மோட்டார் காப்புறுதிக் கருவியில் உள்ளடக்கப்பட்டுள்ள அழையுங்கள் மற்றும் செல்லுங்கள் வசதியானது எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு முக்கியமான பெறுமதி முன்னீடாகும்.

## எமது செயற்திறன்

மொத்த எழுதப்பட்ட தவணைப்பணமானது (மொ.எ.த.) துறையின் 4% வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2021 இல் சிறிய வீழ்ச்சியான 0.7% இனை பதிவு செய்தது. மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கான தொடர்ச்சியான தடையுடன் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களின் அதிகரிக்கும் விலையானது மோட்டார் காப்புறுதிப் பிரிவினை மோசமாக பாதித்தது. அதேசமயம், தீ, கடல்சார் மற்றும் நானாவித பிரிவுகள் வளர்ச்சி வேகத்தினை பராமரித்தன.

பீபள்ஸ் லீசிங் வழிமுறையின் கட்டுப்பட்ட வணிகங்கள் இவ்வருடத்தில் எதிர்மறையாகப் பாதிக்கப்பட்டன, இது மோட்டார் காப்புறுதித் துறையின் மந்தமான செயற்திறனிலாகும். எவ்வாறாயினும், கட்டுப்படாத வணிகங்கள் ஓரளவு வளர்ச்சியான 5% இனை பதிவுசெய்தது.

குறைந்து செல்லும் தொற்றுடன் அதிகரித்த அசைதிறத்தின் காரணமாக இவ்வருடத்தில் கோரல்கள் 11% ஆல் அதிகரித்தன. இவ்வருடத்தில் எமது கோரல்கள் வீதமானது 58.50% ஆக காணப்பட்டது. இவ்வருடத்தில் காணப்பட்ட கடினமான செயற்பாட்டு நிலைமைகள் இப்பிரிவின் விளைவில் 36.58% வீழ்ச்சியினை விளைவித்தன.

கம்பனியின் சொத்துத் தளமானது பிரதானமாக முதலீடுகளைக் கொண்டதாகும். 2021 ஆம் ஆண்டின் அனேமான பகுதியில் காணப்பட்ட குறைவான வட்டிவீதத்தின் காரணமாக வட்டி வருமானமானது ஒரு சிறு வீழ்ச்சியினைக் காட்டியது.

### தேறிய உழைத்த தவணைப்பணம்




### நலன்கள். கோரல்கள் மற்றும் ஒப்புரவளித்தல் செலவினம்




### பிரிவின் வரிக்கு முந்திய இலாபம்



# குழும வணிக மீளாய்வு

## வெளிநாட்டு செயற்பாடுகள்

பங்களாதேஷினைத் தளமாகக் கொண்ட துணைக்கம்பனியான லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் (LAFL) பீபள்ஸ் லீசிங்கிற்கு ஒரு மூலோபாய முயற்சி என்பதுடன் எமது பிராந்திய வளர்ச்சி ஆர்வங்களுக்கு ஒரு ஏவுதளமாக செயற்படுகின்றது. LAFL வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் இலகுமான பண முகாமைப்படுத்தலுக்கு புத்தாக்கமான தொழில்நுட்பங்களூடாக பயனர் தோழமையான நிதியியல் சேவைகளை வழங்குவதற்கு ஆர்வமாயுள்ளது. LAFL ஒரு நிச்சயமற்ற சூழலில் நிதி அடிப்படையான மற்றும் கட்டண அடிப்படையான நடவடிக்கைகளது வளர்ச்சியினை இயக்குவதற்காக அதன் சேவைகளை விரிவாக்கியது.

### செயற்திறன் சிறப்பம்சங்கள் 2021/22

**தேறிய வட்டி வருமானம்**
ரூ. 428.25 மில்லியன்
(2020/21- ரூ. 366.42 மில்லியன்)

**பிரிவின் விளைவு/PBT**
ரூ. 190.30 மில்லியன்
(2020/21- ரூ. 222.60 மில்லியன்)

**பிரிவின் சொத்துக்கள்**
ரூ. 14,544.08 மில்லியன்
(2020/21- ரூ. 6,327.94 மில்லியன்)

**பிரிவின் பொறுப்புக்கள்**
ரூ. 10,088.01 மில்லியன்
(2020/21- ரூ. 3,420.76 மில்லியன்)




| பெறுமதி உருவாக்கம் | |
|---|---|
| நிதியியல் மூலதனம் | • வைப்புக்கள், கடன்கள் மற்றும் முற்பணங்கள் தேக்கங்களின் கணிசமான வளர்ச்சி |
| சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் | • ஒழுங்குவிதிகள் மற்றும் அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளுடன் இணக்கப்பாட்டின் மூலம் முறைமைப்படுத்துபவர்களுடன் மிகவும் சிறந்த உறவினைப் பராமரித்தமை |
| இயற்கை மூலதனம் | • முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் நிதியளித்தல் வசதி II (IPFF II) இனது பங்குபற்றும் நிதி நிறுவனமாக வந்தமை |

### கண்ணோட்டம்

- டிஜிட்டல் கடன் கருவிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- கைத்தொழில் பட்டயத்திற்கு அருகில் உத்தராவின் புதிய சாவடியானது சி.ந.நி. வணிகத்தினை வழிநடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- 2022 ஆம் ஆண்டின் இறுதியில் கடன்கள் மற்றும் முதலீடுகளின் மீதி BDT 6.2 பில்லியனை எட்டியது
- முற்றும் மீட்கத்தக்க பூச்சிய வட்டிவீதமுடைய BDT 500 மில்லியன் முறிகள் முதற்தடவையாக வழங்கப்பட்டன.
- தரகு வணிகத்தில் ஈடுபடுவதற்கு ஒரு துணை நிறுவனத்தினை ஆரம்பித்தல்

## செயற்பாட்டுச் சூழல்

கோவிட்-19 தொற்றின் மீண்டும் மீண்டும் வந்த அலைகளின் மத்தியில் பங்களாதேஷ் பொருளாதாராமானது பொருத்தமான கொள்கைகளை மற்றும் ஊக்குவிப்பு பொதிகளுடன் மீட்டல் கட்டத்திற்கு திரும்பியது. நாடானது ஒரு திடமான வளர்ச்சிப் பாதையில் காணப்படுவதுடன், தெற்காசியாவில் விரைவாக வளர்ச்சியடையும் பொருளாதாரங்களில் ஒன்றாக அதன் பொருளாதார வளர்ச்சியானது 2020 இல் காணப்பட்ட 3.46% உடன் ஒப்பிடும்போது 2021 இல் 6.94% ஆக வளர்ச்சியடைந்தது. நிதியியல் துறையானது தொற்றின் ஆரம்பத்திலிருந்து ஒரு தொடரான கொள்கைகள் மற்றும் விவேகமான வழிமுறைகளினால் துணையளிக்கப்பட்டது.

இரண்டு செயற்திறனான பங்குப் பரிமாற்றகங்களுடன் மற்றும் 700 பட்டியலிடப்பட்ட கம்பனிகளுடன் பங்களாதேஷ் புதிய வைப்புகள் மற்றும் கடன் கருவிகளை ஆரம்பிப்பதற்கு ஏராளமான வாய்ப்புக்களை வழங்குகின்றது. சேவை ஆலோசனைகள், பெரிய திட்டங்களுக்கு நிதியளித்தல், பொது தனியார் பங்குடைமைகள் மற்றும் இணைப்புகள் மற்றும் பொறுப்பேற்புகள் போன்றவற்றை விரிவாக்குவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

## 2021/22 இலான அபிவிருத்திகள்

சந்தையில் பாரிய போட்டியாளர்களுடன் போட்டியிடுவதற்கு எதிர்பார்க்கும் ஒப்பளவில் ஒரு புதிய நிறுவனமாக வணிகநாம கட்டியெழுப்புதலானது எமது பிரதான முன்னுரிமையாகும்.
இவ்வருடத்தில், LAFL முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் நிதியளித்தல் வசதி II (IPFF II) இல் ஒரு பங்குபற்றும் நிதியியல் நிறுவனமாக வருவதற்கான முன்னெடுப்பினை எடுத்ததுடன் அது ஏனைய பல சகா கம்பனிகளிலிருந்து அதனை வித்தியாசப்படுத்திக்கொள்ளும் வழியில் காணப்படுகின்றது. IPFF II என்பது உலக வங்கி மற்றும் பங்களாதேஷின் நிதி அமைச்சினால் மேள்கொள்ளப்பட்ட முன்னெடுப்பு என்பதுடன் இது PFI க்கள் ஊடாக உப திட்டங்களுக்கு நிதியளிப்பதுடன் வாடிக்கையாளர்களுக்கு துணையளிக்கும் வேளை உள்ளூர் நிதியளித்தல் தெரிவுகளுக்கும் பார்க்க நீண்ட காலத்திற்கு குறைவான கிரயத்திலான நிதியளித்தல் தெரிவுகளூடாக உட்கட்டமைப்புதிட்டங்களுக்கு நிதியளிப்பதற்கு வசதியளிக்கின்றது.

கோவிட்-19 நிலைமையின் படிப்படியான மீட்டலைக் கருத்திற்கொண்டு பாரிய பொருளாதார அடிப்படைகள் மற்றும் உயர்வடையும் தனியார் துறை கடன் வளர்ச்சியினால், நாம் எமது அவதானமான வளர்ச்சி மூலோபாயத்தினை தொடர்ந்து இவ்வருடத்தில் எமது கடன் புத்தகத்தினை வளர்த்துள்ளது. அதிகரித்த புலப்பாட்டினை அடைவதற்காக மற்றும் எமது கடன் புத்தகத்தின் வளர்ச்சிக்கு துணைபுரிவதற்காக நாம் எமது கிளை வலையமைப்பினை மேலும் விரிவாக்குவதனை ஆராய்கின்றோம்.

எமது பாரிய வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான மற்றும் கலப்பின நிதியியல் தீர்வுகளூடாக கட்டண அடிப்படையிலான உழைப்புக்களில் நாம் முன்னிறுத்தம் செய்துள்ளோம். ஏனையவர்களுடன் ஒப்பிடும்போது எமது வாடிக்கையாளர் தளமானது வ.அ.நி.நி. பிரிவில் தனித்துவமானதாகும். அடுக்கு -1 அல்லது அடுக்கு -2 பிரிவிலுள்ள 60% ஆன கூட்டாண்மை வாடிக்கையாளர்களை கம்பனி கொண்டுள்ளதுடன் சி.ந.நி. பிரிவும் அனேகமாக 'A' தரமிடப்பட்ட நுண்நிதியளித்தல் நிறுவனங்கள் 32% இனையும் வீட்டுக்கடன் / மோட்டார் கடன் பிரிவானது முறையே 5% மற்றும் 3% இனை கொண்டுள்ளது. அனைத்து வாடிக்கையாளர்களையும் அன்பாகவும் தொழில்சார் விதத்திலும் கையாள்வதற்கு எமது பணியாட்கள் நன்கு பயிற்றப்பட்டுள்ளதனை நாம் உறுதிப்படுத்துகின்றோம். LAFL வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடையே அதன் வணிக நடத்தை மற்றும் அதன் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் புகழுக்கும் ஒரு நற்பெயரைப் பெற்றுள்ளது.

பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கு மேலாக எமது அனைத்து பணியாட்களுக்கும் நாம் ஒரு விரிவான பெறுமதி முன்னீட்டினை வழங்குகின்றோம். சேவைத்துறையில் செயற்படுவதற்கு, ஆற்றல் நிறுத்திவைப்பானது முக்கியம் என்பதுடன் நாம் சரியான நபர்கள் தெரிவுசெய்யப்பட்டு நிறுத்திவைக்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றோம்.

## நிலைபேறுடமை

நிலைபேறுள்ள நிதியளிப்பினை வழங்கும் எமது இலக்கினை அடைவதற்கான முயற்சியில் நாம் பசுமை நிதியளித்தலை ஒழுங்குசெய்வதில் ஈடுபட்டுள்ளோம். இது கம்பனிகளை சூழல் தோழமையான உற்பத்திசெய்தல் வழிமுறைகளை கடைப்பிடிப்பதற்கு ஊக்குவிப்பதுடன் இது சூழலில் துறையின் தாக்கங்களை குறைத்துள்ளது.

மின்சாரம், தண்ணீர் மற்றும் தாள்களின் பாவனையினை குறைப்பதற்காக பல்வேறு முன்னெடுப்புக்களையும் நாம் அமுல்படுத்தியுள்ளதுடன் எமது செயற்பாடுகளினால் சூழலில் ஏற்படும் தாக்கம் குறித்தும் நாம் உணர்வுடையதாயுள்ளோம்.

## செயற்றின்

ஒட்டுமொத்தமாக, கம்பனியானது இவ்வருடத்தில் ஒரு மெச்சத்தக்க செயற்திறனை பதிவுசெய்ததுடன், இப்பிரிவின் விளைவானது இவ்வருடத்தில் முகங்கொடுத்த கணிசமான சவால்களுக்கு மத்தியில் ரூ. 190.30 மில்லியனை அடைந்துள்ளது.

**முக்கிய மைற்கற்கள்**

- அறிக்கையிடும் காலப்பகுதியில் கம்பனியின் தரப்படுத்தலானது A இலிருந்து A+ ஆக தரமுயர்த்தப்பட்டது.
- அரசாங்கத்தினால் இனங்காணப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களுக்கு தனியார் முதலீட்டாளர்களை ஒழுங்குபடுத்துவதற்காக பொது-தனியார் பங்குடைமை அதிகாரசபையுடன் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.
- முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் நிதியளித்தல் வசதி II (IPFF II) இல் ஒரு பங்குபற்றும் நிதியியல் நிறுவனமாக வந்ததுடன், IPFF II என்பது உலக வங்கி மற்றும் பங்களாதேஷின் நிதி அமைச்சினால் மேள்கொள்ளப்பட்ட முன்னெடுப்பாகும்.
- கடந்த 4 வருடங்களாக எமது செயற்பாட்டில் செயற்திறனற்ற கடன்களின் சதவீதம் பூச்சியமாகும்.

வட்டி வருமானமும் பிரிவின் விளைவும்




கடன்கள் மற்றும் முற்பணங்கள் தேக்கம்



# குழும வணிக மீளாய்வு

## நுண் நிதியளிப்பு

எமது துணைநிறுவனமான பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட் (PML) பாரம்பரிய வங்கியியல் துறைக்கு அணுக்கத்தினை கொண்டிராத நகர மற்றும் கிராம சமூகங்களுக்கு அவர்களது நிதியளித்தல் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நிதியியல் உறுதுணை மற்றும் வாடகைக் கொள்வனவு வசதிகளை வழங்கும் நாட்டிலுள்ள முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்.

### செயற்திறன் சிறப்பம்சங்கள் 2021/22

**வட்டி வருமானம்**
ரூ. 793.17 மில்லியன்
(2020/21 - ரூ. 818.52 மில்லியன்)

**பிரிவின் விளைவு/PBT**
ரூ. 267.17 மில்லியன்
(2020/21 - ரூ. 201.31 மில்லியன்)

**பிரிவின் சொத்துக்கள்**
ரூ. 3,070.80 மில்லியன்
(2020/21 - ரூ. 2,684.03 மில்லியன்)

**பிரிவின் பொறுப்புக்கள்**
ரூ. 2,566.10 மில்லியன்
(2020/21 - ரூ. 2,316.59 மில்லியன்)

**செயற்திறனற்ற சொத்துக்கள்**
4.67%
(2020/21- 5.54%)




| பெறுமதி உருவாக்கம் | |
|---|---|
| நிதியியல் மூலதனம் | • வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 181.58 மில்லியன் |
| உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் | • பீபள்ஸ் லீசிங் இன் 32 கிளைகளுடன் மற்றும் தனித்து நிற்கும் 2 கிளைகளுடன் நாடுபூராவுமான பிரசன்னத்தினை கொண்டுள்ளது. |
| சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் | • வாடிக்கையாளர்களுடன் திடமான உறவினை கட்டியெழுப்புதல் மற்றும் அவர்களது தேவைகளுக்கு பொருத்தமான கருவிகளை விருத்திசெய்தல்<br>• நுண் நிதியளித்தல் கடன் எண்ணக்கருவானது மிகவும் முன்னிறுத்தமான மற்றும் நிலைபேறுள்ள விதத்தில் முன்னோக்கி நகர்கின்றது. |
| இயற்கை மூலதனம் | • தாள்களின் பயன்பாட்டினை குறைத்தல் |

### கண்ணோட்டம்

உள்ளூர் பொருளாதாரத்தின் உறுதியின்மையின் காரணமாக அடக்கமான வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு மத்தியில், நாடானது மீளெழும் என்று நாம் சாத்தியமாக உள்ளோம். எமது செயற்பாடுகளை மேலும் டிஜிட்டல்மயமாக்குவதன் மூலம் மற்றும் எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் ஒரு சிறந்த சேவையினை வழங்குவதற்கு எண்ணியுள்ளதுடன் இந்த கடினமான நேரங்களில் அடிமட்டத்திலுள்ள மக்களது வாழ்வாதாரங்களை தரமுயர்த்துவதற்காக எம்மை அணுகுவதனை விரிவாக்குவதற்கும் ஆகும்.

## 2021/22 இலான அபிவிருத்திகள்

கடந்த வருடத்தில் அமுலுக்கு வந்த மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கான தடையின் தொடர்ச்சியின் காரணமாக, PML ஆனது வணிகச் செயற்பாடுகளைத் தொடர்வதற்காக அதன் மைய வணிகத்திலிருந்து பதிவுசெய்யப்பட்ட சந்தை நோக்கி நகர்ந்தது. கடந்த வருடத்தில் பதிவுசெய்யப்பட்ட நாலடுக்கு முச்சக்கர வண்டிகள், மற்றும் பல்வேறு கருவிகள் மற்றும் உபகரணங்களுக்கான கடனை அறிமுகப்படுத்தியிதுடன், பதிவுசெய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களது அறிமுகத்தின் மூலம் இந்தக் கருவியானது மேலும் விரிவாக்கப்பட்டது. PML இவ்வருடத்தில் பதிவுசெய்யப்பட்ட முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டர் சைக்கிள்களுக்கான வசதிகளில் மெச்சத்தக்க செயற்திறனை பதிவுசெய்தது.

**அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கருவிகள்**

- பதிவுசெய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள்
- நுண் கடன்கள்

பல வருடங்களாக வாடிக்கையாளர்களுடன் நாம் திடமான உறவுகளை கட்டியெழுப்பியுள்ளதுடன் இது எம்மை அவர்களது தேவைகளை இனங்கண்டு அதற்கமைய சேவையாற்ற அனுமதித்துள்ளது. இவ்வருடத்தில், நாம் புதிய நுண்கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியதனூடாக நாம் நுண்கடன்களாக ரூ. 15 மில்லியனை வழங்கியுள்ளோம்.

தொற்றின் பின்னர் அமுலுக்குவந்த சமூக இடைவெளி வழிமுறைகளின் காரணமாக வீட்டிலிருந்து பணிபுரிதல் மற்றும் இ-பயிலுதல் என்பவற்றுக்கான மாற்றலுடன், மடிக்கணினிகளுக்கான ஒரு அதிகரித்த கேள்வியினை நாம் அவதானித்தோம். ஒரு வாய்ப்பினை இனங்கண்டதன் பின்னர், நாம் துறையில் காணப்படும் மூன்று பாரிய மடிக்கணினி விற்பனையாளர்களுடன் கூட்டுசேர்ந்து கடந்த வருடத்தில் மடிக்கணினி கடன் கருவியினை அறிமுகப்படுத்தினோம். சிறிய முயற்சியாளர்களுக்கு விவசாய உபகரணங்கள் மற்றும் ஏனைய இயந்திரங்களுக்காக உபகரணக் கடன்களையும் வழங்குகின்றோம்.

சமூக ரீதியாக ஒரு பொறுப்புள்ள கம்பனியாக PML தொற்றின் நீண்டகாலப் பகுதியில் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியினை வழங்கியது. இது அவ்வாறு செய்யுமாறு அதிகாரிகளினால் கட்டுப்படுத்தப்படாத போதிலும் இடம்பெற்றது. இதற்கமைய, கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதிகள் 2,358 வாடகைக் கொள்வனவு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

நாம் நாடு பூராவும் பரந்துள்ள பீபள்ஸ் லீசிங்கின் 32 கிளைகளுடன் செயற்படுவதுடன், இரண்டு தனித்துநிற்கும் கிளைகள் உள்ளடங்கலாக, இது இந்த போட்டியான துறையினுள் எமது நிதியியல் பலத்திற்கான ஓர் சான்றாகும். இவ்வருடத்தில் சூழல் நிலைபேறுதலை ஊக்குவிப்பதற்காக துண்டுபிரசுரங்கள் உள்ளடங்கலான தாள் அடிப்படையிலான சந்தைப்படுத்தல் முன்னெடுப்புகள் மட்டுப்படுத்தப்பட்டன. நாம் எமது வாடிக்கையாளர்களிடையே கருவிகளின் விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்காக வீடு வீடாக விளம்பரப் பிரச்சாரங்கள் மற்றும் சமூக ஊடக சந்தைப்படுத்தல்களில் முன்னிறுத்தம் செய்தோம்.

## செயற்திறன்

நாட்டில் காணப்பட்ட சவால்மிக்க செயற்பாட்டு சூழலுக்கு மத்தியில் இப்பிரிவானது 2021/22 ஆண்டிற்கு பிரிவிற்கான விளைவாக ரூ. 267.17 மில்லியனை பதிவுசெய்தது. தேறிய வாடகைக் கொள்வனவு மற்றும் கடன் தேக்கமான ரூ, 2,885.27 மில்லியன் உள்ளடங்கலாக இப்பிரிவின் மொத்த சொத்துக்கள் ரூ. 3,070.80 மில்லியன் ஆகும்.

2021 ஆம் ஆண்டின் அனேகமான பகுதியில் காணப்பட்ட குறைவான வட்டி வீத சூழலானது விடுமிகைகளை சாத்தியமாக பாதித்தது. எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைகளின் திருத்தத்துடன் கொள்கை வட்டி வீதங்கள் அதிகளவில் அதிகரிக்கப்பட்டதுடன் கடந்த சில மாதங்களாக விடுமிகைகளை எதிர்மறையாக பாதித்தது.

செயல்முறை அபிவிருத்திகளூடாக மற்றும் இலாபகரத்தன்மையினை அடைவதற்காக விரயத்தினை குறைப்பதன் மூலம் செலவினங்களது சீரமைப்பு மற்றும் ஆக்கத்திற்கான மேம்பாடுகளை இயக்குவதற்காக PML இனால் முன்னிறுத்தமான முயற்சி காணப்பட்டது. பணியாட்களது நலன்களை பாதிக்காது இதனை நாம் வினைத்திறனுடன் மேற்கொள்ளக் கூடியதாயிருந்தது.

தொற்றுடன் சேர்ந்து, நாம் எமது முன்னிறுத்தத்தினை கடன் பகிர்ந்தளிப்பிலிருந்து மீட்டல்களுக்கு மாற்றினோம். தனிநபர் மற்றும் வணிக அலகுகளுக்கான ஒரு வினைத்திறனான மீட்டல் இலக்கினை நாம் நிறுவியுள்ளதுடன், வருட இறுதியில் துறையின் சராசரியிலும் பார்க்க மிகக் குறைவான 4.66% இல் செயற்திறனற்ற சொத்துக்கள் வீதத்தினை பராமரிப்பதற்கு அனுமதியளித்தது.

வட்டி வருமானமும் பிரிவின் விளைவும்




கடன்கள் மற்றும் முற்பணங்கள்



# குழும வணிக மீளாய்வு

## ஏனைய வணிகப் பிரிவுகள்

இப்பிரிவானது பீபள்ஸ் லீசிங் ஃபிலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட், பிபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட் ஆகிய எமது துணைக்கம்பனிகளின் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது. இந்த கம்பனிகள் இவ்வருடத்தில் காணப்பட்ட இயக்காற்றல் மாற்றங்களுக்கு தங்களது செயற்பாடுகளை பொருத்தமாக்கியதுடன் இதன் விளைவாக விளைவுகள் மற்றும் திரவத்தன்மை மேம்பட்டதுடன் இவை இறுதியாக எமது இலாபத்தின் வளர்ச்சிக்கு துணைபுரிந்தன.

**பீபள்ஸ் லீசிங் ஃபிலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்**
வாகனத்தொகுதி முகாமைத்துவம், வாகன பெறுமதியிடல், வாகனங்களது விற்பனை, காப்புறுதி மதிப்பீடுகள் மற்றும் வாகன திருத்தம்.

**பிபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட்**
கலந்த அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் ஆதன முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

**பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட்**
ஒரு காரியாலய வளாகத்தினை செயற்படுத்துகின்றது.

### பீபள்ஸ் லீசிங் ஃபிலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்

**செயற்திறன்**
கடந்த வருடத்தில் கம்பனி அதன் செயற்பாடுகளை உச்சநிலைப்படுத்தும் ஒரு மூலோபாயத் தீர்மானத்தினை எடுத்ததுடன், இது தற்போது நிலவும் வணிக வாய்ப்புக்களுக்கு பொருத்தமானதாகவும் மற்றும் திரவத்தன்மை மற்றும் இலாபகரத்தன்மையினை மேம்படுத்துவதற்குமாகும். 2021/22 இல் காணப்பட்ட மோட்டார் வாகனங்களது இறக்குமதிக்கான தொடர்ச்சியான தடையானது வாகன வாடகை வணிகத்திற்கு மூலோபாயமாக பன்முகப்படுத்துவதற்கு தூண்டியதுடன் இது கணிசமானளவு இலாபத்தினை உருவாக்கியது. கடுமையான செயற்பாட்டு நிலைமைகளின் மத்தியில், இந்த நிகழ்வுகள் கம்பனியினை வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 152.37 மில்லியனை பதிவுசெய்வதற்கு இட்டுச்சென்றதுடன் இது அதன் பதினான்கு வருட வரலாற்றில் அடையப்பெற்ற உயர்ந்த இலாபமாகும்.

இவ்வாண்டில், எமது மூலோபாய முன்னிறுத்தம் வாகன மதிப்பிடல் வணிகத்திற்கு நகர்ந்தது. அடக்கமான பொருளாதார நடவடிக்கையின் காரணமாக கேள்வி வீழ்ச்சியடைந்து வருவாயானது 13.73% ஆக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், ஏனைய வருமானமானது, வாகனங்களின் விற்பனையின் காரணமாக, 2020/21 இல் காணப்பட்ட ரூ. 52.72 மில்லியனிலிருந்து 2021/22 இல் ரூ. 174.06 மில்லியன் ஆக அதிகரித்தது. எமது செயற்பாட்டு செலவினங்களிலான இறுக்கமான கட்டுப்பாடுகள் இவ்வருடத்தில் செயற்பாட்டு இலாபம் 325.50% ஆல் அதிகரிப்பதற்கு துணைபுரிந்தது. கம்பனி நிதி வருமானத்தில் காணப்பட்ட சாதகமான 818.89% வளர்ச்சியுடன் வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 200.28 மில்லியனை பதிவுசெய்தது.

இவ்வருடத்தில் வணிகத்தின் திரவத்தன்மை மற்றும் ஸ்திரத்தன்மை என்பன வினைத்திறனாக முகாமைப்படுத்தப்பட்டன. நடைமுறை விகிதமானது 4.35 மடங்கிலிருந்து 8.13 மடங்காக உயர்வடைந்ததுடன் உரித்துவத்திற்கான கடன் விகிதமானது 10.84 மடங்கிலிருந்து பூச்சிய கடன் நிலைமைக்கு நகர்ந்தது. மீளாய்வாண்டில், தேறிய சொத்துக்கள் 15.59% வளர்ச்சியுடன் ரூ. 385.56 மில்லியனை பதிவுசெய்தது.

**இவ்வாண்டிலான ஏனைய அபிவிருத்திகள்**

- கம்பனியானது உயர் தரத்திலான, துல்லியமான மற்றும் விரைவான சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் முன்னிறுத்தல் செய்துள்ளது.
- மேற்குறிப்பிட்டவற்றை விநியோகிப்பதிலான நெரிசல்கள் இனங்காணப்பட்டு பொருத்தமானவாறு விளித்துரைக்கப்பட்டன.
- உயர்தரத்திலான நெறிமுறைகளுடன் இணக்கப்பாடு மற்றும் துறையின் ஒருமிப்பினை பராமரித்தல்
- தாய் நிறுவனத்தின் சூழல் கொள்கையுடனான இணக்கப்பாடு
- பிஎல்சி இயங்கலை வணிக மேடையுடனான ஈடுபாட்டின் காத்திருப்புக் காலத்தினை குறைத்தல்

**கண்ணோட்டம்**
இறக்குமதி கட்டுப்பாடுகளின் நிமித்தம் வாகனங்களின் விலைகள் கணிசமாக உயர்வடைந்துள்ளதனால், இது கம்பனியினால் வழங்கப்படும் பெறுமதியிடல்களில் பிரதிபலிக்கின்றது. வினைத்திறனை அதிகரிப்பதற்காக செயறபாடுகளை சீராக்கும் அதேவேளை நாம் எமது பெறுமதியிடல் வணிகத்தினை மேலும் விரிவாக்குவதற்கு முனைகின்றோம்.

**செயற்திறன் சிறப்பம்சங்கள் 2021/22**

வருவாய்
ரூ. **166.46** மில்லியன்
(2020/21 - ரூ. 192.95 மில்லியன்)

PBIT
ரூ. **203.22** மிலலியன்
(2020/21 - ரூ. 57.92 மில்லியன்)

PBT
ரூ. **200.28** மில்லியன்
(2020/21 - ரூ. 56.08 மில்லியன்)

PAT
ரூ. **152.99** மில்லியன்
(2020/21 - ரூ. 46.05 மில்லியன்)

சொத்துக்கள்
ரூ. **444.79** மில்லியன்
(2020/21 - ரூ. 443.77 மில்லியன்)

பொறுப்புக்கள்
ரூ. **59.24** மில்லியன்
(2020/21 - ரூ. 110.75 மில்லியன்)

ROE
**39.52%**
(2020/21 - 13.82%)

*மூசெயற்திறன் சிறப்பம்சங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள வருவாய் எண்களில் வாகன விற்பனை இலாபம் உள்ளடக்கப்படவில்லை ஆனால் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

## பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட்

கடந்த வருடத்தில் கட்டுமானத் துறையின் சுருக்கத்தினைத் தொடர்ந்து இத்துறையானது இவ்வருடத்தில் ஒரு மீட்பினைக் கண்டதுடன் இது புதிய விதங்களிலான பணிபுரிதல் மற்றும் அசைதல் கட்டுப்பாடுகளின் தளர்த்தலினால் துணையளிக்கப்பட்டன. எவ்வாறாயினும், இத்துறைக்கு சவால்கள் தொடர்ந்தும் தடங்கலாகக் காணப்பட்டதுடன் விடுமிகைகள் அழுத்தத்தின் கீழ் வந்தன.

**செயற்திறன்**

இவ்வாண்டில், கம்பனியானது அதன் நிதிச் செயற்திறனை மேம்படுத்துவதில் பிரதானமாக முன்னிறுத்தும் மேற்கொண்டதுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் வட்டி வீதங்கள் கூர்மையாக உயர்வடைந்ததன் காரணமாக கடன்பெறுகைகளின் மட்டங்களை நாம் குறைத்தோம். முதலீட்டு ஆதனங்களிலான நியாயப் பெறுமதி இலாபங்கள் கடந்த ஆண்டில் பதிவுசெய்த ரூ. 50 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூ. 150 மில்லியனாகக் காணப்பட்டது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது கம்பனியினது வரிக்குப் பிந்திய இலாபம் 31.93% ஆக அதிகரித்து ரூ. 240.76 மில்லியன் பதிவுசெய்யப்பட்டது. இவ்வருடத்தில் மொத்த சொத்துக்களும் ரூ 141 மில்லியனால் அதிகரித்து ரூ. 2,738.09 மில்லியனாகக் காணப்பட்டது. உரித்துவத்திற்கான கடன் விகிதமானது கடந்த வருடத்தில் காணப்பட்ட .0.38 மடங்கிலிருந்து 0.32 மடங்காகக் குறைவடைந்த வேளை நடைமுறை விகிதமானது 3.01 மடங்கிலிருந்த நிதியாண்டின் இறுதியில் 1.38 மடங்காகக் குறைவடைந்தது.

தாய் நிறுவனத்தின் பல்லுயிரியம் மற்றும் சூழல் கொள்கைக்கேற்ப வலுசக்தி சேமிப்பு முன்னெடுப்புகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை கம்பனி எடுத்தது.

**கண்ணோட்டம்**

இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்கான அந்நிய செலாவணியின் கிடைக்காமையின் காரணமாக மூலப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உயர்வடையும் வட்டிச் செலவினம் என்பன முன்னோக்கிச் செல்லும்போது ஒரு முக்கிய அக்கறையாகும். மக்களின் குறைவான செலவழிக்கக்கூடிய வருமானமும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை மந்தமாக்கியுள்ளது.

**செயற்திறன் சிறப்பம்சங்கள் 2021/22**

வருவாய்
ரூ. **278.14** மில்லியன்
(2020/21 - ரூ. 282.26 மில்லியன்)

PBT
ரூ. **304.28** மில்லியன்
(2020/21 - ரூ. 218.03 மில்லியன்)

PAT
ரூ. **240.76** மில்லியன்
(2020/21 - ரூ. 182.50 மில்லியன்)

சொத்துக்கள்
ரூ. **2,738.09** மில்லியன்
(2020/21 - ரூ. 2,596.94 மில்லியன்)

ROE
**13.38%**
(2020/21 - 10.95%)

*செயற்திறன் சிறப்பம்சங்கள் முதலீட்டு ஆதனங்களின் நியாயப் பெறுமதியினை உள்ளடக்கும்வேளை ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக கூற்றுக்களில் இவை உள்ளடக்கப்படவில்லை.

## பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட்

இவ்வருடத்தில் கம்பனியானது வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 102.22 மில்லியனை உருவாக்கியதுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 26.41% அதிகரிப்பாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது கம்பனியின் வருவாயானது அதிகரித்ததுடன், இது வாடகைதாரர்களிடமிருந்து அதிகரித்த வாடகையினை அறவிட்டதன் காரணமாகவும் வெற்றாகக் காணப்பட்ட மொட்டைமாடி இடத்தினை உத்தியோகபூர்வ கூடுதல்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு வாடகைக்கு விடும் எமது தீர்மானத்திலுமாகும். இதற்கு சந்தையில் நல்ல வரவேற்பு காணப்பட்டதுடன் இது இலாபகரத்தன்மைக்கு துணைபுரிந்தது.

வாடிக்கையாளர் திருப்தியினை மேம்படுத்துவதற்காக பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் பணிக்காக எடுக்கும் நேரத்தினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு பொறுப்புமிக்க கூட்டாண்மையாக, குழுமத்தின் பல்லுயிரியம் மற்றும் சூழல் கொள்கைக்கு ஏற்றாற்போல் வலு சக்தியினை சேமிக்கும் முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளோம்.

**கண்ணோட்டம்**

உள்ளூர் பொருளாதார சூழலில் காணப்பட்ட உறுதியின்மையானது எமது வணிகத்தினை பாதிக்கும். எவ்வாறாயினும், நாம் சாத்தியமாக உள்ளதுடன், சந்தை போதுமானளவுக்கு முன்னேற்றமடையும்போது நாம் புதிய வாடகைதாரர்களை தேடுவோம். எமது கடன்பெறுகைகளை மெதுவாக குறைப்பதற்கு முயற்சிப்பதுடன் இதன் மூலம் தளம்பலான சந்தை வட்டி வீதங்களுக்கான எமது வெளிப்பாட்டினை குறைக்கலாம்.

**செயற்திறன் சிறப்பம்சங்கள் 2021/22**

வருவாய்
ரூ. **218.50** மில்லியன்
(2020/21 - ரூ. 205.38 மில்லியன்)

PBIT
ரூ. **199.04** மில்லியன்
(2020/21 - ரூ. 189.84 மில்லியன்)

PBT
ரூ. **102.22** மில்லியன்
(2020/21 - ரூ. 80.87 மில்லியன்)

PAT
ரூ. **102.22** மில்லியன்
(2020/21 - ரூ. 80.87 மில்லியன்)

Assets
ரூ. **2,655.37** மில்லியன்
(2020/21 - ரூ. 2,659.96 மில்லியன்)

ROE
**9.13%**
(2020/21 - 7.82%)

*செயற்திறன் சிறப்பம்சங்கள் முதலீட்டு ஆதனத்தின் நியாயப் பெறுமதியினை உள்ளடக்குவதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் அவற்றை உள்ளடக்கவில்லை.




பீபள்ஸ் லீசிங் உறுதியற்ற மற்றும் குழப்பமான ஒரு ஆண்டினைக் கடந்து சென்று உயர்ந்த வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ. 4,659.01 மில்லியன் பதிவுசெய்ததுடன் இது அதன் கட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியினையும் வட்டிவீத இடர் மற்றும் கடன் இடர் ஆகியவற்றின் முகாமைப்படுத்தலையும் பிரதிபலிக்கின்றது. குழுமத்தின் வரிக்குப் பிந்திய இலாபமானது 13.90% ஆல் வீழ்ச்சியடைந்து ரூ. 4,818.17 மில்லியனாகக் காணப்பட்டது. இது பீபள்ஸ் இன்சூரன்ஸ் குறைவான தேறிய உழைத்த தவணைப்பணங்களையும் கணிசமானளவு அதிகரித்த கோரல்களையும் பதிவுசெய்ததினாலாகும். இது வாடிக்கையாளர்களது பொருளாதார மீட்டலுக்கு துணைபுரிவதற்காக ரூ.1268.79 மில்லியன் தவறுதல் வட்டியினை தள்ளுபடி செய்ததற்கு மத்தியில் அடையப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நிதியியல் மூலதனத்தினை வளர்த்தல் 2021/22**




**நி.அ.இ. க்கான பங்களிப்பு**



| தொடர்புடைய பங்காளிகள் | மூலோபாயக் கட்டாயமானவைகள் | இடர்கள் |
|---|---|---|
|  | • நிலைபேறுள்ள வளர்ச்சியினைத் தொடருதல்<br>• வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துதல் | • கடன் இடர்<br>• வட்டி வீத இடர்<br>• திரவத்தன்மை இடர் |

## 2021/22 இலக்குகளில் அடையப்பெற்ற முன்னேற்றங்கள்

| | | |
|---|---|---|
| 15% இற்கும் மேலான சொத்து வளர்ச்சியினை அடைவதற்கு | | மூன்றாம் அலையிலிருந்து எழுந்த எதிர்பாராத சவால்கள் மற்றும் பாதகமான உலகளாவிய மற்றும் உள்ளூர் பொருளாதார நிலைமைகளின் மத்தியில் சொத்து வளர்ச்சியாக 9.86% இனை அடைந்தமை. |
| தே.வ.வ. ஆக 6% இனை பராமரித்தல் | | தேறிய வட்டி வருமானம் (தே.வ.வ.) 8.10% இற்கு அதிகரித்தது. |
| வருமானத்திற்கான செலவின வீதத்தினை 40% கீழாக குறைத்தல் | | அசாதாரணமான கடினமான நேரம் காணப்பட்டபோதிலும், வருமானத்திற்கான செலவின விதம் 43.74% ஆக பராமரிக்கப்பட்டது. |

முன்னேற்றச் சாவி

முன்னெடுக்கப்பட்டது · தொடர்கிறது · நிறைவுசெய்யப்பட்டது · அடையவில்லை

| | | | |
|---|---|---|---|
| **ரூ. 151.27 பில்லியன்**<br>கடன்களும் முற்பணங்களும்<br>(வ.அ.நி.நி. துறையின் 12.47% ) ⬆ 6.99% | **ரூ. 180.76 பில்லியன்**<br>மொத்த சொத்துக்கள்<br>(வ.அ.நி.நி. துறையின் 11.37%) ⬆ 9.86% | **ரூ. 103.37 பில்லியன்**<br>வாடிக்கையாளர் வைப்புகள்<br>(வ.அ.நி.நி. துறையின் 12.89%) ⬆ 1.84% | **ரூ. 38.82 பில்லியன்**<br>உரித்துவம்<br>(வ.அ.நி.நி. துறையின் 11.63%) ⬆ 13.04% |
| **72.99%**<br>ஏற்பாடுகளின் காப்பு<br>(வ.அ.நி.நி. துறையின் 69.36% ) ⬆ 2020/21 இல் காணப்பட்ட 64.16% இலிருந்து | **8.78%**<br>மொத்த செயற்திறனற்ற சொத்துக்கள்<br>(வ.அ.நி.நி. துறையின் 9.11%) ⬇ 2020/21 இல் காணப்பட்ட 9.21% இலிருந்து | **18.76%**<br>மைய மூலதனம்<br>(வ.அ.நி.நி. துறையின் 16.15%) ⬆ 2020/21 இல் காணப்பட்ட 17.72% இலிருந்து | **19.67%**<br>மொத்த மூலதன விகிதம்<br>(வ.அ.நி.நி. துறையின் 17.68%) ⬆ 2020/21 இல் காணப்பட்ட 18.58% இலிருந்து |

## அளவிடுதலின் வெற்றி

### தேறிய வட்டி வருமானம் (தே.வ.வ.) - கம்பனி




### கடன்களும் வருமதிகளும் - கம்பனி




### இலாபகரத்தன்மை - கம்பனி



# நிதியியல் மூலதனம்

**கண்ணோட்டம்**

## கம்பனி

பிபள்ஸ் லீசிங் வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 4.66 பில்லியனை பதிவுசெய்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 15.52% அதிகரிப்பாகும் என்பதுடன் இது நாம் ஒரு உறுதியற்ற மற்றும் தளம்பலான சூழலில் ஒரு அவதானமான வளர்ச்சி மூலோபாயத்தினை தொடர்ந்ததினாலாகும். நீண்ட தொற்றின் காரணமாக தொடர்ந்த முடக்கல்கள் மற்றும் வீழ்ச்சியடையும் பொருளாதார நிலைமைகள் என்பன பங்காளிகளது அக்கறைகள் மற்றும் இடர்களை கவனமாக சமநிலைப்படுத்துவதற்கான அவசியமேற்பட்டது. நாம் கடன்கள் மற்றும் முற்பணங்களின் 18.18% கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியுடன் இவ்வாடிண்டினை ஆரம்பித்ததுடன், வாடிக்கையாளர்களை நிதியியல் ஸ்திரத்தன்மைக்கு மீண்டும் கொண்டுவருவதற்கு துணையளித்தல் ஒரு முக்கிய முன்னுரிமையாகும். இவ்வருடத்தில், பலப்படுத்தப்பட்ட மீட்டல் செயல்முறைகளூடாக இந்தத் தொகையினை 9.44% ஆக குறைப்பதற்கு எம்மை இயலுமையாக்கியதுடன், சில வணிகங்கள் வழமைக்கு திரும்பியதனால் எமது கடன் தேக்கங்களின் கடன் தரம் மேம்பட்டதுடன் கம்பனியின் நிதியியல் ஸ்திரத்தன்மையினை பலப்படுத்தக்கூடியதாகவும் இருந்தது.

## குழுமம்

குழுமமானது ஒரு இலாபமாக ரூ. 4.82 பில்லியனை பதிவுசெய்ததுடன், இது முன்னைய ஆண்டிலிருந்து 13.90% வீழ்ச்சியினை பிரதிபலித்தது. பீபள்ஸ் லீசிங் உயர்ந்த இலாபத்தினை பதிவுசெய்தவேளை, குழுமத்தின் உழைப்புகள் எமது பாரிய துணைநிறுவனமாக பீபள்ஸ் இன்சூரன்ஸின் அதிகரித்த கோரல்கள் விகிதத்தினால் பாதிக்கப்பட்டது. பீபள்ஸ் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் மைக்ரோ கொமாஸ் லிமிட்டட் ஆகியனவும் அவற்றின் வரலாற்றில் உயர்ந்த இலாபங்களை பதிவுசெய்தன. ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தொகையானது சொத்துக்கள் மற்றும் உரித்துவம் ஆகிய இரண்டும் 14% ஆல் அதிகரித்ததினால் திடமாக காணப்பட்டதுடன், இதன் காரணமாக அடுக்கு I மற்றும் அடுக்கு II மூலதன விகிதங்களும் முன்னேற்றமடைந்தன.

## நிதியியல் செயற்திறன்

| ரூ. மில்லியன் | கம்பனி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|
| | நிறைவடைந்த வருடத்திற்கானது 31.03.22 | நிறைவடைந்த வருடத்திற்கானது 31.03.21 | மாற்றம் % | நிறைவடைந்த வருடத்திற்கானது 31.03.22 | நிறைவடைந்த வருடத்திற்கானது 31.03.21 | மாற்றம் % |
| தேறிய வட்டி வருமானம் | 13,049.34 | 11,919.14 | 9.48 | 14,722.67 | 13,446.64 | 9.48 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 1,876.52 | 1,818.68 | 3.18 | 1,321.51 | 1,198.05 | 10.30 |
| தேறிய உழைத்த தவணைப்பணம் | | | | 4,939.07 | 5,028.55 | (1.78) |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 956.55 | 139.06 | 587.86 | 357.09 | 368.57 | 3.12 |
| மொத்த செயற்பாட்டு வருமானம் | 15,909.19 | 14,039.49 | 13.32 | 21,425.86 | 20,270.07 | 5.70 |
| வலுக்குன்றல் கட்டணங்கள் | 777.04 | 1,143.05 | (32.02) | 1,073.37 | 1,451.70 | (26.06) |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | 15,132.16 | 12,896.44 | 17.34 | 20,352.49 | 18,818.37 | 8.15 |
| செயற்பாட்டு செலவினங்கள் | 6,836.96 | 5,801.23 | 17.85 | 8,192.89 | 7,050.39 | 16.20 |
| நலன்கள்,கோரல்கள் மற்றும் ஒப்புரவளித்தல் செலவினங்கள் | | | | 3,228.48 | 2,663.35 | 21.22 |
| வரிக்கு முந்திய இலாபம் | 8,295.20 | 7,095.22 | 16.91 | 8,931.13 | 9,104.64 | (1.91) |
| நிதிச் சேவைகளிலான வரிகள் | 1,645.11 | 1,222.63 | 34.56 | 1,705.80 | 1,273.97 | 33.90 |
| வருமான வரிகள் | 1,991.08 | 1,839.57 | 8.24 | 2,407.16 | 2,234.34 | 7.73 |
| இக்காலத்திற்கான இலாபம் | 4,659.01 | 4,033.02 | 15.52 | 4,818.17 | 5,596.33 | (13.90) |

## வணிகப் பிரிவுகள்

வட்டத்தின் பருமனானது பிரிவுகளின் விளைவினை பிரதிபலிக்கின்றது.




திடமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் புத்தகத்துடன் குத்தகையானது இலாபத்திற்கான உயர்ந்த பங்களிப்பவராகவும் அதற்கடுத்தாற்போல் கடன்கள் காணப்பட்டன. ஏனைய பிரிவுகளின் இலாபங்கள் ரூ. 1 பில்லியனுக்கு குறைவானதாகும் என்பதுடன் அதற்கேற்றாற் போன்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் கொண்டிருந்தன.

- குத்தகை — ரூ. 4.25 பில்லியன்
- கடன்கள் — ரூ.. 3.59 பில்லியன்
- காப்புறுதி — ரூ. 0.99 பில்லியன்
- இஸ்லாமிய நிதி — ரூ. 0.35 பில்லியன்
- ஏனையவை — ரூ..Rs. 0.85 பில்லியன்

## தேறிய வட்டி வருமானம்

குழுமம்: ரூ.14,721.67 மில்லியன் ⬆ 9.48%

கம்பனி: ரூ.13,049.34 மில்லியன் ⬆ 9.48%

குழுமத்திற்கான பிரதான வருமான மூலமாக காணப்படுவது தேறிய வட்டி வருமானமாகும் (தே.வ.வ.) என்பதுடன், இது மொத்த செயற்பாட்டு வருமானத்தில் 68.71% இனை கணக்கீடு செய்கின்றது. . 2021/22 இல் தவறுதல் வட்டியான ரூ. 1,268.79 மில்லியன் பீபள்ஸ் லீசிங்கினால் தள்ளுபடி செய்யப்பட்டத்திற்கு மத்தியில் தே.வ.வ 9.48% ஆல் அதிகரித்து ரூ. 14,721.67 மில்லியனாகக் காணப்பட்டது. இது வருடத்தின் பெரும்பகுதியில் வைப்புகளுக்கான சந்தை வட்டி வீதங்கள் குறைவாக காணப்பட்ட வேளை கடன் வளர்ச்சியானது 11.10% மட்டுப்படுத்தப்பட்ட வேளையில் அடையப்பெற்றதாகும். வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவினம் என்பன முறையே 3.34% மற்றும் 16.22% ஆல் வீழ்ச்சியடைந்ததுடன், இதன் விளைவாக முன்னைய ஆண்டில் காணப்பட்ட 7.95% குழுமத்தின் தேறிய வட்டி வருமானமானது 2021/22 இல் 8.22% ஆக மேம்பட்டது. கம்பனியின் தேறிய வட்டி விடுமிகையானது முன்னைய ஆண்டின் 7.58% உடன் ஒப்பிடும்போது 8.10% ஆக முன்னேற்றமடைந்தது.

பிரிவுவாரியான தே.வ.வ. 2021/22

பிரிவுவாரியான தே.வ.வ. 2020/21




குழுமத்தின் தேறிய வட்டி வருமானம்




## வட்டியல்லாத வருமானம்

குழுமம்: ரூ. 6,704.19 மில்லியன் ⬇ (1.75)%

கம்பனி: ரூ. 2,859.85 மில்லியன் ⬆ 34.88%

வட்டியல்லாத வருமானமானது தேறிய உழைத்த தவணைப்பணம், கட்டண மற்றும் தரகு வருமானம், தேறிய வர்த்தக வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றை உள்ளடக்குவதுடன் இதில் தேறிய தவணைப்பண வருமானம் 73.67% ஆகவும் கட்டண மற்றும் தரகு வருமானம் 19.71% ஆகவும் காணப்பட்டன. தேறிய வட்டி வருமானம் வீழ்ச்சியடைந்தபோதிலும், கட்டண மற்றும் தரகு வருமானம் 10.30% ஆல் அதிகரித்தது. தேறிய தவணை வருமானமானது அடக்கப்பட்ட கேள்வியின் காரணமாக 1.78% ஆல் வீழ்ச்சியடைந்தது ரூ. 4,939.07 மில்லியனாக காணப்பட்டது.

பிரிவுவாரியான வட்டியல்லாத வருமானம் 2021/22

பிரிவுவாரியான வட்டியல்லாத வருமானம் 2020/21




வட்டியல்லாத வருமானம்



# நிதியியல் மூலதனம்

## வலுக்குன்றல் கட்டணங்கள்

குழுமம்: ரூ.1,073.37 மில்லியன் ⬇ (26.06)%
கம்பனி: ரூ.777.04 மில்லியன் ⬇ (32.02)%

வலுக்குன்றல் கட்டணங்கள், கடன்கள் மற்றும் வருமதிகள், நன்மதிப்பு மற்றும் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் என்பவற்றிலான வலுக்குன்றல்களை உள்ளடக்குகின்றது. இவ்வருடத்தில் நாம் கடன் செயல்முறைகளை பலப்படுத்தி மீட்டல்களில் முன்னிறுத்தம் மேற்கொண்டதன் காரணமாக இக்கட்டணமாகது 26.06% ஆல் வீழ்ச்சியடைந்து ரூ. 1,073.37 மில்லியனாகக் காணப்பட்டது. ஏற்பாட்டுக் காப்பும் இவ்வருடத்தில் 64.16% இலிருந்து 72.99% ஆக மேம்பட்டதுடன் இது நாம் ஏற்பாடுகளுக்கு கடைப்பிடித்த விவேகமான அணுமுறையினை பிரதிபலிக்கின்றது. பழைய புத்தகங்களின கடன் தரமானது தனியாக மீளாய்வு செய்யப்படுவதுடன் புதிய கடன் சொத்துக்களின் கடன் தரமானது அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய கடன் அங்கீகார செயல்முறைகளினால் பலப்படுத்தப்படுகின்றது. கம்பனியின் செயற்திறனற்ற சொத்துக்கள் 31 மார்ச் 2022 இல் 8.78% இற்கு கட்டுப்படுத்தப்பட்டதுடன் இது துறையின் 9.11% இலும் பார்க்கக் குறைவாகக் காணப்பட்டது. கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் மொத்த வலுக்குன்றலின் 88.67% ஆகக் காணப்பட்டதுடன் எஞ்சியவை நன்மதிப்பாக இருந்தது.

கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல்




## தேறிய செயற்பாட்டு வருமானம்

குழுமம்: ரூ. 20,352.49 மில்லியன் ⬆ 8.15%
கம்பனி: ரூ.15,132.16 மில்லியன் ⬆ 17.34%

தேறிய செயற்பாட்டு வருமானமானது, இவ்வருடத்தில் தேறிய வட்டி வருமான வளர்ச்சி மற்றும் கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான குறைவான வலுக்குன்றல் கட்டணங்களினால் துணையளிக்கப்பட்டு, வளர்ச்சியடைந்தது. ஏனை வணிகப் பிரிவானது 116.78% அதிகரிப்பினை பதிவுசெய்ததுடன், இப்பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ள பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் மற்றும் பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் ஆகிவற்றின் திடமான செயற்திறனை பிரதிபலிக்கின்றது. கடன் வணிகப் பிரிவும், தேறிய வட்டி வருமானத்திலான வளர்ச்சி மற்றும் ஒரு மெச்சத்தக்க வலுக்குன்றல் கட்டணங்களின் வீழ்ச்சியான 71.96% இனால் துணையளிக்கப்பட்டு, ஒரு அதிகரிப்பான 31.29% பதிவுசெய்தது. குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு வணிகங்களில் தேறிய செயற்பாட்டு வருமானமானது 0.64% ஆல் அதிகரித்ததுடன் இது தேறிய வட்டி வருமானத்திலான 1.93% வீழ்ச்சி மற்றும் கடன் நட்ட செலவினங்களிலான 17.14% அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். இஸ்லாமிய நிதியளித்தல் வணிகத்தின் தேறிய வட்டி வருமானத்திலான சிறிய வளர்ச்சியானது குறைந்த கடன் நட்ட திரும்பல்களினால் ஈடுசெய்யப்பட்டது. காப்புறுதிப் பிரிவும் குறைவான தேறிய வட்டி வருமானம் மற்றும் தேறிய உழைத்த தவணைப்பணங்களின் காரணமாக சிறிய வீழ்ச்சியான 1.51% ஆல் வீழ்ச்சியடைந்தது.

பிரிவுவாரியான தேறிய செயற்பாட்டு வருமானம் 2021/22




பிரிவுவாரியான தேறிய செயற்பாட்டு வருமானம் 2020/21




குத்தகை
கடன்கள்
இஸ்லாமிய
காப்புறுதி
ஏனையவை

தேறிய செயற்பாட்டு வருமானம் - குழுமம்



### செயற்பாட்டு செலவினங்கள்

குழுமம்: ரூ. 11,421.37 மில்லியன் ⬆ 17.58%
கம்பனி: ரூ. 6,836.95 மில்லியன் ⬆ 17.85%

குழுமத்தின் செயற்பாட்டு செலவினங்களிலான அதிகரிப்பானது, ஏனைய செயற்பாட்டு செலவினங்கள், நலன்கள், கோரல்கள் மற்றும் ஒப்புரவளித்தல் செலவினங்கள் மற்றும் ஆளணிச் செலவினங்கள் ஆகியவற்றிலான அதிகரிப்பினால் இயக்கப்பட்டது. குழுமத்தின் ஏனைய செயற்பாட்டு செலவினங்களிலான அதிகரிப்பானது பிரதானமாக அலுவலக நிர்வாக மற்றும் நிறுவனச் செலவினங்களினால் அதிகரிக்கப்பட்டதுடன் இவ்வருடத்தில் காணப்பட்ட அதிகரித்த நகர்திறனானது குழுமத்தின் காப்புறுதிப் பிரிவின் அதிகரித்த நலன்கள், கோரல்கள் மற்றும் ஒப்புரவளித்தல் செலவினங்களினால் ஏற்பட்டதாகும். கம்பனியின் செயற்பாட்டுச் செலவினங்களும், ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் மற்றும் ஆளணிச்செலவினங்களின் அதிகரிப்பினால் 17.85% ஆல் அதிகரித்தது.

கம்பனியின் வருமானத்திற்கான கிரய விகிதமானது 42.97% ஆல் (2020/21: 41.32%) ஆல் அதிகரித்ததுடன் இது கம்பனி நிலுவையாகக் காணப்பட்ட சம்பள அதிகரிப்புகளை நிறைவேற்றியமையினால் ஆளணிச் செலவினங்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் 32.34% ஆல் அதிகரித்தன. இந்த அதிகரிப்புகள் இவ்வருடத்தின் தேறிய வட்டி வருமானம் மற்றும் கட்டண மற்றும் தரகு வருமானத்தினை விஞ்சியதுடன் இதன் காரணமாக அதிகரித்த வருமானத்திற்கான கிரய விகிதமாகும்.

செயற்பாட்டு செலவினங்கள்




### நிதிச் சேவைகளிலான வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்

குழுமம்: ரூ.8,931.13 மில்லியன் ⬆ 1.91%
கம்பனி: ரூ.8,295.20 மில்லியன் ⬆ 16.91%

கம்பனியின் செயற்பாட்டு இலாபமானது தேறிய செயற்பாட்டு வருமானத்திலான அதிகரிப்பு மற்றும் செயற்பாட்டு செலவினங்களிலான மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியின் காரணமாக அதிகரித்தது. இவ்வருடத்தில் அசைதிறன் வழக்கத்திற்கு திரும்பியமையின் காரணமாக உயர்ந்த எண்ணிக்கையிலான விபத்துக்கள் மற்றும் கோரல்களினால் குழுமத்தின் செயற்பாட்டு இலாபமானது உயர்ந்த நலன்கள், கோரல்கள் மற்றும் ஒப்புரவளித்தல் செலவினங்களினால் பாதிக்கப்பட்டது.

பின்வரும் கம்பனிகள் 2021/22 இல் வரலாற்றில் அவற்றின் உயர்ந்த இலாபத்தினை பதிவுசெய்தன:

- பீபள் லீசிங் அன் வைனான்ஸ் பிஎல்சீ
- பிபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
- பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட்

பிரிவுவாரியான விளைவுகள்




### வரிவிதிப்பு

| ரூ.மில்லியன் | நிதிச் சேவைகளிலான வரி | வருமான வரி | மொத்த வரிவிதிப்பு |
|---|---|---|---|
| குழுமம் | 1,705.80 ⬆ 33.90% | 2,407.16 ⬆ 7.73% | 4,112.96 ⬆ 17.24% |
| கம்பனி | 1,645.11 ⬆ 34.56% | 1,991.08 ⬆ 8.24% | 3,636.19 ⬆ 18.74% |

நிதிச் சேவைகளிலான வரிகள், நிதிச் சேவைகளிலான பெறுமதி சேர்த்தல் வரியினை உள்ளடக்குவதுடன் இது மீளாய்வு நிதியாண்டில் 15% இலிருந்து 18% ஆக அதிகரிக்கப்பட்டது.

மேம்பட்ட இலாபகரத்தன்மைக்கு ஏற்ப கம்பனியின் வருவமான வரிச் செலவினமானது இவ்வருடத்தில் அதிகரித்தது.

2021/22 காலப்பகுதிக்கான குழுமத்தின் மொத்த வரிவிதிப்பானது மொத்த செயற்பாட்டு வருமானத்தின் 19.20% ஆகும் என்பதுடன் இது கடந்த வருடத்தில் 17.31% ஆக காணப்பட்டது. கம்பனியின் மொத்த வரிவிதிப்பானது 2021/22 இல் 22.86% ஆக காணப்பட்டதுடன் இது கடந்த வருடத்தில் 21.81% ஆக இருந்தது.

வரிவிதிப்பு - குழுமம்



# நிதியியல் மூலதனம்

GRI 207-1

### வரிக்கு பிந்திய இலாபம்

குழுமம்: ரூ. 4,818.17 மில்லியன் ⬇ 13.90%
கம்பனி: ரூ. 4,659.01 மில்லியன் ⬆ 15.52%

கம்பனியானது, தேறிய வட்டி வருமானத்திலான அதிகரிப்பு, குறைவடைந்த வலுக்குன்றல்கள் மற்றும் முகாமைப்படுத்தப்பட்ட செயற்பாட்டு செலவினங்கள் என்பவற்றால் துணையளிக்கப்பட்டு அதியுயர்ந்த இலாபத்தினைப் பெற்றது. குழுமத்தின் வரிக்கு பிந்திய இலாபமானது வீழ்ச்சியடைந்தவேளை, பீபள்ஸ் இன்சூரன்ஸின் குறைவான தேறிய உழைத்த தவணைப்பணம், உயர்ந்த நலன்கள், கோரல்கள் மற்றும் ஒப்புரவளித்தல் செலவினங்கள் என்பன விலீட் மெனேஜ்மன்ட் மற்றும் மைக்ரோ நிதியளித்தல் துணைநிறுவனங்களின் மேம்பட்ட செயற்திறனை மறைத்தது.

குழுமத்தின் PAT




கம்பனியின் PAT




### வளர்ச்சியும் மீளெழுச்சியும்

குழுமத்தின் ஐந்தொகையானது அதன் நிதியியல் மீளெழுச்சியினை பிரதிபலிப்பதுடன், அது இவ்வருடத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அவதானமான வளர்ச்சி மூலோபாயங்களின் காரணமாக முன்னேற்றமடைந்தது. மூலதனப் போதுமை, திரவத்தன்மை மற்றும் சொத்தின் தரம் என்பன பீபள்ஸ் லீசிங்கின் முக்கிய முன்னுரிமைகள் என்பதுடன் கீழ்காணும் விளைவுகள் துறையுடன் ஒப்பிடும்போது எமது முகாமைப்படுத்தலை பிரதிபலிக்கின்றது.

| மூலதனப் போதுமை விகிதங்கள் | கம்பனி | | துறை | |
|---|---|---|---|---|
| | 2021/22 | 2020/21 | 2021/22 | 2020/21 |
| அடுக்கு 1 மூலதனம் /மைய மூலதன விகிதம் (%) | 18.76 | 17.72 | 16.15 | 14.17 |
| மொத்த மூலதன விகிதம் / மொத்த இடர் நிறையிடப்பட்ட மூலதன விகிதம் (%) | 19.67 | 18.58 | 17.68 | 15.44 |
| திரவச் சொத்து விகிதம் (%) | 148.91 | 194.90 | 57.67 | 36.29 |

| சொத்துத் தர விகிதங்கள் | கம்பனி | | துறை | |
|---|---|---|---|---|
| | 2021/22 | 2020/21 | 2021/22 | 2020/21 |
| மொத்த செயற்திறனற்ற கடன்கள் விகிதம் (%) | 8.78 | 9.21 | 9.11 | 11.29 |
| தேறிய செயற்திறனற்ற கடன்கள் (%) | 1.06 | 1.92 | 1.90 | 2.81 |
| மொத்த சொத்துக்களுக்கு மொத்த தேறிய கடன்கள் (%) | 83.69 | 85.93 | 76.29 | 76.26 |
| ஏற்பாட்டுக் காப்பு விகிதம் (%) | 72.99 | 63.53 | 69.36 | 64.21 |

### மொத்த சொத்துக்கள்

குழுமம்: ரூ.206,938.32 மில்லியன் ⬆ 14.15%
கம்பனி: ரூ.180,764.58 மில்லியன் ⬆ 9.86%

கடன்களும் முற்பணங்களும் கம்பனியின் மொத்த சொத்துக்களின் 83.69% இனையும் குழுமத்தின் மொத்த சொத்துக்களில் 78.92% இனையும் கணக்கீடு செய்ததுடன் இவற்றிலான இவ்வருடத்தின் விவேகமாக கடன் வளர்ச்சியானது முறையே 6.99% ஆகவும் 11.10% ஆகவும் காணப்பட்டன. குழும மட்டத்தில், காசும் வங்கிகளிடமுள்ள மீதிகளும் முறையே 40.52% மற்றும் 15.77% ஆக அதிகரித்ததுடன், இவை அதிகரித்த திரவத்தன்மையினை பிரதிபலிக்கின்றன. கம்பனி மட்டத்தில், காசும் காசுக்குச் சமனானவைகளும் 72.73% ஆல் அதிகரித்து ரூ. 4,668.83 மில்லியனாகக் காணப்பட்டன. செயற்பாட்டு சூழலில் காணப்பட்ட உறுதியின்மைகளினால் குழுமத்திலுள்ள அனைத்து நிறுவனங்களும் தெரிவான வளர்ச்சி மூலோபாயங்களை கடைப்பிடித்ததுடன், வினைத்திறன்கள் மற்றும் மீட்டல்களினூடாக குறுங்காலத்தில் பெறுமதியினை திறப்பதற்கு தெரிவுசெய்துள்ளதுடன் இது அறிக்கையிடப்படும் ஆண்டிற்கு ஒரு மெச்சத்தக்க செயற்திறனை வழங்குவதற்கு சேவையாற்றியுள்ளது.

கம்பனியின் மொத்த சொத்துக்கள்




குழுமத்தின் மொத்த சொத்துக்கள்



## மொத்த பொறுப்புக்கள்

குழுமம்: ரூ. 159,962.51 மில்லியன் ⬆ 14.12%
கம்பனி: ரூ. 141,946.27 மில்லியன் ⬆ 9.02%

நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் பொறுப்பாக வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை காணப்படுவதுடன், இது கம்பனியின் மற்றும் குழுமத்தின் மொத்த பொறுப்புக்களில் முறையே 72.82% மற்றும் 69.67% இனை கணக்கீடு செய்கின்றன. கடன் வளர்ச்சிக்கான எச்சரிக்கையான அணுகுமுறையின் காரணமாக போதுமான திரவத்தன்மை காணப்பட்டதனால் வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகளில் ஒரு சிறிய அதிகரிப்பான 1.84% காணப்பட்டது. குழும மட்டத்தில், இந்த வளர்ச்சியானது 7.43% ஆக காணப்பட்டதுடன் இது செயற்பாடுகளின் வளர்ச்சியினை பிரதிபலிக்கின்றது.

கம்பனியின் மற்றும் குழும மட்டங்களில் ஏனைய பொறுப்புக்கள் முறையே 34.41% மற்றும் 33.71% இனால் அதிகரித்து ரூ.38,578.36 மில்லியன் மற்றும் ரூ. 48,508.76 மில்லியனாகக் காணப்பட்டன. வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகளும் கடன் பிணையங்களது வழங்கல்களும் முறையே 69.93% மற்றும் 24.98% இனால் அதிகரித்ததுடன் குழுமமானது இவ்வருடத்தில் அதன் வணிகத்திற்கு பிரதானமாக வைப்புகளூடாக நிதியளித்தது.

குழுமத்தின் மொத்த பொறுப்புக்கள்




கம்பனியின் மொத்த பொறுப்புக்கள்




## உரித்துவம்

குழுமம்: ரூ. 46,975.80 மில்லியன் ⬆ 14.24%
கம்பனி: ரூ. 38,818.31 மில்லியன் ⬆ 13.04%

2020/21 இற்கான இறுதிப் பங்கிலாபமான ரூ. 1,278.45 மில்லியனும் 2021/22 இற்கான இடைக்கால பங்கிலாபமான ரூ. 901.47 மில்லியனும் பத்திரப் பங்கிலாபங்களாகக் காணப்பட்டதுடன், இது மைய மூலதனத்தினைப் பலப்படுத்தியது. கம்பனி மற்றும் குழுமத்திற்கான சட்டரீதியான ஒதுக்கங்கள் முறையே 9.68% மற்றும் 10.73% இனால் அதிகரித்தன. கம்பனியின் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் 13.53% ஆல் அதிகரித்து ரூ. 19,481.61 மில்லியனாகவும் குழுமத்தின் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் 11.80% ஆல் அதிகரித்து ரூ. 23,122.85 மில்லியன் ஆகவும் காணப்பட்டன.

குழுமத்தின் உரித்துவம்




கம்பனியின் உரித்துவம்




## காசுப் பாய்ச்சல்கள்

குழுமமானது காசும் காசுக்குச் சமனானவற்றில் ஒரு தேறிய அதிகரிப்பினை அறிக்கையிட்டதுடன் இது கடந்த வருடத்தில் காணப்பட்ட ரூ. 4,045.26 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூ. 1,124.27 மில்லியனாகக் காணப்பட்டது. இது கடந்த வருடத்தில் நிதியளித்தல் செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசான ரூ. 6,154.69 மில்லியனிலாகும். முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு முறையே ரூ. 188.69 மில்லியன் மற்றும் ரூ. 4,841.74 மில்லியன் ஆகும்.



# நிதியியல் மூலதனம்

### கம்னியின் செயற்திறன் எதிர் துறை

கடந்த மூன்று ஆண்டுகளில் காணப்பட்ட உறுதியற்ற நிலைமைகளுக்கு மத்தியில் பீபள்ஸ் லீசிங் ஆனது திரவத்தன்மை, சொத்தின் தரம் ஆகியவற்றில் வர்த்தகம் செய்ததுடன் மற்றும் வளர்ச்சி மற்றும் இலாபகரத்தன்மைக்கு பணியாட்கள் மற்றும் வாடிக்கையாளர்களை வளர்த்தது. இதன் விளைவாக, கம்பனியின் சொத்துக்களிலான விளைவு மற்றும் உரித்துவத்திலான விளைவு ஆகியவை துறையுடன் பார்க்கும்போது குறைவாக காணப்பட்டபோதிலும், இது நாம் எமது நிதியியல் மீளெழுச்சியினை பலப்படுத்துவதனை தெரிவுசெய்ததுடன், சரியான நேரத்தில் வளர்ச்சிக்காக எம்மை நிலைப்படுத்தியுள்ளோம். தவறுதல் வட்டியின் தள்ளுபடியும் ஆளணிச் செலவுகளிலான அதிகரிப்பும் நீண்டகால உறவுகளை நீடிப்பதற்கு அவசியமானதென்பதுடன் இது எமது வெற்றிக்கு அடிக்கோலிடுவதுடன் இவை நீண்டகாலத்தில் நிலைபேறுள்ள வளர்ச்சிக்கும் கடன் தரத்தினை பராமரிப்பதற்கும் துணைபுரியும்.




### திரவத்தன்மை நிலைமை

கோவிட்-19 தொற்றின் விளைவாக காணப்பட்ட பொருளாதார மந்தநிலைமையின் காரணமாக கடனின் மெதுவான வளர்ச்சிக்கும் மேலாக இ.ம.வ. வ.அ.நி.நி. க்கான திரவச் சொத்துத் தேவைப்பாட்டினை தளர்த்தியதுடன், எமது திரவத்தன்மை நிலைமையானது முறைமைப்படுத்தல் ஆகக்குறைந்த மட்டங்களிலும் பார்க்க அதிகமாகக் காணப்பட்டது. பீபள்ஸ் லீசிங்கில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையானது, இப்பண்பானது ஒட்டுமொத்த சந்தையில் அவதானிக்கப்பட்ட ஒன்றாகும், ஒரு எதிர்மறையான நிலைமையினை விளைவித்ததுடன் இந்நிலைமையானது வருடத்தின் காலாண்டில் வணிகப் பருமன்கள் அதிகரித்ததனால் மற்றும் வைப்புக்களின் வெளியேறல்கள் ஊக்கமளிக்கப்பட்டதினாலும் ஆகும்.

கம்பனியின் திரவத்தன்மை




வேறு எங்கும் கலந்துரையாடப்படாத அவர்களது முதலீட்டு மூலோபாயங்கள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான மேலதிகத் தகவல்களை வழங்குகின்றது.

### முதலீட்டாளர்களுடனான ஈடுபாடு

நாம் பல்வேறு காரணங்களுக்காக முதலீட்டாளர்களுடன் ஈடுபடுகின்றோம்:

- எமது செயற்திறன், நிதியியல் மீளெழுச்சியிலான தகவல்களை வழங்குவதற்கு
- தொடர்புடைய தரப்பினரது கொடுக்கல் வாங்கல்களிலான தகவல்களை வழங்குவதற்கு
- சட்டம், ஒழுங்குவிதிகள் மற்றும் பட்டியலிடல் விதிகளினால் தேவைப்படும் குறிப்பிட்ட தகவல்களை வழங்குவதற்கு
- மேலதிக மூலதனத்தினை வேண்டுவதற்கு அல்லது கடன்களை திருப்பிச்செலுத்துவதற்கு.
- விளைவுகளை பகிர்ந்தளிப்பதற்கு (வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் பங்கிலாபக் கொடுப்பனவுகள்)

| ஈடுபாட்டின் முறை | நிகழ்வெண் |
|---|---|
| ஆண்டுப் பொதுக் கூட்டம் | வருடாந்தம் |
| ஆண்டறிக்கை | வருடாந்தம் |
| இடைக்கால நிதிக்கூற்றுக்கள் | காலாண்டு |
| இடைக்கால செய்தித்தாள் பிரசுரங்கள் | அரையாண்டு |
| ஊடக வெளியீடுகள் | தேவையானபோது |
| கூட்டாண்மை இணையத்தளம் | தொடர்கின்றது |
| கொ.ப.ப. இற்கு கூட்டாண்மை வெளிப்படுத்தல்கள் | தேவையானபோது |
| கம்பனி காரியதரிசியினூடான கடிதத்தொடர்புகள் | பங்குதாரர்களினால் ஆரம்பிக்கும்போது |
| முதலீட்டாளரின் இற்றைப்படுத்தல் | தேவையானபோது |

அனைத்து வெளிப்படுத்தல்களும் குறிப்பிட்ட காலத்தினுள் குறிப்பிட்ட வடிவத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இவை பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பங்குதாரர்கள் அல்லது அவர்களது பதிலாள்களது பங்குபற்றலுடன் ஒரு இயங்கலை கூட்ட மேடையினூடாக ஆண்டுப் பொதுக் கூட்டமானது 05 ஆகஸ்ட் 2021 இல் இடம்பெற்றது. அனைத்து பங்குதாரர்களும் ஆண்டறிக்கையினை டிஜிட்டல் வடிவத்தில் பெறுவதுடன், 60 அச்சடிக்கப்பட்ட பிரதிகள், குறிப்பாக அச்சு வடிவத்தில் வேண்டுமென வேண்டியோர்களுக்கு வழங்கப்பட்டன.

## முதலீட்டாளர்களுக்கு பெறுமதி

முதலீட்டாளர்கள், கம்பனியினால் வழங்கப்பட்ட உரித்துவம் மற்றும் கடன் பிணையங்களில் முதலீடு செய்த பங்குதாரர்களையும் தொகுதிக்கடன் உடைமையாளர்களையும் உள்ளடக்குகின்றது. இந்த நிதியியல் கருவிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ளதுடன், முதலீட்டு மூலோபாயங்கள் மற்றும் திட்டங்களுக்கேற்ப இந்த பிணையங்களில் முதலீட்டாளர்கள் வர்த்தகம் செய்வதினை இயலுமையாக்குகின்றது. கம்பனியின் செயற்பாடுகளுக்கு அவசியமான நிதி மூலதனத்தினை வழங்கும் முக்கிய வழங்குநர்களாக முதலீட்டாளர்கள் காணப்படுவதுடன், அவர்கள் தாம் பொறுப்பேற்கும் இடருக்கான ஒரு விளைவினை எதிர்பார்க்கின்றார்கள். பங்குதாரர்கள் உயர்ந்த இடரினை பொறுப்பேற்பதுடன், பங்கிலாபங்கள் மற்றும் பங்கின் விலையிலான அசைவுகளைப் பொறுத்து மூலதன இலாபங்களை அல்லது நட்டத்தினை உழைக்கின்றார்கள். தொகுதிக்கடன் உடைமையாளர்கள் பங்குதாரர்களிலும் பார்க்க முன்னுரிமையினைக் கொண்டுள்ளதுடன் அவர்கள் வட்டியினை உழைக்கின்றார்கள் ஆனால் பங்கிலாபங்களில் பங்கேற்பதில்லை. இப்பிரிவானது முதலீட்டாளர்களுக்கு, இந்த அறிக்கையின்




### டூபொன்ட் பகுப்பாய்வு

ஒரு முதலீட்டாளர் டூபொன்ட் பகுப்பாய்வினை பயன்படுத்தி, ஒத்த நிறுவனங்களின் செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் சொத்துக்களின் பயனுறுதியான பயன்பாடு ஆகியவற்றை ஒப்பிடும்போது நிறுவனத்தின் பலம் மற்றும் பலவீனங்களை இனங்காணலாம். இந்த முறையினை பயன்படுத்துவதானது, உரித்துவத்திலான விளைவின் (ROE) பல்வேறு இயக்கியை கூறாகப் பிரிப்பதனை இயலுமையாக்குகின்றது.

2021/22 நிதியாண்டில், குழுமமானது தேறிய இலாப விடுமிகை, சொத்துக்களிலான விளைவு, மற்றும் உரித்துவ பெருக்கம் ஆவியவற்றில் ஒரு சிறிய வீழ்ச்சியினை பதிவுசெய்ததுடன் இது குழுமத்தின் ROE இல் ஒரு வீழ்ச்சியினையும் பங்குதாரர் பெறுமதியில் ஒரு சிறு வீழ்ச்சிக்கும் இட்டுச்சென்றது.

குழுமத்தின் ROE



## முதலீட்டாளர் எதிர்பார்ப்புகள்

**திடமான கூட்டாண்மை ஆளுகை**
பக்கங்கள் 124 முதல் 155 வரை பார்க்கவும்

**நிதியியல் ஸ்திரத்தன்மை**
பக்கங்கள் 60 முதல் 68 வரை பார்க்கவும்

**நிதியியல் விளைவுகள்**
பக்கங்கள் 60 முதல் 68 வரை பார்க்கவும்

**நல்ல கூட்டாண்மை பிரஜை**
பக்கங்கள் 96 முதல் 105 வரை மற்றும் 88 முதல் 95 வரை காணப்படும் சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் மற்றும் மனித மூலதனத்தினைப் பார்க்கவும்

| | 2021/22 | 2020/21 |
|---|---|---|
| குழுமத்தின் பங்கொன்றிற்கான உழைப்பு (ரூ.) | 2.68 | 3.11 |
| பங்கொன்றிற்கான பங்கிலாபம் (ரூ.) * | 1.25 | 0.60 |
| பங்கிலாபச் செலுத்துகை (%) * | 46.79 | 24.22 |
| பங்கிலாப விளைவு (%) * | 15.43 | 5.08 |
| பங்கிலாபக் காப்பு (மடங்குகள்) * | 2.14 | 4.13 |
| பங்கொன்றின தேறிய சொத்தின் பெறுமதி (ரூ.) | 20.57 | 20.15 |
| விலை உழைப்புகள் (மடங்குகள்) | 3.28 | 4.99 |
| புத்தகப் பெறுமதிக்கான விலை | 0.39 | 0.59 |
| உரித்துவத்திலான விளைவு (%) | 12.74 | 12.49 |
| உழைப்புக்களின் வளர்ச்சி (%) | 15.52 | 37.06 |
| புழக்கம் செம்மையாக்கப்பட்ட சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்லியன்) | 3.82 | 5.02 |

*முழுன்மொழியப்பட்ட பங்கொன்றிற்கான பங்கிலாபமான ரூ. 0.50, 2021/22 இற்கான மேலுள்ள தொகையில் உள்ளடக்கப்படவில்லை. 2020/21 இற்கு செலுத்தப்பட்ட இறுதிப்பங்கிலாபமானது உள்ளடக்கப்பட்டுள்ளது.*

## பங்குதாரர்களுக்கு 2021/22 இல் வழங்கப்பட்ட பெறுமதி

நாம் பங்குதாரர்களுக்கான உழைப்புக்களில் நிலைபேறுள்ள வளர்ச்சியினை வழங்குவதற்கு முனைவதுடன், ஏனைய பங்காளிகளது அக்கறைகளையும் கவனமாக சமநிலைப்படுத்தி, குறுகிய, மத்திய மற்றும் நீண்ட காலத்தில் பெறுமதி உருவாக்குவதற்கான குழுமத்தின் ஆற்றலையும் முகாமைப்படுத்துகின்றோம். இதற்கமைய, நாம் ஒரு தொடர்ச்சியான பங்கிலாபக் கொள்கையினை கடைப்பிடிப்பதுடன், இது பங்குதாரர்களுக்கு பங்கிலாபங்கள் மற்றும் மூலதன இலாகங்களூடாக ஒரு திடமான முதலீட்டிலான விளைவினை வழங்குகின்றது. 31 மார்ச் 2022 இல் கம்பனியின் பொதுப் புழக்கமானது 24.96% ஆக காணப்பட்டதுடன் 10,918 பங்குதாரர்களால் வைத்திருக்கப்பட்டது. வருடத்தின் ஆரம்பத்தில் கம்பனியின் பொதுப் புழக்கமானது 24.94% ஆக காணப்பட்டதுடன் 10,018 பங்குதாரர்களால் வைத்திருக்கப்பட்டது.

31 மார்ச் 2022 இல் காணப்பட்ட புழக்கம் செம்மையாக்கப்பட்ட சந்தை மூலதனவாக்கமானது ரூ. 3,815,455,367 ஆகக் காணப்பட்டதுடன் கொ.ப.ப. இன் ஆகக்குறைந்த பொது உரித்துடைமை தேவைப்பாடான பட்டியலிடல் விதி 7.14.1 (i) (a)இன் தெரிவு இலக்கம் 04 உடன் இணங்கியுள்ளது.

செயற்திறனின் பின்வரும் வழிமுறைகள் கம்பனி மற்றும் குழுமத்தினால் முதலீட்டாளர்களுக்கு உருவாக்கப்பட்ட பெறுமதியிலான உள்நோக்கினை வழங்குகின்றது.




## கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பீபள்ஸ் லீசிங்கின் பங்குகளது செயற்திறன்

பீபள்ஸ் லீசிங்கின் சாதாரண பங்குகள் கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்டுள்ளதுடன அதற்கு ஒதுக்கப்பட்ட குறியீடு PLC.N0000 ஆகும்.















# நிதியியல் மூலதனம்

## பங்குத் தகவல்கள்

**பங்கு மூலதனம்**

| | 2022 | | 2021 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | ரூ. '000 | எண்ணிக்கை | ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 1,704,602,760 | 14,892,036 | 1,627,703,388 | 13,915,414 |
| பத்திரப் பங்கிலாபம் | 182,592,242 | 2,179,925 | 76,899,372 | 976,622 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 1,887,195,002 | 17,071,961 | 1,704,602,760 | 14,892,036 |

### கூறப்பட்ட மூலதனத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தும் பங்குகளது அவைவிலான தகவல்கள்

| நிறைவடைந்த வருடத்திற்கானது | நிதியாண்டின் ஆரம்பத்திலுள்ள பங்குகளின் எண்ணிக்கை | | நிதியாண்டில் பங்குகளின் சேர்க்கைகள் / மீட்கைகள் | | நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறான திரண்ட பங்குகள் | | நிதியாண்டின் இறுதியில வழங்கப்பட்ட மூலதனம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண பங்குகள் | முன்னுரிமைப் பங்குகள் | சாதாரண பங்குகள் | முன்னுரிமைப் பங்குகள் | சாதாரண பங்குகள் | முன்னுரிமைப் பங்குகள் | |
| 1995/96 | 2 | - | - | - | 2 | - | 20 |
| 1996/97 | 2 | - | - | - | 2 | - | 20 |
| 1997/98 | 2 | - | 2,500,000 | - | 2,500,002 | - | 25,000,020 |
| 1998/99 | 2,500,002 | - | - | - | 2,500,002 | - | 25,000,020 |
| 1999/00 | 2,500,002 | - | 1,500,000 | - | 4,000,002 | - | 40,000,020 |
| 2000/01 | 4,000,002 | - | 2,000,006 | - | 6,000,008 | - | 60,000,080 |
| 2001/02 | 6,000,008 | - | 4,000,000 | - | 10,000,008 | - | 100,000,080 |
| 2002/03 | 10,000,008 | - | - | - | 10,000,008 | - | 100,000,080 |
| 2003/04 | 10,000,008 | - | 10,000,000 | 50,000,000 | 20,000,008 | 50,000,000 | 700,000,080 |
| 2004/05 | 20,000,008 | 50,000,000 | - | - | 20,000,008 | 50,000,000 | 700,000,080 |
| 2005/06 | 20,000,008 | 50,000,000 | 30,000,000 | - | 50,000,008 | 50,000,000 | 1,000,000,080 |
| 2006/07 | 50,000,008 | 50,000,000 | - | (5,000,000) | 50,000,008 | 45,000,000 | 950,000,080 |
| 2007/08 | 50,000,008 | 45,000,000 | - | (10,000,000) | 50,000,008 | 35,000,000 | 850,000,080 |
| 2008/09 | 50,000,008 | 35,000,000 | - | (10,000,000) | 50,000,008 | 125,000,000 | 1,850,000,080 |
| 2009/10 | 50,000,008 | 125,000,000 | - | (10,000,000) | 50,000,008 | 115,000,000 | 1,850,000,080 |
| 2010/11 | 50,000,008 | 115,000,000 | - | (10,000,000) | 50,000,008 | 105,000,000 | 1,850,000,080 |
| 2011/12 | 50,000,008 | 105,000,000 | 1,510,000,152 | (15,000,000) | 1,560,000,160 | 90,000,000 | 12,958,000,800 |
| 2012/13 | 1,560,000,160 | 90,000,000 | - | (20,000,000) | 1,560,000,160 | 70,000,000 | 12,736,073,308 |
| 2013/14 | 1,560,000,160 | 70,000,000 | 19,862,322 | (20,000,000) | 1,579,862,482 | 50,000,000 | 12,736,073,308 |
| 2014/15 | 1,579,862,482 | 50,000,000 | - | (20,000,000) | 1,579,862,482 | 30,000,000 | 12,936,073,308 |
| 2015/16 | 1,579,862,482 | 30,000,000 | - | (20,000,000) | 1,579,862,482 | 10,000,000 | 13,136,073,308 |
| 2016/17 | 1,579,862,482 | 10,000,000 | - | (10,000,000) | 1,579,862,482 | - | 13,236,073,308 |
| 2017/18 | 1,579,862,482 | - | - | - | 1,579,862,482 | - | 13,236,073,308 |
| 2018/19 | 1,579,862,482 | - | - | - | 1,579,862,482 | - | 13,236,073,308 |
| 2019/20 | 1,579,862,482 | - | 47,840,906 | - | 1,627,703,388 | - | 13,915,414,175 |
| 2020/21 | 1,627,703,388 | - | 76,899,372 | - | 1,704,602,760 | - | 14,892,036,208 |
| 2021/22 | 1,704,602,760 | - | 182,592,242 | - | 1,887,195,002 | - | 17,071,960,891 |

## பங்குரித்துடைமையின் பகுப்பாய்வு

### சாதாரண பங்குதாரர்களின் பங்கீடு

| சாதாரண பங்குகளின் பங்கீடு | 31-மார்ச்-22 | | | | 31-மார்ச்-21 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பங்குதாரர்களின் எண்ணிக்கை | பங்குரித்துவம் % | பங்குகளின் எண்ணிக்கை | பங்கு % | பங்குதாரர்களின் எண்ணிக்கை | பங்குரித்துவம் % | பங்குகளின் எண்ணிக்கை | பங்கு % |
| 1000 அல்லது அதற்குக் குறைவானது | 3,263 | 29.86 | 928,802 | 0.05 | 3,049 | 30.41 | 874,598 | 0.05 |
| 1,001 - 10,000 | 5,581 | 51.08 | 16,968,884 | 0.90 | 5,201 | 51.87 | 14,722,045 | 0.86 |
| 10,001 - 100,000 | 1,761 | 16.12 | 49,438,645 | 2.62 | 1,540 | 15.36 | 41,308,690 | 2.42 |
| 100,001 - 1,000,000 | 281 | 2.57 | 74,366,187 | 3.94 | 204 | 2.03 | 54,571,331 | 3.20 |
| 1,000,000 க்கு மேல் | 40 | 0.37 | 1,745,492,484 | 92.49 | 33 | 0.33 | 1,593,126,096 | 93.47 |
| மொத்தம் | 10,926 | 100.00 | 1,887,195,002 | 100.00 | 10,027 | 100.00 | 1,704,602,760 | 100.00 |

### சாதாரண பங்குதாரர்களின் தொகுப்பு

| சாதாரண பங்குதாரர்களின் தொகுப்பு | 31-மார்ச்-22 | | | | 31-மார்ச்-21 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பங்குதாரர்களின் எண்ணிக்கை | பங்குரித்துவம் % | பங்குகளின் எண்ணிக்கை | பங்கு % | பங்குதாரர்களின் எண்ணிக்கை | பங்குரித்துவம் % | பங்குகளின் எண்ணிக்கை | பங்கு % |
| குடியிருப்பவர் - தனிநபர்கள் | 10,524 | 96.32 | 125,219,931 | 6.64 | 9,670 | 96.44 | 98,936,870 | 5.80 |
| குடியிருப்பவர் - நிறுவனங்கள் | 349 | 3.19 | 1,750,299,666 | 92.75 | 301 | 3.00 | 1,532,638,128 | 89.91 |
| குடியிருக்காதோர் -தனிநபர்கள் | 47 | 0.43 | 3,782,369 | 0.19 | 49 | 0.49 | 3,337,558 | 0.20 |
| குடியிருக்காதோர் - நிறுவனங்கள் | 6 | 0.05 | 7,893,036 | 0.42 | 7 | 0.07 | 69,690,204 | 4.09 |
| மொத்தம் | 10,926 | 100.00 | 1,887,195,002 | 100.00 | 10,027 | 100.00 | 1,704,602,760 | 100.00 |

### சாதாரண பங்குதாரர்களின் தோற்றுருவம்

| | 2021/22 | Q4 | Q3 | Q2 | Q1 | 2020/21 |
|---|---|---|---|---|---|---|
| பங்கின் விலை (ரூ.) | | | | | | |
| உயர்ந்தது | 13.80 | 12.30 | 11.80 | 13.80 | 13.70 | 15.40 |
| குறைவானது | 8.00 | 8.00 | 10.00 | 10.50 | 11.70 | 9.10 |
| நிறைவானது | 8.10 | 8.10 | 10.70 | 10.70 | 13.00 | 11.80 |
| கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை | 33,020 | 9,244 | 7,832 | 10,833 | 5,111 | 33,248 |
| வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியன்) | 178 | 35.47 | 24.46 | 67.64 | 50.37 | 181.88 |
| பீபள்ஸ் லீசிங் புரள்வு (ரூ. மில்லியன்) | 2,127 | 375.37 | 264.99 | 834.61 | 651.55 | 2,256.03 |
| மொத்த சந்தை புரள்வுக்கு பீபள்ஸ் லீசிங்கின் புரள்வு (%) | 0.18 | 0.12 | 0.07 | 0.25 | 0.48 | 0.34 |
| வர்த்தகம் செய்யப்பட்ட நாட்கள் | 240 | 58 | 62 | 63 | 57 | 219 |
| சராசரி நாளாந்த புரள்வு (ரூ.மில்லியன்) | 8.86 | 6.47 | 4.27 | 13.25 | 11.43 | 10.30 |
| சந்தை மூலதனவாக்கம் - கொ.ப.ப. (ரூ.பில்லியன்) | 3,826.50 | 3,826.50 | 5,489.17 | 4,215.63 | 3,470.24 | 3,111.26 |
| சந்தை மூலதனவாக்கம் - பீபள்ஸ் லீசிங் (ரூ.பில்லியன்) | 15.29 | 15.29 | 20.19 | 19.29 | 22.16 | 20.11 |
| மொத்த சந்தை மூலதனவாக்கத்திற்கு பீபள்ஸ் லீசிங் சந்தை மூலதனவாக்கம் (%) | 0.40 | 0.40 | 0.37 | 0.46 | 0.64 | 0.65 |
| சந்தைப் புரள்வு - ரூ. மில்லியன் | 1,151,629 | 302,926 | 380,160 | 332,050 | 136,493 | 668,812 |

# நிதியியல் மூலதனம்

## பங்கின் விலை அசைவுகள்

| | Apr-21 | May-21 | Jun-21 | Jul-21 | Aug-21 | Sep-21 | Oct-21 | Nov-21 | Dec-21 | Jan-22 | Feb-22 | Mar-22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயர்(ரூ) | 12.40 | 13.50 | 13.70 | 13.80 | 13.30 | 11.50 | 11.40 | 11.80 | 11.00 | 12.30 | 11.20 | 10.70 |
| குறை(ரூ) | 11.70 | 11.70 | 12.70 | 12.70 | 10.90 | 10.50 | 10.70 | 10.60 | 10.00 | 0.50 | 9.90 | 8.00 |
| இறுதி(ரூ.) | 11.90 | 13.20 | 13.00 | 13.10 | 11.10 | 10.70 | 11.10 | 10.80 | 10.70 | 11.00 | 10.50 | 8.10 |

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் பங்கு விலை அசைவுகள்




## இருபது பாரிய பங்குதாரர்கள்

| இல. | பங்குதாரரின் பெயர் | 31-மார்ச்-22 பங்குகளின் எண்ணிக்கை | 31-மார்ச்-22 % | கருத்துரை | 31-மார்ச்-21 பங்குகளின் எண்ணிக்கை | 31-மார்ச்-21 % |
|---|---|---|---|---|---|---|
| 1 | மக்கள் வங்கி | 1,415,396,247 | 75.00 | மாற்றமில்லை | 1,278,452,068 | 75.00 |
| 2 | ஊழியர் சேமலாப நிதியம் | 102,429,667 | 5.43 | மாற்றமில்லை | 92,519,266 | 5.43 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 52,162,973 | 2.76 | 1 நிலை மேல் | 47,116,037 | 2.76 |
| 4 | ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன் லிமிட்டட் - ஆயுள் நிதியம் | 23,251,615 | 1.23 | புதியவர் | - | - |
| 5 | இறப்பர் இன்வெஸ்ட்மன்ட் லிமிட்டட் க/கு இல. 01 | 22,146,695 | 1.17 | மாற்றமில்லை | 17,713,821 | 1.04 |
| 6 | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை | 17,981,739 | 0.95 | மாற்றமில்லை | 12,482,939 | 0.73 |
| 7 | இலங்கை வங்கி கணக்கு இலக்கம் 1 | 13,681,680 | 0.72 | மாற்றமில்லை | 12,357,934 | 0.72 |
| 8 | பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ் பிரைவேட் லிமிட்டட் | 11,000,000 | 0.58 | மாற்றமில்லை | 8,000,000 | 0.47 |
| 9 | ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன் லிமிட்டட் - பொது நிதியம் | 10,366,140 | 0.55 | மாற்றமில்லை | 7,577,469 | 0.44 |
| 10 | சிலோன் இன்வெஸ்ட்மன்ட் பிஎல்சி க/கு இல. 2 /<br>சிலோன் இன்வெஸ்ட்மன்ட் பிஎல்சி க/கு இல. 01 | 7,210,797<br>- | 0.38 | 1 நிலை மேல் | 1,581,888<br>5,161,675 | 0.40 |
| 11 | மொர்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி | 7,033,570 | 0.37 | புதியவர் | - | - |
| 12 | AIA இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டட் க/கு இல. 07 | 5,133,072 | 0.27 | 2 நிலைகள் கீழ் | 5,204,702 | 0.31 |
| 13 | சிலோன் கார்டியன் இன்வெஸ்ட்மன்ட் ட்ரஸ்ட் பிஎல்சி க/கு # 02 | 4,273,247 | 0.23 | மாற்றமில்லை | 3,396,923 | 0.20 |
| 14 | மெலன் பேங்க. என்.ஏ.- ஆகேடியன் விரன்டியர் மார்க்கட்ஸ் ஈக்கியுட்டி வன்ட் | 3,932,508 | 0.21 | 3 நிலைகள் மேல் | 2,735,108 | 0.16 |
| 15 | திரு. டபிள்யு,ஏ.எஸ்.பி. டி சேரம் | 3,855,488 | 0.20 | புதியவர் | 2,388,626 | 0.14 |
| 16 | கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி ஃமெட்ரோகோர்ப் (பிரைவேட்) லிமிட்டட் | 3,478,264 | 0.18 | 2 நிலைகள் கீழ் | 3,141,732 | 0.18 |
| 17 | ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி க/கு இல.4<br>(HNB இளைப்பாறுதல் ஓய்வூதிய நிதியம்) | 3,248,816 | 0.17 | 2 நிலைகள் கீழ் | 2,934,483 | 0.17 |
| 18 | ஜே. பி. கொக்கோஷெல் (பிரைவேட்) லிமிட்டட் | 3,226,807 | 0.17 | புதியவர் | 500,000 | 0.03 |
| 19 | திரு. எம்.ஜே.பர்னாந்து | 3,049,015 | 0.16 | 2 நிலைகள் கீழ் | 2,765,895 | 0.16 |
| 20 | திரு. கே.டி.எச்.பெரேரா | 2,881,010 | 0.15 | புதியவர் | 323,686 | 0.02 |
| | துணைமொத்தம் | 1,715,739,350 | 90.88 | | 1,504,772,364 | 88.36 |
| | ஏனைய பங்குதாரர்கள் | 171,455,652 | 9.12 | | 199,830,396 | 11.64 |
| | மொத்தம் | 1,887,195,002 | 100.00 | | 1,704,602,760 | 100.00 |

## பணிப்பாளர்கள் மற்றும் பி.நி.அ. இன் பங்குரித்துடைமை

31 மார்ச் 2022 இல் உள்ளவாறானது

| பெயர் | பதவி | நியமனத்திகதி/பதவிவிலகல் திகதி | பங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| திரு. சஜீவ ராஜபக்ஷ | தலைவர் | | 165,858 |
| திரு. ரொஹான் பத்திரகே | பணிப்பாளர் | | 402,628 |
| திரு. அசாம் ஏ. ஹாமட் | பணிப்பாளர் | | - |
| திரு. ரஞ்சித் கொடித்துவக்கு | பணிப்பாளர் | | - |
| திரு. எஸ். ஹாங்கம | பணிப்பாளர் | 24ஆகஸ்ட் 2021 இல் பதவிவிலகினார் | - |
| திரு. கே.சி.ஜே.சி. பொன்சேகா | பணிப்பாளர் | | 57,932 |
| திரு. சி.ஜே. விஜேதிலக்க | பணிப்பாளர் | | 5,233 |
| திரு. யு.எல்.ஏ.டபிள்யு. பண்டார | பணிப்பாளர் | | - |
| செல்வி. எம்.சி.பியட்டர்ஸ் | பணிப்பாளர் | | - |
| திரு. எஸ்.ஜே.எம். மார்சலீன் | பி.நி.அ. | | - |

31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது

| பெயர் | பதவி | நியமனத்திகதி/பதவிவிலகல் திகதி | பங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| திரு. சஜீவ ராஜபக்ஷ | தலைவர் | | 149,812 |
| திரு. ரொஹான் பத்திரகே | பணிப்பாளர் | | 363,673 |
| திரு. அசாம் ஏ. ஹாமட | பணிப்பாளர் | | - |
| திரு. எஸ். ஹாங்கம | பணிப்பாளர் | | - |
| திரு. கே.சி.ஜே.சி. பொன்சேகா | பணிப்பாளர் | | 52,358 |
| திரு. சி.ஜே. விஜேதிலக்க | பணிப்பாளர் | | - |
| திரு. யு.எல்.ஏ.டபிள்யு. பண்டார | பணிப்பாளர் | | - |
| செல்வி. எம்.சி.பியட்டர்ஸ் | பணிப்பாளர் | | - |
| திரு. எஸ்.ஜே.எம். மார்சலீன் | பி.நி.அ. | 25 நவம்பர் 2020 இல் நியமிக்கப்பட்டார் | - |

### தொகுதிக்கடன் உடைமையாளர்களுக்கான பெறுமதி

பீபள்ஸ் லீசிங் நிதியியல் நிலைமையினை பலப்படுத்தவும் முதிர்வு பொருத்தமின்மைகளை குறைப்பதற்கும் தொகுதிக் கடன்களை வழங்குகின்றது. தற்போது வழங்கலிலுள்ள அனைத்து தொகுதிக்கடன்களும் பிணைசாராதவை என்பதுடன் கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்டுள்ளன. இவ்வாண்டில், பீபள்ஸ் லீசிங் சிரேஷ்ட பிணைசாரா பட்டியலிட்ட மீட்கத்தகு தரப்படுத்தப்பட்ட மூன்று வருடங்கள் (2021/2024) மற்றும் ஐந்து வருடங்கள் (2021/2026) தொகுதிக்கடன்களை ஒவ்வொன்றும் ரூ. 100/- முகப்பெறுமதிக்கு வழங்கி ரூ. 10 பில்லியனை திரட்டியது. ஆரம்ப வழங்கல் ரூ. 4 பில்லியனாகக் காணப்பட்டதுடன், ஒரு மிகைபங்களிப்பு நிகழுமாயின் கம்பனியின் விருப்புரிமைக்கேற்ப மேலும் ரூ. 6 பில்லியனை திரட்டுவதற்கான ஒரு தெரிவு காணப்பட்டது. இந்த வழங்கலானது மிகை பங்களிப்பு செய்யப்பட்டதுடன் கம்பனியின் நிதியளிப்பு நிலைமையானது பலப்படுத்தப்பட்டது.

நிலைபேறுள்ள வளர்ச்சிக்கு நிதியியல் ஸ்திரத்தன்மையினை பராமரிப்பது இன்றியமையாததாகும். இதன்பிரகாரம், எமது கடன் தீர்க்கும் ஆற்றல் விகிதங்கள் பின்வருவன என்பதுடன் அது குழுமத்தின் விவேகமான முகாமைத்துவத்தினை பிரதிபலிக்கின்றது.

### கடன் தீர்க்கும் ஆற்றல் மற்றும் கடன் மூலதனம்

| | 2021/22 | 2020/21 | மாற்றம் % |
|---|---|---|---|
| வைப்புக்கள் நீங்கலான உரித்துவத்திற்கான கடன் வீகிதம் (மடங்குகள்) | 0.75 | 0.59 | 26.59 |
| அடுக்கு 1 மூலதன விகிதம், % | 18.76 | 17.72 | 0.06 |
| மொத்த மூலதன விகிதம், % | 19.67 | 18.58 | 0.06 |
| வட்டிக் காப்பு (மடங்குகள்) | 1.61 | 1.45 | 11.30 |
| நடைமுறை விகிதம் (மடங்குகள்) | 0.79 | 0.76 | 4.26 |

**தொகுதிக்கடன் உடைமையாளர்களுக்கான பெறுமதி**

**ரூ. 1.88 பில்லியன்**
தொகுதிக்கடன் உடைமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி

**ரூ.10 பில்லியன்**
2021/22 வழங்கப்பட்ட தொகுதிக்கடன்கள்

**ரூ.17.24 பில்லியன்**
வழங்கலிலுள்ள தொகுதிக்கடன்கள்

# நிதியியல் மூலதனம்

## தொகுதிக்கடன் சந்தைத் தகவல்கள்

31 மார்ச் 2022 இல் உள்ளவாறானது

| வகை | வகை A | வகை B | வகை A | வகை B | வகை C | வகை D |
|---|---|---|---|---|---|---|
| காலவரையறை (வருடங்கள்) | 4 வருடங்கள் | 5 வருடங்கள் | 3 வருடங்கள் | 3 வருடங்கள் | 5 வருடங்கள் | 5 வருடங்கள் |
| வழங்கல் திகதி | 18 ஏப்ரல் | 18 ஏப்ரல் | 21 ஜுலை | 21 ஜுலை | 21 ஜுலை | 21 ஜுலை |
| முதிர்வுத் திகதி | 22 ஏப்ரல் | 23 ஏப்ரல் | 24 ஜுலை | 24 ஜுலை | 26 ஜுலை | 26 ஜுலை |
| வட்டி வீதம் | நிலையானது | நிலையானது | நிலையானது | பூச்சிய கூப்பன் | நிலையானது | பூச்சிய கூப்பன் |
| கூப்பன் வீதம் (%) | 12.40 | 12.80 | 8.00 | - | 9.00 | - |
| விளைவுறு வருடாந்த விளைவு (%) | 12.40 | 12.80 | 8.00 | 8.00 | 9.00 | 9.00 |
| ஒப்பிடக்கூடிய அரச பிணையத்தின் வட்டி வீதம் (%) | 9.25 | 9.77 | 6.25 | 6.25 | 6.93 | 6.93 |
| வட்டி செலுத்தவேண்டிய நிகழ்வெண் | வருடாந்தம் | வருடாந்தம் | வருடாந்தம் | - | வருடாந்தம் | - |
| தரப்படுத்தல் | A+ | A+ | A+ | A+ | A+ | A+ |
| தொகை (ரூ.மில்லியன்) | 705 | 5,295 | 2,943 | 2,420 | 4,272 | 365 |
| ISIN இலக்கம் | LKR0399D23997 | LKR0399D23989 | LK0399D24847 | LK0399D24839 | LK0399D24821 | LK0399D24854 |
| சந்தைப் பெறுமதி (ரூ.) | | | | | | |
| உயர்வானது | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை |
| குறைவானது | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை |
| இறுதியானது | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை |
| நடைமுறை விளைவு (%) | 12.40 | 12.80 | 8.00 | - | - | - |
| முதிர்வுக்கான விளைவு (%) | 12.40 | 12.80 | 8.00 | 8.00 | 9.00 | 9.00 |

31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது

| வகை | வகை A | வகை B |
|---|---|---|
| காலவரையறை (வருடங்கள்) | 4 வருடங்கள் | 5 வருடங்கள் |
| வழங்கல் திகதி | 18 ஏப்ரல் | 18 ஏப்ரல் |
| முதிர்வுத் திகதி | 22 ஏப்ரல் | 23 ஏப்ரல் |
| வட்டி வீதம் | நிலையானது | நிலையானது |
| கூப்பன் வீதம் (%) | 12.40 | 12.80 |
| விளைவுறு வருடாந்த விளைவு (%) | 12.40 | 12.80 |
| ஒப்பிடக்கூடிய அரச பிணையத்தின் வட்டி வீதம் (%) | 9.25 | 9.77 |
| வட்டி செலுத்தவேண்டிய நிகழ்வெண் | வருடாந்தம் | வருடாந்தம் |
| தரப்படுத்தல் | A+ | A+ |
| தொகை (ரூ.மில்லியன்) | 705 | 5,295 |
| ISIN இலக்கம் | LKR0399D23997 | LKR0399D23989 |
| சந்தைப் பெறுமதி (ரூ.) | | |
| உயர்வானது | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை |
| குறைவானது | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை |
| இறுதியானது | வர்த்தகம் செ. இல்லை | வர்த்தகம் செ. இல்லை |
| நடைமுறை விளைவு (%) | 12.40 | 12.80 |
| முதிர்வுக்கான விளைவு (%) | 12.40 | 12.80 |

## முன்னோக்கிய பாதை

| குறுங்காலம் 2022/23 | மத்திய காலம் - 3 வருடங்கள் | நீண்ட காலம் |
|---|---|---|
| • ஆரோக்கியமான திரவத்தன்மை மட்டங்களை பராமரித்தல்<br>• குறைவான இடர் மற்றும் விரைவான வளர்ச்சியுடைய கருவிகளிலான முன்னிறுத்தம் | • வருடத்திலிருந்து வருடம் கடன் புத்தக வளர்ச்சியாக 20% இனை அடைவதற்கு<br>• வருடத்திலிருந்து வருடம் வைப்புகளில் 10% வளர்ச்சியினைப் பிராமரித்தல் | • 2026 ஆண்டளவில் வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 10 பில்லியனை அடைதல்<br>• செயற்திறனற்ற கடன்களின் விகிதத்தினை 5% இலும் பார்க்க குறைத்தல் |

## நிதியியல் மூலதனம் ஈடுகட்டல்

கிளை மட்டத்தில் டிஜிட்டல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதனூடாக உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தினை பலப்படுத்தல.

அறிவுசார் மூலதனமானது கம்பனியின் நிதியியல் செயற்திறன் மற்றும் பலத்தினால் மேம்படுவதுடன் வணிக நாம மேம்படுத்தல் முன்னெடுப்புகளிலும் முதலீடுகள்

பணியாட்கள் பயிற்சி மற்றும் அபிவிருத்தியானது பணியாட்களது ஆற்றலை மேம்படுத்துவதுடன் ஆற்றல்மிக்க தொழிற்சேனையினை உருவாக்குவதற்கு உதவுகின்றது.

டிஜிட்டல்மயமாக்கல் வழிமுறைகளில் முதலீடு செய்வதன் மூலம் சிறந்த வாடிக்கையாளர் சேவையானது சாத்தியமாக்கப்பட்டுள்ளது.
கூட்டாண்மை சமூக பொறுப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் கம்பனியின் சமூக ஈடுபாடானது வலுவூட்டப்படுகின்றது.

வலுசக்தியினை சேமிக்கும் வழிமுறைகள், டிஜிட்டல் பிரசன்னம் மற்றும் பசுமை திட்டங்களிலான முதலீடானது கரியமில உமிழ்வுகளை குறைப்பதன் மூலம் இயற்கை மூலதனம் நன்மையடைகின்றது.




நாம் இடப் பயன்பாட்டினை உச்சமாக்குவதற்கும் எமது டிஜிட்டல் அடிச்சுவட்டினை மேம்படுத்துவதற்கும் முனையும்போது இவ்வருடத்தில் எமது கிளையினை சரியான அளவிடும் முன்னெடுப்பானது தொடர்ந்தது.

## உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தின பிரிவுகள்



**111**
கிளைகள்



**62**
சாளரக் காரியாலயங்கள் Offices



**46**
தங்கக்கடன் செயற்பாட்டு கிளைகள்



டிஜிட்டல் உட்கட்டமைப்பு

## உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தினை வளர்த்தல்




### ஒட்டுமொத்த பெறுமதி உருவாக்கல் நோக்கிய உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தின் உறுதுணை

எமது பௌதீக மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பானது எமது அணுக்கத்தினை விரிவாக்குவதற்கு இயலுமையாக்குவதுடன், வாடிக்கையாளர் சேவையினை மேம்படுத்தும் மற்றும் எமது பங்காளிகளுக்கு நிலைபேறுள்ள பெறுமதியினை உருவாக்குவதற்கு செயற்பாட்டு வினைத்திறன்களை மேம்படுத்துதல்

### முக்கிய விளைவுகள்

- 8 சாளர காரியாலயங்கள் தரமுயர்த்தப்பட்டன
- 470,000 க்கும் அதிகமான டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்கள்
- செயல்முறை தன்னியக்கமயமாக்கலும் செயல்முறை பயனுறுதித்தன்மையும் கம்பனிக்கு குறிப்பிடத்தக்க சேமிப்புக்களை உருவாக்கும்.

| தொடர்புடைய பங்காளிகள் | மூலோபாய கட்டாயங்கள் | இடர்கள் |
|---|---|---|
|  | • கிளைகளை சரியான அளவிடல்<br>• வாடிக்கையாளர் அனுபவத்தினை விரிவாக்குதல்<br>• எமது டிஜிட்டல் முன்னீடுகளை பலப்படுத்துதல்<br>• நிலைபேறுள்ள கட்டிடங்கள் | • செயற்பாட்டு இடர்<br>• த.தொ. மற்றும் தகவல் பாதுகாப்பு இடர் |

### 2021/22 இலக்குகளில் அடைந்த முன்னேற்றம்

| | |
|---|---|
| சரியான அளவு கிளைகள் | |
| சிறந்த இடப் பயன்பாட்டினூடாக செயற்பாட்டு செயற்திறனை அதிகரித்தல் | |

முன்னேற்றச் சாவி: முன்னெடுக்கப்பட்டது | தொடர்கிறது | நிறைவேற்றப்பட்டது | அடையப்படவில்லை

### நி.அ.இ. க்கான பங்களிப்பு

### வெற்றியினை அளவிடுதல்

எமது உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்




ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணத் தொகுப்பு




ஆதனம்.பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கான சேர்க்கை




இவ்வருடத்தில் ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களிலான வளர்ச்சி **34.74%** ஆகும்.

# உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்

## எமது உற்பத்திசெய்யப்பட்ட மூலதனம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (ஆ.பொ.உ.), முதலீட்டு ஆதனம் மற்றும் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களை உள்ளடக்கிய எமது பௌதீக மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பினை உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் கொண்டுள்ளது.

| தேறிய புத்தகப் பெறுமதி | | 31 மார்ச் 2022 இல் உள்ளவாறானது ரூ. மில்லியன் | 31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது ரூ. மில்லியன் | வளர்ச்சி |
|---|---|---|---|---|
| ஆதனம்.பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (ஆ.பொ.உ.) | ஆ.பொ.உ. என்பன இறையிலி நிலங்கள் மற்றும் கட்டிடங்கள், குத்தகை ஆதனங்களுக்கான மேம்படுத்தல்கள், மோட்டார் வாகனங்கள், கணினி வன்பொருள், காரியாலய உபகரணம், தளபாடம் மற்றும் பொருத்திகளை உள்ளடக்குகின்றது. | 1,413.78 | 1,049.25 | 34.74% |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் காணியினை பயன்படுத்தும் உரிமைகளுக்காக கையகப்படுத்துவதற்காக முன்செலுத்தப்பட்ட குத்தகை வாடகைகளை உள்ளடக்குவதுடன் குத்தகை ஆதனமானது காணிப் பயன்பாட்டு உரிமைகளினை உள்ளடக்குகின்றன. | 1,972.38 | 2,242.44 | (12.04)% |
| முதலீட்டு ஆதனம் (குழுமம்) | இலக்கங்கள் 7 மற்றும் 9 ஹெவ்லொக் வீதியில் அமைந்துள்ள பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் இனால் சொந்தமாக்கப்பட்ட காணியும் கட்டிடமும் மக்கள் வங்கி, பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி மற்றும் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி ஆகிய நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. சதுர அடி அடிப்படையில் மக்கள் வங்கிக்கு வாடகைக்கு விடப்பட்ட சொத்தின் பகுதியானதே குழுமத்தின் முதலீட்டு ஆதனத்தின் பெறுமதியாகும். | 820,66 | 820.66 | - |

GRI | 102-6

## பௌதீக உட்கட்டமைப்பு

எமது பௌதீக கட்டமைப்பானது ஒன்பது மாகாணங்களிலும் பரந்து காணப்படுகின்ற 111 கிளைகள், 62 சாளர காரியாலயங்கள் மற்றும் 46 தங்கக் கடன் செயற்பாட்டு கிளைகளை உள்ளடக்குகின்றன.

| | மொத்த கடன் தேக்கத்தின் % | கிளைகள் | சாளரக் காரியாலயங்கள் | தங்கக் கடன் செயற்பாட்டு கிளைகள் |
|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் |  | 11 | 7 | 8 |
| கிழக்கு மாகாணம் |  | 8 | 8 | 3 |
| வட மத்திய மாகாணம் |  | 7 | 6 | 4 |
| வட மேல் மாகாணம் |  | 11 | 7 | 4 |
| வட மாகாணம் |  | 7 | 6 | 6 |
| சபரகமுவ மாகாணம் |  | 9 | 10 | 2 |
| தென் மாகாணம் |  | 16 | 9 | 3 |
| ஊவா மாகாணம் |  | 6 | 5 | 1 |
| மேல் மாகாணம் |  | 36 | 4 | 15 |
| மொத்தம் |  | **111** | **62** | **46** |

### பௌதீக உட்கட்டமைப்பின் மேம்படுத்தல்

- தரமுயர்த்தப்பட்ட சாளரக் காரியாலயங்கள் **08**
- சரியான அளவிடப்பட்ட கிளைகள் **02**
- தங்கக் கடன் செயற்பாட்டு கிளைகள் **05**
- கிளை இடமாற்றங்கள் **05**

நாம் எமது கிளைகளின் இடப் பயன்பாட்டினை உச்சநிலைப்படுத்தல் முன்னெடுப்பினை கிளைகளின் இடப் பயன்பாட்டினை உச்சப்படுத்துவதற்காக அவற்றின் உட்கட்டமைப்பினை தரமுயர்த்தி மற்றும் புதுப்பிப்பதனை தொடர்ந்தோம். எமது அணுக்கத்தினை விரிவாக்குவதற்காக முதன்மையான இடங்களுக்கு பல பணிவானதும் காலடியோசையுடையதுமான கிளைகள் இட மாற்றம் செய்யப்பட்டன.

அதேவேளை எமது அனைத்து இடங்களிலும் வாடிக்கையளர்கள் மற்றும் பணியாட்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனை தொடர்வதற்காக உயர்ந்த ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளை அமுல்படுத்தினோம்.

GRI | 416-1

### டிஜிட்டல் உட்கட்டமைப்பு

கோவிட்-19 இற்குப் பின்னரான டிஜிட்டல்மயம் மற்றும் புதிய பணிபுரியும் மாதிரிகளுக்கான விரைவான நகர்விற்கு பதிலளிக்கும் விதமாக, நாம் த.தொ. உட்கட்டமைப்பிலான தொடர்ச்சியான முதலீடுகளினூடாக எமது டிஜிட்டல் பெறுமதி முன்னீட்டினை தொடர்ந்தோம். இவ்வருடத்தில், நாம் எமது த.தொ. உட்கட்டமைப்பினை பலப்படுத்துவதற்காக ரூ. 132.50 மில்லியனை முதலீடு செய்தோம். எமது டிஜிட்டல்மயமாக்கல் முயற்சிகளின் மேலதிக விபரங்கள் பக்கங்கள் 80 முதல் 87 வரை காணப்படும் அறிவுசார் மூலதன அறிக்கையில் காணலாம்.

### முன்னோக்கிய பாதை

**குறுங்காலம் 2022/23**

- சில செயற்பாட்டு பிரிவுகளை பரவலாக்கி வாடிக்கையாளர்களுக்கு விரைவான சேவையினை வழங்குவதற்காக கிளைகளுக்கு அதிகளவு சுய அதிகாரத்தினை வழங்குதல்
- சிறந்த இடப் பயன்பாட்டினூடாக செயற்பாட்டு வினைத்திறனை அதிகரித்தல்

**மத்திய காலம் - 3 வருடங்கள்**

- வாடிக்கையாளர் சௌகரியத்தினை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியின் கருவிகளை தொழில்நுட்ப சிறப்பியல்புகளுடன் இற்றைப்படுத்தல்
- கிளை வலையமைப்பினை பராமரிப்பதில் மற்றும் நிறுவுவதில் சூழல் தோழமையான வழிமுறைகளை ஊக்குவித்தல்

**நீண்ட காலம்**

- பசுமை கிளைகளை நிறுவுதல்

### உற்பத்திசெய்யப்பட்ட மூலதன ஈடுகட்டல்கள்

உற்பத்திசெய்யப்பட்ட மூலதனத்திலான முதலீடுகள் குறுங்காலத்தில் நிதியியல் மூலதனத்தில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன, எவ்வாறாயினும், அடையப்பெற்ற செயற்பாட்டு வினைத்திறன்கள் நீண்டகாலத்தில் நிதியியல் மூலதனத்தில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

செயல்முறை தன்னியக்கமயமாக்கலானது பணியாட்களின் ஆக்கத்திறன் மற்றும் மனவுறுதியினை மேம்படுத்துகின்றன.

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தினை மேம்படுத்துவதன் மூலம் கொண்டுவரப்படும் செயற்திறன்கள் வாடிக்கையாளர் திருப்தியினை மேம்படுத்துவதுடன் சமூக மற்றும் உறவுமுறை மூலதனத்தில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

பயனுறுதிமிக்க இடப் பயன்பாடு மற்றும் சிறந்த டிஜிட்டல் மயமாக்கல் என்பன வளங்களின் நுகர்வினை குறைப்பதுடன் அதன்மூலம் இயற்கை மூலதனத்தில் சாதகமாக தாக்கத்தினை ஏற்படுத்தும்.



# அறிவுசார் மூலதனம்

பீபள்ஸ் லீசிங் போன்ற அறிவு அடிப்படையான சேவை நிறுவனத்திலுள்ள பங்காளிகளுக்கான நிலைபேறுள்ள பெறுமதி உருவாக்கலுக்கு அறிவுசார் மூலதனம் அடிக்கோலிடுகின்றது. ஒரு அதிகரித்த போட்டித்தன்மையுடைய சூழலில் இது முக்கிய போட்டிசார் மேம்பாட்டிற்கு மற்றும் வேறுபடுத்தலுக்கான ஒரு மூலமாகும்.

### அறிவுசார் மூலதனத்தின் கூறுகள்

- கருவிகளின் தேக்கம்
- வணிகநாம உரித்துவம்
- நிறுவனக் கலாச்சராம்
- உள்ளார்ந்த அறிவு
- அமைப்புமுறைகள் மற்றும் செயல்முறைகள்
- மென்பொருள் உரிமங்கள்

### அறிவுசார் மூலதனத்தினை வளர்த்தல்




### ஒட்டுமொத்த பெறுமதி உருவாக்கல் நோக்கி அறிவுசார் மூலதனத்திற்கு துணைபுரிதல்

பீபள்ஸ் லீசிங்கிற்கு அறிவுசார் மூலதானமானது ஒரு முக்கிய பலம் மற்றும் போட்டியான வேறுபடுத்தி என்பதுடன் இது தொடர்ச்சியாக பெறுமதி உருவாக்கல் செயல்முறைக்கு துணைபுரிகின்றது. விரிவான கருவித் தேக்கம், வணிகநாம மனப்படிமம், நிறுவனத்தின் கலாச்சாரம், பணியாட்களின் அறிவு மற்றும் அமைப்புமுறைகள் மற்றும் செயல்முறைகளை இற்றைப்படுத்தல் என்பன வாடிக்கையாளர்களுக்கு ஒரு முதன்மையான சேவையினை வழங்குவது நோக்கி கூட்டாக பங்களிக்கின்றது.

### முக்கிய விளைவுகள்

- வணிகநாமப் பெறுமதியாக ரூ. 6.51 பில்லியன்
- திரண்ட அனுபவம்
- டிஜிட்டல் உருமாற்றம்
- குத்தகைத் துறையில் "மிகவும் விரும்பப்படும் வணிக நாமம்"
- ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கைக்கான மதிப்புமிக்க விருதுகள் மற்றும் பாராட்டுக்கள்

| தொடர்புடைய பங்காளிகள் | மூலோபாயக் கட்டாயமானவைகள் | இடர்கள் |
|---|---|---|
|  | • நிலைபேறுள்ள வளர்ச்சியினை தொடருதல்<br>• வாடிக்கையாளர் அனுபவத்தினை விரிவாக்குதல்<br>• எமது மக்களூடாக வேறுபடுத்துதல் | • நற்பெயர் இடர்<br>• த.தொ. மற்றும் தகவல் பாதுகாப்பு இடர் |

## 2021/22 இலக்குகளில் அடைந்த முன்னேற்றம்

| | |
|---|---|
| வணிகச் செயல்முறைகளை மீள்-உண்டாக்குதல்<br>பிராந்திய செயற்பாடுகள் கண்காணிப்பு முறைமைகளை வெற்றிகரமாக அமுல்படுத்தியதுடன் கடன் அங்கீகார செயல்முறையினை விரைவுபடுத்துவதற்காக CAPP செயல்முறையினை அறிமுகப்படுத்துதல் | |
| தாள்களற்ற இயக்கம்<br>இ.-குறிப்பாணைகளற்ற, DCHEQUE செயல்முறை மற்றும் டிஜிட்டல் மேடையினூடாக சபையின் ஆவணங்களை செயல்முறைப்படுத்தல் | |

முன்னேற்றச் சாவி

முன்னெடுக்கப்பட்டது | தொடர்கின்றது | நிறைவுசெய்யப்பட்டது | அடையப்படவில்லை

## நி.அ.இ. க்கான பங்களிப்புகள்




## வெற்றியினை அளவிடுதல்

### வினைத்திறன் (வருமானத்திற்காக கிரயம்)




### வணிகநாமப் பெறுமதி மற்றும் சந்தை மூலதனவாக்கம்




### மௌனமாக அறிவு




வணிகநாமப் பெறுமதி
**Rs. 6.51 billion** ஆக
பிராண்ட் பைனான்ஸ் ஸ்ரீலங்காவினால் மதிப்பிடப்பட்டது.

# அறிவுசார் மூலதனம்




## பாராட்டுக்கள்

- “அடுத்த 100 உலகளாவிய விருதுகள் 2021” இடையே தரவரிசைப்படுத்தப்பட்டது உலகளாவிய வங்கியியல் மற்றும் நிதியியல் விருதுகளில் வங்கியியல் அல்லாத நிதி நிறுவனங்கள் பிரிவில்.
- 2021 க்கான இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனங்களில் 48 ஆவது தரமாக LMD இனால் வரிசைப்படுத்தப்பட்டது.
- 2021 இல் பிஸ்னஸ் டுடே இனால் “முதல் 40” இல் 27ஆவது தரமாக வரிசைப்படுத்தப்பட்டது.
- ப்ரான்ட்ஸ் எனுாவல் 2021 இனால் இலங்கையின் உயர்ந்த தரமுடைய நிதிச் சேவைகள் வழங்குநராக வரிசைப்படுத்தப்பட்டது.
- ப்ரான்ட்ஸ் எனுாவல் 2021 இல் குத்தகைப் பிரிவில் நாட்டிலுள்ள “மிகவும் விருப்பமுடைய வணிகநாமங்களில்” 1 ஆம் தரமாக வரிசைப்படுத்தப்பட்டது.
- 2021 இல் கூட்டாண்மை அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மையுள்ள இலங்கையிலுள்ள 75 பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து முதல் 20 கம்பனிகளிடையே வரிசைப்படுத்தப்பட்டது.



## ஆண்டறிக்கை விருதுகள்

- கூட்டு இரண்டாவது வெற்றியாளர் (பிரிவு: நிதிச் சேவைகள்) - சிறப்பாக முன்னிலைப்படுத்தப்பட்ட ஆண்டறிக்கை விருதுகள், ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் விருது மற்றும் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தினால் கூட்டாண்மை ஆளுகை வெளிப்படுத்தல்கள் 2020 க்கான சார்க் வருடாந்த விருது
- வெள்ளி விருது நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகள் (மொத்த சொத்துக்கள் ரூபா 20 பில்லியனுக்கு மேல்) பிரிவில் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் 56ஆவது ஆண்டறிக்கை விருதுகள் வைபவத்தில்.
- இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்களினால் 2021 இன் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் CMA தனிச்சிறப்பு விருதுகளில் “சிறந்த பத்து ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கைகள்” இடையே வரிசைப்படுத்தப்பட்டது.
- 2021 இன் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் CMA தனிச்சிறப்பு விருதுகளில் “மூலோபாய முன்னிறுத்தலிலான சிறந்த வெளிப்படுத்தல்”



# அறிவுசார் மூலதனம்

GRI | 102-2

### எமது வணிகநாமம்

நாம் இவ்வருடத்தில் எமது 25ஆவது ஆண்டுவிழாவினை கொண்டாடும்வேளை எமது அற்புதமான பயணத்தினை சாத்தியமாக்கிய எமது வாடிக்கையாளர்களுக்கு நன்றி கூறுவதற்கு இது பொருத்தமான நேரமாகும். இந்த மைல்கல்லான வருடத்தில் குத்தகைத் துறையில் இலங்கையின் மிகவும் விரும்பப்படும் வணிக நாமமாக நாம் வருவதனை இவர்களது உறுதுண இயலுமையாக்கியது. இது கூட்டாண்மை விழுமியங்களுக்கான திடமான கடப்பாட்டினூடாக நாம் கட்டியெழுப்பிய நற்பெயர் மற்றும் எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் உருவாக்கிய பெறுமதியினை உறுதிப்படுத்துகின்றது. எமது வணிக நாமத்தின் பெறுமதியானது 2022 இல் ப்ரான்ட்ஸ் வைனான்ஸ் ஸ்ரீலங்காவினால் ரூ. 6.51 பில்லியனாக மதிப்பிடப்படடது. முன்னைய பக்கங்களில் குறிப்பிடப்பட்ட பாராட்டுக்கள் 380,000 க்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு நிதிக்கான அணுக்கத்தினை வழங்குவதன் மூலம் பல வருடங்களாக கட்டியெழுப்பிய நம்பிக்கையானது இதற்கு சான்று பகர்கின்றது.

எமது செயற்திறனை அறிக்கையிடுவதில் வெள்ப்படைத்தன்மைக்கான எமது கடப்பாடானது வணிக நாமத்தினை கட்டியெழுப்புவதற்கு துணைபுரிந்துள்ளது. பீபள்ஸ் லீசிங் உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்புடன் நிலைபேறான அறிக்கையினை ஆரம்பத்திலேயே கடைப்பிடித்ததுடன், பலவருடங்களாக வளர்ந்துள்ளதுடன் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் வரம்புறுகைக்கு சேர்க்கின்றது. இன்று சிறப்பாக அறிந்துகொள்ளப்படும் தனிச்சிறப்பான சூசஆ அறிக்கையிடலுக்கான எமது வேட்கையானது தேசிய விருது நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மிகவும் சமீபத்தில் சர்வதேச விருது நிகழ்ச்சித்திட்டங்களினால் எமது முயற்சிகளுக்கான ஆரம்ப அங்கீகாரங்களினால் எழுச்சியூட்டப்பட்டது. கடந்த தசாப்தத்தில் மற்றும் அறிக்கையிடும் வருடத்திலும் நாம் கூட்டாண்மை அறிக்கையிடுவதில் தனிச்சிறப்பிற்கான பல விருதுகளை வென்றோம். அறிக்கையிடப்படும் வருடத்தில் வென்ற விருதுகள் முன்னைய பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பக்கங்கள் 124 முதல் 155 வரை காணப்படும் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையானது எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடலானது எமது ஆளுகை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறைகளில் புகுத்தப்பட்டுள்ளது என்பது பற்றிய மேலதிக தகவல்களை வழங்குகின்றது. விரைவாக வெளிப்படும் இந்த பிரிவிற்கான அளவுகோல்களுக்கு பங்களிப்பு செய்யவும் நிறுவுவதற்கும் நாம் கடப்பாட்டுடன் உள்ளோம்.



## டிஜிட்டல் உருமாற்றம்

பீபள்ஸ் லீசிங் அதன் டிஜிட்டல் உருமாற்றத்தில் கணிசமானளவு முன்னேற்றத்தினை மேற்கொண்டதுடன், எமது பணியாட்கள் அவர்களது வழமையான பணியினை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் செய்வதற்கு அதிகாரமளிக்கும் பல பிரயோகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி சமீபத்தில் அதன் மொபைல் செயலியான - PLC டச் - இனை சௌகரியமான பயனாளர்களது அனுபவத்திற்கு வசதியளிப்பதற்காக வெளியிட்டது. இந்த நவீன செயலியானது ஒரு காப்புறுதி கூறு உள்ளடங்கலான சுவாரசியமான சிறப்பியல்புகளை கொண்டுள்ளதுடன் இது இலங்கையில் வங்கியியலுக்கான முதலாவது செயலியாகும்.

சந்தையில் இத்தகைய தன்மையான கருவியினை வழங்கும் முதலாவது வ.அ.நி.நி. பீபள்ஸ் லீசிங் ஆகும். இது QR குறி அடிப்படையானதும் மற்றும் பயன்பாடு பட்டியல் கொடுப்பனவுகள், சேமிப்பினை முகாமைப்படுத்துவதற்கான ஆற்றல் மற்றும் ஏதேனும் வங்கியுடனான வேறு ஏதும் கணக்கினை சார்பிடல் நடவடிக்கையினையும் செய்யக்கூடியதாயிருக்கும். அத்துடன், PLC கடன் மற்றும் குத்தகை வாடகைக் கொடுப்பனவுகளையும் இந்த செயலி மூலம் எந்த வங்கியினூடாகவும் மேற்கொள்ளலாம், “Call & Go” பண்பானது ஒரு விபத்து நிகழும்போது கோரல் செயல்முறையினை இலகுவாக்கும் மற்றும் சிரமமாக தாள் பணியின்றி சில வினாடிகளில் ஒரு புதிய காப்புறுதிக் கொள்கையினை பெறுவதற்கான ஆற்றல் என்பனவாகும்.







பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி மற்றும் அதன் இணை நிறுவனமான பீபள்ஸ் இன்சூரன்சுடன் மக்கள் வங்கியுடன் கூட்டாக சேர்ந்து வாடிக்கையாளர் சௌகரியத்தினை மேம்படுத்துவதற்காக அனைத்து வாடிக்கையாளர் கொடுப்பனவுகளுக்குமான ஒரு பன்முக-சேவை வலையமைப்பினை ஆரம்பித்தது. இந்த சமீபத்தைய சேவை வசதியானது “பீபள்ஸ் Pay Way” ஆக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் மக்கள் வங்கியின் சுய வங்கியியல் அலகானது தற்போது பீபள்ஸ் லீசிங்கின் குத்தகை/கடன் தவணைகள், தங்கக் கடன் கொடுப்பனவுகள் மற்றும் பீபள்ஸ் இன்சூரன்சின் காப்புறுதித் தவணைக் கொடுப்பனவுகளுக்கும் வசதியளிக்கின்றது. வாடிக்கையாளர்கள் அவர்களது தவணைப்பணங்களை அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவினை காசாக காசு வைப்பு இயந்திரங்களை பயன்படுத்தி (CDM) பீபள்ஸ் Pay Way ஊடாக மேற்கொள்ளலாம். மற்றும் மக்கள் வங்கியின் KIOSK இயந்திரங்கள் ஊடாக கடன்/வரவு அட்டைகளை பயன்படுத்தலாம்.

**CAPP** இனது ஆரம்பமானது எமது விற்பனை குழுக்களுக்கு வலுவளித்துள்ளதுடன், கடன் பிரேரணைகளை ஒரு இயங்கலை வாயிலூடாக ஆரம்பிப்பதனை இயலுமையாக்குதல், இது ஒரு தடையற்ற இயங்கலை அங்கீகார செயல்முறையூடாக நகர்வதுடன் வாடிக்கையாளர் சுழற்சி நேரத்தினை கணிசமானளவு மேம்படுத்தும்.

**DCHEQUE** என்பது மக்கள் வங்கியின் கூட்டுச்சேர்ந்து பீபள்ஸ் லீசிங் த.தொ. குழுவினால் விருத்திசெய்யப்பட்ட மற்றுமோர் டிஜிட்டல் உருமாற்றல் முன்னெடுப்பாகும். இந்த புதிய கொடுப்பனவு முன்மொழிவானது SLIPS, CEFT, RTGS மற்றும் உள்வாரி நிதி மாற்றல் தெரிவுகளையும் உள்ளடக்குகின்றது. இந்த தீர்வானது வடிவமைக்கப்பட்டு மக்கள் வங்கியுடன் இடைமுகப்பிடப்பட்டுள்ளதுடன், மேடையின் மூலம் வழங்கப்படும் கொடுப்பனவுகளை சரிபார்ப்பதற்கான மிகவும் பாதுகாப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வழியினை உறுதிசெய்வதற்காகும். இது பௌதீக கையொப்பத்திற்கான தேவையினை, டிஜிட்டல் கையொப்ப அச்சிடுதலை இயலுமையாக்குவதன் மூலம், அகற்றுவதற்கு வசதியளிப்பதுடன் இது ஒரு பாதுகாப்பான அங்கீகார செயல்முறையின் அடிப்படையில் கம்பனியின் கொடுப்பனவுகளை தன்னியக்கமயமாக்குகின்றது.

**இணையவழி மேடைகளின் பயனுறுதித்தன்மை**

| | |
|---|---|
| மொத்த செயலுறும் பயனாளர்கள் | 97 |
| செயலுறும் வழிகள் | 53 |
| விருந்தினர்கள் | 1 |
| ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டங்கள் | 512 |

எமது டிஜிட்டல் உருமாற்றல் இயக்கத்தின் ஒரு அங்கமாக பல செயல்முறை முன்னேற்றங்களும் மேற்கொள்ளப்பட்டன.

எமது மனித வள தகவல் முறைமைகள் (HRIS) தரமுயர்த்தப்பட்டதுடன் ஒரு புதிய பயிலுதல் முகாமைத்துவ தீர்வு (LMS) ஆகியன பணியாட்களது அறிவு மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்டன. அதேசமயம், ஒரு புதிய கையிருப்பு முகாமைத்துவ முறைமை மற்றும் இ-குறிப்பாணை பணிப்பாய்வு முகாமைத்துவ முறைமை என்பனவும் தாள்களற்ற இயக்க முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக அமுல்படுத்தப்பட்டன.

# அறிவுசார் மூலதனம்

டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் பருமன்கள்




டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் பெறுமதிகள்




**எமது கலாச்சாரம்**

கூட்டாண்மை கலாச்சாரமானது ஒரு நிறுவனமாக நாம் யார் என்பதை வரையறை செய்கின்றது. பீபள்ஸ் லீசிங் ஒரு திறந்த மற்றும் ஒத்துழைப்பான கலாச்சாரத்தினை வளர்ப்பதுடன் இங்கு எமது விழுமியங்கள் வலுவூட்டப்படுகின்றது. பங்காளிகளது அக்கறைகளை சமநிலைப்படுத்துவதற்கான அவசியமானது நன்கு புரிந்துகொள்ளப்படுவதுடன் பொருத்தமான விதத்தில் மீள்அளவீடு செய்யப்படுகின்றது, குறிப்பாக, கடந்த மூன்று வருடங்களில் கண்டது போன்று மிகவும் அழுத்தமான நேரத்திலாகும். வாடிக்கையாளர் மையப்படுத்தலானது செயல்முறை மற்றும் இடர் விழிப்புணர்வுகளை உரியவாறு கவனத்திலெடுத்து சமநிலைப்படுத்தப்படுகின்றது. பணியாட்கள் அவர்களது அக்கறைகளை தெரிவிப்பதற்கு ஊக்குவிக்கப்படுவதுடன் தொடர்ச்சியாக உருவாகின்ற ஒரு நிறுவனத்தில் மாற்றங்களை இயக்குவதற்கான பொறுப்பினை ஏற்பதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். நிறுவனத்தினுள்ளான டிஜிட்டல் உருமாற்றமானது எமது மக்களின் பயனுறுதிறனையும் உருமாற்றுவதுடன் டிஜிட்டல் இயலுமையான தொழிற்சேனையினை உருவாக்குவதுடன் அது பல்வேறு கட்டங்களில் உள்ள வாடிக்கையாளர்களது டிஜிட்டல் பயணத்தில் அவர்களுடன் இணைக்கப்படும். வேறுபட்ட திறன்கள், இடம், பால், இனம், மதம், வயது மற்றும் ஏனைய வரன்முறைகளின் மூலம் வளப்படுத்தப்பட்ட ஒரு கலாச்சாரம் என்பதுடன் இது எமது தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் இலக்குகளை நோக்கி நாம் கூட்டாக ஒத்திசைவாக பணிபுரியும் கலாச்சாரமாகும்.




**அனுபவ அறிவு, திறன் மற்றும் அனுபவம்**

எமது பணியாட்களின பயிற்சி, வழிப்படுத்தல் மற்றும் அபிவிருத்திக்கு பீபள்ஸ் லீசிங் கடப்பாட்டுடன் உள்ளதுடன் கம்பனியின் அனுபவ அறிவினை வளர்ப்பதுடன் இது நாம் எவ்வாறு வணிகம் செய்கின்றோம் என்பதன் ஒவ்வொரு அம்சமும் அடிகோலிடுகின்றது. பலவருடங்களாக வளர்க்கப்பட்ட வழிப்படுத்தல் கலாச்சாரமானது புதிய சந்ததியான பணியாட்களுக்கு நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களை பகிர்ந்துகொள்வதில் ஒரு முக்கிய பலமாகும் என்பதுடன் இது முறையான பயிற்சியின்போது வலியுறுத்தப்படுகின்றது. அனுபவ அறிவினை தக்கவைப்பதற்கு துணைபுரிவதற்காக மக்களை நிறுத்திவைப்பதற்கு துணைபுரிவதற்காக குழுமமானது போட்டியான ஊதியத்தினை வழங்குகின்றது. தொற்றானது பயிற்றுவித்தலை இடையூறு செய்ததனால் நாம் கடந்த இரண்டு வருடங்களில் கணிசமானளவு அனுபவபூர்வமான அறிவில் தங்கியிருந்தோம் என்பது முக்கியமானதாகும் என்பதுடன் தற்போது பயிற்றுவித்தல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. முன்நிகழ்ந்திராத சவால்களுக்கு தீர்வுகளை காண்பதற்கு நாம் தொழிற்பட்ட கடந்த மூன்று ஆண்டுகளில் பெற்ற அனுபவத்திற்கு புத்தக வழிகாட்டி மட்டுப்பட்டது என்பதுடன் அது நாம் எமது மீளெழுச்சியினை அதிகரிக்கும்வேளை நிறுவனத்தின் அனுபவரீதியான அறிவினை வளமாக்குவதற்கு சேவையாற்றியுள்ளது. நாம் எமது டிஜிட்டல் பயணத்தில் முன்னேறும்போது, எமது மக்களின் அனுபவரீதியான அறிவினை பயன்படுத்தி ஒரு டிஜிட்டல் யுகத்திற்கு பொருத்தமாக வடிவமைக்கப்பட்டு சந்தையில் எமது போட்டி வரம்பினை பராமரிப்பதில் ஒரு முக்கிய வெற்றிக்கான காரணியாகும்.

பணியாளொருவருக்கான சராசரி பயிற்றுவித்தல் மணித்தியாலங்கள்



## முன்னோக்கிய பாதை

| குறுங்காலம் 2022/23 | மத்திய காலம் - 3 வருடங்கள் | நீண்டகாலம் |
|---|---|---|
| • நிபுணரின் ஈடுபாட்டினை குறைப்பதன் மூலம் கடன் மதிப்பீட்டினை சீரமைப்பதற்கு புதிய கடன் உருவாக்கல் தீர்வு<br>• புதிய தவணைதவறுதல் முகாமைத்துவ தீர்வு - மீட்டல் முகவர்கள் மற்றும் நிறுவனத்தின் அனைத்து சேகரித்தல் பணியாட்களுக்கும் அவர்களது சேகரிப்பு முயற்சிகளை சீரமைப்பதற்காக ஒரு புதிய சேகரித்தல் தீர்வு.<br>• **e-KYC** - டிஜிட்டல் KYC என்பன இரண்டு பாகங்களைக் கொண்டதுடன் அவை இ-KYC மற்றும் ஒளித்தோற்ற தளத்திலான KYC. ஒரு தீர்வினை அல்லது உள்ளகத்தே விருத்திசெய்யப்பட்ட தீர்விலிருந்து மிகவும் பொருத்தமான தீர்வு தெரிவுசெய்யப்படும். | • முகாமைத்துவ தகவல் அமைப்புமுறை (MIS)/வணிக நுண்ணறிவு (BI) சாதனங்கள் - வணிக நுண்ணறிவு சாதனமானது துறையில் பரலாகப் பயன்படுத்தப்படுவதுடன் இது தீர்மானம் மேற்கொள்ளும் பணியாட்களுக்கு வலுவளிக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படும். | • முழு த.தொ. சேவையினையும் மேம்படுத்தி தரமுயர்த்துதல்<br>• ரோபொட்டிக் செயல்முறை தன்னியக்கமயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற உரிய நேரத்தில் பொருத்தமான நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தல் |

## நுண்ணறிவு மூலதன ஈடுகட்டல்கள்

நுண்ணறிவு மூலதனத்திலான முதலீடுகள் குறுங்காலத்தில் நிதியியல் மூலதனத்தில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. ஒரு மேம்பட்ட வணிகநாமப் பெறுமதியானது அதன் ஏற்புடைமையின் காரணமாக வருவாய் வளர்ச்சியினை விளைவித்ததுடன் நீண்டகாலத்தில் நிதியியல் விளைவுகளில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

பயிற்றுவித்தல் மற்றும் வழிப்படுத்தல் திட்டங்களினூடாக பணியாட்களின் அனுபவரீதியான அறிவினை வளர்த்தல் பணியாட்களது ஈடுபாட்டு மட்டங்கள் மற்றும் பணியாட்களது திருப்தியில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும்.

மேம்படுத்தப்பட்ட வணிகநாம நற்பெயரானது வாடிக்கையாளர் நம்பகத்தன்மையினை மேம்படுத்துகின்றது மற்றும் நீண்ட காலத்தில் வாடிக்கையாளர் உறவினை பலப்படுத்துகின்றது. ஒரு திடமான வணிகநாம பெறுமதியானது வணிகப் பங்காளிகள் மற்றும் சமூகத்துடனான உறவுகளுக்கு சாத்தியமாக பங்களிப்பு செய்யும்.

டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் தன்னியக்கமயமாக்கல் முன்னெடுப்புச் சூழலிலான நேரடியான தாக்கத்தினை குறைக்கின்றது.



# மனித மூலதனம்

தொற்றின் காரணமாக ஏற்பட்ட இடையூறுகளை எமது பணியாட்கள் கடந்து செல்வதற்கு நாம் தொடர்ச்சியாக துணையளிப்பதுடன் ஒரு எதிர்கால பொருத்தமான குழுவினை உருவாக்குவதற்காக பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் நாம் முன்னிறுத்தம் செய்கின்றோம்.

**மனித மூலதனத்தின் கூறுகள்**



எமது பணியாட்களின் பன்முகமான திறன்கள், தகமைகள் மற்றும் கல்வி



எமது சிரேஷ்ட குழுவின் தொழில் அனுபவம்



எமது பணியாட்களின் அர்ப்பணிப்பு மற்றும் இயக்கம்

**மனித மூலதனத்தினை வளர்த்தல்**




**ஒட்டுமொத்த பெறுதி உருவாக்கம் நோக்கி மனித மூலதனத்திற்கு துணைபுரிதல்**

ஒரு சேவை நிறுவனமாக, 2,245 பணியாட்களைக் கொண்ட எமது குழுவானது எமது பெறுமதி உருவாக்கல் செயல்முறையில் ஒரு முக்கிய பங்கினை வகிப்பதுடன் சேவையின் தரம் மற்றும் வாடிக்கையாளர்களின் திருப்தி மட்டங்களுக்கு நேரடியாகப் பங்களிப்பு செய்கின்றது.

**முக்கிய விளைவுகள்**

- உயர்ந்த மட்டத்திலான வாடிக்கையாளர் திருப்தி
- ஆகக்குறைந்த இடையூறுகளுடன் செயற்பாடுகளின் தொடர்ச்சி
- கருவிகளது புத்தாக்கம்
- பணிபுரிவதற்கு சிறப்பான இடம்

| தொடர்புடைய பங்காளிகள் | மூலோபாயக் கட்டாயங்கள் | இடர்கள் |
|---|---|---|
|  | • நிலைபேறுள்ள வளர்ச்சியினை தொடருதல்<br>• எமது மக்களூடாக வேறுபடுத்துதல்<br>• ஒரு தலைமைத்துவ குழாய்வரிசையினை உருவாக்குதல்<br>• பாரபத்தியம் | • மனிதவள இடர் |

### 2021/22 இலக்குகளில் அடைந்த முன்னேற்றங்கள்

| | |
|---|---|
| பயிற்சி மற்றும் அபிவிருத்தியினூடாக பணியாட்களின் அறிவினை அதிகரித்தல்<br>அடைந்த முன்னேற்றம்<br>இலத்திரனியல் பயிலுதல் மேடைகளூடாக 62,742.55 பயிற்றுவித்தல் மணித்தியாலங்கள் இவ்வருடத்தில் நடாத்தப்பட்டன. | |
| முன்னேற்றச் சாவி | |

| | | | |
|---|---|---|---|
| முன்னெடுக்கப்பட்டது. | தொடர்கின்றது. | நிறைவு செய்யப்பட்டது | அடையவில்லை |

### நி.அ.இ. க்கான பங்களிப்பு




### வெற்றியினை அளவிடுதல்

பணியாட்களின் ஆக்கத்திறன்




மொத்த பயிற்றுவித்தல் மணித்தியாலங்கள்




பணியாட்களுக்காக மொத்த கொடுப்பனவுகள்




கடந்த மூன்று வருடங்களில் நிறுத்திவைக்கப்பட்ட சதவீதமானது சராசரியாக 91.59% ஆக காணப்பட்டதுடன் இது பணியாட்களிடையே ஒரு உயர்ந்த திருப்தி சதவீதத்தினை பிரதிபலிக்கின்றது.

# மனித மூலதனம்

GRI | 102-8,405-1

## குழுவின் தோற்றுருவம்

### பால் அடிப்படையிலான பணியாட்களின் பகுப்பாய்வு

| ஆண் | வயதுவாரியாக | பெண் |
|---|---|---|
| 511 | 29 உம் அதற்கு குறைவானதும் 29 | 178 |
| 825 | 30-39 | 275 |
| 282 | 40-49 | 71 |
| 61 | 50-59 | 16 |
| 22 | 60க்கு மேல் | 4 |

| பணியாட்கள் வகை | வயது பகுப்பாய்வு (வருடங்கள்) > 60 | 50 - 59 | 40 - 49 | 30 - 39 | <= 29 |
|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட தலைமைத்துவம் | 1 | 23 | 13 | 2 | - |
| நடுத்தர முகாமையாளர்கள் | - | 8 | 37 | 5 | - |
| முன்னணி முகாமையாளர்கள் | | 11 | 87 | 46 | |
| நிறைவேற்றுநர்கள் | | 21 | 153 | 390 | 10 |
| நிறைவேற்றுநர் அல்லாதோர் | 25 | 5 | 40 | 631 | 656 |
| சிறுபகுதி பணியாட்கள் | | 9 | 23 | 26 | 23 |

வயதுவாரியான மொத்த பணிப்பாளர்கள்




| ஆண் | மாகாணவாரியானது | பெண் |
|---|---|---|
| 617 | மேல் | 288 |
| 169 | மத்திய | 51 |
| 102 | கிழக்கு | 15 |
| 67 | வடக்கு | 11 |
| 269 | தெற்கு | 62 |
| 128 | சபரகமுவ | 33 |
| 98 | வட மத்திய | 20 |
| 139 | வட மேல் | 41 |
| 112 | ஊவா | 23 |

மாகாணவாரியான மொத்த பணியாட்கள்




| ஆண் | பணியாட் மட்டம் வாரியாக | பெண் |
|---|---|---|
| 33 | சிரேஷ் தலைமைத்துவம் | 6 |
| 46 | நடுத்தர முகாமையாளர்கள் | 4 |
| 121 | முன்னணி முகாமையாளர்கள் | 23 |
| 455 | நிறைவேற்றுநர்கள் | 119 |
| 966 | நிறைவேற்றுநரல்லாதோர் | 391 |
| 80 | சிறுபகுதி பணியாட்கள் | 1 |

பால் ரீதியான பணியாட்கள்




### ஒப்பந்த வகையிலான பணியாட்களின் பகுப்பாய்வு

| | நிரந்தரம் | தகுதிகாண் | ஒப்பந்தம் | கூலியாள் |
|---|---|---|---|---|
| ஆண் | 1594 | 83 | 24 | 10 |
| பெண் | 511 | 24 | 9 | 10 |
| | | | | |
| மேற்கு | 855 | 35 | 15 | 7 |
| மத்திய | 212 | 5 | 3 | 3 |
| கிழக்கு | 102 | 14 | 1 | 0 |
| வடக்கு | 71 | 6 | 1 | 1 |
| தெற்கு | 311 | 15 | 5 | 2 |
| சபரகமுவ | 152 | 9 | 0 | 3 |
| வட மத்திய | 106 | 10 | 2 | 3 |
| வட மேல் | 167 | 9 | 4 | 1 |
| ஊவா | 129 | 4 | 2 | 0 |

*தொழிற்சேனை அனைத்தும் முழு நேர பணியாட்களைக் கொண்டதாகும்.

GRI 102-16, 407-1

## மனிதவள ஆளுகை

மனிதவள செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக ஒரு வலுவான ஆளுகைக் கட்டமைப்பானது காணப்படுகின்றது. பி.நி.அ. மற்றும் சபையின் மேற்பார்வையுடன் மனிதவள மூலோபாயத்தின் உருவாக்கல் மற்றும் செயல்முறையாக்கலுக்கு மனித வளங்கள் பிரிவானது (HRD) பொறுப்பாளியாகும். வேதனங்கள் மற்றும் பெயரிடல் குழுவானது மனித வளப் பிரிவின் ஒத்துழைப்புடன் நடாத்தப்படும் மீளாய்வுகளின் அடிப்படையில் சிபாரிசுகளினால் துணையளிக்கப்படுகின்றது.

மனித மூலதனத்தின் பயனுறுதிமிக்க முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக்கு வசதியளிப்பதற்காக ஒரு விரிவான ம.வ. கொள்கை வரம்புறுகையும் விருத்திசெய்யப்பட்டுள்ளது. இந்த கொள்கைகள் மாற்றமடையும் தேவைப்பாடுகளை பிரதிபலிப்பதற்காக தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றது. இவ்வாண்டில், நடத்தை விதிக்கோவை மற்றும் ஒழுங்குசார் செயல்முறையானது இற்றைப்படுத்தப்பட்டது. நாம் மனக்குறை கையாளும் பொறிமுறையினையும் முறைமைப்படுத்தினோம். அதேசமயம், பதவியுயர்வு கொள்கைகள், சமூக ஊடக கொள்கை, தொலைதூர அணுக்கக் கொள்கை, மொபைல் தொலைபேசி பாவனைக் கொள்கை மற்றும் வீட்டிலிருந்து பணிபுரியும் கொள்கை உள்ளடங்கலான பல கொள்கைகள் இவ்வருடத்தில் மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன.

எமது டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகளின் ஒரு அங்கமாக, மனித வள செயற்பாட்டின் செயற்பாட்டு வினைத்திறன்களை அதிகரிப்பதற்காக நாம் எமது மனித வளங்கள் தகவல் முறைமையினை தரமுயர்த்தும் செயல்முறையில் உள்ளோம். புதிய முறைமையின் பயனாளர் ஏற்புமை பரிசீலனையானது (ருயுலு) தற்போது நடைபெற்றுக்கொண்டுள்ளதுடன் இம்முறைமையினை பயன்படுத்துவதற்கு ம.ச. பணியாட்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

ஒரு பொறுப்பான கூட்டாண்மை நிறுவனமாக, சிறார் தொழில் மற்றும் பலவந்தமான / கட்டாயமான தொழில் தொடர்பான அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் கடுமையாக கடைப்பிடிக்கப்படுவதனை நாம் உறுதிசெய்கின்றோம். இவ்வருடத்தில் தொழில் அல்லது வேறு ஏதேனும் சட்டங்களுடன் இணக்கப்பாடற்ற சந்தர்ப்பங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.




GRI 401-1

## ஆட்சேர்ப்பு மற்றும் புரள்வு

தொற்றினால் ஏற்பட்ட இடையூறுகள் தொடர்வதற்கு மத்தியில் எமது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இவ்வருடத்தில் மும்முரமாகின. இவ்வருடத்தில் மொத்தமாக 144 புதிய பணியாட்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் எமது புதிய ஆளெடுப்பில் அனேகமானோர் நிறைவேற்றுநரல்லாத சேனையாகும்.

எமது ஆட்சேர்ப்பு கொள்கைகள் சரியான ஆற்றலை சரியான பணிக்கு ஒரு நியாயமான மற்றும் வெளிப்படையான விதத்தில் கவர்வதனை நோக்காகக் கொண்டதாகும். சாத்தியமான விண்ணப்பிப்பவர்கள் ஒரு கட்டமைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு செயல்முறையினூடாக செல்வதுடன் பதவி மற்றும் கம்பனிக்கு சிறந்த பொருத்தமானவரை நாம் பணிக்கமர்த்துவதனை உறுதிசெய்வதற்காகும். அதேசமயம், ஒரு சமமான வாய்ப்பு பணிக்கொள்பவராக நாம் எந்த ஒரு விண்ணப்பிப்பவருக்கும் பால், வயது, இனம் அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் பாகுபாடு காட்டாமல் இருப்பதனை உறுதிசெய்கின்றோம்.

| | புதிய பணியாளர்கள் | வெளியேறல் |
|---|---|---|
| பால் | | |
| ஆண் | 102 | 176 |
| பெண் | 42 | 45 |
| | | |
| வயது | | |
| 29 உம் அதற்கு குறைவானதும் | 113 | 117 |
| 30-39 | 18 | 75 |
| 40-49 | 4 | 14 |
| 50-59 | - | 7 |
| 60க்கு மேல் | 9 | 8 |
| | | |
| மாகாணம் | | |
| மேல் | 50 | 120 |
| மத்திய | 5 | 15 |
| கிழக்கு | 15 | 5 |
| வடக்கு | 7 | 19 |
| தெற்கு | 21 | 15 |
| சபரகமுவ | 10 | 9 |
| வட மத்திய | 14 | 7 |
| வட மேல் | 14 | 27 |
| ஊவா | 8 | 4 |
| மொத்தம் | **144** | **221** |

*ம.வ.,வேதன மற்றும் பெயரிடல் குழுவானது 27 ஜனவரி 2022 முதல் இடைநிறுத்தப்பட்டதுடன் பொறுப்புக்கள் இரண்டு தனித்தனியான சுயாதீன உப குழுக்களான மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு மற்றும் பெயரிடல் குழு ஆகியவற்றுக்கு மீள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# மனித மூலதனம்

**எமது பணியாட்களுக்கு வலுவளித்தல்**

மாற்றத்தினை தழுவிக்கொள்வதற்கு ஆற்றலும் விருப்பமுள்ள ஒரு வலுவளிக்கப்பட்ட குழுவினை உருவாக்குதல் ஒரு முக்கியமான வெற்றிக் காரணி என்பதுடன் இது நாம் ஒரு அதிகளவில் சிக்கலான செயற்பாட்டு சூழலில் செல்லும்போதாகும்.




ஒரு வலுவளிக்கப்பட்ட குழு

GRI 404-1

## பயிற்சி மற்றும் அபிவிருத்தி

ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் தொழில்நுட்ப மற்றும் மென் திறன்களை மேம்படுத்திக்கொள்வதற்காக பணியாட்களுக்கு ஒரு பரந்த அளவிலான பயிற்சிக்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறுகின்றன. பணியாட்களுக்கு ஆகப் பரந்தளவிலான வெளிப்பாட்டினை உறுதிசெய்வதற்காக பயிற்சித் திட்டங்கள் உள்ளக வளவாளர்கள் மற்றும் வெளிவாரி வளவாளர்களது ஈடுபாட்டுடன் நடாத்தப்படுகின்றது.

பயிற்றுவித்தல் தேவைகள் செயற்திறன் மதிப்பீட்டு செயல்முறையினூடாக இனங்காணப்படுவதுடன் காலாகால பயிற்றுவித்தல் தேவைகள் பகுப்பாய்வினூடாக நிறுவனத்தின் மூலோபாய தேவைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. பயிற்றுவித்தலின் பின்னரான மதிப்பீடுகள் விளைவினை மதிப்பிடுவதற்காக நடாத்தப்படுகின்றன.

தொற்றினால் பௌதீக பயிற்றுவித்தல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் தாக்கமடைந்துள்ளதுடன், எமது பயிற்றுவித்தல் நடவடிக்கைகள் தடையின்றி தொடரப்படுவதற்கு நாம் இலத்திரனியல் பயிலுதல் மேடைகளுடாக வழங்கப்படும் பயிலுதல் வாய்ப்புக்களை மெல்ல மெல்ல அதிகரித்தோம். இவ்வருடத்தில், நாம் ஒரு பயிலுதல் முகாமைத்துவ தீர்வினை ஆரம்பித்ததுடன் இதன் மூலம் இ-பயிலுதல் மணித்தியாலங்களின் சதவீதத்தினை அதிகரித்ததுடன் எமது பணியாட்களுக்கு ஒரு பரந்த புத்தாக்கமாக பயிற்றுவித்தல் தெரிவுகளை வழங்கக்கூடியதாயிருந்தது.

**பாலினம் மற்றும் பணியாட்கள் வகை வாரியாக சராசரி பயிற்றுவித்தல் மணித்தியாலங்கள்**




| பயிற்சி முன்னிறுத்தல் பிரிவு | பயிற்றுவித்தல் மணி. |
|---|---|
| கிளைச் செயற்பாடுகள் | 1,067 |
| இணக்கப்பாடு | 2,149.1 |
| முறைமைப்படுத்தல் | 41 |
| சந்தைப்படுத்தல் | 1,137 |
| கடன் | 1,168 |
| தலைமைத்துவம் | 2,086 |
| மென் திறன்கள் | 39,128 |
| ஏனையவை | 1,245.5 |
| மொத்தம் | **48,021.60** |

மேற்குறிப்பிட்டதற்கும் மேலாக, இவ்வருடத்தில் பயிலுதல் முகாமைத்து முறைமையினூடாக 62,742.55 பயிற்றுவித்தல் மணித்தியாலங்கள் நடாத்தப்பட்டன.

## செயற்திறன் முகாமைத்துவம்

இவ்வருடத்தின் ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளின் (மு.செ.கு.) (KPI's) அடிப்படையில் பணியாட்கள் மதிப்பிடப்பட்டார்கள். தொற்றினால் ஏற்பட்ட இடையூறுகளின் மத்தியில் இவ்வருடத்தில் அனைத்து பணியாட்களும் செயற்திறன் மதிப்பீட்டு மீளாய்வினைப் பெற்றார்கள். தலைமைக் காரியாலயத்திற்கு ஒரு உள்வாரி மதிப்பீட்டு முறையானது அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இது கம்பனி முழுவதும் அடுத்த மதிப்பீட்டு சுழற்சியில் மேற்கொள்ளப்படும். இவ்வருடத்தில் தலைமைக் காரியாலய பணியாட்களுக்கு எமது அனைத்து மு.செ.கு. களையும் வெளிவருகின்ற சந்தை நிலைமைகளின் அடிப்படையில் நாம் இற்றைப்படுத்தினோம். நாம் சிரேஷ்ட முகாமையாளர்களுக்கும் பிரதம முகாமையாளர்களுக்கும் ஒரு புதிய செயற்திறன் முகாமைத்துவ முறையினை விருத்திசெய்யும் செயல்முறையில் உள்ளதுடன் இது செயற்திறனுக்கும் அங்கீகாரத்திற்கும் இடையே சிறந்த ஒருங்கிணைப்பினை கொண்டுவருவதற்காகும்.

## தொழில் முன்னேற்றம் மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி

தலைமைத்துவ பதவிகள் உள்ளடங்கலாக அனைத்து பதவிகளும் முதலாவதாக உள்வாரியாக விளம்பரப்படுத்தப்படுகின்றது. இது உள்வாரி பணியாட்களுக்கு தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகும். அதேசமயம், நிறுவனத்தினுள்ளே முகாமைத்துவ பதவிகளுக்காக பணியாட்களை இனங்கண்டு அபிவிருத்தி செய்வதற்காக தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி மற்றும் தொழில் புரியும்போதான பயிற்சி என்பற்றை உள்ளடக்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட செயல்முறை காணப்படுகின்றது. இவ்வருடத்தில் காணப்பட்ட ஒரு முக்கிய முன்னெடுப்பாக கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கு சிறந்த பங்கில் தெளிவினைக் கொண்டுவருவதற்காக எமது தொழில் மதிப்பீடுகள் மற்றும் தொழில் விளக்கத்தினை மேற்கொள்ளுதல் காணப்பட்டது. நிறுவனத்தினுள்ளே எமது பதவியுயர்வுகள் செயல்முறைகளை பலப்படுத்துவதற்காக இவ்வருடத்தில் ஒரு புதிய பதவியுயர்வு கொள்கையும் அங்கீகரிக்கப்பட்டது.

எமது தலைமைத்துவ குழாய்வரிசையினை பலப்படுத்துவதற்காக இவ்வருடத்தில் நாம் ஒரு தலைமைத்துவ உருமாற்றல் திட்டத்தினையும் முன்னெடுத்தோம். இத்திட்டமானது இனங்காணப்பட்ட தலைமைத்துவ சாத்தியமுள்ள பணியாட்களுக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களை உள்ளடக்கியது.

## பணியாட்களுடனான ஈடுபாடு

பணியாட்களுடனான தொடர்ச்சியான ஈடுபாடானது பணியாட்களது குரல்கள் கேட்கப்படுவதனையும் நிறுவனத்தின் வளர்ச்சிப் பயணத்தில் அவர்களும் மெய்யான பங்காளிகள் என்பதை உறுதிசெய்கின்றது. பணியாட்களுடனான ஈடுபாடானது பணியாட்களிடையே தோழமையினை கட்டியெழுப்புவதற்கு உதவும் என்பதுடன் இது அவர்களிடையே ஒரு திடமான கூட்டுணர்வினை

ஏற்படுத்துகின்றது. சுகாதார கட்டுப்பாடுகளின் காரணமாக வருடத்தில் பல திட்டமிடப்பட்ட பணியாட்கள் ஈடுபாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலவில்லை என்பதுடன் நாம் பி.நி.அ. தலைமையிலான வினா விடைக் கூட்டங்களை மீள் ஆரம்பித்ததுடன் இங்கு பணியாட்கள் முன்னோக்கிய பாதை குறித்து முக்கிய முன்னுரிமைகள் தெரிவிக்கப்படுகின்றது. நாம் பல பாட்டுப் போட்டி போன்ற இயங்கலை மற்றும் பௌதீக ஈடுபாட்டு நடவடிக்கைகள் , PLC விருது வழங்கல் வைபவம் - 2020/21 (இயங்கலை ஈடுபாட்டு நடவடிக்கைகள்) மற்றும் தனித்தனியான பிரிவுகளது பங்களிப்பவர்களுக்கான கூட்டங்கள் (பௌதீக ஈடுபாட்டு நடவடிக்கைகள்) என்பவற்றை மேற்கொண்டோம். அதேபோன்று ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள பணியாட்கள் ஒரு இயங்கலை மூலோபாய மன்றத்தினூடாக செயற்பாட்டு தனிச்சிறப்பினை மேம்படுத்துவதற்காக கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் பங்களிப்பு செய்வதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றார்கள்.

பணியாட்களுடனான ஈடுபாட்டிற்கான எமது முயற்சிகளின் ஒரு அங்கமாக நாம் இவ்வருடத்தில் எமது குறைதீர்த்தல் கையாளுதல் பொறிமுறையினையும் பலப்படுத்தினோம். இதற்கமைய, ஒரு ஏற்றல் பொறிமுறைக்கு மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நம்பிக்கையினை உறுதிசெய்வதற்காகவும் வழிகாட்டிகள் விருத்திசெய்யப்பட்டன.

**பணியாட்கள் ஈடுபாட்டு பொறிமுறைகள்**

- அகஇணையம்
- மின்னஞ்சல்கள் மற்றும் குறிப்பாணைகள்
- புதிய கொள்கைகளும் கொள்கை சீராய்வுகள்
- கிளை விஜயங்கள்
- இயங்கலை கூட்டங்கள் மூலோபாய திட்டமிடல் அமர்வுகள்
- பீபள்ஸ் அறிவு மையம்
- ம.வ. வாசல்
- பணியாளர் ஒன்றியம்
- குறைதீர்த்தல் பொறிமுறை
- டோஸ்ட்மாஸ்டரது கழகம்
- செயற்திறன் மதிப்பீடுகள்

GRI | 102-41, 407-1

## தொழிலாளர் உறவுகள்

எமது பணியாட்களில் 65.12% ஆனோர் எமது தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்களாயினும் கம்பனியானது சங்கத்துடன் எவ்வித கூட்டு ஒப்பந்தத்திலும் ஈடுபடவில்லை. கூட்டாண்மைக் குழுவின் மூன்று அங்கத்தவர்கள் சங்கத்தினால் எழுப்பப்படும் அக்கறைகளை விளித்துரைப்பதற்காகவும் சங்கத்துடன் தொடர்ச்சியாக கலந்துரையாடலில் ஈடுபடவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். குழுமச் சுதந்திரத்திற்கான உரிமையினை நாம் மதிப்பதுடன் எமது சங்கங்களுடன் தொடர்ச்சியான மற்றும் உள்ளன்புடனான உறவினை தொடர்ந்தும் பராமரிக்கின்றோம். ஏதேனும் கணிசமான செயற்பாட்டு மாற்றங்கள் முன்கூட்டியே பணியாட்களுக்கு அறியப்படுத்தப்படுகின்றது.

### எமது பணியாட்களை கவனித்தல்

எமது பணியாட்கள் எமது சிறந்த சொத்து என்பதுடன் அவர்களது பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வினை உறுதிப்படுத்துவதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளோம்.

GRI | 403-1, 403-2, 403-3, 403-4, 403-5, 403-6, 403-7, 403-9

## பணியாளர் ஆரோக்கியமும் பாதுகாப்பும்

இவ்வருடத்தில் எமது பணியாட்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது ஒரு முக்கிய அக்கறையாகக் காணப்பட்டது. எமது அனைத்து இடங்களிலும் உயர்ந்த பாதுகாப்பு விதிமுறைகளை கடைப்பிடிப்பதிலும் மேலாக, வீட்டிலிருந்து பணியுரிதல் தெரிவு, கர்ப்பிணி மற்றும் பாதிக்கப்படக்கூடிய பணியாட்களுக்கு கடமை/தளர்வான பணி, தொலைவிடங்களிலுள்ள பணியாட்களை அவர்களுக்கு மிகவும் அருகில் அமைந்துள்ள கிளைக்கு அறிக்கையிடுவதனை அனுமதித்தல், போன்ற வழிமுறைகளை மேற்கொண்டதுடன் இவ்வருடத்தில் பணியாட்களுக்கு நோய்தொற்றின் இடரினைக் குறைப்பதற்காக நாம் சீரற்ற என்டிஜென் பரிசீலனைகளை தொடர்ந்தோம். அதேசமயம், வைரஸினால் தொற்றுக்குள்ளான பணியாட்களுக்கு ஒரு கொடையினூடாக நிதி உதவிகளை வழங்கியும் ஒரு குடும்ப அங்கத்தவராயின் வட்டியற்ற கடனை பணியாட்களுக்கு வழங்கினோம். தனிமைப்படுத்தலுக்குள்ளான பணியாட்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

கோவிட்-19 இலிருந்தான ஆரோக்கிய அச்சுறுத்தலை விளித்துரைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட விசேட வழிமுறைகளுக்கு அப்பால், வழக்கமான தீ படைப்பயிற்சி, தீ பாதுகாப்பு உபகரணம் மற்றும் எமது அனைத்து இடங்களிலும் பயிற்றுவிக்கப்பட்ட தீ படைப்பயிற்சி தலைவர்களது நியமனம் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. வெளிவாரி மருத்துவ செலவினங்களுக்காக ஒரு காலாண்டு மருத்துவ படிகளும் பணியாட்களின் தரத்திற்கேற்ப மருத்துவமனைக்கான ஆரோக்கிய காப்புறுதியும் வழங்கப்படுகின்றது. எமது பணியாட்களின் பொதுவான நல்வாழ்வினை உறுதிசெய்வதற்காக தொடர்ச்சியான விழிப்புணர்வுத் திட்டங்களும் நடாத்தப்பட்டதுடன், ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான ஏதேனும் சாத்தியமான இடர்கள் அல்லது அக்கறைகளை எடுத்துக்காட்டுமாறு பணியாட்கள் ஊக்கமளிக்கப்படுகின்றார்கள்.

**கோவிட்-19 ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு பதிலளிப்பு**

- பெருக்கங்களை கண்காணிப்பதற்காகவும் முன்னெச்சரிக்கையான வழிமுறைகளை அமுல்படுத்துவதற்காக கோவிட்-19 விசேட செயலணி உருவாக்கப்பட்டது.
- வணிகத் தொடர்ச்சி திட்டத்தினை அமுல்படுத்தல்
- வீட்டிலிருந்து பணிபுரிதல் கொள்கை மற்றும் அவசியமான பணியாட்களுக்கான சுழற்சி பணிமாற்றம்
- பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு நெகிழ்வான தொழில் ஏற்பாடுகள்
- நிதியியல் உறுதுணை
- சீரற்ற என்டிஜென் பரிசீலனை உள்ளடங்கலாக கடுமையான பாதுகாப்பு விதிமுறைகள்



| பணி-தொடர்பான நலமின்மை | |
|---|---|
| பணி தொடர்பான நலமின்மையினை பதிவுசெய்யத்தக்க மொத்த விடயங்கள் | 03 |
| இந்த விபத்துக்களின் காரணமாக பதிவுசெய்யப்பட்ட இழந்த நாட்கள் | 78.5 |

GRI | 401-2

## வேதனம் மற்றும் நலன்கள்

இவ்வருடத்தில் பணியாட்களுக்கான மொத்த கொடுப்பனவுகள் ரூ. 4,002.41 மில்லியன் ஆகும். ஒரு நிலையான சம்பளம் மற்றும் கம்பனி மற்றும் தனிநபரின் செயற்திறனின் அடிப்படையிலான மாறுபடும் சம்பளக் கூறுக்கும் மேலாக பணியாட்கள் பரவலான நலன்களுக்கு உரிமையுடையவர்களாவார்கள். பீபள்ஸ் லீசிங்கின் சமத்துவ வாய்ப்புக் கொள்கைகள், வேதனம், அங்கீகாரம் மற்றும் வெகுமதி திட்டங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் போன்றவற்றில் பால், இனம், அல்லது வேறு ஏதேனும் வடிவிலான பாகுபாடுகள் காணப்படாததனை உறுதிப்படுத்துகின்றன. பீபள்ஸ் லீசிங், 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தொழிலாளர்களது தேசிய ஆகக்குறைந்த ஊதியச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஆகக்குறைந்த ஊதிய நியமத்திற்கேற்ற சம்பள விகிதங்களையும் 2016 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பாதீட்டு நிவாரணப் படிகள் சட்டத்தினால் நிறுவப்பட்ட ஆகக்குறைந்த பாதீட்டு படிகளையும் கடைப்பிடித்தது.

# மனித மூலதனம்

**நிரந்தர பணியாட்களுக்கு வழங்கப்படும் நலன்கள்**
ஊசேநி மற்றும் ஊநநி, மேலதிகநேரக் கொடுப்பனவு, லீவினைக் காசாக்குதல், பணிக்கொடை, மருத்துவ, விபத்து மற்றும் ஆயுள் காப்புறுதி | மருத்துவ காப்புறுதியினால் காப்பீடு செய்யப்படாத நோய்களுக்கான தீவிர நோய்கள் நிதியம் | ஒரு சலுகையான வாகனக் கடன் திட்டம் | வீட்டுக்கடன் வட்டிச் செலவீடுசெய்தல் திட்டம் | வரையறுத்த பணியாட்களுக்கான கையடக்கத்தொலைபேசியின் கிரயத்தினை செலவீடுசெய்தல் திட்டம் | இறுப்புக் கொடை நலன்கள் | தொழில்சார் பரீட்சைகளுக்கான பரீட்சைக் கட்டணங்களை செலவீடுசெய்தல் | பண்டாரவளையில் விடுமுறை பங்களா வசதி, மற்றும் வெளிமாவட்டங்களிலிருந்து விஜயம் செய்யும் பணியாட்களுக்கு சலுகையான வீதங்களில் மருதானை மற்றும் மஹாரகமவில் வதிவிட வசதிகள் | தலைமைக் காரியாலயத்தில் முழுவதுமான உபகரணங்களைக் கொண்ட உடற்பயிற்சிக் கூடம்.

| முக்கிய நலன்கள் | 2021/22 ரூ.மில்லியன் | 2020/21 ரூ.மில்லியன் |
|---|---|---|
| சம்பளங்கள் மற்றும் உபகாரச் சம்பளங்கள் | 2,526.68 | 2,190.18 |
| ஊ.சே.நி. | 195.50 | 188.76 |
| ஊ.ந.நி. | 48.89 | 47.46 |
| மேலதிக நேரம் | 33.16 | 29.02 |
| லீவினைக் காசாக்குதல் | 76.62 | 1.80 |
| படிகள் மற்றும் ஊக்கத்தொகைகள் | 873.71 | 731.06 |
| நாளாந்தக் கூலிகள் | 0.82 | 1.17 |
| மருத்துவக் காப்புறுதி | 164.14 | 164.18 |
| பணிக்கொடை | 82.89 | 111.74 |
| மொத்தம் | **4,002.41** | **3,465.37** |

GRI 406-1

## வேறுபாட்டிற்கு மதிப்பளித்தல்

வேறுபாட்டினை அதன் அனைத்து வடிவங்களிலும் ஏற்றுக்கொள்ளும் மற்றும் கொண்டாடும் ஒரு வேறுபாடான, உள்ளடக்கமான தொழிற்சேனையினை உருவாக்குவதற்கு நாம் கடப்பாடுடன் உள்ளோம். பால், இனம், மதம் அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் எந்தவிதமான பாகுபாட்டினையும் சகிக்காத கொள்கையினை நாம் கடைப்பிடிக்கின்றோம் என்பதுடன் இவ்வருடத்தில் பாகுபாடான நிகழ்வுகள் ஏதும் அறிக்கையிடப்படவில்லை என நாம் பொறுப்பாக கூறுகின்றோம்.

பாலின சமநிலைக்கான முயற்சித்தல் ஒரு முக்கிய முன்னிறுத்தம் என்பதுடன் நாம் இந்த முயற்சிகளில் ஒரு திடமான முன்னேற்றத்தினை தொடர்ந்தும் அடைகின்றோம். அடுத்துவரும் பாலின சமநிலை அறிக்கையில் அடைந்த முன்னேற்றங்களை அறிக்கையிட்டுள்ளோம். இந்த அறிக்கையானது இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் பாலின அறிக்கையிடல் வரம்புறுகைக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

### பாலின சமநில அறிக்கை

பெண்களுக்கு வலுவளிக்கும் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை கொண்டிருப்பதன் மூலம் பாலின சமநிலையினை ஊக்குவிக்கும் ஒரு கலாச்சாரத்தினை உருவாக்குவதற்கு நாம் கடும்முயற்சி எடுக்கின்றோம்.

**ஆக்க உணர்வுகள்**

**கொள்கைகள்**
- சமத்துவ வாய்ப்புள்ள பணிக்கொள்பவர்
- பாலியல் தொந்தரவிற்கெதிரான கொள்கை
- சம்பளத்தில் எவ்வித பாலின பாகுபாடும் இல்லை
- மனக்குறைக் கொள்கை

**பாலியல் சமநிலையினை ஊக்குவிக்கும் பணியிட நடைமுறைகள்**
- கடைகள் மற்றும் காரியாலய சட்டத்திற்கேற்ப மகப்பேற்று விடுமுறை
- கோவிட்-19 தொற்றின்போது கா்ப்பிணிப் பெண்களுக்கு நெகிழ்வான பணிபுரிதல் ஏற்பாடுகள்

**தொகுப்பு**

| | ஆண் | பெண் |
|---|---|---|
| ஆட்சேர்க்கைகள் | 102<br>70.83% | 42<br>29.17% |
| பதவியுயர்வுகள் | 837<br>77,07% | 249<br>22.93% |
| வெளியேறல்கள் | 176<br>79.64% | 45<br>20.36% |

*தொழில் பிரிவின் மூலம் பூகோளவியல் மூலமான பாலின முறிவுகளுக்கு பக்கம் 90 இனை பார்க்கவும்.

**பாலின இடைவெளி குறிகாட்டிகள்**

| | 2021 |
|---|---|
| ஒரு செயற்திறன் உபகாரச் சம்பளத்தினைப் பெற்ற பெண்களது விகிதம் | 24.23% |
| பயிற்சியினைப் பெற்ற பெண்களது சதவீதம் | 30.68% |
| பெற்றோர் விடுமுறைக்கு பின்னர் பணிக்குத் திரும்பிய மற்றும் பணிக்குத் திரும்பி 12 மாதங்களுக்கு பின்னர் இன்னமும் பணியிலுள்ள பெண்களின் சதவீதம் | 75.00% |

**பொறுப்புள்ள வணிகநாமம்**

ஒரு பொறுப்புள்ள வணிக நாமமாக நாம் எமது நிறுவனத்தினுள் மற்றும் பரவலான சமூகத்தில் பெண்களது வலுவளிப்பிலான ஒரு சாத்தியமான விவரணத்தை ஊக்குவிப்பதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளோம்.

பாலின சமநில அறிக்கை

| பணியாளர் பிரிவு | பாலினம் | அடிப்படை சம்பள விகிதம் |
|---|---|---|
| சிரேஷ்ட தலைமைத்துவம் | ஆ | 1.00 |
| | பெ | 0.72 |
| நடுநிலை முகாமையாளர்கள் | ஆ | 1.00 |
| | பெ | 0.86 |
| முன்னணி முகாமையாளர்கள் | ஆ | 1.00 |
| | பெ | 1.06 |
| நிறைவேற்றுநர்கள் | ஆ | 1.00 |
| | பெ | 1.11 |
| நிறைவேற்றுநரல்லாதோர் | ஆ | 1.00 |
| | பெ | 1.03 |
| சிறுபகுதி பணியாட்கள் | ஆ | 1.00 |
| | பெ | 1.06 |

## முன்னோக்கிய பாதை

### குறுங்காலம் 2022/23

- பயிலுதல் முகாமைத்துவ முறைமைகளின் உள்ளடக்கத்தினை மேம்படுத்தலானது சுய கற்றலுக்கு துணைபுரிவதுடன் இயங்கலை மேடைகளூடாக பயிற்சியினை விநியோகிப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகள்
- தற்போதைய வணிக அவசரங்களுடன் பொருத்தமாவதற்காக கட்டமைப்பு மாற்றங்கள் / பணியாட்களது மீள்கட்டமைத்தலுடன் பணியாட்களை புதிய பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு ஊக்கமளித்தல்

### மத்திய காலம் - 3 வருடங்கள்

- ம.வ. கடமைகளின் செயல்முறைகளது டிஜிட்டல் மயமாக்கலினை தொடர்தல்.
- சந்தை நிலைமைகளை பிரதிபலிப்பதற்காக செயற்திறன் மதிப்பீட்டு முறைமையினை சீரமைத்தல்
- விருதுகள் கொள்கையினை சீரமைத்தல்
- திடமான தலைமைத்துவ குழாய்வரிசையிலான ஒரு முன்னிறுத்தத்துடன் ஆற்றல் தேக்கத்தினை விருத்திசெய்வதனை தொடருதல்

### நீண்டகாலம்

- ஆட்சேர்த்தல், மாற்றல்கள், நீடிப்புகள் போன்ற ம.வ. செயல்முறைகளை அனைத்தையும் மறுசீரமைத்தல்
- வெளிப்படையான அங்கீகாரம் மற்றும் வெகுமதியளித்தல் திட்டம்.
- தொடர்ச்சிக்குத் திட்டமிடல்
- தேவைப்பாடுகளின் அடிப்படையில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி

## மூலதன ஈடுகட்டல்கள்

மனித மூலதனத்திலான முதலீடுகள் குறுங்காலத்தில் நிதியியல் மூலதனத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. எவ்வாறாயினும், குழுவின் தரமும் பணியாட்களின் ஆக்கத்திறமும் நிதியியல் மூலதனத்தில், குறுகிய, மத்திய மற்றும் நீண்டகாலத்தில் சாத்தியமான தாக்கத்தினைக் கொண்டுள்ளன.

தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தியானது அறிவுசார் மூலதனத்தினை மேம்படுத்தும்.

ஊக்கமளிக்கப்பட்ட மற்றும் ஈடுபாடுடைய பணியாட்கள் சிறந்த வாடிக்கையாளர் சேவையினை வழங்குவதுடன் இது சிறந்த வாடிக்கையாளர் உறவுக்கும் பங்களிப்பு செய்யும்.

சூழல் மற்றும சமூக உணர்வுகள் ஊக்குவிக்கும் பணியாட்களுடனான ஈடுபாடானது இயற்கை மூலதனத்தில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும்.



# சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

நாம் எமது வாடிக்கையாளர்கள், வணிகப் பங்காளிகள் மற்றும் சமூகத்துடன் அவர்களது வெளிப்படுகின்ற தேவைப்பாடுகளை செயற்திறனாக எதிர்பார்ப்பதன் மூலம் எமது உறவினை தொடர்ந்தும் பலப்படுத்தினோம்.

### சமூக மற்றும் உறவுமுறை மூலதனத்தின் கூறுகள்



வாடிக்கையாளர் உறவுகள்



மூலோபாய வணிகப் பங்காளிகளுடனான உறவுகள்



உள்ளூர் சமூகங்களுடனான உறவுகள்

### சமூக மற்றும் உறவுமுறை மூலதனத்தினை வளர்த்தல்




### ஒட்டுமொத்த பெறுமதி உருவாக்கல் நோக்கிய சமூக மற்றும் உறவுமுறை மூலதனத்திற்கான உறுதுணை

வாடிக்கையாளர்கள், வணிகப் பங்காளிகள் மற்றும் சமூகத்துடனான திடமான உறவுகள் எமது வணிகநாம படிமம் மற்றும் நீண்டகால நீடிப்புத்திறனுக்கு நேரடியாக பங்களிப்பு செய்கின்றது.

### முக்கிய விளைவுகள்

- 29,499 புதிய வாடிக்கையாளர்கள்
- திடமான வணிகப் பங்குடைமைகள்
- சமூக வலுவளிப்பினூடாக சாத்தியமான மாற்றத்தினை கொண்டுவரும் கூ.ச.பொ. முன்னெடுப்புகள்

**தொடர்புடைய பங்காளிகள்**



**மூலோபாயக் கட்டாயங்கள்**

- நிலைபேறுள்ள வளர்ச்சியினை தொடருதல்
- வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துதல்
- சூழல் மற்றும் சமூக காரணிகளை ஒருங்கிணைத்தல்

**இடர்கள்**

- நற்பெயர் இடர்
- செயற்பாட்டு இடர்

## 2021/22 இலக்குகளில் அடையப்பெற்ற முன்னேற்றங்கள்

| | |
|---|---|
| கருவிகள் மற்றும் சேவைகளை டிஜிட்டல்மயமாக்கல் | தொடர்கின்றது |
| வழங்குநர் தெரிவுச் செயல்முறையினை சீரமைத்தல் | நிறைவுசெய்யப்பட்டது |
| கோவிட்-19 க்கான தேசிய தயாராயிருத்தல் பதிலளிப்பிற்கு துணையளித்தல் | தொடர்கின்றது |

முன்னேற்றச் சாவி

| | | | |
|---|---|---|---|
| முன்னெடுக்கப்பட்டது | தொடர்கின்றது | நிறைவுசெய்யப்பட்டது | அடையவில்லை |

## நி.அ.இ. க்கான பங்களிப்பு




## வெற்றியினை அளவிடுதல்

### வாடிக்கையாளர்களுக்கான பெறுமதி




### வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள்




### சமூகத்திற்கான பெறுமதி




- வாடிக்கையாளர்களுக்கு வட்டிக் கொடுப்பனவுகள்
- செலவினங்கள்

**டிஜிட்டல் மேடைகளுடாக 470,000 க்கும் அதிகமான கொடுக்கல் வாங்கல்கள்**

# சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

GRI 102-6

## வாடிக்கையாளர் உறவுகள்

380,000 கடன்வழங்கல் மற்றும் வைப்பு வாடிக்கையாளர்களை உள்ளடக்கிய எமது வாடிக்கையாளர் தளமானது நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் பரந்து காணப்படுகின்றது. இவ்வருடத்தில், எமது வாடிக்கையாளர் தளமானது 29,499 புதிய வாடிக்கையாளர் உறவுகளை ஒன்றிணைத்ததுடன் விரிவடைந்தது.




| வாடிக்கையாளர்களின் பூகோள ரீதியான பகிர்ந்தளிப்பு | | | |
|---|---|---|---|
| மாகாணம் | வைப்பீட்டாளர்கள் | கடன் பெற்றவர்கள் | மொத்தம் % |
| மத்திய | 35,573 | 16,367 | |
| கிழக்கு | 17,375 | 5,701 | |
| வட மத்திய | 20,072 | 6,824 | |
| வட மேல் | 28,307 | 11,453 | |
| வடக்கு | 10,608 | 4,142 | |
| சபரகமுவ | 23,507 | 8,750 | |
| தெற்கு | 38,012 | 17,893 | |
| ஊவா | 27,857 | 8,945 | |
| மேல் | 108,666 | 45,714 | |
| மொத்தம்* | **309,977** | **125,789** | |

*குறுக்கு விற்பனைகள் இடம்பெறுகின்றன.

GRI 418-1

## எமது டிஜிட்டல வழங்கல்களை பலப்படுத்துதல்

இவ்வருடத்தில் பல டிஜிட்டல் செயலிகளின் அறிமுகத்துடன் நாம் எமது டிஜிட்டல் பெறுமதி முன்னீட்டினை தொடர்ந்தும் பலப்படுத்தினோம். CAPP, எமது இயங்கலை குத்தகை செயலியானது இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இது குத்தகை வசதிகளுக்கு இயங்கலை மூலமான அங்கீகாரங்களை இயலுமையாக்குகின்றது. DCHEQUE, என்பது இவ்வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றுமோர் புரட்சிகரமான டிஜிட்டல் உருமாற்றமாகும்.

'PLC டச்" எனப்படும் மும்மொழியிலான கைப்பேசி செயலியினை நாம் ஆரம்பித்ததுடன், மேலதிக சிறப்பம்சங்களுடன் எமது இயங்கலை வாசலான "PLC ஒன்லைன்" மீள ஆரம்பிக்கப்பட்டது. அதேசமயம், "பீபள்ஸ் Pay Way" எனப்படும் கொடுப்பனவுகளுக்கான ஒரு பன்முக சேவை வலையமைப்பானது பீபள்ஸ் இன்சூரன்ஸ் மற்றும் மக்கள் வங்கியுடன் கூட்டிணைந்து ஆரம்பிக்கப்பட்டது. இது வாடிக்கையாளர்களது அணுக்கம் மற்றும் சௌகரியத்தினை மேலும் மேம்படுத்தும் (எமது டிஜிட்டல் முயற்சிகள் பற்றிய மேலதிக தகவல்கள் பக்கங்கள் 80 முதல் 87 வரை காணப்படும் எமது அறிவுசார் மூலதன அறிக்கையில் காணப்படுகின்றது).

டிஜிட்டல் வழிமுறைகளிலான வளர்ச்சியானது தரவுப் பாதுகாப்பு மற்றும் வாடிக்கையாளர் தகவல்களது இரகசியத்தன்மை என்பவற்றுக்கான ஒரு பாரிய முன்னிறுத்தத்திற்கான அவசியத்தினை ஏற்படுத்தியுள்ளதுடன் வாடிக்கையாளர் தகவல்களை பாதுகாப்பதற்காக நாம் தொடர்ந்தும் தரவுப் பாதுகாப்பு முறைகளில் முதலீடு செய்கின்றோம். இவ்வருடத்தில் வாடிக்கையாளர் இரகசியத்தன்மையிலான மீறுகைகள் மற்றும் வாடிக்கையாளர் தரவுகளின் இழப்புகள் தொடர்பான ஆதாரப்படுத்தப்பட்ட முறையீடுகள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை.

## நிதியில் உள்ளடங்கல்

எமது நாடுபூராவுமான கிளை வலையமைப்பானது, எமது தாய் நிறுவனமான மக்கள் வங்கியினால் வழங்கப்பட்ட ஒருங்கியக்கங்கள் உடன், அதன் விரிவான ATM மற்றும் CDM வலையமைப்பினூடாக மற்றும் பிஎல்சி ஒன்லைன் டிஜிட்டல் அனுக்கத்தினூடாக பீபள்ஸ் லீசிங் இனை நிதியியல் ரீதியாக உள்ளடக்கமாயிருப்பதனை இயலுமையாக்குகின்றது.

| நி/ஆ | கிளை அடிச்சுவட்டினூடான பகிர்ந்தளிப்புகள் | டிஜிட்டல் மேடையினூடான கொடுக்கல் வாங்கல்கள் | தாய் வங்கியின் CDM வலையமைப்பினூடான கொடுக்கல்வாங்கல் பருமன் |
|---|---|---|---|
| | ரூ.மில்லியன் | ரூ.மில்லியன் | ரூ.மில்லியன் |
| 2020/21 | 50,881.00 | 19,788.04 | 598.51 |
| 2021/22 | 71,703.20 | 51,755.45 | 3,428.87 |

## கோவிட்-19 தொற்றின்போது எமது வாடிக்கையாளர்களுக்கு துணையளித்தல்

இ.ம.வ. இனால் கட்டாயமாக்கப்பட்ட முதல் மற்றும் வட்டிக்கான கடன் காலம் தாழ்த்திச் செலுத்தல்கள் உள்ளடங்கலான சலுகைகளை நாம் தொடர்ந்து வழங்குவதுடன் கடந்த இரண்டு வருடங்களில் 105,950 க்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு இவற்றை வழங்கினோம். பஸ் நிவாரண திட்டமான "ஹித்த மித்துரு" இவ்வருடத்தில் அறிமுக்கப்படுத்தப்பட்டதுடன் இது தனியார் பயணிகள் போக்குவரத்து வாடிக்கையாளர் பிரிவினை அவர்கள் கோவிட்-19 இற்கு பின்னர் தங்களது வணிகங்களை கட்டியெழும்புவதனை நோக்காகக் கொண்டதாகும். நிதியியல் நிவாரண திட்டங்கள் சலுகையான வட்டி வீதங்களுடன் கொடுப்பனவு ஒத்திவைத்தல் திட்டமாகும். 2,000 க்கும் அதிகமான வசதிகள் "ஹித்த மித்துரு" பஸ் நிவாரண திட்டத்தினூடாக துணையளிக்கப்பட்டார்கள்.



## ஒரு விரிவான கருவி வீச்சு

எமது வாடிக்கையாளர்களின் பல்வேறு நிதியியல் தேவைப்பாடுகளை சந்திப்பதற்காக ஒரு விரிவான கருவி வீச்சானது கிடைக்கப்பெறுகின்றது. நாம் தொடர்ந்தும் எமது கருவிகளது வழங்கலை மீளாய்வு செய்து வாடிக்கையாளரின் வெளித்தோன்றும் தேவைகளை சந்திப்பதனை நோக்காகக் கொண்டு புத்தாக்கமான கருவிகளை வழங்குகின்றோம். எமது கருவிகள் பற்றிய மேலதிகத் தகவல்கள் எமது இணையத்தளமான www.plc.lk இல் கிடைக்கப்பெறுகின்றது.

## கடன் வழங்கல் கருவிகள்

- பீபள்ஸின் தோழமையான குத்தகை
- மோட்டார் கடன்
- சக்தி வணிகக் கடன்
- ஷாஸ்த்ரா கல்விக் கடன்
- செனசும் பியஸ வீட்டுக் கடன்
- ரன் நன தங்கக்கடன்
- எல்லைக்கடன் வர்த்தகம் (Margin Trading)
- காரணிப்படுத்தல் (Factoring)
- சுய இ-காசு (Self-e-cash)
- விரைவான காசு தனிப்பட்ட கடன்
- விரைவுப் பாதை
- இஜாரா
- வர்த்தக முரபஹா
- முஷாரக்கா
- வக்காலா

# சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

## வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கருவிகள்

| | | | |
|---|---|---|---|
| சுபர் சேமிப்புகள் | சிரேஷ்ட பிரஜை சேமிப்புகள் | செனிஹச சிறார் சேமிப்பு கணக்குகள் | பீப்பள்ஸ் லீசிங் நிலையான வைப்புகள் |
| பிரீமியர் வெகுமதித் திட்டம் | சிரேஷ்ட பிரஜை நிலையான வைப்புகள் | | |
| முதாரபஹா சேமிப்புக் கணக்குகள் | உஸ்வூர் சிறார் சேமிப்பு கணக்குகள் | குறுங்கால முதாரபஹா முதலீட்டுக் கணக்குகள் | 12 மாதங்கள் முதாரபஹா முதலீட்டுக் கணக்குகள் |

எமது கருவிகளது வழங்கலை மேம்படுத்துவதற்காக நாம் பெயர்பெற்ற பங்காளிகளுடன் கூட்டு சேர்ந்தோம். இவ்வருடத்தில் பீப்பள்ஸ் லீசிங்கும் மக்கள் வங்கியும் ஒன்றிணைந்து வாடிக்கையாளர்களுக்கு ஒரு கூட்டு-வணிகநாமமிட்ட கடன் அட்டைகளை அறிமுகம் செய்தது. இது குழுமத்தின் இணைதிறனை மேம்படுத்துவதுடன் போட்டியாளர்களுக்கும் மேலான ஒரு விளிம்பினை விருத்திசெய்கின்றது. மேலதிக இணைதிறன்களின் ஒரு பகுதியாக, கூட்டு நாமமிடப்பட்ட கடன் அட்டை உறவானது சிற்றளவு நிதியளிப்பிற்கான ஒரு முக்கிய பாகமாகும் என்பதுடன் இது ஒரு பரந்தளவிலான வாடிக்கையாளர் தளத்தினை கவருகின்றது. இது ஏனைய கடன் அட்டைகள் போன்று செயற்படுவதுடன், இதனை எங்கும் எவ்விதமான கொள்வனவுக்கும் பயன்படுத்தலாம் என்பதுடன் மக்கள் வங்கியினால் வழங்கப்படும் அனைத்து விற்பனைப் பொருட்களது வழங்கல்களுக்கும் உரிமையுடையதாகும். இந்த அட்டையானது பீப்பள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி மற்றும் மக்கள் வங்கி ஆகிய இரண்டு வணிக நாமங்களையும் கொண்டுள்ளது.

இலங்கையின் முன்னணி வாகன இறக்குமதியாளர், விநியோகத்தர் மற்றும் மோட்டார் வாகன உதிரிப் பாகங்களது வர்த்தகராக, இந்திரா டிரேடர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டுடன் நாம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம். இந்தத் திட்டத்தினூடாக வாடிக்கையாளர்களுக்கு விளம்பரப்படுத்தல் காலத்தில் ஒரு பரந்தளவிலான நலன்கள் வழங்கப்படுகின்றன.

### மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் ஈடுபாட்டு மட்டங்கள்

எமது வாடிக்கையாளர்களுடன் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் ஈடுபடுதலானது எமது வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகள் மற்றும் வேதனைப் புள்ளிகளை செயற்திறனாக விளித்துரைப்பதனை இயலுமையாக்குகின்றது. வழக்கமான வணிகப் போக்கில் மேற்கொண்ட வழமையான ஈடுபாடுகளுக்கும் மேலாக வாடிக்கையாளர் முறையீடுகள் மற்றும் மனக்குறைகளுக்கான ஒரு தனிப்பயனுடைய அலகினையும நாம் வைத்துள்ளோம். அனைத்து முறையீடுகளும் ஒரு மையப்படுத்தப்பட்ட முறையீடுகள் கையாளும் முறைமையில் பதிவுசெய்யப்பட்டு வாடிக்கையாளர் முறையீடுகள் மற்றும் மனக்குறைகள் அலகினால் நடுநிலையாக புலனாய்வு செய்யப்படுகின்றது. இது அனைத்து வாடிக்கையாளர் முறையீடுகளும் முறையாக விளித்துரைக்கப்பட்டு தீர்த்து வைக்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது. பிரச்சார நடவடிக்கைகள் கோவிட்-19 கட்டுப்பாடுகளினால் தாக்கமடைந்தபோதிலும் எமது கருவிகளைப் பற்றிய விழிப்புணர்வினை எழுப்புவதற்காக நாம் நாடுபூராவும் பல ஒரு நாள் விளம்பரப் பிரச்சாரங்களை நடாத்தக் கூடியதாயிருந்தது.

| வாடிக்கையாளர் திருப்தி |
|---|
| நேரடியான முறையீடுகள் - 56 |
| இ.ம.வ. ஊடான முறையீடுகள் -89 |
| இலங்கையின் நிதியியல் குறைதீர்ப்பாளர் ஊடான முறையீடுகள் - 41 |
| *இவ்வருடத்தில் எழுப்பப்பட்ட அனைத்து முறையீடுகளும் சுமூகமாக தீர்த்துவைக்கப்பட்டன. |

GRI | 417-1, 417-2, 417-3

### கருவிக்கான பொறுப்பினை உறுதிப்படுத்தல்

கருவியின் பண்புகள், வட்டி வீதங்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்றவை உள்ளடங்கலான கருவிகளின் தகவல்களை இற்றைப்படுத்தியதுடன், இவற்றை எமது கூட்டாண்மை இணையத்தளத்தினூடாக இலகுவாக அணுகலாம். அதேசமயம், கருவிகளது தகவல்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட சிற்றேடுகளூடாக கிடைக்கப்பெறுவதுடன் கிளைகளிலுள்ள பன்மொழி பணியாட்கள் வாடிக்கையாளர்கள் கருவிகளது பண்புகள் மற்றும் நியதிகளை தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாயிருக்கும். கருவிகள் மற்றும் சேவைகளது தகவல்கள் தொடர்பான அல்லது சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் குறித்து இவ்வருடத்தில் இணக்கப்பாடற்ற எவ்விதமான அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

GRI 102-9

## வணிகப் பங்காளிகளுடனான உறவுகள்

தொடர்பு வங்கிகள், உள்ளூர் மற்றும் சர்வதேச நிதியியல் நிறுவனங்கள் போன்ற ஒரு பரவலான நிதிச் சேவை வழங்குநர்களையும் நாடு பூராவும் உள்ள பாரிய எண்ணிக்கையிலான வாகன வர்த்தகர்களையும் எமது வணிகப் பங்காளிகள் வலையமைப்பானது உள்ளடக்குகின்றது. இதற்கும் மேலாக, எமது வணிகத்தின் மென்மையான செயற்பாட்டிற்கு அவசியமான கருவிகள் மற்றும் சேவைகளை வழங்கும் ஒரு வலையமைப்பாக வழங்குநர்கள் காணப்படுகின்றார்கள். நாம் துறையின் சங்கங்கள் உள்ளடங்கலாக துறையின் பங்காளிகளுடன் செயற்திறனுடன் ஈடுபடுகின்றோம், இது துறைசார் சிக்கல்களை விளித்துரைப்பதற்கும் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதற்குமாகும். செயற்பாட்டு இணைதிறன்கள், சந்தை அணுக்கம் மற்றும் புதிய வணிக வாய்ப்புக்கள் போன்றவற்றைப் பொறுத்தளவில் பரஸ்பரமான பெறுமதியினை பெற்றுக்கொள்வதற்காக நாம் இந்த உறவுகளை தொடர்ந்தோம்.




| | 2021/22 | 2020/21 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| செயற்திறனான வணிகப் பங்காளிகள் (எண்.) | 46,560 | 38,890 | 19.72 |
| வாகன வழங்குநர்கள் (எண்.) | 40,118 | 31,665 | 26.70 |
| கொள்முதல் செலவினம் (ரூ.மில்லியன்) | 131,515.92 | 82,880.45 | 58.68 |

GRI 102-13

### நம்பிக்கையுள்ள பங்குடைமைகள்

எமது அனைத்து உறவுகளின் அடிப்படையாக நம்பிக்கை மற்றும் நேர்மை காணப்படுவதுடன், வணிகப் பங்காளிகளுடனான எமது அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் வெளிப்படையாகவும் நியாயமாகவும் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளோம். துறைசார் ஒழுங்குவிதிகளுடனான கடுமையான இணக்கப்பாடு மற்றும் வணிகப் பங்காளிகளுடனான தொடர்ச்சியான ஈடுபாடுகள் ஏனைய நிதி நிறுவனங்கள் உள்ளடங்கலான வணிகப் பங்காளிகளுக்கு நம்பகத்தன்மையினையும் உறுதிமொழியினையும் வழங்குகின்றது. அனைத்து ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் வழமையாக கண்காணிக்கப்படுவதுடன் இது உடன்பாடு கண்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கொடுப்பனவுகள் உள்ளடங்கலான அனைத்து கடப்பாடுகளை கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகும்.

| சங்கங்களிலான அங்கத்துவம் |
|---|
| • த லீசிங் எசோசியேஷன் ஒவ் ஸ்ரீலங்கா |
| • த பைனான்ஸ் ஹவுஸ் எசோசியேஷன் ஒவ் ஸ்ரீலங்கா |
| • த பைனான்சியல் ஒம்புட்ஸ்மன் ஒவ் ஸ்ரீலங்கா |
| • கிரடிட் இன்வர்மேஷன் பியுரோ ஒவ் ஸ்ரீலங்கா |
| • த எசோசியேஷன் ஒவ் மார்ஜின் புரொவைடர்ஸ் |
| • பயோடைவர்சிட்டி ஸ்ரீலங்கா (ஆதரவாளர் அங்கத்தவர்) |

### உள்ளூர் கொள்முதலிலான ஒரு முன்னிறுத்தம்

உற்பத்திகள் மற்றும் சேவைகளை நாம் கொள்முதல் செய்யும்போது உள்ளூர் கைத்தொழில்களுக்கு துணையளிக்கும் எமது முயற்சிகளின் அங்கமாக நாம் உள்ளூர் வழங்குநர்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு கடும் முயற்சியினை எடுக்கின்றோம். குறிப்பிட்ட வாடிக்கையாளர் இடைமுகப்பு த.தொ. உற்பத்திகள் மற்றும் சில மென்பொருள் கருவிகள் நீங்கலாக கம்பனியானது அதன் பாரியளவு வழங்கல்களை உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து பெறுகின்றது. இவ்வருடத்திற்கான உள்ளூர் வழங்குநர்களுக்கான மொத்த கொடுப்பனவில் அனேகமானவை சி.ந.நி. வழங்குநர்களுக்காகும்.

GRI 308-1, 410-1, 414-1

### பொறுப்புள்ள வளமூலமிடுதல்

பீபள்ஸ் லீசிங்கின் கொள்முதல் கொள்கை மற்றும் செயல்முறைகள் எமது கொள்முதல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவை நேரத்திற்கேற்ற, செயல்திறனான மற்றும் வெளிப்படையான கொள்முதல் செயல்முறையினை உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டதாகும்.

உபகரணங்கள், த.தொ.தொ. வன்பொருள் மற்றும் இருப்பு உருப்படிகள் போன்ற பாரிய கொள்முதல்கள் என்பன ஏற்பாட்டியல் பிரிவின் பொறுப்பாகும். சிறிய கொள்முதல்களான கிளைகளின் நுகர்பொருட்கள் உரிய கிளை / பிரிவு ஆகியவற்றால் பொறுப்பேற்கப்படுகின்றன. ஒரு சுயாதீன தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவானது மேற்கூறிய வரன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்குநர்களை தெரிவுசெய்கின்றது.

பிரசித்திபெற்ற வெளியூறல் சேவை வழங்குநர்கள் தலைமைக் காரியாலயம் மற்றும் கிளைகளில் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதுடன் இந்த பாதுகாப்பு செயல்முறைகள் பணியாட்கள் மற்றும் ஏனைய பங்காளிகளது கௌரவத்தினை பாதுகாப்பதனை உறுதிப்படுத்துகின்றது. எமது தலைமைக்காரியாலயம் மற்றும் கிளைகளில் பாதுகாப்பு பணியாட்கள், பொறுப்புள்ள வருநர்கள்/வாடிக்கையாளர் உள்ளடங்கலாக பொதுவான அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அறிவூட்டப்பட்டுள்ளதுடன், இது எவ்விதமான குறிப்பிட்ட திட்டமும் இடம்பெறாதபோது நடைபெற்றதாகும்.

# சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

வழங்குநர் தெரிவுச் செயல்முறையில் சூழல் மற்றும் சமூக இடர்கள் கணக்கிலெடுக்கப்படுகின்றன. வழங்குநர்கள் பதிவுசெய்யப்படும்போது ஒரு தவிர்த்தல் பட்டியலுக்கெதிராக மதிப்பீடு செய்யப்படுகின்றார்கள். வழங்குநர்கள் உள்ளக மீளாய்வுகள் மற்றும் தள விஜயங்களினூடாக உறுதிசெய்யப்படுகின்றார்கள். சூழல் மற்றும் சமூக கருத்துக்கள் உள்ளடங்கலான பொருத்தமான தேவைப்பாடுகளை சந்திப்பதற்கு தவறும் வழங்குநர் கம்பனியின் வழங்குநர் பட்டியலிலிருந்து நீக்கப்படுவார். மேற்குறிப்பிட்ட வரன்முறைகளை பயன்படுத்தி மொத்தமாக 13,362 வழங்குநர்கள் சல்லடையிடப்பட்டார்கள். மீளாய்வாண்டில் எமது வழங்கல் வழியில் எதிர்மறையான சூழல் மற்றும் சமூக தாக்கங்கள் இனங்காணப்படவில்லை.

### கொள்முதல் செயல்முறை




### அரசாங்கம்

பீபள்ஸ் லீசிங் அதன் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் குத்தகைகளிலான காலம் தாழ்த்திச் செலுத்துதல் வசதியினை வழங்குவதற்கும் நீடிப்பதற்குமான இ.ம.வ. இன் வழிகாட்டிகளை கடைப்பிடித்ததுடன், சலுகை வட்டி வீதங்களில கடன்களை வழங்கியது மற்றும் கோவிட்-19 தொற்றின் விளைவுகளின் கீழ் பொருளாதாரம் சிரமப்பட்டவேளை சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுகாதாரா ஒழுங்குவிதிகளின் கீழ் வருடம் முழுவதும் வணிகத்தினை மேற்கொண்டோம். இதற்கும் மேலாக இவ்வாண்டில் நாம் ரூ. 2,791.99 மில்லியனை வரிகளாகச் செலுத்தியதுடன் இதனது விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 237 இல் குறிப்பு 17.9 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

### அரசாங்கத்திற்காக உருவாக்கப்பட்ட பெறுமதி

- திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற அரசாங்கப் பிணையங்களிலான முதலீடு - 31 மார்ச் 2022 இல் ரூ. 9,827.22 மில்லியன்.
- கோவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம் அரசாங்கத்தின் முன்னெடுப்புகளுக்கு துணைபுரிதல்
- கோவிட்-19 சிகிச்சை மற்றும் கவனிப்பினை பலப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் கோவிட்-19 இடைநிலை பராமரிப்பு நிலையங்களுக்கு அவசியமான மருத்துவ மற்றும் மருத்துவம் இல்லாத உபகரணங்களது கொடை.
- இவ்வருடத்தில் ரூ. 2,791.99 மில்லியன் வரிகளாகச் செலுத்தப்பட்டன.

GRI | 413-1, 419-1

## சமூகத்துடனான உறவு

ஒரு வணிகமாக எமது நீண்டகால நீடிப்புத்திறனானது நாம் எமது சமூகத்தில் கொண்டுள்ள சாத்தியமான தாக்கத்தில் தங்கியுள்ளது என்பதனை நாம் திடமாக நம்புகின்றோம். ஒரு நிதிச் சேவைகள் வழங்குநராக, நிதியியல் உள்ளடக்கம் மற்றும் நிதிக்கான அணுக்கத்தினூடாக சமூகங்களது சமூக பொருளாதார அபிவிருத்திக்கு நாம் நேரடியாக பங்களிப்பு செய்கின்றோம். கோவிட்-19 தொற்றின் பின்னர் மீளெழுவதற்காக சமூகங்களுக்கு துணைபுரிவதில் நாம் ஒரு முக்கிய பங்கினை வகித்ததுடன் இது இ.ம.வ. இன் கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியினை 105,000 க்கும் அதிகமான வசதிகளுக்கு நீட்டியதுடன் மற்றும் தொற்றினால் பாதிப்படைந்த வாடிக்கையாளர்களுக்கு சலுகையான நிதியளிப்பாக ரூ. 29,000 மில்லியனுக்கும் அதிகமான வசதிகளையும் வழங்கினோம். "ரட்ட புராம LANKAQR" எனும் புத்தாக்கமான டிஜிட்டல் கொடுப்பனவு திட்டத்தினை ஊக்குவிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியுடன் நாம் கைகோர்த்தோம். இது கிராமப் புறங்களில் டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு துணையளிப்பதற்காகும்.

எமது கூ.ச.பொ. முன்னெடுப்புகளூடாக ஒரு வினையூக்கியாக நாம் கடும் முயற்சியினை எடுப்பதுடன் எமது கூ.ச.பொ. பிரிவுகள் பின்வருவனவாகும்: சூழல் பாதுகாப்பு, உள்ளூர் சமூகங்களை வலுவளித்தல், கல்வி மற்றும் தொழில்முயற்சித் திறன் அபிவிருத்தியின் தரமுயர்த்துதல் மற்றும் நிதியியல் அறிவினைக் கட்டியெழுப்புதல் என்பவையாகும். நாட்டின் அவசரமான தேவைக்கு பதிலளிக்கும் விதமாக, நாம் கோவிட்-19 தொற்றினை சிறப்பாக வெற்றிகொள்வதற்காக நாடு பூராவும் பொது சுகாதார வசதிகளை மேம்படுத்தவும் முனைந்தோம். இது நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகள் மற்றும் இடைநிலை கவனிப்பு நிலையங்களுக்கு நிதி மற்றும் உபகரணங்களது பங்களிப்பினாலாகும்.

நாட்டிலுள்ள அனைத்து ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்களுடனான கடுமையான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தினோம். மீளாய்வாண்டில், சமூக மற்றும் பொருளாதார பிரிவுகளில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காணாத சந்தர்ப்பங்கள் காணப்படவில்லை. மேலும், எமது சமூக வெளிக்கள கூ.ச.பொ. திட்டங்கள் என்பன கூ.ச.பொ. முன்னிறுத்த பிரிவுகளான உள்ளூர் சமூகங்களை வலுவளித்தல், கல்வி மற்றும் தொழில் முயற்சித் திறன் அபிவிருத்தி மற்றும் நிதியியல் அறிவினை தரமுயர்த்துதல் என்பவற்றின் கீழ் இயக்கப்படுகின்றன.

> 2021/22 நிதியாண்டில் சமூக வெளிக்கள கூ.ச.பொ. முன்னெடுப்புகளிலான முதலீடு
> ரூ. 27.53 மில்லியன்

### ச5க வெளிக்கள கூ.ச.பொ. திட்டங்கள்



மெதிரிகிரியவிலுள்ள அடித்தள மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குதல்

#### கோவிட்-19 சிகிச்சை மற்றும் கவனிப்பினை பலப்படுத்துவதற்காக மருத்துவ மற்றும் மருத்துவம் இல்லாத உபகரணங்களின் கொடை

ரூ. 25.93 மில்லியன் பெறுமதியான மருத்துவ மற்றும் மருத்துவம் இல்லாத உபகரணங்கள் பின்வரும் இடங்களுக்கு இவ்வருடத்தில் கொடையளிக்கப்பட்டது. கல்வி மருத்துவமனை - பேராதெனிய, அடித்தள மருத்துவமனை - தங்காலை, பிரதேச மருத்துவமனை - பெலியத்த, மாவட்ட பொது மருத்துவமனை - கேகாலை, மாவட்ட பொது மருத்துவமனை - கம்பஹா, மாவட்ட பொது மருத்துவமனை - திருகோணமலை, அடித்தள மருத்துவமனை - டிக்கோயா, மாவட்ட அடித்தள மருத்துவமனை - தெல்தெனிய, அடித்தள மருத்துவமனை - மெதிரிகிரிய, அடித்தள மருத்துவமனை - மாரவில, மாவட்ட பொது மருத்துவமனை - அம்பாத்தோட்டை மற்றும் இடைநிலை கவனிப்பு நிலையங்கள் - மாவட்ட பொது மருத்துவமனை -டிக்கோயா, குண்டசாலை-கோரலை மற்றும் மஹாமெவனாவ துறவிமடம் - கண்டி.



**நற்சான்றிதழ்**

திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனையில் கோவிட்-19 இனது நோயறிதல் வசதிக்காக 06 ஜூன் 2021 இல் பீபள்ஸ் லீசிங்கினால் நிகழ்நேர PCR நுண் பகுப்பானை கொடையளித்தமைக்காக நான் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இது மெய்யாகவே கோவிட்-19 நோயாளர்களை முன்பாகவே நோயறிவதற்கான அவசியமாகும். இந்த பகுப்பானை பயன்படுத்தி 576 பரிசீலனைகள் வரை மேற்கொள்ளப்பட்டன. முன்னதாகவே நோயறிதல் தொற்றின் பரவலை தடுப்பதற்கும் கோவிட்-19 தொற்றுக்குள்ளான நோயாளிகளது உடனடி கவனிப்பிற்கும் உதவியது. இது கோவிட்-19 தொற்றுநோயின் சுமையினை குறைப்பதற்கு உதவியது. மீண்டும் ஒருமுறை நான் இந்த கோவிட்-19 உலகளாவிய தொற்றின்போது உங்களது மனிதாபிமான பணிக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கோள்கின்றேன்.

**வைத்தியர், ஐ.டபிள்.எம்.ஜே.விக்கிரமரத்ன**
*பணிப்பாளர்*
மாவட்ட பொது மருத்துவமனை - திருகோணமலை



**நற்சான்றிதழ**

கோவிட்-19 தொற்றானது அதன் உச்சத்தில் காணப்பட்ட இக்கட்டான நேரத்தில் நாட்டிற்கான அவர்களது உடனடி உதவிக்காக பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி க்கு நான் இச்சந்தர்ப்பத்தில் மிகுந்த மகிழ்ச்சியுடன் எனது நன்றியினைத் தெரிவிக்கின்றேன். கேகாலையிலுள்ள மாவட்ட பொது மருத்துவமனையானது கோவிட்-19 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பணியினை பொறுப்பேற்ற மருத்துவமனைகளில் ஒன்றாகும். இது அடிமட்டத்திலான இடைநிலை கவனிப்பு முதல் தீவிர சிகிச்சை வரை உள்ளடக்கியதாகும். மருத்துவமனையிலுள்ள இடைநிலை கவனிப்பு நிலையங்கள், உள்நோயாளி மற்றும் வெளிநோயாளி பிரிவுகளில் ஏறத்தாழ 10,000 நோயாளர்களுக்கு வெற்றிகரமான சிகிச்கை மேற்கொள்ளப்பட்டது.

பீபள்ஸ் லீசிங் கேகாலையிலுள்ள மாவட்ட பொது மருத்துவமனைக்கு ரூ. 4.35 மில்லியன் பெறுமதியான 2 பல்வேறுப்புக்காரி கண்காணிப்பிகள், 2 2 C-PAP/Bi- PAP இயந்திரங்கள் மற்றும் ஒரு உயர் ஆக்சிஜன் நாசிச் சிகிச்சை அலகு என்பவற்றை கொடையளித்ததுடன் இது நம்பிக்கை இழந்த நிலையிலுள்ள அனேகமான நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதனை இயலுமையாக்கியது. தற்போதைக்கு நாம் பல கோவிட்-19 நோயாளர்களை எதிர்கொள்ளாவிட்டாலும் வழங்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள் பிறந்த குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு, மருத்துவ தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் உயர் சார்புநிலை பராமரிப்பு பிரிவு ஆகியவற்றிலுள்ள நோயாளர்களை இன்னமும் குணப்படுத்துகின்றது. பீபள்ஸ் லிசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி நாட்டில் தொடர்ந்தும் மிகவும் வெற்றிகரமான நிதிக் கம்பனியாகக் காணப்படும் என்பது எனது விருப்பமாகும் என்பதுடன் அவர்கள் தேசத்திற்கு சேவையாற்றி மனித குலத்திற்கான அவர்களது பொறுப்பினை வெளிப்படுத்துவதற்கு புதிய வழிகளை கண்டுபிடிப்பார்கள் என்பதும் எனது விருப்பமாகும்.

**வைத்தியர். வை.எம்.மிஹிரி பிரியங்கி**
*பதில் பணிப்பாளர்*
மாவட்ட பொது மருத்துவமனை - Kegalle

# சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்



*பின்னவல யானைகள் சரணாலயத்தில் கல்வி விழிப்புணர்வு பலகைகள் காட்சிப்படுத்தல் அலகின் திரைநீக்கம்*

**பின்னவல யானைகள் சரணாலயத்தில் கல்வி விழிப்புணர்வு பலகைகள் காட்சிப்படுத்தும் அலகினை நிறுவுதல்**

பின்னவல யானைகள் சரணாலயம் இலங்கையின் பிரசித்தி பெற்ற ஒரு சுற்றுலா இலக்காகும். இது பாரிய எண்ணிக்கையிலான உள்ளூர் மற்றும் வெளிநாட்டவர்களை கவர்ந்துள்ளது. முன்னரே இனங்காணப்பட்ட ஒரு தேவையின் அடிப்படையில், பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி பின்னவல யானைகள் சரணாலயத்திலுள்ள யானைகளில் ஒரு விழிப்புணர்வு பலகை காட்சிப்படுத்தல் அலகினை நிறுவுவதற்கான நிதி உறுதுணையினை வழங்கியது. நிறுவப்பட்ட கல்வி விழிப்புணர்வு பலகைகள் காட்சிப்படுத்தல் அலகின் திரைநீக்கமானது பின்னவல யானைகள் சரணாலயத்தின் 47ஆம் வருடாந்த விழாவுடன் ஒன்றிப்பொருந்தியது. இத்திட்டமானது யானைகள் சரணாலயத்திற்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் வாசிகளிடையே யானைகள் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குவதற்கு பயன்படுகின்றது.

---



**நற்சான்றிதழ்**

பின்னவல யானைகள் சரணாலயமானது (பி.யா.ச.) தேசிய விலங்கியல் தோட்டங்களின் உள்ளீட்டெல்லையின் கீழ் வருகின்றது என்பதுடன் இது இலங்கையில் உள்ளூர் வாசிகளுக்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குமான ஒரு முக்கியமான சுற்றுலா பயண இலக்காகும். ஆசிய யானைகளைப்பற்றிய பெறுமதியினை விஜயம் செய்வோருக்கு கற்பித்தல் பி.யா.ச. இன் ஒரு அவசரத் தேவையாகும். பி.யா.ச. இன் சார்பில் நான் உங்களது தாராளமான தாளாண்மையான, ஆசிய யானைகள் பற்றிய பெறுமதி மிக்க தகவல் பலகைகளை எமது வளாகத்தில், பி.யா.ச. இற்கு விஜயம் மேற்கொள்ளும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வருகையாளர்களை கற்பிப்பதற்காக நிறுவியமைக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அருகிவரும் உயிரினங்களில் ஒன்றாக, இந்த பிரமமாண்டமான உயிரினம் பற்றிய தகவல்களை சமூகவுடைமையாக்குதல் அவசியம் என்பதுடன் இது அதன் எதிர்கால வாழ்விற்கு பங்களிப்பதுடன் இலங்கையில் பல்லுயிர் பெருக்கத்தினை உறுதிப்படுத்துவதற்காகும். எமது பாதுகாப்பு முயற்சிகளுக்கான உங்களது தாராளமான உறுதுணைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. மிஹிரான் மெடவல**
*பிரதிப் பணிப்பாளர்*
பின்னவல யானைகள் சரணாலயம்



*மஹியங்கனையிலுள்ள புதுப்பிக்கப்பட்ட சிறுவர் பூங்காவின் திறப்பு விழா*

**சிறுவர் பூங்காவின் புத்தாக்கம் - மஹியங்கனை**

மஹியங்கன பிரதேச சபையின் வேண்டுகோளின் அடிப்படையில் சிறுவர் தோழமையான விதத்தில் மஹியங்கனையிலுள்ள சிறுவர் பூங்காவினை பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி புதுப்பித்தது. தனிநபர்கள் சாத்தியமான மனப்பாங்கினை அடைவதனை ஊக்குவிப்பதற்காக பூங்காவின் உட்புறத்திலும் வெளியிலும் நல்ல பழக்கங்களை ஊக்குவிக்கும் தகவல் பலகைகள் மீள்நிறுவப்பட்டன. பீபள்ஸ் லீசிங் இந்த சிறுவர் பூங்காவினை மஹியங்கனை நகரத்தில் 2015 இல் கட்டியது. இது மஹியங்கனையிலுள்ள சிறுவர்கள் தரமான நேரத்தினை செலவிடுவதற்கான ஒரு பொருத்தமான பொழுதுபோக்கு நிலையமாகும்.



*தங்காலை அடித்தள மருத்துவமனையின் அதிகாரிகளிடம் சக்கர நாற்காலிகளை கையளித்தல்*

**தங்காலை அடித்தள மருத்துவமனையின் முகப்பு பிரிவினை புதுப்பித்தல்**

பீபள்ஸ் லீசிங் தங்காலையிலுள்ள அடித்தள மருத்துவமனையின் முகப்பு பிரிவினை புதுப்பித்ததுடன் மருத்துவமனைக்கு அவசியமாக தேவைப்பட்ட சக்கர நாற்காலிகளையும் கொடையளித்தது.

**லேடி ரிஜ்வே மருத்துவமனை மற்றும் மஹராகம அபேக்ஷா மருத்துவமனையிலுள்ள மீன் காட்சியகத்தின் பராமரிப்பினை தொடருதல்**

பீபள்ஸ் லீசிங் லேடி ரிஜ்வே மருத்துவமனையின் 07 ஆம் இலக்க குழந்தைகள் மருத்துவ கூடத்திலும் மஹரகமவிலுள்ள அபேக்ஷா மருத்துவமனையிலும் மீன் காட்சியகங்களை பராமரிக்கின்றது. இந்த காட்டிசியகங்கள் உள்வாரி மற்றும தினசரி விஜயம் செய்யும் நோயாளர்களுக்கு ஒரு ரம்மியமான சூழல வழங்குகின்றது.

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பர்கள் சங்கத்திற்கான (AAT) பரிசு நிதியத்திற்னாக கடப்பாட்டின் தொடர்ச்சி**

AAT இலங்கையினால் 2013 முதல் 2022 வரையான காலப்பகுதியில் ஜூலை மற்றும் ஜனவரி மாதங்களில் இடம்பெறும் அடிப்படை மற்றும் இடைநிலை மட்ட பரீட்சைகளுக்கான “தகுதி வரிசையில் இரண்டாம் நிலைக்கு” ஆன பரிசுகளுக்கான நல்கையினை வழங்குவதற்கான கடப்பாட்டினை பீபள்ஸ் லீசிங் கொண்டுள்ளது.

## முன்னோக்கிய பாதை

**குறுங்காலம் 2022/23**

- கருவிகளின் புத்தாக்கம் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல்
- வணிகப் பங்காளிகளுடன் திடமான பங்குடைமைகள்
- பொருளாதார மீளெழுச்சிக்கு சாத்தியமாக பங்களிக்கும் தேசிய மட்டத்திலான திட்டங்களில் பங்குபற்றல்

**மத்திய காலம் - 3 வருடங்கள்**

- வெளித்தோன்றும் வாடிக்கையாளர் தேவைகளை சந்திப்பதற்காக புத்தாக்கமான கருவி வழங்கல்களை தொடருதல்
- மிகவும் நிலைபேறுள்ள வழங்கல் சங்கிலியினை உருவாக்குவதற்கு வழங்குநர் ஒரு நடத்தை விதிக்கோவை உள்ளடங்கலாக ஒரு விரிவான வழங்குநர் முகாமைத்துவ வரம்புறுகையினை அறிமுகப்படுத்தல்
- அரசாங்கம், கல்வித்துறை மற்றும் சமூக அடிப்படையிலான நிறுவனங்களுடன் பங்காளிகளுக்கு நிலைபேறுள்ள தீர்வுகளை விருத்திசெய்வதற்காக அர்த்தமுள்ள பங்குடைமைகளை இயக்குதல்

**நீண்டகாலம்**

- அணுக்கத்தினை விரிவாக்கவும் வினைத்திறனை மேம்படுத்தவும் டிஜிட்டல் வழிகளை விரிவாக்குதல்
- அனைத்து வழங்குநர்களுக்கும் கடுமையான சூழல் மற்றும் சமூக வரன்முறைகளை அறிமுகப்படுத்தல்
- அர்த்தமுள்ள இடையீட்டினூடாக நெறிமுறையான மற்றும் பொறுப்பான கலாச்சாரத்தினை வளர்த்தல்

## சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்

விளம்பர மற்றும் ஏனைய வணிகநாம கட்டியெழுப்புதல் நடவடிக்கைகள் குறுங்காலத்தில் நிதியியல் மூலதனத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. எவ்வாறாயினும், உயர்ந்த வணிகநாமப் பெறுமதியினது நலன்கள் நீண்டகாலத்தில் நிதியியல் விளைவுகளில் சாத்தியமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

ஒரு திடமான வணிகநாம நற்பெயரானது பணிக்கொள்பவர் வணிகநாமத்தினை மேம்படுத்துவதுடன் கம்பனி உயர்ந்த தரத்திலான பணியாட்களை கவருவதனை இயலுமையாக்குவதுடன் நமைமுறையிலுள்ள பணியாட்களின் உயர்ந்த மட்டங்களிலான நல்வாழ்விற்கும் பங்களிப்பு செய்கின்றது.

வாடிக்கையாளர்கள், துறைசார் பங்காளிகள் மற்றும் வணிகப் பங்காளிகளுடனான ஆழமான ஈடுபாடானது அறிவுசார் மூலதனத்திற்கு சாத்தியமாக பங்களிப்பு செய்யும் வணிக நுண்ணறிவினை விளைவிக்கும்.

கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட கூ.ச.பொ. நடவடிக்கைகள் சூழலில் ஒரு சாத்தியமான தாக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கினைக் கொண்டதாகும்.



# இயற்கை மூலதனம்

சூழல் நீடிப்புத்திறன் என்பது எமது வணிக நெறிமுறைகளில் ஒரு பகுதியாகும் என்பதுடன் வளங்களின் பொறுப்புமிக்க நுகர்விலான தொடர்ச்சியான முன்னிறுத்தத்துடன் எமது சூழல் அடிச்சுவட்டினை நாம் தொடர்ந்தும் குறைப்பதற்கு கடும் முயற்சி எடுக்கின்றோம்.

### இயற்கை மூலதனத்தின் கூறுகள்

- நுகரப்பட்ட வலுசக்தி
- வெளியிடப்பட்ட உமிழ்வுகள்
- உருவாக்கிய கழிவு

### இயற்கை மூலதனத்தினை வளர்த்தல்




### ஒட்டுமொத்த பெறுமதி உருவாக்கல் நோக்கி இயற்கை மூலதனத்திற்கு துணைபுரிதல்

ஒரு சேவை நிறுவனமாக பீபள்ஸ் லீசிங் இயற்கை வளங்களின் பயன்பாட்டில் பெருமளவு தங்கியிராவிட்டாலும், வளங்களின் வினைத்திறனான நுகர்வு மற்றும் பொறுப்புமிக்க நடத்தையானது ஒட்டுமொத்த பெறுமதி உருவாக்கததிற்கு பங்களிப்பு செய்யும் கணிசமானளவு கிரய மற்றும் செயற்திறன் சேமிப்புக்களை கொண்டு வரும்.

### முக்கிய விளைவுகள்

- செயற்பாட்டு வினைத்திறன்கள்
- கிரயச் சேமிப்புகள்
- சாத்தியமான கூட்டாண்மை படிவம்

| தொடர்புடைய பங்காளிகள் | மூலோபாயக் கட்டாயங்கள் | இடர்கள் |
| --- | --- | --- |
|  | • சூழலிலான எதிர்மறையான தாக்கத்தினைக் குறைத்தல்<br>• நிறுவனத்தினுள்ளும் வெளியேயும் சூழல் நீடிப்புத்திறன் குறித்து விழிப்புணர்வினை உருவாக்குதல் | • செயற்பாட்டு இடர் |

## 2021/22 இலக்குகளில் அடைந்த முன்னேற்றம்

| | | | |
| --- | --- | --- | --- |
| எமது பணியாட்களிடையே டிஜிட்டல் திறன்களை எழுப்பியதன் விளைவாக கம்பனியானது CAPP மற்றும் DCHEQUE எனும் இரண்டு டிஜிட்டல் செயலிகளை ஆரம்பித்தது. இது குத்தகை வசதிகளை இயங்கலை மூலம் வழங்குவதற்கும் மற்றும் காசோலை அச்சிடும் செயல்முறையினை டிஜிட்டல் மயமாக்கி பரவலாக்குவதற்குமாகும். | | | |
| பீபள்ஸ் லீசிங் சமீபத்தில் PLC டச் எனப்படும் மொபைல் செயலியினை ஆரம்பித்ததுடன் இது ஒரு சௌகரியமான பயனாளர் அனுபவத்திற்கு வசதியளிப்பதற்கும், QR குறியீடு அடிப்படையிலான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் ஆற்றல் உள்ளடங்கலாக எமது டிஜிட்டல் தீர்வுகளை வாடிக்கையாளர்கள் அதிகளவு பயன்படுத்துவதற்குமாகும். | | | |
| புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட பீபள்ஸ் லீசிங்கின் இணையத்தளமானது, வாடிக்கையாளர் மையத்தன்மையினை மேலும் வலுவாக்குவதுடன், இது ஒருவரது நிதியியல் தேவைகளுக்கு ஒரு நிறுத்தல் வாசலாக மாற்றுவதுடன் இவை மூன்று மொழிகளிலும் மீள் ஆரம்பிக்கப்பட்டன. | | | |
| தலைமைக் காரியாலயம் மற்றும் கிளைகளின் வளாகங்களில் சூரியப் பலகங்களை நிறுவுதலின் தேவைப்பாடுகள் / முதலீடு என்பவற்றை இனங்காண்பதற்காக ஒரு இயல்திறன் மதிப்பீட்டினை கம்பனி நடாத்தியது. | | | |
| முன்னேற்றச் சாவி | | | |
| முன்னெடுக்கப்பட்டது | தொடர்கிறது | நிறைவு செய்யப்பட்டது | அடையவில்லை |

## நி.அ.இ. க்கான பங்களிப்பு




## வெற்றியினை அளவிடுதல்

### கம்பனியின் கரியமில அடிச்சுவடு




### சூழல் பாதுகாப்பு முன்னெடுப்புகளிலான முதலீடு




### பசுமை நிதியளித்தல் பகிர்ந்தளிப்பு



# இயற்கை மூலதனம்

GRI 102-11, 307-1

**சூழல் முகாமைத்துவ வரம்புறுகை**

குழுமத்தின் சூழல் நிகழ்ச்சி நிரலானது ஒரு விரிவான சூழல் கொள்கை மற்றும் நீடிப்புத்திறன் கொள்கையினால் வழிநடத்தப்படுவதுடன் இவை நான்கு மூலோபாய தூண்களைச் சுற்றியுள்ளன. அவையாவன, பசுமை விழிப்புணர்வு, பசுமைச் செயற்பாடுகள், பொறுப்புள்ள நிதி மற்றும் பசுமை வெளிக்கள கூ.ச.பொ. என்பவையாகும்.

உள்ளகத்தே விருத்திசெய்யப்பட்ட ஒரு சூழல் முகாமைத்துவ முறையானது (சூ.மு.மு.) முக்கிய சூழல் குறிகாட்டிகளது நிகழ்நேர தடமறிதலுக்கு துணைபுரிவதுடன் எமது முன்னேற்றங்களில் நெருக்கமான கண்காணிப்பினை வைத்திருப்பதனை இயலுமையாக்குகின்றது. தரவுகளானது ISO 14064: 2018 இன் பிரகாரம் பசுமை இல்ல வாயு வெளியேற்றங்களது அளவாக்கத்திற்கு துணைபுரிகின்றது.

அனைத்து சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் நாம் இறுக்கமான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதுடன் இவ்வருடத்தில் சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடற்ற சந்தர்ப்பங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை என்பதை நாம் பொறுப்புடன் கூறுகின்றோம்.

**சூழல் ஆளுகை**

சபையானது கம்பனியின் சூழல் மூலோபாயத்தினை உருவாக்குவதனை நடத்திச்செல்வதுடன் நிலைபேறுள்ள முன்னெடுப்புகளை ஒருங்கிணைக்கவும் கண்காணிப்பதற்குமான பொறுப்பினை நீடிப்புத்திறன் ஆளுகை இயக்கக் குழுவிற்கு ஒப்படைத்துள்ளது.

### பசுமை செயற்பாடுகள்

**எமது கடப்பாடு**

சூழலில் எமது நேரடியான சாத்தியமான தாக்கத்தினை முகாமைப்படுத்தி உகப்பாக்குதல்

**நாம் எவ்வாறு இதனை அடைந்தோம்**

- வலுசக்தி வினைத்திறன் வழிமுறைகள்
- பொறுப்பான கழிவு முகாமைத்துவம்
- பசுமை தொழில்நுட்பத்திலான முதலீடு
- பொறுப்பான கொள்முதல்

**நி.அ.இ. க்கான பங்களிப்பு**

7 AFFORDABLE AND CLEAN ENERGY, 9 INDUSTRY, INNOVATION AND INFRASTRUCTURE, 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION

### பொறுப்புள்ள நிதியளிப்பு

**எமது கடப்பாடு**

எமது கருவிகள் மற்றும் சேவைகளின் பசுமை தாக்கத்தினை உகப்பாக்கி மறைமுகமான எதிர்மறையான தாக்கத்தினை குறைத்தல்

**நாம் எவ்வாறு இதனை அடைந்தோம்**

- பொறுப்புமிக்க, நெறிமுறையான மற்றும் வெளிப்படையான நிதிச் சேவைகளது வழங்கல்
- பசுமை நிதியளிப்பு
- கடன் சல்லடையிடுவதில் நி.அ.இ. அக்கறைகள்

**நி.அ.இ. க்கான பங்களிப்பு**

11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

### பசுமை விழிப்புணர்வு

**எமது கடப்பாடு**

பெறுமதி சங்கிலியிடையே பசுமை உணர்வு நிலையினை ஊக்குவித்தல்

**நாம் எவ்வாறு இதனை அடைந்தோம்**

- ஒழுங்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகளூடாக ஒரு சூழல் உணர்வுள்ள தொழிற்சேனையினை விருத்திசெய்தல்
- வழங்குநர்களிடையே நிலைபேறுள்ள நடைமுறைகளை ஊக்குவித்தல்

**நி.அ.இ. க்கான பங்களிப்பு**

4 QUALITY EDUCATION, 11 SUSTAINABLE CITIES AND COMMUNITIES

### பசுமை வெளிக்கள கூ.ச.பொ.

பொறுப்புள்ள நிதியளிப்பு

சூழலில் பாதுகாத்தல்

**நாம் எவ்வாறு இதனை அடைந்தோம்**

- ஒழுங்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகளூடாக ஒரு சூழல் உணர்வுள்ள தொழிற்சேனையினை விருத்திசெய்தல்
- வழங்குநர்களிடையே நிலைபேறுள்ள நடைமுறைகளை ஊக்குவித்தல்

**நி.அ.இ. க்கான பங்களிப்பு**

4 QUALITY EDUCATION, 13 CLIMATE ACTION, 15 LIFE ON LAND

## பசுமைச் செயற்பாடுகள்

வினைத்திறனான மற்றும் பொறுப்பான வளங்களது நுகர்வினை உறுதிப்படுத்துவதன் மூலம் மற்றும் சூழலில் எமது செயற்பாடுகளின் எதிர்மறையான தாக்கத்தினை குறைப்பதற்கான வழிமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் நாம் எமது சூழல் அடிச்சுவட்டினை குறைப்பதற்கு முயற்சிக்கின்றோம். எனவே, வலுசக்தி திறன், உமிழ்வுக் கட்டுப்பாடு மற்றும் கழிவு முகாமைத்துவம் என்பன பசுமை செயற்பாடுகளின் முக்கிய முன்னிறுத்தப் பிரிவுகளாகும். கம்பனியின் செயற்திறன் அளவீட்டுக்கான சூழல் மு.செ.கு. களில் நாம் இதனை உள்ளடக்கியுள்ளோம் என்பதுடன் இது எமது ஒட்டுமொத்த வணிக மூலோபாயத்தினுள் சூழல் அக்கறைகளை ஒருங்கிணைப்பதற்கான எமது கடப்பாட்டினை மேலும் வலியுறுத்துகின்றது.

GRI | 302-1

### வலு சக்தித் திறன்

எமது தலைமைக் காரியாலயத்திலுள்ள கட்டிட முகாமைத்துவ முறைமையினால் (BMS) ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் வலு சக்தி நுகர்வு மற்றும் வலு சக்தி வினைத்திறன் மட்டங்கள் நெருக்கமாக கண்காணிக்கப்படுகின்றன. இது வலுசக்தி விரயமாகும் பகுதிகளை அல்லது செயற்திறனற்றவற்றை இனங்காணுவதனை இயலுமையாக்குவதுடன் அக்கறையுள்ள பிரிவுகளை விளித்துரைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை செயற்திறனுடன் மேள்கொள்வதனையும் இயலுமையாக்குகின்றது. அதேசமயம், இவ்வருடத்தில் தொடரப்பட்ட வீட்டிலிருந்து பணிபுரியும் ஏற்பாடுகளும் கிளைகள் மற்றும் தலைமைக் காரியாலயத்தில் வலுசக்தியின் ஒட்டுமொத்த குறைப்பிற்கும் பங்களித்துள்ளது.

2021/22 நிதியாண்டில் பீபள்ஸ் லீசிங் குழுமத்தினால் பயன்படுத்தப்பட்ட வலுசக்தி (மின்சக்தி முறை) 5,056,470.70kWh ஆகும்.

| இவ்வருடத்தில் அமுல்படுத்தப்பட்ட வலுசக்தி சேமிப்பு முன்னெடுப்புகள் |
|---|
| வலுசக்தி திறனை அதிகரிப்பதற்காக கிளைகளது இடத்தின் உச்சப்பயன்பாடு |

GRI | 305-1, 305-2, 305-3

### உமிழ்வு முகாமைத்துவம்

கம்பனியானது நி.ஆ. 2014/15 இலிருந்து உமிழ்வு மட்டங்களை அளவீடு செய்கின்றது. ப.இ.வா. உமிழ்வுகள் மிகவும் பொருண்மையான தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான நடவடிக்கைகளை, உலகளவில் ஏற்றுக்கொள்ளப்படும் உமிழ்வுக் கணக்கீட்டு நியமமான SO 14064:2018 மற்றும் காலநிலை மாற்றத்தில் ஐக்கிய நாடுகள் அரசாங்கக்களுக்கிடையேயான ஆய்வுக்குழு ஆகியவற்றுக்கேற்ப கண்காணிக்கப்பட்டது. இக்காலப்பகுதியிலான மொத்த உமிழ்வுகள் 800.91 tCO2e(குழுமம்) இனால் அதிகரிக்கப்பட்டது. இது மின்னாக்கிகளின் உயர்ந்த டீசல் நுகர்வு, மின்சார முறைமையின் அதிகரித்த உமிழ்வுக் காரணி மற்றும் அனுப்பீடு மற்றும் விநியோக இழப்பு மற்றும் கோவிட்-19 தொற்று நிலைமையின் காரணமாக பணியாட்களுக்கு தனியார் (சொந்தமானது) வாகனங்களில் பயணித்தல் என்பவற்றினாலாகும்.

| நேரடி உமிழ்வுகள் | மறைமுகமான உமிழ்வுகள் |
|---|---|
| கம்பனிக்கு உடைமையான வாகனங்கள் | பயன்படுத்தப்படும் வலுசக்தி (மின்சார முறைமை) |
| நிலையான கனற்சிகள் (காத்திருப்பு மின்னாக்கிகள்) | அனுப்புகை மற்றும் விநியோக இழப்புகள் |
| தீயணைப்பான் மீள்நிரப்பல் / மாற்றீடு | பணியாட்கள் பயணித்தல் (கம்பனியினால் செலுத்தப்படாதவை) |
| குளிரூட்டிக் கசிவுகள் | கழிவு அகற்றல் |
| பணியாட்கள் பயணித்தல் (கம்பனியினால் செலுத்தப்படுகின்றது) | மாநகரசபை தண்ணீர் நுகர்வு |
| வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனங்கள் (கம்பனியினால் செலுத்தப்படுகின்றது) | வணிக ஆகாயப் பயணம் |
| வணிகப் பிரயாணம் (தரைவழி) | வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனங்கள் (கம்பனியினால் செலுத்தப்படாதவை) |
| | வாடகைக்கு எடுத்த வாகனங்கள் |
| | கழிவுப் போக்குவரத்து |
| | உள்ளூரில் கொள்வனவு செய்த பொருட்களின் போக்குவரத்து |

| ப.இ.வா. உமிழ்வுகள் நிதியாண்டு 2021/22 | குழுமம் ($tCO_2e$) |
|---|---:|
| நேரடி உமிழ்வுகள் | 1,050.15 |
| மறைமுக உமிழ்வுகள் | 4,132.43 |
| மொத்த உமிழ்வுகள் | 5,182.58 |
| ப.இ.வா. உமிழ்வுகளின் அதிகரிப்பு | 800.91 |

2021/22 இல் பீபள்ஸ் லீசிங்கின் மொத்த கரியமில அடிச்சுவடானது 4,681.72 $tCO_2e$ (கம்பனி) ஆக கணிப்பிடப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 870.84 $tCO_2e$ ஆல் அதிகரித்துள்ளது. குழுமத்தின் தலா உமிழ்வுகள் மற்றும் உமிழ்வுகளது தீவிரம் என்பன 2.31 $tCO_2e$ (பணியாள் ஒருவருக்கு) மற்றும் 1.11 tCO2e (மில்லியன் ரூபாவுக்கு) ஆகும்.

நிதி வருடங்களில் (குழுமம்) ப.இ.வா. உமிழ்வுகளின் ஒப்பீடு $tCO_2e$




2021/22 நிதியாண்டிற்கான ப.இ.வா. உமிழ்வுகள் (குழுமம்) $tCO_2e$




GRI | 306-1, 306-2, 306-3

### கழிவு முகாமைத்துவம்

இ-கழிவு உள்ளடங்கலாக உருவாக்கப்படும் அனைத்து கழிவுகளும் பொறுப்பாக அகற்றப்படுவதனை நாம் உறுதிசெய்கின்றோம். வேறாக்கப்பட்ட கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள்சுழற்சி என்பன எமது வலையமைப்பில் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மத்திய சூழல் அதிகாரசபையில் பதிவுசெய்த கழிவு சேகரிப்பு தீர்வு வழங்குநர்கள் வேறாக்கப்பட்ட கழிவுகள் பொறுப்பாக அகற்றப்படுவதனை உறுதிசெய்கின்றார்கள். அதேசமயம், பணிப்பாய்வுகளின் நடைபெறும் தன்னியக்கமயமாக்கல் மற்றும் ஒரு தாள்களற்ற மேடையின் அறிமுகத்துடன் எமது தாள்களற்ற இயக்கமானது இவ்வருடத்தில் தொடர்ந்தது. இந்த முயற்சிகளுடன் தாள்களது மீள்சுழற்சி முயற்சிகளும் தாள்களது நுகர்வில் ஒரு வீழ்ச்சிக்கு பங்களித்துள்ளது.

# இயற்கை மூலதனம்

2021/22 இல் பீபள்ஸ் லீசிங் தலைமைக் காரியாலயத்தில் அகற்றுதல் முறையின் மூலம் கழிவின் வகை பின்வருமாறு அறிக்கையிடப்பட்டது.

| கழிவின் வகை | அளவு (Kg) |
|---|---|
| மீள்சுழற்சியிடப்பட்ட தாள் | 13,146 |
| விலங்குத் தீனியாக மீள்பயன்படுத்தப்பட்ட உணவுக் கழிவு | 3,180 |

## பொறுப்புள்ள நிதியளிப்பு

எமது கடன் வழங்கல் நடவடிக்கைகளு டாக மிகவும் சூழல் நிலைபேறுள்ள ஒரு பொருளாதாரத்தினை உருவாக்குவதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளோம். சூழல் சமூக ஆளுகை (சூ.ச.ஆ.) அக்கறைகள் எமது கடன்வழங்கல் தீர்மானங்களில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன் எமது வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகப் பங்காளிகளிடையே சூழல் மற்றும் சமூக தோற்றங்களில் நாம் தொடர்ந்தும் விழிப்புணர்வினை உருவாக்குகின்றோம். அதேசமயம், நாம் பசுமை நிதியளித்தலை பின்பற்றுவதனை தொடர்ந்ததுடன் பீபள்ஸ் லீசிங் இனால் வழங்கப்படும் கருவிகள் மற்றும் சேவைகளின் பசுமை தாக்கத்தினை உகப்பாக்கம் செய்வதனையும் தொடர்ந்தோம்.

மின்சார வாகனங்களுக்கான குத்தகை/ கடன் வசதிகள்

**ரூ. 3,030.99 மில்லியன்**

## பசுமை விழிப்புணர்வுகள்

எமது வாடிக்கையாளர்கள், வணிகப் பங்காளிகள் / வழங்குநர்கள் மற்றும் சமூகத்திடையே சூழல் நீடிப்புத்திறன் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வினை உருவாக்குதல் என்பது எமது சூழல் நிகழ்ச்சிநிரலின் ஒரு முக்கிய தோற்றமாகும். தொடர்ச்சியான பயிற்சித் திட்டங்களுக்கும் மேலாக, கிளை வலையமைப்பிடையே நீடிப்புத்திறன் வெற்றியாளர்கள் என்பது நீடிப்புத்திறன் முன்னெடுப்புகளை இயக்குவதற்கான விழிப்புணர்வினை உருவாக்குவதற்கும் சேவையாற்றுகின்றது.

**பணியாட்கள்**
- பணியாட்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள்
- கிளை வலையமைப்பிடையே நீடிப்புத்திறன் வெற்றியாளர்கள், இது விழிப்புணர்வினை உருவாக்கவும் நீடிப்புத்திறன் முன்னெடுப்புகளை இயக்குதல்

**வாடிக்கையாளர்கள்**
சூழல் தோழமையான தெரிவுகளை ஊக்குவிப்பதற்கு வாடிக்கையாளர்களுடன் ஈடுபடுதல்




**வழங்குநர்கள்**
கொள்முதல் தீர்மானங்களில் சூழல் மற்றும் சமூக அக்கறைகளை ஒருங்கிணைத்தல்

**சமூகம்**
கூ.ச.பொ. திட்டங்களூடாக கழிவு முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்பில் விழிப்புணர்வினை உருவாக்குதல்

## பசுமை வெளிக்கள கூ.ச.பொ. திட்டங்கள்

பல்லுயிர் பாதுகாப்பானது எமது பசுமை வெளிக்கள கூ.ச.பொ, முன்னெடுப்புகளின் ஒரு முக்கிய முன்னிறுத்தப் பிரிவாகும் என்பதுடன் இது சூழல் பாதுகாப்பினை ஊக்குவிக்கும். இவ்வாண்டில், சூழல் பாதுகாப்பு தொடர்பான முன்னெடுப்புகளுக்கான எமது முதலீடு ரூ. 1.87 மில்லியன் ஆகும்.



லைவ் திட்டம் 4ஆம் ஆண்டு 03 பெப்ரவரி 2022 இல் பங்காளர் விஜயம்

### ‘லைவ்’ கன்னெலிய வளங்காப்புக் காட்டில் காடு மீள்வளர்ப்புத் திட்டம்

2018 இலிருந்து கன்னெலிய வளங்காப்புக் காடு, ஓபாதவிலுள்ள ஹல்காவல உடன் இணைந்த 10 எக்டேயர் தாழ்த்தப்பட்ட பரணிச் செடிவகையினை மீட்டமைக்கும் நோக்கில் இந்த நீண்டகால பன்முக பங்காளிகளுடனான காடு மீள்வளர்ப்புத் திட்டத்திற்கு துணையளிப்பதனை பிபள்ஸ் லீசிங் தொடர்ந்தது. இத்திட்டமானது வனத் திணைக்களத்தின் வழிகாட்டுதலுடன் பயோடைவர்சிட்டி ஸ்ரீலங்காவினால் அமுல்படுத்தப்படுவதுடன், இதற்கான தொழில்நுட்ப உதவியானது இயற்கை பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியத்தினால் வழங்கப்படுகின்றது. இந்த புத்தாக்கமான முன்னெடுப்பின் ஒரு பகுதியாக 10 முன்னணி கூட்டாண்மைகள் இருப்பதுடன் இது நாட்டின் முதலாவது கரிமம் அட்டுறு திட்டமாகும். மார்ச் 2022 இன் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட செடிகளின் கண்காணிப்பின் அடிப்படையில், மீட்டமைக்கும் இடத்தில் 18,500 க்கும் அதிகமான செடிகள் தற்போது வளர்கின்றன. 1 எக்டெயர் துண்டு பீபள்ஸ் லீசிங்கிற்கு ஒதுக்கப்பட்டது. அறிக்கையிடும் ஆண்டில், இந்த முன்னெடுப்பிற்கு பீபள்ஸ் லீசிங் ரூ. 0.41 மில்லியனை முதலீடு செய்துள்ளது.

**சீகிரிய கற்பாறை கோட்டை மற்றும் பொலன்னறுவை கல் விஹாரை ஆகியவற்றில் திண்மக்கழிவு முகாமைத்துவ வேறுபடுத்தல் அலகினை நிறுவுதல்**

சீகிரிய உலக மரபுச்சின்னத் தளத்தில் 45 குப்பை கலன்களும் மற்றுமோர் 20 குப்பை கலன்கள் பொலுன்னறுவை கல் விஹாரையிலும் நிறுவப்பட்டதுடன் இவை கழிவு முகாமைத்துவ செயல்முறையினை சீரமைக்கவும் ஐக்கிய நாடுகள் நிலைபேறுள்ள அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு துணைபுரிவதற்காகவும் நிறுவப்பட்டன. இந்த கலன்கள் திண்ம கழிவு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாகும் என்பதுடன், உயர்ந்த எண்ணிக்கையிலான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வருநர்களை கவரும் இந்த தளங்களில் கரிமச் சேர்மானம், தாள் மற்றும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவு என்பன வேறாக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ. 1.29 மில்லியன் ஆகும்.



பொலன்னறுவை கல் விஹாரையில் கழிவு வேறாக்கல் கலன்களை கையளிக்கும் வைபவம்



சீகிரிய தளங்களில் கழிவு வேறாக்கல் கலன்களை கையளிக்கும் வைபவம்



**நற்சான்றிதல்**

இலங்கையின் பௌத்த வரலாற்றுத் தளத்தில் பொலன்னறுவை கல் விஹாரை ஒரு தனித்துவமான நிலக்குறியாகும். இது புராதனக்கால மூதாதையோரின் கலைத்திறன் ஆற்றலை பிரதிபலிக்கும் ஒரு கலாச்சார சின்னமாகும் என்பதுடன் ஆயிரக்கணக்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வருநர்களுக்கு ஒரு முக்கிய சமய மற்றும் வழிபாட்டுத் தளமாகும்.

20 திண்மக் கழிவு வேறுபடுத்தல் கலன்களை எமது கூ.சபொ. திட்டங்களின் ஒரு பகுதியாக வழங்குவதானது பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இனைப் பொறுத்தளவில் ஒரு சிறந்த விருப்புரிமைக் கொடையாகும். இது கழிவு முகாமைத்துவத்தின் பொருத்தமான சீரமைத்தல், மற்றும் இந்த புராதன தளத்தின் சூழல் மற்றும் வரலாற்றுப் பெறுமதியினை செயலுருவாக்கல் என்பதற்காகும். உங்களது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இந்த பெருந்தன்மையான சேவையினை நான் பாராட்டுகின்றேன்.

**வண.கந்த கட்டிய அத்தாதசி தேரர்**
*பொலன்னறுவை கல் விஹாரையின் பிரதான தேரர்*



**நற்சான்றிதழ்**

சீகிரிய இலங்கையிலுள்ள ஒரு யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளமாகும் மற்றும் அது கட்டிடக்கலை மற்றும் தோட்ட அமைப்பிற்கான ஒரு தலைசிறந்த படைப்பாகும். இலங்கையின் பிரஜைகளாக, அத்தகைய பாரம்பரியத் தளங்களை பாதுகாப்பதற்கு பங்களிக்கும் முக்கிய பொறுப்பினை நாம் கொண்டுள்ளோம். பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி, இந்த தளத்தின் அழகினை நீடிப்பதற்காக சீகிரிய உலக பாரம்பரியத் தளத்தினைச் சுற்றி திண்மக் கழிவு வேறுபடுத்தல் கலன்களை நிறுவுவதற்கான ஒரு திட்டத்தினை முன்னெடுத்துள்ளது. கரிமம், தாள் மற்றும பிளாஸ்டிக்/பொலித்தீன் என்று குறியீடிட்ட 45 கலன்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட இடங்களில் நிறுத்தப்பட்டன. ஒரு முக்கியமான தருணத்தில், ஒரு கூட்டாண்மை பிரஜை அத்தகைய அர்த்தமுள்ள கூ.ச.பொ. திட்டங்களை அமுல்படுத்தியமை மெச்சத்தக்கதாகும் என்பதுடன் இது தேசிய மட்டத்திலான முன்னுரிமைகள் நோக்கிப் பங்களிக்கும் வேளை நிலைபேறுள்ள அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் துணைபுரிகின்றது. பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி அத்தகைய திட்டங்களை எதிர்காலத்திலும் தொடரும் என நாம் வாழ்த்துகின்றோம்.

**திரு. ஆர்.உபுல் நிஷாந்த**
*திட்ட முகாமையாளர்*
மத்திய கலாச்சார நிதியம் - சீகிரிய திட்டம்

**பல்லுயிர் இலங்கை மேடையின் போஷக அங்கத்தவர்**

BIODIVERSITY SRI LANKA

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி பயோடைவர்சிட்டி ஸ்ரீலங்கா (BSL) இலங்கையின் ஒரு போஷக அங்கத்தவராகும், இது 2013 முதல் இலங்கையில் பல்லுயிர் மற்றும் சூழல் பாதுகாப்பில் கூட்டாண்மைகளது செயற்திறனான ஈடுபாட்டினை ஊக்குவிப்பதற்காக தனியார் துறையினால் இயக்கப்படும் தேசிய மேடையாகும். BSL பல்லுயிர் மற்றும் சூழல் பாதுகாப்பு பிரிவுகளில் தனியார் துறைக்கு திடமான தலைமைத்துவத்தினை செயற்திறனாக ஊக்குவிப்பதுடன், இது தொழில்நுட்ப உறுதுணையினை வழங்கல், தகவல்களது பரிமாற்றம், அறிவு மற்றும் அனுபவம், செயற்திறனான பயிலுதல் மற்றும் புரிந்துணர்வு பொறிமுறைகளினூடாக சிறந்த நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் அரசு மற்றும் சிவில் சமூகமப் பங்காளிகள் மற்றும் தனியார் துறையினரிடையேயான கலந்துரையாடலுக்கு வசதியளித்தல், பல்லுயிர் தோழமையான கொள்கைகளை பரிந்துரைத்தல் மற்றும் இலங்கையின் வலிவற்ற சூழலின் பாதுகாப்பினை பிரச்சாரப்படுத்தும் சாத்தியமான கருவிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

# இயற்கை மூலதனம்



*பொது காட்சிப்படுத்தலுக்காக பெத்தகான வெட்லேன்ட் பார்க்கில் சூழல் விழிப்புணர்வு விளம்பரப்பலகைகளது திறைநீக்கம்*

**பெத்தகான சதுப்புநில பூங்காவில் சூழல் விழிப்புணர்வு விளம்பரப் பலகைகளை நிறுவுதல்**

ஒரு சூழல் பாதுகாப்பு முன்னெடுப்பாக பீபள்ஸ் லிசிங் பெத்தகான வெட்லேன்ட் பார்க் உடன் கூட்டு சேர்ந்து பூங்கா முழுவதும் பல்லுயிர் மற்றும் சூழலமைப்பில் விழிப்புணர்வு பலகைகள் நிறுவப்பட்டன. இப்பலகைகள் தகவல்களை வழங்குவதுடன் இதன் மூலம் பூங்காவின் செழிப்பான பல்லுயிர் பெறுமதியினை பூங்காவிற்கு விஜயம் செய்யும் பாரிய எண்ணிக்கையிலான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வருநர்களிடையே விழிப்புணர்வு உருவாக்கப்படுகின்றது. இத் திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 0.24 மில்லியன் ஆகும்.



**நற்சான்றிதழ்**

இயற்கை கற்பிப்பவர்களாக மற்றும் சூழலியலாளர்களாக, மக்களை இயற்கை பாதகாப்பில் ஈடுபடுத்துதல் எமது பொறுப்பாகும். இந்த செயல்முறையில் பொது விழிப்புணர்வினை எழுப்புதல் ஒரு வினைத்திறனான மூலோபாயமாகும். கொழும்பு நகரத்திலுள்ள ஒரு சதுப்புநில கல்வி மையமான, பெத்தகான வெட்லேன்ட் பார்க் வழிநடத்தப்பட்ட நடைகள் மற்றும் செயலமர்வுகளூடாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏனைய பல இயற்கை ஆர்வலர்களுக்கு இயற்கை பாதுகாப்பு பற்றி அதன் கடமையினை நிறைவேற்றுகின்றது. இதற்கு அப்பால், கல்வி விளம்பரப் பலகைகளை காட்சிப்படுத்தல் பொதுவான வருநர்களுக்கு ஒரு மேலதிக நலன் என்பதுடன், இந்த பொருள் விளக்கப் பலகைகளை நிறுவுவதற்கான அவசரத் தேவையினை நாம் கொண்டிருந்தோம். நாம் ஆதரவாளர்களைத் தேடிக்கொண்டிருக்கும்போது பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இடமிருந்து உடனடி பதில் கிடைக்கப்பெற்றது. அவர்கள் அவர்களது கூ.ச.பொ. திட்டத்தினுள் இந்த திட்டத்திற்கான நிதி உதவியினை வழங்கும் பொறுப்பினை பொறுப்பேற்றார்கள் என்பதுடன் பாதுகாப்பின் பங்காளியாக வந்தார்கள். இந்த கல்வி விளம்பரப் பலகைகளை நிறுவுவதன் மூலம் இந்த சதுப்புநிலத்திற்கு விஜயம் செய்யும் எவரும் தாங்களாகவே வழிநடத்தப்படுவதுடன் இயற்கை தடங்களூடாக நடந்து செல்லும்போது நகர சதுப்புநில சூழலமைப்பு பற்றிய புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ள இயலும். இந்த திட்டத்திற்கான விலைமதிப்பற்ற ஆதரவாளராக பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி க்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாவதுடன் நீங்கள் மேற்கொண்ட இப்பணியானது பல சந்ததிகளுக்கு இருக்கும்.

**செல்வி நர்மதா தங்கம்பொல**
*பூங்கா முகாமையாளர்*
பெத்தகான வெட்லேன்ட் பார்க்

## முன்னொக்கிய பாதை

**குறுங்காலம் 2022/23**

- ஒரு சர்வதேச வரம்புறுகையின் அடிப்படையில் ஒரு இயற்கை மூலதன நெறிமுறையினை நிறுவுதல் மற்றும் இது சூழலில் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்களை மதிப்பிடுவதற்கு கம்பனியினை இயலுமையாக்கும்.
- சிறந்த செயல்முறை வினைத்திறனுக்காக தன்னியக்கமயமாக்கலை இயக்குதல்
- வாடிக்கையாளர் கரிம அடிச்சுவட்டினை குறைப்பதற்கான டிஜிட்டல் உட்கட்டமைப்பினை மேம்படுத்தல்
- கூசபொ முன்னெடுப்புகளூடாக பல்லுயிர் பாதுகாப்பில் விழிப்புணர்வினை ஊக்குவித்தல்
- காடுமீள்வளர்ப்பு மற்றும் காலநிலை செயல்திட்டங்களுக்கு தொடர்ச்சியான உறுதுணை

**மத்திய காலம் - 3 years**

- கிளை உட்கட்டமைப்பினை குறைப்பதற்காக டிஜிட்டல் வழங்கலினை மேம்படுத்தல்
- மின்சாரத் தேவைகளுக்கு தேசிய மின்சார அமைப்பில் தங்கியிருப்பதனை குறைத்தல்
- சூழல் இடர் முகாமைத்துவத்தினை பலப்படுத்துதல்

**நீண்டகாலம்**

- ஒரு தடையற்ற மற்றும் சுறுசுறுப்பான செயற்பாட்டு மாதிரி நோக்கி நகருதல்
- புதுப்பிக்கத்தக்க வளங்களிலிருந்து 75% ஆன வலுசக்தி தேவைப்பாட்டினை சந்திப்பதற்கு இலக்கு வைத்தல்
- வழங்குநர்களுக்கு ஒரு சமூக மற்றும் சூழல் நடத்தை விதிக் கோவையினை நிறுவுதல்

## இயற்கை மூலதன ஈடுகட்டல்கள்

செயல்முறை மேம்படுத்தல்கள் மற்றும் சூழல் தோழமையான தொழில்நுட்பங்களிலான முதலீடுகள் என்பவற்றுக்கு குறுங்காலத்தில் கணிசமானளவு முதலீடுகள் தேவைப்பட்டாலும் நீண்ட காலத்தில் கிரயச் சேமிப்புக்களைக் கொண்டு வரும்.

வலுசக்தி வினைத்திறனான தொழில்நுட்பம், உமிழ்வுகளை குறைத்தல் மற்றும் பசுமையினை கட்டியெழுப்புதலிலான முதலீடுகள் சிறந்த தரத்திலான பௌதீக உட்கட்டமைப்பினை விளைவிக்கும்.

ஒரு சூழல் உணர்வுள்ள கம்பனியெனும் நற்பெயரானது வணிக நாமப் பெறுமதியினை மேலும் மேம்படுத்துவதுடன் அறிவுசார் மூலதனத்திற்கான ஒரு மேம்படுத்தலை விளைவிக்கும்.

சூழல் தோழமையான கூட்டாண்மைக் கலாச்சாரமானது பணியாட்களை சமூக மற்றும் சூழல் ரீதியாக பொறுப்புள்ள தனிநபர்களாவதனை ஊக்குவிக்கும்.

சிறந்த ஈடுபாட்டு மட்டங்களூடாக கம்பனியின் பங்காளிகளிடையே பசுமை விழிப்புணர்வினை ஊக்குவிக்கும் கம்பனியின் முயற்சிகள் வாடிக்கையாளர்கள், வணிகப் பங்காளிகள் மற்றும் சமூகத்துடனான உறவினைப் பலப்படுத்தும்.



எமது திடமான, அசைக்கமுடியாத தொழில் நெறிமுறைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.



# காப்பாண்மை

Board of Directors 117
Corporate Management 121
Corporate Governance 124
Annual Report of the Board of Directors on the Affairs of the Company 156
Board Audit Committee Report 162
Report of the Human Resources and Remuneration Committee 164
Related Party Transactions Review Committee Report 166
Report of the Nomination Committee 168
Board Integrated Risk Management Committee Report 170
Compliance Risk Management 173
Risk Management Review 176

# பணிப்பாளர்கள் சபை



திரு. சுஜீவ ராஜபக்ஷ
*தலைவர்/நிறைவேற்றுநரல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்*



செல்வி மீரியம் கோரலி பியட்டர்ஸ்
*நிறைவேற்றுநரல்லாத சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர்*



திரு. ரொஹான் பத்திரகே
*நிறைவேற்றுநரல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்*



திரு. ரஞ்சித் கொடித்துவக்கு
*நிறைவேற்றுநரல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்*



திரு. சனுர விஜேதிலக்க
*நிறைவேற்றுநரல்லாத சுயாதீன பணிப்பாளர்*



திரு. அசோகா பண்டார
*நிறைவேற்றுநரல்லாத சுயாதீன பணிப்பாளர்*



திரு. கிளைவ் பொன்சேகா
*நிறைவேற்றுநரல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்*



திரு. அசாம் ஏ. ஹாமத்
*நிறைவேற்றுநரல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்*



திரு. மைக்கல் பிரதீப் அமிர்தநாயகம்
*நிறைவேற்றுநரல்லாத சுயாதீன பணிப்பாளர்*



செல்வி ஹாலினி சில்வா
*கம்பனி காரியதரிசி*

# Board of Directors

## 1. திரு. சுஜீவ ராஜபக்ஷ

*தலைவர் / நிறைவேற்றுநரல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்*

திரு. சுஜீவ ராஜபக்ஷ அவர்கள் கம்பனியின் தலைவராக 19 பெப்ரவரி 2020 இல் நியமிக்கப்பட்டார்.

### தகமைகள்

இலங்கை பட்டயக் கணக்காளாகள் நிறுவகத்தின ஒரு சமூக அங்கத்தவர் (FCA) மற்றும் இலங்கை பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவருமான (FCMA) திரு. ராஜபக்ஷ அவர்கள் ஸ்ரீ ஜஎவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்திலிருந்து (PIM) வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

நான்கு தசாப்தங்களுக்கு சமீபமாக பரந்து காணப்படும் அவரது தொழில் வாழ்வில் அவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தில் தலைவர், உப தலைவர் போன்ற கௌரவப் பதவிகளையும் சபை அங்கத்தவராகவும் (தெரிவு செய்யப்பட்டது), இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் கணக்காய்வு நியமங்கள் குழுவின் முன்னால் தலைவரும், இலங்கையின் தொழில்புரியும் கணக்காளர்கள் மன்றத்தின் தலைவர், இலங்கை கிரிக்கட் சபையின் பொருளாளர், கிரிக்கட் உலகக்கோப்பை 2021 இன் பொருளாளர், தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் (SAFA) சபை அங்கத்தவர் மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர், ஆசிய பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பின் (CAPA)தொழில்நுட்ப ஆலோகராகவும் பதவிகளை வகித்துள்ளார். அவர் நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பிஎல்சி, என்டிபி கெப்பிட்டல் லிமிட்டட் - பங்களாதேஷ், த வைனான்ஸ் கம்பனி பிஎல்சி, யுனி டில் பெக்கேஜிங் லிமிட்டட், யுனி டில் பெக்கேஜிங் அன்ட் சொலுயுஸன்ஸ் லிமிட்டட், மற்றும் சொவ்ட்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் ஆகியவற்றின் சபைகளில் பணிப்பாளராக சேவையாற்றியுள்ளார்.

### தற்போதைய பதவிகள்

திரு. ராஜபக்ஷ அவர்கள் BDO பார்ட்னர்ஸ ில், உலகிலுள்ள கணக்கீட்டு வலையமைப்பான BDO இன் உள்ளூர் பிரதிநிதி, முகாமைத்துவ பங்காளர் ஆவார். தற்போது இவர் மக்கள் வங்கியின் தலைவராக சேவையாற்றுகின்றார். அத்துடன், ஹேகார்ப் பிஎல்சி, டிப்ட் பிரடக்ட்ஸ் பிஎல்சி, ஹேலீஸ் எக்ரிகல்ச்சரல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் ஆகியவற்றின் ஒரு சுயாதீன நினைவேற்றுநரல்லா பணிப்பாளர் மற்றும் லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட், பங்களாதேஷின் பணிப்பாளரும் ஆவார். திரு, ராஜபக்ஷ அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சபை அங்கத்தவருமாவார்.

இவரது நிபுணத்துவம், அனைத்து கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் மற்றும் நடைமுறைகள், நிதியியல் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகள், மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தனியார் மற்றும் பொதுத் துறைகளில் ஒட்டுமொத்த முகாமைத்துவ நிடைமுறைகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

## 2. செல்வி. மீரியம் கொரலி பியட்டர்ஸ்

*நிறைவேற்றுநரல்லா சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர்*

செல்வி கொரலி பியட்டர்ஸ் அவர்கள் பணிப்பாளர் சபைக்கு 01 மார்ச் 2020 இல் நியமிக்கப்பட்டார்.

### தகமைகள்

செல்வி பியட்டர்ஸ் அவர்கள் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவர் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் மற்றும் இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிருவகத்தினதும் சமூக அங்கத்தவரும் ஆவார். இவர் சசெக்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து பௌதீகவியலில் இளமானி (கௌரவ) பட்டத்தினையும் எடின்பேர்கிலுள்ள எரியொட்-வொட் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் ஒரு முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

செல்வி. கொரலி தனியார் மற்றும் அரச துறைகளில் 25 வருடங்களுக்கும் மேலான சிரேஷ்ட மட்டத்திலான அனுபவத்தினை கூட்டாண்மை நிதியளித்தல் மற்றும் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு பிரிவுகளில் பெற்றுள்ளார். இவர் 2010 வின்லேஸ் கொழும்பில் நிதிப் பணிப்பாளராக இணைந்து 2016 இல் ஹப்புகஸ்தன்ன ப்ளான்டேஷன்ஸ் பிஎல்சி மற்றும் உடபுசல்லாவ ப்ளான்டேஷன்ஸ் பிஎல்சி ஆகியவற்றிலும் நிதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் 2020 வரை இப்பதவிகளில் இருந்தார். இதற்கு முன்னர் ரிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தில் குழுமத்தின் பிரதம நிதியியல் அதிகாரியாக செயலாற்றியதுடன், இது ஐந்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளை உள்ளடக்கிய இந்த பன்முகப்படுத்தப்பட்ட குழுமத்தின் நிதிக்கு பொறுப்பாளியாயிருப்பதனை கொண்டதாகும்.

### தற்போதைய பதவிகள்

செல்வி கொரலி பியட்டர்ஸ் அவர்கள் தலைவர் மற்றும் ஒரு சுயாதீன பணிப்பாளராக போகல கிரபைட் லங்கா பிஎல்சி, செலான் பேங்க் பிஎல்சி இன் சிரேஷ்ட பணிப்பாளர் / சுயாதீன பணிப்பாளர் மற்றும் கணக்காய்வுக் குழுவின் தலைவர் மற்றும் RIL ப்ரொப்பர்ட்டி பிஎல்சி, யுனைட்டட் மோட்டர்ஸ் லங்கா பிஎல்சி மற்றும் ஹேமாஸ் பார்மசியூட்டிகல்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் சுயாதீன நிறைவுற்றுநரல்லா பணிப்பாளர் மற்றும் கணக்காய்வுக் குழுவின் தலைவருமாவார்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினது சபையின் அங்கத்தவருமாவார்.

## 3. திரு. ரொஹான் பத்திரகே

*நிறைவேற்றுநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர்*

திரு. ரொஹான் பத்திரகே அவர்கள் 07 ஜூலை 2020 இல் பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

### தகமைகள்

ஒரு வழக்கறிஞராக திரு. பத்திரகே அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறை பட்டதாரி மற்றும் நியுசிலாந்தின் மெசே பல்கலைக்கழகத்தின் வங்கி முகாமைத்துவத்தில் முதுமானி பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர் வங்கியியலில் பட்டப்படிப்பிற்கு பின்னரான டிப்ளோமாவினையும் பெற்றுள்ளார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

இவர் மக்கள் வங்கியில் மனித வளங்கள், சட்டம் மற்றும் நிர்வாகத்தில் 27 வருடங்களுக்கான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராக (மனித வளங்கள் மற்றும் சட்டம்) இவர் வங்கியின் 10,000 க்கும் மேலான பலமான தொழிற்சேனையினை முகாமைப்படுத்தியுள்ளதுடன் மற்றும் மனித வள தேவைப்பாடுகளுக்கு அமைய சிரேஷ்ட நிறைவேற்றநர் பணிக்கமர்த்தல்களையும் மேற்கொண்டுள்ளார். இதற்கும் மேலாக, இவர் வங்கியின் 70 அங்கத்தவர்களைக் கொண்ட சட்டக் குழுவினையும் வழிநடத்தினார். இவர் மக்கள் வங்கியில் பிரதிப் பொது முகாமையாளர் - பணிப்பாளர் சபைக்கான செயலாளராகவும் இருந்தார் என்பதுடன், இவர் இப்பதவியினை ஆகஸ்ட் 2010 முதல் மார்ச் 2019 வரை வகித்தார். திரு. பத்திரகே அவர்கள் சபையின் பணிப்பாளர்கள் சபை மற்றும் அதன் பல்வேறு உப குழுக்கள் தொடர்பான அனைத்து விடயங்களில் நிர்வாக உறுதுணையினை வழங்கினார். மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் சபையின் செயலாளராக கடமையாற்றிய வேளை இவர் ஆளுகையில் சிறந்த நடைமுறைகளுக்கு வசதியளிப்பதற்கு முக்கிய பங்கினை வகித்தார்.

### தற்போதைய பதவிகள்

திரு. பத்திரகே அவர்கள் தற்போது மக்கள் வங்கியின் வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகளுக்கான சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராவார். இவர் வங்கியின் வெளிநாட்டு பணமனுப்பல் வணிகத்தினையும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் மேற்பார்வை செய்கின்றார். இவர் பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட்டின் தலைவர், பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்டின் பணிப்பாளர், பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட்டின் பணிப்பாளர், லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட், பங்களாதேஷின் பணிப்பாளர், பீபள்ஸ் ட்ரவல்ஸ் லிமிட்டட்டின் பணிப்பாளர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் மாற்றுப் பணிப்பாளரும் ஆவார்.

## 4. திரு. ரஞ்சித் கொடித்துவக்கு

*நிறைவேற்றுநரல்லா, சுயாதீனமற்ற பணிப்பாளர்*

திரு. கொடித்துவக்கு அவர்கள் 13 ஆகஸ்ட் 2020 இல் சபைக்கு நியமிக்கப்பட்டார்.

### தகமைகள்

திரு. கொடித்துவக்கு அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் துறையில் விசேடத்துவத்துடன் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் ஐக்கிய இராச்சியம், நியு பக்கிங்கம்சயர் பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்தில் (கௌரவ) இளமானி பட்டத்தையும் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் சிரேஷ்ட சமூக அங்கத்தவர் மற்றும் இலங்கை சந்தைப்படுத்தல் நிருவகத்தின் சான்றளிக்கப்பட்ட அங்கத்தவருமாவார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

திரு. கொடித்துவக்கு அவர்கள் ஒரு மூத்த வங்கியாளர் ஆவதுடன், மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளராவார். இவர் உள்ளூர் மற்றும் கரைகடந்த செயற்பாடுகளில் நான் தசாப்தங்கள் பன்முக அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

கிளை வங்கியியல், நுகர்வோர் வங்கியியல், வர்த்தக வங்கியியல், கூட்டாண்மை வங்கியியல், கரைகடந்த வங்கியியல், சர்வதேச வங்கியியில், திட்ட நிதியளித்தல், மீட்டல்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்றவற்றில் சிறந்த வங்கியியல் அனுபவத்தினை பெற்றுள்ளார்.

ஒரு டிஜிட்டல் மேடைக்கு வணிகத் தேவைப்பாடுகள் சார்பியலில் வங்கியை டிஜிட்டல் மயமாக்கல், துறையில் சிறந்த நடைமுறைகளை கடைப்பிடித்தல் மற்றும் வணிகச்செயல்முறைகளின் மறுசீராக்கம் என்பவற்றை இயக்கம் செய்த முக்கியமானவர் என்பதுடன் இவற்றிற்காக சர்வதேசம் மற்றும் உள்ளூர் மட்டத்தில் வங்கிக்கு பல மதிப்புமிக்க விருதுகள் / அங்கீகாரங்கள் கிடைக்கப்பெற்றன.

### தற்போதைய பதவிகள்

இவர் வைனான்சியல் ஒம்புட்ஸ்மன் ஸ்ரீலங்கா (கரன்ட்டி) லிமிட்டட், லங்கா வைனான்சியல் சேர்விஸஸ் பியுரோ லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் ட்ரவல்ஸ் லிமிட்டட் ஆகியவற்றின் தலைவர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் சங்கம் (கரன்ட்டி) லிமிட்டட், பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் - பங்களாதேஷ், கிரடிட் இன்வர்மேஷன் பியுரோ ஒவ் ஸ்ரீலங்கா ஆகியவற்றின் உப தலைவர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிருவகம் மற்றும் தேசிய கொடுப்பனவுகள் சபை ஆகியவற்றின் ஆளுகைச் சபையின் ஒரு அங்கத்தவருமாவார்.

## 5. திரு.சனுர விஜேதிலக்க

*நிறைவேற்றநரல்லா சுயாதீன பணிப்பாளர்*

திரு. சனுர விஜேதிலக்க அவர்கள் பணிப்பாளர் சபைக்கு 19 பெப்ரவரி 2020 இல் நியமிக்கப்பட்டார்.

### தகமைகள்

திரு. விஜேதிலக்க அவர்கள் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவர் மற்றும் சர்வதேச தொழில்சார் முகாமையாளர்கள் சங்கத்தின் (ஐ.இ.) இணை அங்கத்தவரும் ஆவார். இவர் இந்தியாவின் ICFAI பல்கலைக்கழகத்திலிருந்த முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

திரு. விஜேதிலக்க அவர்கள் வங்கியியல் துறையில் 35 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினையும், இவற்றில் மொத்தமாக 14 வருடங்கள் கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி இல் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவ அனுபவத்தினையும் கொண்டுள்ளார். இவரது அனுபவம், கடன்வழங்கல், இணக்கப்பாடு மற்றும் கிளை நிர்வாகம் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. வங்கியில் இவர் ஒரு இடர்-அடிப்படையான இணக்கப்பாட்டு வரம்புறுகை மற்றும் இடர்-அடிப்படையான இணக்கப்பாட்டு கணக்காய்வு முறைகள் என்பவற்றை அமுல்படுத்துவதற்கு காரணமாயிருந்தார்.

ஐந்த வருடக் காலப்பகுதியில் வங்கியின் இரண்டு பாரிய பிரதேசங்களில் விற்பனை மற்றும் இலாப வளர்ச்சியினை உகப்பாக்கும் மூலோபாயங்களை வெற்றிகரமாக அபிவிருத்தி செய்து நிறைவேற்றினார். இவர் வங்கியின் உள்வாரி வள பீடத்தின் அங்கத்தவராவதுடன் இவர் கிளை முகாமையாளர்கள் மற்றும் கடன் வழங்கலுக்கு கடன் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடாத்தியுள்ளார்.

இவர் கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி இல் சேவையாற்றும்போது வங்கியினை பிரதிநிதித்துவப்படுத்தி சிங்கப்பூர், பங்களாதேஷ், சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றியுள்ளார். இவர் கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி இல் இளைப்பாறுதல் அடைந்ததன் பின்னர் சொவ்ட்லொஜிக் வைனான்ஸ் பிஎல்சி இல் உதவிப் பொது முகாமையாளர் - இணக்கப்பாட்டு பதவியில் சேவையாற்றியுள்ளார்.

### தற்போதைய பதவிகள் / ஈடுபாடுகள்

திரு. விஜேதிலக்க அவர்கள் தற்போது இலங்கை மத்திய வங்கியின் வங்கியியல் கற்கைக்கான மத்திய நிலையத்தினால் நடாத்தப்படும் பயிற்சித் திட்டங்களில் ஒரு வளவாளராக ஈடுபடுகின்றார்.

## 6. திரு. அசோகா பண்டார

*நிறைவேற்றுநரல்லா சுயாதீன பணிப்பாளர்*

திரு. அசோகா பண்டார அவர்கள் பணிப்பாளர் சபைக்கு 19 பெப்ரவரி 2020 இல் நியமிக்கப்பட்டார்.

### தகமைகள்

இவர் சந்தைப்படுத்தலில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமாவினை (CIM_UK) மற்றும் வர்த்தக நிர்வாகத்தில் முதுமானி (கொழும்பு பல்கலைக்கழகம்) பட்டத்தினையும் வைத்துள்ளார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

திரு. அசோகா பண்டார அவர்கள் பல்தேசியக் கம்பனிகளில் மற்றும் முன்னணி உள்ளூர் கூட்டாண்மைகளில் கேள்வி உருவாக்கல் செயற்பாடு மற்றும் வணிக அபிவிருத்திகளில் 30 வருடங்களுக்கு அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் நெஸ்லே லங்கா பிஎல்சி இன் MANCOM அங்கத்தவர் மற்றும் டெல்மேஜ் வொர்சைத் குரூப் ஒவ் கம்பனிகளில் குழும முகாமைத்துவ பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். இவரது முக்கிய திறமைகள் வணிகநாமமிடப்பட்ட வணிகங்கள் மற்றும் வர்த்தக குழுக்களை விருத்திசெய்தல் ஆகியவற்றை கட்டியெழுப்புதலை உள்ளடக்கும்.

### தற்போதைய பதவிகள்

லிற்றோ கேஸ் லங்கா லிமிட்டட், லிற்றோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவேட் லிமிட்டட் மற்றும் பில்ட் மார்ட் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் பணிப்பாளர். தற்போது இவர் முன்னணி உள்ளூர் பல்கூட்டுக் கம்பனிகளுக்கு முகாமைத்துவ ஆலோசனை சேவைகளை செயற்படுத்துகின்றார். ஒரு பயிற்றுவிப்பாளராக, இவர் குழுத் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் ஆட்பண்பு அபிவிருத்தி ஆகியவற்றின் விசேடத்துவம் பெற்றுள்ளதுடன், இவர் வெளிநாட்டு ஒப்படைகள் மற்றும் இவரது அறிவினை எம்பிஏ கற்பித்தல் தலைப்புகளான, தலைமைத்துவம், மூலோபாய முகாமைத்துவம் மற்றும் மேம்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை முகாமைத்துவம் ஆகியவற்றிலாகும்.

இவர் முன்னணி கைத்தொழில் அங்கங்கள் எதிர் முக்கிய பங்காளிகளுக்கு இவரது சிக்கல் முகாமைத்துவ திறன்களை பயன்படுத்தி ஒரு முக்கிய பேரம்பேசுபவராகவும் செயலாற்றுகின்றார். இவர் இலங்கை பால்பொருள் சங்கத்தின் உப தலைவர் மற்றும் லங்கா கொன்வெக்ஷனரி மெனுயுவெக்சரர்ஸ் எசோஷியேசன் மற்றும் வர்த்தகச் சம்மேளனம் உணவு மற்றும் மென்பானக் குழு ஆகியவற்றின் ஒரு நிறைவேற்று அங்கத்தவராகவும் சேவையாற்றுகின்றார்.

# Board of Directors

## 7. திரு. கிளைவ் பொன்சேகா

*நிறைவேற்றுநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர்*

திரு. கிளைவ் பொன்சேகா அவர்கள் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனானஸ் பிஎல்சி இன் பணிப்பாளராக 19 பெப்ரவரி 2020 இல் நியமிக்கப்பட்டார்.

### தகமைகள்

திரு. பொன்சேகா அவர்கள் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவர் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ACI வர்த்தகச் சான்றிதழில் ஒரு சிறப்பு பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் திறைசேரி முகாமைத்துவத்தில் 28 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் அவுஸ்திரேலியாவின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் (CMA) ஒரு சான்றளிக்கப்பட்ட அங்கத்தவருமாவார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

திரு. பொன்சேகா அவர்கள் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி மற்றும் ஸ்டான்டர்ட் சாட்டர்ட் வங்கியில் சேவையாற்றியுள்ளார். இவர் 2018 முதல் 2020 வரையான காலப்பகுதியில் முதன்மை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவராகவும், தேசிய கொடுப்பனவு சபை, நிதியியல் முறைமை ஸ்திரத்தன்மை ஆலோசனைக் குழு ஆகியவற்றின் அங்கத்தவரும் ஆவார். அத்துடன் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஒரு புதிய மாற்றிடு தரக்குறி வட்டி வீதங்களை கற்று மற்றும் வடிவமைப்பதற்கான குழுவில் அங்கத்தவராக இருந்தார். மேலும், முன்னர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் IABF/ DABF பரீட்சைகளில் பிரதம பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளார்.

### தற்போதைய பதவிகள்

திரு. பொன்சேகா அவர்கள் மக்கள் வங்கியில் 2022 இல் இணைந்து நவம்பர் 2011 முதல் மக்கள் வங்கியின் சிரேஷ்ட கூட்டாண்மை முகாமைத்துவ குழுவின் அங்கத்தவருமாவார். இவர் பீபள்ஸ் லிசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் மற்றும் லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் - பங்களாதேஷ் ஆகியவற்றில் தற்போது பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

## 8. திரு. அசாம் ஏ ஹாமத்

*நிறைவேற்றுநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர்*

திரு. அசாம் ஏ ஹாமத் அவர்கள் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் சபைக்கு 30 டிசம்பர் 2019 இல் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### தகமைகள்

இவர் முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிருவகத்தின் (ஐக்கிய இராச்சியம்) சமூக அங்கத்தவர், சான்றளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர்கள் சங்கத்தின் (ஐக்கிய இராச்சியம்) சமூக அங்கத்தவர் மற்றும் இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவரும் ஆவார். இவர் இடர் முகாமைத்துவ நிருவகத்தின் (ஐக்கிய இராச்சியம்) ஒரு தொழில்நுட்ப நிபுணர், ஒரு சான்றளிக்கப்பட்ட நடைமுறையிலுள்ள கணக்காளர் (அவுஸ்திரேலியா) மற்றும் பிணையங்கள் மற்றும் முதலீட்டிற்கான பட்டய நிருவகத்தின் (ஐக்கிய இராச்சியம்) அங்கத்தவருமாவார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

திரு. ஹாமத் அவர்கள் உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் மூலோபாய நிதியியல் முகாமைத்துவம், மாற்றீட்டு முதலீடுகள் மற்றும் இடர் ஆகியவற்றில் 18 வருடங்களுக்கு கிட்டிய அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவரது முன்னைய பணிக்கொள்பவர்கள் சில பாரிய பல்தேசிய தொழில்சார் சேவை நிறுவனங்கள் மற்றும் உரிய சந்தைகளில் ஏனைய அடுக்கு 1 சேவை வழங்குநர்களை உள்ளடக்கும்.

### தற்போதைய பதவிகள்

திரு. ஹாமத் அவர்கள் மக்கள் வங்கியின் நிதிப்பிரிவிற்கான தலைமையாக 03 ஜனவரி 2017 முதல் கடமையாற்றுகின்றார். இவர் லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட், பங்களாதேஷின் பணிப்பாளரும் ஆவார்.

## 9. திரு. மைக்கல் பிரதீப் அமிர்தநாயகம்

*நிறைவேற்றநரல்லா சுயாதீன பணிப்பாளர்*

திரு. அமிர்தநாயகம் அவர்கள் சபைக்கு பணிப்பாளராக 15 ஜூலை 2022 முதல் நியமிக்கப்பட்டார்.

### தகமைகள்

திரு. அமிர்தநாயகம் அவர்கள் சந்தைப்படுத்தல் பட்டய நிருவகத்தின் (ஐக்கிய இராச்சியம்) ஒரு சமூக அங்கத்தவர் மற்றும் பேச்சு மற்றும் நாடகத்தில் டிரினிட்டி காலேஜ் ஒவ் மியுசிக், ஐ.இ. இன் இணை அங்கத்தவரும் ஆவார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

திரு. அமிர்தநாயகம் அவர்கள் இலங்கையிலுள்ள பிரசித்திபெற்ற விளம்பர மற்றும் ஊடக நபராவார் என்பதுடன் விளம்பரத் துறையில் 35 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் தற்போது ஒரு முன்னணி விளம்பரப்படுத்தல் முகவராக ஹோம்ஸ் பொலார்ட் அன்ட் ஸ்டொட் இன் தலைவர் மற்றும் முகாமைப் பணிப்பாளர் ஆவார் என்பதுடன் இதனை இவர் 30 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கினார்.

திரு. அமிர்தநாயகம் அவர்கள் ஒரு ஊடகச் சின்னமும் ஆகும். இவர் ரூபவாஹினி, ITN மற்றும் SLBC ஆகியவற்றின் செய்தி முன்னிலைப்படுத்துபவர் மற்றும் இவர் ஒரு நேர்காணல் செய்பவர் மற்றும் கிரிக்கட் வர்ணனையாளரும் ஆவார். இவர் இங்கிலாந்திலுள்ள BBC இன் தலைமையகமான புஷ் ஹவுஸ் இல் பயிற்றுவிக்கப்பட்டார். திரு. அமிர்தநாயகம் அவர்கள் கொழும்பு ரோட்டரி கழகத்தில் 50 ஆவது தலைவர் மற்றும் 2021 இல் வருடத்திற்கான ரொட்டேரியன் விருதினையும் பெற்றுள்ளார்.
திரு. அமிர்தநாயகம் அவர்கள் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் முன்னால் தலைவர் மற்றும் லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் பங்களாதேஷ் மற்றும் பீபள்ஸ் மேர்ச்சன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளரும் ஆவார்.

### தற்போதைய பதவிகள்

இவர் தொழுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களது மேம்பாடு மற்றும் புனர்வாழ்வுக்கான சங்கத்தின் உப தலைவர் மற்றும் அனுர பண்டாரநாயக்கா வவுன்டேஷனின் பணிப்பாளரும் ஆவார்.

## 10. செல்வி ஷாலினி சில்வா

*கம்பனி காரியதரிசி*

செல்வி சில்வா அவர்கள் சபையின் கம்பனி காரியதரிசியாக 15 ஜூலை 2021 இல் நியமிக்கப்பட்டார்.

### தகமைகள்

இவர் பட்டய காரியதரிசிகள் மற்றும் நிர்வாகத்தர்கள் நிருவகத்தின் (ஐ.இ.) (தற்போது ஐக்கிய இராச்சியத்தின் பட்டய ஆளுகை நிருவகத்தின் பட்டய ஆளுகை நிபுணர்) இணை அங்கத்தவராவார். இவர் இலங்கையின் பட்டயக் கூட்டாண்மை காரியதரிசிகளின் ஒரு பட்டதாரியும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இளமானிக் கலைப் பட்டதாரியும் ஆவார்.

### வகித்த பதவிகள்/அனுபவம்

செல்வி சில்வா அவர்கள் 18 வருடங்களுக்கும் அதிகமான கூட்டாண்மை காரியதரிசி அனுபவத்தினை தனியார் துறை மற்றும் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகள், உத்தரவாதங்கள் மற்றும் சங்கங்களில் பெற்றுள்ளார்.

### தற்போதைய பதவிகள்

இவர் தற்போது பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட், பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட், பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட் ஆகிய நிறுவனங்களுக்கும் கம்பனி காரியதரிசியாக கடமையாற்றுகின்றார்.

# கூட்டாண்மை முகாமைத்துவம்



**திரு. சமிந்திர மார்சலீன்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர்*



**திரு. லயனல் பர்னாந்து**
*சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர்*



**திர. ரொஹான் தென்னக்கோன்**
*பிரதிப் பொது முகாமையாளர் - இடர் மற்றும் கட்டுப்பாடு*



**திரு. தமித்த மாலவிதந்தில**
*பிரதிப் பொது முகாமையாளர் -மீட்டல்கள் மற்றும் நிர்வாகம்*



**திரு. லக்சந்த குணவர்தன**
*பிரதிப் பொது முகாமையாளர் - செயற்பாடுகள்*



**திரு. பிரபாத் குணசேன**
*பிரதிப் பொது முகாமையாளர் - த.தொ. தொ (குழுமம்)*



**திரு. உதேஷ் குணவர்தன**
*பிரதிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு*



**திரு. ரனில் பெரேரா**
*உதவிப் பொது முகாமையாளர் - மீட்டல்கள்*



**செல்வி. சுஜீவ ரணசிங்க**
*உதவிப் பொது முகாமையாளர் - ம.வ. (குழுமம்)*



**செல்வி. ஷெரீன் தாபரேரா**
*உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்*

# கூட்டாண்மை முகாமைத்துவம்

## 1. திரு. சமிந்திர மார்சலீன்

*பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர்*

இவர் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் நவம்பர் 2020 இல் இணைந்தார்.

### தகமைகள்

ஐ.இ. இங்கிலாந்து சிட்டி பல்கலைக்கழகம் இளமானி விஞ்ஞானப்பட்டம் 1996, நிதியியல் ஆலோசகர்களின் சர்வதேச தகமை (FAIQ), ஐ.இ. பட்டயக் காப்புறுதி நிருவகம் 2008.

### வகித்த பதவிகள்

சிரேஷ்ட உப தலைவர் / கூட்டாண்மை வங்கியியல் பிரிவின் தலைவர் டி.எவ்.சி.சி. வங்கி. டி.எவ்.சி.சி. வங்கியின் நிறைவேற்று முகாமைத்துவ குழுவின் அங்கத்தவர் (EXCO).

HSBC மாலைதீவின் தேச முகாமையாளர், HSBC இவங்கையில் நிதி நிறுவனங்கள் குழுவின் தலைமை மற்றும் பொதுத் துறை மற்றும் HSBC இலங்கையில் செல்வ முகாமைத்துவம் மற்றும் காப்புறுதி.

### அனுபவம்

கூட்டாண்மை மற்றும் உலக வங்கியியல், முதலீட்டு வங்கியியல், சிற்றளவு வங்கியியில், கடன் நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள் முகாமைத்துவம் ஆகியவற்றில் 24 வருடங்கள் பன்முகமான அனுபவம்.

கிளை மற்றும் HSBC குழும நிறுவனங்களினுள் எல்லை கடந்த வணிகங்கள் தொடர்பான கருவிகளது அபிவிருத்தி, ஆலோசனை, கட்டமைத்தல் மற்றும் நிதியளித்தல், கடன் நிர்வாகம் மற்றும் செயற்பாடுகளிலான அனுபவம்.

கூட்டாண்மை வணிக இலக்குகளுக்கு அமைவாக நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்திறனை மேம்படுத்துவதற்காக புதிய வணிக முன்னெடுப்புகள், முறைமைகள்/செயல்முறைகள் என்பவற்றை வடிவமைத்து அமுலாக்குவதிலான அனுபவம்.

### தற்போதைய பதவிகள்

பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, பீபள்ஸ லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட், பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட், பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட், பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட் மற்றும் லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் - பங்களாதேஷ் ஆகியவற்றின் பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

### பாராட்டுக்கள்

“2022 ஆம் ஆண்டிற்கான பி.நி.அ” விருதானது 2022 இலங்கையின் சிறந்த பணிக்கொள்பவர் வணிகநாம விருது 2022 இலிருந்து வழங்கப்பட்டது. இவ்விருதானது மனிதவள தொழில்வல்லுநர்களது உலக சம்மேளனத்தினால் சான்றளிக்கப்பட்டதுடன், CHRO ஆசியாவினால் ஒப்புதலளிக்கப்பட்டது. CHRO என்பது அனைத்து இன்னல்களை தழுவியுள்ள பொருளாதாரங்களின் வளர்ச்சிக்கு பங்களித்துள்ள நிறுவனங்களின் தலைவர்களை அங்கீகரிக்கின்றது.

## 2. திரு. லயனல் பர்னாந்து

*சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர்*

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் 1995 இல் இணைந்தார்.

### தகமைகள்

ACA, இலங்கை வங்கியாளர்கள் நிருவனத்தின் இணை அங்கத்தவர், வணிகம் மற்றும் நிதியியல் நிர்வாகத்தில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா (இ.ப.க.நி.), இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவர் (ACMA).

### அனுபவம்

மக்கள் வங்கி உள்ளடங்கலாக வங்கி மற்றும் நிதியியல் துறைகளில் 33 வருடங்களுக்கும் அதிகமான அனுபவம்.

### தற்போதைய பதவிகள்

பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட்டின் பணிப்பாளர் / பொது முகாமையாளர், அல்-சாவா இஸ்லாமிய நிதிச் சேவைகள் பிரிவின் தலைமை, மற்றும் தங்கக் கடன் செயற்பாடுகளுக்கு பொறுப்பானவர். நெஷனல் ரெயில்வே மியூசியம் (கரன்ட்டி) லிமிட்டட்டின் பணிப்பாளர்.

## 3. திரு. ரொஹான் தென்னக்கோன்

*பிரதிப் பொது முகாமையாளர் - இடர் மற்றும் கட்டுப்பாடு*

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் 1998 இல் இணைந்தார்.

### தகமைகள்

MBA (கொழும்பு), MSc (முகா.) – (ஸ்ரீ ஜயவர்தனபுர), BSc- வணிக நிர்வாகம் (2ஆம் வகுப்பு உயர்/ ஸ்ரீ ஜயவர்தனபுர), AIB (இலங்கை), FICM (இல.), அங்கத்தவர் APBSL, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் தகுதிச்சான்றாளர்.

### வகித்த பதவிகள்

ஸ்ரீலங்கா வைனான்ஸ் ஹவுஸ் எசோசியேஷன் (FHA) இன் உப தலைவர் மற்றும் 2015 மற்றும் 2017 ஆண்டுகளுக்கான விளையாட்டு உப குழுவின் திட்டத் தலைவரும் ஆவார். வர்த்தக சம்மேளனத்தில் FHA இனை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவில் சேவையாற்றினார். அல்-சாவா இஸ்லாமிக் நிதியியல் பிரிவின் தலைமையாகவும் சேவையாற்றினார்.

### அனுபவம்

குத்தகை துறையில் இணைவதற்கு முன்னர், கணக்கீடு, உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் வங்கியியல், சந்தைப்படுத்தல் மற்றும் வணிக அபிவிருத்தி, செயற்பாடுகள், கிளைச் செயற்பாடுகள் கடன் மற்றும் பிரிவுகளின் 32 வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன் தற்போது இடர் மற்றும் கட்டுப்பாட்டில் சேவையாற்றுகின்றார்.

### தற்போதைய பதவிகள்

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் இடருக்கான தலைமை, பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி இன் நிறைவேற்றுநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர், வைனான்ஸ் ஹவுஸ் எசோசியேஷனின் தலைவர், இலங்கையின் குத்தகை சங்கத்தின் பணிப்பாளர், இலங்கை கடன் முகாமைத்துவ நிருவகத்தின் பணிப்பாளர், இலங்கை கடன் தகவல் மையத்தின் இணக்கப்பாட்டு அதிகாரியும் ஆவார். SLIM-NASCO ஜூரர் குழுவில் சேவையாற்றுகின்றார்.

## 4. திரு. தமித் மாலவிதந்தில

*பிரதிப் பொது முகாமையாளர் - மீட்டல் மற்றும் நிர்வகம்*

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் 1996 இல் இணைந்தார்..

### தகமைகள்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் இறுதிப் பரீட்சையினை நிறைவுசெய்தவர் மற்றும் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தின் இடைநிலை பரீட்சையினை நிறைவு செய்தவர்.

### அனுபவம்

வங்கி மற்றும் நிதியியலில் 37 வருடங்களுக்கும் அதிகமான அனுபவம் மற்றும் கணக்காய்வு மற்றும் கணக்கீட்டில் பல வருடங்கள் அனுபவத்தினையும் கொண்டுள்ளார். பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்டில் ஒன்பது வருடங்களுக்கும் மேலாக பொது முகாமையாளராக சேவையாற்றினார். பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் 10 வருடங்கள் மீட்டலுக்கான தலைமையாக சேவையாற்றியதன் பின்னர் கிளை செயற்பாடுகளில் 2007 இல் இணைந்து நாடுபூராவுமுள்ள கிளைகளை கையாண்டார். தற்பொது மீட்டல் மற்றும் நிர்வாகத்தின் தலைமையாக சேவையாற்றுகின்றார். மேலும் வாடிக்கையாளர் கவனிப்பு மற்றும் மனக்குறை கையாளுதல் பிரிவினையும் மேற்பார்வை செய்கின்றார்.

### தற்போதைய பதவிகள்

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் முற்றாக உடைமையாக்கப்பட்ட துணை நிறுவனமான பீபள்ஸ் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்டின் பணிப்பாளராவார்.

## 5. திரு. லக்சந்த குணவர்தன

*பிரதிப் பொது முகாமையாளர் - செயற்பாடுகள்*

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் 2002 இல் இணைந்தார்.

### தகமைகள்

MBA, மூலோபாய சந்தைப்படுத்தலில் MSc, AICM – SL, SLICM இலிருந்து கடன் முகாமைத்துவத்தில் டிப்ளோமா, CMA (அவுஸ்திரேலியா), CPM (ஆசியா), சான்றளிக்கப்பட்ட அங்கத்தவர் SLIM, அங்கத்தவர் SLID, CPM ஸ்ரீலங்காவின் அங்கத்தவர்.

### வகித்த பதவிகள்
கூட்டாண்மைக் குத்தகைப் பிரிவின் தலைமையாக 10 வருடங்கள் கடமையாற்றினார்.

### அனுபவம்
கடன், சந்தைப்படுத்தல், மீட்டல்கள், கிளை அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகள் பிரிவில் சி.ந.நி. நிதியளித்தல் மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றில் 27 வருடங்களுக்கும் மேலான அனுபவம்.

### தற்போதைய பதவிகள்
பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் முற்றாக உடைமையாக்கப்பட்ட துணை நிறுவனமான பீபள்ஸ் மைக்ரோ-கொமர்ஸ் லிமிட்டட்டின் பணிப்பாளர்.

## 6. திரு. பிரபாத் குணசேன
*பிரதிப் பொது முகாமையாளர் - த.தொ.தொ. (குழுமம்)*

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் 1999 இல் இணைந்தார்.

### தகமைகள்
MBA (வெஸ்டர்ன் பல்கலைக்கழகம், சிட்னி), கணினி முறைமை வடிவமைப்பில் டிப்ளோமா - NIBM ஸ்ரீலங்கா. தகவல் முறைமைகளளுக்கான திட்ட முகாமைத்துவம், முறைமைகள் விஞ்ஞான நிருவகம், சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகம்.

### அனுபவம்
பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் 23 வருடங்கள் அனுபவம்.

### தற்போதைய பதவிகள்
பிரித்தானிய கணினி சங்கத்தின் அங்கத்தவர், பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் த.தொ.தொ. இன் தலைமை.

## 7. திரு. உதேஷ் குணவர்தன
*பிரதிப் பொது முகாமையாளர் - உள்வாரி கணக்காய்வு*

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் 1999 இல் இணைந்தார்.

### தகமைகள்
ACA, ACMA (இலங்கை), திறைசேரி, முதலீடுகள் மற்றும் இடர் முகாமைத்துவத்தில் டிப்ளோமா (IBSL), அவுஸ்திரேலிய கணினி சங்கத்தின் உலகப் பரிசு வெற்றியாளர்.

### வகித்த பதவிகள்
லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் பங்களாதேஷ் இல் பிரதம நிதியியல் அதிகாரி மற்றும் கம்பனி காரியதரிசியாக விசேட கடமைகளுக்காக தற்காலிக மாற்றத்தில்.

### அனுபவம்
கணக்கீடு, கணக்காய்வு, நிதி முகாமைத்துவம் மற்றும் திறைசேரி செயற்பாடுகளில் முக்கிய அழுத்தத்துடன் நிதியியல் துறையில் 22 வருடங்களுக்கும் மேலான சிரேஷ்ட மட்டத்திலான அனுபவம்.

### தற்போதைய பதவிகள்
பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் சபையின் கணக்காய்வுக் குழுவின் காரியதரிசி மற்றும் லங்கன் எலயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் பங்களாதேஷின் நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்.

## 8. திரு. ரனில் பெரேரா
*உதவிப் பொது முகாமையாளர் - மீட்டல்கள்*

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் 1999 இல் இணைந்தார்.

### தகமைகள்
பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடலில் MA (கொழும்பு), MBA (மனிப்பால்), பொருளாதார அபிவிருத்தியில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா (கொழும்பு), சர்வதேச வர்த்தகத்தில் B.Com (விசேடம்) (ஸ்ரீ ஜயவர்தனபுர), CIM (ஐ.இ.) இன் மற்றும இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிருவத்தின் பகுதி தகமை.

### அனுபவம்
பீபள்ஸ் லீசிங் குழுமத்தில் 22 வருடங்களுக்கும் அதிகமான அனுபவம்.

## 9. செல்வி. சுஜீவா ரணசிங்க
*உதவிப் பொது முகாமையாளர் - ம.வ. (குழுமம்)*

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் பெப்ரவரி 2021 இல் இணைந்தார்.

### தகமைகள்
LL.B - கொழும்பு பல்கலைக்கழகம்.

### வகித்த பதவிகள்
ஒரு தனியார் வர்த்தக வங்கியில் மனித வளங்களின் தலைமை.

### அனுபவம்
ஒரு தனியார் வர்த்தக வங்கியில் 26 வருடங்களுக்கும் மேலான அனுபவம். இதில் மனித வள முகாமைத்துவத்தில் 23 வருடங்களுக்கும் மேலான அனுபவம்.

## 10. செல்வி ஷெரீன் தாபரேரா
*உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்*

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் ஜனவரி 2022 இல் இணைந்தார்.

### தகமைகள்
2021 ஐ.இ. ஸ்டவர்ட்சையர் பல்கலைக்கழகத்தில் சர்வதேச வணிக சட்டத்தில் LL. M, 2001 கொழும்பு பல்கலைக் கழகம் LL. B, இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் உயர் நீதி மன்றத்தின் வழக்கறிஞர், கொழும்பின் நொத்தாரிசு மற்றும் பதிவுசெய்யப்பட்ட கம்பனி காரியதரிசி.

### அனுபவம்
தொலைதொடர்பு மற்றும் வங்கியியல் துறைகளில் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் பல நாட்டு திட்டங்களில் சட்டம், முறைமைப்படுத்தல் மற்றும் கூட்டாண்மை அலுவல்களில் 18 வருடங்களுக்கும் அதிகமான அனுபவம். த.தொ.தொ. சட்டம், அறிவுசார் சொத்து சட்டம், கூட்டாண்மை நிதியளித்தல் சட்டம், எல்லை கடந்த கூட்டாண்மை ஆளுகை மற்றும் சர்வதேச தொழிலாளர் சட்டம் என்பவற்றிலான முன்னிறுத்தத்துடன் சர்வதேச வணிகச் சட்டத்தின் விசேடத்துவம்.

# கூட்டாண்மை ஆளுகை

அதிகரிக்கும் சவால்மிக்க சூழலானது திடமான கூட்டாண்மை ஆளுகைக்கான அவசியத்தினை அடிக்கோடிட்டுள்ளது. பீபள்ஸ் லீசிங் குழுமத்தில் நாம் உயர்ந்த தரத்திலான நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கு கடப்பாடுடையதாய் உள்ளோம். சிறந்த ஆளுகை எமது நிலைபேறுள்ள வளர்ச்சியின் அஸ்திவாரமாக காணப்படுவதுடன், செயற்படுவதற்கான எமது சமூக உரிமத்தில் நாம் தங்கியுள்ளோம்.

### நி/ஆ 2021/22 இன் சிறப்பம்சங்கள்

- கோவிட்-19 தொற்றும் மற்றும் பொருளாதார உறுதியின்மைகளிலிருந்து நிறுவனத்திற்கு எழுகின்ற தாக்கம் மற்றும் இடர்களை தொடர்ந்தும் தவறாது மீளாய்வு செய்தல்.
- நீண்டகால தொலைநோக்கிற்கேற்ப குழுமத்தின் உருமாற்றல் மூலோபாயத்திற்கான மேற்பார்வை. ஒருங்கிணைக்கப்பட்ட சூழல், வணிக மாதிரிகளுக்கான சமூக மற்றும் ஆளுகை தோற்றம்.
- முறைமை பாதுகாப்பு மற்றும் சைபர் பாதுகாப்புகளை மேம்படுத்தும்வேளை குழுமத்தின் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் மூலோபாயத்திற்கு மேற்பார்வை அளிக்கப்பட்டது.
- ஆளுகை கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கி, 2021 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரை என்பவற்றின் தெரிவுசெய்யப்பட்ட ஏற்பாடுகள் முன்னதாகவே கடைப்பிடிக்கப்பட்டன. ம.வ. வேதனம் மற்றும் பெயரிடல் குழுவானது தனியான ம.வ. மற்றும் வேதனக் குழு மற்றும் பெயரிடல் குழு என மாற்றீடு செய்யப்பட்டன.
- இரண்டு புதிய உப குழுக்கள் - சபை கடன் குழு மற்றும் சபை முதலீட்டுக் குழு என்பன நிறுவப்பட்டன.
- நிறுவன வளர்ச்சிக்கு உதவுவதற்கும் ஐந்தொகையின் ஸ்திரத்தன்மையினை அதிகரிப்பதற்கும் ஜூலை 2021 இல் ரூ. 10 பில்லியன் தொகுதிக்கடன் வழங்கல் அங்கீகரிக்கப்பட்டது.
- அனைத்து ஒழுங்குவிதிகள் மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.
- ஆகஸ்ட் 24, 2021 முதல் நிறைவேற்றுநரல்லா, சுயாதீனமற்ற பணிப்பாளராக திரு. எஸ். ஹாங்கமவின் பதவி விலகல்.
- ஒரு பத்திரப் பங்கிலாப வடிவத்தில் ரூ. 0.50 இறுதிப் பங்கிலாபமானது அனுமதிக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்டது.

### 1.1 ஆளுகைக்கான எமது அணுகுமுறை

உச்சநிலை ஆளுகை அமைப்பாக சபையானது முன்னுதாரணமாக உச்சத்திலிருந்தான தொனியில் செயற்படுகின்றது. உலகளவில் ஏற்றுக்கொள்ளப்படும் சிறந்த நடைமுறைகளைத் தழுவி, சபையானது பின்வருவனவற்றிற்காக ஒரு திடமான ஆளுகை வரம்புறுகையினை நிறுவியுள்ளது. மேம்பட்ட பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தினை வளர்த்தல், திடமான இடர் மற்றும் செயற்திறன் முகாமைத்தவம், வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்திறனான மற்றும் நெறிமுறையான தலைமைத்துவம் என்பனவாகும். ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையினை கடைப்பிடிப்பதில் சபையானது நிறுவனம் மற்றும் அதன் முக்கிய பங்காளிகளுக்கு நீண்டகால பெறுமதியினை உருவாக்குவதற்கு தீர்மானம் மேற்கொள்வதில் சூழல், சமூக மற்றும் ஆளுகை (சூ.ச.ஆ.) அளவீடுகளை ஒருங்கிணைத்துள்ளது.

### ஆளுகை வரம்புறுகை மற்றும் கட்டமைப்பு

வரம்புறுகையானது பல உள்வாரி மற்றும் வெளிவாரி இயக்கக் கருவிகளான துறைசார் விதிகள், கோவைகள் மற்றும் நியமங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் என்பவற்றுக் கட்டுப்பட்டுள்ளது. முக்கியமாக, இது இலங்கை மத்திய வங்கி, கூட்டாண்மை ஆளுகையில் 2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் பணிப்புரை மற்றும் 2017 இல் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட ஆளுகை நடைமுறைகளிலான சிறந்த நடைமுறைகள் என்பவற்றை குறிப்பிடுகின்றன. முழுவதுமான இணக்கப்பாட்டின் விபரங்கள் முறையே பக்கங்கள் 143 முதல் 155 மற்றும் 140 முதல் 142 வரை குறிப்பிடப்பட்டுள்ளன.

### கூட்டாண்மை ஆளுகை இணக்கப்பாட்டுச் சுருக்கம்

| ஒழுங்குவிதி/கோவை | ஏற்பு | கடைபிடித்தல் | வெளிப்படுத்தல் அட்டவணை |
|---|---|---|---|
| 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் (கம்பனிகள் சட்டம்) | கட்டாயம் | முழு இணக்கப்பாடு | |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் (கொ.ப.ப.)பட்டியலிடல் விதிகள் | கட்டாயம் | முழு இணக்கப்பாடு | பக்கங்கள் 139 - 140 |
| இலங்கை மத்திய வங்கி, (கூட்டாண்மை ஆளுகையிலான) நிதிக் கம்பனிகள் பணிப்புரை 2008 இன் இல. 03, 2008 இன் 04 ஆல், 2013 இன் 06 மற்றும் 2020 இன் 05 ஆல் திருத்தியமைக்கப்பட்டது. * | கட்டாயம் | முழு இணக்கப்பாடு | பக்கங்கள் 143 - 155 |
| இலங்கை மத்திய வங்கி, (கூட்டாண்மை ஆளுகையில்) நிதிக் கம்பனிகள் பணிப்புரை 2021 இன் இலக்கம் 05. | மனமுவந்து கடைப்பிடிக்கப்பட்டது. (01 ஏப்ரல் 2022 முதல் கட்டாயம்) | தெரிவான இணக்கப்பாடு | |
| இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் (2017) வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைகளுக்கான கோவை | மனமுவந்து | முழு இணக்கப்பாடு | பக்கங்கள் 140 -142 |

* கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையின் இணக்கப்பாட்டு தேவைப்பாட்டினை சந்திப்பதற்காக இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை தொடர்புடைய சேவைகள் நடைமுறை கூற்று 4752 (SLRSPS 4752) இல் குறிப்பிட்டுள்ள செயல்முறைகளை வெளிவாரி கணக்காய்வாளர்களான, நட்வர். எர்ன்ஸ்ட் அன்ட் யங் செயலாற்றியுள்ளார்கள்.

### முக்கிய சபை பொறுப்புக்கள்

- மூலோபாயப் பாதையினை வழங்குதல்.
- மூலோபாயத்தின் அமுலாக்கலினை கண்காணித்தல்.
- கூட்டாண்மை விழுமியங்களை நிறுவி நெறிமுறையான நடத்தையினை ஊக்குவித்தல்.
- இடர் முகாமைத்தவம், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இணக்கப்பாட்டு முறைமைகளை நிறுவுதல்.
- சமூகத்தின் தேவைகளுக்கு பதிலளிக்கக்கூடியதாயிருத்தல்
- பங்குதாரர்கள், பணியாட்கள் மற்றும் ஏனைய பங்காளிகளது கடமைகளை சந்தித்தல், அவர்களது அக்கறைகளை ஒரு நியாயமான விதத்தில் சமநிலைப்படுத்தல்.
- குழுமத்தின் நிலைமைகள் மற்றும் வாய்ப்புக்களில் ஒரு சமநிலையான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய மதிப்பீட்டினை முன்னிலைப்படுத்தல்.
- சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் முறையான பயன்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- தொடர்வுக்கான திட்டமிடல் மற்றும் ஏதேனும் இடையூறின்றி குழுமம் செயற்படுவதற்கான தொடர்ச்சியான ஆற்றலினை உறுதிப்படுத்தல்.

**குழுமத்தின் வணிக நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகள் அனைத்து பணியாட்களையும் பணிப்பாளர்களையும் உயர்ந்த தரத்திலான நெறிமுறையான நடத்தைக்கு பிணைத்துள்ளது.**

நிறுவனத்தின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் கட்டயமாக்கப்பட்டுள்ளவாறு குழுமத்தின் செயற்திறன் மற்றும் அலுவல்களுக்கு சபையானது கூட்டான பொறுப்பினை ஏற்கின்றது.

பாரிய கவனிப்புகள் தேவையான கடமைகள் நிதியாண்டின் இறுதியில் ஏழு (7) சபை உப குழுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பதுடன் குழுமத்தின் நாளாந்த முகாமைத்துவம் மற்றும் பீபள்ஸ் லீசிங் குழுமத்தின் மூலோபாய திட்டத்தின் அமுலாக்கமானது பி.நி.அ./பொது முகாமையாளர் இனால் வழிநடத்தப்படும் நிறைவேற்று முகாமைத்துவத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. மூலோபாயமான ஒத்திசைவான முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் (மு.செ.கு.) செயற்திறனை இயக்குகின்றன் மற்றும் குறிக்கோள்களை அடைகின்றன. அதேவேளை முக்கிய விடயங்களிலான வழக்கமான அறிக்கையிடலானது சபையின் வினைத்திறனான மேற்பார்வையினை இயலுமையாக்குகின்றது. ஐந்து சட்டரீதியான குழுக்களின் அறிக்கைகள் பக்கங்கள் 162 முதல் 172 வரை வழங்கப்பட்டுள்ளன.

ஆளுகை வரம்புறுகையானது வெளித்தோன்றும் வணிக சூழலை கடைப்பிடிப்பதற்கும் நோக்கத்திற்கு அது பொருத்தமானது என்பதனை உறுதிப்படுத்துவதற்காகவும் தவறாமல் மீளாய்வு செய்யப்படுகின்றது.

### முக்கிய ஆளுகை வழிநடத்தும் கருவிகள்

ஆளுகை வரம்புறுகையானது பல வெளிவாரி மற்றும் உள்வாரி வழிநடத்தல் கருவிகளினால் பிணைக்கப்பட்டுள்ளன.

- அமைப்பு அகவிதி
- கூட்டாண்மை ஆளுகை சாசனம்
- வணிக நடத்தை மற்றும் நெறிமுறைகள் கோவை
- செயற்பாட்டு கொள்கைகள், வழிகாட்டிகள் மற்றும் கையேடுகள்
- உட்குறை உரைப்போர் பாதுகாத்தல் கொள்கை
- இடர் முகாமைத்துவ செயல்முறைகள்
- உள்ளகக் கட்டுப்பாட்டு செயல்முறைகள் மற்றும் செயலாக்கங்கள்
- பணம் சலவை செய்தலுக்கெதிர் / KYC கொள்கை
- கூட்டாண்மை தொடர்பாடல் கொள்கை




- 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதிவணிகச் சட்டம்
- 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
- 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க (திருத்தியமைக்கப்பட்டது) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்
- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள்
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவை
- இ.ம.வ. இனால் நிதிக் கம்பனிகளுக்கு (கூட்டாண்மை ஆளுகையில்) வழங்கப்பட்ட பணிப்புரைகள்
- நீடிப்புத்திறனிலான உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு நியமங்கள்

# கூட்டாண்மை ஆளுகை

GRI | 102-18

## நிறுவன கட்டமைப்பு




### அதிகார ஒப்படைப்பு (DLA) வரம்புறுகை

ஒப்படைப்புகளின கட்டமைப்பானது அதிகாரத்தின் ஒப்படைப்பினை வழங்குவதுடன் சபையானது வினைத்திறனான கட்டுப்பாட்டினை வைத்திருப்பதனை இயலுமையாக்குகின்றது. அதிகாரத்தின் ஒப்படைப்பானது பணிப்பாளர்கள் அவர்களது சட்டரீதியான மற்றும் பொதுச் சட்ட நம்பிக்கை கடமைகளுக்கான பொறுப்பினை குறைக்காது என்பதை சபை அறிந்துள்ளது. முக்கிய விடயங்களிலான வழக்கமான அறிக்கையிடலானது வினைத்திறனான மேற்பார்வைக்கு உதவுகின்றது.

### முக்கிய சிறப்பம்சங்கள்

- முக்கிய விடயங்களிலான வழக்கமான அறிக்கையிடலானது வினைத்திறனான மேற்பார்வையினை இயலுமையாக்குகின்றது.
- முகாமைத்துவமானது சபையுடன் வெளிப்படையாக இருப்பதுடன் பொருத்தமான மன்றத்தில் உரிய நேரத்தில் அக்கறைகளை அதன் கவனத்திற்கு கொண்டுவருகின்றது.
- சபையானது அதன் மேற்பார்வை பொறுப்புக்களை சந்தித்தல் மற்றும் முகாமைத்துவம் செயற்படக்கூடிய ஒரு முயற்சியான சூழலினை பராமரித்தல் என்பவற்றுக்கிடையே ஒரு வினைத்திறனான சமநிலையினை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றது.
- கடமைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளதுடன் (பொறுப்பாணைகள் மற்றும் தொழில் விபரங்களினால்) அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் செயல்திறனுடன் நிறைவேற்றப்படுகின்றது.
- மூலோபாயமாக ஒத்திசைவாக்கப்பட்ட நிதியியல் மற்றும் நிதி அல்லாத முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் (KPIs) செயற்திறனையும் குறிக்கோள்களை அடைவதனையும் இயக்குகின்றது.
- செயலாற்றும் அனைத்து பிரிவுகளும் திறமையான நபர்களினால் தலைமை தாங்கப்படுவதுடன் போதுமானளவு வளங்கள் அளிக்கப்பட்டுள்ளன.
- பிரதம உள்வாரி கணக்காய்வாளர் நேரடியாக ச.க.கு. க்கு அறிகையிடுவதுடன், கடன் இடர் அதிகாரி மற்றும் இணக்கப்பாட்டு அதிகாரி ஆகியோர் நேரடியாக ச.ஒ.இ.மு.கு. க்கு அறிக்கையிடுவதுடன் இந்த செயற்பாடுகளின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்படுகின்றது.
- சபையினால் வழங்கப்படும் ஒ.க.அ. குழுமத்தின் வெளித்தோன்றும் தேவைகள் மற்றும் வணிக சூழமைவுகளுக்கு ஏற்ப வரையறைகள் காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக காலாகாலம் மீளாய்வு செய்யப்படுகின்றன. கம்பனி காரியதரிசி ஒ.க.அ. இன் அமுலாக்கத்தினை கண்காணிப்பு செய்கின்றார்.

## 1.2 நி/ஆ 2021/22 இல் ஆளுகை

கூட்டாண்மை ஆளுகை வரம்புறுகையினை பலப்படுத்துவதற்காக, கம்பனியானது 2021 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க புதிய கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையினை செயல்திறனுடன் கடைப்பிடிப்பதற்கு தீர்மானித்தது. நிதியாண்டின் இறுதியில் புதிய பணிப்புரையின் தெரிவுசெய்யப்பட ஏற்பாடுகள் கம்பனியின் கட்டமைப்பில் மனமுவந்து ஒருங்கிணைக்கப்பட்டன.

### 2021/22 இல் சபை முன்னிறுத்தம்செய்யும் முக்கிய பிரிவுகள்

**மூலோபாயம் மற்றும் வணிகம்**
- குழுமத்தின் மூலோபாயத் திட்டம் மற்றும் இடர்கள் மற்றும் வாய்ப்புக்களின் தாக்கம் ஆகியவற்றின் மேற்பார்வை
- கணிசமான முதலீடுகள் மற்றும் தொகுதிக்கடன வழங்கலின் அங்கீகாரம்
- டிஜிட்டல் உருமாற்றல் மூலோபாயத்திற்கு துணைபுரியும் த.தொ. முறைமைகளின் தரமுயர்த்தல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்
- கருவிகளின் புத்தாக்கங்கள் மற்றும் புதிய கருவிகளின் ஆரம்பத்திற்கு தொடர்ச்சியான உறுதுணை
- பாதீட்டின் அங்கீகாரம்

**இடர் மற்றும் மேற்பார்வை**
- பீபள்ஜ் லீசிங் குழுமத்தின் செயற்திறன் மீளாய்வு
- இடர் தேக்கம் மற்றும் இடர் முகாமைத்துவத்தின் மேற்பார்வை
- உள்ளக் கட்டுப்பாட்டு வரம்புறுகையினை உகப்பாக்குதல்
- இணக்கப்பாட்டு மேற்பார்வை
- செயற்பாட்டு சூழலிருந்தான தாக்கங்களின் மீளாய்வு
- சொத்துக்களின் தரத்தின் மீளாய்வு

**ஆளுகை**
- 2021 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க புதிய கூ.ஆ. பணிப்புரையின் ஏற்பாடுகளை செயற்திறனுடன் கடைப்பிடித்தமை. இரண்டு புதிய உப குழுக்கள் கட்டாயமாக்கப்பட்டன.
- புதிய சபை கடன் குழு மற்றும் சபை முதலீட்டுக் குழு மனமுவந்து கட்டாயமாக்கப்பட்டன.
- கொள்கை வரம்புறுகைகளின் மீளாய்வு
- சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்தல்
- சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் தொடர்ச்சிக்கு திட்டமிடல்
- பரிந்துரைகளை அமுலாக்குவதற்கான சபையின் மதிப்பீடு மற்றும் செயல்திட்டம்.

**பங்காளிகள் ஈடுபாடு**
- பங்காளர்களில் நிலையற்ற வணிகச் சூழல் மற்றும் தொற்றின் தாக்கம். நீடிப்புத்திறனுக்கு துணையளிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட முன்னெடுப்புகளின் அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல்
- டிஜிட்டல் மயமாக்கலினால் ஆண்டுப் பொதுக் கூட்டங்களை (ஆ.பொ.கூ.) கூட்டுவதனை இயலுமையாக்குதல்
- பங்குதாரர் தொடர்பாடல் மற்றும் ஆ.பொ.கூ. இன் மீளாய்வு
- முறைமைப்படுத்தல் மீளாய்வுகளை மீளாய்வு செய்தல்
- இலங்கை மத்திய வங்கியுடன் ஈடுபடுதல்

**நிதியியல் செயற்திறன்**
- கோவிட்-19 மற்றும் பாரியபொருளாதார சூழலின் உறுதியின்மையிலிருந்தான நிதியியல் தாக்கம்
- பிரேரிக்கப்பட்ட பங்கிலாபக் கொடுப்பனவுகள், பத்திரப் பங்கிலாப வழங்கல்கள், தொகுதிக்கடன் வழங்கல்கள்.
- மூலதனத் தேவைப்பாடுகளிலான முறைமைப்படுத்தல் மாற்றங்களின் நிதியியல் தாக்கம்
- செயற்பாட்டு செலவினங்களிலான மாற்றங்களின் நிதியியல் தாக்கம்.
- நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கையின் அங்கீகாரம்.

எமது நீண்டகால நீடிப்புத்திறன் மற்றும் வெற்றி என்பன எமது பங்காளிகளுக்கு நாம் வழங்கும் பெறுமதியின் அளவில் தங்கியுள்ளது என்பதனை நாம் அறிவோம். சமூகத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் கருவிகள் மற்றும் சேவைகளின் கருதப்பட்ட அபிவிருத்தி மற்றும் விநியோகத்தினூடாக, மற்றும் எமது சொந்த செயற்பாடுகளூடாக, நாம் பொருளாதார மீட்சிக்கான எமது பங்கினை செயற்படுத்தவும், நீண்டகால பெறுமதியினை உருவாக்கவும் பங்காளிகள் நம்பிக்கையினை பராமரிக்கவும் குறிக்கோளாயுள்ளோம்.

நி/ஆ 2021/22 இனுள் சபையின் அதிகரித்த கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையானது தொடர்ந்ததுடன், சபை கூட்டாண்மை முகாமைத்துவத்துடன் கூட்டுசேர்ந்து குழுமத்தில் தொற்று மற்றும் பெருக்கமடையும் தேசிய பொருளாதார சிக்கல்களின் சமூக பொருளாதார தாக்கங்களை மீளாய்வு செய்தது. எமது அனைத்த பணியாட்களின் ஆரோக்கியம் முக்கியமாகக் காணப்பட்டதுடன், அவர்களை பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து சீரமைப்பகளும் தொடர்ந்து விளித்துரைக்கப்படல் வேண்டும். இடர் முகாமைத்துவம், மீட்டல்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பன சபையின் முன்னிறுத்தலுக்கு முக்கிய பிரிவுகளாகக் காணப்பட்டன. சபையானது நேரடியாகவும் அதன் உப குழுக்களினூடாகவும் இந்த சவால்களை வெற்றிகரமாக சந்திக்கவும் , சிக்கல்களை சமாளிக்கவும் வாய்ப்புக்களை பயன்படுத்தவும் குழுமம் மற்றும் அதன் பங்காளிகளுக்கு பெறுமதியினை பாதுகாத்து உருவாக்குவதற்கான செயல்களை கருத்திற்கொண்டுள்ளது.

கம்பனியின் விரிவான கொள்கை வரம்புறுகையானது நிறுவனத்தின் அனைத்து மட்டத்திலான நடத்தை மற்றும் தீர்மானம் மேற்கொள்வதில் ஒரு வழிகாட்டியாக சேவையாற்றுகின்றது. வரம்புறுகையானது குழுமத்தின் வெளித்தோன்றும் தேவைகளை சந்திப்பதற்காக தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றது.

### 2021/22 இல் உருவாக்கப்பட்ட புதிய கொள்கைகள்
- விரிவான கூட்டாண்மை தொடர்பாடல் கொள்கை
- சிரேஷ்ட முகாமைத்துவத்தின் தெரிவுசெய்தல் மற்றும் நியமனத்திற்கான செயல்முறை
- பணம் சலவை செய்தலுக்கெதிரான கொள்கை மற்றும் செயலாக்கம்
- தொடர்ச்சித் திட்டக் கொள்கை
- ம.வ. மற்றும் வேதனக் குழு மற்றும் பெயரிடல் குழு ஆகியவற்றுக்கு புதிய வரையறை நியதிகள் கடைப்பிடிக்கப்பட்டன.
- பணிப்பாளர்களது தெரிவு / நியமனம் இற்கான செயல்முறை

### 2021/22 கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன.
- பங்கு வர்த்தகக் கொள்கை
- தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கை மற்றும் கையேடு

# கூட்டாண்மை ஆளுகை

சபையானது சட்டம் மற்றும் முறைமைப்படுத்தல் அறிக்கையிடலுக்கான வினைத்திறனான இணக்கப்பாட்டினையும் உறுதிசெய்தது. இது இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட அவசரமான வருமானம் சார்ந்த நாணய வழிமுறைகளினால் தேவைப்பட்ட அதிகரித்த அறிக்கையிடல் தேவைப்பாடுகளினை தொடர்ந்ததாகும். பீபள்ஸ் லீசிங் குழுமமானது இவ்வருடத்தில் அனைத்து ஒழுங்குவிதிகளுடனும் ஜாக்கிரதையாக இணங்கியுள்ளது.

சபையானது குழுமத்தின் ஒட்டுமொத்த உருமாற்றல் பயணத்தில் முகாமைத்துவத்திற்கு தொடர்ந்தும் துணையளித்ததுடன், இது வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாட்களுக்கு சிறப்பாக சேவையாற்றுவதற்காகும். சபையானது குழுமத்தின் டிஜிட்டல் உருமாற்றம் மற்றும் த.தொ. மூலோபாயத்தினை விரிவாக மீளாய்வு செய்ததுடன், டிஜிட்டல் மேடைகளை பெற்றுக்கொள்வதற்கு அதிகரித்த முதலீடுகள் மற்றும் சைபர் பாதுகாப்பினை முகாமைப்படுத்துவதில், டிஜிட்டல் தீர்வுகளது விநியோகத்தினை விரைவுபடுத்துதல் மற்றும் வாடிக்கையாளர்களது இலத்திரனியல் வழிமுறைகளுக்கான படிப்படியான இடமாற்றம் என்பனவாகும்.

நிறுவனத்தின் உருமாற்றல் மூலோபாயத்திற்கு துணைபுரிவதில் ஆளுகைக் கட்டமைப்பு, கொள்கைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள், முறைமைகள் மற்றும் செயலாக்கங்கள் என்பன பலப்படுத்தப்படுகின்றன.

ம.வ., வேதன மற்றும் பெயரிடல் குழுவின் செயற்பாடுகள் இரண்டு தனித்தனியான உப குழுக்களின் கீழ் பின்வருமாறு மீள் ஒப்படை செய்யப்பட்டன;

1. ம.வ. மற்றும் வேதனக் குழு
2. பெயரிடல் குழு

இது 31 டிசம்பர் 2021 திகதியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையின் தேவைப்பாடாகும் என்பதுடன் இது ஜனவரி 2022 இல் குழுமத்தினால் செயற்திறனாக இணக்கப்பாடு காணப்பட்டது. மேலும், இரண்டு மனமுவந்த உப குழுக்களான, சபை கடன் குழு மற்றும் சபை முதலீட்டுக் குழு கட்டாயமாக்கப்பட்டதுடன், கொள்கை வரம்புறுகையானது குழுமத்தின் வெளித்தோன்றும் தேவைகளை சந்திப்பதற்காக மீளாய்வு செய்யப்பட்டன. 06 புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இவ்வருடத்தில் 02 திருத்தியமைக்கப்பட்டன.

GRI 405-1

## 1.3 சபை ஆளுகை

பணிப்பாளர்கள் சபையானது தொடர்ச்சியாக நெறிமுறையான மற்றும் வினைத்திறனான தலைமைத்துவத்தினை வழங்குகின்றது. இது துடிதுடிப்பான மற்றும் வினைத்திறனான கட்டுப்பாடுகள் வரம்புறுகையினுள் பங்காளிகளது பெறுமதி உருவாக்கத்தினை பாதுகாக்கின்றது. கடந்த நிதியாண்டில் சபையானது அதன் அனைத்து கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளது என திருப்திபடுகின்றது.

### 1.3.1 சபையின் தொகுப்பு

சபையானது 8 அங்கத்தவர்களை உள்ளடக்கியுதுடன் இவர்கள் அனைவரும் நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களாவார்கள்.

நிறைவேறுற்றுநரல்லா சுயாதீன பணிப்பாளர்களைத் தவிர, ஏனைய பணிப்பாளர்கள் தாய் நிறுவனமான மக்கள் வங்கியினால் பரிந்துரைக்கப்படுவதுடன், அமைப்பு அகவிதிகளின் பிரகாரம் அடுத்துவரும் ஆ.பொ.கூ. இல் பங்குதாரர்களது மீள் நியமனத்திற்கு உட்பட்டதாகும். சுயாதீன பணிப்பாளர்கள் அவர்களது உரிய தொழில்துறையில் திறன்வாய்ந்த தொழில்வல்லுநர்களாவார்கள்

**8**

சபையின் அளவு

முறைமைப்படுத்தல் தேவைகளை சந்திக்கும்வேளை பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்காக மற்றும் ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான வாதிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதற்கு பொருத்தமான சபையின் அளவு.

பாலினப் பன்மயம்




வயதுப் பன்மயம்

அனுபவம் மற்றும் நிபுணத்துவத்திலான சமநிலை.

60 வயதிற்குக் குறைவானோர்.




| சபையின் தொகுப்பு | |
|---|---|
| சுயாதீன பணிப்பாளர்கள் | 3 |
| நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள் (தலைவர் உள்ளடங்கலாக) | 5 |

ஒரு சமநிலையான மற்றும் பன்மயமான சபை



சுயாதீனத்தன்மை

**>38%**

ஆனோர் சபையில் சுயாதீனமானோர்.

நிபுணத்துவம்

அனுபவமிக்க சபை; குழுவுக்கு பொருத்தமான அறிவு மற்றும் திறன்களை ஒன்றியைத்தல்.



மற்றும் சபையின் ஆழிந்தாராய்வுகளுக்கு மதிப்பிடஇயலாத நுண்ணறிவினையும் வேறுபட்ட கண்ணோட்டங்களையும் கொண்டு வருகின்றார்கள். பணிப்பாளர்கள் சபையின் கூட்டான பின்னணியானது ஒரு சமநிலையான திறன்கள் மற்றும் அனுபவத்தின் கலப்பினை வழங்குவதுடன் இது சபையானது அதன் பங்கினையும் பொறுப்புக்களையும் புறநிலையாக மற்றும் விளைத்திறனாக நிறைவேற்றுவதனை இயலுமையாக்குகின்றது. அனைத்து பணிப்பாளர்களும் கடமைகளின் வினைத்திறனான நிறைவேற்றலில் சுயாதீன தீர்ப்புரைகளை செயற்படுத்துவதுடன், அவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள விடயங்களில் ஆக்கபூர்வமான சபை கலந்தாராய்வுகள் மற்றும் புறநிலையான மதிப்பீட்டில் ஈடுபடுதல் என்பனவாகும்.

சபையானது அதன் சபை பெயரிடல் குழுவினூடாக சபையின் தொகுப்பினை ஒரு தொடர்ச்சியான அடிப்படையில மீளாய்வு செய்கின்றது. தலைவர் உள்ளடங்கலான மூன்று பணிப்பாளர்கள் நிதியியல் தொழில்வல்லுநர்கள் என்பதுடன் இவர்கள் சபையினுள் போதுமான நிதியியல் மதிநுட்பத்தினை உறுதிசெய்கின்றார்கள்.

### 1.3.2 சபை உப குழுக்கள்

சபையின் உப குழுக்களுக்கான அதிகார ஒப்படைப்பானது பிரதான சபைக்கு அதன் தீர்மானம் மேற்கொள்ளலுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களில போதுமான நேரம் ஒதுக்கப்படுவதனை இயலுமையாக்குகின்றது. அதேசமயம், ஒப்படைக்கப்பட்ட விடயங்களில ஆழமான முன்னிறுத்தம் பெறப்படுவதனையும் உறுதிப்படுத்துகின்றது. இது தனிப்பட்ட சபை அங்கத்தவர்களின் குறிப்பிட்ட நிபுணத்துவத்தினை பயன்படுத்துவதனையும் இயலுமையாக்குகின்றது.

### 1.1.1 கம்பனி காரியதரிசி

கம்பனி காரியதரிசியின் அலுவலகமானது சபையின் செயற்திறனான செயலாற்றலுக்கு ஒருங்கிணைந்ததாகும். கம்பனி காரியதரிசி சபையினை அதன் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் கூட்டாண்மை ஆளுகையில் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதிலும் வழிநடத்துகின்றார்.

அனைத்து பணிப்பாளர்களும் கம்பனி காரியதரிசி, செல்வி. ஷாலினி சில்வா, ஒரு தகமையுடைன பட்டய காரியதரசி, அவர்களின் ஆலோசனைக்கும் சேவைகளுக்கும் ஆன அணுக்கத்தினை கொண்டுள்ளார்கள். கம்பனி காரியதரிசியின் நியமனம் மற்றும் பதவி அகற்றல் சபைக்கான விடயமாகும்.

குழுக்கள் சபை அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பாண்மைகள் மற்றும் வரையறை நியதிகளினால் ஆளுகையினால் அங்கீகரிக்கப்படுகின்றன. குழுக்களின் வினைத்திறனான செயலாற்றலுக்கு குழுக்களின் தலைவர்கள் பொறுப்பாளியாவார்கள் என்பதுடன் குழுவின் நடவடிக்கைகள் குறித்து சபைக்கு தவறாது அறிக்கையிடுகின்றார்கள். குழுக்களின் பொறுப்பாண்மைகள் தவறாது மீளாய்வு செய்யப்படுகின்றன.

**சுயாதீனம்**

குழுமத்தின் அனைத்து சுயாதீன நிறைவேற்றநரல்லா பணிப்பாளர்களும் சுயாதீனத்திற்கான வரன்முறையினை சந்தித்துள்ளார்கள்.



# கூட்டாண்மை ஆளுகை

| | சபைக் குழு | மேற்பார்வைப் பிரிவுகள் | தொகுப்பு | மேலதிகத் தகவல்கள் |
|---|---|---|---|---|
| சட்டரீதியான குழுக்கள் | சபை கணக்காய்வுக்கு குழு (ச.க.கு.) | • நிதி அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்தல்களின் நேர்மை<br>• உள்ளகக் கட்டுப்பாடுகளும் உள்ளகக் கணக்காய்வும்<br>• வெளிவாரி கணக்காய்வு<br>• இணக்கப்பாடு | • குழுவின் தலைவர் உள்ளடங்கலாக இரண்டு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள்<br>• ஒரு நிறைவேற்றுநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர் | ச.க.கு. இன் அறிக்கை பக்கங்கள் 162 முதல் 163 வரை காணப்படுகின்றன. |
| | சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (ச.ஒ.இ.மு.கு.) | • விரிவான இடர் முகாமைத்துவ வரம்புறுகை<br>• இடர் அளவீடு, கண்காணித்தல் மற்றும் முகாமைத்துவம்<br>• முறைமைப்படுத்தல் மற்றும் உள்ளக விவேகமான தேவைப்பாடுகள் | • குழுவின் தலைவர் உள்ளடங்கலாக ஒரு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்<br>• இரண்டு நிறைவேற்றுநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர்கள்<br>• பி.நி.அ./பொ.மு.<br>• இரண்டு சி.பி.பொ.மு. - செயற்பாடுகள்<br>• பி.பொ.மு. - இடர் மற்றும் கட்டுப்பாடு | ச.ஒ.அ.மு.கு. இன் அறிக்கை பக்கங்கள் 170 முதல் 172 வரை காணப்படுகின்றன. |
| | ம.வ. வேதன மற்றும் பெயரிடல் குழு (ம.வ.வே.பெ.கு)<br>(ஜனவரி 27, 2022 முதல் செயலிழந்தது) | • பணிப்பாளர்கள், பி.நி.அ./பொ.மு., மற்றும் மு.மு.ஆ. தெரிவு மற்றும் நியமனம்<br>• நிபுணத்துவ இடைவெளிகள், தொடர்ச்சி மற்றும் மீள்-தெரிவு<br>• சபை கூட்டாண்மை ஆளுகை<br>• வேதனம் உள்ளடங்கலான ம.வ. கொள்கைகள்<br>• நிறுவன விழுமியங்கள் மற்றும் நடத்தை விதிக்கோவை<br>• தொழிலாளர் சட்டங்களுடனான இணக்கப்பாடு<br>• செயற்திறன் மதிப்பீடு, ஆற்றல் முகாமைத்துவம் மற்றும் தொடர்வு | • குழுவின் தலைவர் உள்ளடங்கலாக இரண்டு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள்<br>• ஒரு நிறைவேற்றநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர் | |
| | ம.வ. மற்றும் வேதனக் குழு (ம.வ.வே.கு.)<br>(ஜனவரி 27, 2022 முதல்) | • வேதனம் உள்ளடங்கலாக ம.வ. கொள்கைகள்<br>• நிறுவன விழுமியங்கள் மற்றும் நடத்தை விதிக்கோவை<br>• தொழிலாளர் சட்டங்களுடனான இணக்கப்பாடு<br>• செயற்திறன் மதிப்பீடு, ஆற்றல் முகாமைத்துவம் மற்றும் தொடர்வு திட்டமிடல் உள்ளடங்கலான ம.வ. முறைமைகள் | • குழுவின் தலைவர் உள்ளடங்கலாக இரண்டு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள்<br>• ஒரு நிறைவேற்றுநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர் | பக்கங்கள் 164 முதல் 165 வரை அறிக்கை காணப்படுகின்றது. |
| | பெயரிடல் குழு (Nomination Committee<br>(ஜனவரி 27, 2022 முதல்) | • பணிப்பாளர்கள், பி.நி.அ./பொ.மு., மற்றும் மு.மு.ஆ. தெரிவு மற்றும் நியமனம்<br>• நிபுணத்துவ இடைவெளிகள், தொடர்ச்சி மற்றும் மீள்-தெரிவு<br>• சபை கூட்டாண்மை ஆளுகை | • குழுவின் தலைவர் உள்ளடங்கலாக இரண்டு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள்<br>• ஒரு நிறைவேற்றுநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர் | பக்கங்கள் 168 முதல் 169 வரை அறிக்கை காண்படுகின்றது. |
| | தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் கழு (தொ.த.கொ.வா.மீ.கு.) | • தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களின் மீளாய்வு | • குழுவின் தலைவர் உள்ளடங்கலாக இரண்டு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள்<br>• ஒரு நிறைவேற்றநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர் | தொ.த.கொ.வா.மீ.கு. இன் அறிக்கை பக்கங்கள் 166 முதல் 167 வரை காணப்படுகின்றது. |

| | சபைக் குழு | மேற்பார்வைப் பிரிவுகள் | தொகுப்பு | மேலதிகத் தகவல்கள் |
|---|---|---|---|---|
| மனமுவந்த குழுக்கள் | சபை கடன் குழு | • கடன் செயற்பாடுகளின் மீளாய்வு | • ஒரு நிறைவேற்றநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர் (தலைவர்)<br>• இரண்டு சுயாதீன நிறைவேற்றநரல்லா பணிப்பாளர்கள் | கட்டாயமல்லாதவை |
| | முதலீட்டுக் குழு | • முதலீடுகளது தெரிவுகளது மீளாய்வு மற்றும் சிபாரிசு | • தலைவர் உள்ளடங்கலாக இரண்டு நிறைவேற்றநரல்லா சுயாதீனமற்ற பணிப்பாளர்கள்<br>• ஒரு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | கட்டாயமல்லாதவை |

## 1.3.3 தெளிவான பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்

முக்கிய பங்கான தலைவர் மற்றும் பி.நி.அ./பொ.மு. வெவ்வேறானவை என்பதுடன் இது தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையினை பலமாக்குகின்றது. பிரதான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் குழுமத்தின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் இதன்மூலம் அதிகாரமானது ஒப்படைக்கப்பட்டு பொறுப்புக்கூறலானது நிறுவப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் (தாய் நிறுவனம்) தலைவர் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் தலைவராகவும் சேவையாற்றுகின்றார்.

| தலைவர் | சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர் (சி.சு.ப.) | பி.நி.அ. / பொ.மு. |
|---|---|---|
| பங்கு | பங்கு | பங்கு |
| சிறந்த கூட்டாண்மை ஆளுகையினை பாதுகாத்து மற்றும் சபை விளைத்திறனுடன் செயற்படுவதனை உறுதிசெய்து தலைமை வகிக்கின்றார். | சபையின் சுயாதீனத்தன்மையினை மேலும் பலப்படுத்துதல். | மூலோபாயத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கும் செயற்திறனை இயக்குவதற்கும் பொறுப்பாளியாதல். |
| பொறுப்புக்கள் | பொறுப்புக்கள் | பொறுப்புக்கள் |
| • கம்பனி காரியதரிசியுடன் கலந்தாலோசித்து சபையின் வருடாந்த செயல்திட்டம் மற்றும் நிகழ்ச்சி நிரல்களை நிறுவுதல்<br>• பங்காளிகளது நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை கட்டியெழுப்புதல் மற்றும் பராமரித்தல்.<br>• சபைக் கூட்டங்களின்போது அனைத்து சபை அங்கத்தவர்களதும் செயற்திறனான பங்குபற்றலை உறுதிசெய்தல்.<br>• சபையின் பயனுறுதிறனை கண்காணித்தல். | • தலைமைத்துவத்தின் எதிரொலியாக செயற்படுதல் மற்றும் பொருத்தமானபோது ஏனைய பணிப்பாளர்களுக்கு ஒரு இடையீட்டாளராக சேவையாற்றுதல்.<br>• தலைவர் ஒரு முரண்பாட்டு நலனை கொண்டுள்ளபோது அவ்விடயங்களில் சபையின் கலந்துரையாடல்களுக்கு தலைமை தாங்குதல். | • கூட்டாண்மை முகாமைத்துவக் குழுவின் நியமனம் மற்றும் முறையான தொடர்வுத் திட்டத்தினை உறுதிப்படுத்தல் மற்றும் அவர்களின் செயற்திறனை மதிப்பீடு செய்தல்.<br>• குழுமத்தின் மூலோபாயத்தினை விருத்திசெய்தல் சபையின் கவனத்திற்கு மற்றும் அங்கீகாரத்திற்கு.<br>• குழுமத்தின் நீண்டகால மூலோபாயத்தினை துணையளிக்கும் பாதீடுகளை விருத்தி செய்தல் மற்றும் சபைக்கு பரிந்துரைத்தல்.<br>• குழுமத்தின் செயற்திறன் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் கூட்டாண்மை ஆளுகை கொள்கைகள் என்பவற்றின் கண்காணிப்பு மற்றும் சபைக்கு அறிக்கையிடல்.<br>• மூலோபாயத்தினை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான குழுமத்திற்கான நிறுவனக் கட்டமைப்பினை நிறுவுதல்.<br>• குழுமத்தின விழுமியங்களில் அடிப்படையான கலாச்சாரத்தினை உறுதிப்படுத்துதல்..<br>• குழுமமானது அங்கீகரிக்கப்பட்ட இடர் பொறுப்பேற்புகளினுள் செயற்படுவதனை உறுதிப்படுத்தல். |

# கூட்டாண்மை ஆளுகை

### 1.3.4 சபையின் புத்துணர்ச்சி

சபைக்கு காலாகாலம் புதிய நியமனங்கள், இளைப்பாறுதல்கள், பதவி விலகல்கள் மற்றும் மீள்-தெரிவு என்பவற்றினூடாக புத்துணர்ச்சி அளிக்கப்படுகின்றது. சபையின் புத்துணர்ச்சியானது புதிய திறன்கள், நுண்ணறிவுகள் மற்றும் கண்ணோட்டங்களது அறிமுகத்திற்கு அனுமதியளிப்பதுடன், இது பெறுமதிமிக்க துறைசார் அறிவினை தக்க வைத்தல் மற்றும் தொடர்ச்சியினை பராமரித்தலையும் உள்ளடக்கும்.

**நியமனங்கள்**

- பெயரிடல் குழுவானது பணிப்பாளர்களாக நியமிக்கப்படவேண்டிய சாத்தியமான விண்ணப்பதாரிகளை சபைக்கு பரிந்துரைக்கின்றது. இது கம்பனியின் மூலோபாயத் திட்டங்கள் மற்றும் அவற்றிலான ஏதேனும் இடைவெளிகள் தொடர்பாக சபையின் கூட்டான அறிவு அனுபவம் மற்றும் பன்மயம் ஆகியவை கருத்திற்கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றது. சபையின் அங்கீகாரத்தின் பின்னர், பெயர்கள் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்திற்கு அவர்கள் “பொருத்தமான மற்றும் தகுதியான”நபர்கள் என்பதற்காக அனுப்பிவைக்கப்படுகின்றது. பெயரிடல் குழுவானது அடுத்துவரும் ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் மீள்தெரிவிற்கான பணிப்பாளர்களின் பெயர்களை பரிந்துரைக்கின்றது.
- நியமனங்கள் கொ.ப.ப. க்கும் பங்குதாரர்களுக்கும் பத்திரிகை வெளிப்பாடுகளூடாக பணிப்பாளரது சுயவிவரங்களுடன் அனுப்பிவைக்கப்படுகின்றது.

**மீள்-தெரிவு / மீள்-நியமனம்**

- வருடத்தில் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் அடுத்து வரும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் மீள்தெரிவிற்கு நிற்பதற்கு தகுதியுடையவர்களாவர்.
- பெயரிடல் குழுவானது மீள்தெரிவிற்கு மற்றும் சபையின் அங்கீகாரத்திற்கு பணிப்பாளர்களை பரிந்துரைக்கின்றது.
- முன்னைய ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் பின்னர், தற்காலிக வெற்றிடமொன்றை நிரப்புவதற்காக ஒரு பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இவர் அடுத்த ஆ.பொ.கூ. இல் மீள்தெரிவிற்கு முன்நிற்பார்.

**இளைப்பாறுதல் / பதவி விலகல் மற்றும் பணிப்பாளாின் பதவிக்காலம்**

- ஒரு பணிப்பாளரின் பதவிக்காலம் ஒன்பது (9) வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், வயதெல்லை எழுபது (70) வருடங்களாகும் என்பதுடன் இது 2008 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளின் பணிப்புரைக்கமைவாக (கூட்டாண்மை ஆளுகை) வருகின்றது. தற்போதைய தொற்றினைக் கருத்திற்கொண்ட இ.ம.வ. இன் முன் அனுமதியுடன் வயதெல்லை நீடிக்கப்படலாம்.
- பணிப்பாளர்களது பதவி விலகல்கள் அல்லது பதவி நீக்கம் ஏதேனும் காணப்படின், அவை உடனடியாக காரணங்களுடன் இ.ம.வ. க்கு அறிவிக்கப்படுகின்றன.

### 1.3.5 கூட்டங்கள் மற்றும் வருகை

சபைக் கூட்டங்கள் மாதாந்த இடைவெளில் நடாத்தப்படுவதுடன், தேவைப்படும்போது இவற்றின் பிற்சேர்க்கையாக இடைக்கால கூட்டங்களை ஒழுங்குசெய்வதற்கான நெகிழ்வு காணப்படுகின்றது. இவ்வருடத்தில் 12 கூட்டங்கள் நடைபெற்றன. காணொலி கலந்துரையாடல்கள் வசதிகளை பயன்படுத்தி ஒரு கலப்பின மாதிரி கடைப்பிடிக்கப்பட்டது.

சபையின் வருகையானது செயற்திறனான ஈடுபாட்டினை காட்சிப்படுத்துகின்றது

**100%**

## கூட்டங்களின் ஆளுகை

### கூட்டத்திற்கு முன்னர்

**திகதி குறித்தல்**

- சபை கூட்டங்களுக்கான திகதிகள் வருடத்தின் ஆரம்பத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றன. சபைக் கூட்ட அட்டவணையானது அடுத்தவருட நாள்காட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறிவிக்கப்படுகின்றது.

**சபை நிகழ்ச்சி நிரல்**

- கம்பனி காரியதரிசியின் உதவியுடன் தலைவர் சபையின் நிகழ்ச்சி நிரலினை தயாரிக்கின்றார்.
- நிகழ்சி நிரலானது முன்னுரிமைப்படுத்தப்பட்டு அனைத்து விடயங்களும் போதுமானளவு கலந்துரையாடப்படுவதற்கான நேரத்தினை உறுதிப்படுத்துவதற்காகும்.
- சபையின் ஆவணங்களும் நிகழ்சி நிரலும் கூட்டம் இடம்பெறுவதற்கு ஏழு (7) நாட்களுக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்படுகின்றன. இது அவற்றை அங்கத்தவர்கள் மீளாய்வு செய்வதற்கு போதுமான நேரத்தினை அனுமதிப்பதற்காகும்.

### கூட்டத்தின்போது

**தகவல்களின் தரம்**

- பணிப்பாளர்களுக்கு அவர்களது தீர்மானங்களை மேற்கொள்வதற்காக துல்லியமான, பொருத்தமான மற்றும் நேரத்திற்குரிய தகவல்கள் வழங்கப்படுகின்றன.
- பி.நி.அ./பொ.மு. வணிகச் செயற்பாடுகள், நிதிச் செயற்திறன், துறையின் போக்குகள் மற்றும் அபிவிருத்திகள் குறித்து சபைக்கு சுருக்க விளக்கமளிப்பார்.
- பிரிவுகளின் தலைமைகள் / மு.து.ஆ. பொருத்தமான வணிகப் பிரிவுகளை கலந்துரையாடுவதற்காக சபையின் கூட்டங்களுக்கு சமூகமளிக்குமாறு வரவேற்கப்படுகின்றார்கள்.

**வெளிப்படைத்தன்மை**

- முகாமைத்துவமானது சபையுடன் வெளிப்படையாக இருப்பதுடன் ஏதேனும் அக்கறையான விடயங்களை அவர்களின் கவனத்திற்கு நேரகாலத்தில் கொண்டுவருகின்றது.

**சுற்றறுனுப்பல் மூலமான தீர்மானங்கள்**

- வணிக விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் ஒழுங்குவிதிகளின் கீழ் சுற்றறுனுப்பல் மூலம் மேற்கொள்ளப்படலாம்.
- எவ்வாறாயினும், ஒரு தனியான பணிப்பாளர் அவசியமென கருதினால் அத்தகைய தீர்மானமானது சுற்றறுனுப்பல் மூலமன்றி ஒரு சபைக் கூட்டத்தில் தீர்மானிப்பது அவசியமென கருதினால், தலைவர் அத்தகைய தீர்மானத்தினை ஒரு கூட்டத்தில் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னிலைப்படுத்தல் வேண்டும்.

### கூட்டத்தின் பின்னர்

**நிகழ்ச்சிப்பதிவுகள்**

- ஏகமனதாக தீர்க்கப்படாத விடயங்கள் தொடர்பான பணிப்பாளர்களது அக்கறைகள் நிகழ்ச்சிப் பதிவுகளில் பதிவுசெய்யப்படும்.
- கோவையின் இணக்கப்பாட்டிற்கமைய சபையின் நிகழ்ச்சிப்பதிவுகள் அங்கத்தவர்களுக்கு ஒரு நியாயமான காலத்தினுள் சுற்றறுனுப்பப்படுகின்றது.

**தடம்பற்றல் செயற்பாடு**

- தேவையான பின்தொடர்வு நடவடிக்கைகள் கம்பனி காரியதரிசியினால் அட்டவணைப்படுத்தப்படுவதுடன் செயற்பாட்டிற்காக பொருத்தமான பிரிவுகள் / குழுக்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.
- செயற்பாடானது கண்காணிக்கப்படுவதுடன் அடுத்த கூட்டத்திற்கான சபையின் ஆவணங்களுடன் ஒரு முறையான இற்றைப்படுத்தல் தொகுக்கப்பட்டு உள்ளடக்கப்படுகின்றது.

# கூட்டாண்மை ஆளுகை

| பணிப்பாளரின் பெயர் | பணிப்பாளர் நிலை | கூட்ட வருகைப்பதிவேடு - வருகை / தகுதி | | | | | பெயரிடல் குழு ** | தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு | சபை முதலீட்டுக் குழு **** | சபை கடன் குழு ***** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சபை | சபை கணக்காய்வுக் குழு | சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு | மனித வளங்கள், வேதனம் மற்றும் பெயரிடல் குழு * | மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு ** | | | | |
| சுஜீவ ராஜபக்ஷ (தலைவர்) | NED | 12/12 | | | | | | | | |
| மீரியம் கொரலி பியட்டர்ஸ் (சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர்) | INED | 12/12 | 12/12 | | 4/4 | 2/2 | 2/2 | | | |
| ரொஹான் பத்திரகே | NED | 11/12 | | | 4/4 | 2/2 | 2/2 | 2/2*** | | |
| அசாம் ஏ ஹாமத் | INED | 12/12 | 10/12 | 6/7 | | | | | 2/2 | |
| சுதர்சன ஹாங்கம (24 ஆகஸ்ட் 2021 இல் பதவிவிலகினார்) | INED | 04/04 | | | | | | 0/1 | | |
| கே.சி.கிளைவ் பொன்சேகா | NED | 12/12 | | 7/7 | | | | | C-1/2 | |
| சனுர ஜே விஜேதிலக்க | INED | 12/12 | | C-7/7 | | | | C - 4/4 | 2/2 | அங்கத்தவர் |
| யு.எல்.அசோகா பண்டார | INED | 12/12 | 12/12 | | C - 4/4 | C - 2/2 | C - 2/2 | 4/4 | | அங்கத்தவர் |
| ரஞ்சித் கொடித்துவக்கு | NED | 11/12 | | | | | | | | C |
| INED - சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்<br>NED- நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் | | | | | ED - நிறைவேற்றுப் பணிப்பாளர்<br>C- தலைவர் | | | | | |

* 27 ஜனவரி 2022 முதல் நீக்கப்பட்டது.
** இ.ம.வ. இனால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான பணிப்புரை இலக்கம் 2021-05 இற் ஏற்பாடுகளுக்கமைய ஜனவரி 27 2022 இல் உருவாக்கப்பட்டது.
*** 24 செப்டம்பர் 2021 முதல் நியமிக்கப்பட்டார்
**** 26 நவம்பர் 2021 இல் உருவாக்கப்பட்டது.
***** 01 ஏப்ரல் 2022 முதல்

**சி.சு.ப. இனால் தலைமைதாங்கப்படும் சுயாதீன பணிப்பாளர்களின் கூட்டம்**

சபையின சுயாதீனத்தன்மை மற்றும் வினைத்திறனை பலப்படுத்துவதற்காக குழுமத்தினால் கடைப்பிடிக்கப்படும் சிறந்த ஆளுகை நடைமுறைகளை முன்னேற்றுவதற்காக, சி.சு.ப. ஆளுகை தொடர்பான விடயங்களை கலந்தரையாடுவதற்காக சுயாதீன பணிப்பாளர்களை இவ்வருடத்தில் இரண்டுமுறைகள் சந்தித்தார். இதிலிருந்தான மறுமொழிகள் தலைவருக்கு வழங்கப்பட்டதுடன், அவர் அடுத்த கூட்டத்தில் சபைக்கு தெரிவித்தார்.

### 1.3.6 பணிப்பாளர்களது அக்கறைகள் மற்றும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

பணிப்பாளர்கள் அவரது வணிக நலன்களை, நியமிக்கப்படும்போதும் அதன்பின்னர் காலாண்டுதோறும் பிரகடனம் செய்கின்றார்கள். விபரங்கள் கம்பனி காரியதரிசியினால் ஒரு அக்கறை இடாப்பில் பராமரிக்கப்படுகின்றன. கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் இந்த இடாப்பானது பரிசீலனைக்கு கிடைக்கக்கூடியதாயுள்ளது. பக்கங்கள் 308 முதல் 314 வரை அ.இ. இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர பணிப்பாளர்கள் கம்பனியுடனான ஒரு ஒப்பந்தத்தில் அல்லது பிரேரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் எதுவிதமான நேரடியான அல்லது மறைமுகமான அக்கறையினைக் கொண்டிருக்கவில்லை.

குழுமத்தின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவானது அங்கீகாரம் தேவையான அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் கருத்திலெடுக்கின்றது. இது குழுமத்தின தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கை மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடுடையதாகக் காணப்படுவதுடன் பீபள்ஸ் லீசிங் குழுமத்தின் சிறந்த நலனுக்கு கொடுக்கல் வாங்கல்கள் நியாயமானவை என்பதை உறுதிப்படுத்துகின்றது. தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கங்கள் 308 முதல் 314 வரை காணப்படும குறிப்பு 55 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(பீபள்ஸ் லீசிங் இன் பணிப்பாளர் பதவி நீங்கலாக) ஒவ்வொரு பணிப்பாளராலும் 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான சபை அங்கத்துவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து பணிப்பாளர்களும் அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை வினைத்திறனுடன் மேற்கொள்வதனை இயலுமைக்குவதற்காக போதுமான நேரத்தினை ஒதுக்கியுள்ளார்கள் என சபை திருப்திப்படுகின்றது.

### 1.3.7 முரண்பாட்டு நலன்கள்

குழுமத்தின் வணிக நடத்தை விதிக்கோவை மற்றும் நெறிமுறைகள் ஒரு பணிப்பாளரை அல்லது மு.மு.ஆ.ரை அவரது பதவியினை பயன்படுத்தி இரகசியமான அல்லது விலை உணர்திறனான தகவல்களை, தனிப்பட்ட நலனுக்காக, அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பினரது நலனுக்காக வெளிப்படுத்தப்படுவதனை தடைசெய்யப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் வணிகத்தின் உருப்படிகள் அல்லது ஏனைய பணிப்பாளர் பொறுப்பு தொடர்பாக ஏதேனும் முரண்பாட்டு நலன்கள் இருப்பின் பணிப்பாளர்கள் சபைக்கு உடனடியாக அறிவிக்கின்றார்கள். ஒரு முரண்பாடு எழக்கூடிய விடயங்களை சபையானது கருத்திலெடுக்கும்போது பணிப்பாளர்கள் கூட்டத்தில் பங்கேற்காது அவர்கள் தவிர்த்து விடுகின்றார்கள்.

### 1.3.8 தகவலறிந்த தீர்மானம் மேற்கொள்ளல்

குழுமத்தின் அறிக்கையிடல் மற்றும் தகவல் முறைமைகள் சபையானது ஒரு சரியான நேரத்தில் பொருத்தமான மற்றும் புறநிலையான தகவல்களை பெற்றுக்கொள்வதினை இயலுமையாக்குகின்றது.

#### 1.1.1.1 தகவல்களது வழங்கல்

BoardPac எனப்படும் முறையில் கலந்தரையாடப்படவேண்டிய ஆவணங்கள் பொதுவாக தரவவேற்றம் செய்யப்பட்டு பொதுவாக ஒரு சபையின் கூட்டத்திற்கு ஏழு (7) நாட்கள் முன்னதாகவெ சுற்றனுப்பப்படுவதுடன், சபைக் கூட்டத்தில் எழுப்பப்படவேண்டிய விடயங்களில் விரிவான தரம்சார்ந்த மற்றும் அளவுசார்ந்த தகவல்கள் வழங்கப்படுகின்றன.

மேலும், கூட்டாண்மை முகாமைத்துவம் மற்றும் வெளிவாரி நிபுணர்கள் பின்வருவன தொடர்பாக வழக்கமான முன்னிலைப்படுத்தல்களை மேற்கொள்கின்றார்கள். வணிகச் சூழல், மூலோபாயம் மற்றும் செயற்பாடுகள் என்பன வழமையாக இடம்பெறும் ஒவ்வொரு வணிக அலகின் செயற்திறனால் துணையளிக்கும் மூலோபாய அபிவிருத்தி என்பன ஆழ்ந்த அமர்வுகளூடாக கலந்துரையாடப்படுகின்றன.

#### 1.1.1.2 தகவல்களுக்கான அணுக்கம்

நிறைவேற்று முகாமைத்துவம், நிறுவனத் தகவல்களுடன் அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதியளிப்பதற்கு தேவையான வளங்களுக்கு பணிப்பாளர்கள் தடையற்ற அணுக்கத்தினை கொண்டுள்ளார்கள். கம்பனி காரியதரிசியினால் ஒருங்கிணைப்புடன் கம்பனியின் செலவில் பணிப்பாளர்களுக்கு வெளிவாரி நிபுணர்களின் ஆலோசனைக்கான அணுக்கம் கிடைக்கின்றது. பெறப்படும் அத்தகைய ஆலோசனையின் பிரதிகள் அவற்றை வேண்டிய பணிப்பாளர்களுக்கு சுற்றனுப்பப்படுகின்றது.

#### 1.1.1.3 அறிவு அபிவிருத்தி

ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் இடர் மற்றும் பொது வணிகச் சூழலிலான மாற்றங்கள், மற்றும் உரிய துறையின் அபிவிருத்திகள் மற்றும் பொருத்தமான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி பணிப்பாளர்கள் நிலையொத்துள்ளார்கள். பணிப்பாளர்கள் அவர்கள் அவசியமெனக் கருதும்போது பயிற்சி மற்றும் தொழில்சார் அபிவிருத்திகளை பொறுப்பேற்பதுடன், இத்தேவைப்பாடுகள் கம்பனி காரியதரிசியூடாக ஒருங்கிணைக்கப்படுகின்றன.

### 1.3.9 சபை மற்றும் உப குழுக்களின் மதிப்பீடு

**உள்ளடக்கப்பட்ட பிரிவுகள்**

- சபையின் தொகுப்பு மற்றும் தரம்
- சபை கூட்டங்கள மற்றும் செயல்முறைகள்
- சபை அபிவிருத்தி
- சபை மூலோபாயம் மற்றும் இடர் முகாமைத்துவம்
- நெறிமுறைகள், இணக்கப்பாடு மற்றும் சட்ட வரம்புறுகை
- சபை மற்றும் முகாமைத்துவ உறவுகள் தொடர்வுத் திட்டமிடல்

சபை முழுவதுமாக மற்றும் அதன் உப குழுக்களது வினைத்திறனை மதிப்பிடுவதற்காக ஒரு வருடாந்த மதிப்பிடலானது நடாத்தப்படுகின்றது, இதற்கான செயல்முறையானது குழுமத்தின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சபைத் தலைவரினால் தலைமை தாங்கப்பட்டு கம்பனி காரியதரிசியினால் நிர்வகிக்கப்பட்டு, பணிப்பாளர்கள் அவர்களது கூட்டுச் செயற்திறனை வினைத்திறன் முக்கிய இயக்கிகளுக்கு எதிராக மதிப்பீடு செய்கின்றார்கள். தொகுக்கப்பட்ட விளைவுகள், தகவல்கள் மற்றும் முன்னேற்றமடைவதற்கான பிரிவுகளை கருத்திற்கொள்வதற்காக சபைக்கு கிடைக்கப்படுகின்றன.

2021/22 மதிப்பீடுகள் மார்ச் 2022 இல் நடாத்தப்பட்டதுடன் மற்றும் இதன் கண்டுபிடிப்புகள் ஜூன் 2022 இல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இம்மதிப்பீட்டின் விளைவானது மீளாய்வாண்டில் சபை மற்றும் அதன் குழுக்கள் அவர்களின் பங்களிப்பினை நிறைவேற்றுவதில் வினைத்திறனாகக் காணப்பட்டன.

### 1.3.10 பி.நி.அ. / பொ.மு.

வருடத்தின் ஆரம்பத்தில் பி.நி.அ. / பொ.மு. இனது உடன்பாட்டுடன் பீபள்ஸ் லீசிங் குழுமத்தின் குறும், மத்திய, நீண்டகால குறிக்கோள்களுக்கு ஒத்ததான வரன்முறையினை பயன்படுத்தி பி.நி.அ. / பொ.மு. இன் செயற்திறனானது சபையினால் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. செயற்பாட்டு சூழலின் பின்னணியில் நிதியாண்டின் இறுதியில் செயற்திறனானது மீளாய்வு செய்யப்படுவதுடன், செயற்திறனின் அடிப்படையில் வேதனமானது சீரமைக்கப்படுகின்றது.

# கூட்டாண்மை ஆளுகை

### 1.3.11 தொடர்வுத் திட்டமிடல்

சபை மற்றும் பி.நி.அ./பொ.மு. க்கான பொருத்தமான விண்ணப்பதாரியினை இனங்காண்பதற்கும் மற்றும் தொடர்வுத் திட்டங்களை விருத்திசெய்வதற்கும் சபைக்கு பெ.வே.ம.வ.கு. (தற்போது பெயரிடல் குழு) துணைபுரிகின்றது. இது குழுமத்தின் மூலோபாய திட்டத்தினை விநியோகிப்பதற்கு துணைபுரியும் திறன்கள் மற்றும் அனுபவங்களது பொருத்தமான கலவையினை சபை கொண்டிருப்பதனையும் தலைமைத்துவத்தின் தொடர்வினை உறுதிப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படுகின்றது. இக்குழுவானது மு.மு.ஆ. க்கான ஒரு விரிவான தொடர்வுத் திட்டத்தினை விருத்திசெய்யும் செயல்முறையிலுள்ளதுடன், முக்கிய பதவிகளில் நடைமுறை மற்றும் எதிர்கால பொறுப்புக்களை பொறுப்பேற்பதற்கான ஒரு ஆற்றல் தேக்கத்தில் முன்னிறுத்தம் செய்கின்றது. ம.வ. பிரிவானது இந்த தொழில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு பொறுப்பாளியாகும்.

### 1.4 பொறுப்பான மற்றும் நியாயமான வேதனம்

சபையானது, வேதனம் நியாயமானது, பொறுப்பானது மற்றும் வெளிப்படையானது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. பெயரிடல், வேதனம் மற்றும் மனித வளக் குழுவானது (பெ.வே.ம.வ.கு.) (தற்போது ம.வ. மற்றும் வேதனக் குழு) பீபள்ஸ் லீசிங் குழுமத்தின் வேதனக் கொள்கைக்கு அமைவாக உடன்பட்ட ஆய்வு வரையறைகளினுள் மு.மு.ஆ. இன் வேதனம் தொடர்பாக சபைக்கு பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு பொறுப்பாளியாகும். மு.து.ஆ. க்கான வேதனப் பொதிகள் தேவையான திறன்கள் மற்றும் நிபுணத்துவத்துடனான திறன் வாய்ந்த தொழில்வல்லுநர்களை கவர்வதற்காக வடிவமைக்கப்பட்டன. வேதனமானது பதவியில் காணப்படுகின்ற இடர்காரணிகளை மற்றும் செயற்திறன் மற்றும் கூட்டாண்மை மற்றும் தனிப்பட்ட செயற்திறனுக்கு ஒத்திசைவாக கருத்திலெடுத்து கட்டமைக்கப்பட்டுள்ளன. பெ.வே.ம.வ.கு. இன் அறிக்கைக்கு பக்கங்கள் 164 முதல் 165 வரை பார்க்கவும்.

சபையின் பணிப்பாளராக இருப்பதற்காக நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களுக்கான வேதனத்தினையும் மற்றும் முறைமைப்படுத்தல் அதிகாரசபையினால் பரிந்துரைக்கப்பட்டவாறு ஒரு குழுவின் அங்கத்தவராக இருப்பதற்கான மேலதிகக் கட்டணத்தினையும் சபை தீர்மானிக்கின்றது. நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களின் வேதனமானது அவர்களது பங்களிப்பிற்கான நேரக் கடப்பாடு மற்றும் பொறுப்புக்களை பிரதிபலிப்பதுடன், சந்தை நடைமுறைகளும் கணக்கிலெடுக்கப்படுகின்றன. அவர்கள் ஏதேனும் செயற்திறன் தொடர்பான ஊக்கமளிப்பு கொடுப்பனவுகளை பெறுவதில்லை.

நிதியாண்டு 2021/22 இல் பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த வேதனம் ரூ. 4.94 மில்லியன் ஆகும்.

> பணியிடத்தில் சமத்துவமான வாய்ப்பு மற்றும் ஒரு பாதுகாப்பான சூழலை வழங்குவதன் மூலம் எமது அனைத்து பணியாட்களதும் முற்றான உள்ளார்ந்த ஆற்றல்களை பயன்படுத்துவதற்கு எமது கொள்கைகள் முனைகின்றன.
>
> - சமத்துவம் மற்றும் பன்மயக் கொள்கை
> - பணியாளர் அங்கீகாரம் மற்றும் வெகுமதிக் கொள்கை
> - தொல்லைக்கெதிராக கொள்கை
> - மனக்குறை கையாளுதல் கொள்கை
> - முறையீடுகளின் முகாமைத்துவ மற்றும் தீர்த்துவைத்தல் கொள்கை
> - மனித உரிமைகள் கொள்கை
> - ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு கொள்கை
> - வணிக நடத்தை விதிக்கோவை மற்றும் நெறிமுறைகள்

### 1.5 பாலினப் பன்மயம்

ஒரு பாலினப் பன்மயமான தொழிற்சேனையினை ஈடுபடுத்துவதிலான ஆக்கத்திறன் மற்றும் போட்டித்தன்மை என்பவற்றின் சாத்தியமான தாக்கத்தினை சபை பாராட்டுகின்றது. பீபள்ஸ் லீசிங் குழுமமானது சமத்துவமான வாய்ப்புக்கள், ஒரு பாதுகாப்பான பணியிடம், நெகிழ்வான தொழில் ஒழுங்கமைப்புகள் என்பவற்றை ஊக்குவிக்கும் கொள்கைகளைக் கொண்டுள்ளதுடன், நெகிழ்ச்சியான, குடும்பத் தோழமையான நடைமுறைகளை அமுல்படுத்தியுள்ளதுடன் இவை பக்கங்கள் 88 முதல் 95 வரை வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ம.வ. நடைமுறைகள் பெண் பணியாட்கள் அவர்களது தொழில் ஆர்வங்களை பூர்த்தி செய்வதற்கு வலுவளிக்கின்றது.

### 1.6 தகவல் தொழில்நுட்ப மற்றும சைபர் பாதுகாப்பு ஆளுகை

டிஜிட்டல் கொடுக்கல் வாங்கலின் பருமனிலான அதிகரிப்பும் தொற்றினால் இயக்கப்பட்ட தொலைதூரத்திலிருந்து பணிபுரியும் பாதிப்புக்களும் நிதிச் சேவைகள் துறையில் தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு இடரினை இயல்பாக்கியுள்ளது. உலகளாவிய ரீதியில் உயர்ந்த மட்டத்திலான இணையத்தளக் குற்றங்கள் மற்றும் பயன்படுத்தப்படும் மதிநுட்பமான தந்திரோபாயங்கள் (உதாரணமாக இணையதள ஏமாற்றும்) ஒரு முக்கிய அக்கறையாக காணப்படுகின்றது. குழுமமானது வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கும் கடப்பாட்டினைக் கொண்டுள்ளதுடன் சைபர் இடர் முகாமைத்துவ முறைமைகளில் பரந்தளவில் முதலீடு செய்துள்ளது.

பீபள்ஸ் லீசிங் குழுமத்தின் த.தொ.தொ. பிரிவானது த.தொ.தொ. கொள்கைகளை பின்பற்றுதல் மற்றும் சைபர் அச்சுறுத்தல்களுக்கெதிராக பாதுகாத்தல் உள்ளடங்கலான டிஜிட்டல் மூலோபாயத்தினை அமுலாக்குவதற்காக பொறுப்பினைக் கொண்டுள்ளது. குழுமத்தின் தகவல் பாதுகாப்பு குறிக்கோள்கள் மற்றும் தேவைப்பாடுகளை சந்திப்பதில் ஆளுகைக் கட்டமைப்பு, கொள்கை வரம்புறுகைகள் மற்றும் குழுக்களின் திறமைகள் என்பன பலப்படுத்தப்பட்டதுடன் இவ்வருடத்தில் கண்காணிப்புக் கருவிகளும் மேம்படுத்தப்பட்டன.

தகவல் பாதுகாப்பு அதிகாரியாக (த.பா.அ.) ஒரு பிரத்தியேக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதுடன் இவர் அனைத்து தகவல் பாதுகாப்பு தொடர்பான கடமைகளுக்கு பொறுப்பாளியாவார். தகவல் பாதுகாப்பு ஆளுகை மற்றும் சைபர் இடர்கள் என்பன ச.ஒ.இ.மு.கு. மற்றும் சபை கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலில் மீள்நிகழும் உருப்படிகளாகும்.

### 1.7 சபையின் கட்டுப்பாடு

### 1.7.1 இணக்கப்பாடு

பீபள்ஸ் லீசிங் குழுமமானது அனைத்து பொருத்தமான சட்டரீதியான மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு கண்டுள்ளது. இணக்கப்பாட்டின் நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக, ஒரு பிரத்தியேக இணக்கப்பாடு கடமையின் நிறுவுதல் உள்ளடங்கலாக கட்டுப்பாடுகள் உள்ளன. இந்த கடமையானது ச.ஒ.இ.மு.கு. இற்கு நேரடியாக அறிக்கையிடும் ஒரு இணக்கப்பாட்டு அதிகாரியினால் தலைமை வகிக்கப்படுகின்றது. இணக்கப்பாட்டு அதிகாரி அவசியமானபோது, குழுவின் காலாண்டு கூட்டங்களில் இணக்கப்பாட்டிலான ஒரு அறிக்கையினை சமர்ப்பிப்பதுடன், அக்கறைகள் தேவையான செயலாற்றலுக்காக சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

குழுமமானது ஒரு உட்குறை உரைப்போர் கொள்கையினைக் கொண்டிருப்பதுடன் இது அனைத்து பணியாட்களுக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் தெளிவாக அறியப்படுத்தப்படுவதுடன், சபையானது இது தொடர்பான தகவல்களைப் பெறுகின்றது. மீளாய்வாண்டில், உட்குறை உரைப்போர் செயல்முறையினூடாக எவ்விதமான நிகழ்வும் அறிக்கையிடப்படவில்லை.

மீளாய்வாண்டில், ஏதேனும் சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளில் எவ்விதமான பொருண்மையான மீறல்களும் காணப்படவில்லை என்பதுடன், கம்பனியிலோ அல்லது அதன் பணிப்பாளர்களிலோ ஏதேனும் சட்டங்கள் அல்லது ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக எவ்விதமான பொருண்மையான தண்டப்பணங்களோ அல்லது அபராதங்களோ விதிக்கப்படவில்லை.

### 1.7.1 இடர் ஆளுகை

குழுமத்தின் ஒட்டுமொத்த இடர் தோற்றுருவமானது மீளாய்வாண்டில், பக்கங்கள் 31 முதல் 33 வரை காணப்படும் செயற்பாட்டு சூழலில் விளக்கியுள்ளவாறு அதிகரித்தது. பீபள்ஸ் லீசிங் குழுமம் பக்கங்கள் 176 முதல் 195 வரை காணப்படும் இடர் மீளாய்வில் விபரித்துள்ளவாறு வெளிப்பாட்டினைக் குறைப்பதற்காக அதன் இடர் முகாமைத்துவ ஆற்றலினை மேம்படுத்தியுள்ளது.

எமது செயற்திறனான இடர் முகாமைத்துவ

முறைமையானது பொறுப்பாண்மை அளிக்கப்பட்ட சபை மற்றும் முகாமைத்துவக் குழுக்களினால் பொருத்தமான நிபுணத்துவத்துடன் ஆளுகை செய்யப்படுகின்றது. சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவினூடாக (ச.ஒ.இ.மு.கு.) சபையானது இடர் முகாமைத்துவ வரம்புறுகையினை (இ.மு.வ.) மேற்பார்வை செய்கின்றது. இது இடர்களை இனங்காணல், இடர் மூலோபாயத்தினை விருத்திசெய்தல், கொள்கைகளை உருவாக்குதல், செயல்முறைகளை நிறுவுதல், வரையறைகளை நிறுவுதல் மற்றும் ஏனையவற்றுக்கிடையில் வெளிப்பாடுகளை முகாமைப்படுத்துவதனையும் உள்ளடக்கும். நன்கு விருத்திசெய்யப்பட்ட எமது வரம்புறுகையானது இடர் மற்றும் மூலதன முகாமைத்துவத்திற்கு ஒரு சீரான அணுகுமுறைக்கு துணையளிக்கின்றது. இடர் பிரிவானது ச.ஒ.இ.மு.கு. இற்கு அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு துணைபுரிகின்றது.
இவ்வாண்டில் சபை மற்றும் ச.ஒ.இ.மு.கு. ஆகியன இடரினை வினைத்திறனாகவும் செயல்திறனுடனும் முகாமைப்படுத்துவதற்காக அவற்றின் மேற்பார்வை கடமைகளது கடுமையினை அதிகரித்தது. தொற்று முழுவதும் குழுவானது மீளெழுச்சியுடன் காணப்பட்டதுடன் இது அதன் திடமான இடர் கலாச்சாரத்தினை உறுதிப்படுத்துகின்றது.

## 1.7.2 உள்ளகக் கட்டுப்பாடுகள்

இடர் முகாமைத்துவத்துடன் ஒருங்கிணைத்து சபையானது மூலோபாய குறிக்கோள்களைச் சந்திப்பதில், பங்குதாரர்களது நலன்கள் மற்றும் குழுமத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாடுகளை உருவாக்கி அமுல்படுத்தியுள்ளது. இந்த முறைமைகள் நிதியியல், செயற்பாடு மற்றும் இணக்கப்பாடு உள்ளடங்கலாக அனைத்து கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குவதுடன் கண்காணிக்கப்பட்டு சபையினால் முறைமைகளது பயனுறுதித்தன்மைக்காக தவறாது மீளாய்வு செய்யப்படுகின்றது. சபை கணக்காய்வுக் குழுவானது உள்ளகக் கணகாய்வுப் பிரிவினால் துணையளிக்கப்பட்டு உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உறுதுணையளிக்கின்றது. உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் விபரங்கள் பக்கங்கள் 162 முதல் 163 வரை காணப்படும் சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளன. நிதியியல் தகவல்களது நேர்மை, உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முறைமைகளின் வலிமை குறித்து சபையானது திருப்தியடைகின்றது.

## 1.7.3 நிதியியல் மற்றும் வணிக அறிக்கையிடல்

ஆண்டறிக்கையினூடாக சபையானது குழுமத்தின் நிதி நிலைமை, செயற்திறன் மற்றும் வாய்ப்புக்களில் ஒரு சமநிலையான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய மதிப்பீட்டினை முன்னிலைப்படுத்துவதற்கு முனைகின்றது. அத்துடன் வாசிக்கக்கூடியதன்மை மற்றும் உணர்வாற்றலுக்கு வசதியளிப்பதற்காக வருணனையான மற்றும் பார்வைக்குரிய கூறுகளை ஒன்றிணைத்து வழங்கியுள்ளது. இடைக்கால காலாண்டு அறிக்கைகளும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அனைத்து சட்டரீதியான தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன், பிரசுரிக்கப்படுவதற்கு முன்னர் அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு சபை கணக்காய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கைக்கு அப்பால், கோவையினால் தேவைப்படும் மேலதிக தகவல்களை பின்வரும் அறிக்கைகள் வழங்குகின்றன:

- பக்கங்கள் 156 முதல் 161 வரை காணப்படும் கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை
- பக்கங்கள் 200 முதல் 201 வரை காணப்படும் நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்பு குறித்த கூற்று
- பக்கங்கள் 205 முதல் 207 வரை காணப்படும் சுயாதீன கணக்காய்வாளரது அறிக்கை

## 1.7.4 உறுதிமொழி

உறுதிமொழிச் சேவைகள் மற்றும் கடமைகள் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டு சூழலினை இயலுமையாக்குவதனை சபை உறுதிப்படுத்துவதுடன் இவை தகவல்களின் நேர்மைக்கும் உள்ளக தீர்மானம் மேற்கொள்ளலுக்கும் மற்றும் பீபள்ஸ் லீசிங் குழுமத்தின் வெளிவாரி அறிக்கைகளுக்கும் துணைபுரிகின்றன. சபை கணக்காய்வுக் குழுவானது (ச.க.கு.) சபையின் சார்பில் வெளிவாரி மற்றும் உள்வாரி கணக்காய்வாளர்களின் திட்டங்கள் மற்றும் தொழில் விளைவுகளை மீளாய்வு செய்கின்றது.

GRI | 102-16

## 1.8 நெறிமுறையான கலாச்சாரத்தினை ஊக்குவித்தல்

## 1.8.1 நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகள்

பீபள்ஸ் லீசிங் கம்பனியானது அனைத்து பங்காளிகளின் உரிமைகள் மற்றும் நலன்கள் தொடர்பாக அதன் வணிகச் செயற்பாடுகளை நேர்மையாகவும் தொழில்முறையாகவும் நடாத்துவதற்கு கடப்பாடுடையதாயுள்ளது. கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள வணிக நடத்தைக்கோவை மற்றும் நெறிமுறைகளுக்கு கட்டுப்பட்டுள்ளது. இது மு.மு.ஆ. மற்றும் பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக அனைத்து பணிப்பாட்களுக்கும் பொருந்தும். இந்தக் கோவையானது அனைத்து பணியாட்களது தகவல்களுக்காக அகஇணையத்தில் கிடைக்கக்கூடியதாயிருப்பதுடன் கட்டமைக்கப்பட்ட தொடர்பாடலூடாக அனைத்து மட்டங்களிலும் வலுவூட்டப்பட்டுள்ளது.

கோவையின் ஏதேனும் ஏற்பாடுகளை கம்பனியின் எவரேனும் பணிப்பாளர் அல்லது பணியாள் ஏதேனும் பொருண்மையான மீறல்களை மேற்கொண்டுள்ளார் என சபை அறிந்திருக்கவில்லை.




GRI | 102-17

# கூட்டாண்மை ஆளுகை

## 1.8.2 உட்குறை உரைத்தல் / மனக்குறை பொறிமுறை

நியாயமற்ற, நெறிமுறையற்ற அல்லது சட்டத்திற்கு முரணான நடத்தை பற்றி பணியாட்கள் மற்றும் ஏதேனும் பங்காளிகள் ஆலோசனையினைப் பெறுவதற்கு அல்லது அக்கறைகளை அறிக்கையிடுவதற்கான பொறிமுறைகள் காணப்படுகின்றன.

கம்பனியின் உட்குறை உரைத்தல் கொள்கையானது சாத்தியமான பொருத்தமற்ற நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகள் அல்லது உள்வாரி புலனாய்வுகள் அவசியமான ஏதேனும் சிக்கல்கள் தொடர்பாக அக்கறையுள்ள விடயங்களை அநாமதேயமாக அறிக்கையிடுவதனை இயலுமையாக்குகின்றது. உட்குறையினை உரைக்கும்போது விடயத்தினை பணியாட்கள் நான்கு முக்கிய ஆளணியினரில் ஒருவரைத் தெரிவு செய்யலாம், தலைவரிலிருந்து ச.க.கு, பி.நி.அ./பொ.மு., உள்வாரி கணக்காய்வின் தலைமை அல்லது ம.வ. இன் தலைமைக்கு அறிக்கையிடலாம். எழுப்பப்படும் அக்கறைகள் புலனாய்விற்காக கணக்காய்வுக் குழுவுக்கு அனுப்பப்படும். அணுக்கம், அநாமதேயம், செயல்முறை மற்றும் உட்குறை உரைத்தல் சேவை தொடர்பான தகவல்கள் அக இணையத்தில் கிடைப்பதுடன் அனைத்து பணியாட்களுக்கும் அறிவிக்கப்படுகின்றன.

GRI | 207-3

## 1.9 பங்குதாரர்களுடனான உறவுகள்

சபையானது பங்காளிகள் நோக்கிய அவர்களது பொறுப்புக்கள் குறித்து உணர்ந்திருப்பதுடன், வழங்கப்படும் தகவல்களின் பொருந்துமை மற்றும் காலக்கெடு என்பவற்றுடன் நேர்மையிலான அழுத்தத்துடன் நியாயமான வெளிப்படுத்தலுக்கு கடப்பாடுடையதாயுள்ளது. தகவலானது துல்லியமாகவும் மற்றும் ஒரு பொய்யான சந்தை உருவாகுவதனை தவிர்க்கும் அத்தகைய விதத்திலும் அறிவிக்கப்படுகின்றது.

## 1.10 நீடிப்புத்திறன் ஆளுகை

கம்பனி மற்றும் அதன் பங்காளிகளுக்கு பீபள்ஸ் லீசிங் பெறுமதி சேர்ப்பதனை உறுதிசெய்வதற்காக சபையானது நீடிப்புத்திறனான அபிவிருத்தியில் மிகவும் முன்னிறுத்தமாயுள்ளது. ஆண்டறிக்கையின் பின்வரும் பிரிவுகளில் விபரிக்கப்பட்டுள்ள வணிக மாதிரி மற்றும் பெறுமதி உருவாக்கம் என்பன சூழல், சமூக மற்றும் ஆளுகை (சூ.ச.ஆ.) குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளன என்று சபை நம்பிக்கையாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பொருளாதார நீடிப்புத்திறன் | நிதியியல் மூலதனம் | பக்கங்கள் 60 - 75 |
| சூழல் | இயற்கை மூலதனம் | பக்கங்கள் 106 -113 |
| தொழிலாளர் நடைமுறைகள் | மனித மூலதனம் | பக்கங்கள் 88 - 95 |
| சமூகம் | சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் | பக்கங்கள் 96 - 105 |
| வாடிக்கையாளர் திருப்தி | சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் | பக்கங்கள் 96 - 105 |
| பங்குதாரர் இனங்காணல், ஈடுபாடு மற்றும் பயனுறுதியான தொடர்பாடல் | முதலீட்டாளருக்கான பெறுமதி | பக்கங்கள் 68 -75 |

## 1.1. பங்குதாரர்களுடனான தொடர்பாடல்

ஆண்டுப் பொதுக் கூட்டம் (ஆ.பொ.கூ.) (கீழே விவரிக்கப்பட்டுள்ளது) ஆண்டறிக்கை, இடைக்கால நிதிக்கூற்றுக்கள், குழுமத்தின் இணையத்தளத்தில் ஒரு பிரத்தியேகமான முதலீட்டாளர் உறவுகள் பக்கம் மற்றும் கொ.ப.ப. இன் அறிவித்தல்களூடாக முக்கிய நிகழ்வுகளின் அறிவிப்பு உள்ளடங்கலாக பல்வேறு தொடர்பாடல் வழிமுறைகளூடாக பங்குதாரர்களுடனான ஈடுபாடு ஏற்படுகின்றது.

ஆண்டறிக்கையானது பீபள்ஸ் லீசிங்கின் நிதி நிலைமை, செயற்திறன் மற்றும் வாசிக்கக்கூடியதன்மை மற்றும் உணர்வாற்றல் என்பவற்றுக்கு வசதியளிப்பதற்காக வருணனை மற்றும் பார்வைக்குரிய கூறுகளை ஒன்றிணைத்த வாய்ப்புக்கள் என்பவற்றில் ஒரு நியாயமான மற்றும் சமநிலையான மீளாய்வினை முன்னிலைப்படுத்துகின்றது. ஆண்டறிக்கை மற்றும் இடைக்கால நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்படுவதுடன் பிரசுரிப்பதற்கு முன்னர் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றது,

கம்பனி காரியதரிசியூடாக பங்குதாரர்கள் சபையிடம் வினாக்களை கேட்பதற்கு, கருத்தினை அல்லது ஆலோசனையினை வழங்குவதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளார்கள். பங்குதாரர்களது அனைத்து முக்கிய சிக்கல்கள் மற்றும் அக்கறைகள் முகாமைத்துவத்தின் கருத்துக்களுடன் சபைக்கு பரிந்துரைக்கப்படுகின்றன.

## 1.2. ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் (ஆ.பொ.கூ.) ஆக்கபூர்வமான பயன்பாடு

பங்குதாரர்களுடனான செயற்திறனான ஊடாட்டமானது கம்பனியினால் ஊக்கமளிக்கப்படுவதனை சபை உறுதிப்படுத்துவதுடன், இது குழுமத்தின் ஆ.பொ.கூ. உள்ளடங்கலான ஊடாட்டத்தையும் உள்ளடக்கும். ஆ.பொ.கூ. இல் சபையின் அங்கத்தவர்களும் முகாமைத்துவத்தின் முக்கிய அங்கத்தவர்களும் பங்குதாரர்களினால் எழுப்பப்படும் வினாக்களுக்கு பதிலளிப்பதற்கும் அவர்களுடன் ஊடாடுவதற்கும் பிரசன்னமாயிருப்பார்கள். எழுப்பப்படும் ஏதேனும் வினாக்களை விளித்துரைப்பதற்காக வெளிவாரி கணக்காய்வாளர்களும் சமூகமளிப்பார்கள்.

ஆ.பொ.கூ. இற்கான அறிவித்தல், ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் மற்றும் ஏதேனும் தீர்மானத்துடன் உரிய தகவல்களும் பங்குதாரர்களுக்கு ஆ.பொ.கூ. இற்கு 15 நாட்களுக்கு முன்னர் சுற்றறிக்கை செய்யப்படுகின்றது. இது அனைத்து பங்குதாரர்களும் ஆவணங்களை மீளாய்வு செய்து ஆ.பொ.கூ. இல் சமூகமளிப்பதற்கு வசதியளிப்பதற்காகும். PLC விடயங்களுக்கான ஒவ்வொரு உருப்படிக்கும் தனித்தனி தீர்மானத்தினை பிரேரிப்பதுடன் இது அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் வாக்களிப்பதற்கான வாய்ப்பினை பங்குதாரர்களுக்கு வழங்குகின்றது. ஆ.பொ.கூ. இல் வாக்களிக்கும் செயல்முறையானது முன்கூட்டியே பங்குதாரர்களுக்கு சுற்றனுப்பப்பட்டுள்ளது.

அனைத்து பங்குதாரர்களும் அவர்களது வாக்களிக்கும் உரிமையினை பயன்படுத்துவதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு தீர்மானத்திற்கும் வைப்பிலிடப்பட்ட அனைத்து பதிலாள் வாக்குகளை பதிவுசெய்து எண்ணிக்கையிடக்கூடிய ஒரு செயற்திறனான பொறிமுறையினை கம்பனி கொண்டுள்ளது. ஆ.பொ.கூ. நிறைவடைந்த உடனேயே ஒவ்வொரு தீர்மானத்திலுமான வாக்குகளின் விளைவானது கொ.ப.ப. இக்கு அறிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கோவிட்-19 தொற்றின் கட்டுப்பாடுகளுக்கு பொறுப்பேற்பாக 2020/21 ஆ.பொ.கூ. ஒரு நீடிக்கப்பட்ட தொலைக் கலந்துரையாடல் வசதியூடாக ஒரு இணையவழி கூட்டமாக நடாத்தப்பட்டது. ஆ.பொ.கூ. மேடையில் மெய்நேரத்தில் பங்குதாரர்கள் அவர்களது வினாக்களை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுவதனை சபை உறுதிசெய்ததுடன் அவர்களது வினாக்களுக்கு மறுமொழிகள் வழங்கப்பட்டன.

சபையானது பங்காளிகள் நோக்கிய அவர்களது பொறுப்புக்கள் குறித்து உணர்ந்திருப்பதுடன், வழங்கப்படும் தகவல்களின் பொருந்துமை மற்றும் காலக்கெடு என்பவற்றுடன் நேர்மையிலான அழுத்தத்துடன் நியாயமான வெளிப்படுத்தலுக்கு கடப்பாடுடையதாயுள்ளது. தகவலானது துல்லியமாகவும் மற்றும் ஒரு பொய்யான சந்தை உருவாகுவதனை தவிர்க்கும் அத்தகைய விதத்திலும் அறிவிக்கப்படுகின்றது

## 1.10 இணைப்பு 1 - கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினால் வழங்கப்பட்ட பட்டியலிடல் கம்பனிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை விதிகளிலான தொடர்ச்சியான பட்டியலிடல்

**தேவைப்பாடுகளின் பிரிவு 7.10 உடனான இணக்கப்பாடு.**

| விதி இலக்கம் | தலைப்பு | தேவைப்பாடு | இணக்கப்பாடு | அறிக்கையினுள்ளான குறிப்பீடு | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 7.10.1(a) | நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள் (NED) | சபையின் மொத்த பணிப்பாளர்கள் எண்ணிக்கையில் ஆகக்குறைந்தது 2 அல்லது 1/3 பங்கு இதில் எது கூடியதோ அது NEDs ஆக இருத்தல் வேண்டும். | ✓ | சபையின் தொகுப்பு | 128 |
| 7.10.2(a) | சுயாதீன பணிப்பாளர்கள் (ID) | 2 அல்லது NEDs க்களின் 1/3, இதில் எது கூடியதோ அது சுயாதீனமாய் இருத்தல் வேண்டும். | ✓ | சபையின் தொகுப்பு | 128 |
| 7.10.2(b) | சுயாதீன பணிப்பாளர்கள் (ID) | ஒவ்வொரு NED உம் அவரது சுயாதீனம் அல்லது சுயாதீனமற்றதன்மை குறித்து ஒரு திகதியிட்டு கையொப்பமிடப்பட்ட பிரகடனம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | ✓ | பணிப்பாளர்களின் சுயாதீனம் | 129 |
| 7.10.3(a) | பணிப்பாளர்கள் தொடர்பான வெளிப்படுத்தல் | • NEDs க்களின் சுயாதீனத்தன்மை அல்லது வேறுவகையென சபையானது வருடாந்தம் தீர்மானிக்கின்றது, மற்றும்<br>• ஒவ்வொரு IDs க்களின் பெயர்கள் ஆண்டறிக்கையில் (ஆ.அ.)வெளிப்படுத்தப்படல் வேண்டும். | ✓ | பணிப்பாளர்களின் சுயாதீனம்<br><br>சபையின் சுயவிபரங்கள் | 129<br><br>117 to 120 |
| 7.10.3(b) | பணிப்பாளர்கள் தொடர்பான வெளிப்படுத்தல் | சுயாதீனத்திற்காக குறிப்பிட்ட வரன்முறையானது சந்திக்கப்படாவிடின் சபையின் ID தீர்மானத்திற்கான அடிப்படை | ✓ | பொருத்தமற்றது | |
| 7.10.3(c) | பணிப்பாளர்கள் தொடர்பான வெளிப்படுத்தல் | ஒவ்வொரு பணிப்பாளரின் ஒரு சுருக்கமான சுயவிபரமானது, பணிப்பாளரின் நிபுணத்துவ பிரிவு உள்ளடங்கலாக ஆ.அ. இல் உள்ளடக்கப்படல் வேண்டும். | ✓ | சபையின் சுயவிபரங்கள் | 117 to 120 |
| 7.10.3(d) | பணிப்பாளர்கள் தொடர்பான வெளிப்படுத்தல் | கொ.ப.ப இன் 7.10.3(a), (b) and (c) இல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுடன் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய பணிப்பாளர்களின் ஒரு சுருக்கமான சுயவிபரம் வழங்கப்படல் வேண்டும். | ✓ | சபையின் சுயவிபரங்கள் | 120 |
| 7.10.4 (a-h) | சுயாதீனத்தை வரையறை செய்வதற்கான வரன்முறை | ஒரு சுயாதீன பணிப்பாளராவதற்கான தேவைப்பாடுகள் | ✓ | பணிப்பாளர்களின் சுயாதீனம் | 129 |
| 7.10.5 | வேதனக் குழு (RC.) | பட்டியலிடப்பட்ட கம்பனியொன்று ஒரு வேதனக் குழுவினை வைத்திருத்தல் வேண்டும். | ✓ | ம.வ. மற்றும் வேதனக் குழு | 164 - 165 |
| 7.10.5(a) | வேதனக் குழுவின் தொகுப்பு | RC ஆனது NEDs க்களை உள்ளடக்குவதுடன் இவர்களுள் பெரும்பாலானோர் சுயாதீனமானவர்கள். ஒரு NED பணிப்பாளர் சபையினால் குழுவின் தலைவராக நியமிக்கப்படல் வேண்டும். | ✓ | ம.வ. மற்றும் வேதனக் குழு | 164 -165 |
| 7.10.5.(b) | வேதனக் குழுவின் கடமைகள் | நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் வேதனத்தினை RC பரிந்துரைத்தல் வேண்டும். | ✓ | ம.வ. மற்றும் வேதனக் குழு<br><br>2021/22 காலப்பகுதியில் சபையில் நிறைவேற்று பணிப்பாளர்கள் எவரும் இருக்கவில்லை | 164 -165 |
| 7.10.5.(c) | ஆண்டறிக்கையில் வேதனக் குழு தொடர்பன வெளிப்படுத்தல் | • RC இல் உள்ளடங்கியுள்ள பணிப்பாளர்களின் பெயர்கள்.<br>• வேதனக் கொள்கையின் கூற்று<br>• நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுநரல்லான பணிப்பாளர்களுக்கும் செலுத்தப்பட்ட மொத்த வேதனம்<br>• ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும் | ✓ | ம.வ. மற்றும் வேதனக் குழு | 164-165 |
| 7.10.6 | கணக்காய்வுக் குழு(AC) | கம்பனியானது ஒரு AC இனைக் கொண்டிருத்தல் வேண்டும் | ✓ | சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 162 to 163 |

# கூட்டாண்மை ஆளுகை

| விதி இலக்கம் | தலைப்பு | தேவைப்பாடு | இணக்கப்பாடு | அறிக்கையினுள்ளான குறிப்பீடு | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 7.10.6(a) | கணக்காய்வுக் குழுவின் தொகுப்பு | நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களை உள்ளடக்குவதுடன் அதிகமானோர் சுயாதீனமாயிருத்தல் வேண்டும்.<br><br>பிரதம நிறைவேற்று அதிகாரியும் பிரதம நிதியியல் அதிகாரியும் கணக்காய்வுக் குழு கூட்டங்களில் சமூகமளித்தல் வேண்டும்.<br><br>கணக்காய்வுக் குழுவின் தலைவர் அல்லது ஒரு அங்கத்தவர் ஒரு தொழில்சார் கணக்கீட்டு அங்கத்தின் அங்கத்தவராக இருத்தல் வேண்டும். | ✓<br><br>✓<br><br>✓ | சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 162 to 163 |
| 7.10.6(b) | கணக்காய்வுக் குழுவின் கடமைகள் | • பட்டியலிடல் விதிகளின் பிரிவு 7.10 இல் கோடிட்டுக் காட்டப்படல் வேண்டும். | ✓ | சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 162 to 163 |
| 7.10.6(c) | கணக்காய்வு தொடர்பான ஆண்டறிக்கையிலான வெளிப்படுத்தல் | a) கணக்காய்வுக் குழுவில் உள்ளடங்கியுள்ள பணிப்பாளர்களின் பெயர்கள்<br>b) கணக்காய்வாளர்களது சுயாதீனத்தன்மையில் கணக்காய்வுக் குழுவானது ஒரு தீர்மானத்தினை மேற்கொள்வதுடன் அத்தகைய தீர்மானத்திற்கான அடிப்படை<br>c) கணக்காய்வுக் குழுவின் அறிக்கையொன்று குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். | ✓<br>✓<br>✓ | சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 162 to 163 |
| 9.3.2 | தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு | a) மீள் இடம்பெறாத தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரங்கள்<br>b) மீள் இடம்பெறும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரங்கள்<br>c) தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவின் அறிக்கை<br>d) தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விதிகளுடனான ஒரு உறுதிமொழி இணக்கப்பாட்டு கூற்றாக பணிப்பாளர் சபையின் பிரகடனம் அல்லது இல்லாவிடின் எதிர்மறையான ஒரு கூற்று | ✓<br>✓<br>✓<br>✓ | நிதியாண்டு 2021/22 இல் வாயில் நிலையெல்லையினை விஞ்சிய தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் காணப்படவில்லை<br>நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 55.5<br>தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவின் அறிக்கை<br>கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை | 314<br>166 to 167<br>161 |

## 1.11 இணைப்பு II: இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் 2017 வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவையுடனான இணக்கப்பாடு

கோவையின் தேவைப்பாடுகள் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் கலந்துரையாடப்பட்டுள்ளன. இங்கு நாம் அறிக்கைக்கான பொருத்தமான குறிப்பீடுகளை வழங்கியுள்ளோம்.

| கோவை குறிப்பீடு | தேவைப்பாடு | இணக்கப்பாடு | அறிக்கையினுள்ளான குறிப்பீடு | பக்கம் |
|---|---|---|---|---|
| A | பணிப்பாளர்கள் | | | |
| A.1 | ஒரு பயனுறுதிமிக்க சபை கம்பனியினை இயக்குதல், வழிநடத்துதல் மற்றும கட்டுப்படுத்தல் வேண்டும். | | | |
| A.1.1 | வழக்கமான சபைக் கூட்டங்கள் சபைக்கு ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் வழக்கமான அடிப்படையில் தகவல்களை வழங்குகின்றது. | ✓ | கூட்டங்கள் மற்றும் வருகை | 134 |
| A.1.2 | சபையின் பங்களிப்புகள் மற்றும் பொறுப்புக்கள் | ✓ | ஆளுகை வரம்புறுகை | 125 |
| A.1.3 | நாட்டின் சட்டங்களுக்கமைய செயற்படுதல்<br>சுயாதீன தொழில்சார் ஆலோசனையினை வேண்டுதல் | ✓ | இணக்கப்பாடு<br>அறிவுபூர்வமான தீர்மானம் மேற்கொள்ளல் | 124 to 155 |
| A.1.4 | கம்பனி காரியதரிசியின் ஆலோசனை மற்றும் சேவைகளுக்கான அணுக்கம் | ✓ | கம்பனி காரியதரிசி | 129 |
| A.1.5 | சுயாதீன தீர்மானம் | ✓ | சபையின் தொகுப்பு | 128 |
| A.1.6 | சபை மற்றும் கம்பனியின் விடயங்களுக்கு போதுமான நேரம் மற்றும் முயற்சிகளை அர்ப்பணித்தல் | ✓ | கூட்டங்கள் மற்றும் வருகை | 134 |
| A.1.7 | ஆகக்குறைந்தது பணிப்பாளர்களின் 1/3 இனால் தீர்மானங்களை அழைத்தல் | ✓ | கூட்டங்கள் மற்றும் வருகை | 133 |
| A1.8 | சபை தொகுத்தறிவு மற்றும் பயிற்சி | ✓ | அறிவுபூர்வமான தீர்மானம் மேற்கொள்ளல் | 135 |

| கோவை குறிப்பீடு | தேவைப்பாடு | இணக்கப்பாடு | அறிக்கையினுள்ளான குறிப்பீடு | பக்கம் |
|---|---|---|---|---|
| A.2 | தலைவர் மற்றும் பி.நி.அ. | ✓ | தெளிவான பங்களிப்பும் பொறுப்புக்களும் | 131 |
| A.3 | நல்ல கூட்டாண்மை ஆளுகையினை பாதுகாப்பதில் தலைவரின் பங்களிப்பு | ✓ | தெளிவான பங்களிப்பும் பொறுப்புக்களும் | 131 |
| A.4 | நிதியியல் மதிநுட்பத்தின் கிடைக்கக்கூடியதன்மை | ✓ | சபையின் தொகுப்பு | 128 |
| A.5 | சபையின் சமநிலை | ✓ | சபையின் தொகுப்பு | 128 |
| A.5.1 | சபையானது போதுமான எண்ணிக்கையிலான NEDs களை உள்ளடக்குதல் வேண்டும் | ✓ | சபையின் தொகுப்பு | 128 |
| A.5.2 | சபை 3 NEDs களை மாத்திரம் உள்ளடக்கியிருப்பின் அவர்கள் சுயாதீனமாயிருத்தல் வேண்டும். | பொருத்தமற்றது | | |
| A.5.3 | பணிப்பாளர்களின் சுயாதீனத்துவம் | ✓ | பணிப்பாளர் சுயாதீனம் | 128 |
| A.5.4 | பணிப்பாளர்களின் வருடாந்த சுயாதீன பிரகடனம் | ✓ | பணிப்பாளர் சுயாதீனம் | 129 |
| A.5.5 | NEDs களின் சுயாதீனத்தின் வருடாந்த தீர்மானம் | ✓ | பணிப்பாளர் சுயாதீனம் | 129 |
| A.5.6 | மாற்றீட்டு பணிப்பாளர்கள் | பொருத்தமற்றது | | |
| A.5.7 & A.5.8 | சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர்கள் | ✓ | தெளிவான பங்களிப்பும் பொறுப்புக்களும் | 131 |
| A.5.9 | SID க்கள் NEDs உடனான வருடாந்த கூட்டம் | ✓ | கூட்டங்கள் மற்றும் வருகை | 134 |
| A.5.10 | சபை செயற்குறிப்பில் உடன்பாடின்மையினை பதிவுசெய்தல் | ✓ | கூட்டங்கள் மற்றும் வருகை | 133 |
| A.6 | தகவல்களது வழங்கல் | ✓ | அறிவுபூர்வமான தீர்மானம் மேற்கொள்ளல் | 135 |
| A.7 | சபைக்கான நியமனங்கள் மற்றும் மீள்-தெரிவு | ✓ | சபை புத்துணர்ச்சி | 132 |
| A.7.1 | பெயரிடல் குழு, தலைவர் மற்றும் வரையறை நியதிகளை நிறுவுதல் | ✓ | பெயரிடல் குழுவின் அறிக்கை | 168-169 |
| A.7.2 | சபையின் தொகுப்பிலான வருடாந்த மதிப்பீடு | ✓ | சபை புத்துணர்ச்சி/ சபை மதிப்பீடு | 132, 135 |
| A.7.3 | புதிய பணிப்பாளர்களது நியமனத்திலான வெளிப்படுத்தல்கள் | ✓ | கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை | 158 |
| A.8 | மீள்-தெரிவு/மீள்-நியமனம் ஆகியவற்றிற்கு பணிப்பாளர்கள் தங்களை சமர்ப்பித்தல் | ✓ | கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை | 158 |
| A.9 | சபை மற்றும் உப குழுக்களின் செயற்திறன் மதிப்பாய்வு | ✓ | சபை மற்றும் உப குழுவின் மதிப்பீடு | 135 |
| A.10 | பணிப்பாளர்கள் தொடர்பான குறிப்பிட்ட தகவல்களை ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தல் | ✓ | சபையின் சுயவிபரம்<br>கூட்டங்கள் மற்றும் வருகை<br>ஏனைய கம்பனிகளிலான பணிப்பாளர் பதவி<br>உப குழுக்களிலான அங்கத்துவம் | 117-120<br>134<br>117-120<br>134 |
| A.11 | பி.நி.அ. இன் மதிப்பீடு | ✓ | பி.நி.அ. / பொ.மு. இன் மதிப்பீடு | 135 |
| **B.** | **பணிப்பாளர்களது வேதனம்** | | | |
| B.1 | நிறைவேற்றுநர் மற்றும் பணிப்பாளர் வேதனத்திலான கொள்கையினை விருத்தி செய்வதற்காக செயல்முறையினை நிறுவுதல் | | நியாயமான வேதனத்திற்கு பொறுப்பாளி<br><br>2021/22 நிதியாண்டில் கம்பனியில் நிறைவேற்று பணிப்பாளர்கள எவரும் இருக்கவில்லை எனவே, தலைவர் மற்றும் / அல்லது பி.நி.அ./ பொ.மு இனை கலந்தாலோசிக்கவேண்டிய தேவை எழவில்லை. | 136 |
| B.2 | வேதனத்தினை சமமாக்குதல் மற்றும் முழுமையாக்கல் | ✓ | நியாயமான வேதனத்திற்கு பொறுப்பாளி | 136 |
| B.3 | வேதனம் தொடர்பாக ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தல்கள்<br>• வேதனக் கொள்கைக் கூற்று<br>• செலுத்தப்பட்ட மொத்த சபை வேதனம் | ✓ | <br>• ம.வ. மற்றும் வேதனக் குழு<br>நியாயமான வேதனத்திற்கு பொறுப்பாளி | <br>164 - 165<br>136 |
| **C** | **பங்குதாரர்களுடனான உறவு** | | | |
| C.1. | ஆ.பொ.கூ. மற்றும் ஏனைய பொது கூட்டங்களின் ஆக்கபூர்வமான பயன்பாடு | ✓ | ஆண்டுப் பொதுக் கூட்டங்களின் (ஆ.பொ.கூ.) ஆக்கபூர்வமான பயன்பாடு | 138 |
| C.2. | பங்குதாரர்களுடனான தொடர்பாடல் | ✓ | கூட்டாண்மை ஆளுகை - பங்குதாரர்களுடனான தொடர்பாடல் | 138 |

# கூட்டாண்மை ஆளுகை

| கோவை குறிப்பீடு | தேவைப்பாடு | இணக்கப்பாடு | அறிக்கையினுள்ளான குறிப்பீடு | பக்கம் |
|---|---|---|---|---|
| C.3 | பாரிய மற்றும் பொருண்மையான கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படுத்தல் | ✓ | இவ்வாண்டில், 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 185 இல் வரையறை செய்துள்ளவாறு கம்பனியின் தேறிய சொத்துத் தளத்தினை பொருண்மையாக பாதிக்கக்கூடிய எவ்விதமான பாரிய அல்லது பொருண்மையான கொடுக்கல் வாங்கல்கள் காணப்படவில்லை. | |
| **D.** | பொறுப்புக்கூறல் மற்றும் கணக்காய்வு | | | |
| D. 1 | கம்பனியின் நிதி நிலைமை, செயற்திறன் மற்றும் வாய்ப்புக்களில் ஒரு சமநிலையான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய மதிப்பீட்டினை முன்னிலைப்படுத்தல் | ✓ | கூட்டாண்மை ஆளுகை - பங்குதாரர்களுடனான தொடர்பாடல் | 138 |
| D1.1 | சமநிலையான ஆண்டறிக்கை | ✓ | கூட்டாண்மை ஆளுகை - பங்குதாரர்களுடனான தொடர்பாடல் | 138 |
| D.1.2 | சமநிலையான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய தொடர்பாடல் | ✓ | பங்குதாரர்களுடனான உறவுகள் | 138 |
| D.1.3 | பி.நி.அ. / பி.நி.அ. இன் பிரகடனம் | ✓ | பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரியின் பொறுப்புக்கள் கூற்று | 204 |
| D.1.4 | பணிப்பாளர்களது அறிக்கை பிரகடனங்கள் | ✓ | குழுமத்தின் விடயங்களிலான பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை | 156 -161 |
| D.1.5 | நிதி அறிக்கையிடல் - சபை பொறுப்புக்களிலான கூற்று,<br><br>உள்ளகக் கட்டுப்பாட்டிலான கூற்று | ✓ | நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்பு<br><br>உள்ளகக் கட்டுப்பாட்டிலான பணிப்பாளர்களின் கூற்று | 200-201<br><br>203 |
| D.1.6 | முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு | ✓ | மூலதன அறிக்கைகள் | 44-113 |
| D.1.7 | தேறிய சொத்துக்கள் < 50% | ✓ | குழுமத்தின் தேறிய சொத்துக்கள் பங்குதாரர்களின் நிதியத்தின் 50% இலும் பார்க்க வீழ்ச்சியடையும் அசாதாரணமான நிலையில், சபையானது நிலைமையினை பங்குதாரர்களுக்கு அறிவிப்பதற்காகவும் எடுக்கப்படும் சீரமைப்பு நடவடிக்கைகளை விளக்குவதற்காகவும் ஒரு விசேட பொதுக் கூட்டத்தினை (வி.பொ.கூ.) அழைத்தல் வேண்டும். | |
| D.1.8 | தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் அறிக்கை | ✓ | குழுமத்துடனான ஒப்பந்தங்களின் பணிப்பாளர்களது அக்கறை | 159,<br>166-167 |
| D.2. | பங்குதாரர்களது முதலீடுகளையும் கம்பனியின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு இடர் முகாமைத்துவம் மற்றும் ஒரு திடமான உள்ளகக் கட்டுப்பாட்டின் செயல்முறை | ✓ | கணக்காய்வுக் குழுவின் இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு<br>பணிப்பளர்களது உள்ளகக் கட்டுப்பாடுகளின் கூற்று<br>இடர் மீளாய்வு | 162-163<br>203<br>176 -195 |
| D.3. | கணக்காய்வுக் குழு | ✓ | கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 162 -163 |
| D.4 | தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு | ✓ | தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவின் அறிக்கை | 166-167 |
| D.5 | வணிக நடத்தை விதிக்கோவை மற்றும் நெறிமுறைகள் | ✓ | நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகள் | 137 |
| D.6 | கூட்டாண்மை ஆளுகை வெளிப்படுத்தல்கள் | ✓ | கூட்டாண்மை ஆளுகை அறிக்கை | 124 -155 |
| **E/F** | நிறுவன மற்றும் ஏனைய முதலீட்டாளர்கள் | | | |
| | நிறுவன மற்றும் ஏனைய முதலீட்டாளர்கள், | ✓ | பங்குதாரர்களுடனான உறவுகள் | 138 |
| G. | இணையத்துடனான சாதனங்களின் இணைப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு | ✓ | தகவல் தொழில்நுட்பம் மற்றும் சைபர் பாதுகாப்பு | 136 |
| H | நிலைபேறுள்ள அறிக்கையிடலுக்கான கொள்கைகள் | ✓ | பங்குதாரர் பெறுமதியினை வழங்குதல் | 138 |

## நிதி வணிகச் சட்டக் கம்பனிகள் பணிப்புரையுடனான இணக்கப்பாடு

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2008 இன் 3 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரை மற்றும் பின்வருவனவற்றில் குறிப்பிட்டுள்ளவாறு அதனிலான திருத்தங்கள், 2008 இன் 4 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கூட்டாண்மை ஆளுகை - திருத்தம்) பணிப்புரை, 2013 இன் இலக்கம் 06 மற்றும் 2020 இன் இலக்கம் 05 என்பனவவற்றுடனான இணக்கப்பாடு. கம்பனியானது கூட்டாண்மை ஆளுகையினை (31.12.2021 திகதியிடப்பட்ட 2021 இன் பணிப்புரை இலக்கம் 05) மனமுவந்து கடைப்பிடித்துள்ளதுடன் 2021 இன் பணிப்பரை 05 இன் நில ஏற்பாடுகளுடனும் செயற்திறனாக இணக்கப்பாட்டினை கண்டுள்ளது.

| விதி குறிப்பீடு | | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|---|
| A | | பணிப்பாளர்கள் சபையின் பொறுப்புக்கள் | |
| 2 (1) | | கம்பனியின் பாதுகாப்பு மற்றும் நன்னிலையினை பலப்படுத்துதல் | |
| | | சபையின் பொறுப்புக்கள் கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. சபையானது கம்பனியின் அலுவல்களையும் அதன் பாதுகாப்பு மற்றும் நன்னிலையினை முகாமைப்படுத்துவதற்கு பொறுப்பாளியாகும். | |
| | a) | மூலோபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை விழுமியங்களை அங்கீகரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் | ✓ |
| | | கம்பனியின் மூலோபாய குறிக்கோள்கள் கம்பனியின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்குக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன மற்றும் கம்பனியின் விழுமியங்கள், அனைத்து மட்டத்திலுமான பணியாட்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன, வணிக நடத்தை விதிக்கோவை மற்றும் நெறிமுறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>வணிக நடத்தை விதிக்கோவையினைப் பொறுத்தளவில், வெளிப்படைத்தன்மை, தரம் மற்றும் நேர்மை போன்ற விழுமியங்கள் கம்பனியினால் அதன் செயற்பாட்டு மற்றும் நிர்வாக சூழலில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு அமைவாக அத்தகைய நேர்மையினை பாதுகாக்கின்றது.<br><br>கம்பனியின் மூலோபாய குறிக்கோள்களை நிறுவுவதில் சபையானது ஓர் துடிப்பான பங்கினை வகிப்பதுடன், கம்பனியின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்கினை செயலாற்றலாக மாற்றுவதில் முன்னிறுத்தம் செய்வதனை உறுதிப்படுத்துகின்றது.<br><br>சபையானது குறித்த இலக்குகள் /குறிக்கோள்களை அமுலாக்குவதற்கான பொறுப்பினை கம்பனியின் முகாமைத்துவத்திற்கு ஒப்படைத்துள்ளவேளை, சபை கம்பனியின் செயற்திறன், இலக்குகள் என்பவற்றை தொடர்ச்சியாக கண்காணித்து மற்றும் மீளாய்வு செய்து ஏதேனும் பின்னடைவுகள் இனங்காண்பதிலும் செயற்திறனுடன் காணப்படுகின்றது. | |
| | b) | இடர் கொள்கை மற்றும் முகாமைத்துவ செயல்முறைகள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த வணிக மூலோபாயத்தினை அங்கீகரித்தல் | ✓ |
| | | 2021 - 2026, ஐந்து வருட வணிக மூலோபாயமானது (கூட்டாண்மை மூலோபாயத் திட்டம்) மார்ச் 2021 இல் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. மூலோபாயம் மற்றும் அதன் நிறைவேற்றல் சபையினால் தவறாது மீளாய்வு செய்யப்படுகின்றது. வணிக மூலோபாயத்திலிருந்து பெறப்பட்டுள்ள வருடாந்த பாதீடானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டு மாதாந்தம் கண்காணிக்கப்படுகின்றது.<br><br>கம்பனியின் ஒட்டுமொத்த இடர் மூலோபாயத்தினை சபை அங்கீகரித்ததுடன் இடர் ஆர்வம், கொள்கைகள் மற்றும் இடர் முகாமைத்துவ வரம்புறுகை மற்றும் பொறிமுறைகளையும் தீர்மானித்தது. கூட்டாண்மை மூலோபாயத் திட்டமானது கம்பனியின் ஒட்டுமொத்த இடர் மூலோபாயத்துடன் ஒருநிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இங்கு மூலதன ஒதுக்கம் போன்ற பிரிவுகளில் இடர் ஆர்வம் கருத்திலெடுக்கப்படுவதுடன் இடர் மட்டங்களை அளவிடுவதற்கு இடர் அணியும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இடர் முகாமைத்துவ கொள்கை வரம்புறுகையில் பொதிந்துள்ள ஆளுகை மற்றும் இணக்கப்பாடு என்பனவும் மூலோபாயத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், வரையறை உட்பட்ட நேரத்தினுள் அமுலாக்கல் மைற்கற்களுடன் இடர் முகாமைத்துவ செயல்முறைகள் மற்றும் பொறிமுறைகள் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினால் (ச.ஒ.இ.மு.கு.) அங்கீகரிக்கப்பட்டு வழக்கமான அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றது. | |
| | c) | இடர் முகாமைத்துவம் | ✓ |
| | | சபை முழுவதுமாக கம்பனியின் ஒட்டுமொத்த இடர் வரம்புறுகைக்கு பிரதானமாக பொறுப்பாளியாயுள்ளது. சபையின் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது இடர்களை இனங்கண்டு இடர்களை விவேகமாக முகாமைப்படுத்துவதற்கான பொருத்தமான முறைமைகளை அமுல்படுத்துவதனை உறுதிசெய்வதுடன் ஒரு காலாண்டு அடிப்படையில் சபைக்கு அறிக்கையிடுகின்றது.<br><br>கம்பனியின் இடர் முகாமைத்துவத்திற்கு சபையானது ஒட்டுமொத்த பொறுப்பினை ஏற்கின்றது.<br><br>இது தொடர்பில் பின்வரும் அறிக்கைகள் மேலும் உள்நோக்கினை வழங்குகின்றன:<br><br>இடர் முகாமைத்துவம் - பக்கங்கள் 176 முதல் 195 வரை.<br>சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை - பக்கங்கள் 170 முதல் 172 வரை | |
| | d) | பங்குதாரர்களுடனான தொடர்பாடல் | ✓ |
| | | அதன் பங்காளிகளுடனான இருவழித் தொடர்பின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு, சபையானது ஒரு விரிவான கூட்டாண்மை தொடர்பாடல் கொள்கையினை கடைப்பிடித்துள்ளதுடன் இது பங்குதாரர்கள், வைப்பீட்டாளர்கள், கடன் வழங்கியோர்கள், வழங்குநர்கள் போன்ற வெளிவாரி தரப்பினர்கள் மற்றும் உள்ளகத்தே மற்றும் ஏனைய தொடர்புடைய பங்காளிகளுடனான தொடர்பாடல்களை ஆளுகை செய்கின்றது. | |

# கூட்டாண்மை ஆளுகை

| விதி குறிப்பீடு | | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|---|
| | e) | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகள் (மு.த.மு.) ஆகியவற்றினை மீளாய்வு செய்தல் | |
| | | கம்பனியானது போதுமையான மட்டத்திலான உள்ளகக் கட்டுப்பாடுகளை பராமரித்தல் மற்றும் அதன் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்தல் என்பற்றை உறுத்செய்வதற்கான ஒட்டுமொத்த பொறுப்பினை சபை கொண்டுள்ளது.<br><br>சபையின் சார்பில் சபை கணக்காய்வுக் குழு மற்றும் ச.ஒ.இ.மு.கு. ஆகியன உள்ளகக் கட்டப்பாடுகளை விரிவாக கண்காணித்தல் மற்றும் மீளாய்வுசெய்வதனை பொறுப்பேற்பதுடன், ஒரு காலாண்டு அடிப்படையில் அதன் கண்டுபிடிப்புகளை சபைக்கு அறிக்கையிடுகின்றது.<br><br>முகாமைத்துவ தகவல் முறைமைகள் (மு.த.மு.) சபையினால் அதன் துல்லியத்தன்மை மற்றும் நேர்மைக்காக சபையினால் மீளாய்வு செய்யப்படுவதுடன் இது கம்பனியின் மு.த.மு, செயல்முறை கையேடு திட்டவரை / வழிகாட்டியின் மீளாய்வினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. | |
| | f) | முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் (மு.மு.ஆ.) | ✓ |
| | | பணிப்பாளர்கள் சபை, பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள், நிதிப் பிரிவின் தலைமை மற்றும் இணக்கப்பாட்டு அதிகாரி ஆகியோர் கம்பனியின் மு.மு.ஆ. ஆக இனங்காணப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்கள். | |
| | g) | சபை மற்றும் மு.மு.ஆ. இனருக்கான அதிகாரம் மற்றும் பொறுப்பு | ✓ |
| | | பணிப்பாளர்கள் சபை மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பிரதான கடமைகள் கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரதி பொது முகாமையாளர்களின் முக்கிய கடமைகள் / பொறுப்புக்கள் சபையினால் வரையறை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது உரிய தொழில் விபரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.<br><br>பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும பிரதி பொது முகாமையாளர்கள் ஆகியோரின் உரிய ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்புகளும் சபையினால் வரையறை செய்யப்பட்டுள்ளன. | |
| | h) | மு.மு.ஆ. இனால் கம்பனியின் அலுவல்களிலான மேற்பார்வை | ✓ |
| | | கம்பனியின் அலுவல்கள் ஒரு மாதாந்த அடிப்படையில் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்படுகின்றன. இந்த கூட்டங்களில், மு.மு.ஆ. இனர் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதுடன் இவர் குறித்த இலக்குகளுக்கு எதிராக கம்பனியின் செயற்பாடுகள் மற்றும் செயற்திறனை சபைக்கு எடுத்துரைக்கின்றார்.<br><br>முகாமைத்துவ மட்டத்திலும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் கம்பனியின் அலுவல்கள் மீளாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்படுகின்றன. | |
| | i) | ஆளுகை நடைமுறைகளின் பயனுறுதித்தன்மையினை மதிப்பீடு செய்தல் | ✓ |
| | | கம்பனியின் அகவிதியும் கூட்டாண்மை ஆளுகை சாசனமும் கம்பனியின் பணிப்பாளர்களது தெரிவு மற்றும் நியமனத்திற்கு பிரயோகிக்கப்படவேண்டிய பொது செயல்முறையினை வழங்குகின்றது. தற்போது, நிறைவேற்றுநரல்லா சுயாதீன பணிப்பாளர்கள் தவிர்ந்த, கம்பனியின் பணிப்பாளர்கள் தாய் நிறுவனமான மக்கள் வங்கியினால் பரிந்துரைக்கப்படுவதுடன் முறைமைப்படுத்தல் அனுமதியுடன் சபையினால் நியமிக்கப்படுகின்றார்கள். மு.மு.ஆ. இன் நியமனங்கள், முறைமைப்படுத்தல் அங்கீகாரத்திற்கு உட்பட்டு பிரதம நிறைவேற்று அதிகாரியின் பரிந்துரையின் பேரில் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>முரண்பாட்டு நலன்களது முகாமைப்படுத்தலானது உரிய நேரத்தில் விளித்துரைக்கப்படுகின்றது. வணிக நடத்தை விதிக்கோவை மற்றும் நெறிமுறைகளைப் பொறுத்தளவில் சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் தனிப்பட்ட உறவுகளிலிருந்து எழுகின்ற ஒரு சாத்தியமான அல்லது மெய்யான முரண்பாட்டு நலனைக் கொண்டிருக்கின்றார்களா என்று தீர்மானிக்கும் பொறுப்பினைக் கொண்டிருப்பதுடன் வெளிவாரி இணைப்புகள் மற்றும் பொருண்மையான விடயங்களிலான நலன்கள் அவரது சுயாதீன தீர்மானத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். கலந்துரையாடப்படும் ஒரு விடயத்தில் ஒரு நலனைக் கொண்டுள்ள பணிப்பாளர்கள் அதிலான தங்களது நலனை வெளிப்படுத்தி அவ்விடயத்திலான கலந்தாராய்விலிருந்தும் அதிலான வாக்கெடுப்பிலிருந்தும் விலகியிருத்தல் வேண்டும்.<br><br>சபைக்கு நியமிக்கும்போது பணிப்பாளர்களிடமிருந்து சாத்தியமான முரண்பாட்டு நலன்கள் குறித்து சுய பிரகடனங்கள் பெறப்படுவதுடன் பின்னர் வருடாந்தம் இது பெறப்படுகின்றது. இந்த பிரகடனங்களுடன் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் வெளிப்படுத்தப்படும் நலன்களும் கம்பனிக்கு முரண்பாடுகளை ஒரு பயனுறுதியுள்ள விதத்தில் முகாமைப்படுத்துவதற்கு துணைபுரிகின்றது.<br><br>சபையின் செயற்திறன், அதன் பலவீனங்களிலான தீர்மானம், அக்கறைகள் உள்ளடங்கலான சபையின் சொந்த ஆளுகை நடைமுறைகளின் பயனுறுதித்தன்மை மற்றும் தேவையான மாற்றங்களை அமுல்படுத்துதல் என்பன வருட இறுதியில் சபையினால் கலந்தாலோசிக்கப்பட்டு தீர்மானிக்கப்படுகின்றன. இது வருடாந்த சுய மதிப்பிடல்களின் சமர்ப்பிப்புக்களைத் தொடர்ந்து இடம்பெறுகின்றது. சபையானது நிதி ஆண்டு 2021/22 க்கான அதன் சுய மதிப்பிடல்களை மார்ச் 2022 இல் மேற்கொண்டது. | |

| விதி குறிப்பீடு | | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|---|
| | j) | மு.மு.ஆ. இன் தொடர்வுத் திட்டம் | ✓ |
| | | மு.மு.ஆ, இற்கான சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்வுத் திட்டம் காணப்படுகின்றது. மேலும், நடைமுறையிலுள்ள தொடர்வுத் திட்டத்தின் மற்றும் கம்பனியின் எதிர்காலத் தேவைகளின் அடிப்படையில் ஒரு ஆற்றல் தேக்கத்தின் இனங்காணலானது கருதப்பட்டு ஒரு தேவை அடிப்படையில் தொடர்வுத் திட்டத்தினுள் மீள்வடிவமைக்கப்படுகின்றது. | |
| | k) | மு.மு.ஆ. உடனான வழக்கமான கூட்டங்கள் | ✓ |
| | | சபையானது பி.நி.அ./பொ.மு. இனால் வழிநடத்தப்படும் கூட்டாண்மை முகாமைத்துவக் குழு / சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் ஒரு திடமான உறவினை பராமரிக்கின்றது. பி.நி.அ./பொ.மு. கூட்டாண்மை குறிக்கோள்களை அடைவதற்கான கொள்கைகள், மூலோபாயங்கள், செயல்முறைகள் ஆகியவற்றை உருவாக்குவதில் சபைக்கு துணைபுரிகின்றார். முகாமைத்துவமானது சபையுடன் திறந்த மற்றும் வெளிப்படைத்தன்மையாய இருப்பதுடன் அனைத்து முக்கிய விடயங்களையும் அதன் கவனத்திற்கு கொண்டு வருகின்றது.<br><br>மேலும், பொருத்தமானவிடத்து, கொள்கைகளை மீளாய்வு செய்வதற்கு, தொடர்பாடல்களை நிறுவுவதற்கு மற்றும் கூட்டாண்மை குறிக்கோள்கள் நோக்கிய முன்னேற்றத்தினை கண்காணிப்பதற்காக மு.மு.ஆ. சபை மற்றும் உப குழுக்களின் கூட்டங்களுக்கு வரவேற்கப்படுகின்றார்கள்.<br><br>மேலும், தலைவர் / சபை அங்கத்தவர்கள் மு.மு.ஆ. இனரை சிரேஷ்ட முகாமைத்துவ கூட்டங்கள் அல்லது மூலோபாய கூட்டங்களில் சந்திக்கின்றார்கள். | |
| | l) | முறைமைப்படுத்தல் சூழலினைப் புரிந்துகொள்ளுதல் | ✓ |
| | | சபையானது குழுமத்தின் விழுமியங்கள், வணிகம், செயற்பாடுகள், நிதி அலுவல்கள், ஆளுனை வரம்புறுனை மற்றும் கம்பனியின் மூலோபா நிலைமை குறித்து நன்குணர்ந்துள்ளது.<br><br>பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கூட்டாண்மை ஆளுகையிலான மாற்றங்களில் வழக்கமான இற்றைப்படுத்தல்களுடன் குழுமம் மற்றும் அதன் செயற்பாடுகளை பாதிக்கக்கூடிய துறையின் அபிவிருத்திகள் என்பற்றுடன் பொருளாதாரம், சமூக மற்றும சூழல் தோற்றங்கள் உள்ளடங்கலான பரந்த தலைப்புகளை உள்ளடக்கி பொருத்தமானவாறு ஒவ்வொரு கூட்டத்திலும் சபைக் குழுக்களுக்கும் முழு சபைக்கும் வழங்கப்படுகின்றது.<br><br>முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளின் உள்ளடக்கத்தின் சுருக்கம் மற்றும் பொருத்தமான விகிதாசாரங்கள் என்பன ஒரு வழக்கமான அடிப்படையில் சபைக்கு முறைமைப்படுத்தல் சூழல் தொடர்பாக கம்பனியின் நிலைகுறித்தான அவர்களது விழிப்புணர்விற்காக சமர்ப்பிக்கப்படுகின்றன. | |
| | m) | வெளிவாரி கணக்காய்வாளர்களின் அமர்த்தல் மற்றும் மேற்பார்வை | ✓ |
| | | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 55 இன் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அவர்கள் கம்பனியின் வெளிவாரி கணக்காய்வாளராவார். கணக்காய்வாளர் அதிபதி அவர்கள் நட்வர் ஏர்ன்ஸ்ட் அன்ட் யங், பட்டயக் கணக்காளர்களை 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வினை செயலாற்றுவதற்கு துணைபுரிவதற்காக, இலங்கை சனநாயக சோசலிச குடியரவின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (4) (a) இன் ஏற்பாடுகளின் கீழ் நியமித்துள்ளார். | |
| 2 (2) | | தலைவர் மற்றும் பி.நி.அ. இன் நியமனம் மற்றும் அவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிர்ணயம் செய்தல். | ✓ |
| | | சபையானது தலைவரையும் பிரதம நிறைவேற்று அதிகாரியினையும் நியமித்துள்ளது. அவர்களது பங்களிப்புகள் வேறுபாடுடையதாகும் என்பதுடன் அவை கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளன. | |
| 2 (3) | | பணிப்பாளர்களினால் சுயாதீன தொழில்சார் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுதல் | ✓ |
| | | கூட்டாண்மை ஆளுகை சாசனமானது பணிப்பாளர்கள் கம்பனி காரியதரிசியிடமிருந்து ஆலோசனையினை பெற்றுக்கொள்ளலாம் மற்றும் அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பான விடயங்களில் கம்பனியின் செலவில் ஏனைய தொழில்சார் சுயாதீன ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம். 2021/22 நிதியாண்டில் சபையானது அவர்களது பொறுப்புக்களை மேற்கொள்வதில் துணைபுரிவதற்காக வெளிவாரி தொழில்வல்லுநர்களின் ஆலோசனையினைப் பெற்றுள்ளது. | |
| 2 (4) | | முரண்பாட்டு நலனை முகாமைப்படுத்தல் | ✓ |
| | | கம்பனியின் வணிக நடத்தை விதிக்கோவை மற்றும் நெறிமுறைகளின் பிரகாரம், சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் தனிப்பட்ட உறவுகளிலிருந்து எழுகின்ற ஒரு சாத்தியமான அல்லது மெய்யான முரண்பாட்டு நலனைக் கொண்டிருக்கின்றார்களா என்று தீர்மானிக்கும் பொறுப்பினைக் கொண்டிருப்பதுடன் வெளிவாரி இணைப்புகள் மற்றும் பொருண்மையாள விடயங்களிலான நலன்கள் அவரது சுயாதீன தீர்மானத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். கலந்துரையாடப்படும் ஒரு விடயத்தில் ஒரு நலனைக் கொண்டுள்ள பணிப்பாளர்கள் அதிலான தங்களது நலனை வெளிப்படுத்தி அவ்விடயத்திலான கலந்தாராய்விலிருந்தும் அதிலான வாக்கெடுப்பிலிருந்தும் விலகியிருத்தல் வேண்டும். தீர்மானங்களிலான அத்தகைய விலகியிருத்தல்கள் கம்பனி காரியதரிசியினால் முறையாக செயற்குறிப்புகளில் பதிவுசெய்யப்படுகின்றன. | |
| 2 (5) | | சபைக்காக குறிப்பாக ஒதுக்கப்பட்ட விடயங்களின் முறையான அட்டவணை கிடைக்கப்பெறுதல். | ✓ |
| | | கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை சாசனமானது சபைக்கு அதன் தீர்மானத்திற்கான குறிப்பாக ஒதுக்கப்பட்ட ஒரு முறையான அட்டவணையினை உள்ளடக்குகின்றது. | |

# கூட்டாண்மை ஆளுகை

| விதி குறிப்பீடு | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|
| 2 (6) | சாத்தியமான கடன்தீர்வுத்திறன் சிக்கல்களை வெளிப்படுத்தல் | ✓ |
| | 2021/22 வருடத்தில் அத்தகைய சூழல் எதுவும் எழவில்லை. மேலும், கம்பனியின் திரவத்தன்மை நிலைமையானது ஒரு வாராந்த அடிப்படையில் வங்கிகளல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிக்கையிடப்படுகின்றது. | |
| 2 (7) | ஆண்டறிக்கையில் பணிப்புரையுடனான இணக்கப்பாட்டில் கூட்டாண்மை ஆளுகை அறிக்கை பிரசுரிக்கப்படுகின்றது. | ✓ |
| | சபையானது கம்பனியின் ஆண்டறிக்கையில் பணிப்புரையின் இணக்கப்பாடு குறித்து ஒரு வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கையினை உள்ளடக்குகின்றது. | |
| 2 (8) | பணிப்பாளர்களின் சுய மதிப்பீடுகள் | ✓ |
| | ஒவ்வொரு பணிப்பாளரும் வருடாந்தம் சுய மதிப்பீட்டினை பொறுப்பேற்பதற்கான ஒரு திட்டத்தினை சபையானது கடைப்பிடித்துள்ளது. இச்செயல்முறையானது கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய, சபையானது அதன் செயற்திறன் மற்றும் அதன் கடப்பாடுகளில் ஒரு விரிவான மதிப்பீட்டினை மார்ச் 2022 இல் மேற்கொண்டது.<br><br>சபை மற்றும் சபைக் குழுக்களின் ஒவ்வொரு அங்கத்தவரும் தங்களது பயனுறுதித்தன்மையில் ஒரு சுய மதிப்பீட்டினை மேற்கொண்டார்கள்.<br><br>சபை மதிப்பீடுகளின் முழுமையான விளைவுகள் கம்பனி காரியதரிசியினால் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஜுன் 2022 இல் சபைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது. | |
| B | சபையின் கூட்டங்கள் | |
| 3 (1) | கிரமமான சபை கூட்டங்கள் | ✓ |
| | சபைக் கூட்டங்கள் வழக்கமாக மாதாந்த இடைவெளிகளில் இடம்றெுவதுடன், குறுகிய இடைவெளிகளில் கூட்டங்களை கூட்டுவதற்காக வணிக அவசரங்கள் அவசியப்பட்டாலொழியவாகும்.<br><br>சபையானது 2021/22 நிதியாண்டில் 12 தடவைகள் கூடியதுடன் சுற்றறிக்கை மூலமான சபையின் சம்மதம் 08 சந்தர்ப்பங்களில் மாத்திரமே பெறப்பட்டது. | |
| 3 (2) | பணிப்பாளர்கள் நிகழ்சி நிரலில் விடயங்கள் மற்றும் பிரேரணைகளை உள்ளடக்குதல் வேண்டும் | ✓ |
| | வழக்கமான கூட்டங்களின் நிகழ்ச்சி நிரலில் வணிகத்தின் ஊக்குவிப்பு மற்றும் இடரின் முகாமைத்துவம் என்பவற்றுக்காக பிரேரணைகளை உள்ளடக்குவதற்கு அனைத்து பணிப்பாளர்களுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இதற்கு பிரயோகிக்கப்படும் செயல்முறையானது கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| 3 (3) | சபைக் கூட்டங்களின் அறிவித்தல் | ✓ |
| | சபைக் கூட்டங்களின் திகதிகள் முன்கூட்டியே அங்கத்தவர்களினால் உடன்பாடு காணப்படுவதுடன் அவை வருடாந்த கூட்ட அட்டவணையில் உள்ளடக்கப்பட்டு முன்னைய நிதியாண்டு நிறைவடைவதற்கு முன்னர் சுற்றனுப்பப்படுகின்றது. முறையான கூட்ட அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல் மற்றும் கூட்டத்திற்கான சபை பத்திரங்கள் பொதுவாக கூட்டம் நடைபெறுவதற்கு ஏழு (7) நாட்கள் முன்னதாக அனுப்பிவைக்கப்படுவதுடன் இது அங்கத்தவர்களுக்கு கூட்டத்தில் கலந்துகொள்வதற்கும் ஆவணங்களை வாசிப்பதற்கும போதுமையான நேரத்தினை வழங்குகின்றது. அவசரமான சபை பத்திரங்கள் ஒரு அவசர அடிப்படையில் தலைவரிடமிருந்தான சம்மதத்துடன் உள்ளடக்கப்படுகின்றது. .<br><br>வேறு ஏதேனும் விசேட சபை கூட்டங்களுக்கு நியாயமான அறிவித்தல் வழங்கப்படுகின்றன. | |
| 3 (4) | சபைக் கூட்டங்களிலான பணிப்பாளர்களின் வருகை | ✓ |
| | 2021/22 வருடத்தில் இடம்பெற்ற 12 சபை கூட்டங்களில் பணிப்பாளர்களின் வருகை கிட்டத்தட்ட 100% ஆகும். எந்தவொரு பணிப்பாளரும் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருக்கவில்லை.<br><br>சபைக் கூட்டங்களிலான வருகையானது பக்கம் 134 இல் வழங்கப்பட்டுள்ளது. | |
| 3 (5) | ஒரு கம்பனி காரியதரிசியின் நியமனம் | ✓ |
| | போதுமான அனுபவமுடைய ஒரு பட்டய காரியதரிசி கம்பனியின் காரியதரிசியாக சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.<br><br>கம்பனி காரியதரிசி சபைக்கு ஆலோசனை வழங்குவதுடன் கம்பனிகள் சட்டம் தொடர்பான விடயங்களில், சபை நடைமுறைகள் மற்றும் ஏனைய பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்துகின்றார். | |
| 3 (6) | நிகழ்ச்சி நிரலினை தயாரிக்கும் கடமையினை கம்பனி காரியதரிசியின் பொறுப்பில் ஒப்படைத்தல். | ✓ |
| | சபை கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிக்கும் செயற்பாட்டினை தலைவர் கம்பனியின் காரியதரிசிக்கு ஒப்படைத்துள்ளதுடன் இதன்பிரகாரம் அதற்கு கம்பனி காரியதரிசி பொறுப்பாளியாவார். | |
| 3 (7) | கம்பனி காரியதரிசியின் ஆலோசனை மற்றும் அவரின் சேவைக்கான அணுக்கம். | ✓ |
| | கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் வழங்கியுள்ளவாறு, அனைத்து பணிப்பாளர்களும் தொழில்ரீதியான ஒரு பட்டயக் காரியதரிசியான கம்பனி காரியதரிசிக்கான அணுக்கத்தினைக் கொண்டுள்ளார்கள். | |

| விதி குறிப்பீடு | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|
| 3 (8) | சபைக் கூட்டங்களில் நிகழ்ச்சிக்குறிப்புகளை பராமரித்தல் | ✓ |
| | கம்பனி காரியதரிசி சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகளை போதுமான விபரங்களுடன் பராமரிக்கின்றார் மற்றும் கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் குறிப்பிட்டுள்ள செயல்முறைகளுக்கேற்ப எந்தவொரு பணிப்பாளராலும் பரிசீலிக்கப்படுவதற்கு கிடைக்கக்கூடியதாயுள்ளது. | |
| 3 (9) | போதுமான விபரங்களுடன் சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சிக்குறிப்புகளை பதிவுசெய்தல் | ✓ |
| | கம்பனி காரியதரிசி கூட்டங்களின் நடவடிக்கைகளை பதிவுசெய்வதுடன் இந்த விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தேவைப்பாடுகளை திருப்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட தீர்மானங்களை போதுமான விபரங்களுடன் பதிவுசெய்கின்றது. | |
| C | சபையின் தொகுப்பு | |
| 4 (1) | சபையிலுள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை | ✓ |
| | வருடத்தின் ஆரம்பத்தில் சபையில் ஒன்பது (9) பணிப்பாளர்கள் இருந்தார்கள். திரு. சுதர்சன் ஹாங்கம 24 ஆகஸ்ட் 2021 முதல் பதவி விலகினார். 2021/22 இன் இறுதியில் சபையில் எட்டு (8) பணிப்பாளர்கள் காணப்பட்டதுடன் இது தேவைப்பாட்டுடன் இணங்கியுள்ளது. | |
| 4 (2) | ஒரு பணிப்பாளரின் சேவைக்காலம் | ✓ |
| | 2021//22 காலத்தில் அனைத்து பணிப்பாளர்களதும் சேவைக்காலம் ஒன்பது வருடங்களுக்குக் குறைவாக இருந்தது. | |
| 4 (3) | பணியாள் ஒருவரை பணிப்பாளராக நியமித்தல், தெரிவுசெய்தல் அல்லது பெயரிடல் | ✓ |
| | கம்பனியில் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் எவரும் இல்லை. | |
| 4 (4) | சபையின் சமநிலை மற்றும் சுயாதீனத்திற்கான வரன்முறை | ✓ |
| | நிதியாண்டு 2021/22 இல் சபையானது 3 நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களைக் கொண்டிருந்ததுடன் இந்த விதியில் குறிப்பிட்டுள்ளவாறு சுயாதீனத்திற்கான மூன்றில் ஒன்று வரன்முறையினை சந்தித்துள்ளது.<br><br>சுயாதீனத்தினை தீர்மானிக்கும் வரன்முறையினை பணிப்பாளர்கள் திருப்திப்படுத்துவதுடன் இது பணிப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் சுய பிரகடனங்கள் படிவங்களின் அடிப்படையில் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது. | |
| 4 (5) | மாற்றாள் பணிப்பாளர் | ✓ |
| | இவ்வருடத்தில் மாற்றாள் பணிப்பாளர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. | |
| 4 (6) | நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களின் திறன்கள் மற்றும் அனுபவங்கள் ஒரு புறநிலையான கருத்தினை கொண்டு வருதல் | ✓ |
| | பல்வேறு துறைகளில் கல்விசார்ந்த மற்றும் தொழில்சார் தகமைகளையுடைய நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களை மாத்திரம் சபையானது உள்ளடக்கியுள்ளது. அவர்களது கலந்த திறன்கள் மற்றும் வணிக அனுபவங்கள் சபையின் முறையான செயற்பாட்டிற்கும் அதன் கடப்பாடுகளுக்கும் ஒரு பாரிய பங்களிப்பாகும். | |
| 4 (7) | சபை கூட்டங்களிலான குறைநிறைவெண் | ✓ |
| | 2021/22 ஆண்டில் கம்பனியின் அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள் ஆதலால், இவ்வருடத்தில் கூட்டப்பட்ட சபையின் அனைத்து கூட்டங்களிலும் தேவையான குறைநிறைவெண் (பணிப்பாளர்களினல் அரைவாசி நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள்) சந்திக்கப்பட்டது. | |
| 4 (8) | கூட்டாண்மை ஆளுகை தொடர்பாடல் மற்றும் ஆண்டறிக்கையில் சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள் மற்றும் சபையின் தொகுப்பினை வெளிப்படுத்துதல் | ✓ |
| | அனைத்து கூட்டாண்மை தொடர்பாடல்களிலும் கம்பனியின் பணிப்பாளர்களது பெயர்கள் உள்ளடக்கப்படுவதனால் சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள் இதன்மூலம் இனங்காணப்படுகின்றார்கள். | |
| 4 (9) | புதிய பணிப்பாளர்களை நியமிப்பதற்கான முறையான மற்றும் வெளிப்படையான செயல்முறை | ✓ |
| | கம்பனியின் அகவிதியும் கூட்டாண்மை ஆளுகை சாசனமும் பொதுவாக கம்பனியின் பணிப்பாளர்களின் தெரிவு மற்றும் நியமனத்திற்கான செயல்முறையினை வழங்குகின்றது. பெயரிடப்பட்டவர்கள் கம்பனியின் பணிப்பாளர்களாக நியமிக்கப்படுவதற்கு “பொருத்தமும் தகுதியும்” வாய்ந்தவர்கள் என்று கருதப்படும் பட்சத்தில் இதற்காக இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்படுகின்றது.<br><br>இவ்வாண்டில் எந்த புதிய நியமனங்களும் மேற்கொள்ளப்படவில்லை. | |
| 4 (10) | ஒரு தற்காலிக வெற்றிடத்தினை நிரப்புவதற்காக நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களை மீள் தெரிவு செய்தல் | ✓ |
| | கம்பனியின் அகவிதியின் உறுப்புரை 27 (2) இன் பிரகாரம் அனைத்து பணிப்பாளர்களும், தற்காலிக வெற்றிடத்தினை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் உள்ளடங்கலாக, அவர்களது நியமனத்தினைத் தொடர்ந்து வரும் முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் மீள் தெரிவிற்கு உட்பட்டதாகும்.<br><br>இவ்வாண்டில் எவ்விதமான தற்காலிக வெற்றிடங்களும் நிரப்பப்படவில்லை. | |

# கூட்டாண்மை ஆளுகை

| விதி குறிப்பீடு | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கப்பாட்டின் நிலை |
|---|---|---|
| 4 (11) | பணிப்பாளர்களின் பதவி விலகல்கள் / பதவி நீக்கம் தொடர்பான வெளிப்படுத்தல் | ✓ |
| | பணிப்பாளர்களது அனைத்து பதவி விலகல்கள் / பதவி நீக்கங்கள் மற்றும் நியமனங்கள் என்பன உடனடியாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான அறிவித்தலூடாக போதுமான விபரங்களுடன் பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இது பொருத்தமான ஒழுங்குவிதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் ஆகும்.<br><br>இவ்வருடத்தில் ஒரு (1) பதவி விலகல் காணப்பட்டது. | |
| D | பணிப்பாளர்களின் பொருத்தம் மற்றும் தகுதி | |
| 5 (1) | நாணயச் சபையின் முன்னனுமதியினை தவிர பணிப்பாளர்களது வயது 70 வருடங்களை விஞ்சலாகாது. (இது 18/16/2023 இல் நிறைடையும் மூன்று ஆண்டுகள் காலப்பகுதிக்கு பொருத்தமானதாகும்) | ✓ |
| | 70 வயதிற்கு மேற்பட்ட பணிப்பாளர்கள் எவரும் இல்லை. | |
| 5 (2) | 20 கம்பனிகளுக்கு மேல் பதவி வகித்தல் | ✓ |
| | எந்தவொரு பணிப்பாளரும் 20 கம்பனிகளுக்கு மேல் பணிப்பாளராக பதவி வகிக்கவில்லை. | |
| E | கடமைகளின் ஒப்படைப்பு | |
| 6 (1) | சபை கடமைகளின் ஒப்படைப்பு | ✓ |
| | கம்பனியின் அமைப்பு அகவிதி இன் உறுப்புரை 29 (2) இன் பிரகாரம், சபையானது பொருத்தமான சட்டங்களுக்கேற்ப ஒப்படைப்பதற்கு அனுமதிக்கப்படும் சபைக்கு வழங்கப்பட்ட ஏதேனும் அதிகாரங்களை ஒரு பணிப்பாளர்கள் குழுவிற்கு அல்லது பொருத்தமானது எனக் கருதும் யாரேனும் நபருக்கு ஒப்படைப்பதற்கான அதிகாரத்தினை சபை கொண்டுள்ளது.<br><br>இதன் பிரகாரம், சபையானது அதிகாரத்தினை சபைக் குழுக்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் தெளிவாக வரையறை செய்யப்பட்ட பணிப்பாணைகள் மற்றும் அதிகாரங்களுடன், அதன் பொறுப்புக்கூறலை பாதுகாக்கும் வேளை, ஒப்படைத்துள்ளது. | |
| 6 (2) | ஒரு காலாகால அடிப்படையில் சபையின் கடமைகளது ஒப்படைப்பின் மீளாய்வு | ✓ |
| | பொருத்தமான வரையறைகள் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக, அதிகாரத்தின் ஒப்படைப்பு வரம்புறுகையானது சபையினால் காலாகாலம் மீளாய்வு செய்யப்படுகின்றது. இது நிறுவனத்தின் பருமன் மற்றும் அதன் குறிப்பிட்ட செயற்பாட்டு சூழமைவு என்பவற்றை கணக்கிலெடுத்ததாகும். | |
| F | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி | |
| 7 (1) | தலைவர் மற்றும் பி.நி.அ. இன் பங்குகளின் வேறாக்கல் | ✓ |
| | கம்பனியின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் (பி.நி.அ.) பதவிகள் வேறானதாகும் என்பதுடன் இது அதிகாரம் மற்றும் ஆணையின் சமநிலையினை உறுதிப்படுத்துகின்றது. | |
| 7 (2) | தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளராக காணப்படாதவிடத்து ஒரு சுயாதீன நிறைவேற்றநரல்லா பணிப்பாளரை சிரேஷ்ட பணிப்பாளராக நியமித்தல் | |
| | தாய் நிறுவனமான மக்கள் வங்கியின் தலைவர் பதவியினை வகிப்பதன் மூலம் தலைவர் ஒரு நிறைவேற்றுநரல்லா பணிப்பாளராகக் கருதப்படுகின்றார்.<br><br>எனவெ, ஒரு சுயாதீன நிறைவேற்றநரல்லா பணிப்பாளரான செல்வி. கொரலி பியட்டர்ஸ் கம்பனியின் தற்போதைய சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளராக கடமையாற்றுகின்றார். | |
| 7 (3) | தலைவர். பி.நி.அ. மற்றும் சபையின் அங்கத்தவர்களுக்கிடையேயான உறவுகளை வெளிப்படுத்துதல் | ✓ |
| | அவர்களால் பிரகடனம் செய்யப்பட்டவாறு, நிதியியல், குடும்பம் உள்ளடங்கலாக அல்லது தலைவர்/பி.நி.அ. மற்றும் /அல்லது சபையின் ஏனைய அங்கத்தவர்களுக்கிடையே ஏனைய பொருண்மையான உறவுகள் ஒன்றும் காணப்படவில்லை. இவை அவர்களது உரிய பங்கினை வலுக்குன்றச் செய்யும். | |
| 7 (4) | தலைவரின் பங்கு | ✓ |
| | கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை சாசனம் தலைவரது பொறுப்புக்களை குறிப்பிடுவதுடன் இது சபைக்கு தலைமை தாங்குவதுடன் அதன் வினைத்திறனான செயலாற்றலையும் உள்ளடக்குகின்றது. | |
| 7 (5) | சபைக் கூட்டங்களின் நிகழ்சி நிரலினை தயாரிப்பதில் தலைவரின் பங்கு | ✓ |
| | நிகழ்ச்சி நிரலினை தயாரிக்கும் கடமையானது தலைவரினால் சபையின் காரியதரிசிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | |
| 7 (6) | சபைக் கூட்டங்களில் எழக்கூடிய சிக்கல்கள் குறித்து போதுமான மற்றும் நேரத்துடன் அனைத்து பணிப்பாளர்களும் அறிவிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல். | ✓ |
| | அனைத்து பணிப்பாளர்களுக்கும் நிகழ்ச்சி நிரல் மற்றும் சபையின் பத்திரங்களது சமர்ப்பிப்பின் மூலம் சபைக் கூட்டத்தில் எழக்கூடிய சிக்கல்கள் குறித்து முறையாக அறிவிக்கப்படுவதுடன் ஒரு கூட்டத்திற்கு முன்னர் அவர்களது பார்வையிடலுக்கு போதுமான நேரம் வழங்கப்படுவதனையும் தலைவர் உறுதிசெய்கின்றார். | |

| விதி குறிப்பீடு | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|
| 7 (7) | சபையின் அலுவல்களுக்கு ஒரு செயற்திறனான பங்களிப்பை மேற்கொள்ளுமாறு அனைத்து பணிப்பாளர்களும் ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள. | ✓ |
| | சபையின் கலந்தாராய்வுகளின் நிகழ்ச்சிநிரல், தோரணை மற்றும் தொனியினை தலைவர் நிறுவுவதுடன் தீர்மானம் மேற்கொள்வதில் அனைத்து பணிப்பாளர்களது அபிப்பிராயங்களும் பொருத்தமானவாறு கருதப்படுவதனை உறுதிசெய்வதுடன், இதன் மூலம் சபையின் அலுவல்களுக்கு தனித்தனி பணிப்பாளர்களின் செயற்திறனான பங்களிப்பு ஊக்குவிக்கப்படுகின்றது. | |
| 7 (8) | நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களின் பங்குபற்றல் மற்றும் நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களுக்கிடையேயான உறவுகளை ஊக்குவித்தல் | ✓ |
| | கம்பனி நிறைவேற்று பணிப்பாளர்கள் எவரையும் கொண்டிருக்கவில்லை. .<br><br>இருந்தபோதிலும், மொத்தமாக சபையின் அங்கத்தவர்களிடையே ஒரு ஆக்கபூர்வமான உறவு காணப்படுவதனை தலைவர் உறுதிப்படுத்துவதுடன் இது சபையின் அலுகல்களில் அனைத்து பணிப்பாளர்களும் செயற்திறனுடன் பங்குபற்றுவதற்காக ஒரு சமமான வாய்ப்பினை வழங்குவதினாலாகும்.<br><br>இந்தச் செயல்முறையானது சபையின் வருடாந்த சுய மதிப்பிடல்களூடாக மேலும் பலப்படுத்தப்படுவதுடன் இங்கு சபையின் மற்றும் அதன் குழுக்களின் செயற்திறன் தொடர்பாக அனைத்து பணிப்பாளர்களின் கருத்துக்களுக்கும் ஆதரவு கோரப்படுகின்றது. | |
| 7 (9) | மு.மு.ஆ. இல் நேரடியான மேற்பார்வையினை உள்ளடக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுதலை அல்லது தலைவரினானல் நிறைவேற்று கடமைகள் மேற்கொள்ளப்படுவதனை தவிர்த்தல் | ✓ |
| | தலைவர் ஒரு நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் என்பதுடன் அவர் கம்பனியின் எந்தவிதமான நிறைவேற்று கடமைகளிலோ அல்லது மு.மு.ஆ. இன் நேரடி மேற்பார்வையிலோ ஈடுபடுவதில்லை. | |
| 7 (10) | பங்குதாரர்களுடனான வினைத்திறனான தொடர்பாடல் | ✓ |
| | பங்குதாரர்களுடன் ஆக்கபூர்வமான உறவுகளைப் பராமரிப்பதற்கு சபையானது கணிசமானளவு முக்கியத்துவத்தினை இணைப்பதுடன் கம்பனி மற்றும் பங்குதாரர்களிடையே கலந்துரையாடல் மற்றும் தொடர்பாடலுக்கு ஒரு முறையான வாய்ப்பாக ஆ.பொ.கூ. மற்றும் பொதுக் கூட்டங்கள் கருதப்படுகின்றன. இதன் பிரகாரம், இந்தக் கூட்டங்கள் சபை பங்குதாரர்களை சந்திப்பதற்கான பிரதான வாய்ப்பினை வழங்குவதுடன் பங்குதாரர்கள் சபை மற்றும் முகாமைத்துவத்திற்கு கொண்டுவரும் விடயங்களை தெளிவுபடுத்தவும் தலைவர் கம்பனியின் முன்னேற்றத்தினை விளக்குவதற்குமான ஒரு வாய்ப்பாகும். | |
| 7 (11) | பிரதம நிறைவேற்று அதிகாரியின் பங்கு (பி.நி.அ.) | ✓ |
| | பி.நி.அ./பொ.மு., கம்பனியின உச்சநிலை நிறைவேற்றுநருக்கு கம்பனியின் மூலோபாயக் குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகளை விரிவாக திட்டமிடுவதற்கும் அமுலாக்குவதற்குமான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மற்றும் பொருத்தமான இடர் வரைகூறுகளுடன் ஏற்றவாறு கம்பனியின் நாளாந்த செயற்பாடுகளை நடாத்துவதற்காகும். கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை சாசனத்தில் பி.நி.அ. / பொ.மு. இனது பங்குகள் விளக்கப்பட்டுள்ளன. | |
| **G** | **சபை நியமிக்கப்பட்ட குழுக்கள்** | |
| 8 (1) | சபை குழுக்களை நிறுவுதல் மற்றும் அதன் செயற்பாடுகள் மற்றும் அறிக்கையிடல் | ✓ |
| | கம்பனியானது சபைக்கு நேரடியாக அறிக்கையிடும் நான்கு கட்டாய சபை நியமிக்கப்பட்ட குழுக்களைக் கொண்டுள்ளதுடன், இது நிதியாண்டின் இறுதியில் 2021 இன் 05 ஆம் இலக்க புதிய கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையின் கடைப்பிடித்தலின் விளைவாக ஐந்தாக காணப்படுகின்றது.<br><br>• சபை கணக்காய்வுக் குழு (ச.க.கு.),<br>• சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (ச.ஒ.இ.மு.கு),<br>• ம.வ., வேதனம் மற்றும் பெயரிடல் குழு (ம.வ.பெ.கு) 2021 இன் 05 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையின் பிரகாரம், இது மனமுவந்து கடைப்பிடிக்கப்பட்டது, (27.01.2022 முதல் நிறைவடைந்தது), ம.வ., வேதனம் மற்றும் பெயரிடல் குழுவின் கடமைகள் பின்வருமாறு இரண்டு உப குழுக்களுக்கு மீள் ஒதுக்கப்பட்டன<br>  - ம.வ. மற்றும் வேதனக் குழு (27.01.022 முதல்)<br>  - பெயரிடல் குழு (27.01.2022 முதல்)<br>• தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு (தொ.த.கொ.வா.மீ.கு).<br><br>இந்த கட்டாய உப குழுக்கள் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க நிறுவப்பட்டன.<br><br>மேலும், கம்பனியானது பின்வரும் சபை உப குழுக்களை ஒரு மனமுவந்த அடிப்படையில் சிறந்த செயற்பாடு / கண்காணித்தல் வினைத்திறனுக்காக உருவாக்கியுள்ளது.<br><br>• சபை முதலீட்டுக் குழு<br>• சபை கடன் குழு<br><br>ஒவ்வொரு குழுவும் ஒரு காரியதரிசியினைக் கொண்டுள்ளதுடன் இவர் கூட்டங்களை ஒழுங்குசெய்தல், நிகழ்ச்சிக் குறிப்புகளை பராமரித்தல், ஏனைய காரியதரிசி செயற்பாடுகளை பதிவுசெய்தல் மற்றும் மேற்கொள்ளல் என்பவற்றுடன் இது உரிய குழுக்களின் தலைவரின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றன. | |

# கூட்டாண்மை ஆளுகை

| விதி குறிப்பீடு | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|
| 8 (2) | **கணக்காய்வுக் குழு** | |
| a) | கணக்காய்வுக் குழுவின் தலைவர் | ✓ |
| | கணக்காய்வுக் குழுவின் தலைவரான செல்வி கொரலி பியட்டர்ஸ் 1 மார்ச் 2020 முதல் ஒரு நிறைவேற்றுநரல்லா சுயாதீன பணிப்பாளராக சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் இணை அங்கத்தவர் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் சக அங்கத்தவரும் ஆவார்.<br><br>தனியார் துறை மற்றும் பொதுத் துறையில் பல கைத்தொழில்துறைகளில் கணக்காய்வு, நிதி மற்றும் கணக்கீட்டில் சிரேஷ்ட மட்டத்தில் 25 வருடங்களுக்கும் மேலான பரவலான அனுபவம் நிறைந்தவராவார். | |
| b) | கணக்காய்வுக் குழுவின் தொகுப்பு | ✓ |
| | சபை கணக்காய்வுக் குழுவின் மூன்று அங்கத்தவர்களும் நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள், இதில் இரண்டு பேர் சுயாதீனமானவர்கள். | |
| c) | வெளிவாரி கணக்காய்வாளர்களின் நியமனம் | ✓ |
| | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும் அல்லது கணக்காய்வாளர் அதிபதி அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் ஒரு நபரினால் மேற்கொள்ளப்படலாம் என கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் கம்பனிக்கு அறிவித்துள்ளார். மேலும் நட்வர் ஏர்ன்ஸ்ட் அன்ட் யங், பட்டயக் கணக்காளர்கள் 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வினை செயலாற்றுவதில் கணக்காய்வு தலைமை அதிபதி அவர்களுக்கு துணையளிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளதனையும் கணக்காய்வுக் கட்டணத்தையும் கம்பனிக்கு அறிவித்துள்ளார்.<br><br>எனவே, வெளிவாரி கணக்காய்வாளரை ஈடுபடுத்துவதில் குழுவிற்கு எவ்விதமான பங்களிப்பும் இல்லை.<br><br>சபை கணக்காய்வுக் குழு அதன் கூட்டங்களில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நியமங்களின் பிரயோகத்தினை கலந்துரையாடுகின்றது. | |
| d) | வெளிவாரி கணக்காய்வாளரது சுயாதீனத்தன்மை மற்றும் புறநிலைத்தன்மை மற்றும் கணக்காய்வு செயல்முறையின் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் | ✓ |
| | அரசயலிமைப்பின் கீழ் கம்பனியின் கணக்காய்வாளர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களாவார். எனவே இந்த தேவைப்பாடு எழவில்லை. | |
| e) | வெளிவாரி கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு அல்லாத சேவையினை வழங்குதல் | ✓ |
| | கம்பனியின் கணக்காய்வாளர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகையால் இது பொருந்தாது. எவ்வாறாயினும், ஒரு கணக்காய்வு நிறுவனத்தினால் (கம்பனியின் கணக்காய்வில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு துணைபுரிவதற்காக அவரால் நியமிக்கப்பட்டவர்) வழங்கப்படும் கணக்காய்வு அல்லாத சேவைகள் அந்த நிறுவனத்தின் சுயாதீனம் மற்றும் புறநிலைத்தன்மையினை வலுக்குன்றலடையச் செய்யாது என்பதை உறுதிப்படுத்துவதற்காக குழுவினால் ஒரு கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. | |
| f) | வெளிவாரி கணக்காய்வின் வரையெல்லையினை தீர்மானித்தல் | ✓ |
| | கணக்காய்வின் வரையெல்லை மற்றும் விஸ்தீரணம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் தீர்மானிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் குழுவானது இந்த நோக்கத்திற்காக வெளிவாரி கணக்காய்வாளர்களை சந்தித்தது. | |
| g) | கம்பனியின் நிதியியல் தகவல்கள் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. | ✓ |
| | கம்பனியினது நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய நிதியியல் வெளிப்பாடுகளின் நேர்மையினை கண்காணிப்பதற்காக கம்பனியின் நிதியியல் தகவல்களை சபை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்கின்றது.<br><br>சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் வெளிப்படுத்தலுக்காக தயாரிக்கப்பட்ட கம்பனியின் வருடாந்த மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்களை குழு மீளாய்வு செய்தது. | |
| h) | இடைக்கால மற்றும் இறுதி கணக்காய்வுகளிலிருந்து எழுகின்ற சிக்கல்கள், பிரச்சனைகள் மற்றும் சந்தேகங்கள் வெளிவாரி கணக்காய்வாளருடன் கலந்துரையாடப்படல் | ✓ |
| | மீளாய்வாண்டில், சபை கணக்காய்வுக் குழுவானது வெளிவாரி கணக்காய்வாளர்களைச் சந்தித்ததுடன், முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் பிரசன்னமின்றி கணக்காய்வுகளிலிருந்து எழுகின்ற பொருண்மையான சிக்கல்கள், பிரச்சனைகள் அல்லது சந்தேகங்களை கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. | |
| i) | வெளிவாரி கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதம் மற்றும் முகாமைத்துவத்தின் மறுமொழியின் மீளாய்வு | ✓ |
| | இவ்வாண்டில், சபை கணக்காய்வுக் குழு வெளிவாரி கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் மறுமொழியினை மீளாய்வு செய்தது. | |

| விதி குறிப்பீடு | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|
| j) | உள்ளகக் கணக்காய்வு செயற்பட்டின் மீளாய்வு | ✓ |
| | குழுவானது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் வரையெல்லை, செயற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமையினை மீளாய்வு செய்ததுடன், பிரிவானது அதன் கடமையினை செய்வதற்கு அவசியமான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது என திருப்திப்படுகின்றது.<br><br>குழுவானது உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுச் செயல்முறையின் விளைவுகளை மீளாய்வு செய்தததுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பரிந்துரைகளில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது.<br><br>சபையானது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைமை மற்றும் சிரேஷ்ட பணியாட்களின் செயற்திறனை மதிப்பீடு செய்கின்றது.<br><br>மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைமை, சிரேஷ்ட பணியாட்கள் அல்லது வெளிக்கள சேவை வழங்குநர்களின் எவ்வித நியமனமோ அல்லது பணி நீக்கங்களோ இடம்பெறவில்லை.<br><br>உள்ளகக் கணக்காய்வு செயற்பாடானது சுயாதீனமானதுடன் அவர்கள் நேரடியாக சபை கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடுகின்றார்கள். இவ்வருடத்தில் மீளாய்வு செய்யப்பட்ட உள்ளகக் கணக்காய்வுச் சாசனமானது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் சுயாதீனத்தன்மையினை விளித்துரைக்கின்றது. அமுலிலுள்ள உள்ளகக் கணக்காய்வுச் சாசனமானது கணக்காய்வுச் செயற்பாடானது பாகுபாடின்றி, தொழில்முறை தரத்துடன் மற்றும் தொழில்சார் கவனத்துடன் செயலாற்றப்படுவதனை உறுதிசெய்கின்றது. | |
| k) | உள்ளகப் புலனாய்வுகளின் பாரிய கண்டுபிடிப்புகள் மற்றும் முகாமைத்துவத்தின் மறுமொழி | ✓ |
| | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் சபை கணக்காய்வுக் குழுவானது பாரிய கணக்காய்வு கண்டுபிடிப்புகளையும் அதனிலான முகாமைத்துவ மறுமொழியினையும் மீளாய்வு செய்து கருதுகின்றது. | |
| l) | கணக்காய்வுக் குழு கூட்டங்களின் பங்குபற்றுநர்கள் | ✓ |
| | பிரதம உள்ளக கணக்காய்வாளரும் பிரதம நிதி அதிகாரியும் குழுவின் கூட்டங்களில் பங்குபற்றுகின்றார்கள். பிரதம நிறைவேற்று அதிகாரி, இணக்கப்பாட்டு அதிகாரி மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் குழுவின் வரவேற்பின் பேரில் ஏனைய ஆளணியினரும் கூட்டங்களில் பங்குபற்றுகின்றார்கள். சபை கணக்காய்வுக் குழு யாரேனும் நிறைவேற்று பணிப்பாளர்களைக் கொண்டிருப்பதில்லை. | |
| m) | கணக்காய்வுக் குழுவின் அதிகாரம் மற்றும் வளங்கள் | ✓ |
| | சபை அங்கீகரிக்கப்பட்ட குழுவின் வரையறை நியதிகள் அதன் வரையறை நியதிகளினுள் ஏதேனும் விடயத்தினுள் புலனாய்வினை மேற்கொள்வதற்காக வெளிப்படையான அதிகாரத்தினை, அதற்கு தேவையான வளங்களையும், தகவல்களுக்கான முழு அணுகத்தினையும் வெளிவாரி தொழில்சார் ஆலோசனையினை பெறுவதற்காக அதிகாரத்தினையும் வழங்குகின்றது. | |
| n) | கணக்காய்வுக் குழுவின் கூட்டங்கள் | ✓ |
| | மீளாய்வு நிதியாண்டில் சபை கணக்காய்வுக் கழு 12 (பன்னிரண்டு) தடவைகள் கூடியது. | |
| o) | ஆண்டறிக்கையிலான வெளிப்படுத்தல் | ✓ |
| | சபை கணக்காய்வுக் குழு விபரங்களை அறிக்கையிடுகின்றது.<br>• இவ்வாண்டில் சபை கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள்<br>• வருடத்தில் இடம்பெற்ற சபை கணக்காய்வு குழு கூட்டங்களின் எண்ணிக்கை<br>• குழுவின் கூட்டங்களில் அங்கத்தவர்களின் வருகை<br><br>குழுவின் மேலதிக தகவல்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு பக்கங்கள் 162 முதல் 163 வரை காணப்படும் "சபை கணக்காய்வுக் குழு அறிக்கையினை" பார்வையிடவும். | |
| p) | கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகளை பதிவுசெய்தல் மற்றும் பராமரித்தல் | ✓ |
| | வரையறை நியதிகளுக்கமைய கணக்காய்வுக் குழுவின் தலைமை சபை கணக்காய்வுக் குழுவின் காரியதரிசியாக செயற்படுவதுடன் அனைத்து கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகளை போதுமான விளக்கத்துடன் பராமரிக்கின்றது. | |

# கூட்டாண்மை ஆளுகை

| விதி குறிப்பீடு | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|
| q) | உட்குறை உரைத்தல் கொள்கை மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களுடனான உறவு | ✓ |
| | கம்பனியின் பணியாட்கள் இரகசியத்துடன் சாத்தியமான முறைகேடுகள் பற்றிய அக்கறைகளை எழுப்புவதற்கான ஏற்பாடுகளை குழு மீளாய்வு செய்தது.<br><br>உட்குறை உரைப்பவர் பாதுகாப்பு கொள்கையானது பணியாட்கள் சபை கணக்காய்வுக் குழுவுக்கு இரகசியமாக சட்டங்கள். விதிகள், ஒழுங்குவிதிகளிலான மீறுகைகள் அல்லது நெறிமுறையற்ற நடத்தையினை அறிக்கையிடுவதனை இயலுமையாக்குகின்றது. மீறுகைகளை அறிக்கையிடுபவர்களின் இரகசியத்தன்மையானது உறுதிப்படுத்தப்படுவதுடன் அவர்கள் எந்தவிதமான பாரபட்சமான நடவடிக்கைக்கும் உட்படவில்லை. இக் கொள்கையானது கம்பனியின் அக இணையத்தில் அனைத்து பணியாட்களின் தகவலுக்காக பிரசுரிக்கப்படுகின்றது.<br><br>கணக்காய்வுக் குழுவானது வெளிவாரி கணக்காய்வாளருடனான கம்பனியின் உறவுகளை மேற்பார்வை செய்வதற்கான முக்கிய பிரதிநிதித்துவ அங்கமாகும் என்பதுடன் இந்த கடமையினை நிறைவேற்றுவதற்காக வெளிவாரி கணக்காய்வாளர்களை சந்தித்தது. | |
| **8 (3)** | **ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு** | |
| a) | ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் தொகுப்பு | ✓ |
| | மீளாய்வாண்டில், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முனாமைத்துவக் குழு மூன்று நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களையும் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர், சி.பி.பொ.மு.- செயற்பாடுகள் (வலயம் 1) மற்றும் பி.பொ.மு. இடர் மற்றும் கட்டுப்பாடு ஆகியோரை உள்ளடக்கியதுடன் இது கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு மற்றும் மூலோபாய இடர்கள் போன்ற பரவலான இடர் வகைகளை மேற்பார்வை செய்கின்றது.<br><br>ஏப்ரல் 2022 இல் ச.ஒ.இ.மு.கு. இன் வ.நி. கள் 2021 இன் 05 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரைக்கு ஒத்ததாக சீரமைக்கப்பட்டது. குழுவின் அங்கத்துவமானது இதன்பிரகாரம் மூன்று நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களை குழுவின் அங்கத்தவர்களாக வரையறை செய்தும் பி.நி.அ./பொ.மு., பி.பொ.மு.-இடர் மற்றும் கட்டுப்பாடு உள்ளடங்கலாக ஏனைய அதிகாரிகள் வரவேற்பின் பேரில் பங்குபற்றுநர்களாகவும் திருத்தியமைக்கப்பட்டது.<br><br>உள்ளகக் கணக்காய்வின் தலைமை, துணை நிறுவனங்களின் முக்கிய இடர் உடைமையாளர்கள் மற்றும் இணக்கப்பாட்டு அதிகாரியும் வரவேற்பின் பேரில் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு கூட்டங்களில் சமூகமளித்திருந்தார்கள்.<br><br>குழுவின் மேலதிகத் தகவல்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு பக்கங்கள் 170 முதல் 172 வரை காணப்படும் “சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கையினை” பார்க்கவம். | |
| b) | இடர் மதிப்பீடு | ✓ |
| | ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அனைத்து இடர்களையும் மதிப்பீடு செய்கின்றது, அதாவது, கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு மற்றும் கம்பனி மற்றும் துணைக் கம்பனிகளுக்கு நிறுவப்பட்ட பொருத்தமான இடர் குறிகாட்டிகளூடாக மூலோபாய இடர்களையும் மதிப்பீடு செய்கின்றது. எங்கெங்கு சாத்தியமோ அங்கு கம்பனி அடிப்படையிலும் குழும அடிப்படையிலும் இடர் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் இடர் முகப்பு அறிக்கைகள் / இடர் குறிகாட்டி அறிக்கைகள் என்பவற்றை மீளாய்வு செய்து, நிறுவப்பட்ட இடர் சகிப்பு மட்டங்களை அத்தகைய இடர்கள் விஞ்சும்போது குறிப்பிட்ட இடர்களின் எதிர்மறையான விளைவினை குறைப்பதற்காக திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. | |
| c) | நிறைவேற்று மட்டத்திலான அனைத்து குழுக்களினதும் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்தல் | ✓ |
| | கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவானது (சொ.பொ.கு.) ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினால் நிறுவப்பட்ட இடர் சகிப்பு மட்டங்களின் (இடர் வரம்புகள்) அடிப்படையில் திரவத்தன்மை இடர் மற்றும் சந்தை இடரினை மீளாய்வு செய்து கண்காணிக்கின்றது.<br><br>முகாமைத்துவக் கடன் குழுவானது (மு.க.கு.) கடன் வசதிகள், கடன் நிர்வாகம் மற்றும் கடன் செயல்முறைகள் தொடர்பான செயல்முறைகளது மீளாய்வு மற்றும் பரிந்துரைத்தல் / அங்கீகாரம் என்ற நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டதாகும்.<br><br>குழுவானது சொ.பொ.கு மற்றும் மு.க.கு. ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் போதுமை மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்ததுடன் இது வரையறை நியதிகளுக்கு எதிராக செயலாற்றப்பட்ட வருடாந்த சுய மதிப்பீடுகளை மீளாய்வு செய்வதன் மூலம் இடம்பெறுகின்றது. | |

| விதி குறிப்பீடு | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|
| d) | குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விவேகமான மட்டங்களை விஞ்சும் இடர்களின் விளைவினை குறைப்பதற்கான திருத்தல் நடவடிக்கை | ✓ |
| | ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது கம்பனியின் இடர் தோற்றுருவத்தில் ஒவ்வொரு இடர் பிரிவிற்குமான இடர் சகிப்பு மட்டங்களை தீர்மானித்துள்ளதுடன் இவை அவர்களின் கூட்டங்களில் அந்த இடர் சகிப்பு மட்டங்களுக்கு எதிராக மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. குழுவானது இடர் மட்டங்கள் நிறுவப்பட்ட இடர் மட்டங்களுக்கு அப்பால் சென்றுள்ளது என உறுதிப்படுத்தும்போது தேவையான வழியினை வழங்கியுள்ளது. | |
| e) | கூட்டங்களின் அதிர்வெண் | ✓ |
| | நிதியாண்டு 2021/22 இல் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது 07 தடவைகள் கூடியது.<br><br>குழுவின் கூட்டங்கள் அவசியமானபோது இலத்திரனியலூடாக இடம்பெற்றன, கோவிட்-19 நிலைமையிலிருந்து அனைத்து பங்குபற்றுநர்களுக்குமான சுகாதார மற்றும் பாதுகாப்பு இடரினை முகாமைப்படுத்தவும் குறைப்பதற்கும் காணொளி மற்றும் தொலைக் கருத்தரங்குகளூடாக இடம்பெற்றன. | |
| f) | குறிப்பிட்ட இடர்களை இனங்காணுவதற்கு மற்றும் உடனடி திருத்தல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தவறிய அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை | ✓ |
| | ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்தவக் குழு மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவினால் இடர்கள் கூட்டாக இனங்காணப்படுகின்றன மற்றும் அத்தகைய தீர்மானங்கள் கூட்டாக மேற்கொள்ளப்படுகின்றன. | |
| g) | சபைக்கு இடர் மதிப்பீட்டு அறிக்கையின் சமர்ப்பிப்பு | ✓ |
| | ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு கூட்டம் இடம்பெற்று ஒரு கிழமையினுள் உடனடியாக இடர் மதிப்பீட்டு அறிக்கைகள் சபைக் கூட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினால் சமாப்பிக்கப்படுகின்றன. | |
| h) | ஒரு இணக்கப்பாட்டு செயற்பாட்டினை நிறுவுதல் | ✓ |
| | சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளுடன் கம்பனியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடுவதற்காக குழுவானது ஒரு இணக்கப்பாட்டு செயற்பாட்டினை நிறுவியுள்ளது.<br><br>இணக்கப்பாட்டு செயற்பாடானது ஒரு அனுபவம்மிக்க சிரேஷ்ட முகாமையாளரினால் தலைமை தாங்கப்படுவதுடன் இவர் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், முறைமைப்படுத்தல் வழிகாட்டிகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுடன் கம்பனியின் இணக்கப்பாட்டினை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவுக்கு அறிக்கையிடுகின்றார். | |
| H | தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் | |
| 9 (2) | **முரண்பாட்டு நலன்களைத் தவிர்த்தல்** | ✓ |
| | கம்பனியானது ஒரு தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் (தொ.கொ.வா.) கொள்கையினைக் கொண்டுள்ளதுடன் "தொடர்புடைய தரப்பினர்களாக" கருதப்படும் நபர்களின் வகைகள் இனங்காணப்பட்டுள்ளன. தொ.கொ.வா. கொள்கைக்கு அமைய ஒவ்வொரு பணிப்பாளர் மற்றும் மு.மு.ஆ, இடமிருந்து அவர்களுடன் தொடர்புடைய தரப்பினரை இனங்காணும் நோக்கத்திற்காக சுய பிரகடனங்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த பிரகடனங்களில் வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் கம்பனியானது அதன் வலையமைப்பு முழுவதிலுமான தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களிலான தரவுகளை கம்பனி மீட்டெடுப்பதனை இயலுமையாக்குகின்றது.<br><br>கம்பனியின் வணிக நடத்தை விதிக்கோவை மற்றும் நெறிமுறைகள் (கோவை) சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் தனிப்பட்ட உறவுகளிலிருந்து, வெளிவாரி இணைப்புகளிலிருந்து சாத்தியமான அல்லது மெய்யான முரண்பாட்டு நலன்கள் எழுகின்றதா என்பதை தீர்மானித்தல் வேண்டும் என்ற தேவையினைக் கொண்டுள்ளது. இங்கு பொருண்மையான விடயங்களிலான அக்கறைகள் அவரது சுயாதீன கருத்தில் செல்வாக்கினைச் செழுத்தலாம். அத்துடன் கோவையானது அத்தகை சாத்தியமான அல்லது மெய்யான முரண்பாட்டு நலனையுடைய பணிப்பாளர்கள் அவர்கள் அதைப்பற்றி அறிந்தவுடன் உடனடியாக பணிப்பாளர்கள் சபைக்கு வெளிப்படுத்தல் வேண்டும்.<br><br>தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவானது தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களது பயனுறுதிமிக்க முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையினை மேலும் பலப்படுத்துகின்றது.<br><br>குழுவின் மேலதிக தகவல்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு பக்கங்கள் 166 முதல் 167 வரை காணப்படும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவின் அறிக்கையினைப் பார்க்கவும். | |
| 9 (3) | **பணிப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்** | ✓ |
| | கம்பனியின் தொடர்புடைன தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது தொடர்புடைய தரப்பினருடனான அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் அவற்றின் தன்மை மற்றும் பெறுமதியினை கருத்திலெடுக்காது உள்ளடக்குகின்றன. | |

# கூட்டாண்மை ஆளுகை

| விதி குறிப்பீடு | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|
| 9 (4) | **"மிகவும் சாதகமான கவனிப்பினை" அத்தகைய தரப்பினருக்கு வழங்கக்கூடிய விதத்தில் தொடர்புடைய தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதனை தடைசெய்தல்** | ✓ |
| | சபை அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் கொள்கையானது கம்பனி இந்த விதியில் வரையறை செய்துள்ளவாறு அத்தகைய தரப்பினருக்கு "மிகவும் சாதகமான கவனிப்பினை" வழங்கும் விதத்தில் தொடர்புடைய தரப்பினருடன் கம்பனி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதில்லை.<br><br>இது இயங்கலை தடுத்தல் முறைமையின் மூலம் மேலும் குறைநிரப்பு செய்யப்படுவதுடன் இது கம்பனியினை தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை கண்காணித்து அறிக்கையிடுவதற்கும் கம்பனியின் வலையமைப்பு பூராவும் அதிலிருந்து தரவுகளை மீட்டெடுப்பதனையும் இயலுமையாக்குகின்றது. | |
| I | வெளிப்படுத்தல்கள் | |
| 10 (1) | **நிதிக் கூற்றுக்களின் வெளிப்படுத்தல்** | ✓ |
| | கம்பனியின் 2021/22 இற்கான வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் காகாகால நிதிக் கூற்றுக்கள் முறைமைப்படுத்தல் மற்றம் மேற்பார்வை அதிகாரங்களினால் குறித்துரைக்கப்பட்ட வடிவம் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்படுவதனை சபை உறுதிப்படுத்துகின்றது.<br><br>மேற்குறிப்பிட்ட விதி 10 (1) (ய) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் சுருக்கப்பட்ட வடிவத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுவதனை சபை உறுதிசெய்தது. | |
| 10 (2) | **ஆண்டறிக்கையில் பொருத்தமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக சபையின் பொறுப்பு** | ✓ |
| a) | வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டுக் நியமங்கள் மற்றும் குறிப்பிட்ட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு ஒத்ததாக தயாரிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடும் ஒரு கூற்று | |
| | கணக்கீட்டு நியமங்கள் மற்றும் குறிப்பிட்ட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு ஒத்ததாக வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதனை சபை உறுதிப்படுத்துகின்றது.<br><br>பார்க்கவும் - நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு<br>மிகவும் நுட்பநோக்கிற்காக பக்கங்கள் 205 முதல் 207 வரை காணப்படும் சுயாதனீ கணக்காய்வாளரது அறிக்கையினைப் பார்க்கவும் | |
| b) | கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளிலான அறிக்கை | ✓ |
| | கம்பனியின் சபையானது நிதி அறிக்கையிடுதல் முறைமையானது நிதி அறிக்கையிடுவதின் நம்பகத்தன்மை தொடர்பாக ஒரு நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதையும் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.<br><br>பார்க்கவும் - மிகவும் நுட்பநோக்கத்திற்காக பக்கம் 203 இல் காணப்படும் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுபாடுகளில் பணிப்பாளர்களின் கூற்று. | |
| c) | உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் வினைத்திறனில் வெளிவாரி கணக்காய்வாளரது சான்றளிப்பு | ✓ |
| | நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டில் சபையானது வெளிவாரி கணக்காய்வாளரிடமிருந்த ஒரு உறுதிமொழி அறிக்கையினைப் பெற்றுள்ளது. | |
| d) | பெயர்கள், கம்பனியுடனான கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கலான பணிப்பாளர்களின் விபரங்கள் | ✓ |
| | பெயர்கள் உள்ளடங்கலாக பணிப்பாளர்களின் விபரங்கள் மற்றும் கம்பனியுடனான கொடுக்கல் வாங்கல்கள் என்பன போதுமானவாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>சபை அங்கத்தவர்களின் சுய விபரங்கள் பக்கங்கள் 117 முதல் 120 வரை வழங்கப்பட்டுள்ளன.<br><br>மு.மு.ஆ, மற்றும் அவர்களது குடும்பத்தாருடனான கொடுக்கல் வாங்கல்கள் - நிதிக் கூற்றுக்களது குறிப்பு 55.2.3 இனை பார்க்கவும். | |
| e) | பணிப்பாளர்களுக்கு மொத்தமாக கம்பனியினால் செலுத்தப்பட்ட கட்டணங்கள் / வேதனம் | ✓ |
| | சபையின் பணிப்பாளர்களுக்கு செலுத்தப்படட வேதனத்தின் விபரங்கள் போதுமானளவு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>நிதிக் கூற்றுக்களது குறிப்பு 55.2.1 இனை பார்க்கவும்- மு.மு.ஆ. இக்கான வேதனம் | |

| விதி குறிப்பீடு | கொள்கை மற்றும் இணக்கப்பாடு | இணக்கபாட்டின் நிலை |
|---|---|---|
| f) | கம்பனியின் மூலதன நிதியங்களின் ஒரு சதவீதமாக ஒவ்வொரு பிரிவான தொடர்புடைய தரப்பினர்கள் தொடர்பாக நிலவையிலுள்ள தேறிய கடன் வழங்கல்கள் | ✓ |
| | ஒவ்வொரு பிரிவான தொடர்புடைய தரப்பினர் தொடர்பாக மொத்த தேறிய கடன்களது விபரங்கள் மற்றும் கம்பனியின் மூலதன நிதியங்களின் ஒரு சதவீதமாக ஒவ்வொரு பிரிவான தொடர்புடைய தரப்பினர்கள் தொடர்பாக நிலுவையிலுள்ள தேறிய கடன் வழங்கல்கள் என்பன போதுமானளவு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>நிதிக் கூற்றுக்களது குறிப்பு 58.3 இனை பார்க்கவும்- தேறிய கடன்களும் தேறிய கடன்கள் மூலதன நிதியங்களின் ஒரு சதவீதமாக. | |
| g) | மு.மு.ஆ. க்கு செலுத்தப்பட்ட மொத்த வேதனம் மற்றும் மொத்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி | ✓ |
| | 2021/22 நிதியாண்டில் மு.மு.ஆ. க்கு செலுத்தப்பட்ட வேதனத்தின் மொத்த பெறுமதியின் விபரங்களும் மு.மு.ஆ. உடனான கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த பெறுமதியும் போதுமானளவு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. | |
| h) | இணக்கப்பாட்டு சான்றளிப்பு | ✓ |
| | 2021/22 ஆண்டில் விவேகமான தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுடனான கம்பனியின் இணக்கப்பாட்டின் விபரங்கள் அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளன.<br><br>இந்த அறிக்கையில் மற்றும் மேலே குறிப்பிட்ட கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர்களின் அறிக்கைக்கு மேலாக 2021/22 இல் கம்பனியினை பாதிக்கும் விவேகமான தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுடன் பொருண்மையான இணைக்கப்பாடின்மைகள் காணப்படவில்லை.<br><br>கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கையினை பார்க்கவும் - மேலதிக நுண்ணறிவிற்காக பக்கங்கள் 156 முதல் 161 மற்றும் பக்கங்கள் 124 முதல் 155 வரை காணப்படும் கூட்டாண்மை ஆளுகை அறிக்கை | |
| i) | இணக்கப்பாடற்ற அறிக்கை | |
| | கம்பனியின் இடர் முகாமைத்துவ முறைமையில் தவறுகளில் எவ்விதமான மேற்பார்வை அக்கறைகள் அல்லது நாணயச் சபையினால் பொது மக்களுக்கு வெளிப்படுத்தத் தேவைப்படும் நிதி வணிகச் சட்டத்தின் விதிகள் மற்றும் அதன்கீழான பணிப்புரைகளுடன் எவ்விதமான இணக்கப்பாடின்மையும் காணப்படவில்லை. | |
| j) | வெளிவாரி கணக்காய்வாளரின் இணக்கப்பாட்டு சான்றளிப்பு | ✓ |
| | இந்த ஒழுங்குவிதிகளது தேவைப்பாட்டுடன் இணக்கப்பாட்டு மட்டத்திலான மெய்யான கண்டுபிடித்தல்கள் அறிக்கையானது வெளிவாரி கணக்காய்வாளர்களினால் வழங்கப்பட்டுள்ளது. சபைக்கு விளித்துரைக்கப்பட்ட அவர்களது அறிக்கையிலுள்ள இந்த கண்டுபிடிப்புகள் மேலே அறிக்கையிடப்பட்டவற்றுடன் ஏதேனும் முரண்பாடுகளை இனங்காணவில்லை. | |
| **J** | உருமாற்றல் ஏற்பாடுகள் | |
| **11** | **உருமாற்றல் மற்றும் ஏனைய ஏற்பாடுகள்** | ✓ |

# கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 168 இனால் வேண்டப்பட்டவாறு கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை முன்னிலைப்படுத்தப்படுகின்றது. இது 2011 இன் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தினால் வேண்டப்பட்டவாறு மற்றும் அதன் கீழான பணிப்புரையின் கீழ், மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தின் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகள் என்பவற்றின் பிரகாரமும் தவல்களை வழங்குகின்றன.

## 1. பொதுவானவை

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர்கள் சபையானது பங்குதாரர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையினை மற்றும் 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் குழுமத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் சட்டரீதியான அனைத்து தேவைப்பாடுகளுடனும் இணங்கியுள்ளது எனும் இந்த நிதிக் கூற்றக்களிலான கணக்காய்வாளரது அறிக்கையினையும் முன்னிலைப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றது. இந்த அறிக்கையானது பணிப்பாளர் சபையினால் 26 ஜூலை 2022 இல் அங்கீகரிக்கப்பட்டது.

## 2. வணிகத்தின் தன்மை

*(2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 168 (1) (a))*

> கணக்கீட்டுக் காலப்பகுதியில் கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிளுடன் சேர்ந்த வணிகத்தின் தன்மை மற்றும் அதனிலான மாற்றத்துடன்

### 2.1 தொலைநோக்கு. பணிநோக்கு மற்றும் கூட்டாண்மை நடத்தை

கம்பனியின் தொலைநோக்கும் பணிநோக்கும் இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 3 இல் வழங்கப்பட்டுள்ளன. தொலைநோக்கும் மற்றும் பணிநோக்கினை அடைவதில் அனைத்து பணிப்பாளர்களும் பணியாட்களும் அவர்களது நடவடிக்கைகளை கம்பனியின் வணிக நடத்தை விதிக்கோவை மற்றும் நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த மட்டத்திலான நெறிமுறை நியமங்கள் மற்றும் நேர்மையுடன் நடாத்தினார்கள்.

### 2.2 பிரதான வணிக நடவடிக்கைகள்

கம்பனியின் பிரதான வணிக நடவடிக்கைகள் நிதிக் குத்தகைகள், தவணைக் கடன்கள், இஸ்லாமிய நிதியளிப்பு, எல்லைக்கடன் வர்த்தகம், காரணியாக்கம், தங்கக் கடன்கள் மற்றும் கடன் பிணையங்களை வழங்குதல் மற்றும் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை திரட்டுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. 31 மார்ச் 2022 இல் கம்பனி ஆறு துணை நிறுவனங்களைக் கொண்டிருந்ததுடன் இந்த துணை நிறுவனங்களின் வணிக நடத்தைகளின் தன்மையானது பக்கங்கள் 3 முதல் 9 வரை காணப்படும் "எம்மைப் பற்றியது" பிரிவிலும் பக்கம் 215 இல் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளிலும் விபரிக்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டின்போது கம்பனியோ அதன் துணை நிறுவனங்களோ சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறும் எவ்விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

### 2.3 குழுவின் கட்டமைப்பிற்கான மாற்றங்கள்

கருத்திலெடுக்கப்படும் நிதியாண்டின்போது குழுமத்தின் கட்டமைப்பில் எவ்விதமான மாற்றமும் காணப்படவில்லை.

### 2.4 கிளை வலையமைப்பு

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான கம்பனியின் மொத்த கிளை வலையமைப்பு 111 முழு நீள கிளைகளையும் 62 சாளரவழிக் காரியாலங்களையும் உள்ளடக்கியது.

### 2.5 செயற்பாடுகளின் மீளாய்வு

2021/22 ஆண்டில் கம்பனியின் நிதி நிலைமை மற்றும் செயற்திறனிலான ஒரு ஒட்டுமொத்த மதிப்பீடானது, நிதியியல் விளைவுகளிலான கருத்துக்கள் மற்றும் இடம் பெற்ற விசேட நிகழ்வுகளுடன் இவ்வாண்டறிக்கையின் பக்கங்கள் 14 முதல் 17 வரை காணப்படும் தலைவரின் செய்தியிலும் பக்கங்கள் 18 முதல் 22 வரை காணப்படும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தியிலும் மற்றும் பக்கங்கள் 44 முதல் 113 வரை காணப்படும் முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்விலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கையின் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன. குழுமத்தின் வருவாய், விளைவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான பிரிவு வாரியான பங்களிப்பானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 306 முதல் 307 வரை காணப்படும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 53 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.6 எதிர்கால கண்ணோட்டம்

சவால்கள், வாய்ப்புக்கள் மற்றும் உலக சந்தை மற்றும் இலங்கையின் சந்தையில் ஏற்பட்ட அபிவிருத்திகளின் அடிப்படையில் கம்பனியின் கண்ணோட்டமானது பக்கங்கள் 40 முதல் 41 வரை காணப்படும் "மூலோபாயப்" பிரிவிலும் இந்த ஆண்டறிக்கையின் ஒவ்வொரு மூலதன அறிக்கையின் இறுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. நிதிக் கூற்றுக்கள்

*(பிரிவு 168 (1) (b) மற்றும் (2))*

> கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிறைவுசெய்த மற்றும் கையொப்பமிட்ட நிதிக் கூற்றுக்கள்

கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் நிலைநிறுத்தப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகி தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இவை உரியவாறு பிரதம முகாமையாளர் - நிதி மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் சான்றளிக்கப்பட்டு தலைவர் மற்றும் ஒரு பணப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 198 முதல் 339 வரை காணப்படுகின்றன.

### 3.1 நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களது பொறுப்பு

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 150(10, 151, 152 மற்றும் 153 (1) மற்றும் (2) இன் பிரகாரம் கம்பனி மற்றும் குழுமத்தின் பணிப்பாளர்கள் சபையானது கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு பொறுப்பாளியாவார்கள் என்பதுடன், இது குழுமம் மற்றும் கம்பனியின் நிதி நிலைமை மற்றும் செயற்திறனின் மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை பிரதிபலிக்கின்றது. இது தொடர்பில் பணிப்பாளர்கள் சபையானது பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றது. இலாபம் அல்லது நட்டக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களினால் பணிப்பாணையாக்கப்பட்ட SLFRS மற்றும் LKASs ஆகியவற்றின் தேவைப்பாடுகள், 2011 இன் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டம் மற்றும் அதன்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

"நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்றானது" பக்கங்கள் 200 முதல் 201 வரை வழங்கப்பட்டுள்ளதுடன் அது இந்த அறிக்கையின் ஒன்றிணைந்த பாகமாயுள்ளது.

### 3.2 நிதியியல் விளைவுகள் மற்றும் ஒதுக்கீடுகள்

**வட்டி வருமானம்**

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்து வருடத்திற்கான கம்பனி மற்றும் குழுமத்தின் மொத்த வட்டி வருமானம் முறையே ரூபா 23,881.53 மில்லியன் (2020/21 இல் ரூபா 24,983.45 மில்லியன்) மற்றும் ரூபா 25,926.79 மில்லியன் (2020/21 இல் ரூபா 26,821.84 மில்லியன்) ஆகும். வட்டி வருமானத்தின் மிகவும் விளக்கமான பகுப்பாய்வானது பக்கம் 225 இல் காணப்படும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 6.1 மற்றும் 6.1.1 இல் வழங்கப்பட்டுள்ளன.

**செயற்திறன் மற்றும் ஒதுக்கீடுகள்**

நிதியாண்டு 2021/22 இற்கு கம்பனி மற்றும் குழுமம் முறையே ஒரு தேறிய இலாபமாக ரூபா 4,659.01 மில்லியன் மற்றும் ரூபா 4,818.17 மில்லியனை (2020/21 ரூபா 4,033.02 மற்றும் ரூபா 5,596.33 மில்லியன்) பதிவு செய்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது கம்பனியின் தேறிய இலாபம் 15.52% ஆல் அதிகரித்தும் குழுமத்தின் தேறிய இலாபம் 13.90% ஆல் வீழ்ச்சியடைந்ததையும் பிரதிபலிக்கின்றது.

கம்பனியின் செயற்திறன் மற்றும் இலாப ஒதுக்கீட்டின் விபரங்கள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| கம்பனி | 2021/22 ரூ.மில்லியன் | 2020/21 ரூ.மில்லியன் |
|---|---|---|
| வருமான வரிக்கு முந்திய இலாபம் | 6,650.09 | 5,872.59 |
| வருமான வரிச் செலவினம் | 1,991.08 | (1,839.57) |
| ஆண்டிற்கான இலாபம் | 4,659.01 | 4,033.02 |
| முன்னைய ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட இலாபம் | 17,159.78 | 14,227.99 |
| ஒதுக்கீட்டிற்காக கிடைக்கும் இலாபம் | 21,818.79 | 18,261.01 |
| **ஒதுக்கீடுகள்** | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் முன்னைய/நடப்பு ஆண்டு | (2,179.93) | (976.62) |
| ஏனைய விரிவான வருமானம் | 25.70 | 77.04 |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | (182.95) | (201.65) |
| மொத்த ஒதுக்கீடுகள் | (2,337.17) | (1,101.23) |
| முன்கொண்டுசெல்லப்பட்ட ஒதுக்கீடு செய்யப்படாத இலாபம் | 19,481.61 | 17,159.78 |

GRI | 207-1, 207-2, 207-4

**வரிவிதிப்பிற்கான ஏற்பாடு**

இவ்வருடத்தில் உழைத்த இலாபங்களுக்கு பிரயோகிக்கப்படும் வருமான வரி வீதம் 24% ஆகும். நிதிச் சேவைகளிலான பெ.சே.வ. நிதியாண்டு 2021/22 இன் கடைசி மூன்று மாதங்களில் 18% ஆக அதிகரிப்பட்டதுடன் நடப்பாண்டின் ஆரம்ப ஒன்பது மாதங்களுக்கு இது 15% ஆக காணப்பட்டது.

இதன் பிரகாரம், கம்பனியின் நடப்பாண்டிற்கான வருமான வரிச் செலவினம் ரூபா 1,991.08 மில்லியன் ஆகும் என்பதுடன் கம்பனி மற்றும் குழுமத்திற்கான வருமான வரிச் செலவினம் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்து/பொறுப்பு என்பவற்றிலான ஒரு விரிவான குறிப்பு முறையே நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 17 மற்றும் 44 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம், பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் அருவச் சொத்துக்கள்**

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கு கம்பனி மற்றும் குழுமத்தினால் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் (மூலதன நடப்பு வேலை உள்ளடங்கலாக) ஆட்பட்ட மொத்த செலவினம் முறையே ரூபா 535.42 மில்லியன் மற்றும் 457.16 மில்லியன் (2020/21 இல் ரூபா 104.69 மில்லியன் மற்றும் ரூபா 152.32 மில்லியன்) ஆகும்.

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டில் கம்பனியின் மற்றும் குழுமத்தின் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களுக்கான சேர்க்கைகள் முறையே ரூபா 239.44 மில்லியன் மற்றும் 238.11 மில்லியன் (2020/21 இல் ரூபா 858.51 மில்லியன் மற்றும் ரூபா 293.05 மில்லியன்) ஆகும்.

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டில் கம்பனி மற்றும் குழுமமானது அருவச் சொத்துக்களைக் கையகப்படுத்துவதற்காக முறையே ரூபா 10.32 மில்லியன் மற்றும் 12.84 மில்லியனை முதலீடு செய்தது. (2020/21 இல் அருவச் சொத்துக்களை கையகப்படுத்தவதற்காக கம்பனி 0.36 மில்லியனையும் குழுமம் ரூபா 11.66 மில்லியனையும் முதலீடு செய்தன)

கம்பனியின் அல்லது அதன் துணை நிறுவனங்களின் நிலையான சொத்துக்களில் ஏனைய கணிசமான மாற்றங்கள் எதுவும் இல்லையென உறுதிப்படுத்துவதுடன், புத்தகப் பெறுமதியிலிருந்து பாரியளவில் வேறுபடும் காணியின் சந்தை விலை பற்றிய தகவல்கள் பக்கம் 279 இல் காணப்படும் குறிப்பு 32.4 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம், பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் விபரங்கள் பக்கங்கள் 275 முதல் 283 வரை காணப்படும் நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள் 32, 33 மற்றும் 34 இல் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

**இறையிலி நிலம் மற்றும் கட்டிடம்**

பரப்பளவுகள், இடங்கள்,பெறுமதியிடல்கள் மற்றும் கட்டிடங்களின் எண்ணிக்கை மற்றும் நிறுவனத்தின் காணி உரித்துடைமைகள் இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 279 இல் காணப்படும் குறிப்பு 32.4 இல் விபரிக்கப்பட்டுள்ளதுடன், நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கம்பனியினால் மற்றும் குழுமத்தினால் 31 மார்ச் 2022 இல் உள்ளவாறு உரித்துடைமையான இறையிலி நிலங்கள் மற்றும் கட்டிடங்களது தேறிய புத்தகப் பெறுமதியானது முறையே ரூபா 719.84 மில்லியன் மற்றும் 3,241.57 மில்லியன் ஆகும்.

கம்பனியானது 2018 இன் 04ஆம் இலக்க பணிப்புரையில் "அசையாச் சொத்துக்களின் பெறுமதியிடல்" மற்றும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அதற்கான திருத்தங்களில் குறிப்பிட்டுள்ளவாறு கம்பனி அதன் இறையிலி நிலங்கள் மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு சுயாதீன தொழில்சார் மதிப்பீட்டாளரை ஈடுபடுத்தியுள்ளது.

வழங்கப்பட்ட கடன்களுக்கு எதிராக ஏதேனும் பிணைச்சொத்தாக பெறப்பட்ட அசையா ஆதனங்களின் மீள்பெறுமதியிடலானது 2018 இன் 04ஆம் இலக்க பணிப்புரையில் "அசையாச் சொத்துக்களின் பெறுமதியிடல்" மற்றும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அதற்கான திருத்தங்களில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. இ.ம.வ. இனால் வழங்கப்பட்ட குறித்த பணிப்புரையில் வேண்டியுள்ளவாறு அசையா சொத்துக்களின் மதிப்பீடானது சுயாதீன தொழில்சார் மதிப்பீட்டாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அசையாச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட நியாயப் பெறுமதியானது இ.ம.வ. இனால் வழங்கப்பட்ட 2006 இன் 03 ஆம் இலக்க பணிப்புரையின் பிரகாரம் அறவிடமுடியா மற்றும் ஐயப்பாடான கடன்களுக்கான முறைமைப்படுத்தல் ஏற்பாட்டிற்கான அளவீட்டிற்கு கருதப்படவில்லை.

**முதலீடுகள்**

கம்பனியினால் வைத்திருக்கப்படும் முதலீடுகளின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கங்கள் 248 முதல் 251 மற்றும் 268 முதல் 272 வரை காணப்படும் குறிப்புகள் 22,23,24,27,28 மற்றும் 29 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**உரித்துவம்**

**கூறப்பட்ட மூலதனம்**

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான கம்பனி மற்றும் குழுமத்தின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 17,071.96 மில்லியன் ஆகும் என்பதுடன் இது 31 மார்ச் 2021 இல் ரூபா 14,892.04 மில்லியனாகக் காணப்பட்டது. நிதியாண்டு 2020/21 க்கான இறுதிப் பங்கிலாபம் மற்றும் நிதியாண்டு 2021/22 க்கான இடைக்கால பங்கிலாபம் என்பன பத்திர பங்கிலாபமாக செலுத்தப்பட்டதன் விளைவாக கூறப்பட்ட மூலதனம் ரூபா 2,179.93 மில்லியனாக அதிகரித்தது.

**ஒதுக்கங்கள்**

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான கம்பனியின் மற்றும் குழுமத்தின் மொத்த ஒதுக்கங்கள் முறையே ரூபா 21,746.35 மில்லியன் மற்றும் ரூபா 26,749.31 மில்லியன் ஆகும். மீளாய்வு நிதியாண்டின்போது நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளிலிருந்து சட்டரீதியான ஒதுக்கங்களுக்கு ரூபா 182.95 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. ஒதுக்கங்களின் அசைவிலான தகவல்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 212 முதல் 213 வரை காணப்படும் குறிப்புகள் 46 முதல் 48 வரையுள்ள "உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று" இல் வழங்கப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்**

வழங்கப்பட்ட கடன் பிணையங்களின் விபரங்கள் குறிப்பு 37 இல் வழங்கப்பட்டுள்ளதுடன் கம்பனியின் தொகுதிக்கடன்களிலான அதிகமான விரிவான பகுப்பாய்வு நிதிக் கூற்றுக்களின் பக்கம் 37.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மூலதனப் போதுமை**

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மூலதனப் போதுமை தேவைப்பாட்டிலான 2018 இன் 03 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின்

# கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

பணிப்புரையின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட கம்பனியின் அடுக்கு 1 மூலதன விகிதம் மற்றும் மொத்த மூலதன விகிதமானது 31 மார்ச் 2022 இல் முறையே 18.76% மற்றும் 19.67% ஆக காணப்பட்டது. ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டிலான தகவல்கள் ஆண்டறிக்கையின் பக்கம் 300 இல் வழங்கப்பட்டுள்ளது.

## 4. வெளிவாரி கணக்காய்வாளர்கள்

*(பிரிவு 168 (1) (c ) (i) மற்றும் (j))*

மேற்குறிப்பிட்ட பிரிவுகள் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளரின் அறிக்கையினை வரையறை செய்வதுடன், கணக்காய்வாளருக்கு கணக்கீட்டுக் காலப்பகுதியில் செலுத்தவேண்டிய கணக்காய்வுக் கட்டணம் மற்றும் வழங்கிய ஏனைய சேவைகளுக்கான கட்டணங்கள் மற்றும் கம்பனி மற்றும் துணை நிறுவனங்களின் கணக்காய்வாளரது உறவு அல்லது ஏதேனும் அக்கறைகள் என்பன தனியாக வெளிப்படுத்தப்படுகின்றன.

### 4.1 கணக்காய்வாளர்கள் மற்றும் அவர்களது சுயாதீனம்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம், பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி “கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம்” எனும் வரையறையின் கீழ் வருவதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் ஒருவர் கம்பனியின் கணக்காய்வினை மேற்கொள்ளலாம் மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அவர்களது பொறுப்புக்கள் பக்கங்கள் 205 முதல் 207 வரை காணப்படும் “சுயாதீன கணக்காய்வாளரது அறிக்கையில்” குறிப்பிடப்பட்டுள்ளன.

### 4.2 கணக்காய்வாளரது அறிக்கை

கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்களிலான கணக்காய்வாளரது அறிக்கையானது பக்கங்கள் 205 முதல் 207 வரை வழங்கப்பட்டுள்ளது.

### 4.3 கணக்காய்வாளரது வேதனம்

கம்பனி மற்றும் குழுமத்தினால் பின்வரும் தொகைகள் கணக்காய்வு மற்றும் தொடர்புடைய சேவைகளுடன் வரி தொடர்பான சேவைகள் உள்ளடங்கலான கணக்காய்வு அல்லாத சேவைகளுக்கு கணக்காய்வாளர்களுக்கு செலுத்தப்பட்டன:

| கட்டணங்கள் | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021/22<br>ரூ.மில்லியன் | 2020/21<br>ரூ.மில்லியன் | 2021/22<br>ரூ.மில்லியன் | 2020/21<br>ரூ.மில்லியன் |
| கணக்காய்வு மற்றும் தொடர்புடைய சேவைகள் | 7.38 | 7.38 | 14.44 | 13.32 |
| கணக்காய்வு அல்லாத சேவைகள் | 1.32 | 1.89 | 1.32 | 2.22 |

### 4.4 கணக்காய்வாளர்களது நியமனம்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 55 இன் பிரகாரம், பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி “கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம்” எனும் வரையறையின் கீழ் வருவதுடன் கணக்காய்வாளர் அதிபதி அவர்கள் அல்லது கணக்காய்வாளர் அதிபதி அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் ஒருவர் வருகின்ற ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வினை மேற்கொள்ளலாம்.

## 5. கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் இவ்வருடத்திலான மாற்றங்கள் (பிரிவு 168 (1) (d)

நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகளை முன்னிலைப்படுத்தும்போது வெளிப்படுத்தல்கள் மிகை மற்றும் அனாவசியமானவற்றை குறைப்பதற்காக ஒரு மாற்றீட்டு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தி நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - LKAS 1 “நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்” மற்றும் 2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 168 (1) (d) இன் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளன.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கங்கள் 215 முதல் 339 வரை வழங்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான கணிசமான மாற்றங்கள், ஏதேனும் இருப்பின், அது பக்கம் 219 இல் குறிப்பு 3.4 இல் வழங்கப்பட்டுள்ளது.

## 6. பணிப்பாளர்கள் சபை

*(பிரிவு 168 (1) (e),(f), (h))*

கணக்கீட்டுக் காலப்பகுதியில் கம்பனியின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் அக்கறை இடாப்பில் பதிவுகளது விபரங்களை மேற்குறிப்பிட்ட பிரிவானது வரையறை செய்வதுடன், இது கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்கு கணக்கீட்டுக் காலப்பகுதியில் செலுத்தப்பட்ட வேதனங்கள் மற்றும் ஏனைய நலன்கள் மற்றும் கணக்கீட்டுக் காலப்பகுதியின் இறுதியில் கம்பனியின் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் பணிப்பாளர்களது தகவல்கள்களையும் வழங்குகின்றது.

### 6.1 சுயவிபரங்கள்

சபை பணிப்பாளர்களின் திறன்கள் மற்றும் அனுபவம் உள்ளடங்கலான அவர்களது சுய விபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 117 முதல் 120 வரை குறிப்பிடப்பட்டுள்ளன.

### 6.2 சபை செயற்திறனின் மதிப்பீடு

பணிப்பாளர்கள் சபையின் செயற்திறனை மதிப்பீடு செய்வதற்காக பயன்படுத்தப்படும் முறையானது பக்கம் 135 இல் காணணப்படும் “கூட்டாண்மை ஆளுகை” பிரிவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

### 6.3 ஏனைய பணிப்பாளர் பதவிகள் / பணிப்பாளர்களின் கணிசமான பதவிகள்

கம்பனியின் தற்போதைய பணிப்பாளர்களது ஏனைய பணிப்பாளர் பதவிகள் / முக்கிய பதவிகள் பற்றிய தகவல்கள் பக்கங்கள் 117 முதல் 120 வரை வழங்கப்பட்டுள்ளன.

### 6.4 பதவி விலகல்கள் மற்றும் நியமனங்கள்

கம்பனியின் நிறைவேற்றுநரல்லா / சுயாதீனமற்ற பணிப்பாளராக திரு. சுதர்சன் ஹாங்கம அவர்கள் 24 ஆகஸ்ட் 2021 முதல் சபையிலிருந்து பதவி விலகினார் மற்றும் 15 ஜூலை 2021 முதல் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் கம்பனி காரியதரிசியாக செல்வி, ஷாலின் சில்வா அவர்கள் நியமிக்கப்பட்டார். திரு. மைக்கல் அமிர்தநாயகம் அவர்கள் 15 ஜூலை 2022 முதல் கம்பனியின் ஒரு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### 6.5 பணிப்பாளர்களது வேதனம்

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் பணியூதியங்கள் முறையே ரூபா 4.94 மில்லியன் மற்றும் 11.77 மில்லியன் ஆகும். ஒப்பிடக்கூடிய எண்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 55.2.1 இல் வழங்கப்பட்டுள்ளன.

### 6.6 அக்கறைகள் இடாப்பு / கொடுக்கல்

## வாங்கல்களில் பணிப்பாளர்களது அக்கறைகள்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்க, கம்பனியானது ஒரு அக்கறை இடாப்பினை பராமரிப்பதுடன் இது பரிசீலனைக்கு கிடைக்கக்கூடியதாயுள்ளது. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 192 (2) இன் பிரகாரம் கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களில் கம்பனியின் பணிப்பாளர்கள் அவர்களது அக்கறைகள் குறித்து பொதுவான பிரகடனத்தினை மேற்கொண்டுள்ளார்கள். அவற்றில் வெளிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கலின் கீழ் பக்கங்கள் 309 முதல் 310 வரை வழங்கப்பட்டுள்ளன. மேலும், கம்பனியின் தலைவர், பணிப்பாளர்கள் சபை, பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோர் 2008 இன் 03 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரையின் பிரகாரம் வெளிப்படுத்தப்படவேண்டிய தேவையின் கீழ் எவ்விதமான நிதியியல், வணிக, குடும்ப அல்லது ஏனைய பொருண்மையான / பொருத்தமான உறவுமுறைகள் அவர்களிடையே காணப்படவில்லை என்ற பொது பிரகடனங்களை மேற்கொண்டுள்ளார்கள்.

## 6.7 பங்குகளில் பணிப்பாளர்களது அக்கறை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 200 உடன் இணங்கும்வண்ணம், பணிப்பாளர்கள் கம்பனியில் அவர்களது பங்குரித்துவத்தினையும் அதனிலான ஏதேனும் கையகப்படுத்தல்கள் அல்லது விற்பனைகளை சபைக்கு வெளிப்படுத்தியுள்ளார்கள். கம்பனியில் பணிப்பாளர்களின் தனித்தனியான பங்குரித்துடைமையுடன் பிரதம நிறைவேற்று அதிகாரியின் தனியான பங்குரித்துடைமையும் ஆண்டறிக்கையில் பக்கம் 73 இல் காணப்படும் "முதலீட்டாளர்களுக்கான பெறுமதி" என்ற தலைப்பிடப்பட்ட பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.

## 6.8 கூட்டங்கள்

சபையின் கூட்டங்கள் மற்றும் சபை உபகுழுக்களின் கூட்டங்களது விபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 132 முதல் 134 வரை காணப்படும் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன.

## 7. பங்கு தகவல்கள்

குறிப்பிடத்தக்க பங்குதாரர் தகவல்களுடன் கணிசமான பங்குதாரர் விபரங்கள் மற்றும் ஏனைய பங்கு தொடர்பான தகவல்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 68 முதல் 74 வரை காணப்படும் "முதலீட்டாளர்களுக்கான பெறுமதி" என்றத் தலைப்பின் கீழ் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

## 7.1 பங்குதாரர்களின் சமத்துவமான கவனிப்பு

அனைத்து நேரங்களிலும் அனைத்து பங்குதாரர்களும் சரிசமமாக கவனிக்கப்படுவதனை கம்பனி உறுதிசெய்துள்ளது.

## 7.2 சாதாரண பங்குகளிலான பங்கிலாபங்கள்

கம்பனியானது 2021/22 நிதியாண்டிற்கு ஒரு இடைக்கால பங்கிலாபமாக ஒரு பத்திரப் பங்கிலாப வடிவில் 21 டிசம்பர் 2021 இல் பிரகடனம் செய்தது. இது தொடர்பாக, பத்திரப் பங்கிலாபமானது 1:21.400002326 எனும் விகிதாசாரத்தில் 84,249,776 கம்பனியின் வாக்குரிமையுள்ள சாதாரண பங்குகள் 13 ஜனவரி 2022 முதல் பட்டியிலடப்பட்டன.

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இறுதி பங்கிலாபமாக பணிப்பாளர்கள் ரூபா 0.50 இனை பரிந்துரைத்துள்ளார்கள். இது பத்திரப் பங்கிலாபமாக செலுத்தப்படும். மேலும் கம்பனியின் அகவிதிகளுடன் இணங்கும் வண்ணம் இந்த பங்கிலாபமானது இடம்பெறவேண்டிய ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 56 (3) இன் பிரகாரம் மற்றும் கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரகாரம் கடன் தீர்க்கும் ஆற்றல் பரிசீலனை தேவைப்பாட்டினை குறித்த இடைக்கால பங்கிலாபம் மற்றும் முன்மொழியப்பட்ட இறுதி பங்கிலாபத்தின் பின்னர் பிரிவு 56 (2) இல் வேண்டப்பட்டவாறு உடனடியாக கம்பனி சந்திக்கும் என்பதனை பணிப்பாளர்கள் சபை உறுதிப்படுத்துகின்றது. இந்த சட்டரீதியான ஏற்பாட்டுடன் இணங்குவதற்காக பணிப்பாளர்கள் சபையானது பங்கிலாபக் கொடுப்பனவு தொடர்பாக கணக்காய்வாளரிடமிருந்து ஒரு கடன் தீர்க்கும் ஆற்றல் பரிசீலனை கூற்றில் ஒரு சான்றிதழை பெற்றுள்ளது.

## 8. கொடைகள்

*(பிரிவு 168 (1) (g))*

> கணக்கீட்டுக் காலப்பகுதியில் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த கொடைகள்.

நிதியாண்டு 2021/22 இல், கம்பனி (கூ.ச.பொ. உள்ளடங்கலாக) ரூபா 29.40 மில்லியனை (2020/21 இல் ரூபா 20.37 மில்லியன்) கொடையாக வழங்கியது. கம்பனியின் கூட்டாண்மைச் சமூகப் பொறுப்புப் பிரிவானது கூட்டாண்மை சமூகப் பொறுப்பு முன்னெடுப்புகளையும் நடவடிக்கைகளையும் கையாளுகின்றது. கம்பனியின் கூ.ச.பொ. முன்னெடுப்புகள் பக்கங்கள் 96 முதல் 105 வரை காணப்படும் "சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்" எனத் தலைப்பிடப்பட்ட பிரிவிலும் பக்கங்கள் 106 முதல் 113 வரை காணப்படும் "இயற்கை மூலதனம்" எனத் தலைப்பிடப்பட்ட பிரிவிலும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

## 9. கூட்டாண்மை ஆளுகை

*(சிறந்த நடைமுறைக் கோவை D.6, D.6.1, D.2, D.1.4)*

பணிப்பாளர்கள் சபையானது கம்பனியின் கூட்டாண்மை ஆளுகை கொள்கைகளை விருத்திசெய்வதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளதுடன் கம்பனியின் வெவ்வேறு பங்குபற்றுநர்களை ஆளுகை செய்யும் செயன்முறை மற்றும் செயலாக்கங்களை உள்ளடக்கிய கூட்டாண்மை ஆளுகை சாசனத்தினை கடைப்பிடித்துள்ளது. இது சபை, முகாமையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் ஏனைய பங்காளிகளை உள்ளடக்குவதுடன் நிறுவனம் முழுவதும் கூட்டாண்மை ஆளுகையின் உயர்ந்த கொள்கைகள் பராமரிக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது.

மேற்குறிப்பிட்ட கூட்டாண்மை ஆளுகை சாசனத்தினை கடைப்பிடிப்பதில், சபையானது பின்வருவனவற்றுடன் கம்பனி இணங்கியொழுகியிருப்பதனை உறுதிசெய்கின்றது. இ.ப.க. நிருவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைகள் கோவை, கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் மற்றும் 2008 இன் 03, 2008 இன் 04 மற்றும் 2013 இன் 06 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளின் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரையின் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளன.

**வணிக நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகளிலான தலைவரின் உறுதிமொழி**

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி ஒரு வணிக நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது எனவும் பரப்புதல், கண்காணித்தல் மற்றும் வணிக நடத்தை விதிக்கோவை மற்றும் நெறிமுறைகளுடன் இணக்கப்பாடு காண்பதற்காக செயன்முறைகள் நிறுவப்பட்டுள்ளன எனவும் உறுதிப்படுத்துகின்றார்.

**பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை பிரகடனம் செய்கின்றார்கள்:**

1. சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறும் ஏதேனும் நடவடிக்கையில் கம்பனி ஈடுபட்டிருக்கவில்லை.
2. பங்குதாரர்களின் சமத்துவமான கவனிப்பினை உறுதிப்படுத்துவதற்காக கம்பனி அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.
3. வணிகமானது செயல்நிலை தொடர்ச்சியினைக் கொண்டது.
4. உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவத்தின் பயனுறுதித்தன்மை மற்றும் வெற்றிகரமான பின்பற்றுதல் கம்பனியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இது தொடர்பில் எடுக்கப்பட்ட வழிமுறைகள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 124 முதல் 155 வரை காணப்படும் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. அவர்களது அறிவிற்கு எட்டியவரை கம்பனியின் வணிக நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகளில் எவ்விதமான மீறல்களும் இடம்பெறவில்லை.

**வணிக நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகளுடனான இணக்கப்பாட்டில் மு.மு.அ. இன் பிரகடனம்**

அவர்களது அறிவிற்கு எட்டியவரை கம்பனியின் வணிக நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகளில் எவ்விதமான மீறல்களும் இடம்பெறவில்லை.

## 9.1 சபை உப குழுக்கள்

# கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

சபை கணக்காய்வுக் குழு, சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு, மனித வள மற்றும் வேதனக் குழு, பெயரிடல் குழு மற்றும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு என்பன போதுமான தகமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்ட பணிப்பாளர்களுடன் சபை உப குழுக்களாகச் செயலாற்றுகின்றன. குறித்த குழுக்களின் தொகுப்பானது இந்த ஆண்டறிக்கையில் அந்தந்த குழுக்களின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 9.2 சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

பணிப்பாளர்களின் சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் ஏதேனும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறும் ஏதேனும் நடவடிக்கையில் கம்பனியோ அல்லது குழுமமோ ஈடுபடவில்லை.

## 9.3 சட்டரீதியான கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களின் சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் பணியாட்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு, ஏனைய முறைமைப்படுத்தல் நிறுவனங்களுக்கு செலுத்தவேண்டிய அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் நேரத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 9.4 சூழல் பாதுகாப்பு

பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவிற்கு எட்டியவரையில் கம்பனி மற்றும் குழுமமானது சூழலுக்கு பாதிப்பான எவ்விதமான நடவடிக்கையில் ஈடுபடவில்லை என உறுதிப்படுத்துகின்றார்கள்.

## 9.5 சூ.ச.ஆ. அறிக்கையிடல்

சூழல், சமூக மற்றும் ஆளுகை சிந்தனைகள் ஒரு கம்பனிக்கு அதன் வணிக மூலோபாயத்தினை நிறைவேற்றுவும் மற்றும் பெறுமதி உருவாக்கவும் அதன் ஆற்றலினைப் பாதிக்கலாம். கம்பனியின் ஆண்டறிக்கையானது இனங்காணப்பட்ட, முகாமைப்படுத்தப்படும் மற்றும் அறிக்கையிடப்படும் சூ.ச.ஆ. இடர்கள் மற்றும் வாய்ப்புக்கள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன் இவை பக்கம் 138 இல் வழங்கப்பட்டுள்ளன.

## 10. ஏற்பளிப்பு

*(பிரிவு 168 (1) (k))*

> இந்த அறிக்கையில் உள்ளடக்கங்களது ஏற்பளிப்பு / சபையின் சார்பில் இரண்டு பணிப்பாளர்கள் மற்றும் கம்பனியின் காரியதரிசியின் கையொப்பங்கள்.

பக்கம் 160 இல் வெளிப்படுத்தியுள்ளவாறு பணிப்பாளர்கள் சபையானது இந்த ஆண்டறிக்கையின் உள்ளடக்கங்களை ஏற்பளிப்பு செய்துள்ளது.

## 11. பங்காளி முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல்

கம்பனியானது அதன் பெறுமதி உருவாக்கல் செயலாக்கத்தில் வாடிக்கையாளர்கள், பணியாட்கள், முதலீட்டாளர்கள், வழங்குநர்கள் மற்றும் சமூகம் உள்ளடங்கலாக அதன் பெறுமதிமிக்க பங்காளிகளை முகாமைப்படுத்துவதற்கான பல வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது. பொருளாதாரம், சூழல் தோற்றங்கள் மற்றும் சமூக தாக்கங்கள் என்பன அறிக்கையிடல் செயலாக்கத்தில் போதுமானளவு விளித்துரைக்கப்பட்டுள்ளன. இந்த மூலதன முகாமைத்துவ அறிக்கைகள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 44 முதல் 113 இல் வழங்கப்பட்டுள்ள முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வின் கீழ் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

## 12. நிலுவையிலுள்ள வழக்காடல்கள்

கம்பனியின் வழக்கறிஞர்களுடனான கலந்துரையாடலுடன் உருவாக்கப்பட்ட பணிப்பாளர்களது அபிப்பிராயத்தின் பிரகாரம், கம்பனிக்கு எதிராக நிலுவையிலுள்ள வழக்காடல்கள் கம்பனியின் அறிக்கையிடப்பட்ட நிதியியல் விளைவுகளிலோ அல்லது கம்பனியின் எதிர்கால செயற்பாட்டிலோ எவ்விதமான பொருண்மையான தாக்கத்தினையும் ஏற்படுத்தாது. கம்பனிக்கு எதிராக நிலுவையிலுள்ள வழக்காடல்களின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 303 இல் காணப்படும் குறிப்பு 50.1.1 இல் வழங்கப்பட்டுள்ளன.

## 13. மனித வளங்கள்

கம்பனியானது ஒரு முற்றிலும் பாரபட்சமற்ற பணிக்கமர்த்தல் கொள்கையினை கடைப்பிடிப்பதுடன், இது தனிநபர்களுக்கு மதிப்பளிப்பதுடன் பால், இனம் அல்லது மதம் என்பவற்றைப் பொருட்படுத்தாது தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது.

31 மார்ச் 2022 இல் மொத்தமாக 2,245 நபர்கள் கம்பனியின் பணியில் (31 மார்ச் 2021 இல் 2,343 நபர்கள்) இருந்தார்கள்.

## 14. சாதனங்களின் இணைப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு

*(சிறந்த நடைமுறையின் கோவை G.1, G.2, G.3)*

போதுமான நிபுணத்துவம் மற்றும் அதிகாரத்துடன் ஒரு தகவல் பாதுகாப்பு அதிகாரியினை (த.பா.அ.) கம்பனி நியமித்துள்ளதாக சபை உறுதிப்படுத்துவதுடன் சைபர் இடர் முகாமைத்துவத்தினை கலந்துரையாடுவதற்காக சபைக் கூட்ட நிகழ்ச்சிநிரலில் வழக்கமான மற்றும் போதுமான நேரம் ஒதுக்கப்படுகின்றது. தொடர்புடைய தகவல்கள் பக்கம் 136 இல் உள்ள கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 15. அறிக்கையிடப்பட்ட காலத்தின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகளின் விபரங்கள் பக்கம் 339 இலுள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 58 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 16. பட்டியலிடல் விதிகளின் விதி 7.6 இல் உள்ள ஆண்டறிக்கையின் உள்ளடக்கத்திலான தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு

| விதி குறிப்பீடு | வெளிப்படுத்தத் தேவையான தகவல்கள் | இணக்கப்பாட்டின் நிலைமை | பக்கக் குறிப்பீடு |
|---|---|---|---|
| 7.6 (i) | நிதியாண்டின்போது கம்பனியின் பணிப்பாளர்களாய் இருந்தோரின் பெயர்கள் | ✓ | 117 - 120 |
| 7.6 (ii) | இவ்வாண்டில் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனங்களின் பிரதான நடவடிக்கைகள் | ✓ | 4, 215 |
| 7.6 (iii) | வருடத்தின் இறுதியில் காணப்பட்ட 20 பாரிய பங்குதாரர்களின் தகவல்கள் | ✓ | 72 |
| 7.6 (iv) | பொது உரித்துவச் சதவீதம் | ✓ | 69 |
| 7.6 (v) | பங்குகில் பணிப்பாளர்களது மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் உரித்துடைமை | ✓ | 73 |
| 7.6 (vi) | பொருண்மையான எதிர்வரும் இடர் காரணிகள் தொடர்பான தகவல்கள் | ✓ | 176 - 195 |
| 7.6 (vii) | பணியாட்கள் மற்றும் தொழில்துறை உறவுகள் தொடர்பான பொருண்மையான சிக்கல்களின் விபரங்கள் | மீளாய்வாண்டில், பணியாட்கள் மற்றும் தொழில்துறை உறவுகள் தொடர்பான பொருண்மையான சிக்கல்கள் காணப்படவில்லை. | |

| விதி குறிப்பீடு | வெளிப்படுத்தத் தேவையான தகவல்கள் | இணக்கப்பாட்டின் நிலைமை | பக்கக் குறிப்பீடு |
|---|---|---|---|
| 7.6 (viii) | வருட இறுதியிலான கட்டிடங்கள் / காணி உரித்துவங்கள் மற்றும் முதலீட்டு ஆதனங்களிலான தகவல்கள் | ✓ | 279 - 280 |
| 7.6 (ix) | வருட இறுதியில் கூறப்பட்ட மூலதனத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் பங்குகளின் எண்ணிக்கை | ✓ | 70 |
| 7.6 (x) | ஒவ்வொரு வகுப்பிலுமான உரித்துவ பிணையங்களின் உரித்துடைமையாளர்களின் எண்ணிக்கையிலான பங்களிப்பு அட்டவணை மற்றும் தொடர்புடைய தகவல்கள் | ✓ | 71 |
| 7.6 (xi) | உரித்துவம், கடன் என்பவற்றிலான விகிதாசாரங்கள் மற்றும் சந்தை விலைத் தகவல்கள் மற்றும் கடன் தரப்படுத்தலிலான மாற்றம். | ✓ | 69, 71, 72, 73, 74 |
| 7.6 (xii) | கம்பனியின் அல்லது அதன் துணை நிறுவனங்களின் நிலையான சொத்துக்களிலான கணிசமான மாற்றங்கள் | ✓ | 276-277 |
| 7.6 (xiii) | இவ்வருடத்தில் ஒரு பொது வழங்கல், உரிமை வழங்கல் மற்றும் ஒரு தனிப்பட்ட ஒதுக்கீடு ஊடான நிதி திரட்டல்களின் விபரங்கள் | இவ்வருடத்தில் ஒரு பொது வழங்கல், உரிமை வழங்கல் மற்றும் ஒரு தனிப்பட்ட ஒதுக்கீடு ஊடாக நாம் நிதியினை திரட்டவில்லை. | |
| 7.6 (xiv) | பணியாட்கள் பங்கு உரித்துடைமை அல்லது பங்குத் தெரிவுரிமை திட்டங்கள் தொடர்பான தகவல்கள் | தற்போது கம்பனியில் ஏதேனும் பங்கு உரித்துடைமை அல்லது பங்குத் தெரிவுரிமை திட்டங்கள் காணப்படுவதில்லை. | |
| 7.6 (xv) | பட்டியலிடல் விதிகளின் பிரிவு 07 இன் 7.10, 7.10.5c. and 7.10.6 c இன் பிரகாரம் கூட்டாண்மை ஆளுகை நடைமுறை தொடர்பான வெளிப்படுத்தல் | ✓ | 139-140 |
| 7.6 (xvi) | உரித்துவத்தின் 10% இனை விஞ்சும் அல்லது நிறுவனத்தின் மொத்த சொத்துக்களின் 5% இனை விஞ்சும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் | ✓ | 308-314 |

## 17. தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

*(கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள் பிரிவு 9)*

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரிவு 9 இன் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விதிகளுடன் இணங்கியுள்ளதென பணிப்பாளர்கள் பிரகடனம் செய்கின்றார்கள்.

## 18. செயல்நிலை தொடர்ச்சி

*(சிறந்த நடைமுறைக் கோவை D1.4)*

குழுமத்தின் முகாமைத்துவமானது ஒரு செயல்நிலை தொடர்ச்சியாக தொடர்வதற்கான அதன் ஆற்றலில் ஒரு மதிப்பீட்டினை மேற்கொண்டு அது வருகின்ற எதிர்காலங்களில் வணிகத்தினை தொடர்வதற்கான வளங்களைக் கொண்டுள்ளது என திருப்திப்படுகின்றார்கள். மேலும், ஒரு செயல்நிலை தொடர்ச்சியாக தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கணிசமான சந்தேகத்தினை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் பொருண்மையான உறுதியின்மைகள் குறித்து முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்கள் ஒரு செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்படுகின்றன.

31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படையினை தீர்மானிப்பதில், குழுமக் கம்பனிகளில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்பார்க்கும் கோவிட்-19 இன் விளைவுகள் மற்றும் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பயன்படுத்தவதற்கான பொருத்தம் என்பவற்றை கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் முகாமைத்துவம் மதிப்பீடு செய்துள்ளது.

எதிர்பார்த்த வருமானம், கிரய முகாமைத்துவம், இலாபகரத்தன்மை, அவசியமற்ற மூலதனச் செலவினங்களை ஒத்திப்போடுவதற்கான ஆற்றல், பயன்படுத்தப்படாத கடன் வசதிகள் மற்றும் ஆகக்குறைந்த சாத்தியமான தாக்கத்துடன் வணிகம் தொடர்வதனை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்தும் சேவைகளை வழங்குவதற்கான ஆற்றல் தொடர்பான பன்முக அழுத்தப் பரீட்சை காட்சி நிலைகளின் கீழ் ஒரு பரவலான காரணிகளைக் கருத்திற்கொண்டு அதன் வணிகத்தின் மீளெழும் தன்மையினை குழுமம் மதிப்பீடு செய்தது. குழுமத்தின் ஒவ்வொரு துறைக்குமான கண்ணோட்டத்தினை உரித்துடைமைக் கம்பனியின் சபைக்கு முன்னிலைப்படுத்தியதன் பின்னர், முகாமைத்துவத்தினால் மேற்குறிப்பிட்டவற்றின் பின்னராக மதிப்பீடு மற்றும் விளைவுகளின் பரவல் மற்றும் நிகழும்தன்மை ஆகியவற்றை கருத்திலெடுத்து முகாமைத்துவமானது கம்பனி வரும் எதிர்காலங்களில் செயற்பாட்டு வாழ்வியலை தொடர்வதற்கு போதுமையான வளங்களைக் கொண்டுள்ளது என முகாமைத்துவம் திருப்திப்படுவதுடன் இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை தொடர்ந்தும் கடைப்பிடித்தது.

## 19. ஆண்டுப் பொதுக் கூட்டம்

செப்டம்பர் 07, 2022 இல் 10 ஆவது மாடி, இலக்கம் 1161, மருதானை வீதி, கொழும்பு 08 இல் அமைந்துள்ள பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி இன் தலைமைக் காரியாலயத்திலுள்ள சபையின் அறையில் 26 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் ஒரு இணையவழி கூட்டமாக இடம்பெறும். 26 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் தொடர்பான கூட்டத்திற்கான அறிவித்தல் ஆண்டறிக்கையின் பக்கம் 356 இல் வழங்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளையின் பிரகாரம்



**கொரலி பியட்டர்ஸ்**
*பணிப்பாளர்*



**சுஜீவ ராஜபக்ஷ**
*தலைவர்*



**ஷாலினி சில்வா**
*கம்பனி காரியதரிசி*

26 ஜூலை 2022
கொழும்பு

# சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை



"குழுவானது கம்பனிகள் சட்டம், நிதி வணிகச் சட்டம் மற்றும் ஏனைய பொருத்தமான நிதி அறிக்கையிடல் தொடர்பான ஒழுங்குவிதிகள் (SLASs/IFRS போன்றவை) என்பவற்றின் கீழ் நிதி அறிக்கையிடல் தேவைப்பாடுகள், தகவல் தேவைப்பாடுகள் என்பவற்றுடன் கம்பனியின் இணக்கப்பாட்டினை மதிப்பீடு செய்தது".

கம்பனியினது சபை கணக்காய்வுக் குழு ("கணக்காய்வுக் குழு" அல்லது "குழு) 31.03.2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான அதன் அறிக்கையினை முன்னிலைப்படுத்துகின்றது. இந்த அறிக்கையானது பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

### வருகையின் தொகுப்பு

இவ்வாண்டில், சபை கணக்காய்வுக் குழுவானது இரண்டு சுயாதீன மற்றும் ஒரு நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளதுடன் இது முறைமைப்படுத்துபவர்களினால் குறிப்பிட்ட தொகுப்பு தேவைப்பாடுகளுடன் ஒத்திசைவாயுள்ளது. குழுவின் நடைமுறை அங்கத்தவர்கள் நிதியியல் விடயங்களில் திறமையுள்ளவர்கள் மற்றும் சமீப மற்றும் பொருத்தமான அனுபவங்களையும் கொண்டுள்ளார்கள் என சபை திருப்திபடுகின்றது.

சபை கணக்காய்வு குழுவின் கூட்டங்களின் வருகை (காலாண்டு தோறும் அல்லது தேவைக்கேற்றவாறு)

| இல. | பணிப்பாளரின் பெயர் | நிறைவேற்றுநர் | நிறைவேற்றுநரல்லாத | சுயாதீன | சுயாதீனமற்ற | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | செல்வி. மீரியம் கொரலி பியட்டர்ஸ் - குழுவின் தலைவர் | | ✓ | ✓ | | 12/12 |
| 2. | திரு. யு.எல்.அசோகா டபிள்யு பண்டார | | ✓ | ✓ | | 12/12 |
| 3 | திரு. அசாம் ஏ. ஹாமத் | | ✓ | | ✓ | 10/12 |

அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 117 முதல் 120 வரை வழங்கப்பட்டுள்ளன.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைமை, திரு. உதேஷ் குணவர்தன, சபையின் கணக்காய்வுக் குழுவுக்கு காரியதரிசியாக செயலாற்றுகின்றார்.

குழுவானது 31 மார்ச் 2020 இல் நிறைவடைந்த நிதியாண்டில் பன்னிரண்டு (12) கூட்டங்களை நடாத்தியது. இந்த கூட்டங்களின் நடவடிக்கைகள், கலந்துரையாடப்பட்ட விடயங்களது போதுமான விபரங்களுடன் வழக்கமாக சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது. கம்பனியின் வெளிவாரி கணக்காய்வாளர்களின் பிரதிநிதிகள்; கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் நட்வர். ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் இவ்வருடத்தில் இரண்டு (02) கூட்டங்களில் பங்குபற்றினார்கள். கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஏனைய அங்கத்தவர்கள் தேவையானபோது வரவேற்பின் பேரில் கூட்டங்களில் சமூகமளிக்கின்றார்கள்.

மீளாய்வாண்டில் கூட்டங்களில் வருகையானது திருப்திகரமாயிருந்தது.

நிதியாண்டு 2021/22 இல் குழுவின் நடவடிக்கைகள்

### குழுவின் வரையறை நியதிகள்

சபை கணக்காய்வுக் குழுவானது பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர்கள் சபையினால், நிதி அறிக்கையிடலிலான நேர்மை, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளிலான போதுமானதன்மை, சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் இணக்கப்பாட்டினை மதிப்பீடு செய்தல் என்பவற்றில் சபைக்கு துணையளிப்பதற்காகவும் மேற்பார்வைக்காகவும் நியமிக்கப்படுகின்றது.

குழுவின் தொகுப்பு, பொறுப்புக்கள் மற்றும் அதிகாரம் என்பன குழுவின் வரையறை நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இது குழுவின் செயற்பாடுகள் மற்றும் அக்கறைகளில் ஏதேனும் அபிவிருத்திகளை விளித்துரைப்பதற்காக வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றன. குழுவின் வரையறை நியதிகள் கடைசியாக மார்ச் 2020 இல் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

குழுவானது ஏதேனும் விடயத்தில் புலனாய்வு செய்வதற்கும், பதிவுகள், தரவுகள் மற்றும் அறிக்கைகளை தடையின்றி அணுகுவதற்கும் மற்றும் முகாமைத்துவம் மற்றும் பணியாட்களிடமிருந்து கடமையினை நிறைவேற்றுவதற்கு அவசியம் எனக் கருதுகின்ற தகவல்களை பெறுவதற்கும் தெளிவான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. கம்பனியின் செலவில் வெளிவாரி தொழில்சார் ஆலோசனையினைப் பெறுவதற்கு குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் உப குழுக்களை உருவாக்கி அவற்றிற்கு அதிகாரமளிப்பதற்கும் இயலுமையாக்கியுள்ளது.

### நிதி அறிக்கையிடல்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள், 2011 இன் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டம், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் என்பவற்றுக்கமைய கம்பனியின் அலுவல்களில் ஒரு மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை பிரதிபலிக்கும் காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு பணிப்பாளர்கள் சபைக்கு குழு துணைபுரிகின்றது.

அவர்களது மேற்பார்வை பொறுப்பினை நிறைவேற்றுவதில் குழுவானது கம்பனியின் இடைக்கால மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்து கலந்தாலோசித்தது, கணக்கீட்டுக் கொள்கைகளின் ஏற்புடைமை, குறிப்பிட்ட மதிப்பீடுகள் மற்றும் கருத்துக்களை மதிப்பீடு செய்ததுடன், இ.ம.வ. பணிப்புரைகள் மற்றும் LKAS/SLFRS அடிப்படையில் இலாபக் கணக்கிணக்கத்தினையும் விவேகமான விகிதாசாரங்களில் பங்கிலாப பிரகடனங்களின் தாக்கம் என்பவற்றை மீளாய்வு செய்தது.

நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட எதிர்பார்க்கும் கடன் நட்டங்களுக்கான ஏற்பாட்டின் போதுமையினை கோவிட்-19 தொற்றின் சாத்தியமான பாதிப்புக்கள் மற்றும் பொருளாதார மீட்சிக்காக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் திட்டங்கள் என்பவற்றை கருத்திலெடுத்து மதிப்பிடுதல் உள்ளடங்கலாக குழுவானது வலுக்குன்றல் கொள்கை கையேட்டினை மீளாய்வு செய்தது.

## வெளிவாரி கணக்காய்வு

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட யாரேனும் ஒருவரினால் கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற தேவைப்பாட்டினைக் கொண்டுள்ளது. இதன் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் நிதியாண்டு 2021/22 இற்கான வெளிவாரி கணக்காய்வினை செயலாற்றுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு துணையளிப்பதற்காக நட்வர். ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் நியமிக்கப்பட்டுள்ளதை கம்பனிக்கு அறிவித்தார். அரசியலமைப்பின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் கம்பனியின் வெளிவாரி கணக்காய்வாளர் ஆதலால், வெளிவாரி கணக்காய்வாளரை ஈடுபடுத்துவதில் குழுவுக்கு எந்தவித பங்களிப்பும் இல்லை.

குழுவானது நிதியாண்டின்போது வெளிவாரி கணக்காய்வாளர்களை இரண்டு தடவைகள் சந்தித்து வருடாந்த கணக்காய்வினை நடாத்துவதில் கடைப்பிடிக்கவேண்டிய கணக்காய்வுத் திட்டம், நோக்கெல்லை மற்றும் பிரேரிக்கப்பட்ட முறைமை என்பவற்றை கலந்துரையாடியது. பொருண்மையான சிக்கல்கள், பிரச்சனைகள் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் பிரசன்னமின்றி கணக்காய்வுக் குழுவுடன் மேலும் கலந்துரையாடப்பட விரும்பும் சந்தேகங்கள் பற்றி எழுப்புவதற்கான வாய்ப்பு வெளிவாரி கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்பட்டது.

குழுவானது கணக்காய்வாளர்களினால் வழங்கப்படும் கணக்காய்வு அல்லாத சேவைகளுக்கான கொள்கையினை மீளாய்வு செய்தது, இது அத்தகைய செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளினுள் காணப்படாதிருத்தல் மற்றும் அத்தகைய சேவைகளின் வழங்கலானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட வெளிவாரி கணக்காய்வாளர்களின் சுயாதீனத்தன்மை மற்றும் புறநிலைத்தன்மை என்பவற்றை வலுக்குன்றலுக்குள்ளாக்காது இருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகும்.

குழுவானது வெளிவாரி கணக்காய்வாளர்களது முகாமைத்துவக் கடிதங்கள் மற்றும் அரசியலமைப்பின் பிரிவு 154 (6) இன் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை ஆகியவற்றுடன் அவற்றிற்கான முகாமைத்துவத்தின் மறுமொழியினையும் மீளாய்வு செய்தது. முகாமைத்துவக் கடிதம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகள் முகாமைத்துவத்தினால் அமுல்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவற்கான நடவடிக்கையினையும் குழு முன்னெடுத்தது.

## உள்ளகக் கணக்காய்வு

ஒரு தனிப்பயனுடைய உள்ளகக் கணக்கய்வுப் பிரிவானது உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டினை மேற்கொண்டு கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடுகின்றது. உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடானது குழு கணக்காய்வு செய்யும் நடவடிக்கைகளிலிருந்து சுயாதீனமானது என்பதை குழு உறுதிப்படுத்துவதுடன் பிரிவானது அதன் பணியினை சுயாதீனமாக செயலாற்றுவதற்கு அவசியமான அதிகாரத்தினைக் கொண்டுள்ளதனையும் உறுதிப்படுத்துகின்றது.

குழுவானது நிதியாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு திட்டம் மற்றும் மூலோபாயத்தினை மீளாய்வு செய்து அங்கீகரித்தது. கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது வணிக அலகுகளில் இயங்கலை மற்றும் தளத்திலான பரிசீலனைகளை மேற்கொண்டது. குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட சீராக்கல் செயற்பாடுகள் குழுவின் கலந்தாராய்விற்காக அறிக்கையிடப்படுகின்றது. குழுவானது பரிந்துரைகளை மதிப்பீடு செய்து அத்தகைய பரிந்துரைகளின் அமுலாக்கலை பின்தொடர்ந்தது. குழுவானது நிறைவேற்று முகாமைத்துவத்தின் பிரசன்னமின்றி உள்ளகக் கணக்காய்வாளர்களை சந்தித்தது.

## முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு

கம்பனிகள் சட்டம், நிதி வணிகச் சட்டம் மற்றும் பொருத்தமான நிதி அறிக்கையிடல் தொடர்பான ஒழுங்குவிதிகள் (SLASs/IFRS போன்றவை) மற்றும் தேவைப்பாடுகளின் கீழான நிதி அறிக்கையிடல் தேவைப்பாடுகள், தகவல் தேவைப்பாடுகள் எனபவற்றுடன் கம்பனியின் இணக்கப்பாட்டினை குழு மதிப்பீடு செய்தது. இணக்கப்பாட்டு அதிகாரி மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களிலான சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை அத்தகைய சட்டம் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாட்டினை கண்காணிப்பதற்காக குழு ஆராய்ந்து பார்த்தது.

குழுவானது இலங்கை மத்திய வங்கியின் சட்டரீதியான பரிசீலனை அறிக்கைகளின் பரிந்துரைகள் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் மறுமொழியினையும் அவற்றின் அமுலாக்கலின் முன்னேற்றத்தினையும் கண்காணித்தது.

## உள்ளகக் கட்டுப்பாடுகள்

கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளது போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை மதிப்பிடுவதில் குழுவிற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது துணையளித்தது. குழுவானது வெளிவாரி கணக்காய்வாளர்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளுடன் அவற்றிற்காக முகாமைத்துவத்தின் மறுமொழியினையும் மீளாய்வு செய்தது.

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையிலான அறிக்கையானது ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்படுவதற்காக குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

## உட்குறை உரைத்தல்

கம்பனியின் உட்குறை உரைத்தல் பாதுகாப்பு கொள்கையானது கூட்டாண்மை மோசடி இடர் முகாமைத்துவத்திற்கான மார்க்கத்தினை வழங்குவதற்கான நோக்கத்தினைக் கொண்டதாகும். உட்குறை உரைப்பவர்களது கடுமையான இரகசியத்தன்மையினை பராமரிக்கும் உத்தரவாதத்தினைக் கொண்ட உட்குறை உரைப்பவர் பாதுகாப்பு கொள்கையானது குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு கம்பனியின் அக இணையத்தில் பிரசுரிக்கப்பட்டது.

யாரேனும் பணியாள் கம்பனியில் ஏதேனும் முறையற்ற அல்லது சட்டவிரோதமான நடவடிக்கை அல்லது நெறிமுறையற்ற நடைமுறைகளை அவதானித்தால் அல்லது கண்டால், அல்லது அவை பற்றிய நம்பகமன தகவலினை பெற்றால் அத்தகைய நடிவடிக்கையினை அறிக்கையிடுவதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றார்கள்.

நிதி அறிக்கையிடல், உள்ளக் கட்டுப்பாடு அல்லது ஏனைய விடயங்களில் சாத்தியமான ஒழுங்கீனங்கள் பற்றி கம்பனியின் பணியாட்கள் இரகசியமாக அக்கறைகளை எழுப்பக்கூடிய ஏற்பாடுகளை குழு மேலும் மேம்படுத்தியது.

உட்குறை உரைத்தல் மற்றும் ஏனைய வழிகளூடாக அறிக்கையிடப்படும் நிகழ்வுகளில் சுயாதீன புலனாய்வினை நடாத்துவதற்கான அனைத்து பொருத்தமான செயன்முறைகளும் காணப்படுகின்றன.

## குழுமத்தின் மதிப்பீடு

சபை கணக்காய்வுக் குழுவானது அதன் வரையறை நியதிகளினால் பொறுப்பாண்மையளிப்பக்கப்பட்ட அதன் அதிகார நோக்கெல்லையினுள் அதன் பொறுப்புக்களை மேற்கொண்டது. குழுவானது இந்த பொறுப்புக்களை நிறைவேற்றும் ஒரு மதிப்பீட்டினை பொறுப்பேற்றதுடன் நிதியாண்டில் குழுவானது அதன் பொறுப்புக்களை திருப்திகரமாக மேற்கொண்டுள்ளது என்ற முடிவிற்கு வந்தது.

**மீரியம் கொரலி பியட்டர்ஸ்**
*சுயாதீன பணிப்பாளர் / தலைவர்*
சபை கணக்காய்வுக் குழு

26 ஜூலை 2022
கொழும்பு

# மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் அறிக்கை



"குழுமத்தின் வேதனக் கொள்கையானது நியாயமாக, வெளிப்படைத்தன்மையாக மற்றும் போட்டித்தன்மையாக காணப்படுவதனை உறுதிசெய்வதற்காகவும் மற்றும் வேதனமானது வணிக மூலோபாயத்துடன் இணைந்துள்ளதனையும் நிலைபேறுள்ள செயற்திறனை இயக்குவதனையும் உறுதிப்படுத்துவதற்காகவும் குழு செயலாற்றுகின்றது".

## 2021/22 இல் முன்னிறுத்தம் செய்யப்பட்ட பிரிவுகள்

- கொள்கை மீளாய்வு
- விருதுகள் மற்றும் வேதனம்
- தொடர்வுத் திட்டமிடல்

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 31 டிசம்பர் 2021 திகதியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பணிப்புரை 2021 இன் இலக்கம் 05 கம்பனியினால் மனமுவந்து கடைப்பிடிக்கப்பட்டது.

புதிய கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையானது பெயரிடல் குழு மற்றும் வேதனக் குழு ஆகியவற்றின் பொறுப்புக்கள் இரண்டு தனித்தனியான உப குழுக்களாக எல்லை நிர்ணயிக்கப்பட்டு தனிப்பிரிவாக்கப்படல் வேண்டும் என்ற கட்டாயத்தினைக் கொண்டுள்ளது. எனவே, நடைமுறையிலுள்ள மனித வள வேதனம் மற்றும் பெயரிடல் குழுவானது 27 ஜனவரி 2022 முதல் இடைநிறுத்தப்பட்டு இரண்டு தனித்தனியான சுயாதீன உப குழுக்களின் கீழ் பொறுப்புக்கள் மீள் ஒதுக்கப்பட்டன. அவையாவன,

1. மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு
2. பெயரிடல் குழு

குழுவானது 2021 இன் 05 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைக்கு ஒத்ததாக வரையறை நியதிகளை கடைப்பிடித்துள்ளது.

### வேதனக் கொள்கை

குழுவானது, பணியாட்கள் அவர்களது செயற்திறன், திறமைகள், அனுபவங்கள் மற்றும் பொறுப்பு மட்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் வெகுமதியளிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்காக கம்பனியின் வெகுமதியளித்தல் மூலோபாயத்தினை மேற்பார்வை செய்கின்றது. இது மூலோபாயத்தினை விநியோகிப்பதற்கு சரியான ஆட்களை நிறுத்தி வைப்பதற்கு கம்பனியினை இயலுமையாக்குகின்றது.

சிறந்த ஆளுகைக் கொள்கைகளுடன் ஒத்ததாக எமது வேதனக் கொள்கையானது எமது விரும்பத்தக்க கலாச்சாரத்தினை வலுவூட்டுவதுடன் எமது விழுமியங்களுக்கு இணையான நடத்தையினை ஊக்குவிப்பதுடன் எமது மூலோபாய முன்னுரிமைகளை அடைவதற்கு துணைபுரிவதற்கான உயர்ந்த மட்டத்திலான செயற்திறனை வழங்குவதற்கும் நீடிப்பதற்கும் பணியாட்களை ஊக்குவிக்கின்றது

## குழுவின் குறிக்கோள்

குழுவின் குறிக்கோள் குழுமத்தினால் சமத்துவமான மனித வளக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிசெய்தல் மற்றும் உயர்திறன் படைத்த முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் / பணியாட்களை கவர்வதற்கு, நிறுத்திவைப்பதற்கு மற்றும் ஊக்கமளிப்பதற்காக ஒரு வலுவான வேதன வரம்புறுகையானது உள்ளதுடன், இது கம்பனியின் மூலோபாய இலக்குகளை அடைவதற்கு சாத்தியமாக பங்களிக்கும். இது மு.மு.ஆ., பி.நி.அ. மற்றும் சிரேஷ்ட முகாமைத்திற்கு ஒரு செயற்திறன் அடிப்படையிலான ஊக்கத் திட்டத்தினை கட்டமைத்தல் மற்றும் பங்குதாரர் பெறுமதியினை மேம்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட பொருத்தமான, நீட்டப்பட்ட செயற்திறன் தொடர்பான விதிமுறையினை நிறுவுதல் என்பவற்றை உள்ளடக்கும்.

### தொகுப்பு மற்றும் வருகை

குழுவானது மூன்று நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களைக் கொண்டிருப்பதுடன் இவர்களுள் பெரும்பாலானோர் சுயாதீனமானவர்கள். மீளாய்வாண்டில், மனித வளங்கள் மற்றும் பெயரிடல் குழுவின் அங்கத்துவத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. குழுவின் தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் ஆவார்.

மனித வளங்கள், வேதனம் மற்றும் பெயரிடல் குழு கூட்டங்களுக்கான வருகைகள் (27.01.2022 முதல் இடைநிறுத்தப்பட்டன) (தேவைப்பட்டவாறு காலாண்டுதோறும் இடம்பெற்றது)

| இல. | பணிப்பாளரின் பெயர் | நிறைவேற்றுநர் | நிறைவேற்றுநரல்லாதோர் | சுயாதீனமானவ்கள் | சுயாதீனமற்றோர் | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | யு.எல்.அசோகா டபிள்யு பண்டார (தலைவர்) | | ✓ | ✓ | | 4/4 |
| 2 | செல்வி. மீரியம் கொரலி பியட்டர்ஸ் | | ✓ | ✓ | | 4/4 |
| 3. | ரொஹான் பத்திரகே | | ✓ | | ✓ | 4/4 |

மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுக் கூட்டங்களின் வருகை (இ.ம.வ. ஆல் வழங்கப்பட்ட 2021 இன் 05 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைக்கமைய 27 ஜனவரி 2022 இல் உருவாக்கப்பட்டது) (தேவைப்பட்டவாறு காலாண்டுதோறும் இடம்பெற்றது)

| இல. | பணிப்பாளரின் பெயர் | நிறைவேற்றுநர் | நிறைவேற்றுநரல்லாதோர் | சுயாதீனமானவ்கள் | சுயாதீனமற்றோர் | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | யு.எல்.அசோகா டபிள்யு பண்டார (தலைவர்) | | ✓ | ✓ | | 2/2 |
| 2 | செல்வி. மீரியம் கொரலி பியட்டர்ஸ் | | ✓ | ✓ | | 2/2 |
| 3. | ரொஹான் பத்திரகே | | ✓ | | ✓ | 2/2 |

**வரவேற்றின் மூலம் பங்குபற்றியவர்கள்**
பிரதம நிறைவேற்று அதிகாரி, உ.பொ.மு. - மனித வளங்கள்

**குழுவின் காரியதரிசி**
கம்பனியின் காரியதரிசி குழுவின் காரியதரிசியாக செயலாற்றுகின்றார்.

அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 117 முதல் 120 வரை வழங்கப்பட்டுள்ளன.

**முக்கிய பொறுப்புக்கள்**

சபை அங்கீகரிக்கப்பட்ட குழுவின் வ.நி. முகாமைத்துவ மட்டத்திற்கு மேலான கலந்தாராய்வு தேவைப்படும் மனித வள விடயங்களை விஸ்தரிப்பதற்காக முகாமைத்துவத்திற்கு ஒரு மேடையினை வழங்குகின்றது. இது மீளாய்வுகள் உள்ளடங்கலாக பின்வரும் பரிந்துரைத்தல்களுக்காகவும் ஆகும்:

- ஆளணிக்கொள்கைகள் / ஆட்சேர்த்தல் செயன்முறைகள், பணியாட்களை விருத்திசெய்து ஊக்குவித்தல்;
- ஆட்சேர்த்தல் தேவைப்பாடுகள் மற்றும் தொடர்புடைய மு.மு.ஆ. இன் நியமனங்கள்;
- சம்பளங்கள், படிகள், நலன்கள் மற்றும் மு.மு.ஆ. இற்கு பொருத்தமான ஏனைய வடிவத்திலான பணியாள் வேதனங்கள்;.
- மு.மு.ஆ. இன் தொடர்வு மூலோபாயம்;
- வணிக காரணங்களின் நிமித்தம் முன் இனங்காணப்பட்ட பணியாட்களது பதவிப்பெயர் / தரம் / பங்கு என்பவற்றின் மாற்றம்
- கூட்டாண்மை முகாமைத்துவத்தின் சம்பளங்கள் மற்றும் நலன்களை கட்டமைத்தல் மற்றும் தீர்மானித்தல்; முன் இனங்காணப்பட்ட தரத்திற்குரிய பணிபாட்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள்;
- கூட்டாண்மை முகாமைத்தும் மற்றும் ஆலோசகர்களின் நிலையான காலப் பணியமர்த்தல் ஒப்பந்தங்கள்;
- கூட்டாண்மை முகாமைத்துவத்தின் சேவை நீடிப்புகள்;
- முன் இனங்காணப்பட்ட தரத்திற்குரிய பணியாட்களது வருடாந்த பதவியுயர்வுகள்;
- காசு அல்லாத நலன்கள் உள்ளடங்கலாக வேதனம் மற்றும் நலன்களது வருடாந்த அதிகரிப்புகள்;
- போனஸ்கள் மற்றும் சம்பள திருத்தங்கள். பணியாட்களது கடன்கள் மற்றும் பணியாட்கள் நலன் திட்டங்களை அங்கீகரிக்கப்பதற்கும் மற்றும் மு.மு.ஆ. இனருக்கான இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிறுவுவதற்கான ஆணையினையும் குழு கொண்டுள்ளது.

**பணிப்பாளர்களது வேதனம் தொடர்பான விடயங்கள்**

மனிதவள மற்றும் வேதனக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களின் வேதனத்தினை சபை தீர்மானிப்பதுடன் இது பொருத்தமான முறைமைப்படுத்தல் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். சபை மற்றும் குழுக்களின் கூட்டங்களில் சமூகளிப்பதற்காக நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களுக்கு ஒரு நிலையான படியானது செலுத்தப்படுகின்றது. நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களுக்கு செலுத்தப்படும் கட்டணங்கள் செயற்திறனுடன் இணைக்கப்பட்டதோ அல்லது ஓய்வூதியத்தையோ கொண்டதில்லை. பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணங்களின் விபரங்கள் இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 136 இல் வழங்கப்பட்டுள்ளது.

### 2021/22 இலான நடவடிக்கைகள்

#### கொள்கை மீளாய்வு

மீளாய்வாண்டில் குழுவானது இளைப்பாறுதலின் பின்னர் பணிக்கமர்த்தல் (60 வயதிற்கு முன்னர் இளைப்பாறுதலடைவோர்), ஈடுசெய்கைகள், பதவியுயர்வு மற்றும் கம்பனியின் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் (முக்கிய பொறுப்புள்ள அதிகாரிகள்) நியமனம் தொடர்பான கொள்கைகளை மீளாய்வு செய்தது. இக்கொள்கைகளின் மீளாய்வினை கருத்திலெடுப்பதில், குழுவானது உட்கிடையான அறிவினை தக்கவைப்பதற்கான தேவை குறித்து அக்கறையுடையதுடன் அத்தகைய அறிவானது தடையற்ற உருமாற்றலையும் தொடர்வினையும் உறுதிப்படுத்தும். மேலும், திறமையுள்ள பணியாட்கள் ஊக்கமளிக்கப்படுதலை உறுதிப்படுத்துவதற்கு தேவையான கொள்கைகள் மற்றும் தொழில் முன்னேற்றத்தினை முன்னிறுத்துவதன் மூலம் எதிர்கால தொடர்வுத் தேவைப்பாடுகளை சந்திப்பதற்கு ஒரு ஆற்றல் வழிமுறையானது தயாராயிருக்கும்.

#### தொடர்வுத் திட்டமிடல்

கம்பனியானது தற்போது ஒரு உருமாற்றல் பாதையிலுள்ளதுடன் கம்பனியினுள் கவனமாக திட்டமிடப்பட்ட தொடர்விற்கான தேவையும் காணப்படுகின்றது. கம்பனிக்கான தொடர்வுத் திட்டத்தினை குழுவானது மீளாய்வு செய்து வழியினை வழங்கியுள்ளதுடன் இது பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கம்பனியின் தொடர்வுத் தேவைப்பாடுகளை விளித்துரைப்பதற்காக குழுவானது கொள்கையினுள் பிரேரணைகளுக்கு துணையளிப்பதாக இருந்துள்ளது.

#### வெகுமதிகள் மற்றும் வேதனம்

2019 இலிருந்து அதிகரிப்புகள் கருத்திலெடுக்கப்படாத சூழமைவில் குழு சம்பள அதிகரிப்புகளை மேற்கொள்வதற்கான தேவைக்கு ஆதரவளித்தது. சுயாதீன வேதனங்கள் மற்றும் நலன்கள் மதிப்பாய்வினூடாக சந்தை நிலைமையின் சூழமைவில் பிரேரிக்கப்பட்ட அதிகரிப்புகள் மீளாய்வு செய்யப்பட்டன. அத்தகைய மதிப்பாய்வின் விளைவாக குழு சீரமைக்கப்பட்ட பணியாட்கள் நலன்களையும் மீளாய்வு செய்தது.

#### முடிவுரை

மனித மூலதனத்தினை விருத்திசெய்வதில் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் முறைமைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் பலப்படுத்துதல் மூலம் குழுவானது பணிப்பாளர் சபைக்கு தொடர்ந்தும் துணைபுரிவதுடன், பணியாட்களுக்கு அவர்களது தொழில் அபிவிருத்திக்காக குழுமத்தினுள் புதிய திறன்கள் மற்றும் அறிவினை மேம்படுத்தல் மற்றும் பெற்றுக்கொள்வதற்காக வாய்ப்புக்களை வழங்குகின்றது. வேதனம் தொடர்பான திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் குழுமத்தின் வணிக மூலோபாயத்திற்கு துணைபுரிவதுடன் பங்காளிகளது நலன்களுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டிருப்பதனை குழு தொடர்ந்தும் உறுதிசெய்யும்.

**யு.எல்.அசோகா டபிள்யு பண்டார**
*குழுவின் தலைவர்*

26 ஜூலை 2022
கொழும்பு

# தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவின் அறிக்கை



"எமது முக்கிய முன்னிறுத்தமானது அனைத்து குழும தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களும் முறையாக இனங்காணப்பட்டு ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காண்பதனை உறுதிசெய்வதாகும்."

சபை அங்கீகரிக்கப்பட்ட வரையறை நியதிகளுடன் (வ.நி.)செயற்படும் கம்பனியின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவானது பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்காக தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை ஆளுகை செய்யும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கடுமையான இணக்கப்பாட்டினை உறுதிசெய்கின்றது.

### தொகுப்பு மற்றும் குழுவின் கூட்டங்கள்

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவானது மூன்று நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களைக் கொண்டுள்ளதுடன் இவர்களுள் குழுவிற்கான தலைவர் உள்ளடங்கலாக இரண்டு அங்கத்தவர்கள் சுயாதீன பணிப்பாளர்களாவார்கள்.

கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர், இணக்கப்பாட்டு அதிகாரி மற்றும் பிரதம முகாமையாளர் - நிதி ஆகியோர் வரவேற்பின் பேரில் குழுவின் கூட்டங்களில் சமூகமளிக்கின்றார்கள். குழுவின் நடவடிக்கைகள் சபைக்கு அறிக்கையிடப்படுவதுடன் குழுவின் தலைவர் சபையின் கலந்தாராய்வு தேவையான முக்கியமான விடயங்களை சபைக்கு எடுத்துரைப்பார்.

இவ்வாண்டில் குழு நான்கு தடவைகள் கூடியதுடன் இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களையும் மீளாய்வு செய்தது. அங்கத்தவர்கள் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை ஆளுகை செய்யும் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை மிகவும் ஆழமாக கலந்தாராய்ந்தது. குழுவின் நடவடிக்கைகள் பணிப்பாளர்கள் சபைக்கு வழமையாக அதன் கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகளுடன் அறிக்கையிடப்படுகின்றன.

நிதியாண்டில் கூட்டத்திற்கான வருகை

தொடர்புடை தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவின் கூட்டங்களிலான வருகை (தேவையானவாறு காலாண்டு தோறும் இடம்பெறுகின்றது)

| இல. | பணிப்பாளரின் பெயர் | நிறைவேற்றுநர் | நிறை. அல்லாதோர் | சுயாதீனமானவர்கள் | சுயாதீனமற்றோர் | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | சனுர ஜே. விஜேதிலக்க (தலைவர்) | | ✓ | ✓ | | 4/4 |
| 2. | யு.எல்.அசோகா டபிள்யு பண்டார - அங்கத்தவர் | | ✓ | ✓ | | 4/4 |
| 3 | சுதர்ஷன ஹாங்கம (24 ஆகஸ்ட் 2021 இல் பதவி விலகினார்) | | ✓ | | ✓ | 0/1 |
| 4. | ரொஹான் பத்திரகே - அங்கத்தவர் (24 செப்டம்பர் 2021 இல் நியமிக்கப்பட்டார்) | | ✓ | | ✓ | 2/2 |

### குழுவிற்கான காரியதரிசி

கம்பனியின் காரியதரிசி குழுவின் காரியதரிசியாக செயற்படுகின்றார்.

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழுவின் அங்கத்தவர்களது சுருக்கமான சுயவிபரங்கள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 117 முதல் 120 வரை வழங்கப்பட்டுள்ளன.

**2021/22 வருடத்திற்கான முக்கிய சிறப்பம்சங்கள்**

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 31 டிசம்பர் 2021 திகதியிடப்பட்ட 2021 இன் 05ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையினை கம்பனி மனமுவந்து கடைப்பிடித்துள்ளது.

- பங்கு வர்த்தக கொள்கையின் மீளாய்வு மற்றும் பரிந்துரைத்தலுடன் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர்கள், மு.மு.ஆ. மற்றும் அனைத்து பணியாட்களுக்கும் கம்பனியின் பிணையங்களில் வர்த்தகம் தொடர்பான வழிகாட்டிகளை வழங்குதல்.
- தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கை மற்றும் கையேட்டினை மீளாய்வு செய்தமை
- மீளாய்வுக் காலப்பகுதியில் கம்பனியின் அனைத்து தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை மீளாய்வு செய்தமை

### குழுவின் நோக்கெல்லை

#### பணிப்பாணை

குழுவானது அனைத்து உத்தேசிக்கப்பட்டுள்ள தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களையும் முன்கூட்டியே மீளாய்வு செய்கின்றது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளுடன் இணங்கியுள்ள வரையறை நியதிகளில் தெளிவாக விலக்களிப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களை குழு மீளாய்வு செய்யாது.

குழுவின் செயற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன,

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளினால் தெளிவாக விலக்களிக்கப்பட்டுள்ளவை தவிர கம்பனியின் அனைத்து உத்தேசிக்கப்பட்டுள்ள தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களையும் முன்கூட்டியே மீளாய்வு செய்கின்றது.

- கம்பனியின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை மீளாய்வு செய்வதற்காக கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை கடைப்பிடித்தல் மற்றும் நடைமுறையிலுள்ள கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை மேற்பார்வை செய்தல்..
- பட்டியலிடல் விதிகளின் பிரிவு 9.1 மற்றும் 9.4 இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு முன்னர் ஒரு விசேட தீர்மானம் மூலம் கம்பனியின் பங்குதாரர்களிடமிருந்து அங்கீகாரம் தேவையானபோது முழுச் சபைக்கும் பரிந்துரைத்தல்.
- நடைபெற்றுக்கொண்டிருக்கும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கம்பனியின் பணிப்பாளர்களினால் பின்பற்றப்படவேண்டிய வழிகாட்டிகள்.
- ஒரு உத்தேசிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கலின் ஏதேனும் கலந்தரையாடலில் ஒரு பணிப்பாளர் தொடர்புடைய தரப்பாகக் காணப்படுமிடத்து அவர் அதில் பங்குபற்றாமலிருப்பதனை உறுதிசெய்தல், அத்தகைய கொடுக்கல் வாங்கலில் குழுவிற்கு தகவல்களை வழங்கும் நோக்கத்திற்காக மாத்திரம் குழுவினால் அத்தகைய பணிப்பாளரிடம் வேண்டப்பட்டாலொழிய அவ்விடயத்திலான வாக்கெடுப்பில் செல்வாக்கு செலுத்தாது பங்குபற்றலாம்.
- பொருத்தமான விதிகள் / ஒழுங்குவிதிகளில் வேண்டப்பட்டவாறு உடனடி சந்தை வெளிப்படுத்தல்கள் மற்றும் ஆண்டறிக்கையிலான வெளிப்படுத்தல்கள் நேரத்துடன் மற்றும் போதுமான விபரங்களுடன் வெளிப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.
- தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள், ஏதேனும் இருப்பின், அவை கம்பனிக்கும் மற்றும் அதன் தொடர்புடைய தரப்பினருக்கும் இடையே எழக்கூடிய ஏதேனும் முரண்பாட்டு நலனின் தாக்கத்தினை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கான விதத்தில் அவை நடாத்தப்படுவதனை உறுதிசெய்தல்.
- குழுவின் வ.நி.களை அது எந்நேரமும் துறையின் சிறந்த நடைமுறைகளை பிரதிபலிப்பதனை உறுதிசெய்வதற்காக காலாகாலம் மீளாய்வு செய்தல்.
- அதன் கடமைகளை செயற்படுத்துவதற்கு பொருத்தமானது மற்றும் அவசியமெனக் குழு கருதுகின்ற ஏனைய நடவடிக்கைகளை செயலாற்றல் மற்றும் சபையினால் குழுவிற்கு காலாகாலம் ஒப்படைக்கப்படக்கூடிய ஏனைய பொறுப்புக்களை பொறுப்பேற்றல்.

### அதிகாரம்

குழுவின் பரிந்துரைகள் சபைக்கு அவசியமானபோது இறுதித் தீர்மானங்களை எடுப்பதற்காக அறிக்கையிடப்படுகின்றது. கம்பனி காரியதரிசியினால் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியின் செலவில் அவசியமென கருதும்போது தொழில்சார் ஆலோசனைகளைப் பெறுவதற்கு சபையானது குழுவிற்கு அதிகாரமளித்துள்ளது.

## தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களிலான கொள்கைகள் மற்றும் செயன்முறைகள்

### கொள்கை

பட்டியலிடல் விதிகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் LKAS 24 இற்கு ஒத்ததாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையில் எந்த வகையைச் சார்ந்த நபர்கள் "தொடர்புடைய தரப்பினர்களாக" கருதப்படுவார்கள் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கை கம்பனியின் ஒவ்வொரு பணிப்பாளர் மற்றும் மு.மு.ஆ. இடமிருந்து அவர்களுடன் தொடர்புடைய தரப்பினரை இனங்காண்பதற்காக சுய-பிரகடனங்களைப் பெறுதல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

தனிப்பட்ட உறவுகள் வெளிவாரி இணைப்புகள் மற்றும் அவரது சுயாதீன தீர்ப்பில் செல்வாக்கு செலுத்தக்கூடிய பொருண்மையான விடயங்களிலான அக்கறைகள் என்பவற்றிலிருந்து எழுகின்ற ஒரு சாத்தியமான அல்லது மெய்யான முரண்பாட்டு நலனை உடையவரா என்று சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் தீர்மானித்தல் வேண்டும் என்று வணிக நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகள் வேண்டுகின்றது. அத்தகைய சாத்தியமான அல்லது மெய்யான முரண்பாட்டு நலன்களைக் கொண்ட பணிப்பாளர்கள் அது குறித்து அறிந்த உடனேயே அத்தகைய முரண்பாட்டினை உடனடியாக பணிப்பாளர்கள் சபைக்கு வெளிப்படுத்துதல் வேண்டும்.

### செயன்முறைகள்

தொடர்புடைய தரப்பினர்களுக்கு எவ்விதமான சாதகமான கவனிப்பும் வழங்கப்படாததனை உறுதிசெய்வதற்காக கம்பனியினால் ஒரு இயங்கலை தடுப்பு முறைமையானது அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறைமையானது கம்பனியின் வலையமைப்பு முழுவதும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் மற்றும் தரவுகளை மீட்பதற்கும் கம்பனியினை இயலுமையாக்குகின்றது.

## 2021/22 இலான தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

01 ஏப்ரல் 2021 முதல் 31 மார்ச் 2022 வரையான காலப்பகுதியில் கம்பனியின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை கம்பனி மீளாய்வு செய்ததுடன் கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரிவு 9 இல் குறிப்பிட்டுள்ளவாறு தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விதிகளுடன் இது இணங்கியுள்ளது.

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரிவுகள் 9.1.1, 9.1.2 மற்றும 9.3.2 (a) இல் குறித்துள்ளவாறு கம்பனியானது எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபடவில்லை. பட்டியிலிடல் விதிகளின் பிரிவு 9.3.2 (டி) இன் கீழ்வருகின்ற கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 314 இலுள்ள குறிப்பு 55.5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### பிரகடனம்

பட்டியலிடல் விதிகளின் சுற்றெல்லையினுள் வருகின்ற எவ்விதமான தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கலிலும் 2021/22 காலப்பகுதியில் கம்பனி ஈடுபடவில்லை எனும் பணிப்பாளர்கள் சபையின் பிரகடனமானது பக்கம் 161 இல் காணப்படும் கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.



**சனுர ஜே. விஜேதிலக்க**
*தலைவர்*
தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் மீளாய்வுக் குழு

26 ஜூலை 2022
கொழும்பு

# பெயரிடல் குழுவின் அறிக்கை



"குழுமத்தின் மூலோபாயத்தினை வழங்குவதில் மற்றும் அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் திறனுடன் செயலாற்றுவதற்கான கூட்டுத் திறன்கள் மற்றும் அனுபவத்தினை சபை கொண்டுள்ளதென குழு உறுதிப்படுத்துகின்றது."

### 2021/22 இல் முன்னிறுத்தம் செய்யப்பட்ட பிரிவுகள்

- சபை மதிப்பீடு
- சபை தொடர்வு
- பணிப்பாளர்களின் மீள்தெரிவு

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 31 டிசம்பர் 2021 திகதியிடப்பட்ட 2021 இல் 05 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையினை கம்பனி மனமுவந்து கடைப்பிடித்துள்ளது.

புதிய கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையானது பெயரிடல் குழுவினதும் வேதனக் குழுவினதும் பொறுப்புக்கள் எல்லை நிர்ணயிக்கப்பட்டு இரண்டு தனித்தனியான உப குழுக்களாக இருத்தல் வேண்டும் என்ற பணிப்பாணையினைக் கொண்டதாகும். இதன் பிரகாரம் நடைமுறையிலுள்ள ம.வ. வேதனம் மற்றும் பெயரிடல் குழுவானது 27 ஜனவரி 2022 முதல் நிறுத்தப்பட்டதுடன் பொறுப்புக்கள் பின்வரும் இரண்டு தனித்தனியான சுயாதீன உப குழுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டன,

1. மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு
2. பெயரிடல் குழு

2021 இன் 05 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைக்கு ஒத்ததாக குழுவானது வரையறை நியதிகளை கடைப்பிடித்துள்ளது.

### குழுவின் குறிக்கோள்

சபையின் கட்டமைப்பு, பருமன் மற்றும் தொகுப்பு என்பன தேவைப்படும்போது குழுவினால் மீளாய்வு செய்யப்படுவதுடன் அறிமுகப்படுத்தப்படவேண்டிய ஏதேனும் மாற்றங்கள் தொடர்பாக சபைக்கு பரிந்துரைத்தல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் சபைக்கு அங்கத்தவர்களை தெரிவுசெய்வதில் சபைக்கு ஆலோசனை வழங்குகின்றது. அங்கத்தவர்கள் அவர்களது சொந்த நியமனம் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்படும்போது பங்குபற்றுவதிலிருந்து விலகியிருக்கின்றார்கள்.

### 2021/22 இலான நடவடிக்கைகள்

இவ்வாண்டில் 2021 இன் 05 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பணிப்புரைகளில் (கூட்டாண்மை ஆளுகை) மற்றும் 2021 இன் 05 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பணிப்புரைகளில் (முக்கிய பொறுப்பிலுள்ள நபர்களின் தகமை மற்றும் பொருத்தத்திலான மதிப்பீடு) குறிப்பிட்டுள்ளவாறு முக்கிய பொறுப்பிலுள்ள நபர்களை குழுவானது மீளாய்வு செய்தது.

மு.பொ.ந. மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவமானது 2021 இன் 05 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பணிப்புரைக்கேற்ப (கூட்டாண்மை ஆளுகை) இனங்காணப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சிரேஷ்ட முகாமைத்துவத்தினை தெரிவுசெய்து நியமிக்கும் ஒரு கொள்கையினை குழு பரிந்துரைத்துள்ளதுடன் முறையான வெளிப்படுத்தல் மற்றும் அத்தகைய விடயங்களில் தெளிவினையும் உறுதிப்படுத்தும் சபைக்கு புதிய பணிப்பாளர்களை தெரிவுசெய்யும் மற்றும் நியமிக்கும் கொள்கையினையும் பரிந்துரைத்துள்ளது.

**தொகுப்பு மற்றும் வருகை**

குழுவானது மூன்று நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களை உள்ளடக்கியதுடன் இவர்களில் பெரும்பாலானோர் சுயாதீனமானவர்களாவர். மீளாய்வாண்டின்போது, மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் அங்கத்துவத்தில் எவ்விதமான மாற்றங்களும் காணப்படவில்லை. குழுவின் தலைவர் ஒரு சுயாதீனமான நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் ஆவார்.

மனித வளங்கள், வேதனம் மற்றும் பெயரிடல் குழுவின் கூட்டங்களின் வருகை (27 ஜனவரி 2022 முதல் நிறுத்தப்பட்டது) (தேவைப்பட்டவாறு காலாண்டுதோறும் இடம்பெறுகின்றது).

| இல. | பணிப்பாளரின் பெயர் | நிறைவேற்றுநர் | நிறைவேற்றுநரல்லாதோர் | சுயாதீனமானவர்கள் | சுயாதீனமற்றோர் | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | யு.எல்.அசோகா டபிள்யு பண்டார (தலைவர்) | | ✓ | ✓ | | 4/4 |
| 2 | செல்வி மீரியம் கொரலி பியட்டர்ஸ் | | ✓ | ✓ | | 4/4 |
| 3. | ரொஹான் பத்திரகே | | ✓ | | ✓ | 4/4 |

பெயரிடல் குழுக் கூட்டங்களின் வருகை (இ.ம.வ. இனால் வழங்கப்பட்ட 2021 இன் 05 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைக்கேற்ப 27 ஜனவரி 2022 இல உருவாக்கப்பட்டது) (தேவைப்பட்டவாறு காலாண்டுதோறும் இடம்பெறுகின்றது)

| இல. | பணிப்பாளரின் பெயர் | நிறைவேற்றுநர் | நிறைவேற்றுநரல்லாதோர் | சுயாதீனமானவர்கள் | சுயாதீனமற்றோர் | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | யு.எல்.அசோகா டபிள்யு பண்டார (தலைவர்) | | ✓ | ✓ | | 2/2 |
| 2 | செல்வி மீரியம் கொரலி பியட்டர்ஸ் | | ✓ | ✓ | | 2/2 |
| 3. | ரொஹான் பத்திரகே | | ✓ | | ✓ | 2/2 |

**குழுவின் காரியதரிசி**

கம்பனியின் காரியதரிசி குழுவின் காரியதரிசியாக செயலாற்றுகின்றார்.

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான பெயரிடல் குழுவின் அங்கத்தவர்களின் சுருக்கமான சுயவிபரங்கள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 117 முதல் 120 வரையில் வழங்கப்பட்டுள்ளன.

**முக்கிய பொறுப்புகள்**

- சபைக்கு பணிப்பாளர்களை நியமிப்பதற்கான மற்றும் மீள் நியமிப்பதற்கான பொருத்தமான வழிகாட்டிகளை பிரேரித்தல்.
- குழுவின் தலைவர் சபையின் பயனுறுதித்தன்மை குறித்து சுயாதீன அங்கத்தவர்களுடன் கலந்துரையாடி அவர்களது மறுமொழியினை சபையின் தலைவருக்கு வழங்குகின்றார்.
- கூட்டாண்மை ஆளுகை சட்டரீதியான வழிகாட்டிகளுடனான இணக்கப்பாட்டினை கண்காணித்தல்.
- பி.நி.அ./பொ.மு. இன் செயற்திறனை வருடாந்தம் மீளாய்வினை நடாத்துவதற்கான செயல்முறையினை நிறுவுதல்.

**அதிகாரம்**

குழுவின் பரிந்துரைகள் சபையின் கவனத்திற்கு இறுதித் தீர்மானத்திற்காக கொண்டு வரப்படுகின்றது. குழுவானது கம்பனி காரியதரிசியினால் ஒருங்கிணைப்பட்ட கம்பனியின் செலவில் தேவைப்படும்போது தொழில்சார் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கான அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.

## தொடர்வுத் திட்டமிடல்

கம்பனியானது தற்போது ஒரு உருமாற்றல் பாதையில் இருப்பதுடன் கம்பனியினுள் கவனமாக தொடர்வுத் திட்டத்தினை மேற்கொள்வதற்கான அவசியத்தினைக் கொண்டுள்ளது. குழுவானது வழிகாட்டலை வழங்கியுள்ளதுடன் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியின் தொடர்வுத் திட்டத்தினை மீளாய்வு செய்தது. கம்பனியின் தொடர்வுத் தேவைப்பாடுகளை விளித்துரைப்பதற்காக கொள்கையினுள் குழுவானது பிரேரணைகளுக்கு ஆதரவளிக்கின்றது.

## பணிப்பாளர்கள் / சிரேஷ்ட முகாமைத்துவத்தின் தெரிவு மற்றும் நியமனம்

புதிய பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் தெரிவு / நியமனத்திற்கு ஒரு முறையான மற்றும் வெளிப்படையான செயன்முறையினை குழு அமுல்படுத்தியுள்ளது. அது சபைக்கு பணிப்பாளர்களது மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினது நியமனம் மற்றும் மீள் நியமனம் தொடர்பாக பரிந்துரைத்தலை மேற்கொள்கின்றது. இது தகமைகள், திறமைகள், சுயாதீனத்தன்மை உள்ளடங்கலான ஆனால் இவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாது ஒரு பணிப்பாளர் தகமையானதும் பொருத்தமானதும் என்பதையும் கருத்திற்கொண்டு கம்பனியின சட்டம் மற்றும் / அல்லது நிதி வணிகச் சட்டம் மற்றும் வேறு ஏதேனும் ஒழுங்குவிதிகளின் பொருத்தமான ஏற்பாடுகளையும் கருத்திலெடுக்கின்றது.

## முடிவுரை

குழுவானது அவசியமான திறன்கள், அறிவு மற்றும் அனுபவத்துடன் சரியான விண்ணப்பதாரியினை தெரிவு செய்வதில் சபைக்கு தொடர்ச்சியாக துணையளிப்பதுடன் கம்பனியின் மூலோபாயத் தேவைகளை சந்திப்பதற்காக விரும்பத்தக்க பன்மயத்தினை உறுதிப்படுத்துகின்றது.

**யு.எல். அசோகா டபிள்யு பண்டார**
*குழுவின் தலைவர்*

26 ஜூலை 2022
கொழும்பு

# சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை



"கோவிட்-19 தொற்றின் நிமித்தம் உருவாகிய சமூக-பொருளாதார சவால்களுக்கு மத்தியில் துறையின கடன் தரங்களின் மட்டங்களது சீர்குன்றல் தொடர்பாக குழுவானது பிரதானமாக அக்கறையடைந்துள்ளது. வருடத்தின் இறுதிப் பகுதியில் குழுவானது பொருளாதார சிக்கலின் காரணமாக சொத்தின் தரத்திலான தாக்கத்தில் முன்னிறுத்தம் செய்தது."

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ முன்னெடுப்புகளுக்கு பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர்கள் சபையானது பிரதானமாக பொறுப்பாயுள்ளதுடன், 2021 இன் 05 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பணிப்புரையின் (கூட்டாண்மை ஆளுகை) பிரிவு 10.3 இன் பிரகாரம் கம்பனி மற்றும் குழுமத்தின் இடர் தோற்றுருவத்தின் போதுமை மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதற்காக அதன் அதிகாரத்தினை சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவுக்கு ( ச.ஒ.இ.மு.கு. அல்லது குழு) ஒப்படைத்துள்ளது.

### வரையறை நியதிகள் (வ.நி.)

இலங்கை மத்திய வங்கியினால் டிசம்பர் 2021 இல் வழங்கப்பட்ட 2021 இன் 05 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைக்கு ஒத்ததாக ஆளுகை கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு சூழலிலான மாற்றங்களுக்கு குழு அதன் வ.நி.இனை திருத்தியமைத்தது.

மேற்குறிப்பிட்ட பணிப்புரைக்கு இணங்க வ.நி. குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் / ஒப்படைப்புகள், தொகுப்பு, பொறுப்புகள், கூட்ட அதிர்வெண் மற்றும் குறைநிறைவெண் மற்றும் குழுவின் அறிக்கையிடல் மற்றும் ஏனைய செயன்முறைகளை தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

### தொகுப்பு

ச.ஒ.இ.மு.கு. ஆனது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதுடன் அவர்களின் சுயவிபரங்கள் பக்கங்கள் 119 முதல் 12 வரை வழங்கப்பட்டுள்ளன:

| ச.ஒ.இ.மு.கு. அங்கத்தவரின் பெயர் | பணிப்பாளர் பதவி நிலை |
|---|---|
| திரு. சனுர ஜே.விஜேதிலக்க | குழுவின் தலைவர் (நிறைவேற்றுநரல்லா, சுயாதீன பணிப்பாளர்) |
| திரு. அசாம் ஏ. ஹாமத் | குழுவின் அங்கத்தவர் (நிறைவேற்றுநரல்லா, சுயாதீனமற்ற பணிப்பாளர்) |
| திரு. கே.சி.ஜே.சி.பொன்சேகா | குழுவின் அங்கத்தவர் (நிறைவேற்றுநரல்லா, சுயாதீனமற்ற பணிப்பாளர்) |

**வரவேற்பின் மூலம் வழக்கமாக சமூகமளிப்பவர்கள்**

- பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர்
- சி.பி.பொ.மு. - செயற்பாடுகள்
- பி.பொ.மு. - இடர் மற்றும் கட்டுப்பாடு / பிரதான இடர் அதிகாரி
- பி.பொ.மு. - செயற்பாடுகள்
- பி.பொ.மு. - மீட்டல்கள் மற்றும் நிர்வாகம்
- பி.பொ.மு. - உள்ளகக் கணக்காய்வு
- இணக்கப்பாட்டு அதிகாரி
- பிஎல்சி இன் துணைநிறுவனங்களிலிருந்து முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்கள்
  - பிரதம நிறைவேற்று அதிகாரி - பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி (பீ.இ.)
  - சிரேஷ்ட முகாமையாளர் - பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட்டின் தலைமை
  - பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்டின் பொறுப்பதிகாரி
  - பிரதம நிறைவேற்று அதிகாரி - லங்கன் எலாயன்ஸ் பைனான்ஸ் லிமிட்டட்
  - பணிப்பாளர் - பீபள்ஸ் லீசிங் பிரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட்

**குழுவிற்கான காரியதரிசி**

- பி.பொ.மு. - இடர் மற்றும் கட்டுப்பாடு / பிரதான இடர் அதிகாரி

### கூட்டங்கள்

மீளாய்வாண்டில் குழு ஏழு (07) கூட்டங்களை நடாத்தியது. குழுவின் அங்கத்தவர்களது வருகை பின்வருமாறு.

**சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் வருகை (தேவைக்கேற்ப காலாண்டு தோறும்)**

| இல. | பணிப்பாளரின் பெயர் | நிறைவேற்றுநர் | நிறைவேற்றுநரல்லாத | சுயாதீனமானவர்கள் | சுயாதீனமற்றோர் | கூட்டங்களின் எண்ணிக்கை (சமூகமளித்தோர் /சமூகமளிப்பதற்கு உரிமை உடையோர்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு. சனுர ஜே. விஜேதிலக்க – குழுத் தலைவர் | | ✓ | ✓ | | 7/7 |
| 2. | திரு. அசாம் ஏ. ஹாமத் – குழுவின் அங்கத்தவர் | | ✓ | | ✓ | 6/7 |
| 3 | திரு. கே.சி.ஜே.சி.பொன்சேகா – குழுவின் அங்கத்தவர் | | ✓ | | ✓ | 7/7 |

### சபைக்கு அறிக்கையிடுதல்

கலந்தாராய்வுகள் மற்றும் எட்டப்பட்ட தீர்வுகள் உள்ளடங்கலாக குழுவின் நிகழ்ச்சிக் குறிப்புகள் அடுத்துவரும் ச.ஒ.இ.மு.கு. கூட்டத்திற்கு உறுதிப்படுத்துவதற்காகவும் ஏற்றுக்கொள்வதற்காகவும் சமர்ப்பிக்கப்படுகின்றன. குழுவின் அனைத்து நிகழ்ச்சி குறிப்புகளும் முறையாக குழுவின் தலைவரினால் அங்கீகரிக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புகள் சபைக்கு அவர்களது கருத்துக்கள், ஒத்திசைவுகள் மற்றும் / அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகளுக்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

**நடவடிக்கைகள்**

கம்பனி அதன் வணிக செயற்பாடுகளை மேற்கொள்வதில் முகங்கொடுக்கும் உள்வாரி / வெளிவாரி இடர்கள் தொடர்பாக பணிப்பாளர்கள் சபை அதன் மேற்பார்வை கடமையினை செயலாற்றுவதில் ச.ஒ.இ.மு.கு. வினைத்திறனுடன் துணைபுரிந்தது. ஒரு மாதாந்த அடிப்படையில் முக்கிய இடர் குறிகாட்டிகளூடாக (மு.இ.கு.) கண்டுபிடிக்கப்படும் அனைத்து முக்கிய இடர்களும் குழுவினால் அதன் கூட்டங்களில் மீளாய்வு செய்யப்படுகின்றது.

கலந்துரையாடலின் முக்கிய பிரிவுகள் மற்றும் ஒதுக்கப்பட்ட நேரம்




## ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம்

- 2021 இன் 05 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைக்கு ஒத்ததாக குழு இடர் ஆர்வக் கூற்றினை மீளாய்வு செய்து மேம்படுத்தியது.
- 2021 இன் 05 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைக்கு ஒத்ததாக மற்றும் செயற்பாட்டு சூழலிலான மாற்றங்களுக்கு ஏற்ப குழுவானது இடர் சகிப்புக் கூற்றினை மீளாய்வு செய்தது. பீபள்ஸ் லீசிங் இன் இடர் தோற்றுருவங்கள் குறிப்பிட்ட சகிப்பு வரையறைகளுக்கு எதிராக காலாண்டு தோறும் மீளாய்வு செய்யப்படுகின்றது.
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வணிக விரிவாக்கல் மற்றும் செயற்பாடுகளில் நிதி வணிகச் சட்டத்தின் 2020 இன் 06ஆம் இலக்க பணிப்புரையில் குறிப்பிட்டுள்ள கிளை மட்டத்திலான இடர் மதிப்பீட்டு தேவைப்பாட்டுடன் இணங்குவதற்காக விருத்தி செய்யப்பட்ட கிளை இடர் தரப்படுத்தல் முறையினை குழு மீளாய்வு செய்தது, இடர் தரப்படுத்தல் முறையினை கடைப்பிடித்தலின் பின்னர் குழுவானது காலாண்டுதோறும் கிளை இடர் மதிப்பீடுகளை மீளாய்வு செய்தது.
- பிஎல்சி மற்றும் அதன் துணை கம்பனிகளின் காலாண்டு இடர் அறிக்கைகள் (இடர் கட்டுப்பாட்டு முகப்பு / இடர் குறிகாட்டி அறிக்கைகள்) மீளாய்வு செய்யப்பட்டன. கூட்டங்களில் அனைத்து பங்குபற்றுநர்களும் அனைத்து இடர்களையும் விரிவாக மீளாய்வு செய்வதற்கும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு அப்பால் செல்லும் பகுப்பாய்வினை பொறுப்பேற்பதற்கும் ஊக்கமளிக்கப்படுகின்றார்கள்.
- நிறைவேற்றுநர் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் வ.நி. மீளாய்வு செய்யப்பட்டது (நி.ஒ.இ.மு.கு.).
- கருவிகள் அபிவிருத்தி மற்றும் அங்கீகார செயன்முறை மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகாரத்திற்காக சபைக்கு பரிந்துரைக்கப்பட்டது.

## முகாமைத்துவ மட்டத்திலான குழுக்களின் மதிப்பீடு

- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு (சொ.பொ.கு) மற்றும் முகாமைத்துவக் கடன் குழு ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மைகள் மீளாய்வு செய்யப்பட்டன. இது அவர்களது வ.நி. எதிராக வருடாந்த சுய மதிப்பீடுகளை செயலாற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.
- நிறைவேற்றுநர் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் (நி.ஒ.இ.மு.கு.). இன் பயனுறுதியான செயற்பாட்டினை நி.ஒ.இ.மு.கு. இன் கூட்ட சிறப்பம்சங்கள் / நிகழ்ச்சி குறிப்புகளை மீளாய்வு செய்வதன் மூலம் மீளாய்வு செய்யப்பட்டது. இக்கூட்டங்கள் குறிப்பாக கடன் இடர் மற்றும் செயற்பாட்டு இடர் விடயங்களில் மேற்கொள்ளப்பட்ட கலந்தாராய்வுகளை உள்ளடக்குகின்றன.

## கடன் இடர்

- கோவிட்-19 தொற்றின் நிமித்தம் எழுந்த சமூக-பொருளாதார சவால்களுக்கு மத்தியில் துறையினது கடன் தரத்திலான மட்டங்களின் சீர்குன்றல் குறித்து குழு பிரதானமாக அக்கறையினைக் கொண்டிருந்தது. வருடத்தின் இறுதிப் பாகத்தில், பொருளாதார சிக்கலின் காரணமாக சொத்தின் தரத்திலான தாக்கத்தில் குழு முன்னிறுத்தம் செய்தது.
- சொத்துக்கள் மற்றும் கருவிகளின் அடிப்படையில் செயற்திறனற்ற கடன் பகுப்பாய்வூடாக கடன் தேக்கத்தின் தரமானது மீளாய்வு செய்யப்பட்டது. அத்துடன் துறைவாரியாக கடன் செறிவு மற்றும் தனிக் கடன் பெறுபவர் எல்லை போன்ற ஏனைய கடன் இடர் குறிகாட்டிகளையும் மீளாய்வு செய்தது.
- இலாபகரத்தன்மை மற்றும் மூலதனப் போதுமையில் புறநிலையான சான்றுகளின் அதிகரிப்புடன் இழப்பு விகித மட்டத்திலான அதிகரிப்பின் தாக்கத்தினை மதிப்பிடுவதற்காக குழுவானது அழுத்தச் சோதனைகளை மீளாய்வு செய்தது.
- குழுவானது கம்பனியின் சொத்துக்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கு அவசியமான செயற்பாட்டிலான விபரங்களில் கலந்தாராய்ந்தது.
- கடன் இடரினை முகாமைப்படுத்துதல் தொடர்பாக நி.ஒ.இ.மு.கு. இனால் மேற்கொள்ளப்பட்ட கலந்தாராய்வுகள் மீளாய்வு செய்யப்பட்டன.
- குழு திருத்தியமைக்கப்பட்ட பதிவழித்தல் கொள்கையினை மீளாய்வு செய்து சபையின் அங்கீகாரத்திற்கு பரிந்துரைத்தது.

## திரவத்தன்மை மற்றும் சந்தை இடர்

- வருடத்தின் இறுதிப் பாகத்தில், குறிப்பாக இறுக்கமான சந்தை திரவத்தன்மை மற்றும் உயர்வடையும் வட்டி வீதங்களுக்கு எதிர்செய்கையாக குழு திரவத்தன்மை மற்றும் சந்தை இடரினை முகாமைப்படுத்துவதில் முன்னிறுத்தம் மேற்கொண்டது.
- பராமரிக்கப்பட்ட திரவச் சொத்துக்களின் போதுமை, முதிர்வு பொருத்தமின்மை, உணர்திறன் பகுப்பாய்வு மற்றும் வட்டி வீத மீள்விலையிடல் இடைவெளிகள் என்பன மீளாய்வு செய்யப்பட்டன.
- திரவத்தன்மை அழுத்தச் சோதனைகளின் விளைவுகள் மற்றும் அவசரத்தேவை நிதியளித்தல் வழிமுறைகளின் போதுமை என்பன மீளாய்வு செய்யப்பட்டன.
- திரவத்தன்மை மற்றும் சந்தை இடர் முகாமைத்துவத்தின் வினைத்திறனை மதிப்பிடுவதில் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சொ.பொ.கு இன் கூட்டங்களது சிறப்பம்ச அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

## செயற்பாட்டு இடர்

- மனித வளங்கள் மற்றும் மோசடிகள் தொடர்பாக நிறுவப்பட்ட முக்கிய செயற்பாட்டு இடர் குறிகாட்டிகள் மீளாய்வு செய்யப்பட்டன.
- உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் பலத்தின் அடிப்படையில் திருப்தியற்றதாக தரப்படுத்தப்பட்ட கணக்காய்வுகளின் நிலை மீளாய்வு செய்யப்பட்டது.
- கிளை மட்டத்திலான செயற்பாட்டு இடர் மதிப்பீட்டு விளைவுகள், தங்க பரிசீலனைகள், செயற்பாட்டு இடர் தொடர்பான பிரிவுகளில் நி.ஒ.இ.மு.கு. இனால் மேற்கொள்ளப்பட்ட கலந்தாராய்வுகள் என்பவற்றின் அடிப்படையில் செயற்பாட்டு இடர் முகாமைத்துவத்தின் போதுமையானது மீளாய்வு செய்யப்பட்டது.

**தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு இடர்**

- குழுவானது சபை கணக்காய்வுக் குழுவுடன் கூட்டிணைந்து இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கான தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம் மற்றும் மீளெழுச்சியிலான முறைமைப்படுத்தல் வரம்புறுகையில் முன்மொழியப்பட்ட ஆலோசனைப் பத்திரிகையினை மீளாய்வு செய்து கலந்தாலோசிக்கப்பட்டதுடன் அதிலான இடைவெளி மதிப்பீடு செயலாற்றப்பட்டு சபைக்கு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.
- த.தொ.தொ. செயற்பாடுகள் தொடர்பான பல்வேறு சொத்து வகைகளின் அடிப்படையில் செயலாற்றப்பட்ட த.தொ.தொ. இடர் மதிப்பீடு மற்றும் காலாண்டு தோறும் தகவல் பாதுகாப்பு அதிகாரியினால் (த.பா.அ.) சமர்ப்பிக்கப்படும் மாற்றல் முகாமைத்துவத்திலான இடர் மதிப்பீடும் மீளாய்வு செய்யப்பட்டன.

# சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

**வணிகத் தொடர்ச்சி**

- வணிகத் தொடர்ச்சி திட்டத்தின் அமுலாக்கல் செய்கைமுறையின் முன்னேற்றம் மற்றும் பேரிடல் மீட்டல் திட்டங்களின் போதுமை என்பன மீளாய்வு செய்யப்பட்டன.

## முறைமைப்படுத்தல் மற்றும் இணக்கப்பாட்டு இடர்

- முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடுவதற்காக இணக்கப்பாட்டு செயற்பாட்டின் வினைத்திறன் மீளாய்வு செய்யப்பட்டதுடன் இடர் சகிப்பு மட்டங்களுக்கெதிராக கண்காணிக்கப்பட்டன.
- இணக்கப்பாட்டு அதிகாரியினால் சமர்ப்பிக்கப்படும் இணக்கப்பாட்டு அறிக்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள், முறைமைப்படுத்தல் வழிகாட்டிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கம்பனியின் அனைத்து செயற்பாட்டு பிரிவுகளுக்குமான அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடனான கம்பனியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடுவதற்காக மீளாய்வு செய்யப்பட்டன.
- கம்பனியின் வருடாந்த இணக்கப்பாட்டு இடர் மதிப்பீடு மற்றும் குழுமத்தின் இணக்கப்பாட்டு இடர் மதிப்பீடுகள் மீளாய்வு செய்யப்பட்டன.
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட புதிய பணிப்புரைகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகள் மீளாய்வு செய்யப்பட்டன.
- கம்பனி மட்டத்தில் செயலாற்றப்பட்ட பணம் சலவைசெய்தல் மற்றும் பயங்கரவாத நிதியளிப்பு இடர் மதிப்பீடானது மீளாய்வு செய்யப்பட்டது.
- 2021 இன் 05 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைக்கு ஒத்ததாக திருத்தியமைக்கப்பட்ட இணக்கப்பாட்டு கொள்கை கையேடானது மீளாய்வு செய்யப்பட்டு சபையின் அங்கீகாரத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது.

## மூலோபாய இடர்

- வணிகச் சூழலிலான மாற்றங்களுக்கு மறுமொழியாக அமுலாக்கப்பட்ட மூலோபாயங்களின் பயனுறுதித்தன்மை மீளாய்வு செய்யப்பட்டது.
- நிறுவப்பட்ட இடர் சகிப்பு மட்டங்களுக்கெதிராக மூலோபாய இடர் குறிகாட்டிகள் மீளாய்வு செய்யப்பட்டன.

## துணைக் கம்பனிகளின் இடர் தோற்றுருவத்தினை மதிப்பீடு செய்தல்

- மீளாய்வாண்டில், பின்வரும் துணைக்கம்பனிகள் இடர் கட்டுப்பாட்டு முகப்பு /முக்கிய இடர் குறிகாட்டி அறிக்கைகளை ச.ஒ.இ.மு.கு. க்கு சமர்ப்பித்ததுடன், இது குழுவினை ஒவ்வொரு துணைக் கம்பனியின் மற்றும் பீபள்ஸ் லீசிங் குழுமத்தின் ஒட்டுமொத்த இடர் தோற்றுருவத்தினை மீளாய்வு செய்வதனை இயலுமையாக்கியது. துணைக்கம்பனி மீளாய்வுகளின் சிறப்பம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- **பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி** (PI)
  - குழுவானது ஒப்புரவளித்தல் தரம், முதலீட்டு செறிவுகளுடன் முக்கிய இடர் குறிகாட்டிகளான தவறுதல் இடர், செயற்பாட்டு இடர், மூலோபாய இடர், இணக்கப்பாட்டு இடர் என்பவற்றை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்தது.
  - இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவினால் (முன்னர் இலங்கை காப்புறுதிச் சபை என அறியப்பட்டது) முறைமைப்படுத்தப்படும் இடர் அடிப்படையிலான மூலதன மாதிரியுடனான PI இன் இணக்கப்பாட்டினை குழு மீளாய்வு செய்தது.
  - கம்பனியின் எதிர்கால மூலோபாயங்களை குழு ஆழ்ந்தாராய்ந்து மீளாய்வு செய்தது.

- **பீபள்ஸ் மைக்ரோ-கொமர்ஸ் லிமிட்டட்** (PML)
  - PML சலுகை குன்றிய, கிராமிய மற்றும் நகர சனத்தொகையின் நிதியியல் உள்ளடக்கத்தினை உறுதிப்படுத்துவதற்காக நுண்நிதியளித்தல் வசதிகளை வழங்கும் வணிகத்தில் ஈடுபடுவதுடன் ஒரு வேறான இடர் தோற்றுருவத்தினை செயற்படுத்துகின்றது.
  - குழுவானது நிறுவப்பட்ட இடர் சகிப்பு மட்டங்களுக்கெதிராக கம்பனியின் இடர் தோற்றுருவத்தினை காலாண்டுதோறும் மீளாய்வு செய்கின்றது.
  - கம்பனியின் எதிர்கால மூலோபாயங்களை குழு ஆழ்ந்தாராய்ந்து மீளாய்வு செய்தது.

- **பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் (PLFML)**
  - மீளாய்வுக் காலப்பகுதியில், PLFML இன் செயற்பாடுகள் பிரதானமாக பெறுமதியிடல் சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டன.
  - ச.ஒ.இ.மு.கு., PLFML இனால் சமர்ப்பிக்கப்படும் இடர் கட்டுப்பாட்டு முகப்பு அறிக்கைகளை காலாண்டுதோறும் மீளாய்வு செய்கின்றது.
  - கம்பனியின் எதிர்கால மூலோபாயங்களை குழு ஆழ்ந்தாராய்ந்து மீளாய்வு செய்தது.

- **லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் (LAFL) - (PLC இனது பங்களாதேஷ் துணைநிறுவனம்))**
  - LAFL இனால் சமர்ப்பிக்கப்படும் இடர் கட்டுப்பாட்டு முகப்பு அறிக்கைகளை ச.ஒ.இ.மு.கு. காலாண்டுதோறும் மீளாய்வு செய்கின்றது.
  - கம்பனியின் செயற்பாடுகள் மற்றும் இடர் குறைத்தல் மூலோபாயங்களை விளக்குவதற்காக LAFL இன் பி.நி.அ. காணொளி கருத்தரங்கிடல் ஊடாக ச.ஒ.இ.மு.கு. கூட்டங்களில் பங்குபற்றினார்.

- **ஆதன அபிவிருத்தி துணைக்கம்பனிகள்**
  - குழுவானது பீபள்ஸ் லீசிங் பிரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் மற்றும் பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் பிரொப்பர்ட்டீஸ லிமிட்டட்டினால் சமர்ப்பிக்கப்படும் இடர் குறிகாட்டி அறிக்கைகளை மீளாய்வு செய்தது.
  - குடியிருக்கை விபரங்கள் உள்ளடங்கலாக இந்த கம்பனிகளின் செயற்பாடுகளை குழு மீளாய்வு செய்தது.

பீபள்ஸ் லீசிங் இன் மேற்குறிப்பிட்ட துணைக்கம்பனிகளுடன் இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவானது ஒருங்கிணைந்து பல்வேறு இடர் குறிகாட்டிகள் மற்றும் மேலதிக தகவல்களூ டாக பொருத்தமான தகவல்களுடன் குழுவிற்கு அறிவித்தன.

## ஏனையவை

- குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகார வரம்புறுகை மற்றும் பொறுப்புக்களினுள் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் நெருக்கமாக செயற்பட்டு சபையின் சார்பாக தீர்மானங்களை எடுத்தது.
- இடர் முகாமைத்துவ மூலோபாயங்கள், கொள்கைகள் மற்றும் செய்கைமுறைகள் தொடர்பாக ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ பொறுப்புக்களின் செயன்முறைகள் மேற்பார்வை செய்யப்பட்டன.
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் சகிப்பு மட்டங்களுக்கு அப்பால் குறித்த இடர் மட்டங்களின் விளைவுகளை குறைப்பதற்காக கம்பனியின் கொள்கைகள், முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளின் அடிப்படையில் திருத்தச் செயற்பாடானது பரிந்துரைக்கப்பட்டது.

மீளாய்வாண்டில், கம்பனியில் மற்றும் குழுமத்தில் தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடிய உயர்வான மற்றும் தாழ்வான இடர்களை வற்புறுத்தி ஒட்டுமொத்த வணிக மூலோபாயத்தினை நிறைவேற்றுவதில் இடர் ஆர்வம் மற்றும் இடர் சகிப்பு வரம்புறுகையுடன் ஒத்ததாக ச.ஒ.இ.ம.கு. அதன் உறுதுணையினை வழங்கியது.



**சனுர ஜே விஜேதிலக்க**
*தலைவர்*
சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

26 ஜூலை 2022
கொழும்பு

# இணக்கப்பாட்டு இடர் முகாமைத்துவம்

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் (பீபள்ஸ் லீசிங்) இணக்கப்பாட்டு இடர் மதிப்பீட்டு வரம்புறுகையானது கம்பனியின் வணிக நடவடிக்கைகளின் சட்டம் மற்றும் நற்பெயர் ஆகியவற்றின் முக்கிய வெளிப்பாட்டினை வினைத்திறனாக மதிப்பீடு செய்கின்றது. இது பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மாத்திரம் பின்பற்றாது பொருத்தமான உள்ளக நிறுவனக் கொள்கைகள் மற்றும் நடத்தை நியமங்களையும் பின்பற்றுகின்றது.

### இணக்கப்பாட்டு மற்றும் முறைமைப்படுத்தல் இடர்

இணக்கப்பாட்டு மற்றும் முறைமைப்படுத்தல் இடர் என்பது பொருத்தமான சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் நடத்தைக் கோவை ஆகியவற்றுடன் இணங்காமையின் விளைவாக எழக்கூடிய முறைமைப்படுத்தல் தண்டப்பணங்கள், நிதியியல் இழப்புகள் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கான இடையூறுகள் மற்றும் நற்பெயருக்கான கலங்கம் போன்ற கம்பனிக்கான சாத்தியமான இடரினை குறிப்பிடுகின்றது.

### இணக்கப்பாட்டு மற்றும் முறைமைப்படுத்தல் இடர் முகாமைத்துவ அணுகுமுறை

ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் வெளிவாரி மற்றும் உள்ளக ஒழுங்குவிதிகளுடன் கம்பனியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடுவதற்காக ச.ஒ.இ.மு.கு. க்கு நேரடியாக அறிக்கையிடும் ஒரு இணக்கப்பாட்டு செயற்பாடு நிறுவப்பட்டுள்ளது. இந்த இடரினை முகாமைப்படுத்துவதில் கம்பனியின் கலாச்சாரம் மற்றும் பகிரப்படும் விழுமியங்கள் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன.

### PLC இல் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டு இடர் முகாமைத்துவத் திட்டம்




GRI 205-1

### இணக்கப்பாட்டினை பராமரித்தல்

கம்பனியானது பணியாட்கள், அவர்களது உரிமைகள் மற்றும் சலுகைகளுடன் அவர்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக ஒரு பரவலான கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை நிறுவியுள்ளது. இவை பணியாட்கள் நாளாந்த சூழ்நிலைகளில் மற்றும் எதிர்பார நிகழ்வுகளின்போது அவர்கள் நடந்துகொள்ளவேண்டியது பற்றி பணியாட்களுக்கு அறியத்தருகின்றது.

உலகிலுள்ள நிதி நிறுவனங்களில் இணக்கப்பாட்டின் முக்கியத்துவமானது அதிகரிக்கின்றது. பீபள்ஸ் லீசிங் பின்வருவனவற்றை முகாமைப்படுத்துவதன் மூலம் இணக்கப்பாட்டு இடரினை முகாமைப்படுத்துகின்றது. "சட்ட அல்லது முறைமைப்படுத்தல் தண்டனை இடர், நிதியியல் இழப்பு, அல்லது பொருத்தமான விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடத்தைக் கோவை மற்றும் சிறந்த நடைமுறை நியமங்களுடன் இணங்கத் தவறுவதன் விளைவாக ஒரு நிதி நிறுவனத்தின் நற்பெயருக்கான இழப்பு" என்பவையாகும். இது வங்கியியல் மற்றும் நிதியியல் வணிகத்தினை நடாத்துதல் (முரண்பாட்டு நலன்கள் உள்ளடங்கலாக), இரகசியத்தன்மை மற்றும் தரவுப் பாதுகாப்பு மற்றும் குறிப்பாக பணம் சலவை செய்தல் மற்றும் பயங்கரவாத நிதியளிப்பு தவிர்ப்பிற்கான ஏற்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

ஒழுங்குவிதிகள் இனங்காணப்பட்டு மற்றும் போதுமான புலப்பாட்டுடன் பொருத்தமாக முகாமைப்படுத்தப்படுகின்றது என்ற ஆறுதலை வழங்கும் விதமாக இணக்கப்பாட்டு வரம்புறுகையானது வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. இணக்கப்பாட்டு செயற்பாடானது கம்பனியினுள் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை வசதியளித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் சவாலிடுதல் என்பவற்றின் இரண்டாம் வரிசை பாதுகாப்பாக, அதன் பங்கில் வினைத்திறனாயுள்ளது.

### இணக்கப்பாட்டினை கண்காணிப்பதற்கான முறைமை

தொழில்நுட்பமானது தற்போதைய துறைசார் நடைமுறைகளுடன் ஒத்ததாக தகவல்களை சேகரிப்பதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் இணக்கப்பாட்டு கட்டுப்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாண்டில், பீபள்ஸ் லீசிங் அதன் வாடிக்கையாளர் சலித்தல் முறையிலிருந்து ஒரு இயங்கலை சலித்தல் தீர்விற்கு தரமுயர்த்தப்பட்டதுடன் பணம் சலவை செய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை கட்டுப்படுத்துவதற்காக சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு அறிக்கையிடுவதற்கு தயாராயிருப்பதற்காக ஒரு கொடுக்கல் வாங்கல் கண்காணித்தல் முறையினை நிறுவுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

# இணக்கப்பாட்டு இடர் முகாமைத்துவம்

## தலைமைத்துவம்

- இணக்கப்பாட்டிற்கு போதுமான நிதியளிப்பு மற்றும் பணியாட்களை வழங்குதல்
- பிரிவுடன் ஒரு செயற்திறன் மதிப்பீட்டினை செய்வதனை உறுதிப்படுத்தல்

## கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் மற்றும் தொடர்பான கட்டுப்பாடுகள்

- முறையாக்கப்பட்ட முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டு இடர் கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் தொடர்புடைய கட்டுப்பாட்டு ஆவணங்களை விருத்திசெய்தல் மற்றும் பராமரித்தல்
- முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளுக்கு பொருத்தமாக கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் தொடர்புடைய கட்டுப்பாட்டு ஆவணங்களை நிலைநிறுத்துதல்

## அறிக்கையிடல் மற்றும் தொடர்பாடல்

- அறிக்கையிடல் தேவைப்பாடுகளை இனங்காணல், கட்டுப்பாட்டு முகப்புகள் மற்றும் முக்கிய இடர் குறிகாட்டிகளை விருத்தி செய்தல்
- சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் சபை, முறைமைப்படுத்துபவர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்விற்கு தொடர்ச்சியான மற்றும் காலகால அறிக்கையிடல்களை வழங்குதல்
- இணக்கப்பாட்டு தொடர்பாடல் திட்டம் மற்றும் நெருக்கடியன செய்தியனுப்பலின் அதிர்வெண்ணை நிறுவுதல்
- பொறுப்பான தரப்பினருக்கு இனங்காணப்பட்ட முறைப்படுத்தல் இணக்கப்பாட்டு சிக்கல்களை எழுப்புவதற்காக முறையான தொடர்பாடல் விதிமுறைகளை நிறுவுதல்

## ஆளுகை

- தெளிவான பங்களிப்பு மற்றும் பொறுப்புக்களை நிறுவுதல்
- ஒர "இணக்கப்பாட்டு கலாச்சாரத்தினை" உருவாக்கி பராமரித்தல்
- பொருத்தமான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும்/அல்லது ஆளுகை மற்றும் முகாமைத்துவ இணக்கப்பாட்டில் நூலகத்தினை நிறுவிப் பராமரித்தல்

## இடர்-மதிப்பீட்டு திட்டங்கள்

- பொருத்தமான வணிக அலகிற்கு மற்றும் பகிரப்பட்ட சேவை செயற்பாடுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை வடிவமைத்தல்
- பொதுவான இடர் மொழி, வரையறைகள் மற்றும் சகிப்பு மட்டங்களை நிறுவுதல்
- உயர் இடர் இணக்கப்பாட்டு முன்னிறுத்தப் பிரிவுகளை இனங்கண்டு முக்கிய வரிசைப்படுத்தும் முறையினை விருத்தி செய்தல்
- திட்டத்தின் இணக்கப்பாட்டின் ஏனைய கூறுகளுடன் இடர் மதிப்பீட்டு திட்டத்தினை சீரமைத்தல்

### உள்ளகக் கட்டுப்பாடுகள்

- உள்ளக கொள்கைகள், கையேடுகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகளை விருத்திசெய்வதனை உறுதிப்படுத்தல்
- முறைமை கட்டுப்பாடுகள் மற்றும் முறைமை சலித்தல் என்பவற்றை உறுதிப்படுத்தல்

### இணக்கப்பாட்டு பயிற்சி

- இடர் முன்னிறுத்தப்பட்ட இணக்கப்பாட்டு பயிற்சி மதிப்பீடுகளை நடாத்துதல்
- நிறுவன மற்றும் வணிக அலகு / பகிரப்படும் சேவை மட்டங்களில் பயிற்றுவித்தல் திட்டங்களை விருத்தி செய்தல்
- பொருத்தமானவாறு பங்களிப்பு அடிப்படையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்தல்
- பயிற்றுவித்தல் அமர்வுகளை நடாத்துதல்

### முறைமைப்படுத்தல் ஊடாட்டம் மற்றும் ஒருங்கிணைப்பு

- சமீபத்தைய மற்றும் திட்டமிடப்பட்ட பரிசீலனை நடவடிக்கைகள் மற்றும் கண்டுபிடிப்புகளின் ஒரு நிறுவனரீதியான கருத்தினை பராமரித்தல்
- ஒழுங்குவிதிகளுடன் தொடர்பாடல் விதிமுறைகளை தீர்மானித்தல்
- முறைமைப்படுத்தல் விசாரணைகளை பெற்று பதிலளிப்பதற்கு ஒரு இயல்பான செய்கைமுறையினை நிறுவுதல்

### இணக்கப்பாட்டு தொழில்நுட்பம்

- விரிவான இணக்கப்பாட்டு தேவைப்பாடுகளை விருத்திசெய்தல்
- தொழில்நுட்ப மேடைகளை மதிப்பிடுதல் மற்றும் சாத்தியமானபோது நடைமுறையிலுள்ள உட்கட்டமைப்பினை பயன்படுத்தல்
- இணக்கப்பாட்டினால் பயனடையும் முக்கியமான தொழில்நுட்ப மேடைகளை இனங்கண்டு ஆவணப்படுத்துதல்

### இணக்கப்பாட்டு கண்காணித்தல் மற்றும் பரிசோதனை செய்தல்

- இணக்கப்பாட்டு இடர் மதிப்பீட்டு விளைவுகளின் அடிப்படையில் கண்காணிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும் நோக்கெல்லையினை அடிக்கடி நிறுவுதல்
- இணக்கப்பாட்டு கட்டுப்பாடுகளின் இணக்கப்பாட்டு பரிசோதனை மற்றும் கண்காணித்தலை விருத்தி செய்தல்
- இணக்கப்பாட்டு கட்டுப்பாடுகளில் காலாகால பரிசோதனை மற்றும் கண்காணிப்பினை செயலாற்றுதல்

# இடர் முகாமைத்துவ மீளாய்வு

GRI 102-15

### கண்ணோட்டம்

பீபள்ஸ் லீசிங் இடரினை முகாமைத்தப்படும் இறுதிப் பொறுப்பினை ஏற்பதுடன், சாத்தியமான இடர்களை இனங்காணுதல், வரையறை செய்தல், அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் முகாமைப்படுத்தல் என்பவற்றுக்கு ஒரு விரிவான இடர் முகாமைத்துவ வரம்புறுகையினை உருவாக்கியுள்ளது. ஒரு நிதிக் கம்பனி வணிகத்தினை நடாத்துவதில் உள்ளடங்கியுள்ள முக்கிய இடர்களுக்காக, தெளிவாக வரையறை செய்யப்பட்ட செய்கைமுறைகள் கம்பனியின் வணிகத் தேவைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு ஒத்ததாக இவற்றை கண்காணித்து முகாமைப்படுத்துவதற்கு தனிப்பயனுடைய முறைமைகளினால் வல்லுநர்களுடன் துணையளிக்கப்படுகின்றது. ஒரு நிதிக் கம்பனிக்கு பயனுறுதிமிக்க இடர் முகாமைத்துவம் முக்கியமானதாகும் ஏனெனில் அதன் வணிக மாதிரியானது கணிப்பிட்ட இடர்களை அனுமானிப்பதனை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் ஏற்கப்படும் இடர்களை பிரதிபலிக்கும் விதத்தில் அவை விலையிடப்படுகின்றன. பீபள்ஸ் லீசிங் இற்கான முக்கிய இடர்கள், கடன், திரவத்தன்மை, சந்தை, செயற்பாடு, இணக்கப்பாடு மற்றும் மூலோபாய இடர்களாகக் காணப்படுவதுடன் இவை இயக்காற்றல் மிகுந்ததாகும் ஏனெனில், அவை எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாலான வெளிவாரி காரணிகளுடன் உள்ளக மூலோபாயங்களினாலும் தாக்கமடைகின்றன.

வணிகச் சூழலின் இயக்காற்றல் மிகுந்த தன்மையானது எமது நாளாந்த செயற்பாடுகளில் நாம் முகங்கொடுக்கும் இடர்களின் சாத்தியமான தாக்கத்தினை அதிகரிக்கின்றது. அதன் விளைவாக, எமது மூலோபாய குறிக்கோள்களை அடைவதற்கு பயனுறுதிமிக்க இடர் முகாமைத்துவம் ஒரு முக்கிய வெற்றிக் காரணியாகும். பீபள்ஸ் லிசிங் எம்மை பாதிக்கும் இடர்கள் மற்றும் வாய்ப்புக்களை இனங்காண்பதற்காகவும் பொருத்தமான தணித்தல் முன்னெடுப்புகளை எடுப்பதற்காகவும் ஒரு இடர் முகாமைத்துவ வரம்புறுகையினை அமுல்படுத்தியுள்ளது.

### இடர் முகாமைத்துவ அணுகுமுறை

பீபள்ஸ் லீசிங் ஒரு பிரத்தியே இடர் முகாமைத்துவ பிரிவினைக் கொண்டுள்ளதுடன் இது சபைக்கும் சபை குழுக்களுக்கும் இடர் முகாமைத்துவம் தொடர்பான அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கு துணைபுரிகின்றது. எமது மூலோபாய குறிக்கோள்களை அடைவதில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய இடர்களின் ஒரு விரிவான மதிப்பீட்டினை பொறுப்பேற்பதுடன், தேவையாயின் சாத்தியமான இடர்களை இனங்காண்பதற்கு நாம் நிர்ணயிக்கப்பட்ட இடர் ஆர்வத்தினுள் இடர்களை தணிப்பதற்கான எதிர் நடவடிக்கைகளை அமுல்படுத்துகின்றோம்.

### இடர் ஆர்வம்

வணிக நடவடிக்கைகளை பொறுப்பேற்பதானது இடர்களை எடுப்பதற்கு வழிநடத்துவது தவிர்க்கமுடியாததாகும். சபையானது இனங்காணப்பட்ட முக்கிய இடர்களுக்கான இடர் ஆர்வத்தினை வரையறை செய்வதன் மூலம் முகாமைத்துவத்திற்கு தெளிவான வழிகாட்டியினை நிறுவியுள்ளது. இடர் ஆர்வம் என்பது எமது குறிக்கோள்களை அடைவதற்காக நாம் ஏற்புடையதாக கருதும் இடர் மட்டமாகும் என்பதுடன் இது கண்காணிப்பதனை எளிதாக்குவதற்காக ஒவ்வொரு இடர் பிரிவின் கீழும் இடர் சகிப்பு வரம்புகளாக அளவுசார் வரைகூறுகளான வெளிப்படுத்தப்படுகின்றது.

| சூழல் | இடர் வகை | போக்கு | இடர் குறிகாட்டி | ஆகக்கூடிய இடர் சகிப்பு வரம்பு | 31.03.2022 இல் உள்ளவாறான இடர் நிலைமை | 31.03.2021 இல் உள்ளவாறான இடர் நிலைமை |
|---|---|---|---|---|---|---|
| I | கடன் இடர் | ▲ | செயற்திறனற்ற கடன்கள் விகிதம் (மொத்தம்) | <5% | 8.78 | 11.30 |
| | | | மூன்று மாதங்கள் காலம்கடந்தவை விகிதம் (மொத்தம்) | <10% | 8.42 | 11.13 |
| | | | இலாபம் அல்லது நட்ட விதிப்பு விகிதம் (இலாபத்தில்) | <20% | 12.33 | 20.56 |
| | | | செ.தி.க./வலுக்குன்றல் காப்பீட்டு விகிதம் | <75% | 81.90 | 70.95 |
| I | கடன் செறிவு இடர் | − | தனியான /குழும் கடன்பெறல் வரம்பு | இ.ம.வ. பிரகாரம் | இணங்கியுள்ளது | இணங்கியுள்ளது |
| | | | HHI புள்ளி | <0.40 | 0.23 | 0.22 |
| I | திரவத்தன்மை இடர் | ▲ | திரவச்சொத்து விகிதம் | >100% | 148.88 | 194.90 |
| | | | முதிர்வு பொருத்தமின்மை விகிதம் (ஒரு வருடம் வரை) | >-45% | -22.84 | -31.93 |
| | | | உறுதியான மூலங்களிலிருந்து வழங்கப்பட்ட வசதிகள் | <150% | 101.59 | 106.71 |
| | | | குறுங்கால் பொறுப்பிற்கு திரவச் சொத்துக்கள விகிதம் | >30% | 232.33 | 155.40 |
| | | | ஆகக்கூடிய தனி வைப்பாளர் செறிவு | <5% | 4.53 | 4.11 |
| | | | பேரளவு வைப்புகளுக்கான வெளிப்பாடு (ரூ. 50 மில்லியனுக்கு மேல்) | <20% | 20.54 | 21.61 |
| E | சந்தை இடர் | ▲ | வட்டி வீத உணர்திறன் | <6% | -1.92 | -0.43 |
| | | | மீள்விலையிடல் இடைவெளி விகிதம் (மூன்று மாதங்கள் வரை) | >-20% | 4.07 | 1.72 |
| I | செயற்பாட்டு இடர் | ▲ | கண்டுபிடிக்கப்பட்ட மோசடிகள் (பெறுமதி செயற்பாட்டு செலவினங்களின் சதவீதமாக) நிஆ. 2021/22 | <0.5% | 0.16 | 0.18 |
| | | | திருப்தியற்ற கணக்காய்வுகள் (மொத்த கணக்காய்வு மீளாய்வுகளின் சதவீதமாக) நிஆ. 2021/22 | <15% | 3.13 | பூச்சியம் |
| | | | பணியாட்கள் புரள்வு விகிதம் (வருடாந்தம்) | <15% | 9.84 | 6.52 |
| | | | வருமானத்திற்கான கிரய விகிதம் | <50% | 43.74 | 41.32 |

| சூழல் | இடர் வகை | போக்கு | இடர் குறிகாட்டி | ஆகக்கூடிய இடர் சகிப்பு வரம்பு | 31.03.2022 இல் உள்ளவாறான இடர் நிலைமை | 31.03.2021 இல் உள்ளவாறான இடர் நிலைமை |
|---|---|---|---|---|---|---|
| E | முறைமைப்படுத்தல் இடர் | ⊖ | மூலதனப் போதுமை விகிதங்கள் | | | |
| | | | அடுக்கு 1 மூலதன விகிதம் | >10.0% | 18.76 | 17.72 |
| | | | மொத்த மூலதன விகிதம் | >14.0% | 19.67 | 18.58 |
| | | | மூலதன நிதியங்கள் விகிதம் | >12.5% | 37.53 | 33.83 |
| I | மூலோபாய இடர் | ▲ | உரித்துவத்திலான விளைவு விகிதம் | >15% | 12.74 | 12.49 |
| | | | சொத்துக்களிலான விளைவு விகிதம் | >3.5% | 3.85 | 3.49 |
| | | | தேறிய வட்டி விடுமிகை | >7.5% | 8.11 | 7.58 |
| | | | கடன் விகிதம் | <7 மடங்குகள் | 3.41 | 3.55 |
| I | தகவல் பாதுகாப்பு இடர் | ▲ | தகவல் பாதுகாப்பு நிகழ்வு முகாமைத்துவம் | சரிபார்க்கப்பட்டது ச.த.ஒ. | சரிபார்க்கப்பட்டது | சரிபார்க்கப்பட்டது |
| | | | வணிகத் தொடர்நிலை முகாமைத்தவம் - த.தொ.தொ. | | சரிபார்க்கப்பட்டது | சரிபார்க்கப்பட்டது |
| | | | அணுக்கல் முகாமைத்துவம் | காலாகால பயனாளர் அணுக்க மீளாய்வு | இணங்கப்பட்டது | இணங்கப்பட்டது |

I உள்வாரி   E வெளிவாரி

## இடர் நிலத்தோற்றம் 2021/22

தடுப்பூசியின் முதலாம் மருந்தளவு வெற்றிகரமாக வழங்கப்பட்டதுடன் வருடமானது ஒரு மகிழ்ச்சியுடையதாக ஆரம்பிக்கப்பட்டது. எவ்வறாயினும், சில கிழமைகளினுள் வந்த புதிய அலைகள் மற்றும் மாற்றுருவங்கள் இவ்வருடத்தில் விட்டுவிட்டான முடக்கல்களை விளைவித்ததுடன் இது பொருளாதார நடவடிக்கைகள் ஸ்திரமடைவதை பாதித்தது. தொற்றின் நீடித்த தாக்கமானது சுற்றுலாத் துறையின் மீட்பினை தடைசெய்ததுடன் இத்துறை நாட்டின் அந்நிய செலவாணி உட்பாய்ச்சலுக்கு ஒரு முக்கிய பங்காளியாகும் என்பதுடன் இடம்பெயர்ந்த தொழிலாளர் பணமனுப்பல்களின் வீழ்ச்சியும் இன்னல்களை மேலும் அதிகரித்தது. இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் தடுப்பூசியின் இரண்டாம் மருந்தளவும் அதனைத் தொடர்ந்து நான்காம் காலாண்டில் பூஸ்டர் மருந்தளவும் நிதியாண்டின் இறுதியில் ஓர் வழமையான தோற்றத்திற்கு திரும்புவதற்கு துணையளித்தது. பாடசாலைகள் கணிசமானளவு காலங்களில் மூடப்பட்டு இருந்ததனால் பயணிகள் போக்குவரத்து சேவைகளுக்கு மந்தமான கேள்வியினை விளைவித்தது.

இவ்வருடத்தில் உலகச் சந்தையில் மசகெண்ணெயின் மற்றும் திரவ பெற்றோலிய எரிவாயுவின் விலைகள் அதிகரித்தமையினால் இறக்குமதிகளின் கிரயம் அதிகரித்து வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைவதற்கு கணிசமாக பங்களித்ததுடன் அதிகரித்த பணவீக்கத்திற்கும் பங்களித்தது. இவ்வருடத்தில் பணவீக்கம் பலமடங்குகளாக அதிகரித்ததுடன் இது ஊதியங்கள் மற்றும் செலவழிக்கக்கூடிய வருமானத்திலும் அழுத்தத்தினை பிரயோகித்தது. கொள்கை வட்டி வீதங்களின் அதிகரிப்புடன் இவ்வருடத்தில் நாணயக் கொள்கையானது இறுக்கமாக்கப்பட்டவேளை விரிவடையும் பற்றாக்குறையினை கட்டுப்படுத்துவதற்காக பரந்தளவிலான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் காணப்பட்டன. மின்சாரம், எரிவாயு மற்றும் எரிபொருள்களின் பற்றாக்குறையினால் வலுசக்திச் சிக்கல்கள் ஆழமடைந்ததுடன் வணிகங்கள் மற்றும் இல்லங்களைப் பாதித்ததுடன் தொற்றின் ஆரம்பத்திலிருந்து அழுத்தத்திற்கு உள்ளான பயணிகள் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

இவ்வாண்டில் நாட்டின் இறையாண்மை தரப்படுத்தல் தரமிறக்கப்பட்டதுடன் கடன் மீள்செலுத்துகைகள் நாட்டின் அந்நிய செலாவணி ஒதுக்கங்களில் கடுமையான அழுத்தத்தினை விதிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை மின்சார சபையினை இயக்குவதற்கு அவசியமான எரிபொருளினைக் கொள்வனவு செய்ய இயலாமையினால் நாடு பூராவும் மார்ச் 2022 இல் மின்வெட்டுக்கள் அமுல்படுத்தப்பட்டன. மேலாக சமையலுக்குப் பயன்படுத்தும் LPG இன் பற்றாக்குறையும் ஏற்பட்டது. இவற்றின் விளைவாக சமூக குழப்பநிலை தோன்றியதுடன் அது ஒரு அரசாங்க மாற்றத்திற்கான மக்களது எதிர்ப்பின் காரணமாக அரசியல் உறுதியின்மை உச்சநிலையடைந்தது. புதிய மத்திய வங்கியின் ஆளுநரது நியமனத்துடன், இலங்கை இவ்வருடத்தில் கணிசமாக உயர்வடைந்த பணவீக்கத்தினை இலக்குவைத்து 08 ஏப்ரல் 2022 இல் வட்டி வீதங்களை 700 அடிப்படை புள்ளிகளினால் அதிகரித்தது. மேம்பட்ட பொருளியலாளர்களின் பரிந்துரையின் பிரகாரம் நாடானது 12 ஏப்ரல் 2022 இல் அதன் கடன் மீள்செலுத்துகையினை தவறுவதற்கு தீர்மானித்ததுடன் ஒரு நிவாரண வசதிக்காக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தது.

மிகவும் சமீபத்தில், விட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிட்டட் 13 வர்த்தக வங்கிகளை எதிர்மறையான கண்காணிப்பு தரப்படுத்தல்களில் இட்டுள்ளதுடன் இதற்கு வெளிநாட்டு நாணய நிதியளித்தலுக்கான அணுக்கத்திலான கட்டுப்பாடுகள் மற்றும் வங்கியியல் முறைமையில் அதன் விளைவான அழுத்தங்கள் காரணிகளாக வழங்கப்பட்டன. 13 வர்த்தக வங்கிகளின் பட்டியலில் உள்ளடக்கப்படாத இலங்கை வங்கியின் தரப்படுத்தலும் எதிர்மறையான கண்காணிப்பு தரப்படுத்தலில் இடப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்திடமிருந்து துணை இல்லை என்ற துணை தரப்படுத்தல் உறுதிசெய்யப்பட்டது. ஏப்ரல் 2022 இல் விட்ச் ரேட்டிங் லங்கா, பீபள்ஸ் லீசிங் உள்ளடங்கலாக 12 வங்கியல்லாத நிதி நிறுவனங்களை (வ.அ.நி.நி.) “எதிர்மறையான கண்காணிப்பு தரத்தில்” வைத்ததுடன் இது இலங்கையின் பொருளாதார மற்றும் நிதியியல் சந்தைகளின் நிலையற்றதன்மைக்கு மத்தியில் வ.அ.நி.நி. இன் கடன் தோற்றுருவங்களில் கீழிறக்க இடர்களின் உயர்வினை பிரதிபலிக்கின்றது. இவை நிதியியல் முறைமையிலான உறுதியற்றதன்மையினை குறிப்பிடுவதுடன் ஏதேனும் நிதியியல் நிறுவனத்தில் திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதில் அளவற்ற எச்சரிக்கை தேவைப்படுவதனையும் குறிப்பிடுகின்றது. நாடானது பொருளாதார மீட்சிக்கு நகரும்வேளை எதிர்வரும் வருடத்தில் பீபள்ஸ் லீசிங் இற்கு இது முன்னுரிமையாகும். வரிவிதிப்பிலான அதிகரிப்புக்கள், மானியங்களின் குறைப்புக்கள் மற்றும் சென்மதி நிலுவை மற்றும் வர்த்தகப் பற்றாக்குறை ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்காக ஏனைய கணிசமானளவு கொள்கை மாற்றங்களுடன் நாம் நாணயக் கொள்கையின் இறுக்கமான சூழலை எதிர்பார்க்கின்றோம்.

# இடர் முகாமைத்துவ மீளாய்வு

### வெளிவாரியாக இயக்கப்படும் இடர்கள்

| இடர் | தாக்கம் | தணிக்கும் செயற்பாடுகள் |
|---|---|---|
| வலுசக்தி நெருக்கடி மற்றும் எரிபொருட்களின் விலைகளின் விரைவான ஏற்றம் | • கம்பனியின் கடன் வழங்கல் தேக்கமானது பயணிகள் போக்குவரத்து துறைக்கான வெளிப்பாட்டினைக் கொண்டுள்ளது. | • அழுத்தத்திற்குள்ளான பயணிகள் போக்குவரத்து துறைக்கு நிவாரணம் வழங்கும் ஹித்தமித்துரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.<br>• குத்தகைகளில் மீளக்கைப்பற்றுதல் தற்காலிமாக நிறுத்தப்பட்டது. |
| பரந்தளவிலான இறக்குமதி கட்டுப்பாடுகள் வளர்ச்சிக்கான சாத்தியத்தினை தடைசெய்கின்றது. | • மோட்டார் வாகனங்களின் இறக்குமதித் தடையானது கம்பனிக்கு ஒரு கணிசமான தாக்கமாகும் ஏனெனில், இது குத்தகை செயற்பாடுகளுக்கான ஒரு முக்கிய வளர்ச்சிப் பிரிவாகும். | • பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கான கருவிகளை உருவாக்குதல்<br>• ஏனைய கருவிகளில் வளர்ச்சியினை இயக்குதல் |
| பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி | • சென்மதி நிலுவை சிக்கல்களை முகாமைப்படுத்துவதற்காக வரிவிதிப்பு அதிகரிக்கப்படும் என பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.<br>• எதிர்வரும் வருடத்தில் கொள்கை மாற்றங்களுடன் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளும் பாதிக்கும் சாத்தியத்தினைக் கொண்டுள்ளன. | • நாட்டின் பொருளாதார மீட்சிக்கு துணைபுரிவதற்காக புதிய ஒழுங்குவிதிகளினால் தீர்மானிக்கப்படும் வரிவிதிப்பினை பீபள்ஸ் லீசிங் செலுத்தும். |
| இறுக்கமடையும் நாணயக் கொள்கை நடைமுறைகள் | • அதிகரித்த வட்டி வீதங்களுடன் வாடிக்கையாளர்கள் வைப்புகளுக்கு திரும்புவார்கள் என நாம் எதிர்பார்ப்பதுடன் இது திரவத்தன்மை நிலைமைகளை பலப்படுத்தும்.<br>• சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்வுகளில் எதிர்மறையான/ சாத்தியமான பொருத்தமின்மைகளின் காரணமாக, உயர்ந்த வட்டி வீதங்கள் இலாபகரத்தன்மையில் பாதகமான / சாத்தியமான தாக்கங்களைக் கொண்டிருக்கும்.<br>• உயர்ந்த வட்டி வீதங்கள் கடன் தேக்கங்களிலான முதலீடு மற்றும் வளர்ச்சியினை தடுக்கும். | • வைப்புத் தேக்கங்கள் வளர்ச்சியடைவதற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்<br>• சொத்து மற்றும் பொறுப்பு பொருத்தமின்மையின் செயற்திறனான முகாமைத்துவம்<br>• தெரிவுசெய்யப்பட்ட துறைகளுக்கான கடனின் இலக்குவைத்த சந்தைப்படுத்தல் |
| பணவீக்க அழுத்தம் | • மக்களுக்கு குறைவான செலவழிக்கத்தக்க வருமானங்கள்<br>• உயர்ந்த செயற்பாட்டு செலவினங்கள்<br>• சமூக அமைதியின்மை<br>• வணிகங்களிலான ஊதிய அழுத்தம் | • செலவு சீர்படுத்தல் முன்னெடுப்புக்கள் நிறுவனம் முழுவதும் அமுல்படுத்தப்பட்டன<br>• கடன் தரத்தினை கண்காணிப்பதில், குறிப்பாக சிற்றளவு கருவிகளில், அதிகரித்த முனைப்பு |
| ரூபாயின் பெறுமதியிறக்கம் | • இறக்குமதிகள் உயர்வாக விலையிடப்பட்டுள்ளன மற்றும் இதன் நிமித்தம் குறைவான கட்டுப்படியாதல்<br>• வாகன இறக்குமதிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதனால் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் பெறுமதியிலான அதிகரிப்பு<br>• கடன்களுக்காக வைத்திருக்கப்படும் பிணைச்சொத்துக்களின் அதிகரித்த பெறுமதி | • பதிவுசெய்யப்பட்ட வாகனங்களிலான முன்னிறுத்தம் |
| பண்டங்களின் விலை இடர் | • தங்கத்தின் விலை உயர்வடையும்<br>• உலகச் சந்தைகளில் உணவு மற்றும் எரிபொருள் விலைகள் அதிகரித்துள்ளதனால் இந்த முக்கிய இறக்குமதிகள் இன்னும் அதிக விலையுயர்ந்ததாக காணப்படும். | • தங்கக் கடன்களுக்காக பெறுமதிக்கான கடன் விகிதங்களை முகாமைப்படுத்தல்<br>• சந்தையில் பண்டங்களின் விலை அதிகரிப்பின் தாக்கங்களை கண்காணித்தல், இது பொருத்தமான எதிர்செயலை தீர்மானிப்பதற்காகும். |
| ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் தொற்றின் பின்னணியில் வழங்கப்பட்ட கடன் காலம் தாழ்த்திச் செலுத்தல் வசதியின் நிறைவு | • கடன் காலம் தாழ்த்திச் செலுத்தல் வசதியின் கீழான கடன்களுக்கு மீள்செலுத்துகைகள் ஆரம்பிக்கப்பட்டதனால் காசுப்பாய்ச்சல் பலப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | • அழுத்தங்களுக்கான முன்னெச்சரிக்கை குறிக்காக கடன் தேக்கங்களை கண்காணித்தல்<br>• அவசியமெனக் கருதப்படும்போது கடன்வசதிகளின் செயற்திறனான மீள்அட்டவணைப்படுத்தல் |
| சைபர் பாதுகாப்பு | • சைபர் தாக்குதல்களின் அதிகரித்த நுட்பம் மற்றும் அதிர்வெண் | • சைபர் பாதுகாப்பின் அதிகரித்த கண்காணிப்பு மற்றும் மீறுகைகளுக்கான பரிசோதனைகள் |

| இடர் | தாக்கம் | தணிக்கும் செயற்பாடுகள் |
|---|---|---|
| கோவிட்-19 தொற்றின் புதிய அலையின் பரவல்/ மாற்றுருவம் | • வணிக இடையூறுகள்<br>• எமது பணியாட்கள் மற்றும் கிளைகளுக்கு விஜயம் செய்யும் வாடிக்கையாளர்களது பாதுகாப்பு | • வீட்டிலிருந்து பணிபுரிதல் மற்றும் பணியாட்களுக்கான சுழற்சி பணிநேரங்கள் போன்ற மாற்றீட்டு பணியிட ஏற்பாடுகள்<br>• அனைத்து வணிக இடங்களிலும் கோவிட்-19 க்கான பாதுகாப்பு விதிமுறைகளை அமுலாக்குதல் |

**இடர் முகாமைத்தவ செய்கைமுறை**

இடர் முகாமைத்துவ செய்கைமுறை என்பது கம்பனி முகங்கொடுக்கும் பல்வேறு இடர்களில் ஒரு தெளிவான புரிந்துணர்வாகும் என்பதுடன் சீராக்கிய மதிப்பீடு, அளவீடு மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முன்நிர்ணயிக்கப்பட்ட இடர் ஆர்வத்திற்கெதிராக இடர் கட்டுப்பாட்டு முகப்புகள் வடிவில் தொடர்ச்சியான கண்காணிப்பாகும்.

மூலோபாய மற்றும் செயற்பாட்டு கூட்டாண்மை குறிக்கோள்களை அடைவதனாது வெளிவாரி நிகழ்வுகளுக்கு கட்டுப்பட்டதாகும் என்பதுடன் இது எந்நேரமும் கம்பனியின் கட்டுப்பாட்டினுள் இல்லை. எனவே, ஒரு வினைத்திறனான இடர் முகாமைத்துவ வரம்புறுகையானது முகாமைத்துவத்திற்கும் சபைக்கும் அதன் மேற்பார்வை பங்களிப்பில் ஒரு நியாயமான உறுதிமொழியினை வழங்கலாம் மற்றும் நிறுவனம் எந்தளவுக்கு அதன் குறிக்கோள்களை அடைவது நோக்கி நகர்கின்றது என்ற சரியான நேரத்தில் அறிந்துகொள்வதனையும் இயலுமையாக்குகின்றது.

PLC இல் இடர்முகாமைத்துவ செய்கைமுறையானது சூழமைவினை நிறுவுவதற்கான நடவடிக்கைகள், இடர் மதிப்பீடு, இடர் கட்டுப்பாடு, இடர் கண்காணிப்பு என்பவற்றை சூழ்ந்துகொண்டுள்ளதுடன் கம்பனியின் இடர் தோற்றுருவத்தில் ஒரு வழமையான அடிப்படையில் அறிக்கையிடுதலையும் உள்ளடக்கும். இடர் மதிப்பீடானது இடர் இனங்காணல், இடர் கவனிப்பின் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு என்பவற்றை ஏற்படுத்துகின்றது. இது ஒரு மீள்செய்கை செயல்முறையாகும் என்பதுடன் இங்கு அனேகமாக எந்த ஒரு கூறும் மற்றுமோர் கூறினை செல்வாக்கு செலுத்தலாம்.




| செய்கைமுறை உறுப்பு | விளக்கம் |
|---|---|
| சூழமைவினை நிறுவுதல் | இது இடர் முகாமைத்துவ செய்கைமுறையின் நோக்கெல்லையினை வரையறை செய்யும் செய்கைமுறையாகும். நோக்கெல்லையானது கம்பனியின் மூலோபாய குறிக்கோள்களின் சூழமைவினுள் முதலில் தீர்மானிக்கப்படுகின்றது. தெளிவாக வரையறை செய்யப்பட்ட குறிக்கோள்கள் அந்த குறிக்கோள்களை அடைவதனை பாதிக்கும் இடர்களை இனங்காண்பதற்கு துணையளிக்கும். இந்த நோக்கத்திற்காக, கம்பனி பாரிய சூழல் காரணிகள் மற்றும் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் மற்றும் குறிக்கோள்களில் அவற்றின் செல்வாக்கினை மதிப்பீடு செய்கின்றது. இது தொடர்பில், கம்பனியின் நடவடிக்கைகள் மீது ஒரு அக்கறை மற்றும் அதிகாரம் உடைய உள்வாரி மற்றும் வெளிவாரி பங்காளிகள் குறித்து ஒரு தெளிவான புரிந்துணர்வினைக் கொண்டுள்ளது. |
| இடர் நிகழ்வுகளை இனங்காணுதல் | கம்பனியின் குறிக்கோள்களை அடைவதனை பாதிக்கும் உள்வாரி மற்றும் வெளிவாரி நிகழ்வுகளிலிருந்து எழுகின்ற சாத்தியமான இடர்கள் நேரகாலத்துடன் இனங்காணப்படுகின்றன. இடர் இனங்காணலானது குழுச்சிந்திப்பு அமர்வுகள், நிகழ்வு அறிக்கையிடல், கிளை மட்டத்திலான சுய-மதிப்பீடுகள், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கண்டுபிடிப்புகள் அ.பொ.ச.தொ. பகுப்பாய்வு போன்ற கருவிகளைப் பயன்படுத்துதல், காட்சிநிலை பகுப்பாய்வு என்பவற்றூடாக செயலாற்றப்படுகின்றது. |
| இடரின் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு | இடர் பகுப்பாய்வானது ஒட்டுமொத்த தரப்படுத்தல், இடர் நிகழ்வுகளின் நிகழ்வியல்புகள் மற்றும் விளைவுகள் என்பவற்றை உள்ளடக்குவதுடன், மற்றும் தற்போதுள்ள கட்டுப்பாடுகளை மதிப்பிடுதல் மற்றும் வடிவமைப்பு மற்றும் செயற்பாட்டில் இந்த கட்டுப்பாடுகளின் வினைத்திறனை தீர்மானித்தல் என்பவற்றையும் உள்ளடக்கும். இனங்காணப்பட்ட இடர்கள் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் சார்புநிலைகளுக்காக பகுப்பாய்வு செய்யப்படவேண்டியுள்ளது. அளவுசார் கருவிகளும் பண்புசார் தகவல்களும் இடர்களை வினைத்திறனாக பகுப்பாய்வு செய்வதற்கும் மதிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. |
| இடர் மதிப்பீடு | இந்த செய்கைமுறையானது நிகழ்வியல்பு மற்றும் ஏதேனும் சாத்தியமான இடர்களை தணிப்பதற்காக கம்பனியின் உழைப்புக்கள் மற்றும் மூலதனத்திலான தாக்கம் என்பவற்றை மதிப்பிடுவதனை உள்ளடக்குகின்றது. இடர் நிறைவேறும்போது உழைப்புகள் மற்றும் மூலதனத்திலான தாக்கத்தில் புரிந்துணர்வினை அடைவதற்காக பாரிய இடர் பிரிவுகளில் அழுத்தச் சோதனைகள் செயலாற்றப்படுகின்றன. |

# இடர் முகாமைத்துவ மீளாய்வு

| செய்கைமுறை உறுப்பு | விளக்கம் |
|---|---|
| இடர் கவனிப்பு | இடர் தவிர்ப்பு, இடர் குறைப்பு, இடர் ஏற்பு மற்றும் இடர் பகிர்தல் / மாற்றல் என்பன கிடைக்கக்கூடிய இடர் கவனிப்புத் தெரிவுகளாகும் மற்றும் இடர் ஆர்வத்துடன் ஒத்ததான பொருத்தமான இடர் பதிலளிப்புகள் தெரிவுசெய்யப்படுகின்றன. மிகவும் பொருத்தமான இடர் பதிலளிப்பினை தெரிவுசெய்வதில், ஒவ்வொரு நடவடிக்கையினை அமுலாக்குவதன் கிரயம் மற்றும் நலன்கள் கருத்திலெடுக்கப்படுகின்றன. |
| இடர் கட்டுப்பாடு | இந்த உறுப்பானது வரம்பு கட்டமைப்புகள், ஒதுக்கீட்டுத் தேவைப்பாடுகள் மற்றும் அறிக்கையிடும் நியமங்கள் உள்ளடங்கலான முக்கிய கட்டுப்பாட்டு செய்கைமுறைகள் மற்றும் நடைமுறைகளை நிறுவுவதனை உள்ளடக்குகின்றது. |
| கண்காணித்தலும் அறிக்கையிடலும் | இடர் சகிப்பு வரம்புகள் மற்றும் இடர் ஆர்வம் என்பவற்றுக்கான கட்டுப்பாடுகள் மற்றும் பின்பற்றுதலை கண்காணித்தலானது கட்டுப்பாடுகள் அல்லது இடரிலான மீறுகைகளின் முன்னெச்சரிக்கையினை வழங்கும். சாத்தியமான இடர் வெளிப்பாடுகள், செறிவுகள் மற்றும் இடர்-பொறுப்பேற்றல் விளைவுகளிலான அறிக்கைகள், நி.ஒ.இ.மு.கு, கடன் குழு மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கு கிடைக்கக்கூடியதாயுள்ளது. |
| வினைத்திறனான தொடர்பாடல் | இது கம்பனி முழுவதும் ஒரு பரவலான விதத்தில், மேலிருந்து கீழாக மற்றும் கிடையாக தகவல்களை வினைத்திறனான தொடர்பாடுவதனை உள்ளடக்குகின்றது. அத்துடன், கம்பனியானது இடர் முகாமைத்துவ செய்கைமுறையில் தகவலானது மேற்கூறிய நடவடிக்கைகளில் பாய்ச்சப்படுதவனை உறுதிசெய்கின்றது. |

### இடர் ஆளுகை

PLC பணிப்பாளர்கள் சபையானது ஒட்டுமொத்த இடர் ஆர்வத்தினை நிறுவுவதற்கும் இடர் முகாமைத்துவ செய்கைமுறையினை மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாளியாகும் என்பதுடன் இது சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினூடாக செயற்படுத்தப்படும்.

### இடா ஆளுகை கட்டமைப்பு



## இடர் ஆளுகை வரம்புறுகை

**பணிப்பாளர்கள் சபை**

### வணிக முன்னணி முகாமைத்துவம்

**1ஆவது வரிசை பாதுகாப்பு**

முக்கிய பங்கு வகிப்பாளர்கள்
- பி.நி.அ. மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவம்
- தலைமைக் காரியாலய பிரிவுகள்
- கிளை மட்ட செயற்பாடுகள்

நாளாந்த அடிப்படையில் அவர்களது வணிக நடவடிக்கைகளிலிருந்து எழுகின்ற பல்வேறு இடர்களில் இனங்காணுதல், முகாமைப்படுத்தல், தணித்தல் என்பவற்றில் அவர்கள் அறிக்கையிடும் தேவையினைக் கொண்டுள்ளார்கள்.

### இடர் முகாமைத்துவம்

**2ஆவது வரிசை பாதுகாப்பு**

முக்கிய பங்கு வகிப்பாளர்கள்
- ச.ஒ.இ.மு.கு.
- நி.ஒ.இ.மு.கு.
- சொ.பொ.கு.
- முகாமைத்துவ கடன் குழு (ம.க.கு.)
- த.தொ. வழிநடத்தல் குழு(த.தொ.வ.கு.)
- த.கா.பி.-இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு.
- த.கா.பி.-இணக்கப்பாட்டுப் பிரிவு

இந்த வரிசையானது இடர் மேற்பார்வை செய்யும் அங்கங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.
(ஆலோசகர் முதல் வரிசை)

**இரண்டாவது வரிசை பாதுகாப்பு**

### சுயாதீன உறுதிமொழி

**3ஆவது வரிசை பாதுகாப்பு**

முக்கிய பங்கு வகிப்பாளர்கள்
- ச.க.கு.
- உள்ளகக் கணக்காய்வு
- வெளிவாரி கணக்காய்வு

3ஆவது வரிசை பாதுகாப்பானது முதல் மற்றும் இரண்டாம் வரிசைகளின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மை பற்றி உறுதிமொழியினை வழங்குகின்றது.

செய்கை முறைகளை மேம்படுத்துவதற்கு ஆலோசகரின் பங்கு.

**மூன்றாவது வரிசை பாதுகாப்பு**

# இடர் முகாமைத்துவ மீளாய்வு

## முதல் வரிசை பாதுகாப்பு

நாளாந்த செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் இணைந்துள்ள இடர்களை சொந்தமாக்கி முகாமைப்படுத்துவதற்கான பிரதான பொறுப்பினை முகாமைத்துவம் (செய்கைமுறை உடைமையாளர்கள்) கொண்டுள்ளது. மேலதிகமாக, முதலாம் வரிசை பாதுகாப்பு கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, செயற்பாடு மற்றும் அமுலாக்கத்திற்கு பொறுப்புக் கூறல் வேண்டும்.

## இரண்டாம் வரிசை பாதுகாப்பு

இது இடர் செயற்பாடு, இணக்கப்பாடு மற்றும் சில நிதி, சட்டம் மற்றும் வரி விடயங்களையும் மற்றும் தகவல் பாதுகாப்பு இடரினையும் உள்ளடக்குகின்றது. வணிகப் பக்கத்திலிருந்து சுயாதீனமாக, இரண்டாம் வரிசை இடர் மற்றும் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் பீபள்ஸ் லீசிங் இனை பாதிக்கும் இடர்கள் தொடர்பாக அவற்றின் சொந்த அபிப்பிராயத்தினை உருவாக்கும்.

இரண்டாம் வரிசை செயற்பாடுகள் இடர்களை இனங்கண்டு, அளவிட்டு அறிக்கையிடும் பொறுப்பினைக் கொண்டன. இரண்டாம் வரிசை இடர் மற்றும் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் கம்பனி முழுவதும் இடர் கொள்கை, இடர் வரம்புறுகை ஆகியவற்றின் நிலைபேறான அமுலாக்கத்திற்கும் துணைபுரிகின்றதுடன் அவை எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றது என்று மேற்பார்வையும் செய்கின்றது. இணக்கப்பாடு என்பது ஒரு சுயாதீன செயற்பாடு என்பதுடன் இது நடைமுறையிலுள்ள சட்டங்கள். ஒழுங்குவிதிகள் அல்லது உள்வாரி விதிகளுடன் இணக்கப்பாடின்மையூடாக இணக்கப்பாட்டு இடருக்கான வெளிப்பாட்டினை அல்லது தீங்கிலிருந்து பீபள்ஸ் லீசிங் இனை தடுக்கும் நோக்கத்தினைக் கொண்டதாகும்.

**சபை மட்டத்திலான குழுக்கள்**

| சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (ச.ஒ.இ.மு.கு.) | சபை கணக்காய்வுக் குழு (ச.க.கு.) |
|---|---|
| **தலைமை:**<br>நிறைவேற்றுநரல்லா, சுயாதீன பணிப்பாளர் | **தலைமை:**<br>நிறைவேற்றுநரல்லா, சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர் |
| **அங்கத்தவர்கள்:**<br>இரண்டு நிறைவேற்றுநரல்லா, சுயாதீனமற்ற பணிப்பாளர்கள்<br><br>**வழக்கமாக வரவேற்கப்படுபவர்கள்:**<br>பிநிஅ/பொம, சிபிபொமு-செயற்பாடுகள், பிபொமு-இடர் மற்றும் கட்டுப்பாடு, பிபொமு -செயற்பாடுகள், பிபொமு-மீட்டல் மற்றும் நிர்வாகம், பிபொமு-உள்ளகக் கணக்காய்வு, இணக்கப்பாட்டு அதிகாரி, பீபள்ஸ் லீசிங் இன் துணைக்கம்பனிகளின் பிரதிநிதித்துவ அதிகாரிகள் | **அங்கத்தவர்கள்:**<br>இரண்டு நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்கள்<br><br>**வரவேற்கப்படுபவர்கள்:**<br>முக்கிய முகாமைத்துவ ஆளணியினர், வெளிவாரி கணக்காய்வாளர்கள் |
| **முக்கிய செயற்பாடுகள்:**<br>கம்பனியின் / குழுமத்தின் ஒட்டுமொத்த இடர் தோற்றுருவத்தினை மீளாய்வுசெய்தல் | **முக்கிய செயற்பாடுகள்:**<br>நிதியியல் அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் கணக்காய்வாளரது சுயாதீனத்தன்மையைக் கண்காணித்தல் |
| **கூட்ட அதிர்வெண்:**<br>காலாண்டு, அவசர விடயங்களுக்கு விசேட கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. | **கூட்ட அதிர்வெண்:**<br>காலாண்டு, அவசர விடயங்களுக்கு விசேட கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. |
| **அறிக்கையிடல்:**<br>ச.ஒ.இ.மு.கு. கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் சபைக்கு | **அறிக்கையிடல்:**<br>ச.க.கு. கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் சபைக்கு |
| (ச.ஒ.இ.மு.கு. இன் விரிவான அறிக்கையானது பக்கங்கள் 170 மதல் 172 வரை வழங்கப்பட்டுள்ளன) | (ச.க.கு. இன் விரிவான அறிக்கையானது பக்கங்கள் 162 முதல் 163 வரை வழங்கப்பட்டுள்ளன) |

**நிறைவேற்றுநர் மட்டத்திலான குழுக்கள்**

| சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு (சொ.பொ.கு) | நிறைவேற்று ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு (நி.ஒ.இ.மு.கு) |
|---|---|
| **தலைமை:**<br>பிநிஅ/பொமு | **தலைமை:**<br>பிபொமு - இடர் மற்றும் கட்டுப்பாடு |
| **அங்கத்தவர்கள்:**<br>சிபிபொமு-செயற்பாடுகள், பிபொமு-இடர் மற்றும் கட்டுப்பாடு, பிபொமு-மீட்டல் மற்றும் நிர்வாகம், பிபொமு-செயற்பாடுகள், சிமு- நி.வை. மற்றும் சேமிப்புக்கள், பிமு - நிதி, சிமு - கூட்டாண்மை நிதியளித்தல் | **அங்கத்தவர்கள்:**<br>கூட்டாண்மை முகாமைத்துவத்தின் அங்கத்தவர்கள், இணக்கப்பாட்டு அதிகாரி<br><br>**உள்ளடக்கப்படும் வழக்கமான வரவேற்கப்படுபவர்கள்:**<br>பிரதான முகாமையாளர்கள் - செயற்பாடுகள் |
| **முக்கிய செயற்பாடுகள்:**<br>கம்பனியின் திறைசேரி, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் செயற்பாட்டினை மீளாய்வு செய்தல் | **முக்கிய செயற்பாடுகள்:**<br>கடன் தொடர்பான இடர்கள் மற்றும் செயற்பாட்டு இடர்களை மீளாய்வு செய்தல் |
| **கூட்ட அதிர்வெண்:**<br>மாதாந்தம், அவசர விடயங்களுக்கு விசேட கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. | **கூட்ட அதிர்வெண்:**<br>மாதாந்தம் |
| **அறிக்கையிடல்:**<br>கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் சபைக்கும் மற்றும் கூட்டங்களது சிறப்பம்சங்களிலான அறிக்கை காலாண்டு அடிப்படையில் ச.ஒ.இ.மு.கு. விற்கு. | **அறிக்கையிடல்:**<br>பரிந்துரைகள் பிநிஅ / பொமு க்கு<br>கூட்ட சிறப்பம்சங்கள் காலாண்டுதோறும் ச.ஒ.இ.மு.கு. க்கு |

| முகாமைத்துவ கடன் குழு (மு.க.கு.) | த.தொ. வழிநடத்தல் குழு (த.தொ.வ.கு.) |
|---|---|
| **தலைமை:**<br>சிபிபொமு - செயற்பாடுகள் (வலயம் 1) | **தலைமை:**<br>பிசிஅ / பொமு |
| **அங்கத்தவர்கள்:**<br>பிபொமு-செயற்பாடுகள், உபொமு-மீட்டல்கள், உபொமு-சட்டம், பிபொமு-இடர் மற்றும் கட்டுப்பாடு (வாக்குரிமையற்ற அங்கத்தவர்), சிமு-காரணியாக்கல், சிமு-எல்லைக் கடன் வர்த்தகம், சிமு-கூட்டாண்மை நிதியளித்தல் | **அங்கத்தவர்கள்:**<br>பிபொமு-ததொதொ, தகவல் பாதுகாப்பு அதிகாரி(தபாஅ), ததொதொ பிரிவுகளின் தலைமைகள் - (வலையமைப்பு / வழங்கன் முகாமைத்துவம் / மென்பொருள் / வன்பொருள் / புதிய வணிக அபிவிருத்தி), முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் மூலோபாயம்<br><br>**உள்ளடக்கப்படும் நிரந்தர வரவேற்கப்படுபவர்கள்;**<br>பிபொமு - இடர் மற்றும் கட்டுப்பாடு, சிமு - இணக்கப்பாடு |
| **முக்கிய செயற்பாடுகள்:**<br>கடன் வசதிகள், கடன் நிர்வாகம் மற்றும் கடன் செய்கைமுறை தொடர்பான செயன்முறைகளை மீளாய்வு செய்தல் மற்றும் பரிந்துரைத்தல் / அங்கீகரித்தல். | **முக்கிய செயற்பாடுகள்:**<br>திட்ட விளைவின் விநியோகத்தினை உறுதிப்படுத்துவதற்கான உறுதுணை, ஆலோசனை மற்றும் வழிகாட்டியினை வழங்குதல், தகவல் பாதுகாப்பு திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் ஏனைய த.தொ தொடர்பான கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை மீளாய்வு செய்தல் |
| **கூட்ட அதிர்வெண்:**<br>நாளாந்தம் முன் உடன்பட்ட நேர அட்டவணையில் | **கூட்ட அதிர்வெண்:**<br>இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மற்றும் அவசர தேவைப்பாடுகளுக்காக அவசியமானபோது |
| **அறிக்கையிடல்:**<br>கடன் பிரேரணைகளின் பரிந்துரைகள் பிநிஅ/பொமு மற்றும் பணிப்பாளர்கள் சபைக்கு | **அறிக்கையிடல்:**<br>ததொவ.கு இன் நிகழ்ச்சிக்குறிப்புகள் சஒஇமுகு இற்கு அறிக்கையிடப்படும். |

## இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு (இ.க.பி.)

இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவானது பின்வரும் செயற்பாட்டு பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. இடர்களை இனங்காணுதல், மதிப்பிடுதல் மற்றும் தணித்தல், இடர் தணிப்பு முறைகளை கண்டுபிடித்தல், முன்னெச்சரிக்கை அறிகுறிகளை கண்காணித்தல், எதிர்கால நட்டங்களுக்கான சாத்தியத்தினை எதிர்வுகூறல் மற்றும் நட்டங்கள்/இடர் மாற்றங்களை கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களை அமுல்படுத்தல். பக்கங்கள் 179 முதல் 181 வரை காண்பிக்கப்பட்டுள்ள இடர் முகாமைத்துவ வரம்புறுகையானது மூலோபாயத் திட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ள மூலோபாய முன்னிறுத்தலை கணக்கிலெடுத்து மூலோபாயங்களது அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல், இடர்களை முகாமைப்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் மற்றும் இடர் ஆர்வம் என்பவற்றை இயலுமையாக்குகின்றது.

## இணக்கப்பாட்டுப் பிரிவு

இணக்கப்பாட்டு பிரிவானது PLC இன் காவல் படையாக செயற்படுகின்றது. ஒரு நிதியியல் நிறுவனம் பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தும் ஒரு அலகு என்பதுடன் இது PLC இன் நேர்மை மற்றும் நற்பெயரினை பாதுகாப்பதற்கு உதவும் ஒரு அவசியமான பங்களிப்பினையும் வகிக்கின்றது. இணக்கப்பாட்டு பிரிவின் செயலாக்கங்கள் பக்கங்கள் 173 முதல் 175 வரை விரிவாக விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

### மூன்றாம் வரிசைப் பாதுகாப்பு

மூன்றாம் வரிசைப் பாதுகாப்பானது உள்வாரி கணக்காய்வாளர்களினாலும் வெளிவாரி கணக்காய்வாளர்களினாலும் அமுல்படுத்தப்பட்டன. உள்ளக கணக்காய்வாளரின் பங்கு இந்த மாதிரியில் கடுமையானதாகும் ஏனெனில் இவர்கள் கம்பனியின் ஒரு பகுதியினர் ஆனால் வடிவமைப்பில் சுயாதீனமானவர்கள்.

உள்ளக கணக்காய்வாளர்கள் முழுவதுமான இடர் முகாமைத்துவத்தின் வடிவமைப்பு மற்றும் அமுலாக்கத்தினை மீளாய்வு செய்து மதிப்பிடுவதற்கும் முதலாம் வரிசை மற்றும் இரண்டாம் வரிசை பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்குமாகும்.

வெளிவாரி கணக்காய்வாளர்கள் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கும் மற்றும் துல்லியம் மற்றும் முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டிற்காக கணக்குகளை மதிப்பிடுதல், உள்ளக முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவ தந்திரங்களை மதிப்பிடுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### இடர் கலாச்சாரம்

ஒரு திடமான இடர் கலாச்சாரமானது இடர்கள் மற்றும் இடர்கள் தொடர்பாக அறிவுபூர்வமான தீர்மானம் மேற்கொள்வதில் பணியாட்களது விழிப்புணர்வின் மூலம் அடையாளம் காணப்படுகின்றது. பீபள்ஸ் லீசிங் இன் இடர் கலாச்சாரமானது அதன் இடர் ஆளுகைக் கட்டமைப்பு, இடர் ஆர்வம், இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு வரம்புறுகைகள் என்பவற்றில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

பீபள்ஸ் லீசிங் இனங்காணப்பட்ட இடர்கள் செயற்திறனுடன் வெளிப்படுத்தப்படுதல் மற்றும் எதிர்பாரா நிகழ்வுகள் அவை இடம்பெற்றவுடன் அறிக்கையிடப்படல் காணப்படும் ஒரு திறந்த மற்றும் வெளிப்படையான கலாச்சாரத்திற்கு கடும் முயற்சி செய்கின்றது. இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவானது அவசியமான கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை அபிவிருத்திசெய்தல் மற்றும் அமுலாக்குவதில் தலைமை வகிப்பதுடன் இது நாளாந்த வணிக நடவடிக்கைகளில் இடர் முகாமைத்துவக் கொள்கைகள் ஒருங்கிணைக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகும். இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவானது அனைத்து பணியாட்களுக்கும் அவசியமான விழிப்புணர்வு / பயிற்சிகளை வழங்குகின்றது.

**இடர் கலாச்சாரம்**

| | | | |
|---|---|---|---|
| இடர் முகாமைத்துவக் கொள்கை | ஒத்துழைப்பு மற்றும் இடர் ஆளுகை | நடத்தைக் கோவை | கட்டாயப் பயிற்சி |
| வேதனம் மற்றும் வெகுமதிகள் | இடர் ஆர்வம் | கூட்டாண்மை விழுமியங்கள் | |

# இடர் முகாமைத்துவ மீளாய்வு

## கடன் இடர்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் தொற்றின் காரணமாக தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக காணப்பட்ட வணிக இடையூறுகளிலிருந்து வணிகங்கள் மீட்சியடையும்போது நிதிச் சேவைகள் துறையெங்கும் காணப்படும் ஒரு முக்கிய அக்கறை கடன் இடராகும். இதன் விளைவாக, இந்தத் துறையிலுள்ள அனேகமான நிறுவனங்களில் கடன் இடரினை முகாமைப்படுத்துவதற்காக செய்கைமுறைகளை பலப்படுத்துவதற்காக கணிசமானளவு வளங்கள் ஒதுக்கப்பட்டன. மொத்து கடன்களுக்கு மொத்த செயற்திறனற்ற கடன்களின் மூலம் அளவிடப்படும் வங்கியல்லாத நிதித் துறையின் சொத்தின் தரமானது இதன் விளைவாக மார்ச் 2021 இல் 11.29% ஆக காணப்பட்டது டிசம்பர் 2021 இல் 11% ஆக சற்று முன்னேற்றமடைந்தது. இந்த எண்கள் கடன் காலம் தாழ்த்திச் செலுத்துவதற்கான வசதிகளையுடைய கடன்களை செயற்திறனுள்ள கடன்களாக கருதும்வேளை, இந்த வசதியானது மார்ச் 2022 இல் நிறைவுறும்போது இது ஜூன் 2022 அளவில் கடன் தரத்தில் அழுத்தங்களை ஏற்படுத்தலாம்.

## கண்ணோட்டம்

**வரையறை**

ஒரு வாடிக்கையாளர் அல்லது ஒரு நிதிக் கருவிக்கான ஒரு எதிர்தரத்தவர் அவர்களது ஒப்பந்தக் கடப்பாடுகளைச் சந்திக்கத் தவறும்போது அதன் விளைவாக கம்பனிக்கான நிதியியல் நட்டத்தின் இடர் ஆகும்.

**கடன் இடரின் கூறுகள்**

1. தவறுதல் இடர்
2. செறிவு இடர்
3. மீட்டல் இடர்

| கணக்காய்வு செய்யப்பட்டது | 2021/22 ஆகக்கூடிய வெளிப்பாடு ரூ.000's | 2020/21 ஆகக்கூடிய வெளிப்பாடு ரூ.000' |
|---|---|---|
| ஆகக் கூடிய கடன் வெளிப்பாடு | | |
| மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் | 161,162 | 150,656 |
| வலுக்குன்றலுக்கான ஏற்பாடு | | |
| தனிப்பட்ட வலுக்குன்றல் | (1,655) | (1,168) |
| கூட்டு வலுக்குன்றல் | (8,233) | (8,100) |
| தேறிய கடன்கள் மற்றும் வருமதிகள் | 151,274 | 141,388 |
| கடன்கள் மற்றும் வருமதிகளின் நியாயப்பெறுமதி | 161,878 | 163,635 |

### மொத்த நிலுவையில் செயற்திறனற்ற விகிதம்




### ஏற்பாட்டு காப்பீட்டு விகிதம்




கடன் இடருக்கான விவேகமான ஏற்பாடுகள் கொள்கைகளினூடாக பீபள்ஸ் லீசிங் இன் ஏற்பாட்டு காப்பீட்டு விகிதம் துறையின் மட்டங்களிலும் பார்க்க மேலாக பராமரிக்கப்பட்டது.

## கடன் இடர் ஆளுகை




## கடன் இடர் முகாமைத்துவ செய்கைமுறை

| மூலோபாய வணிக அலுவுகள் | | | கடன் அங்கீகாரம் | | கொடுப்பனவு அலகு | இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு |
|---|---|---|---|---|---|---|
| கடன் விண்ணப்பத்தினை உருவாக்குதல் | கடன் மதிப்பீடு | இடரின் விலையிடல் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை தீர்மானித்தல் | ஆவணங்களின் பூரணத்துவம் குறிப்பாக பாதுகாப்பு ஆவணங்களை பரிசோதனை செய்தல் | சபை அங்கீகரிக்கப்பட்ட கடன் அதிகார வரம்பிற்கமைய அங்கீகாரங்கள் | கடன் வசதிகளின் பகிர்ந்தளிப்பு | பகிர்ந்தளிப்பிற்கு முன்னும் பின்னும் மற்றும் விற்பனை நட்ட மீளாய்வுகளை (கடன் அதிகார கட்டமைப்பில் சுயாதீனமாக குறிப்பிடப்பட்டுள்ளது) செயலாற்றுதல் |

## 2021/22 இல் முக்கிய சிறப்பம்சங்கள்

**செய்கை முறையினை பலப்படுத்துதல்**

- இகபி சுயாதீனமாக கடன் பிரேரணைகளையும் பகிர்ந்தளிப்பின் பின்னரான, உயர் பெறுமதி வசதிகளது மீளாய்வு உள்ளடங்கலாக, செயலிலுள்ள மற்றும் முடிவுறுத்தல் இழப்பு வசதிகளது மீளாய்வுகளையும் மதிப்பிட்டது. இனங்காணப்பட்ட இடைவெளிகள் பொருத்தமான அதிகார மட்டங்களுக்கு அறிவிக்கப்பட்டன (கிளை முகாமையாளர்கள், பிமு/ வலய சிபிபொமு மற்றும் பிபொமு/பிபொமு உள்ளகக் கணக்காய்வு).
- நிஒஇமுகு கூட்டங்கள் மாதாந்தம் இடம்பெறுகின்றன. நிஒஇமுகு சொத்து தர விகிதங்களின் எதிர்மறையான போக்கினை கண்காணித்தது, சமீபத்தைய 1 வருட வழங்கல்களில் நிலுவை மட்டங்களை கணிப்பீடு செய்யும் தொற்றுகின்ற சதவீதத்தினை மதிப்பீடு செய்தது, கடன் செயற்பாட்டு சிக்கல்களை கலந்துரையாடி, செயலாற்றி மற்றும் கண்காணித்தது.
- நடைமுறையிலுள்ள கடன் இடர் கொள்கைகளுக்கு மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- கடன் அதிகார வரம்புகளின் மீளாய்வு. இவ்வாண்டில், கடன் அங்கீகார அதிகாரமானது அனேகமாக தலைமைக் காரியாலய மட்டத்தினை மையப்படுத்தியிருந்ததுடன், இத நாம் கடன் கூர்ந்தாய்வு மற்றும் கடன் தரத்தினை மேம்படுத்துவதற்கு முயற்சிப்பதற்காகும்.
- ஆதனங்களின் பிணைச்சொத்து பெறுமதியிடல்கள் மதிப்பிடுவதற்காக ஒரு ஆதன மதிப்பீட்டாளர்கள் குழுவானது பராமரிக்கப்பட்டது மற்றும் எமது முறைமையில் அங்கிகரிக்கப்பட்ட வாகன மதிப்பீட்டாளர்கள் தேக்கம் ஒன்றும் உருவாக்கப்பட்டது.

# இடர் முகாமைத்துவ மீளாய்வு

## கடன் செறிவு இடரினை முகாமைப்படுத்தல்

### கருவிச் செறிவு 2022




### கருவிச் செறிவு 2021




- குத்தகை
- கடன்
- இஸ்லாமியக் கருவிகள்

### துறைவாரியான செறிவு 2022




### பூகோளவாரியான செறிவு 2022




### பூகோளவாரியான செறிவு 2021




- மேற்கு
- தெற்கு
- மத்திய
- சபரகமுவ
- ஊவா
- வடக்கு
- வட மத்திய
- கிழக்கு
- வட மேற்கு

### துறைவாரியான செறிவு 2021




- நிதிச் சேவைகள்
- விவசாயம்
- உற்பத்தி
- சுற்றுலா
- போக்குவரத்து
- கட்டுமானம்
- வர்த்தகர்கள்
- சேவைகள்
- கைத்தொழில்
- ஏனையவை

### கடன் பருமன் வாரியான செறிவு 2022




### கடன் பருமன் வாரியான செறிவு 2021




- ரூ. < 1 மில்லியன்
- ரூ. 1 மில்லியன் முதல் ரூ. 10 million
- ரூ. 10 மில்லியன் முதல் ரூ. 100 மில்லியன்
- ரூ. > 100 மில்லியன்

## திரவத்தன்மை இடர்

வருடத்தின் ஆரம்பத்தில் சந்தையில் காணப்பட்ட மிகை திரவத்தன்மையானது, கோவிட்-19 ஆரம்பத்தின் காரணமாக 2020 இல் குறைக்கப்பட்ட வஅநிநி இன் ஆகக் குறைந்த திரவத்தன்மை தேவைப்பாடுகள் இ.ம.வ. இனால் முறைப்படுத்தப்பட்டதுடன் வீழ்ச்சியடைந்தது. இதன் மத்தியிலும் டிசம்பர் 2021 இன் இறுதியில் துறையின் திரவத்தன்மையானது ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் மட்டங்களுக்கும் பார்க்க அதிகமாக பராமரிக்கப்பட்டது. துறையில் கிடைக்கக்கூடிய ஒட்டுமொத்த திரவச் சொத்துக்கள் ரூபா 155.9 பில்லியன் ஆகும், இது ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் தேவையான ரூபா. 89.9 பில்லியனிலும் பார்க்க அதிகமாக காணப்பட்டது. அதேவேளை திரவத்தன்மை விகிதமானது (வைப்புக்கள் மற்றும் கடன் பெறுகைகளுக்கு எதிராக திரவச் சொத்துக்கள்) 2020 இல் காணப்பட்ட 13% இலிருந்து டிசம்பர் 2021 இல் 14.1% ஆக மேம்பட்டது. பீபள்ஸ் லீசிங்கின் திரவத்தன்மையானது கீழே குறிப்பிட்டவாறு இதனைப் பின்தொடர்ந்தது.

## கண்ணோட்டம்

**வரையறை**
கம்பனியின் கடப்பாடுகளை அவை செலுத்தவேண்டியபோது சந்திப்பதற்கு போதுமையற்ற நிதியியல் வளங்களை கொண்டுள்ள இடர் அல்லது அத்தகைய கடப்பாடுகளை மிதமிஞ்சிய கிரயத்தில் சந்தித்தல் ஆகும். காசுப்பாய்ச்சல்களின் நேரப்படுத்தலிலான பொருத்தமின்மையினால் திரவத்தன்மை இடர் எழுகின்றது.

**திரவத்தன்மை இடர் கூறுகள்**

- மத்திய வங்கி திரவத்தன்மை இடர்
- திரவத்தன்மை இடருக்கு நிதியளித்தல்
- சந்தை திரவத்தன்மை இடர்

**கடன் தரப்படுத்தல்**
A+(lka) பிட்ச் ரேட்டிங்ஸ் லங்காவினால்

## திரவச் சொத்துக்களுக்கான அழுத்தப் பரிசோதனை (வைப்புகளின் உடனடியான மீள்பெறுகை)

| காட்சிநிலை | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| அதிர்ச்சியின் பருமன் | 10% | 15% | 20% |
| திரவச் சொத்து விகிதம்* | 72.46% | 28.57% | (19.89)% |
| திரவச் சொத்து விகிதம்*-எதிர்பாரா நிதிகளுக்கு செம்மையாக்கலின் பின்னர் | 207.83% | 170.65% | 129.59% |

*மூதிரவச் சொத்து விகிதம்: கிடைக்கக்கூடிய திரவச் சொத்துக்கள் / இமவ இன் பணிப்புரையின்படி திரவச்சொத்துக்கள்*

மொத்த திரவச் சொத்துக்கள் மற்றும் திரவச் சொத்து விகிதம்




**திரவச் சொத்து விகிதம் : கிடைக்கக்கூடிய திரவச் சொத்துக்கள் / இமவ இன் பணிப்புரையின்படி திரவச்சொத்துக்கள்*

இடர் நிறையிடப்பட்ட சொத்துக்களுக்கு மைய மூலதனம்




இடர் நிறையிடப்பட்ட சொத்துக்களுக்கு மூலதன அடித்தளம்




நிதியளித்தல் பன்மயமாக்கம் **2022**




நிதியளித்தல் பன்மயமாக்கம் **2021**




- நிலையான வைப்புகள்
- தவணைக் கடன்கள்
- பிணையங்களாக்குதல்
- தொகுதிக்கடன்கள்
- குறுங்காலக் கடன்கள்
- சேமிப்பு வைப்புகள்
- முதாரபஹா
- ஏனையவைகள்

உரித்துவத்திற்கு கடன்பெறுகை (மடங்குகள்)



# இடர் முகாமைத்துவ மீளாய்வு

## முதிர்வுப் பொருத்தமின்மை

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான கழிவிறக்கம் செய்யப்படாத நிதிச் சொத்துக்களின் முதிர்வுத் தோற்றுருவம்




## திரவத்தன்மை இடர் ஆளுகை




## பயனுறுதியான செய்கைமுறைகள்

திரவத்தன்மை இடரின் முகாமைப்படுத்தலானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களது முதிர்வுத் தோற்றுருவங்கள், மொத்த சொத்துக்களின் சதவீதமாக திரவச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை முகாமைப்படுத்தல் என்பவற்றை நெருக்கமாக கண்காணித்தல் மற்றும் எதிர்வுகூறப்படும் வணிகத் தேவைகளுக்கான போதுமையான திரவச் சொத்துக்கள் காணப்படுவதனை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை வேண்டுகின்றது. பீபள்ஸ் லீசிங் இல் காணப்படும் பொறிமுறைகள் கீழே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன.

### தொடர்ச்சியான வழிமுறைகள் காணப்படுகின்றன

| திறைசேரி | சொபொகு | சஒஇமுகு | சபை |
|---|---|---|---|
| • சொபொகு இனால் நிறுவப்பட்ட வரைகூறுகளினுள் நாளாந்த திரவத்தன்மை முகாமைத்துவம்<br>• முறைமைப்படுத்தல் தேவைப்பாட்டிலும் பார்க்க மேலதிகமாக திரவச் சொத்துக்கள் பராமரிக்கப்பட்டன<br>• அனைத்து காசு வெளிப்பாய்ச்சல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதுமையான பயன்படுத்தப்படாத வசதிகளை பராமரித்தல்<br>• அழுத்தச் சோதனை விளைவுகள் இகபி இனால் சஒஇமுகு க்கு காலாண்டுதோறும் அறிக்கையிடப்படுகின்றது<br>• சொபொகு/சஒஇமுகு க்கு அறிக்கையிடப்பட்டது. | • முதிர்வுப் பொருத்தமின்மை குறிகாட்டிகள், திரவச் சொத்து விகிதம் மற்றும் மூலதனப் போதுமை போன்ற திரவத்தன்மை இடர் குறிகாட்டிகளது மாதாந்த மீளாய்வு<br>• சபைக்கு அறிக்கையிட்டு திரவத்தன்மை இடரினை கட்டுப்படுத்த/தணிப்பதற்கு மற்றும் முகாமைப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்பட்டது<br>• முறைமைப்படுத்தல் சிறுமங்களுடன் இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக மூலதனப் போதுமை விகிதங்கள் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு எதிர்வுகூறப்பட்டன. | • காலாண்டு அடிப்படையில் செயலாற்றப்படும் அழுத்தச் சோதனை மீளாய்வு செய்யப்பட்டது<br>• ஒரு காலாண்டு அடிப்படையில் மூலதனப் போதுமை விகிதங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. | • PLC இல் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்திற்கான முதன்மை பொறுப்பினைக் கொண்டுள்ளது. |

### சந்தை இடர்

சந்தை இடரின் பல்வேறு கூறுகளில், வட்டி வீத இடருக்கான வெளிப்பாடு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும் ஏனெனில் சந்தை இடரின் ஏனைய கூறுகளுக்கான வெளிப்பாடானது ஒப்பீட்டளவில் மிகவும் குறைந்ததாகும். எவ்வாறாயினும், பாதுகாப்பான பெறுமதிக்கான கடன் விகிதங்களுடன் முகாமைப்படுத்தப்படும் தங்கக் கடன்கள் அதிகரித்ததுடன், இவ்வாண்டில் பண்டங்களின் விலைக்கான இடர் அதிகரித்தது. வருடத்தின் ஆரம்பத்தில் குறைவாகக் காணப்பட்ட வட்டி வீதங்கள் இரண்டாம் காலாண்டில் உயர்வடைய ஆரம்பித்ததுடன் இது தொற்றின் ஆரம்பத்தில் கடைப்பிடிக்கப்பட்ட தாராளமயமான நாணயக் கொள்கை வழிமுறைகள் நிறைவடையும் அறிகுறியினை காட்டியது. உயர்வடையும் பணவீக்கம் உள்ளடங்கலான அதிகரிக்கும் பொருளாதார சவால்களுடன் ஏப்ரல் 2022 இல் வட்டி வீதங்கள் முன்நிகழ்ந்திராதவாறு 700 அடிப்படை புள்ளிகளினால் அதிகரித்தது. இமவ பொருளாதார மீட்சிக்காக ஒரு தாராள நாணயக் கொள்கையினை பராமரித்தது. நாம் சந்தை வட்டி வீதங்களிலான அசைவுகளை நெருக்கமாக கண்காணித்தோம். இது வணிகங்களை கவர்வதற்காக வைப்புக்கள் மற்றும் கடன் வழங்கல் வட்டி வீதங்களில் மீள்விலையிடுவதனை உறுதிசெய்யவும் அதேசமயம் எமது இலாப விடுமிகையினை பராமரிப்பதற்கும் ஆகும்.

### கண்ணோட்டம்

**வரையறை**

அந்நிய செலாவணி வீதங்கள், வட்டி வீதங்கள், உரித்துவ விலைகள் மற்றும் பண்டங்களது விலைகள் போன்ற சந்தை காரணிகளிலான அசைவுகளிலிருந்து எழக்கூடிய நட்டத்தின் இடர், இது எமது சந்தைப் பெறுமதியினை அல்லது உழைப்புக்களைக் குறைக்கும்.

**சந்தை இடரின் கூறுகள்**

| இடர் வகை | இடர் வெளிப்பாடு |
|---|---|
| வட்டிவீத இடர் | உயர் |
| பண்டங்களின் விலை இடர் | தாழ்வு |
| உரித்துவ முதலீட்டு இடர் | புறக்கணிக்கத் தக்கது |
| அந்நியச்செலாவணி இடர் | புறக்கணிக்கத் தக்கது |

### வட்டி வீத உணர்திறன்

10% அதிர்ச்சி காணப்படினும் பீபள்ஸ் லீசிங் மீளெழுச்சியுடன் காணப்படுவதுடன் இது வட்டி வீதங்களிலான ஒரு அதிகரிப்பினை எதிர்பார்த்து 2021/22 இல் ஐந்தொகையின் பலப்படுத்தலை பிரதிபலிக்கின்றது. இது 8 ஏப்ரல் 2022 இல் இடம்பெற்ற சடுதியான 7% அதிகரிப்பினை ஈடுகொடுப்பதற்கு எம்மை இயலுமையாக்கியது.

### தேவை இலான அழுத்தச் சோதனை - வட்டி வீத அதிர்ச்சி

| தேவை இலான தாக்கம் ரூ.'000 | 2021/22 | |
|---|---|---|
| | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| 5% | (77,864) | 77,864 |
| 7% | (109,010) | 109,010 |
| 10% | (155,728) | 155,728 |

**AWPLR அசைவுகள்**




திறைசேரி உண்டியல் வட்டிவீதத்திலான அசைவு (சராசரி)




சராசரி தங்கத்தின் விலையிலான (24 கரட் சவரின்) அசைவு



# இடர் முகாமைத்துவ மீளாய்வு

தேறிய வட்டி விடுமிகைக்கு தேறிய வட்டி வருமானம்




சந்தை இடர் ஆளுகை




## பயனுறுதியான செய்கைமுறைகள்

| திறைசேரி | சொபொகு | சஒஇமுக | சபை |
|---|---|---|---|
| **வட்டி வீத இடர்** | | | |
| • திறைசேரியானது வழமையாக வட்டி வீதச் சூழலினையும் முக்கிய வட்டிவீத சுட்டிகளது அசைவினை கண்காணித்தது. உ.ம்.: AWPLR, திறைசேரி உண்டியல் வட்டிவீதங்கள்<br>• விரும்பப்படும் விடுமிகையினை பராமரிப்பதற்காக வைப்புகள் மற்றும் கடன் வழங்கல் வீதங்களில் தீர்மானம் மேற்கொள்வதற்காக சொபொகு இற்கு ஒரு அறிக்கை வழங்கப்படுகின்றது. | • வட்டிவீத மீள் விலையிடல் இடைவெளிகள் மற்றும் உணர்திறன் பகுப்பாய்வுகளின் மீளாய்வு<br>• வட்டி வீத சூழலினை மீளாய்வு செய்து விரும்பப்படும் விடுமிகையினை பராமரிப்பதற்காக வைப்புகள் மற்றும் கடன் வழங்கல் வீதங்களை தீர்மானித்தமை | • முன்நிர்ணயிக்கப்பட்ட இடர் சகிப்பு மட்டங்களுக்கெதிராக வட்டிவீத உணர்திறன் மற்றும் மீள்விலையிடல் இடைவெளி வீதங்களின் காலாண்டு மீளாய்வு<br>• தேறிய வட்டி விடுமிகை மற்றும் இலாபகரத்தன்மையில் வட்டி வீதங்களின் தாக்கத்திலான அழுத்தச் சோதனையின் காலாண்டு மீளாய்வு | • PLC இல் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்திற்கான முதன்மை பொறுப்பினைக் கொண்டுள்ளது. |
| **பண்டங்களின் விலை இடர்** | | | |
| • மத்தியில் நிறுவப்பட்ட தங்கக் கடன் அலகானது கிளை வலையமைப்பிலுள்ள தங்கக் கடன் அலகுகளை கண்காணிக்கின்றது.<br>• இ.க.பி. ஆனது நாளாந்தம் தங்கத்தின் விலை அசைவுகளை கண்காணிப்பதுடன் தங்கத்தின் விலையிலான தளம்பல்களை மதிப்பீடு செய்கின்றது. | • தங்கத்தின் விலை அசைவுகள், விலை தளம்பல் மற்றும் கருவியின் செயற்திறன்<br>• தங்கத்தின் விலையில் எதிர்மறையான விலை அசைவுகளது அதிகரிப்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | | • PLC இல் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்திற்கான முதன்மை பொறுப்பினைக் கொண்டுள்ளது. |
| **உரித்துவ முதலீட்டு இடர்** | | | |
| • பங்குகளின் விலைகளில் தாக்கத்தினை சாத்தியமாக ஏற்படுத்தக்கூடிய வழமையாக பங்குச் சந்தை விலைகளின் அசைவுகள், பரந்த பொருளாதார நிலைமைகள் மற்றும் அரசியல் சூழல் ஆகியவற்றை எல்லைக் கடன் வர்த்தகப் பிரிவானது கண்காணிக்கின்றது. | • விரிவான உரித்துவ முதலீட்டு அறிக்கையின் மாதாந்த மீளாய்வு<br>• இழப்பு நிறுத்தல் வரம்பினை விஞ்சும் உரித்துவ முதலீடுகளில் எடுக்கவேண்டிய பொருத்தமான நடவடிக்கை தீர்மானிக்கப்பட்டது. | | • உரித்துவ முதலீட்டுக் கொள்கை மற்றும் பங்கு வர்த்தக் கொள்கையினை சபை அங்கீகரித்தது.<br>• PLC இல் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவத்திற்கான முதன்மை பொறுப்பினைக் கொண்டுள்ளது. |
| **அந்நிய செலாவணி இடர்** | | | |
| • இவ்வருடத்தில் அந்நிய செலாவணியில் திறந்த நிலைமைகள் வைத்திருக்கப்படவில்லை. | | | |

### செயற்பாட்டு இடர்

செயற்பாட்டு இடரானது தொற்றிற்கு முன்னரான காலத்துடன் ஒப்பிடும்போது உயர்ந்த மட்டங்களில் காணப்படுகின்றது. இது செயலாற்றுவதற்கான அழுத்தம் உள்ளடங்கலாக நீடித்த சமூகபொருளாதார அழுத்தமானது மோசடி மற்றும் தவறுக்கான சாத்தியத்தினை அதிகரித்தது. மேலும், சைபர் அச்சுறுத்தல்களும் அதிகரிக்கும் நுட்பங்கள் மற்றும் தாக்குதல்களின் அதிர்வெண் என்பவற்றால் அதிகரித்துள்ளன. பணியாட்களை வீட்டிலிருந்து பணிபுரிவதனை இயலுமையாக்குவதற்கான தேவையின் நிமித்தம் முறைமைகள் பாதிக்கப்படக்கூடியதாக்கியமை மற்றும் வாடிக்கையாளர்களது அதிகரித்த இயங்கலை நடவடிக்கைகள் காரணமாக இது மேலும் அதிகரித்தது. வணிகச் செயல்நிலை தொடர்ச்சி திட்டமிடலானது வெற்றிக்கான முக்கியம் என்பதுடன் நாம் இவற்றை இற்றைப்படுத்தி வழமையாக எமது திட்டங்களை பரிசீலனை செய்தோம். தொற்றின் நிமித்தம் வருடம் பூராவும் உயர்வடைந்து காணப்பட்ட பணியாட்களது ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிலான அழுத்தம் அவர்களது பௌதீக பாதுகாப்பிற்கு நகர்ந்தது. நாட்டில் நிலவும் தற்போதைய சமூக அமைதியின்மை நிதி நிறுவனங்கள் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு இலக்கு வைக்கப்படுவதனை மேற்கொள்வதனாலாகும்.

### கண்ணோட்டம்

**வரையறை**

செயற்பாட்டு இடர்கள் போதுமையற்ற மற்றும் பொருத்தமற்ற உள்ளக செய்கைமுறைகள், முறைமைகள் என்பவற்றின் நிமித்தம் மற்றும் மக்கள் அல்லது வெளிவாரி நிகழ்வுகளிலிருந்தும் எழலாம்.

**முக்கிய செயற்பாட்டு இடர்கள்**

- மோசடி மற்றும் தவறு
- சைபர் தாக்குதல்கள்
- வணிகத் தொடர்ச்சி
- எமது வளாகத்தில் மக்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

### செயற்பாட்டு இடர் ஆளுகை




### பிரிவு வாரியான செயற்பாட்டு இழப்பு நிகழ்வுகள்



# இடர் முகாமைத்துவ மீளாய்வு

## செயற்பாட்டு இடர் முகாமைத்துவம்

### இணங்காணல்

- சம்பவம் அறிக்கையிடல் பொறிமுறை – இது செயற்பாட்டு இடர் நிகழ்வுகளை இனங்கண்டு அவற்றை இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு அனுப்பிவைப்பதற்கு நிறுவப்பட்ட பொறிமுறையாகும்.
- கிளை செயற்பாட்டு இடர் சுய மதிப்பீடு - கிளை செயற்பாட்டு இடர் மட்டங்களை மதிப்பிடுவதற்காக இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவானது கிளை செயற்பாட்டு இடர் சுய மதிப்பீடுகளை காலாண்டுதோறும் மதிப்பிடுகின்றது.
- இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவானல் முறையான தளத்திலான பரிசீலனைகள்.
- இடர்களை இனங்காண்பதற்காக உள்ளக கணக்காய்வு அறிக்கை கண்டுபிடிப்புகளும் பயன்படுத்தப்படுகின்றன.
- இந்த செயற்பாட்டு இழப்பு நிகழ்வுகளின் அடிப்படையில் இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவானது ஒரு செயற்பாட்டு இழப்பு தரவுத்தளத்தினை பராமரிக்கின்றது.

### மதிப்பீடு

- கிளை மட்டத்திலான செயற்பாட்டு இடர் சுய மதிப்பீடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வினை மேற்கொள்ளுதல்
- செயற்பாட்டு இடர் வெளிப்பாடுகளில் கிளைகளின் சுய மதிப்பீடுகளை ஏற்புடையாக்குவதற்காக இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவானது முறையான தளத்திலான பரிசீலனைகளை நடாத்தியதுடன் மற்றும் செயற்பாட்டு இடர்களை சிறுமைப்படுத்துவதற்காக சரியான மட்டத்திலான விழிப்புணர்வினை உருவாக்கியது.

### கண்காணித்தல்

- இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவானது கிரமமான கண்காணிப்பினை மேற்கொண்டதுடன் உயர்ந்த மட்டத்திற்கு விடயங்களை கொண்டு சென்றதுடன் அமுலாக்கலுக்காக செயற்புள்ளிகளை பின்தொடர்ந்தது. இப்பிரிவானது செயற்பாட்டு இழப்பு நிகழ்வுகள் மற்றும் கிட்டிய பிழைகள் தொடர்பாக நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகளின் வினைத்திறனை மீளாய்வு செய்ததுடன் நடைமுறையிலுள்ள கட்டுப்பாடுகள் போதுமையற்றதாகக் கருதப்படின் மேலதிக கட்டுப்பாடுகளை பிரேரித்தது.

### தணித்தல்

- பின்வரும் தோற்றங்களில் இ.-துண்டறிக்கைகளூடாக கிரமமான அடிப்படையில் விழிப்புணர்வு உருவாக்கப்பட்டது.
  - வ.தொ.தி.
  - தீ தயாராயிருத்தல்
  - அவசரகால பதிலளிப்பு
  - முதலுதவி
- வணிகத் தொடர்ச்சித் திட்டங்களை இற்றைப்படுத்தி பயிற்சிகள் மேற்கொண்டமை
- பணியாட்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது உம்.வீட்டிலிருந்து பணிபுரியும் ஏற்பாடுகள்
- செயற்பாட்டு இடர் முகாமைத்துவம் தொடர்பான கொள்கைகளை உருவாக்கியமை
  - கிளை இருப்பிட அணுக்கம்/கதவு சாவி கையாளும் செயன்முறை
  - கிளை பாதுகாப்பு செயன்முறைகள் மற்றும் பாதுகாப்பு செய்கைமுறையின் தரப்படுத்துதல்
  - பௌதீக அணுக்கக் கொள்கை

**ஏனையவைகள்**

- காப்புறுதி ஏற்பாடுகள்
- புற ஒப்படைப்பு ஏற்பாடுகள்

### அறிக்கையிடல்

- கம்பனியின் அனைத்து செயற்பாட்டு இடர் நிகழ்வுகளும் இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவினால் பதிவுசெய்யப்பட்டு மாதாந்தம் நிஒஇமுகு கூட்டங்களுக்கும் காலாண்டுதோறும் சஒஇமுகு க்கும் அறிக்கையிடப்படுகின்றன. நிஒஇமுகு தேவையான வழிகாட்டலை வழங்கியதுடன் சஒஇமுகு ஆனது அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகளின் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்தது.

## காப்புறுதி ஏற்பாடுகள்

கம்பனியானது கட்டுப்படுத்த இயலாத நிகழ்வுகளான தீ மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்காக ஒரு “இடர் மாற்றல்” மூலோபாயத்தினை கடைப்பிடிக்கின்றது. கம்பனியானது காப்பிடக்கூடிய இடர்களை பிரசித்திபெற்ற காப்புறுதி வழங்குநர்களிடமிருந்து காப்புறுதி ஒப்பந்தங்களை பெறுவதன் மூலம் மாற்றல் செய்தது. இகபி ஆனது நேரத்துடனான புதுப்பிப்புகள் மற்றும் செயலிலுள்ள நிலையினை உறுதிப்படுத்துவதற்காக இவ்வருடத்தில் காப்புறுதி ஒப்பந்தங்களை மீளாய்வு செய்தது.

## புற ஒப்படைப்புகள்

இடர் காரணிகளின் கவனமான மதிப்பீட்டின் பின்னர் மற்றும் அத்தகைய மாற்றீடுகளின் பயன் செலவுப் பகுப்பாய்வினை மேற்கொண்டதன் பின்னர் சில செயற்பாடுகள் புற ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. புற ஒப்படைப்பு செயற்பாடுகள் மற்றும் புற ஒப்படைப்புகளின் பொறுப்பானது கம்பனியின் வணிகச் செயற்பாடுகளின் புற ஒப்படைப்பு கொள்கையினால் ஆளுகை செய்யப்படுகின்றது. இக் கொள்கையானது வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுவதுடன் இ.ம.வ. இன் வழிகாட்டிகள் மற்றும் துறைசார் சிறந்த நடைமுறையிலான மாற்றங்களை பிரதபலிபதற்காக இற்றைப்படுத்தப்படுகின்றது.

சேவை வழங்குநர்கள், சேவையின் தன்மை, சேவைக்கான கிரயம் உள்ளடங்கலான புற ஒபப்டைப்பு நடவடிக்கைகளின் விபரங்கள் முறைமைப்படுத்துபவருக்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

புதிய உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் மற்றும நடைமுறையிலுள்ள உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு முன்னர் புற ஒப்படைப்பு செய்யப்பட் விற்பனையாளர்களுக்கு உரிய விழிப்பு சோதனைகள் இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### சட்ட இடர்

செயற்பாட்டு இடரின் ஒரு பாகமாக சட்ட இடரானது தவறிய உள்ளக முறைமைகள், மக்கள், செய்கைமுறைகள் அல்லது வெளிவாரி நிகழ்வுகளினால் எழுகின்றன. சட்டப் பிரிவானது கம்பனியின சார்பில் சட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாயுள்ளது. கம்பனியினை இடரினுள் இடக்கூடிய கொள்திறனையுடைய எவ்விதமான பாரிய சட்ட விடயங்களும் இவ்வருடத்தில் எழவில்லை.

### த.தொ. மற்றும் தகவல் பாதுகாப்பு இடர்

கோவிட்-19 முடக்கல்களுக்கு மத்தியில் PLC இன் நடவடிக்கைகள் டிஜிட்டல் மேடைகளுக்கு அதிகளவில் நகர்வதுடன், தகவல் பாதுகாப்பு இடர் முகாமைத்துவத்திற்கான செயன்முறைகள் முழுமையான விதத்தில் பலப்படுத்தப்பட்டன. இது சைபர் தாக்குதல்கள், முறிவுகள், பழுதடைவுகள் அல்லது இடையூறுகள் போன்ற நிகழ்வுகள் உள்ளடங்கலான ஆனால் இவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாதவை, இவற்றினால் முறைமைகள் செயலற்ற நேரம், தவறுகள் மற்றும் கையாளுகைகள் ஊடாக மோசடிகள் மற்றும் துர்நடத்தைகளை விளைவிக்கலாம்.

PLC ஆனது வினைத்திறனான தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளை பராமரிக்கும்வேளை உள்ளக மற்றும் வெளிவாரி வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கையான மற்றும் முகாமைப்படுத்தப்பட்ட தகவல் சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடையதாகும். எமது இலக்கானது பூச்சிய தகவல் பாதுகாப்பு சம்பவங்களைக் கொண்டிருத்தல் மற்றும் இது வணிகத் தேவைப்பாடுகள் மற்றும் இலங்கையின் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய தகவல் பாதகாப்பிற்கு முகாமைத்துவ வழிகாட்டல் மற்றும் உறுதுணையினை வழங்குதல் மற்றும் விழிப்புணர்வினை ஊக்கமளித்தல் என்பவற்றால் வசதியளிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கைகள் வாடிக்கையாளர் தரவுகளின் இரகசியத்தன்மையினை முகாமைப்படுத்தவும் எமது தகவல் சொத்துக்கள் மற்றும் முறைமைகளின் நேர்மையினை உறுதிப்படுத்துவதற்கும் அவசியமாகும்.

### கொள்கை வரம்புறுகை

கம்பனியானது நன்கு நிறுவப்பட்ட த.தொ இடர் முகாமைத்துவ வரம்புறுகையினை பராமரிக்கின்றது. இனங்காணப்பட்ட இடர்களுக்கான விரிவான த.தொ கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இவை வருடாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றன.

**முக்கிய கட்டுப்பாட்டு முறைமைகள்**

- தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம்

**தரமான கண்காணிப்பு விதிமுறைகள்**

- PAM (சிறப்புரிமை அணுக்க முகாமைத்துவம்) மேடையிலான மற்றும் அனைத்து முக்கிய தரவுத்தளங்களிடையே பயனாளர் உள்நுழைவு நடவடிக்கையினை (இடைவிடாத மற்றும் தொடர்ச்சியான) கண்காணிக்கின்றது.
- நலிவுறுநிலை மதிப்பீடுகள் மற்றும் ஊடுருவல் சோதனைகள் (VAPT) (வருடாந்தம்).
- வெளிவாரி ஊடுருவல் சோதனை (வருடாந்தம்)
- தகவல் பாதுகாப்பு இடர் மதிப்பீடு (காலாண்டு)
- சம்பவ பதிலளிப்பு குழுவினால் உருவாக்கப்படும் சம்பவ அறிக்கைகள்(தேவையானபோது)
- தகவல் பாதுகாப்பு முறைமைகள் கண்காணிப்பு கணக்காய்வு (வருடாந்தம்)

**த.தொ. மற்றும் தகவல் பாதுகாப்பின் முக்கிய கொள்கைகள்**

- தகவல் பாதுகாப்பு கொள்கை
- வைரஸ் எதிர்ப்பு கொள்கை
- மின்னஞ்சல் பயன்பாட்டு கொள்கை
- சைபர் பாதுகாப்பு முகாமைத்துவக் கொள்கை
- தகவல் காப்புநகல் கொள்கை
- இணையத்தள பயன்பாட்டு கொள்கை
- கணினி சேமிப்பக ஊடக பாதுகாப்பு கொள்கை
- கடவுச்சொல் கொள்கை
- மென்பொருள் நிறுவுதல் கொள்கை
- சிறப்புரிமை அணுக்க முகாமைத்துவக் கொள்கை
- பயனாளர் அணுக்க முகாமைத்துவக் கொள்கை
- கொடுப்பனவு தொடர்பான மொபைல் செயலிகளுக்கான கொள்கை

மீளாய்வாண்டில், இலங்கை மத்திய வங்கி உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்காக தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம் மற்றும் மீளெழுச்சியான முறைமைப்படுத்தல் வரம்புறுகையில் ஒரு ஆலோசனைப் பத்திரத்தினை வழங்கியது. இதில் கம்பனி நடைமுறையிலுள்ள த.தொ. செயற்பாடுகள், இடர் முகாமைத்துவ செய்கைமுறைகள், செயன்முறைகள் மற்றும் த.தொ. ஆகியவற்றின் செயலாற்றலை கருத்திற்கொண்டு ஒரு இடைவெளி பகுப்பாய்வினை செயலாற்றியதுடன் இது கம்பனி பாரியளவு பிரிவுகளில் ஏற்கனவே இணக்கப்பாட்டினைக் கொண்டுள்ளதனை உறுதிப்படுத்துகின்றது, இடைவெளிப் பகுப்பாய்வானது விபரமாக சகசு மற்றும் சஒஇமுகு ஆல் கூட்டாக மீளாய்வு செய்யப்பட்டதுடன் சபைக்கு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜனவரி 2022 இல் இலங்கை மத்திய வங்கி தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம் மற்றும் மீளெழுச்சியில் நிதி வணிகச் சட்டத்தின் 2022 இன் பணிப்புரை 01 இனை வழங்கியது. குறித்த பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் முழுவதும் இணங்குவதற்காக மேலதிக நடவடிக்கைகளுக்கான ஒரு செயல் திட்டம் நடைமுறையிலுள்ளது.

### த.தொ மற்றும் தகவல் பாதுகாப்பு இடரினை முகாமைப்படுத்தல்

கம்பனியானது ISO 27001:2013 சான்றளிக்கப்பட்டுள்ளதுடன், இது எமது தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமையினை நிறுவுதல், அமுலாக்குதல், பராமரித்தல் மற்றும் தொடர்ச்சியான மேம்படுத்தல் என்பவற்றை உறுதிசெய்வதுடன் தகவல் பாதுகாப்பு இடர்களை மதிப்பிடுதல் மற்றும் கவனித்தலையும் உள்ளடக்குகின்றது.

தொழில்நுட்ப இடர்களுக்கான சபை அங்கீகரிக்கப்பட்ட இடர் மதிப்பீட்டு முறையானது நடைமுறையிலுள்ளதுடன் அனைத்து வன்பொருள், மென்பொருள், தகவல் மற்றும் மனிதச் சொத்துக்களுக்கான வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

### இடர் மதிப்பீடு

PLC இன் இடர் மதிப்பீட்டு முறையானது 2010 இல் நிறுவப்பட்டதுடன் இது வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

ஆகஸ்ட் 2021 இல், தகவல் பாதுகாப்பு, நிகழ்வு முகாமைத்துவம், வதொதி ஏற்பாடுகள் (த.தொ. தொ.), அணுக்க முகாமைத்தவம், பௌதீக மற்றும் சூழல் பாதுகாப்பு, இணக்கப்பாடு என்பவற்றுடன் தொடர்புடைய இடர்களை மீளாய்வு செய்வதற்காக இடர் சகிப்பு வரம்புகள் நிறுவப்பட்டன.

இடர் சகிப்பு வரம்புகள் மற்றும் நிலைமையினை உள்ளடக்கிய அறிக்கையானது தபாஅ இனால் ஒவ்வொரு காலாண்டும் தயாரிக்கப்பட்டு இகபி இற்கும் தகவல் பாதுகாப்பு கணக்காய்வாளருக்கும் (தபாக) சமர்ப்பிக்கப்படுகின்றன. இகபி ஆனது இடர்களை ஆராய்ந்து இடர் குறிகாட்டி அறிக்கையினை நிஒஇமுகு மற்றும் சஒஇமுகு இற்கும் அவர்களது மீளாய்விற்காக அனுப்பிவைக்கின்றன.

# இடர் முகாமைத்துவ மீளாய்வு

மென்பொருள், வன்பொருள் மற்றும் உட்கட்டமைப்பிலான (வலையமைப்பு தொடர்பாடல்) ஆகியவற்றிலான பாரிய தொழில்நுட்ப மாற்றங்களுக்காக ததொதொ மாற்றல் முகாமைத்துவ இடர் மதிப்பீடானதும் செயலாற்றப்படுவதுடன் அது மேற்குறிப்பிட்ட ததொதொ இடர் மதிப்பீட்டுடன் சஒஇமுகு இற்கு அதன் மீளாய்விற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

## இடர் கவனிப்பு

- இடர் மதிப்பீட்டின அடிப்படையில் தபாஅ செயலாற்றல் புள்ளிகள் நேரஅட்டவணையுடன் இடர் கவனிப்புத் திட்டத்தினை விருத்திசெய்கின்றார்.
- இகபி நடவடிக்கை முடிவுறுத்தலின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்கின்றது.
- தேவையானபோது, இ-துண்டறிக்கைகள் மற்றும் மின்னஞ்சல்கள் ஊடாக தகவல் பாதுகாப்பு இடரில் கம்பனி வாரியாக விழிப்புணர்வு உருவாக்கப்படுகின்றது.

## இடர் மீளாய்வு

- நிஒஇமுகு, த.தொ.தொ. இடர் முகாமைத்துவ செய்கைமுறையின் வினைத்திறனை மீளாய்வு செய்கின்றது.
- சஒஇமுகு, த.தொ.தொ. இடர் முகாமைத்துவ அறிக்கையினை காலாண்டுதோறும் மீளாய்வு செய்து அவசியமான வழிகாட்டலை வழங்குகின்றது.
- இவ்வாண்டில், ததொ வழிநடத்தல் குழுவானது (ததொவகு) ஒரு முகாமைத்துவ மட்டத்திலான குழுவாக உருவாக்கப்பட்டதுடன் இது பொருத்தமான இடர் வெளிப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காக கம்பனிவாரியான தகவல் பாதுகாப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு முன்னெடுப்புகளை மதிப்பீடு செய்து பரிந்துரைகளை மேற்கொள்ள பொறுப்பாயுள்ளது.

## ஏனைய இடர்கள்

### மனிதவள இடர்

மனித வள இடர்களை முகாமைப்படுத்துதல் நிறுவனத்தின் மூலோபாய குறிக்கோள்களை அடைவதற்கான முக்கிய மூலமாகும் என்பதுடன், நாம் ஒரு திறமையான தொழிற்சேனையினை கவர்ந்து, விருத்திசெய்து நிறுத்திவைப்பதனை உறுதிசெய்கின்றோம். பயிற்றுவிக்கப்பட்ட திறமையுடைய பணியாட்களின் புரள்வானது கம்பனியின் தகுதியுடைமையில் மற்றும் விநியோகிக்கத்தக்க ஆக்கத்திறனில் வீழ்ச்சிக்கு இட்டுச்செல்லும் விசேடமாக உயர்/மத்திய முகாமைத்துவ பணியாட்களிலான புரள்வு.

பணியாளர் புரள்வு விகிதம் - 21/22




### ம.வ. இடரினை முகாமைப்படுத்தல்

ஒரு பொருளாதார நெருக்கடியில் திறமையான தொழிற்சேனையினை நிறுத்திவைத்தல் ஒரு பாரிய அக்கறையாகும். இதன்பிரகாரம், இந்த இடரினை முகாமைப்படுத்துவதற்கு நாம் பின்வருவனவற்றை அமுல்படுத்தியுள்ளோம்:

- தொழில் செயற்பாடுகளுக்கு அவசியமான திறன்களை விருத்திசெய்வதற்கும் பணியாட்களது அறிவினை மேம்படுத்தவும் பணியாட்களுக்கு உதவுவதற்காக இயங்கலை மற்றும் பௌதீக பயிற்றுவித்தல்கள் நடாத்தப்பட்டன.
- இவ்வருடத்தில் பயிலுதல் முகாமைத்துவ முறைமையானது (பமுமு) ஆரம்பிக்கப்பட்டதுடன் இங்கு இயங்கலை பாடத்திட்டங்கள் உள்ளடங்கலான பல்வேறு தலைப்புகளில் இயங்கலை பயிற்சிகள் இடம்பெறுகின்றன. பமுமு பாடத்திட்டங்களிலான பங்குபற்றலானது பணியாட்களின் செயற்திறன் மதிப்பாய்வுடன் இணைக்கப்பட்டுள்ளன.
- கிரமமான செயற்திறன் மதிப்பாய்வுகள் நிறுவன மற்றும் தொழில் இலக்குகளின் ஒருங்கிணைப்பிற்கு வசதியளிப்பதுடன், பயிற்சி தேவைகளை மதிப்பிடுதல் மற்றும் பணியாட்களது அக்கறைகளை புரிந்துகொள்வதற்கான ஒரு மேடையினை வழங்குவதுடன் செயற்திறனில் பின்னூட்டத்தினை வழங்குகின்றது.
- ஒரு முகாமைத்துவ தொடர்வுத் திட்டத்தினை உருவாக்குவதற்கு சாத்தியமுள்ள பணியாட்களை கம்பனி எப்போதும் அங்கீகரிப்பதுடன் ஒரு கொள்திறன் கட்டியெழுப்புதல் வழிமுறையாக அவர்களது உயர் கல்விக்கு நிதியியல் உறுதுணையினை வழங்கியது.
- அனைத்த பணியாட்களும் அவர்களது சிரேஷ்ட முகாமையாளர்களை அவர்களது பணி தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்கு எந்நேரத்திலும் சந்திக்கலாம்.

### நற்பெயர் இடர்

உழைப்புகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வணிகநாமப் பெறுமதி என்பவற்றில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிகழ்வு அல்லது சம்பவம் நற்பெயர் இடர் எனப்படும். கம்பனி இடர் கூட்டுச்சார்பினை நற்பெயர் இடராகப் புரிந்துகொள்வதுடன் இது கடன், சந்தை மற்றும் செயற்பாட்டு இடர் போன்ற பரவலான ஏனைய இடர்களினால் இயக்கப்படுகின்றது.

சமூக ஊடகத்தின் பயன்பாட்டுடன் நற்பெயர் இடரின் நோக்கெல்லையானது விரிவடைந்துள்ளது. கம்பனியின் நற்பெயர் இடரானது கடன். சந்தை மற்றும் செயற்பாட்டு இடர்கள் போன்ற முக்கிய இடர்களின் வினைத்திறனான முகாமைப்படுத்தலினூடாக பரவலாக முகாமைப்படுத்தப்படுகின்றது.

கூட்டாண்மை ஆளுகை செய்கைமுறையின் ஒரு அங்கமாக தொடர்பாடல் கொள்கைகள், நடத்தைக் கோவை மற்றும் நெறிமுறைகளும் காணப்படுவதுடன் எவ்வித விதிவிலக்கின்றி அனைத்து பணியாட்களினாலும் பின்பற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- வாடிக்கையாளர் முறையீடு கையாளுதல் செய்கைமுறைக்காக ஒரு தனியான அலகினை நிறுவுதல்.
- தொற்றின் விளைவாக காசுப் பாய்ச்சல்கள் மோசமாக பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இ.ம.வ. இன் வழிகாட்டிகளுக்கமைய கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் வசதியானது வழங்கப்பட்டது.
- கோவிட் தொடர்பான அக்கறைகளை உடனடியாக கவனிக்கப்பட்டு விளித்துரைப்பதனை உறுதிசெய்வதற்காக கம்பனியானது ஒரு கோவிட்-19 பதிலளிப்பு குழுவினை உருவாக்கியது.
- கம்பனியின் செயற்பாடுகளது தொடர்ச்சியினை உறுதிப்படுத்துவதற்காக வணிகத் தொடர்ச்சி முகாமைத்துவம் பலப்படுத்தப்பட்டது.
- வாடிக்கையாளர் தொடு புள்ளிகள் வாடிக்கையாளர் தேவைகளுக்காக வினைத்திறனுடன் சேவையாற்றுவதனை உறுதிசெய்யும்வேளை, அதன் பணியாட்கள் மற்றும் வாடிக்கையாளர்களது ஆரோக்கியத்தினை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு வழிமுறைகள் அமுல்படுத்தப்பட்டன.
- இவ்வருடத்தில் கம்பனிக்கு பல பாராட்டுக்கள் வழங்கப்பட்டன, தயவுசெய்து பக்கங்கள் 82 முதல் 83 வரை பார்க்கவும்.

## மூலோபாய இடர்

மூலோபாய இடரானது மோசமான வணிகத் தீர்மானங்கள், தீர்மானங்களின் முறையற்ற அமுலாக்கல் அல்லது வணிகச் சூழலிலான மாற்றங்களுக்கு பதலளிப்பின்றிக் காணப்படுதல் என்பவற்றிலிருந்து எழுகின்றது.

மூலோபாய திட்டமிடல் மற்றும் பாதீட்டுச் செய்கைமுறையானது கம்பனியின் தொலைநோக்கு, பணிநோக்கு, மூலோபாய குறிக்கோள்கள் மற்றும் இடர் ஆர்வம் மற்றும் இடர் சகிப்புக் கூற்று ஆகியவற்றுடன் அதன் ஒத்திசைவினை மீளாய்வு செய்தல் மூலோபாய இடரின் முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும்.

பாதீடுகளின் நிறைவேற்றம் மற்றும் செயற்திட்டங்கள் அவற்றிலான முகாமைத்துவ இற்றைப்படுத்தல்களுடன் சபையினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. மேலும், துணைக்கம்பனிகளின் பயனுறுதித்தன்மை மற்றும் செயற்திறன் என்பனவும் பன்முகப்படுத்தலின் மூலோபாய இடரினை தணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்படுகின்றன.

## குழு இடர் முகாமைத்துவம்

ஒவ்வொரு துணைக்கம்பனியும் வெவ்வேறு துறைகளில் வெவ்வேறு வணிக மாதிரிகளுடன் செயற்படுவதனால் அவற்றின் இடர் தோற்றுருவங்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. எனவே, இடரானது தனித்தனியாக மதிப்பிட்டு தணிக்கப்படுதல் வேண்டும். பருமனைப் பொறுத்தளவில் இலங்கை காப்புறுதி முறைமைப்படுத்தல் ஆணைக்குழுவினால் (இது முன்னர் இலங்கை காப்புறுதிச் சபை என தெரிந்துகொள்ளப்பட்டது) முறைமைப்படுத்தப்படும் பீபள்ஸ் இன்சூரன்ஸ் பாரிய துணைக்கம்பனியாகும்.

பீபள்ஸ் லிசிங் இன் பிறிஅ அனைத்து துணைக்கம்பனிகளின் சபைகளிலும் அங்கத்தவராக உள்ளார். கம்பனிகளுக்கிடையேயான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் முழங்கையளவு தூரத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. பீபள்ஸ் லீசிங் உடைமைக் கம்பனி என்பதுடன் அது பாரிய ஐந்தொகைக்கு சொந்தமானதாகும். அதாவது குழுமத்தின் மொத்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புபுக்களில் 87% க்கும் மேலானதாகும்.

பீபள்ஸ் லீசிங் இன் முன்குறிப்பிட்ட துணைக்கம்பனிகளுடன் இடர் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவானது ஒருங்கிணைந்து கலந்தாராய்வுகளுக்கான சஒஇமுகு க்கு இடர் அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டன.

| கம்பனி | உறவுமுறை | வணிகச் செயற்பாடுகள் | சஒஇமுகு க்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் | அறிக்கையிடும் இடைவெளி |
|---|---|---|---|---|
| பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி (PI) | துணைக்கம்பனி | ஆயுள் அல்லாத (பொது) காப்புறுதி வணிகம் | இடர் கட்டுப்பாட்டு முகப்பு அறிக்கை மற்றும் ஒப்பீட்டு அறிக்கை | காலாண்டு |
| பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் (PLFML) | முழுவதும் உரித்துடைமையான துணைக்கம்பனி | பெறுமதியிடல் சேவைகள் | இடர் கட்டுப்பாட்டு முகப்பு அறிக்கை | காலாண்டு |
| பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட் (PML) | முழுவதும் உரித்துடைமையான துணைக்கம்பனி | சலுகை குன்றிய, கிராமிய மற்றும் நகரப்புற சனத்தொகைக்கு நுண்நிதியளித்தல் வசதிகளை வழங்குவதல் மற்றும் வாடகைக் கொள்வனவு வசதிகளை வழங்குதல் | இடர் கட்டுப்பாட்டு முகப்பு அறிக்கை மற்றும் ஒப்பீட்டு அறிக்கை | காலாண்டு |
| பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் (PLPDL) | முழுவதும் உரித்துடைமையான துணைக்கம்பனி | ஆதன அபிவிருத்தி | இடர் குறிகாட்டி அறிக்கை | காலாண்டு |
| பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட் (PLHPL) | முழுவதும் உரித்துடைமையான துணைக்கம்பனி | ஆதன அபிவிருத்தி | இடர் குறிகாட்டி அறிக்கை | காலாண்டு |

குழுமத்தின் இடரினை தணிப்பதற்காக பீபள்ஸ் லீசிங் நிதியியல், காப்புறுதி, நுண்நிதியளித்தல் மற்றும் ஆதன அபிவிருத்தித் துறைகளது வணிகச் சூழலிலான அபிவிருத்திகளுடன் நிலையொத்து காணப்படுகின்றது.



எமது நிலைபேறுள்ள முயற்சிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.



# நிதியியல் அறிக்கை

நிதியியல் நாள்காட்டிr 199
நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு 200
நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான சுயாதீன உறுதிமொழி அறிக்கை 202
நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களின் கூற்று 203
பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் பிரதம நிதியியல் அதிகாரியினதும் பொறுப்புக் கூற்று 204
சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை 205
நிதிக் கூற்றுக்கள் - உள்ளடக்க அட்டவணை 208
இலாபம் அல்லது நட்டக் கூற்று 209
விரிவான வருமானக் கூற்று 210
நிதி நிலைமைக் கூற்று 211
உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று 212
காசுப் பாய்ச்சல் கூற்று 214
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 215

# நிதியியல் நாள்காட்டி

| | | 2021/22 | 2022/23 |
|---|---|---|---|
| இடைக்கால நிதிக் கூற்றுக்களின் பிரசுரம் | Q1 30 ஜுனில் நிறைவடைந்தது | 09 ஆகஸ்ட் 2021 | 15 ஆகஸ்ட் 2022 இற்கு முன்னர் |
| | Q2 30 செப். நிறைவடைந்த/நிறைவடையும் | 11 நவம்பர் 2021 | 15 நவம்பர் 2022 இற்கு முன்னர் |
| | Q3 31 டிசம்பரில் நிறைவடைந்த/ நிறைவடையும் | 14 பெப்ரவரி 2022 | 15 பெப்ரவரி 2023 இற்கு முன்னர் |
| | Q4 31 மார்ச் இல் நிறைவடைந்த / நிறைவடையும் | 31 மே 2022 | 31 மே 2023 இற்கு முன்னர் |
| நிதிக் கூற்றுக்களின் பிரசுரம் | 30 செப்டம்பர் 2021 இல் நிறைவடைந்த ஆறு மாதங்களுக்கு | 24 நவம்பர் 2021 | |
| | 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 29 ஜுன் 2022 | |
| | 30 செப்டம்பர் 2022 இல் நிறைவடையும் ஆறு மாதங்களுக்கு | | 31 டிசம்பர் 2022 இற்கு முன்னர் |
| | 31 மார்ச் 2023 இல் நிறைவடையும் ஆண்டிற்கானது | | 30 ஜுன் 2023 இற்கு முன்னர் |
| ஆண்டறிக்கையின் பிரசுரம் | ஆண்டறிக்கையின் பிரசுரம் | ஆகஸ்ட் 2022 | ஜுன் 2023 |
| ஆண்டுப் பொதுக் கூட்டம் | ஆண்டுப் பொதுக் கூட்டம் | 26 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் செப்டம்பர் 2022 | 27 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 30 ஜுன் 2023 இற்கு முக்னர் |
| பங்கிலாபக் கொடுப்பனவு | இடைக்காலப் பங்கிலாபம் - பத்திரம் 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான பத்திரப் பங்கிலாபம் | ஜனவரி 2022 | |

# நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின பொறுப்பு

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பிஎல்சி இன் (கம்பனி) நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனியின் மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் (குழுமம்) நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்பானது இந்தக் கூற்றில் குறிப்பிடப்படுகின்றது

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான வெளிவாரி கணக்காய்வாளர்களின் பொறுப்புக்கள் பக்கங்கள் 205 முதல் 207 வரை காணப்படும் “சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை” இல் வழங்கப்பட்டுள்ளன.

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் அத்திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்திறனில் மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை வழங்குகின்றது என்று பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துவதுடன் இவற்றை ஆண்டுப்பொதுக் கூட்டத்திற்கு முன்னர் முன்னிலைப்படுத்துகின்றார்கள். இந்த நிதிக் கூற்றுக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- நிதி நிலைமைக் கூற்று
- இலாபம் அல்லது நட்டக் கூற்று
- விரிவான வருமானக் கூற்று
- உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று
- காசுப் பாய்ச்சல் கூற்று
- நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இந்த ஆண்டறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களின் நேர்மை மற்றும் சார்பற்ற நிலைக்கான பொறுப்பினை பணிப்பாளர்கள் ஏற்கின்றார்கள். இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றார்கள்

- ஒரு தொடர்ச்சியான விதத்தில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவுசெய்யப்பட்டு பிரயோகிக்கப்பட்டுள்ளன, பொருண்மையான விலகல்கள் ஏதேனும் இருப்பின், அவை வெளிப்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளன;
- பொருத்தமான அனைத்து பிரயோகிக்கத்தக்க கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்பட்டுள்ளன; மற்றும்
- நியாயமான மற்றும் விவேகமான கருத்துக்கள் மற்றும் மதிநுட்பங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2007 இல் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 150(1), 151, 152 மற்றும் 153 (1) மற்றும் (2) இன் பிரகாரம் அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் கம்பனி மற்றும் குழுமமானது கணக்குகளுக்கான முறையான புத்தகங்களை வைத்திருப்பதனை உறுதிப்படுத்தும் பொறுப்பினை கம்பனி மற்றும் குழுமத்தின் பணிப்பாளர்கள் கொண்டுள்ளார்கள்.

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பிரயோகிப்பதனை நியாயப்படுத்துவதற்காக செயற்பாடுகளை தொடர்வதற்கு கம்பனியானது போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள். மேலும் கம்பனியின் நிதி நிலைமையினை நியாயமான துல்லியத்தினை வெளிப்படுத்துவதற்கு கம்பனி போதுமான கணக்கீட்டு பதிவுகளை பராமரிப்பதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினையும் பணிப்பாளர்கள் கொண்டுள்ளார்கள்.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 150 (1) (டி) மற்றும் 152 (1) (டி) இனால் தேவைப்பட்டுள்ளவாறு இவற்றிற்கு பொறுப்பாயுள்ள அதிகாரியான கம்பனியின் பிரதம நிதியியல் அதிகாரியினால் கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் சான்றளிக்கப்பட்டுள்ளன. இதற்கும் மேலாக, 2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 150 (1) (சி) மற்றும் 152 (1) (சி) இல் தேவைப்படுமாறும் மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் இரண்டு பணிப்பாளர்களினால் 24 ஜுன் 2022 இல் கையொப்பமிடப்பட்டுள்ளன.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 148 (1) இன் பிரகாரம், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கம்பனியின் நிதி நிலைமையினை நியாயமான துல்லியத்துடன் தீர்மானிப்பதில் துணைபுரிவதற்காக கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களை விளக்கும் முறையான கணக்கீட்டுப் பதிவுகள் கம்பனியினால் மற்றும் குழுமத்தினால் பராமரிக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாளிவார்கள் என்பதுடன் இது நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதுடன் நிதிக் கூற்றுக்கள் உடனடியாகவும் முறையாகவும் கணக்காய்வு செய்யப்படுவதனையும் இயலுமையாக்கும். இந்த ஆண்டறிக்கையில் தயாரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள 2021/22 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளார்ந்த கணக்குப் புத்தகங்களுடன் ஒத்திருப்பதுடன், இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 1995 இன் 05 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம், 2011 இன் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டம் மற்றும் அதன்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகள், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைக் கோவை என்பவற்றுடன் இணங்கியிருத்தல் வேண்டும்.

பணிப்பாளர்கள் சபையானது அவர்களது வழமையான கூட்டங்களில் நேரடியாகவும் மற்றும் சபை கணக்காய்வுக் குழுவினூடாகவும் நிதி அறிக்கையிடலை மீளாய்வு செய்வதுடன், கம்பனி மற்றும் குழுமமானது முறையான கணக்குப் புத்தகங்களை பராமரிப்பதனை உறுதிசெய்வதற்கான இதனிலான அறிக்கை பக்கங்கள் 162 முதல் 163 வரை வழங்கப்பட்டுள்ளன. கம்பனி மற்றும் குழுமத்தினால் பிரசுரிக்கப்பட்ட இடைக்கால நிதிக் கூற்றுக்களும் சபை கணக்காய்வுக் குழுவின் மீளாய்வினைத் தொடர்ந்து சபையினால் அங்கீகரிக்கப்பட்டன.

கம்பனி மற்றும் குழுமத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்காக நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாயுள்ளதுடன் இது தொடர்பில் கம்பனி மற்றும் குழுமத்தில் குறிப்பிடத்தக்க இடர்களை முகாமைப்படுத்துவதற்காக ஒரு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை நிறுவுவதற்கு முறையான கவனம் செலுத்தப்படுகின்றது. “நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றானது” பக்கம் 203 இல் வழங்கப்பட்டுள்ளது.

2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 56 (2) இன் கீழ் பணிப்பாளர்கள் சபையானது பத்திரப் பங்கிலாப வடிவில் இடைக்கால பங்கிலாபத்தினை அங்கீகரித்துள்ளதாக உறுதிப்படுத்துகின்றது. இது தொடர்பில், 1: 21.4000002326 என்ற விகிதாசாத்தில் வழங்கப்பட் பத்திரப் பங்கிலாபத்தினைத் தொடர்ந்து 13 ஜனவரி 2022 இல் கம்பனியின் 84,249,776 சாதாரண வாக்குரிமையுள்ள பங்குகள் பட்டியலிடப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 57 இன் பிரகாரம், கம்பனியானது அத்தகைய பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் உடனடியாக கம்பனியானது கடன் தீர்க்கும் ஆற்றலினை சந்தித்துள்ளது என திருப்தியடைந்ததன் பின்னர் மற்றும் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் தொடர்பாக வெளிவாரி கணக்காய்வாளரிடமிருந்து கடன் தீர்க்கும் ஆற்றல் சான்றிதழ்களை பெற்றுள்ளதுடன், இந்த குறித்த இடைக்கால பங்கிலாபத்தினை அங்கீகரித்தார்கள்.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 166 (1) மற்றும் 167 (1) இன் கீழ் பணிப்பாளர்கள் சபையானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின் விதி இலக்கம் 7.5 (ஏ) மற்றும் (பி) இன் தேவைப்பாட்டிற்கிணங்க குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பங்குதாரர்களுக்கு இந்த ஆண்டறிக்கையினை தயாரித்து வெளியிட்டுள்ளதனை உறுதிப்படுத்துகின்றது. வழங்கலின் ஆரம்ப நியதிகளின் பிரகாரம் அனைத்து பங்குதாரர்களும் ஒரு சமத்துவமான விதத்தில் கவனிக்கப்பட்டார்கள் என்பதனை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள்.

கம்பனியானது இந்த ஆண்டறிக்கையின் மென் பிரதியினை கம்பனியின் இணையத்தளத்தில், (https://www.plc.lk/financial-information-and-kpi/annual-reports/), நிதியியல் தகவல்கள் மற்றும் முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் பிரிவில் தரவேற்றம் செய்துள்ளதுடன், இந்த மென் பிரதிக்கும் மேலாக கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடுகளான விதி இலக்கம் 7.5 (ஏ) மற்றும (பி) இல் வேண்டியுள்ளவாறு, ஒரு இறுவட்டு வடிவில் மென் பிரதியினை அனுப்புவதற்கு பதிலாக, குறிப்பிட்ட காலத்தினுள் ஏனைய பங்குதாரர்களின் நலனுக்காக கொ.ப.ப. இன் இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாயுள்ளது.

பணிப்பாளர்கள் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்வாளாருக்கு அவர்களது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதனை இயலுமையாக்குவதற்கு பொருத்தமானது எனக்கருதும் ஏதேனும் பரிசீலனைகளை பொறுப்பேற்பதற்கு மற்றும் ஏதேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஒவ்வொரு வாய்ப்பினையும் வழங்குதல் வேண்டும் என்று வேண்டப்படுகின்றார்கள். "கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம்:" என்ற வரையறையின் கீழ் வருகின்ற பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி ஆனது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களால் அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட யாரேனும் ஒருவர் கம்பனியானது கணக்காய்வினை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் நிதிக் கூற்றுக்களுக்கான அவர்களது பொறுப்புக்கள் பக்கங்கள் 205 முதல் 207 வரை காணப்படும் "சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையில்" வழங்கப்பட்டுள்ளன.

கம்பனியின் வெளிவாரி கணக்காய்வாளர்களாக, கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் பொருத்தமானது எனக் கருதும் பரிசீலனைகளை பொறுப்பேற்பதற்கு ஒவ்வொரு வாய்ப்பும் வழங்கப்படுகின்றது. அவர்கள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவுகளை பராமரிப்பதில் அவர்களது அபிப்பிராயத்தினை தெரிவிப்பதற்கு அவசியமானது மற்றும் பொருத்தமானது எனக் கருதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளில் மீளாய்வுகள் மற்றும் மாதிரி பரிசோதனைகளை மேற்கொண்டார்கள். பணிப்பாளர்கள் சபையினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து அனைத்து நிதியியல் பதிவுகள், தொடர்புடைய தரவுகள் மற்றும் பங்குதாரர்கள் மற்றும் பணிப்பாளர்களது கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகள் என்பவற்றை பரிசீலனை செய்து பக்கங்கள் 205 முதல் 207 வரை காணப்படும் அவர்களினால் அறிக்கையிடப்பட்ட "சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கையில்" அவர்களது அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியுள்ளார்கள். கம்பனியும் அதன் பட்டியலிடப்பட்ட துணைக் கம்பனிகளும் கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் பிரிவு 07 இன் கீழான தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடுகளில் பொருத்தமான அனைத்து தேவைப்பாடுகளையும் சந்தித்துள்ளன.

பணிப்பாளர்கள் அவர்களது அறிவிற்கு எட்டியளவில் அறிக்கையிடப்படும் திகதியில், கம்பனி மற்றும் குழுமத்தினால் செலுத்தவேண்டிய அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் கட்டணங்கள், கம்பனி மற்றும் குழுமத்தின் பணியாட்கள் தொடர்பாக செலுத்தவேண்டிய அனைத்து பங்களிப்புகள், கட்டணங்கள் மற்றும் வரிகள், மற்றும் கம்பனி மற்றும் குழுமம் தொடர்பாக அரசாங்கம் மற்றும் ஏனைய சட்டரீதியான அங்கங்களுக்கு செலுத்தவேண்டியவைகள் செலுத்தப்பட்டுள்ளன அல்லது பொருத்தமானவிடத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என உறுதிசெய்கின்றார்கள். இதன் பிரகாரம், இந்த கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு அவர்களது பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளார்கள் என்ற கருத்தினை பணிப்பாளர்கள் சபையானது கொண்டுள்ளது.

சபையின் கட்டளையின் பிரகாரம்,



**ஷாலினி சில்வா**
*சபைக்கான காரியதரிசி*

26 ஜூலை 2022
கொழும்பு

# நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் சுயாதீன உறுதிமொழி அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல. My No. BAN/D/PLF/2022/01 | உமது இல. Your No. | திகதி Date 05 July 2022

தலைவர்
பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி

**பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களது கூற்றில் பணிப்பாளர்கள் சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உறுதுமொழி அறிக்கை**

அறிமுகம்
இந்த அறிக்கையானது 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் (கம்பனி) நிதி அறிக்கையிடல் மீதான (கூற்று) உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் உறுதிமொழியினை வழங்குவதற்காகும்.

**முகாமைத்துவத்தின் பொறுப்பு**
பின்வருவனவற்றிற்கு அமைய முகாமைத்துவம் கூற்றினை தயாரிப்பதற்கும் முன்னிலைப்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது. 2008 இன் 08 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளின் (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரை பிரிவு 10 (2) (பி) இற்கு இணங்க வழங்கப்பட்ட "உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனி / நிதிக் குத்தகைக் கம்பனியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டி" / இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட 2009 இன் 04 ஆம் இலக்க நிதிக் குத்தகை (கூட்டாண்மை ஆளுகை) பணிப்புரையின் பிரிவு 10 92) (பி) என்பவையாகும்.

**எனது பொறுப்பு மற்றும் SLSAE 3051 உடனான இணக்கப்பாடு**
எனது பொறுப்பானது இக்கூற்று பணிப்பாளர்களினால் அல்லது அவர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களினால் துணையளிக்கப்படுகின்றதா மற்றும் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கடைப்பிடித்த செய்கைமுறைகள் பொருத்தமாக பிரதிபலிக்கின்றதா என்று மதிப்பிடுவதாகும்.

நான் எனது பணிக்கடப்பாட்டினை உறுதிமொழி ஈடுபாடுகளிலான இலங்கை நியமம் (SLASE) 3051, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டில் பணிப்பாளர்களது கூற்றில் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனி / நிதிக் குத்தகைக் கம்பனிகளுக்கான உறுதிமொழி அறிக்கை என்பவற்றுங்கிணங்க நடாத்தினேன்.

இந்த நியமமானது, அனைத்து பொருண்மையான விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவமானது உள்ளகக் கட்டுபாட்டிலான கூற்றினை தயாரித்துள்ளதா என்பது பற்றி வரையறுத்த உறுதிமொழியினை பெறுவதற்கான செயன்முறைகளை நான் திட்டமிட்டு செயலாற்றல் செய்யவேண்டும் என வேண்டுகின்றது.

இந்தப் பணிக்கடப்பாட்டின் நோக்கத்திற்காக, ஏதேனும் அறிக்கைகளை இற்றைப்படுத்துவதற்கோ அல்லது மீள்வழங்குவதற்கோ நான் பொறுப்பாளியல்ல மற்றும் இந்த பணிக்கடப்பாட்டின்போது நிதியியல் தகவல்களில் நான் ஒரு கணக்காய்வினையோ அல்லது மீளாய்வினையோ செயலாற்றவில்லை.

**செயலாற்றப்பட்ட பணியின் சுருக்கம்**
இக்கூற்றானது பணிப்பாளர்களினால் அல்லது அவர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்களினால் துணையளிக்கப்படுகின்றதா மற்றும் கம்பனியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கடைப்பிடித்த செய்கைமுறைகள் பொருத்தமாக பிரதிபலிக்கின்றதா என்று மதிப்பிடுவதற்காக நான் எனது பணிக்கடப்பாட்டினை நடாத்தினேன்.

செயலாற்றப்பட்ட செயன்முறைகள் பிரதானமாக பின்வருவனவற்றிற்கு வரையறை செய்யப்பட்டதாகும். கம்பனியின் ஆளணியனருடனான விசாரணைகள் பணிப்பாளர்கள் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட செய்கைமுறைக்கு துணையளித்தல் நடைமுறையிலுள்ள ஆவணங்களில் ஒரு மாதிரி அடிப்படை என்பவற்றுக்கு மாத்திரமாகும்.

SLSAE 3051 ஆனது கூற்றானது அனைத்து இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்கியுள்ளனவா என்று கருதுவதற்கோ அல்லது கம்பனியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு செயன்முறைகளின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயத்தினை உருவாக்குவதற்கோ ஆன தேவையினை கொண்டிருக்கவில்லை.

SLSAE 3051 ஆனது ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் முக்கிய பிரச்சனைகளின் பொருண்மையான உள்ளகக் கட்டுப்பாட்டு தோற்றத்தினை கையாளுவதற்கு விபரிக்கப்பட்டுள்ள செய்கைமுறைகளை கருத்திற்கொள்வதற்கோ அப்பிரச்சனைகளுக்கான பரிகாரத்தினை வழங்குகின்றதா என்று நான் கருதுவதற்கான தேவையினை கொண்டிருக்கவில்லை.

தெரிவுசெய்யப்பட்ட செயன்முறைகள் எனது மதிநுட்பத்தில், கம்பனியின் தன்மையில் எனது புரிந்துணர்வு அக்கறை, கூற்று தயாரிக்கப்பட்டுள்ள நிகழ்வு அல்லது கொடுக்கல் தொடர்பானவை என்பவற்றில் தங்கியுள்ளது.

எனது முடிவிற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகளை நான் பெற்றுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**முடிவுரை**
செயலாற்றப்பட்ட செயன்முறைகளின் அடிப்படையில், கம்பனியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனிலான மீளாய்வில் பணிப்பாளர்கள் சபை கடைப்பிடித்த செய்கைமுறையில் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூற்றானது எனது புரிந்துணர்வுடன் முரண்பட்டுள்ளது என நான் நம்புவதற்கான காரணிகள் எதுவும் எனது கவனத்திற்கு வரவில்லை.

**டபிள்யு பி சி விக்கிரமரத்ன**
*கணக்காய்வாளர் தலைமை அதிபதி*

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

# நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டிலான பணிப்பாளர்களது கூற்று

### பொறுப்பு

2008 இன் 03 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளின் பணிப்புரை பிரிவு 10 (2) (பி) 2013 இன் 06 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளின் (கூட்டாண்மை ஆளுகை – திருத்தியமைக்கப்பட்டது) பணிப்புரையினால் திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் பணிப்பாளர்கள் சபையானது நிதி அறிக்கையிடல் மீதான இந்த அறிக்கையினை முன்னிலைப்படுத்துகின்றது.

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இல் (கம்பனி) காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமானதன்மை மற்றும் வினைத்திறனுக்கு பணிப்பாளர்கள் சபையானது (சபை) பொறுப்பாளியாகும்.

கம்பனியினால் முகங்கொடுக்கப்படும் முக்கியமான இடர்களை இனங்காண்பதற்கு, மதிப்பிடுவதற்கு மற்றும் முகாமைப்படுத்துவதற்கு சபையானது ஒரு தொடர்ச்சியான செய்கைமுறையினை நிறுவியுள்ளதுடன், இந்த செய்கைமுறையானது நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை உள்ளடக்குவதுடன் வணிகச் சூழல் மற்றும் முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளிலான மாற்றங்களை கணக்கிலெடுத்து சபையினால் வழக்கமாக மீளாய்வு செய்து மேம்படுத்தப்படுகின்றது

நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்கு நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது திடமானதும் மற்றும் போதுமையானதும் என்ற கருத்தினையும் வெளிவாரி நோக்கங்களுக்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக காணப்படுகின்றது என்ற கருத்தினையும் சபை கொண்டுள்ளது.

நிதி அறிக்கையிடுதல் மீதான இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான சபையின் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளது அமுலாக்கத்தில் முகாமைத்துவமானது முகங்கொடுத்த இடர்கள், இந்த இடர்களை தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, செயற்பாடு மற்றும் கண்காணித்தல் மூலம் சபைக்கு துணைபுரிகின்றது.

### நிதி அறிக்கையிடுதலிலான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை பிரயோகிப்பதில் மற்றும் மீளாய்வு செய்வதில் கடைப்பிடிக்கப்படும் செய்கைமுறையின் முக்கிய சிறப்பம்சங்கள்.

நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமை மற்றும் நேர்மையினை மீளாய்வு செய்வதற்காக நிறுவப்பட்ட முக்கிய பொறிமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- கம்பனியின் நாளாந்த செயற்பாடுகளின் வினைத்திறனை உறுதிசெய்வதில் துணைபுரிவதற்காக மற்றும் அத்தகைய அனைத்து செயற்பாடுகளும் கூட்டாண்மை குறிக்கோள்கள், மூலோபாயங்கள் மற்றும் வருடாந்த பாதீட்டுடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வணிக போக்குகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுவதனை உறுதிசெய்வதற்காக சபையானது பல உப குழுக்களை நியமித்துள்ளது.
- கம்பனியின் முக்கிய செயற்பாட்டுப் பிரிவுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் / சாசனங்களினால் ஆளுகை செய்யப்படுகின்றன. சபை நியமிக்கப்பட்ட குழுக்கள் சபையின் அங்கீகாரத்தினை பெறுவதற்கு முன்னர் அத்தகைய கொள்கைகள் / சாசனங்களை மீளாய்வு செய்து பரிந்துரைக்கின்றது. அத்தகைய கொள்கைகள் / சாசனங்கள் வழக்கமாக மீளாய்வு செய்யப்பட்டு, இற்றைப்படுத்தப்பட்டு மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றது.
- கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது கொள்கைகள் மற்றும் செயன்முறைகளுடனான இணக்கப்பாட்டினை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் / தகவல் முறைமைக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மாதிரிகள் மற்றும் சுழற்றி செயன்முறைகளை பயன்படுத்தி சரிபார்க்கின்றது. இது இணக்கப்பாடின்மைகளின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகளை எடுத்துக்காட்டுவதற்கு உதவுகின்றது. சபை கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கமைய கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு சுயாதீன மற்றும் புறநிலையான அறிக்கையினை வழங்குவதற்காக வணிக அலகுகள் / செய்கைமுறைகள் என்பவற்றின் கணக்காய்வுகளின் வகை மற்றும் அதிர்வெண் என்பன மதிப்பிடப்படும் இடரின் மட்டத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் இனங்காணப்படும் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் சபை கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, முறைமைப்படுத்தல் அதிகாரசபைகள், வெளிவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றால் இனங்காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டுச் சிக்கல்களை சபை கணக்காய்வுக் குழு (சககு) மீளாய்வு செய்கின்றது. உள்ளகக் கணக்காய்விலான நோக்கெல்லை, சுயாதீனம் மற்றும் வளங்களிலான குறிப்பிட்ட வலியுறுத்தலுடன் சகசு வும் உள்ளகக் கணக்காய்வு செயற்பாட்டின் பயனுறுதிறனை மதிப்பீடு செய்கின்றது. சபை கணக்காய்வுக் குழுவினது கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புகள் ஒரு காலாகால அடிப்படையில் சபைக்கு அனுப்பப்படுகின்றது. சபை கணக்காய்வுக் குழுவினால் பொறுப்பேற்கப்படும் நடவடிக்கைகளின் விபரங்கள் "சபை கணக்காய்வுகு குழு அறிக்கையில்" குறிப்பிடப்பட்டுள்ளன.
- நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பிடுவதில், கம்பனியின் இனங்காணப்பட்ட அதிகாரிகள் கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் முக்கிய கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தல்களுடன் இணைந்துள்ள அனைத்து செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை தொகுக்கின்றார்கள். இவை பின்னர் கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் வடிவமைப்பின் பொருந்துமை மற்றும் அமுலாக்கல் பயனுறுதித்தன்மை என்பவற்றுக்காக அவதானிக்கப்பட்டு சரிபார்க்கப்படுகின்றன.

கம்பனியானது SLFRSs மற்றும் LKASs இனை உள்ளடக்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை கடைப்பிடிப்பதுடன், அங்கீகாரம், அளவீடு, வகைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு செய்கைமுறைகளிலான முன்னேற்றகரமான மேம்பாடுகள் மற்றும் அதன் நிதி அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவ தகவல்களில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படும்வேளை செய்கைமுறைகள் மேலும் பலப்படுத்தப்படும்.

SLFRS 9 "நிதிக் கருவிகள்" தேவைப்பாடுகளுக்கு சபையானது உரிய கவனத்தினை செலுத்தியுள்ளது. தேவையான கலங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், SLFRS 9 உடன் மாதிரி ஏற்புடையாக்கல் மற்றும் இணக்கப்பாட்டிற்கு தேவையான முகாமைத்துவ தகவல் முறைமைகள் மற்றும் அறிக்கைகளிலான செய்கைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை பலப்படுத்துவதற்காக செய்கைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் முன்னேற்றகரமான மேம்பாடுகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

### உறுதிமொழி

மேற்குறிப்பிட்ட செய்கைமுறைகளின் அடிப்படையில், பணிப்பாளர்கள் சபையானது பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றன. கம்பனியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்கு மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆகியவற்றின் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன என உறுதிப்படுத்துகின்றது.

### வெளிவாரி கணக்காய்வாளரினால் கூற்றின் மீளாய்வு

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த வருடத்திற்கான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் மேலுள்ள பணிப்பாளர்களது கூற்றினை வெளிவாரி கணக்காய்வாளர்கள் மீளாய்வு செய்துள்ளதுடன், கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பும் மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதில் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட செய்கைமுறையில் அவர்களது புரிந்துணர்வுடன் கூற்றானது பொருத்தமின்றி காணப்படுகின்றது என்று நம்புவதற்கான எதுவும் அவர்களின் கவனத்திற்கு வரவில்லை என சபைக்கு அறிக்கையிட்டுள்ளார்கள்.

**கொரலி பியட்டர்ஸ்**
*தலைவர் - சபை கணக்காய்வுக் குழு*

**சுஜீவ ராஜபக்ஷ**
*தலைவர்*

**ரொஹான் பத்திரகே**
*பணிப்பாளர்*

5 ஜூலை 2022
கொழும்பு

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மற்றும் பிரதம நிதியியல் அதிகாரியின் பொறுப்புக் கூற்று

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான பீபள்ஸ் லீசிங் அன் வைனான்ஸ் பிஎல்சி இன் (கம்பனி) நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் (குழுமம் ) ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்க தயாரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன:

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் (இபக)வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்கள்
- 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள்
- 2011 இன் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட் பணிப்புரைகள்
- கொழும்பு பங்குப் பரிமாற்றகத்தின் பட்டியலிடல் விதிகள், மற்றும்
- இபக இனால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகையிலான சிறந்த நடைமுறைகள் கோவை

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளுக்கு இணங்க குழுமமானது அதன் பங்குதாரர்களுக்கு காலாண்டு அடிப்படையில் இடைக்கால நிதிக் கூற்றுக்களை முன்னிலைப்படுத்துகின்றது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதும் மற்றும் குழுமத்தினால் தொடர்ந்தும் பிரயோகிக்கப்படுகின்றதாகும். அவற்றின் கடைப்பிடிப்பில் குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களிலிருந்து பிறழ்வுகள் எதுவும் காணப்படவில்லை. ஒப்பிடப்படும் தகவல்கள் அவசியமானபோது நடைமுறையிலுள்ள முன்னிலைப்படுத்தலுடன் இணங்குவதற்காக மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன, ஏதேனும் பொருண்மையான பிறழ்வுகள் காணப்படின், அவை வெளிப்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளன. ஒரு உயர்ந்த மட்டத்திலானன மதிநுட்பம் மற்றும் சிக்கற்பாடு உடைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகள் கம்பனியின் வெளிவாரி கணக்காய்வாளர் மற்றும் சபை கணக்காய்வுக் குழுவுடன் கலந்துரையாடப்படுகின்றன. இந்த நிதிக்கூற்றுக்களின் நேர்மை மற்றும் புறநிலைத்தன்மைக்கு கம்பனியின் பணிப்பாளர்கள் சபையும் முகாமைத்துவமும் பொறுப்பினை ஏற்கின்றன. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள் ஒரு விவேகமான மற்றும் நியாயமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன ; இது நிதிக் கூற்றுக்கள் ஒரு மெய்யான மற்றும் நியாயமான விதத்தில் கொடுக்கல் வாங்கல்களின் வடிவம் மற்றும் சாராம்சத்தினையும் கம்பனியின் அலுவல்களின் நிலைமையானது நியாயாமாக முன்னிலைப்படுத்தப்படுவதனை பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துவதற்காகும். குழுமமானது செயற்பாட்டினை தொடர்வதற்கு போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என நாம் உறுதிப்படுத்துவதுடன், இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை பிரயோகித்துள்ளோம்.

இதனை உறுதிப்படுத்துவதற்காக கம்பனி மற்றும் குழுமமானது, சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக மற்றும் மோசடிகள் மற்றும் ஒழுங்கின்மைகளை தடுப்பதற்காகவும் கண்டுபிடிப்பதற்காகவும் ஒரு உள்ளகக் கட்டுப்பாட்டு மற்றும் கணக்கீட்டுப் பதிவுகள் முறைமையினை நிறுவுவதில் முறையான மற்றும் போதுமையான கவனத்தினை எடுத்துள்ளதுடன் இவை தொடர்ச்சியாக மீளாய்வுசெய்யப்பட்டு, மதிப்பிடப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றது.

கம்பனி மற்றும் குழுமத்தின் நிறுவப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டுள்ளதாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது காலாகால கணக்காய்வுகளை நடாத்தியுள்ளது. எவ்வாறாயினும், ஏதேனும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்கீட்டு முறைமைகளினால் வழங்கப்படுகின்ற உறுதிமொழிகளை நிறையிடுவதில் காணப்படுகின்ற உள்ளார்ந்த வரையறைகளை தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

சபை கணக்காய்வுக் குழுவானது பின்வருவனவற்றை மீளாய்வு செய்தது. அனைத்து உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு மற்றும் பரிசீலனைத் திட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் செயன்முறைகளின் வினைத்திறன், கணக்கீட்டு கொள்கைகளின் தரம் மற்றும் சட்டரீதியான மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் அவற்றின் கடைப்பிடித்தல், வெளிவாரி கணக்காய்வுத் திட்டம் மற்றும் சட்டரீதியான கணக்காய்வின்போது எழுப்பப்படும் ஏதேனும் சிக்கல்களிலான முகாமைத்துவ கடிதங்கள் மற்றும் பின்தொடர்வு, ஆகியவற்றின் விபரங்கள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 162 முதல் 163 வரை காணப்படும் “சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கையில்” வழங்கப்பட்டுன்ளன. கம்பனியின் நிதிக் கூற்றுக்களும் குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் கணக்காய்வு செய்யப்பட்டதுடன் அவரது அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 205 முதல் 207 வரை வழங்கப்பட்டுள்ளன.

நாம் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்;

- குழுமமானது அனைத்து பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் விவேமுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளதுடன், எவ்விதமான பொருண்மையான இணக்கப்பாடின்மைகளும் இல்லலை.;
- இந்த ஆண்டறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 303 இல் குறிப்பு 50.1.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர குழுமத்திற்கு எதிராக எவ்விதமான பொருண்மையான வழக்காடல்களும் நிலுவையில் இல்லை.

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான, குழுமத்தினால் செலுத்தப்படவேண்டிய அனைத்து வரிகள், தீர்வைகள், கட்டணங்கள் மற்றும் சட்டரீதியான கொடுப்பனவுகள் மற்றும் பணியாட்கள் தொடர்பாக செலுத்தவேண்டிய அனைத்து பங்களிப்புகள், கட்டணங்கள் மற்றும் வரிகள் என்பன செலுத்தப்பட்டுள்ளன, பொருத்தமானவிடத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**சமிந்திர மார்சலீன்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி*

**ஓமல் சுமனசிறி**
*பிரதம முகாமையாளர் - நிதி*

26 ஜூலை 2022
கொழும்பு

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | BAN/D/PLF/2022/01 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | [illegible] June 2022 |

தலைவர்
பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம், பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் (கம்பனி) நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள், 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கலான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றிலான கணக்காய்வானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொது பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஒரு பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் எனக்கு துணையளிக்கப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

கம்பனியின் மற்றும் குழுமத்தின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 முக்கிய கணக்காய்வு விடயங்கள்

முக்கிய கணக்காய்வு விடயங்கள் என்பன நடைமுறை காலப்பகுதியின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வில் மிகவும் முக்கியமானவை என எனது தொழில்சார் கருத்தில் கருதப்படுபவையாகும். இந்த விடயங்கள் நிதிக் கூற்றுக்களின் முழுவதுமான கணக்காய்வின் சூழமைவில் விளித்துரைக்கப்பட்டதுடன், அதனிலான எனது அபிப்பிரயாத்தினை உருவாக்குவதில் இந்த விடயங்களில் நான் ஒரு தனியான அபிப்பிராயத்தினை வழங்கவில்லை. கீழ் காணப்படும் ஒவ்வொரு விடயத்திற்கும் அந்தச் சூழமைவில் எனது கணக்காய்வு எவ்வாறு அவ்விடயத்தினை விளித்துரைத்தது என்ற எனது விபரம் வழங்கப்பட்டுள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| முக்கிய கணக்காய்வு விடயம் | எனது கணக்காய்வு எவ்வாறு முக்கிய கணக்காய்வு விடயத்தினை விளித்துரைத்தது |
|---|---|
| கடன்கள் மற்றும் வருமதிகளிலான வலுக்குன்றல் தள்ளுபடிகள்<br>31 மார்ச் 2022 இல் உள்ளவாறான வலுக்குன்றல் தள்ளுபடி நிகராக கடன்கள் மற்றும் வருமதிகளின் தொகையானது ரூபா 163,321 மில்லியன் என்பதுடன் இது குறிப்பு 25 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவை கூட்டாக குழுமத்தின் மொத்த சொத்துக்களின் 79% இற்கு பங்களிப்பு செய்தது.<br><br>கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் தள்ளுபடிகள் பின்வருவனவற்றின் நிமித்தம் ஒரு முக்கியமான கணக்கீட்டு விடயமாகும்:<br><br>• சிக்கலான கணிப்பீடுகளை உள்ளடக்கிய அறிக்கையிடப்பட்ட தள்ளுபடிகளின் பொருண்மை; மற்றும்<br>• குறிப்பு 25.6 இல் பிரதிபலிக்கப்படும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான பகுத்தறிவுகள், முன்னோக்கிய பார்வையிலான தற்போதைய பொருளாதார நிலைமைகளிலான மாற்றத்தினை மதிப்பிடுவதற்கான அவசியத்தினால் மற்றும் கோவிட்-19 கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் நிவாரண வழிமுறைகளின் தொடர்ச்சியான தாக்கம் என்பவற்றால் செல்வாக்கு செலுத்தப்பட்டன. | எனது கணக்காய்வு செயன்முறைகள் ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:<br><br>• பணிப்பாளர் சபையினால் வலுக்குன்றல் தள்ளுபடிகள் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளது மேற்பார்வை, மீளாய்வு மற்றும் அங்கீகாரம் என்பன மதிப்பிடப்பட்டன.<br>• தொடர்புடைய முறைமைகள் கட்டுப்பாடுகளது பரிசோதனைகள் உள்ளடங்கலாக, வலுக்குன்றல் தள்ளுபடிகளின் மதிப்பீடுகள் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, அமுலாக்கம் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.<br>• வலுக்குன்றல் தள்ளுபடிகளின் கணிப்பீட்டில் பயன்படுத்தப்படும் உள்ளார்ந்த தரவுகள் பொருத்தமான மூல ஆவணங்கள் மற்றும் குழுமத்தின் கணக்கீட்டுப் பதிவுகளுடன் விபரங்களை உடன்பாடு காண்பதன் மூலம் அவற்றின் பூரணத்துவம், துல்லியம் மற்றும் வகைப்படுத்தலானது சோதனை செய்யப்பட்டது.<br><br>• கடன்கள் மற்றும் வருமதிகளுக்காக ஒரு கூட்டான அடிப்படையில் வலுக்குன்றலுக்காக மதிப்பீடு செய்யப்பட்டது:<br>- வலுக்குன்றல் தள்ளுபடிகளில் பயன்படுத்தப்பட்ட முக்கிய கணிப்பீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன.<br>- உள்ளார்ந்த முறை மற்றும் முகாமைத்துவ மேலடுக்கு ஆகியவற்றில் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான தீர்ப்புகள் நியாயமானவையா என மதிப்பிடப்பட்டது. நான் பயன்படுத்தப்பட்ட முன்னோக்கிய தகவல்களது நியாயத்தன்மை, கருதப்பட்ட பொருளாதார சூழ்நிலவரம் மற்றும் ஒவ்வொரு சூழ்நிலவரங்களுக்கும் ஒதுக்கப்பட்ட சாத்தியக்கூறுகளின் நிறையூட்டல் என்பவற்றையும் மதிப்பீடு செய்தேன். எனது செயன்முறைகள் எனது அறிக்கை திகதி வரைக்குமான கிடைக்கக்கூடிய சிறந்த தகவல்களின் அடிப்படையினைக் கொண்டதாகும்.<br><br>• ஒரு தனியான அடிப்படையில் கடன்கள் மற்றும் வருமதிகளுக்கு வலுக்குன்றலுக்கான மதிப்பிடப்பட்டவை:<br>- கடன் வாங்கியவரது குறிப்பிட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் கடன் தரத்திலான முகாமைத்துவத்தின் உள்ளக மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் காலப்பொருத்தம் மதிப்பீடு செய்யப்பட்டன.<br>- உள்ளார்ந்த தனித்தனியான வலுக்குன்றல் கணிப்பீடுகளின் துல்லியமானது சோதனை செய்யப்பட்டது.<br>- நடைமுறை பொருளாதார சூழல்களிலான முக்கிய முன்னிறுத்தத்துடன் மேற்கொள்ளப்பட்ட கடன் வலுக்கன்றலுக்கான ஏற்பாட்டின் பயன்படுத்தப்பட்ட முக்கிய உள்ளீடுகளின் நியாயத்தன்மை மதிப்பீடு செய்யப்பட்டது. அத்தகைய மதிப்பீடுகள் எதிர்வுகூறப்பட்ட காசுப்பாய்ச்சல்களின் பெறுமதி மற்றும் நேரமுறையினை கருத்திற்கொண்டு, குறிப்பாக உயர்ந்த இடர் தொழில்துறைகள், மீட்டல் செயற்பாட்டின் நிலைமை மற்றும் பிணைச்சொத்தின் பெறுமதிகள் தொடர்பானவை, மேற்கொள்ளப்பட்டன.<br>- குறிப்புகள் 11 மற்றும் 25 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் தொடர்பான வெளிப்படுத்தல்களின் போதுமையானது மதிப்பிடப்பட்டது. |
| நிதி அறிக்கையிடல் தொடர்பான த.தொ. அடிப்படையான உள்ளகக் கட்டுப்பாடுகள்<br>குழுவின் நிதி அறிக்கையிடல் செய்கைமுறையின் ஒரு முக்கிய பாகமானது பிரதானமாக தன்னியக்க செய்கைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் உடனான பன்முகமான த.தொ. முறைமைகளில் தங்கியுள்ளது. மேலும், முக்கிய நிதிக் கூற்று வெளிப்படுத்தல்கள் த.தொ. முறைமைகளினால் உருவாக்கப்படும் தரவு மற்றும் அறிக்கைகளை பயன்படுத்தி தயாரிக்கப்படுவதுடன், இவை விரிதாள்களைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டு உருவாக்கப்படுகின்றது.<br><br>இதன் பிரகாரம், நிதி அறிக்கையிடல் தொடர்பான த.தொ. அடிப்படையான உள்ளகக் கட்டுப்பாடுகள் ஒரு முக்கிய கணக்காய்வு விடயமாக கருதப்படுகின்றது. | எனது கணக்காய்வு செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:<br><br>• நிதி அறிக்கையிடல் மற்றும் தொடர்பான வெளிப்படுத்தல்கள் தொடர்பான செய்கைமுறைகளது உள்ளகக் கட்டுப்பாட்டு சூழ்நிலையிலான ஒரு புரிந்துணர்வு பெறப்பட்டது.<br>• குழுமத்தின் நிதி அறிக்கையிடல் செய்கைமுறை தொடர்பான முக்கிய த.தொ. முறைமைகளின் பொருத்தமான கட்டுப்பாடுகள் இனங்காணப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டன.<br>• பயனாளர் அணுக்கம் மற்றும் மாற்ற முகாமைத்துவம் தொடர்பானவை உள்ளடங்கலான த.தொ. கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் செயற்பாட்டு வினைத்திறன்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.<br>• முக்கிய வெளிப்படுத்தல்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட முக்கிய மூலத் தரவுகள் துல்லியம் மற்றும் பூரணத்துவத்திற்காக, பேரேடு கணக்கிணக்கங்களது மீளாய்வு உள்ளடங்கலாக, சோதிக்கப்பட்டது. |

**1.4** குழுமத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் குழுமத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றன ஆனால் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதினிலான எனது கணக்காய்வாளரது அறிக்கையினை உள்ளடக்கவில்லை, இது இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் எனக்கு கிடைக்கப்பெறும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாகும்.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் நான் அதிலான ஏதேனும் வடிவிலான உறுதிமொழி தீர்மானத்தினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களிலான எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் எனக்குக் கிடைக்கப்பெறும்போது அவற்றை வாசித்து, அவ்வாறு செய்வதில், ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மையாக முரண்பட்டுள்ளதா அல்லது கணக்காய்வில் பெற்றுக்கொண்ட எனது அறிவில் அல்லது இல்லாவிடின் பொருண்மையான பிறழ்கூற்றாக தோன்றுகின்றதா எனக் கருதுதல்.

குழுமத்தின் 2022 ஆண்டறிக்கையினை நான் வாசித்தபோது, அதில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுகின்றன என நான் முடிவுறுத்தினால், திருத்தத்திற்கான ஆளுகைக்கு பொறுப்பானோருக்கு அந்த விடயத்தினை நான் தெரியப்படுத்தல் வேண்டும். மேலும் பொருண்மையான திருத்தப்படாத பிறழ்கூற்றுக்கள் காணப்படின், அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இன் ஏற்பாடுகளைத் தொடர்ந்து அவை பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் உள்ளடக்கப்படுவதுடன் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

**1.5** நிதிக் கூற்றுக்களுக்கான ஆளுகையுடன் பொறுப்பானோர் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒரு மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை வழங்கும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியம் என முகாமைத்துவம் தீர்மானிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாளியாகும்,

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில், ஓர் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியாக செயல்படுவதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடும் பொறுப்பானது முகாமைத்துவத்தினதாகும் என்பதுடன், நிறுவனச் செயல்நிலை தொடர்நிலை தொடர்பாக பொருத்தமானவிடத்து விடயங்களை வெளிப்படுத்துவதுடன் முகாமைத்துவம் குழுமத்தினை கலைக்கும் நோக்கத்தினை அல்லது செயற்பாட்டினை நிறுத்துவதற்கு அல்லது எவ்வித யதார்த்தமான மாற்றுவழியின்றி அவ்வாறு செய்யவேண்டும் என்று ஏற்பட்டாலொழிய நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி கணக்கீட்டின் அடிப்படையினை பயன்படுத்தலாம்.

ஆளுகைக்கு பொறுப்பாயுள்ளோர்கள் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்பாளியாவார்கள்.
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16 (1) இன் பிரகாரம், குழுமத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்காக, குழுமமானது அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றிற்கு முறையான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு வேண்டப்படுகின்றது.

### 1.6 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஓர் கணக்காய்வாளரது அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஓர் உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் கணக்காய்வானது எந்நேரமும் ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை, அவ்வாறு காணப்படுமாயின், இனங்காணும் என்ற உத்தரவாதமல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்ற சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை கணிச நிலையாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஓர் பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான் :

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் கருதத்தக்க பிறழ் கூற்றுக்களது இடர்நேர்கைகளை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்நேர்கைகளுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஓர் தவறின் விளைவாக எழக்கூடிய இடர்நேர்கையிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஓர் கருதத்தக்க பிறழ் கூற்றினை இனங்காணாத இடர்நேர்கையானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- கம்பனி மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டப்பாடுகளில் ஓர் புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான கம்பனி மற்றும் குழுமத்தின் ஆற்றலில் கருதத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தல். ஓர் கருதத்தக்களவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவு செய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றி காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த காட்சியளிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான காட்சியளிப்பினை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

ஆளுகை தொடர்பான பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்களாக கணக்காய்வின் திட்டமிட்ட நோக்கம் மற்றும் கணக்காய்வின் நேரம் மற்றும் கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

### 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19ஆம்இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்காக விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன

- கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஏ) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (2) (டி) இன் தேவைக்கேற்ப கம்பனியானது முறையான கணக்கீட்டுப் பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தினை வழங்குகின்றது.
- கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 151 இன் தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (டி) (iii) இன் தேவைப்பாட்டிற்கமைய காட்சிப்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.
- 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6 (1) (டி) (iv) இன் தேவைக்கேற்ப காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

செயலாற்றப்பட்ட செயல்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், கருதத்தக்க விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (டி) இன் தேவைக்கேற்ப வழக்கமான வணிகங்களுக்கு அப்பால் கம்பனியினது ஆளுகை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் கம்பனியினால் செய்துகொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு.;
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (எவ் ) இன் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூல சட்டம், கம்பனியின் ஆளுகை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொது மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு கம்பனி இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஜி) இன் தேவைக்கேற்ப கம்பனியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (எச் ) இன் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு இணங்க கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.

**டபிள்யு.பி.சி. விக்கிரமரத்ன**
*கணக்காய்வாளர் தலைமை அதிபதி*

# நிதிக் கூற்று - உள்ளடக்கத்தின் அட்டவணை


| | | பக்க எண். |
|---|---|---|
| **நிதிக் கூற்றுக்கள்** | | |
| | இலாபம் அல்லது நட்டக் கூற்று | 209 |
| | விரிவான வருமானக் கூற்று | 210 |
| | நிதி நிலைமைக் கூற்று | 211 |
| | உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று | 212 |
| | காசுப் பாயச்சல் கூற்று | 214 |
| **நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்** | | |
| 1. | கூட்டாண்மை மற்றும் குழுத் தகவல்கள் | 215 |
| 2. | தயாரிப்பின் அடிப்படை மற்றும் ஏனைய கணிசமான கணக்கீட்டுக் கொள்கைகள் | 215 |
| 3 | பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள் | 218 |
| 4 | வழங்கப்பட்ட நியமங்கள் ஆனால் இன்னமும் அமுலுக்கு வராதவை | 222 |
| **இலாபம் அல்லது நட்டக் கூற்று** | | |
| 5. | மொத்த வருமானம் | 224 |
| 6. | தேறிய வட்டி வருமானம் | 224 |
| 7. | தேறிய உழைத்த காப்புறுதித் தவணைப்பணம் | 226 |
| 8. | கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 227 |
| 9. | நிதிச் சொத்துக்களிலான தேறிய இலாபங்கள் / (நட்டங்கள்) - இநஇபெ | 228 |
| 10. | ஏனைய செயற்பாட்டு வருமானம் | 228 |
| 11. | கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் | 229 |
| 12. | ஆளணிச் செலவினங்கள் | 232 |
| 13. | பெறுமானத்தேய்வும் பெறுமதிகுறைப்பும் | 232 |
| 14. | நலன்கள், கோரல்கள் மற்றும் காப்புறுதி ஒப்பந்தச் செலவினங்கள் | 233 |
| 15. | ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | 234 |
| 16. | நிதிச் சேவைகளிலான வரி | 234 |
| 17. | வருமான வரிச் செலவினம் | 235 |
| 18. | சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை / நீர்த்த உழைப்பு (EPS) | 238 |
| 19. | சாதரண பங்கொன்றிற்கான பங்கிலாபம் | 238 |
| **நிதி நிலைமைக் கூற்று - சொத்துக்கள்** | | |
| 20. | அளவீட்டு அடிப்படையில் நிதிக் கருவிகளின் பகுப்பாய்வு | 238 |
| 21. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதி | 241 |
| 22 | காசும் காசுக்குச் சமனானவைகளும் | 248 |
| 23 | வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான மீதிகள் | 248 |
| 24 | நிதிச் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 249 |

| | | பக்க எண். |
|---|---|---|
| 25 | கடன்களும் வருமதிகளும் - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் | 251 |
| 26 | காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வருமதிகள் | 267 |
| 27 | நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 268 |
| 28 | கடன் கருவிகள் - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் | 269 |
| 29 | துணைநிறுவனங்களிலான முதலீடுகள் | 271 |
| 30 | முதலீட்டு ஆதனம் | 273 |
| 31 | ஏனைய சொத்துக்கள் | 274 |
| 32 | ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 275 |
| 33 | பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 280 |
| 34 | நன்மதிப்பும் அருவச் சொத்துக்களும் | 281 |
| **நிதி நிலைமைக் கூற்று - பொறுப்புக்கள்** | | |
| 35 | வங்கிகளுக்குச் செலுத்துவேண்டியவைகள் | 283 |
| 36 | வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகள் | 285 |
| 37 | வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 287 |
| 38 | ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 289 |
| 39 | காப்புறுதிப் பொறுப்புக்கள் மற்றும் மீள்காப்புறுதி செலுத்தவேண்டியவைகள் | 290 |
| 40 | செயற்பாட்டு குத்தகை பொறுப்புக்கள் | 292 |
| 41 | நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 293 |
| 42 | ஏனைய பொறுப்புக்கள் | 294 |
| 43 | ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள் | 294 |
| 44 | ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | 297 |
| **நிதி நிலைமைக் கூற்று - உரித்துவம்** | | |
| 45 | கூறப்பட்ட மூலதனம் | 299 |
| 46 | சட்டரீதியான ஒதுக்க நிதியம் | 300 |
| 47 | நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் | 301 |
| 48 | ஏனைய ஒதுக்கங்கள் | 301 |
| 49 | கட்டுப்பாடற்ற அக்கறைகள் | 302 |
| **ஏனைய நிதியியல் வெளிப்படுத்தல்கள்** | | |
| 50 | எதிர்பாரா பொறுப்புக்களும் கடப்பாடுகளும் | 303 |
| 51 | சாதாரண பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி | 304 |
| 52 | நடைமுறை/நடைமுறையல்லா பகுப்பாய்வு | 305 |
| 53 | பிரிவுவாரியான நிதி அறிக்கையிடல் | 306 |
| 54 | பிணையீடு வைக்கப்பட்ட சொத்துக்கள் | 308 |
| 55 | தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் | 308 |
| 56 | இடர் முகாமைத்துவம் | 314 |
| 57 | ஒப்பீட்டுத் தகவல்கள் | 339 |
| 58 | அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள் | 339 |

# இலாபம் அல்லது நட்டக் கூற்று

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி மாற்றம் % | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 5 | 224 | 26,741,380 | 27,103,798 | (1.34) | 32,630,986 | 33,645,265 | (3.01) |
| வட்டி வருமானம் | 6.1 | 225 | 23,881,526 | 24,983,445 | (4.41) | 25,926,792 | 26,821,838 | (3.34) |
| கழி: வட்டிச் செலவினம் | 6.2 | 225 | 10,832,186 | 13,064,310 | (17.09) | 11,205,126 | 13,375,197 | (16.22) |
| தேறிய வட்டி வருமானம் | 6 | 224 | 13,049,340 | 11,919,135 | 9.48 | 14,721,666 | 13,446,641 | 9.48 |
| தேறிய உழைத்த காப்புறுதித் தவணைப்பணம் | 7 | 226 | - | - | - | 4,939,071 | 5,028,549 | (1.78) |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 8 | 227 | 1,876,524 | 1,818,675 | 3.18 | 1,321,513 | 1,198,054 | 10.30 |
| நிதிச் சொத்துக்களிலான தேறிய இலாபங்கள் / (நட்டங்கள்) - இநநிபெ | 9 | 228 | 26,783 | 162,616 | (83.53) | 86,525 | 228,258 | (62.09) |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 10 | 228 | 956,547 | 139,062 | 587.86 | 357,085 | 368,566 | (3.12) |
| மொத்த செயற்பாட்டு வருமானம் | | | 15,909,194 | 14,039,488 | 13.32 | 21,425,860 | 20,270,068 | 5.70 |
| கழி: கடன்கள் மற்றும் வருமதிகளிலான வலுக்குன்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் | 11 | 229 | 655,425 | 1,043,837 | (37.21) | 951,756 | 1,352,489 | (29.63) |
| நன்மதிப்புக்கான வலுக்குன்றல் கட்டணங்கள் | 34 | 281 | 121,611 | 99,209 | 22.58 | 121,611 | 99,209 | 22.58 |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | | | 15,132,158 | 12,896,442 | 17.34 | 20,352,493 | 18,818,370 | 8.15 |
| கழி: செலவினங்கள் | | | | | | | | |
| ஆளணிச் செலவினங்கள் | 12 | 232 | 4,002,414 | 3,465,373 | 15.50 | 4,946,747 | 4,354,636 | 13.60 |
| பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதி குறைப்பு | 13 | 232 | 700,043 | 722,994 | (3.17) | 638,664 | 647,693 | (1.39) |
| நலன்கள், கோரல்கள் மற்றும் ஒப்புரவளித்தல் செலவினம் | 14 | 233 | - | - | - | 3,228,475 | 2,663,347 | 21.22 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 15 | 234 | 2,134,497 | 1,612,859 | 32.34 | 2,607,480 | 2,048,058 | 27.31 |
| மொத்த செயற்பாட்டு செலவினங்கள் | | | 6,836,954 | 5,801,226 | 17.85 | 11,421,366 | 9,713,734 | 17.58 |
| நிதிச் சேவைகளிலான வரிகளுக்கு முந்திய செயற்பாட்டு இலாபம் | | | 8,295,204 | 7,095,216 | 16.91 | 8,931,127 | 9,104,636 | (1.91) |
| கழி: நிதிச்சேவைகளிலான வரி | 16 | 234 | 1,645,111 | 1,222,628 | 34.56 | 1,705,797 | 1,273,966 | 33.90 |
| வருமான வரிச் செலவினத்திற்கு முன்னரான இலாபம் | | | 6,650,093 | 5,872,588 | 13.24 | 7,225,330 | 7,830,670 | (7.73) |
| கழி: வருமான வரிச் செலவினம் | 17 | 235 | 1,991,084 | 1,839,568 | 8.24 | 2,407,161 | 2,234,336 | 7.73 |
| ஆண்டிற்கான இலாபம் | | | 4,659,009 | 4,033,020 | 15.52 | 4,818,169 | 5,596,334 | (13.90) |
| இலாப ஒதுக்கீடுகள் | | | | | | | | |
| கம்பனியின் உரித்துவ உடைமையாளர்களுக்கு | | | 4,659,009 | 4,033,020 | 15.52 | 4,805,731 | 5,294,015 | (9.22) |
| கட்டுப்பாடற்ற அக்கறைகள் | 49 | 302 | - | - | - | 12,438 | 302,319 | (95.89) |
| ஆண்டிற்கான இலாபம் | | | 4,659,009 | 4,033,020 | 15.52 | 4,818,169 | 5,596,334 | (13.90) |
| சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை / நீர்த்த உழைப்புகள்(ரூ.) | 18 | 238 | 2.47 | 2.14 | 15.42 | 2.55 | 2.81 | (9.25) |
| சாதரண பங்கொன்றிற்கான பங்கிலாபம் (ரூ.)) | 19 | 238 | 1.25 | 0.60 | 108.33 | | | |

பக்கங்கள் 215 முதல் 339 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# விரிவான வருமானக் கூற்று

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி மாற்றம் % | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டிற்கான இலாபம் | | | 4,659,009 | 4,033,020 | 15.52 | 4,818,169 | 5,596,334 | (13.90) |
| வரி நிகராக, ஏனைய விரிவான வருமானம் | | | | | | | | |
| அடுத்து வரும் வருடங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படவேண்டிய உறுப்படிகள் (வரி நிகராக): | | | | | | | | |
| வெளிநாட்டு துணைக்கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பரிமாற்றத்திலிருந்து எழுகின்ற தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) | 48.4 | 302 | - | - | - | 1,439,171 | 141,728 | 915.45 |
| அடுத்து வரும் வருடங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படவேண்டிய தேறிய உறுப்படிகள் | | | - | - | - | 1,439,171 | 141,728 | 915.45 |
| அடுத்து வரும் வருடங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படக்கூடாத உறுப்படிகள் (வரி நிகராக): | | | | | | | | |
| நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலான தேறிய காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் / (நட்டங்கள்) | | | | | | | | |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகளிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்கள் | 43 | 294 | (31,732) | 107,003 | (129.66) | (28,272) | 106,891 | (126.45) |
| காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்களிலான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | 44.1 | 298 | 7,616 | (29,961) | 125.42 | 7,795 | (27,690) | 128.15 |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் மீள் அளவிடுதலிலான இலாபங்கள் /(நட்டங்கள்) | 48.3 | 302 | (207,831) | (15,263) | (1,261.67) | (207,831) | (5,512) | (3,670.52) |
| மேற்குறிப்பிட்டவற்றிலான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | 44.1 | 298 | 49,817 | - | 100.00 | 49,817 | - | 100.00 |
| வலுக்குன்றலுக்காக இலாபம் அல்லது நட்டக் கூற்றிற்கு மீள்சுழற்சி | | | - | - | - | - | - | - |
| அடுத்து வரும் வருடங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படக்கூடாத தேறிய உறுப்படிகள் | | | (182,130) | 61,779 | 394.81 | (178,491) | 73,689 | 342.22 |
| வருடத்திற்கான ஏனைய விரிவான வருமானம், வரி நிகராக | | | (182,130) | 61,779 | 394.81 | 1,260,680 | 215,417 | 485.23 |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | 4,476,879 | 4,094,799 | 9.33 | 6,078,849 | 5,811,751 | 4.60 |
| ஒதுக்கீடுகள்: | | | | | | | | |
| கம்பனியின் உரித்துடையாளர்களுக்கு | | | (182,130) | 61,779 | 394.81 | 555,132 | 212,979 | 160.65 |
| கட்டுப்பாடற்ற அக்கறை | 49 | 302 | - | - | - | 705,548 | 2,438 | 28,839.62 |
| ஆண்டிற்கான ஏனைய விரிவான வருமானம். வரி நிகராக | | | (182,130) | 61,779 | 394.81 | 1,260,680 | 215,417 | 485.23 |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் | | | 4,476,879 | 4,094,799 | 9.33 | 6,078,849 | 5,811,751 | 4.60 |

பக்கங்கள் 215 முதல் 339 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதி நிலைமைக் கூற்று

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | கம்பனி மாற்றம் % | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 | குழுமம் மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 22 | 248 | 4,668,830 | 2,703,031 | 72.73 | 5,402,587 | 3,844,694 | 40.52 |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான மீதிகள் | 23 | 248 | 5,117,866 | 5,399,071 | (5.21) | 9,529,518 | 8,231,101 | 15.77 |
| நிதிச் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 24 | 249 | 25,140 | 109,787 | (77.10) | 849,298 | 1,281,753 | (33.74) |
| கடன்களும் வருமதிகளும் - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் | 25 | 251 | 151,274,454 | 141,387,907 | 6.99 | 163,320,846 | 147,004,004 | 11.10 |
| காப்புறுதியும் வருமதியான மீள்காப்புறுதி | 26 | 267 | - | - | - | 1,322,528 | 1,024,461 | 29.10 |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 27 | 268 | 1,333,278 | 309,118 | 331.32 | 1,632,941 | 735,494 | 122.02 |
| கடன் கருவிகள் - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் | 28 | 269 | 9,827,221 | 6,994,206 | 40.51 | 16,013,525 | 10,931,714 | 46.49 |
| துணைக்கம்பனிகளிலான முதலீடுகள் | 29 | 271 | 3,213,788 | 3,213,788 | - | - | - | - |
| முதலீட்டு ஆதனம் | 30 | 273 | - | - | - | 820,664 | 820,664 | - |
| ஏனைய சொத்துக்கள் | 31 | 274 | 749,154 | 575,660 | 30.14 | 831,826 | 932,458 | (10.79) |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 32 | 275 | 1,413,776 | 1,049,250 | 34.74 | 4,090,682 | 4,034,265 | 1.40 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 33 | 280 | 1,972,380 | 2,242,444 | (12.04) | 1,539,484 | 1,591,297 | (3.26) |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | 44 | 297 | 1,146,726 | 415,841 | 175.76 | 1,444,813 | 594,495 | 143.03 |
| நன்மதிப்பும் அருவச் சொத்துக்களும் | 34 | 281 | 21,965 | 146,446 | (85.00) | 139,603 | 265,506 | (47.42) |
| மொத்த சொத்துக்கள் | | | 180,764,578 | 164,546,549 | 9.86 | 206,938,315 | 181,291,906 | 14.15 |
| **பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 35 | 283 | 11,749,332 | 6,439,310 | 82.46 | 15,300,361 | 9,003,873 | 69.93 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 36 | 285 | 103,367,904 | 101,502,931 | 1.84 | 111,453,750 | 103,743,716 | 7.43 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 37 | 287 | 17,244,313 | 13,825,553 | 24.73 | 17,103,223 | 13,684,516 | 24.98 |
| ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 38 | 289 | 3,636,528 | 4,132,110 | (11.99) | 4,043,322 | 4,111,235 | (1.65) |
| காப்புறுதிப் பொறுப்புக்களும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதிகளும் | 39 | 290 | - | - | - | 5,903,363 | 5,015,885 | 17.69 |
| செயற்பாட்டு குத்தகைப் பொறுப்புக்கள் | 40 | 292 | 2,059,050 | 2,286,386 | (9.94) | 1,588,115 | 1,614,660 | (1.64) |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 41 | 293 | 1,851,676 | 362,450 | 410.88 | 2,098,784 | 883,900 | 137.45 |
| ஏனைய பொறுப்புக்கள் | 42 | 294 | 1,369,054 | 1,069,121 | 28.05 | 1,399,030 | 1,156,822 | 20.94 |
| இளைப்பாறுதல் நலன் கடப்பாடு | 43 | 294 | 668,411 | 587,257 | 13.82 | 748,944 | 657,778 | 13.86 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 44 | 297 | - | - | - | 323,621 | 297,568 | 8.76 |
| மொத்த பொறுப்புக்கள் | | | 141,946,268 | 130,205,118 | 9.02 | 159,962,513 | 140,169,953 | 14.12 |
| **உரித்துவம்** | | | | | | | | |
| பங்கு மூலதனம் | 45 | 299 | 17,071,961 | 14,892,036 | 14.64 | 17,071,961 | 14,892,036 | 14.64 |
| சட்டரீதியான ஒதுக்க நிதியம் | 46 | 300 | 2,639,946 | 2,406,995 | 9.68 | 2,729,351 | 2,464,951 | 10.73 |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் | 47 | 301 | 19,481,611 | 17,159,777 | 13.53 | 23,122,852 | 20,682,106 | 11.80 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 48 | 301 | (375,208) | (117,377) | 219.66 | 897,111 | 421,319 | 112.93 |
| கம்பனியின் உரித்துவ உடைமையாளர்களுக்கு உடைமையாக்கத்தக்க மொத்த உரித்துவம் | | | 38,818,310 | 34,341,431 | 13.04 | 43,821,275 | 38,460,412 | 13.94 |
| கட்டுப்பாடற்ற அக்கறைகள் | 49 | 302 | - | - | - | 3,154,527 | 2,661,541 | 18.52 |
| மொத்த உரித்துவம் | | | 38,818,310 | 34,341,431 | 13.04 | 46,975,802 | 41,121,953 | 14.24 |
| மொத்த பொறுப்புக்களும் உரித்துவமும் | | | 180,764,578 | 164,546,549 | 9.86 | 206,938,315 | 181,291,906 | 14.15 |
| எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் | 50 | 303 | 6,852,234 | 10,998,111 | (37.70) | 6,899,223 | 11,045,100 | (37.54) |
| சாதாரண பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி (ரூ.) | 51 | 304 | 20.57 | 20.15 | 2.10 | 23.22 | 22.56 | 2.91 |

இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நாம் சான்றளிக்கின்றோம்.

**ஓமல் சுமனசிறி**
*பிரதம முகாமையாளர் - நிதி*

**சமிந்திர மார்சலீன்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி*

பணிப்பாளர்கள் சபை இந்த நிதிக்கூற்றுக்களுக்கு பொறுப்பாயுள்ளது.
சபைக்காகவும் அதன் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது;

**சுஜீவ ராஜபக்ஷ**
*தலைவர்*

**ரொஹான் பத்திரகே**
*பணிப்பாளர்*

பக்கங்கள் 215 முதல் 339 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.
24 ஜூன் 2022
கொழும்பு

# உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று

| கம்பனி | மூலதனம் ரூ. '000 | சட்டரீதியான ஒதுக்க நிதியம் ரூ. '000 | ஏனைய ஒதுக்கங்கள் நியாயப் பெறுமதி ஒதுக்கம் ரூ. '000 | நிறுத்திவைத்த உழைப்புகள் ரூ. '000 | மொத்த உரித்துவம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| 01 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறானது | 13,915,414 | 2,205,344 | (102,114) | 14,227,988 | 30,246,632 |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | 4,033,020 | 4,033,020 |
| ஏனைய விரிவான வருமானம் (வரி நிகராக) | - | - | (15,263) | 77,042 | 61,779 |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் | - | - | (15,263) | 4,110,062 | 4,094,799 |
| உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் | | | | | |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | - | 201,651 | - | (201,651) | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - இடைக்கால | - | - | - | (162,770) | (162,770) |
| - இறுதி | 976,622 | - | - | (813,852) | 162,770 |
| உரித்துவ உடையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள் | 976,622 | 201,651 | - | (1,178,273) | - |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 14,892,036 | 2,406,995 | (117,377) | 17,159,777 | 34,341,431 |
| 1 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான மீதி | 14,892,036 | 2,406,995 | (117,377) | 17,159,777 | 34,341,431 |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | 4,659,009 | 4,659,009 |
| ஏனைய விரிவான வருமானம் (வரி நிகராக) | - | - | (207,831) | 25,701 | (182,130) |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் | - | - | (207,831) | 4,684,710 | 4,476,879 |
| உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் | | | | | |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | - | 232,950 | (50,000) | (182,950) | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - இடைக்கால | 2,179,925 | - | - | (2,179,925) | - |
| உரித்துவ உடையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள் | 2,179,925 | 232,950 | (50,000) | (2,362,875) | - |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | 17,071,961 | 2,639,945 | (375,208) | 19,481,612 | 38,818,310 |

பக்கங்கள் 215 முதல் 339 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

| குழுமம் | மூலதனம் | சட்டரீதியான ஒதுக்க நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | | நிறுத்திவைத்த உழைப்புகள் | மொத்தம் | கட்டுப்பாடற்ற அக்கறைகள் | மொத்த உரித்துவம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நியாயப் பெறுமதி ஒதுக்கம் | வெளிநாட்டு நாணய பரிமாற்றல் ஒதுக்கம் | | | | |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 13,915,414 | 2,235,077 | (116,005) | 401,108 | 16,517,824 | 32,953,418 | 2,356,784 | 35,310,202 |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | - | 5,294,015 | 5,294,015 | 302,319 | 5,596,334 |
| ஏனைய விரிவான வருமானம் (வரி நிகராக) | - | - | (5,512) | 141,728 | 76,763 | 212,979 | 2,438 | 215,417 |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் | - | - | (5,512) | 141,728 | 5,370,778 | 5,506,994 | 304,757 | 5,811,751 |
| உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் | | | | | | | | |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | - | 229,874 | - | - | (229,874) | - | - | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - இடைக்கால | - | - | - | - | (162,770) | (162,770) | - | (162,770) |
| இறுதி | 976,622 | - | - | - | (813,852) | 162,770 | - | 162,770 |
| உரித்துவ உடையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள் | 976,622 | 229,874 | - | - | (1,206,496) | - | - | - |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 14,892,036 | 2,464,951 | (121,517) | 542,836 | 20,682,106 | 38,460,412 | 2,661,541 | 41,121,953 |
| 1 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான மீதி | 14,892,036 | 2,464,951 | (121,517) | 542,836 | 20,682,106 | 38,460,412 | 2,661,541 | 41,121,953 |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | - | 4,805,731 | 4,805,731 | 12,438 | 4,818,169 |
| ஏனைய விரிவான வருமானம் (வரி நிகராக) | - | - | (207,831) | 733,623 | 29,340 | 555,132 | 705,548 | 1,260,680 |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் | - | - | (207,831) | 733,623 | 4,835,071 | 5,360,863 | 717,986 | 6,078,849 |
| உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உரித்துவ உடையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் | | | | | | | | |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | - | 264,401 | (50,000) | - | (214,401) | - | - | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - இடைக்கால | 2,179,925 | - | - | - | (2,179,925) | - | (225,000) | (225,000) |
| உரித்துவ உடையாளர்களுடனான மொத்த கொடுக்கல் வாங்கல்கள் | 2,179,925 | 264,401 | (50,000) | - | (2,394,326) | - | (225,000) | (225,000) |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | 17,071,961 | 2,729,352 | (379,348) | 1,276,459 | 23,122,851 | 43,821,275 | 3,154,527 | 46,975,802 |

பக்கங்கள் 215 முதல் 339 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# காசுப் பாய்ச்சல்கள் கூற்று

## கணக்கீட்டுக் கொள்கை

இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 7 'காசுப் பாயச்சல் கூற்று' இன் பிரகாரம் 'நேரடி முறையினை' பயன்படுத்தி காசுப் பாயச்சல் கூற்று தயாரிக்கப்பட்டது. இங்கு செயற்பாட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் நிதியளித்தல் நடவடிக்கைகளை வெவ்வேறாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. காசும் காசுக்குச் சமனானவைகளும் குறுங்கால, தெரிந்துகொண்ட காசுத் தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய உயர்ந்த திரவத்தன்மையுள்ள முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்குவதுடன் இவை பெறுமதியில் ஓர் அற்பமான மாற்றங்களிலான இடர்நேர்கைக்கு உட்படுகின்றது.

| | | | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|---|
| | | பக்க | 2022 | 2021 | 2022 | 2021 |
| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | எண் | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளிலிருந்தான வருமானம் | 6.1 | 225 | 159,743 | 73,753 | 176,533 | 103,501 |
| கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான கொடுப்பனவுகள் | | | (123,938,484) | (47,647,269) | (128,649,697) | (51,042,311) |
| கடன்கள் மற்றும் வருமதிகளிலிருந்தான பெறுகைகள் | | | 137,014,283 | 78,976,592 | 139,838,871 | 81,166,978 |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுடனான மீதிகளில் முதலீடு | | | (30,785,830) | (24,145,286) | (34,428,160) | (26,225,019) |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுடனான மீதிகளிலிருந்தான பெறுகைகள் | | | 31,510,851 | 22,294,433 | 34,065,096 | 25,405,664 |
| பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கடன் கருவிகளிலான முதலீடு | | | (31,590,690) | (22,598,347) | (37,483,431) | (23,561,339) |
| பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கடன் கருவிகளிலான பெறுகைகள் | | | 29,316,856 | 20,089,756 | 31,022,471 | 20,339,756 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகளின் கொடுப்பனவு | | | (122,737,129) | (99,054,813) | (124,719,248) | (97,571,015) |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகளிலிருந்தான பெறுகைகள் | | | 116,799,179 | 83,652,942 | 124,371,580 | 83,337,190 |
| ஏனைய வருமானங்களிலிருந்தான பெறுகை | | | 2,079 | 1,711 | 219,280 | 216,256 |
| நிதிச் சொத்துக்களிலான முதலீடு - இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் | | | (4,573,220) | (8,881,716) | (5,221,552) | (10,028,730) |
| நிதிச் சொத்துக்களிலிருந்தான வருவாய்கள் - இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் | | | 4,684,650 | 9,966,264 | 5,740,532 | 10,173,826 |
| நிதிச் சொத்துக்களிலிருந்தான பெறுகை - ஏவிவ ஊடாக நியாயப் பெறுமதியில் | | | 3,756 | - | 156,320 | 979,028 |
| நிதிச் சொத்துக்களிலான முதலீடு - ஏவிவ ஊடாக நியாயப் பெறுமதியில் | | | (1,150,081) | - | (1,175,931) | (264,333) |
| ஆளணிச் செலவினங்களுக்கான கொடுப்பனவு | | | (3,709,482) | (3,575,458) | (4,653,596) | (4,377,522) |
| செயற்பாட்டு குத்தகை பொறுப்பிற்கான கொடுப்பனவு | | | (667,068) | (655,969) | (385,273) | (409,587) |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவு | | | (3,444,374) | (872,388) | (3,623,513) | (885,891) |
| வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட தவணைப்பணம் | | | - | - | 4,641,005 | 5,199,021 |
| செலுத்தப்பட்ட கோரல்கள் | | | - | - | (2,340,996) | (2,712,682) |
| முதலீடுகளிலிருந்தான பங்கிலாப வருமானம் | | | 711,841 | 110,673 | 6,216 | 918 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 43 | 294 | (33,471) | (10,353) | (39,309) | (13,148) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | 41.1 | 294 | (1,175,310) | (3,349,938) | (1,958,933) | (3,534,648) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவாக்கப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு** | | | (3,601,901) | 4,374,587 | (4,841,735) | 6,295,913 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | | | | |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | 32 | 275 | (385,714) | (104,690) | (307,456) | (152,324) |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலான வருவாய் | | | 14,005 | 54,832 | 131,604 | 210,359 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | 34 | 281 | (10,325) | (360) | (12,835) | (11,661) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/உருவாக்கப்பட்ட தேறிய காசு** | | | (382,034) | (50,218) | (188,687) | 46,374 |
| **நிதியளித்தல் செயற்பாடுகளிலான காசுப் பாய்ச்சல்கள்** | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகளுக்கான கொடுப்பனவு | 35.1 | 283 | (1,946,889) | (3,886,355) | (2,504,664) | (5,315,691) |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகளிலிருந்தான கடன் பெறுகை | 35.1 | 283 | 7,000,000 | 1,000,000 | 7,250,000 | 1,500,000 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்களுக்கான கொடுப்பனவு | 37.1 | 287 | (8,456,772) | (6,589,468) | (8,440,722) | (6,570,514) |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்களிலிருந்தான கடன் பெறுகை | | | 10,000,000 | - | 10,000,000 | - |
| பங்குதாரர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | 80 | (1,345) | 80 | (1,345) |
| கட்டுப்பாடற்ற அக்கறைகளுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | - | - | (150,000) | - |
| **நிதியளித்தல் செயற்பாடுகளிலிருந்து (பயன்படுத்தப்பட்ட)/உருவாக்கப்பட்ட தேறிய காசு** | | | 6,596,419 | (9,477,168) | 6,154,694 | (10,387,550) |
| **காசும் காசுக்குச் சமனானவைகளில் தேறிய (குறைப்பு)** | | | 2,612,484 | (5,152,799) | 1,124,272 | (4,045,263) |
| வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசுக் காசுக்குச் சமனானவைகள் | | | 1,986,657 | 7,139,456 | 2,952,815 | 6,998,078 |
| **வருடத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள்** | | | 4,599,141 | 1,986,657 | 4,077,087 | 2,952,815 |
| காசும் காசுக்குச் சமானானவைகளும் | | | 4,668,831 | 2,703,031 | 5,402,587 | 3,844,694 |
| வங்கி மேலதிகப்பற்று | | | (69,690) | (716,374) | (1,325,500) | (891,879) |
| வருடத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகள் | | | 4,599,141 | 1,986,657 | 4,077,087 | 2,952,815 |

பக்கங்கள் 215 முதல் 339 வரை காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. கூட்டாண்மை மற்றும் குழுமத் தகவல்கள்

### 1.1 கூட்டாண்மைத் தகவல்கள்

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி (கம்பனி), இலங்கையில் வதிவிடத்தினைக் கொண்ட 22 ஆகஸ்ட் 1995 இல் ஒருங்கிணைப்பட்ட ஓர் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாகும். இது 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஓர் நிதிக் கம்பனியாகும். 24 நவம்பர் 2011 இல் கம்பனியானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் முதன்முறையாக பட்டியலிடப்பட்டது. கம்பனியானது 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவுசெய்யப்பட்டது.

கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட காரியாலயம் மற்றும் பிரதான வணிக இடம் இலக்கம் 1161, மருதாளை வீதி கொழும்பு 08 இல் அமைந்துள்ளது.

**ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள்**

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த வருடத்திற்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள், பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி (தாய் நிறுவனம்), அதன் துணைக்கம்பனிகளை (கூட்டாக குழுமம் என்று குறிப்பிடப்படுகின்றது) உள்ளடக்கும்.

**தாய் நிறுவனம் மற்றும் இறுதியான தாய் நிறுவனம்**

கம்பனியின் தாய் நிறுவனம் மக்கள் வங்கி என்பதுடன் இது அரச உடைமையான ஓர் நிறுவனமாகும்.

**பணியாட்களின் எண்ணிக்கை**

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான கம்பனி மற்றும் குழுமத்தின் பணியாட்கள் பலமானது முறையே 2,245 மற்றும் 3,148 ஆகும். (31 மார்ச் 2021 இல் 2,343 மற்றும் 3,304).

### 1.2 குழுவின் தகவல்கள்

**பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை**

**கம்பனி**

**பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி**

பிரதான வணிக நடவடிக்கைகள் பின்வருமாறு - நிதிக் குத்தகைகள் வழங்கல், வாடகைக் கொள்வனவு சொத்துக்களுக்கான நிதியளிப்பு, தவணைக் கடன்கள், இஸ்லாமிய நிதியளிப்பு, எல்லைக்கடன் வர்த்தகம், பங்கு வர்த்தகம், கடன் கருவிகளது வழங்கல், வருமதிகளின் கொள்வனவு, தங்கக் கடன்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து வைப்புக்களைத் திரட்டுதல் என்பனவாகும்.

**துணை நிறுவனங்கள்**

| துணை நிறுவனங்களின் பெயர் | பிரதான நடவடிக்கைகள் | ஒருங்கிணைக்கப்பட்ட நாடு | % உரித்துவ அக்கறை 2022 | 2021 |
|---|---|---|---|---|
| பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | வாகனத்தொகுதி முகாமைத்துவம், வாகனப் பெறுமதியிடல், வாகன விற்பனை, காப்புறுதி மதிப்பீடு மற்றும் வாகன திருத்தம். | இலங்கை | 100% | 100% |
| பீபள்ஸ் லீசிங் பிரப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் | கலப்பு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளல் மற்றும் ஆதனத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகள். | இலங்கை | 100% | 100% |
| பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | பொது காப்புறுதி வணிகத்தினை மேற்கொள்ளல் | இலங்கை | 75% | 75% |
| பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் பிரப்பர்டீஸ் லிமிட்டட். | ஓர் அலுவலக வளாகத்தினை நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல் | இலங்கை | 100% | 100% |
| பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட் | குறைந்த வருமானம் உழைப்பவர்களுக்கு மற்றும் நுண் நிறுவனங்களுக்கு வங்கியல்லாத நிதிச் சேவைகளை வழங்குதல். | இலங்கை | 100% | 100% |
| லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் | குத்தகைகள்/கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குதல், கடன் கருவிகளை வழங்குதல் மற்றும் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டுதல் | பங்களாதேஷ் | 51% | 51% |

மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டில் கம்பனியின் மற்றும் குழுமத்தின் பிரதான நடவடிக்கைகளின் தன்மையில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றங்களும் காணப்படவில்லை.

## 2. தயாரிப்பின் அடிப்படை மற்றும் ஏனைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த வருடத்திற்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கம்பனியின் தனியான நிதிக் கூற்றுக்கள் என்பன, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப (SLFRS மற்றும் LKAS) மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டம், 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித்துறை சட்டம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகள் என்பவற்றுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சலிலான தகவல்கள் தவிர, அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டினை பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் கிழ்காணும் இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாயுள்ளது. 'www.casrilanka.com / www.slaasc.lk'.

SLFRS மற்றும் LKAS என்பவற்றின் தேவைப்பாடுகள்:, நிதிக் கூற்றுக்களது தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தலை ஆளுகை செய்யும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காணப்படாத ஏதேனும் பொருத்தமற்ற கணக்கீட்டு நடத்துமுறைகளை குழுமமானது கடைப்பிடிக்கவில்லை.

இவ்வருடத்தில் பின்பற்றப்பட்ட குழுமத்தின் பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகளின் விபரங்கள் பக்கம் 218 இல் காணப்படும் குறிப்பு 3 இல் வழங்கப்பட்டுள்ளது.

### 2.2 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் SLFRS மற்றும் LKAS என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய கம்பனி மற்றும் குழுமத்தின் இந்த நிதிக் கூற்றுக்களுக்கு பணிப்பாளர் சபையானது பொறுப்பாளியாயுள்ளது.

பணிப்பாளர் சபையானது, 'நிதியியல் அறிக்கையிடலிலான பணிப்பாளர்களது பொறுப்பிலான கூற்று', கம்பனியின் அலுவல்களிலான பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை மற்றும் நிதி நிலைமைக் கூற்றிலான சான்றளிப்பு என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்களின் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இந்த நிதிக் கூற்றுக்கள் பின்வரும் கூறுகளை உள்ளடக்குகின்றன:

- மீளாய்வாண்டில் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிச் செயற்திறனிலான தகவல்களை வழங்கும் ஓர் இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று ;
- வருடத்தின் இறுதியில் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதி நிலைமையிலான தகவல்களை வழங்கும் ஓர் நிதி நிலைமைக் கூற்று;
- மீளாய்வாண்டில் கம்பனி மற்றும் குழுமத்தின் பங்குதாரர்களது உரித்துவத்திலான அனைத்து மாற்றங்களையும் சித்தரிக்கும் ஓர் உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று ;
- கம்பனி மற்றும் குழுமத்தினால் காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளை உருவாக்குவதற்கான ஆற்றல் மற்றும் அந்த காசுப்பாய்ச்சல்களை நிறுவனம் பயன்படுத்துவதற்கான தேவைகள் பற்றிய தகவல்களை பயனாளிகளுக்கு வழங்கும் ஓர் காசுப் பாய்ச்சல் கூற்று;மற்றும்
- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விவரணத் தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்.

### 2.3 பணிப்பாளர்கள் சபையினால் நிதிக் கூற்றுக்களின் அங்கீகாரம்

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் (ஒப்பீடுகள் உள்ளடங்கலாக) 24 ஜுன் 2022 இலான பணிப்பாளர்கள் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 24 ஜுன் 2022 இல் வழங்குவதற்காக அங்கீகாரமளிக்கப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டது.

### 2.4 அளவீட்டின் அடிப்படை

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் பின்வரும் உருப்படிகள் தவிர வரலாற்று கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன:

| உருப்படி | அளவீட்டின் அடிப்படை | குறிப்பு |
|---|---|---|
| நிதிச் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டத்தினுடாக நியாயப் பெறுமதியில் | நியாயப் பெறுமதி | 24 |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினுடாக நியாயப் பெறுமதியில் | நியாயப் பெறுமதி | 27 |
| முதலீட்டு ஆதனம் | நியாயப் பெறுமதி | 30 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள் | ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகளுடன் காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்களை சேர்த்து அவற்றின் நிகழ்காலப் பெறுமதியில் பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. | 43 |

### 2.5 நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்

நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் கம்பனி மற்றும் குழுமத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தன்மையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு அவற்றின் சார்புடைய திரவத்தன்மை மற்றும் முதிர்வு அமைப்பினை பிரதிபலிக்கும் விதமாக நிரல் படுத்தப்பட்டுள்ளன. அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னர்(நடைமுறை) 12 மாதங்களுக்குள் தீர்ப்பனவு செய்யவேண்டிய அல்லது மீட்கவேண்டிய மற்றும் அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னர் 12 மாதங்களுக்கு அதிகமானவை (நடைமுறையல்லாத) தொடர்பான ஓர் பகுப்பாய்வு பக்கம் 305 இல் காணப்படும் குறிப்பு 52 இல் (நடைமுறை/நடைமுறையல்லாதவை) முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களை பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்காக எவ்விதமான செம்மையாக்கல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.6 ஈடுகட்டல்

பின்வருவன காணப்பட்டால் மாத்திரமே நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் ஈடுகட்டப்பட்டு தேறிய தொகையானது ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுகட்டுவதற்கான சட்டரீதியாக அமுல்படுத்தத்தக்க ஈடுகட்டலுக்கான உரிமை மற்றும் ஓர் நிகர அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான அல்லது ஒரேசமயத்தில் சொத்துக்களை தீர்வாக்கி பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கான ஓர் நோக்கம் காணப்படின். ஏதேனும் கணக்கீட்டு நியமம் அல்லது பொருள்விளக்கம் தேவைப்படின் அல்லது அனுமதிக்கப்பட்டால் மற்றும் குழுமத்தின் கணக்கீட்டு கொள்கைகளில் குறிப்பிட்டு வெளிப்படுத்தப்பட்டால் ஒழிய வருமானம் மற்றும் செலவினம் ஒருங்கிணைக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஈடுகட்டப்படவில்லை.

### 2.7 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

குழுமம் மற்றும் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (ரூபா) முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது குழுமம் செயற்படும் பொருளாதார சூழலின் முதன்மை நாணயமாகும் (குழும செயற்பாட்டு நாணயம்).

### 2.8 முழுதாக்கல்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - LKAS 01 – 'நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்' இல் வேறுவகையாக குறிப்பிட்டது தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் காணப்படும் தொகைகள் கிட்டிய ஆயிரம் ரூபாய்க்கு (ரூபா '000) முழுதாக்கப்பட்டுள்ளன.

### 2.9 பொருண்மை மற்றும் திரளல்

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 01 – 'நிதிக் கூற்றுக்களை முன்னிலைப்படுத்தல்' இற்கு இணங்க ஒவ்வொரு பொருண்மையான ஒத்த உருப்படி வகுப்பும் தனித்தனியாக நிதிக் கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமற்றதாக இருந்தாலொழிய, ஒத்தமையாத தன்மை அல்லது செயற்பாடுடைய உருப்படிகள் தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.10 முக்கியமான கணக்கீட்டு தீர்மானங்கள். மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

SLFRSs/LKASs உடன் இணங்கி தயாரிக்கப்பட்ட கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் கணக்கீட்டு கொள்கைகளின் பிரயோகம், அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகளது தொகைகளைப் பாதிக்கக்கூடிய தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை முகாமைத்துவம் செய்யவேண்டும் என வேண்டுகின்றது. மேலும் முகாமைத்துவம் எதிர்காலம் தொடர்பான முக்கிய அனுமானங்கள் மற்றும் அடுத்த நிதியாண்டினுள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லப்படும் தொகைகளுக்கு பொருண்மையான செம்மையாக்கல்களை உருவாக்கக்கூடிய குறிப்பிடத்தக்க இடர்நேர்கையினைக் கொண்ட அறிக்கையிடும் திகதியில் மதிப்பீட்டு நிச்சயமற்றதன்மையின் முக்கிய மூலங்களை கருத்திலெடுக்கவேண்டும் என வேண்டுகின்றது. மெய்யான விளைவுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

கணக்கீட்டு தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் உள்ளார்ந்த அனுமானங்கள் ஓர் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளிலான திருத்தங்கள் மதிப்பீடுகள் திருத்தப்படும் காலத்தில் மற்றும் பாதிக்கப்படும் ஏதேனும் எதிர்கால காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நிச்சயமற்றதன்மையினை உள்ளடக்கிய முக்கிய குறிப்பிடத்தக்க கணக்கீட்டு தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன கீழே கலந்துரையாடப்பட்டுள்ளன. அத்தகைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உரிய கொண்டு செல்லல் தொகைகள் தொடர்புடைய குறிப்புகளில் வழங்கப்பட்டுள்ளன.

#### நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

குழுமத்தின் முகாமைத்துவமானது ஓர் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியாக தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பீடு செய்துள்ளதுடன், எதிர்வரும் எதிர்காலங்களில் குழுமம் அதன் வணிகத்தினை தொடர்வதற்கான வளங்களைக் கொண்டுள்ளது என திருப்திபடுகின்றது. மேலும்,

நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கணிசமான சந்தேகத்தை எழுப்பக்கூடிய எவ்விதமான பொருண்மையான நிச்சயமற்றதன்மைகள் குறித்து முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்கள் ஓர் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்படுகின்றது.

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியினை தீர்மானிக்கும் அடிப்படையானது கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலாகும் என்பதுடன் முகாமைத்துவமானது குழுமக் கம்பனிகளில் கோவிட்-19 இன் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் மற்றும் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையின் பயன்பாட்டினது பொருந்துதன்மையினையும் மதிப்பீடு செய்தது.

குழுமமானது பன்முக அழுத்தசோதனை சூழ்நிலைகளின் கீழ் பல்வேறு தரப்பட்ட காரணிகளை கருத்திலெடுத்து அதன் வணிகங்களின் மீளெழுச்சியினை மதிப்பீடு செய்தது. அவை பின்வருவன தொடர்பானவை - எதிர்பார்க்கும் வருமானம், செலவு முகாமைத்துவம், இலாபகரத்தன்மை, அவசியமற்ற மூலதனச் செலவினங்களை ஒத்திப்போடுவதற்கான ஆற்றல், பயன்படுத்தப்படாத கடன் வசதிகள் மற்றும் ஆகக் குறைந்தளவு தாக்கத்துடன் வணிகத் தொடர்ச்சியினை உறுதிசெய்து சேவைகளை வழங்குவதனை தொடர்வதற்கான ஆற்றல் என்பவையாகும். குழுமத்தின் ஒவ்வொரு துறையினதும் எதிர்கால கண்ணோட்டத்தினை உடைமைக் கம்பனியின் சபைக்கு முன்னிலைப்படுத்தி மற்றும் இவை முகாமைத்துவத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மற்றும் நிகழக்கூடிய பரவலான விளைவுகளுக்கு உரிய கவனம் செலுத்தியதன் பின்னர் முகாமைத்துவமானது கம்பனி ஊகிக்கக்கூடிய எதிர்காலத்தில் செயற்பாட்டு இருப்பினை தொடர்வதற்கும் போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என திருப்திப்படுவதுடன் இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் மற்றும் முன்னிலைப்படுத்துவதில் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையினை கடைப்பிடிப்பதனை தொடர்ந்தது

**நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல்**

SLFRS 9 இன் பிரகாரம், குழுமத்தின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்படுவதற்கான நோக்கெல்லையினை வழங்குவதுடன் இவை அதன் பின்னர் பல்வேறு பிரிவுகளுக்கு அளவீடு செய்யப்படுகின்றன. அவை பின்வரும் வரன்முறைகளின் அடிப்படையில் , பெறுமதி குறைப்புக் கிரயத்தில், ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் (ஏவிவநிபெ) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் (இநநிபெ) ;

- பக்கம் 219 இலுள்ள குறிப்பு 3.5.2 இல் குறிப்பிட்டுள்ளவாறு நிதிச் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்கான நிறுவனத்தின் வணிக மாதிரி.
- நிதிச் சொத்துக்களது ஒப்பந்த காசுப் பாய்ச்சல் பண்புகள் பக்கம் 219 இலுள்ள குறிப்பு 3.5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**நிதிச் சொத்துக்களிலான வலுக்குன்றல் நட்டங்கள்**

நிதிச் சொத்துக்களின் அனைத்து பிரிவுகளிடையேயான SLFRS 9 இன் கீழான வலுக்குன்றல் நட்டங்களின் அளவீடானது தீர்மானத்தினை வேண்டப்படுவதுடன் முக்கியமாக வலுக்குன்றல் நட்டங்களை தீர்மானிக்கும்போது எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தொகைகளின் மதிப்பீடு நேரம் என்பவற்றை வேண்டுகின்றது.

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் குழுமம் / கம்பனியானது ஓர் நிதிச் சொத்து அல்லது நிதிச்சொத்துக்களின் தொகுப்பொன்று வலுக்குன்றியுள்ளதாக ஏதேனும் ஓர் புறநிலையான சான்று காணப்படுகின்றதா என மதிப்பீடு செய்கின்றது.

**கடன்கள் மற்றும் வருமதிகளிலான வலுக்குன்றல் நட்டங்கள்**

இதன் பிரகாரம் குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் தனியாக குறிப்பிடத்தக்க கடன்கள் மற்றும் முற்பணங்களில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஓர் வலுக்குன்றல் நட்டம் ஏற்பாடு செய்யப்படவேண்டுமா என மீளாய்வு செய்கின்றது. குறிப்பாக, வலுக்குன்றல் நட்டங்களை தீர்மானிக்கும்போது எதிர்கால காசுப் பாய்ச்சல்களது தொகையின் மதிப்பீடு மற்றும் நேரம் என்பவற்றில் முகாமைத்துவத்தின் தீர்மானம் தேவைப்படுகின்றது.

இந்த மதிப்பீடுகள் பல்வேறு காரணிகளின் அனுமானங்களின் அடிப்படையில் காணப்படுவதனால் மெய்யான விளைவுகள் மாறுபடலாம் என்பதுடன் மேற்கொள்ளப்பட்ட வலுக்குன்றல் தள்ளுபடிகளுக்கு எதிர்கால மாற்றங்களை விளைவிக்கலாம்.

“கடன்கள் மற்றும் வருமதிகளிலான வலுக்குன்றல் நட்டங்கள்” பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 260 இல் காணப்படும் குறிப்பு 25.6 இல் வழங்கப்பட்டுள்ளது.

**நிதியியல் முதலீடுகளிலான வலுக்குன்றல் கட்டணங்கள்**

நிதியியல் முதலீடுகள் பெறுமதி குறைப்புக் கிரயத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது SLFRS 9 - நிதியியல் முதலீடுகளுக்கிணங்க வலுக்குன்றலுக்கு ஆட்பட்டதாகும். பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கம்பனி / குழுமமானது கடன் கருவிகளில் வரலாற்று நட்ட அனுபவத்தினைக் கொண்டிருக்கவில்லை. எனவே குழுமமானது வெளிவாரி மூலங்களினால் பிரசுரிக்கப்படும் - உதாரணமாக வெளிவாரி கடன் தரப்படுத்தலுக்கு புளூம்பேர்க், த.சா. இனை கவனத்திலெடுக்கின்றது. இலங்கை அரசாங்கத்தினால் இலங்கை ரூபாவில் வழங்கப்பட்ட கடன் பிணையங்களுக்கு கொ.த.ந. 0% ஆக கருதப்படுவதுடன் ஏனைய அனைத்து கருவிகளுக்கும் துறைசார் சராசரியானது கொ.த.ந. ஆக கருதப்படுகின்றது

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து நிதியியல் முதலீடுகளுக்கான கடன் இடரானது குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கவில்லை. எனவே, அந்த முதலீடுகளுக்கு குழுமமானது நிதிக் கூற்றுக்களில் கடன் நட்டங்களை பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கவில்லை.

**ஏவிவநிபெ க்கான வலுக்குன்றல்**

‘ஏவிவநிபெ இன் வலுக்குன்றலது “ விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 268 இல் காணப்படும் குறிப்பு 27 இல் வழங்கப்பட்டுள்ளது.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம்**

குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு முறைகள், பயன்பாட்டு ஆயுட்காலங்கள் மற்றும் மீதியான பெறுமதிகளை மீளாய்வு செய்கின்றது. இந்த பெறுமதிகள், வீதங்கள், முறைகள் என்பவற்றின் மதிப்பீடுகளில் முகாமைத்துவத்தினால் தீர்மானம் பயன்படுத்தப்படுவதனால் இவை நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டதாகும்

**அருவச் சொத்துக்களது பயன்பாட்டு ஆயுட்காலம்**

“அருவச் சொத்துக்களது பயன்பாட்டு ஆயுட்காலம்” இன் விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 281 இல் காணப்படும் குறிப்பு 34 இல் வழங்கப்பட்டுள்ள.

GRI | 207-1, 207-2, 207-4

**பொருள் அளிப்பு விலை குறித்தல் ஒழுங்குவிதி**

கம்பனியானது வருமான வரிகள் மற்றும் பொருள் அளிப்பு விலை குறித்தல் ஒழுங்குவிதிகள் உள்ளடங்கலான ஏனைய வரிகளுக்கு கட்டுப்பட்டதாகும். உரிய பொருள் அளிப்பு விலை குறித்தல் ஒழுங்குவிதிகளின் பொருள் விளக்கம் தொடர்பாகக் காணப்படும் நிச்சயமற்றதன்மைகள் பொருள் அளிப்பு விலை குறித்தல் ஒழுங்குவிதிகளின் தாக்கத்தினை தீர்மானிப்பதற்காக முகாமைத்துவம் மதிப்பாராய்வினை பயன்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன்பிரகாரம், ஒழுங்குவிதிகளை பிரயோகிப்பதில் நுண்ணாய்வுடைய மதிப்பாராய்வுகள் மற்றும் மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், இவை இணைக்கப்பட்ட பொறுப்பேற்புகளை இனங்காணுதல், முழங்கையளவு தூர விலைகள் தொடர்பான மதிப்பீடு மற்றும் பொருத்தமான விலையிடல் பொறிமுறையினை தெரிவுசெய்தல் என்பவற்றுக்கு மாத்திரம் வரையறை செய்யப்படவில்லை. நடைமுறை வரிக் கட்டணமானது அத்தகைய மதிப்பாராய்வுகளுக்கு கட்டுப்பட்டதாகும். பொருள் அளிப்பு விலை குறித்தல் ஒழுங்குவிதிகளின் பிரயோகம் மற்றும் முகாமைத்துவத்தின் பொருள் விளக்கம் என்பவற்றின் விளைவாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமான வரிக் கட்டணத்திற்கும் மெய்யாகவே செலுத்தவேண்டியவற்றிகும் இடையே வித்தியாசங்கள் எழலாம்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

GRI | 207-1, 207-2, 207-4

**ஒத்திவைக்கப்பட்ட வரி**
நிதிக் கூற்றுக்களின் பக்கம் 297 இல் காணப்படும் குறிப்பு 44 இல் "ஒத்திவைக்கப்பட்ட வரி" இன் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**ஓய்வுபெறல் நலன் கடப்பாடு**
"ஓய்வுபெறல் நலன் கடப்பாடு" பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 294 இல் காணப்படும் குறிப்பு 43 இல் வழங்கப்பட்டுள்ளன.

**துணைக்கம்பனி பீபள்ஸ் லீசிங் இன்சூரன்ஸ் பிஎல்சி இன் பொது காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களின் பெறுமதியிடல்**
பொது காப்புறுதி ஒப்பந்தங்களின் மதிப்பீடுகள் பின்வரும் இரண்டிற்கும் மேற்கொள்ளப்படல் வேண்டும். அறிக்கையிடப்படும் திகதியில் அறிக்கையிடப்பட்ட கோரல்களின் எதிர்பார்க்கப்பட்ட இறுதி கிரயம் மற்றும் ஆட்பட்ட கோரல்களின் எதிர்பார்க்கப்பட்ட இறுதி கிரயம் ஆனால் அறிக்கையிடப்படும் திகதியில் இன்னமும் அறிக்கையிடப்படாதவை என்பவையாகும். கோரல்களின் இறுதிக் கிரயத்தினை உறுதிப்பாட்டுடன் நிலைநாட்டுவதற்கு கணிசமானளவு காலம் எடுக்கலாம். நிலுவையிலுள்ள கோரல் தொகைகளின் மதிப்பீட்டினது பிரதான உள்ளார்ந்த அனுமானம் கடந்தகால கோரல் அபிவிருத்தி அனுபவமாகும்.

பாரிய கோரல்கள் வழக்கமாக தனியாக விளித்துரைக்கப்படுவதுடன், நட்டம் செம்மையாக்கப்பட்ட மதிப்பீடுகளின் முகப் பெறுமதிக்கு ஒதுக்கப்படல் அல்லது அவற்றின் எதிர்கால அபிவிருத்தியினை பிரதிபலிப்பதற்காக தனியாக உத்தேசிக்கப்பட்டது. அனேகமான சந்தர்ப்பங்களில், கோரல்களின் எதிர்கால வீதங்கள், பணவீக்கம் மற்றும் நட்ட விகிதங்கள் தொடர்பாக எவ்விதமான வெளிப்படையான அனுமானங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.11 ஒப்பிடப்படும் தகவல்கள்
அளவுசார்ந்த, எடுத்துரைமுறை மற்றும் விளக்கமான தகவல்களை உள்ளடக்கிய ஒப்பிடப்படும் தகவல்கள் முன்னைய காலம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. இது நடைமுறை காலத்திற்கான நிதிக் கூற்றுக்களிலான புரிந்துணர்வினை மேம்படுத்துவதற்கும் காலங்களுக்கிடையேயான ஒப்பிடுதலை மேம்படுத்துவதற்கும் ஆகும். முன்னைய வருடத்தின் நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தல் நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடுவதற்கும் சிறப்பாக முன்னிலைப்படுத்துவதற்கும் தேவையாயின் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

## 3. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்
### 3.1 ஒருங்கிணைப்பிற்கான அடிப்படை
31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கம்பனி, அதன் துணைக்கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனியினை உள்ளடக்குகின்றன. கம்பனியின் துணைக்கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் அதே ஆண்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு விதி விலக்காக, பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் துணைக்கம்பனி, காணப்படுகின்றது. அதன் நிதியாண்டு டிசம்பர் 31 இல் நிறைவடைகின்றது. ஒருங்கிணைக்கும் நோக்கத்திற்காக அதே அறிக்கையிடப்படும் ஆண்டு பயன்படுத்தப்பட்டது.

### 3.1.1 வணிக பிணைப்பு மற்றும் நன்மதிப்பு
இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 03 (வணிகப் பிணைப்புகள்) இன் தேவைப்பாடுகளுக்கேற்ப கையகப்படுத்தல் முறையினை பயன்படுத்தி வணிகப் பிணைப்புகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

குழுமம் மற்றும் கம்பனியானது பின்வருமாறு நன்மதிப்பினை அளவிடுகின்றது. கைப்பற்றப்பட்ட நிறுவனத்தில் ஏதேனும் கட்டுப்பாடற்ற அக்கறையாக அங்கீகரிக்கப்பட்ட தொகை உள்ளடங்கலாக மாற்றல் செய்யப்பட்ட தொகையின் நியாயப் பெறுமதியிலிருந்து இனங்காணப்படத்தக்க கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏற்றுக்கொண்ட பொறுப்பு ஆகியவற்றின் தேறிய அங்கீகரிக்கப்பட்ட தொகையினை கழித்து, அனைத்தும் கைப்பற்றப்பட்ட திகதியில் அளவீடு செய்யப்படுகின்றன. மிகையானது எதிர்மறையாகக் காணப்படும்போது மிகக் குறைவான கொள்வனவு இலாபமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றது.

ஒரு வணிகப் பிணைப்பிலான கைப்பற்றப்பட்ட நன்மதிப்பானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. இது கைப்பற்றப்பட்ட இனங்காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஐயப்பாடான நிகழ்வுப் பொறுப்புக்கள் என்பவற்றின் தேறிய பெறுமதியிலான குழுமத்தின் அக்கறையின் மேலான வணிக பிணைப்பின் கிரயத்திலும் மிகையானதாகும்.

ஆரம்ப அங்கீகாரத்தினைத் தொடர்ந்து நன்மதிப்பானது கிரயத்திலிருந்து ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றது. நன்மதிப்பானது வருடாந்தம் வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுவதுடன், கொண்டுசெல்லும் பெறுமதியானது வலுக்குன்றும் என நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலையிலான மாற்றங்கள் குறிப்பிட்டால், அடிக்கடி மீளாய்வு செய்யப்படும். வலுக்குன்றல் பரிசீலனை நோக்கத்திற்காக, ஒரு வணிக பிணைப்பில் கைப்பற்றப்பட்ட நன்மதிப்பானது, கைப்பற்றப்பட்ட திகதியிலிருந்து, குழுமத்தின் ஒவ்வொரு காசு உருவாக்கும் அலகிற்கும் அல்லது காசு உருவாக்கும் அலகுக் குழுவுக்கு ஒதுக்கப்படுவதுடன், கைப்பற்றப்பட்ட நிறுவனத்தின் ஏனைய சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அந்த அலகுகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமலே, இவை பிணைப்பின் கூட்டு விளைவிலிருந்து நன்மையடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நன்மதிப்பானது காசு உருவாக்கும் அலகின் (கா.உ.அ.) ஓர் அங்கமாக காணப்படின், அந்த அலகினுள் காணப்படும் ஒரு பகுதி செயற்பாடு விற்கப்பட்டால், விற்பனை செய்யப்பட்ட செயற்பாட்டுடன் இணைந்துள்ள நன்மதிப்பானது செயற்பாட்டின் விற்பனையிலான இலாபம் மற்றும் நட்டத்தை தீர்மானிக்கும்போது அது செயற்பாட்டின் கொண்டுசெல்லப்படும் தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில் விற்கப்பட்ட நன்மதிப்பானது விற்கப்பட்ட செயற்பாட்டின் சார்பு பெறுமதிகள் மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட காசு உருவாக்கும் அலகின் ஒரு பகுதியின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது

துணைக்கம்பனிகள் விற்கப்படும்போது விற்பனை விலைக்கும் தேறிய சொத்துக்களுடன் திரண்ட பரிமாற்றல் வித்தியாசங்கள் மற்றும் நன்மதிப்பு ஆகியவற்றைச் சேர்த்து வரும் தொகைக்கும் இடையேயான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 3.1.2 பொதுவான கட்டுப்பாட்டு வணிகப் பிணைப்புகள்
இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவத்தினால் வழங்கப்பட்ட பொதுக் கட்டுப்பாட்டு வணிக பிணைப்புக்கான பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைக் கூற்று - இணைப்புக்கள் கணக்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டிகளை பயன்படுத்தி பொது கட்டுப்பாட்டு வணிக பிணைப்புகள் கணக்கீடு செய்யப்படுகின்றன.

### 3.1.3 கட்டுப்பாட்டின் இழப்பு
கட்டுப்பாட்டினை இழந்ததைத் தொடர்ந்து துணைக் கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், ஏதேனும் கட்டுப்பாடற்ற அக்கறைகள் மற்றும் துணைக் கம்பனி தொடர்பான ஏனைய உரித்துவப் பிரிவுகளை குழுமமானது விலக்குகின்றது. கட்டுப்பாட்டு இழப்பிலிருந்து எழும் ஏதேனும் மிகை அல்லது பற்றாக்குறையானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. முன்னைய துணைக் கம்பனியில் குழுமம் ஏதேனும் அக்கறையினை தக்கவைத்திருந்தால், அத்தகைய அக்கறையானது கட்டுப்பாடு இழக்கப்பட்ட தினத்தில் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்கின்றது

### 3.1.4 ஒருங்கிணைப்பில் அகற்றப்படும் கொடுக்கல் வாங்கல்கள்
குழுமங்களுக்கிடையேயான மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், மற்றும் குழுமங்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழும் ஏதேனும் எய்தப்பெற்றிராத வருமானம் மற்றும் செலவினங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது அகற்றப்படுகின்றன. உரித்துவ கணக்கீடு செய்யப்பட்ட முதலீட்டிலிருந்து எழும் எய்தப்பெற்றிராத இலாபங்கள் குழுமத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனத்திலுள்ள அக்கறையின் அளவுக்கு முதலீட்டிற்கு எதிராக நீக்கப்படுகின்றது. எய்தப்பெற்றிராத நட்டங்களும் எய்தப்பெற்றிராத இலாபங்களைப் போன்றே நீக்கப்படுகின்றது, ஆனால் வலுக்குன்றல் ஏதும் காணக்கூடிய சான்றுகள் இல்லாத அளவிட்கு மாத்திரம்.

### 3.2 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள்

அனைத்து வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களும் செயற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிற்கு, கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற நேரத்தில் காணப்பட்ட பரிமாற்றல் வீதங்களில் மாற்றல் செய்யப்படுகின்றன. இது தொடர்பில் குழுமமானது கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்தில் பிரயோகிக்கப்படும் பரிமாற்றல் வீதத்தின் நடு வீதத்தினை பயன்படுத்தும் வழக்கத்தினைக் கொண்டுள்ளது.

வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட நாணயம் சார்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் திகதியில் வழக்கமான ஸ்பொட் பரிமாற்ற வீதத்தில் செயற்பாட்டு நாணயத்திற்கு சமனான தொகைக்கு மீள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. நாணயம் சார்ந்த உருப்படிகளின் பரிமாற்றலிலிருந்து எழும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருடத்தின் ஆரம்பத்தில் செயற்பாட்டு நாணயத்தில் பெறுமதி குறைப்புக் கிரயத்திற்கும், வருடத்திலான விளைவுறு வட்டி மற்றும் கொடுப்பனவுகளுக்கு செம்மையாக்கப்பட்டு, அறிக்கையிடப்படும் திகதியில் காணப்படும் பரிமாற்றல் வீதத்தில் வெளிநாட்டு நாணயத்தில் காணப்படும் பெறுமதி குறைப்புக் கிரயத்திற்கும் இடையிலான வித்தியாசமாகும்.

ஒரு வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று கிரய ஏற்பாட்டின் கீழ் அளவிடப்படும் நாணயம் சாரா உருப்படிகள் அங்கீகாரம் செய்யப்படும் தினத்தில் உள்ள ஸ்பொட் பரிமாற்றல் வீதத்தில் மாற்றம் செய்யப்படுகின்றன. நியாயப் பெறுமதியில் வெளிநாட்டு நாணயத்தில் அளவிடப்படும் நாணயம் சாரா உருப்படிகள் நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்பட்ட தினத்தில் காணப்படும் ஸ்பொட் பரிமாற்றல் வீதத்தினை பயன்படுத்தி மாற்றம் செய்யப்படுகின்றன

### 3.3 SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருவாய்

SLFRS 15 பின்வருவனவற்றை மாற்றியமைத்துள்ளது. LKAS 18 “வருவாய்“, LKAS 11 ‘கட்டுமான ஒப்பந்தங்கள்“ மற்றும் IFRIC 13 “வாடிக்கையாளர் விசுவாசத் திட்டங்கள்” உள்ளடங்கலான வருவாய் அங்கீகார வழிகாட்டியானது 1 ஏப்ரல் 2018 முதல் அல்லது அதற்குப் பின் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியாகின்றது.

SLFRS 15 வருவாயானது எவ்வளவு மற்றும் எப்போது அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்காக ஓர் விரிவான வரம்புறுகையினை வழங்குகின்றது. வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழும் வருவாய் மற்றும் காசுப் பாயச்சலின் தன்மை, தொகை, நேரம் மற்றும் நிச்சயமற்றதன்மை என்பவற்றை புரிந்துகொள்வதற்கு நிதிக் கூற்றுக்களின் பயனாளிகளை இயலுமையாக்கும் நோக்கில் SLFRS 15 பண்புசார் மற்றும் அளவுசார் வெளிப்படுத்தல்களை வேண்டுகின்றது.

வருவாயினை எப்போது என்ன தொகையில் அங்கீகரிக்கவேண்டும் என்பதை தீர்மானிப்பதற்காக நிறுவனங்கள் ஐந்து-கட்ட மாதிரியினை பிரயோகிக்குமாறு வேண்டப்படுகின்றன. இம்மாதிரியானது எப்போது வருவாய் அங்கீகரிக்கப்படல் வேண்டும் அல்லது ஒரு நிறுவனம் பொருட்கள் மற்றும் சேவைகளது கட்டுப்பாட்டினை ஒரு வாடிக்கையாளருக்கு நிறுவனம் எதிர்பார்க்கும் உரிமையுள்ள தொகைக்கு மாற்றல் செய்யும்போது என குறிப்பிடுகின்றது.

### 3.4 உரிய மற்றும் திருத்தியமைக்கப்பட்ட நியமம் மற்றும் பொருள்விளக்கம்

இந்த நிதிக் கூற்றுக்களில் குழுமமானது பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களை பிரயோகித்துள்ளது SLFRS 9, LKAS 39, SLFRS 7, SLFRS 4 க்கான திருத்தங்கள், மற்றும் வட்டிவீத தரக்குறி சீர்திருத்தம், SLFRS 16 க்கான திருத்தங்கள் - கோவிட்-19 தொடர்புடைய வாடகைச் சலுகைகள் என்பன முதலாவது தடவையாக 1 ஜனவரி 2020 இல் அல்லது அதற்கு பின்னர் வருகின்ற வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதிகளின் நிதி அறிக்கையிடலுக்கு அமுலுக்கு வந்தது. குழுமமானது அமுலுக்கு வராத வேறு ஏதேனும் நியமத்தினை, பொருள்விளக்கத்தினை அல்லது திருத்தத்தினை முன்னரே அமுல்படுத்தவில்லை.

#### 3.4.1 SLFRS 9, LKAS 39, SLFRS 7, SLFRS 4 க்கான திருத்தங்கள்

வட்டி வீத தரக்குறி சீர்திருத்தத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்ட அனைத்து இடர்காப்பு உறவுமுறைகளுக்கு பிரயோகிக்கப்படும், பல்வேறு நிவாரணங்களை வழங்குவதற்காக LFRS 9 மற்றும் LKAS 39 க்கான திருத்தங்கள். இடர்காப்பு உறவுமுறையானது, இடர்காப்பிடப்பட்ட உறுப்படியின் அல்லது இடர்காப்பிடும் கருவியினது சீரமைப்பு தரக்குறி அடிப்படையிலான காசுப் பாய்ச்சல் நேரம் மற்றும் / அல்லது தொகை பற்றி உறுதியின்மையினை எழுப்பினால், பாதிக்கப்படுகின்றது.

IBOR சீர்திருத்தங்கள் கட்டம் 2

பல்வகையான நிவாரணங்களையும் மேலதிக வெளிப்படுத்தல்களையும் உள்ளடக்குகின்றது. சீர்திருத்தத்தின் காரணமாக ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களுக்கு அல்லது இடர்காப்பு உறவுமுறைகளுக்கான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்போது SLFRS இனை பிரயோகிப்பதில் கம்பனிகளுக்கு திருத்தங்கள் துணைபுரிகின்றன.

பல்வேறு நியமங்களுக்கான இந்த திருத்தங்கள் 1 ஜனவரி 2021 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடல் காலங்களுக்கு செல்லுபடியாகின்றது. இந்த திருத்தங்களின் விளைவாக அதன் நிதிக் கூற்றுக்களிலான சாத்தியமான தாக்கத்தினை கம்பனி மற்றும் குழுமம் தற்போது மதிப்பிடுகின்றது.

#### 3.4.2 SLFRS 16 இற்கான திருத்தங்கள் - கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகள்

கோவிட்-19 தொற்றின் நேரடி விளைவாக எழுகின்ற வாடகை சலுகைகளுக்கான குத்தகை திருத்தியமைத்தல் கணக்கீட்டிலான SLFRS 16 வழிகாட்டியினை பிரயோகிப்பதிலிருந்து குத்தகைக்கு எடுத்தவருக்கு இத்திருத்தங்கள் நிவாரணங்களை வழங்குகின்றன.

ஒரு நடைமுறை உபாயமாக, ஒரு குத்தகைதாரர் ஒரு குத்தகைக்கு விடுபவரிடமிருந்தான கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகையினை ஒரு குத்தகை திருத்தமாக மதிப்பீடு செய்யாமலிருப்பதற்கு தெரிவு செய்யலாம். இந்த தெரிவினை மேற்கொள்ளும் ஒரு குத்தகைதாரர், கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகையின் விளைவாக குத்தகைக் கொடுப்பனவுகளிலான ஏதேனும் மாற்றத்தினை கணக்கிலெடுத்தல் வேண்டும், இது SLFRS 16 இன் கீழான மாற்றங்களுக்கு, இம்மாற்றமானது ஒரு குத்தகை திருத்தமில்லாவிடின் கணக்கீடு செய்யும் அதே விதத்தில் மேற்கொள்ளப்படல்வேண்டும்.

இத்திருத்தங்கள் 01 ஜுன் 2020 இல் அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலங்களுக்கு பிரயோகிக்கப்படுகின்றது. இந்த திருத்தத்தின் முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. நிறுவனம் இந்த திருத்தத்தினை முன்னரே அமுல்படுத்தியிருந்தால் மேற்குறிப்பிட்ட வெளிப்படுத்தலானது நிகழவிருக்கும் வழக்கமான குறிப்பின் கீழ் உள்ளடக்கப்படலாகாது. அது “கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள் / புதிய மற்றும் வருடத்தில் கடைப்பிடிக்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட நியமங்கள்” குறிப்பில் பிரதிபலிக்கலாம். இந்த திருத்தத்தின் விளைவாக அதன் நிதிக் கூற்றுக்களிலான சாத்தியமான தாக்கத்தினை கம்பனி / குழுமமானது தற்போது மதிப்பிடுகின்றது.

### 3.5 நிதியியல் கருவிகள் - ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அதன்பின்னரான அளவீடு

#### 3.5.1 அங்கீகாரத்தின் திகதி

அனைத்து நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் “வழக்கமான வழியிலான வர்த்தகம்“ தவிர வர்த்தகத் தினத்தில் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன, அதாவது, கருவிகளின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு குழுவானது ஓர் தரப்பினராக வரும்போது. “வழக்கமான வழியிலான வர்த்தகம் “என்பது சந்தையில் ஒழுங்குவிதி அல்லது மரபுவழியாக நிறுவப்பட்ட கால எல்லையினுள் சொத்துக்களின் விநியோகம் தேவைப்படும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனை ஆகும். அந்த வர்த்தகங்கள் தீர்ப்பனவு திகதியில் ஆரம்பநிலையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

#### 3.5.2 நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அடுத்துவரும் அளவீடு

SLFRS 9 இன் பிரகாரம் அதன் அனைத்து நிதிச் சொத்துக்களை வணிக மாதிரியின் அடிப்படையில் வகைப்படுத்துவதுடன், சொத்துக்களின் முகாமைப்படுத்தல் மற்றும் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகள் பின்வருவனவற்றில் அளவீடு செய்யப்படுகின்றன

- பெறுமதி குறைப்புக் கிரயத்தில்
- ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் (ஏவிவநிபெ)
- இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் (இஅநநிபெ)

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

நிதிச் சொத்துக்களின் அடுத்துவரும் அளவீடானது அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

**வணிக மாதிரி மதிப்பீடு**
1 ஏப்ரல் 2018 முதல் குழுமமானது ஓர் வணிக மாதிரியின் குறிக்கோளில் ஓர் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. இங்கு சொத்தானது ஓர் கருவி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படாது ஓர் தேக்கத்தின் மட்டத்தில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. இது வணிகம் எவ்வாறு முகாமைப்படுத்தப்படுகின்றது மற்றும் தகவல் முகாமைத்திற்கு வழங்கப்படுகின்றது என்ற விதத்தினை சிறப்பாக பிரதிபலிப்பதனாலாகும். கருதப்பட்ட தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- தேக்கத்தின் கூறப்பட்ட கொள்கைகள் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் நடைமுறையில் அந்த கொள்கைகளின் செயற்பாடு. குறிப்பாக, முகாமைத்துவத்தின் மூலோபாயமானது பின்வருவனவற்றை முன்னிறுத்துகின்றதா என்று பார்க்கின்றது. ஒப்பந்த வட்டி வருவாயினை உழைத்தல், ஓர் குறிப்பிட்ட வட்டி வீத விவரத்தினை பராமரித்தல், நிதிச் சொத்துக்களது காலவெளியானது நிதிப் பொறுப்புக்களது காலவெளியுடன் பொருத்துதல். அந்த சொத்துக்களுக்கு நிதியளித்தல் அல்லது சொத்துக்களின் விற்பனையினூடாக காசுப் பாய்ச்சல்களை பெற்றுக் கொள்ளுதல்˙
- குழுமத்தின் முகாமைத்துவம் எவ்வாறு தேக்கத்தின் செயற்திறனை மதிப்பீடு மற்றும் அறிக்கையிடுகின்றது
- வணிக மாதிரியின் செயற்திறனை பாதிக்கும் இடர்நேர்கைகள் (மற்றும் அந்த வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்) மற்றும் எவ்வாறு அந்த இடர்நேர்கைகள் முகாமைப்படுத்துகின்றது
- எவ்வாறு வணிகத்தின் முகாமையாளர்கள் ஈடுசெய்யப்படுகின்றார்கள் - உதாரணமாக முகாமைப்படுத்தப்படும் சொத்துக்களது நியாயப் பெறுமதியின் அடிப்படையில் ஈடு காணப்படுகின்றதா அல்லது திரட்டப்பட்ட ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களில் மற்றும்
- முன்னைய காலப்பகுதியிலான விற்பனையின் நிகழ்வெண், பருமன் மற்றும் நேரங்கள், அத்தகைய விற்பனைகளுக்கான காரணிகள் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை பற்றிய அதன் எதிர்பார்ப்பு. எவ்வாறாயினும், விற்பனை நடவடிக்கை பற்றிய தகவலானது தனிமையில் கருதப்படாது, ஓர் ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஓர் அங்கமாக குழுமத்தின் கூறப்பட்ட குறிக்கோளானது நிதிச் சொத்தினை எவ்வாறு முகாமைப்படுத்தப்பட்டு அடையப்படுகின்றது மற்றும் எவ்வாறு காசுப் பாய்ச்சலானது பெறப்படுகின்றது.

வணிக மாதிரி மதிப்பீடானது நியாயமாக எதிர்பார்க்கப்படும் காட்சிநிலைகளின் அடிப்படையில் ““மோசமான நிலை“ அல்லது “அழுத்தமான நிலை“ ஆகியவற்றை கணக்கிலெடுக்காது மேற்கொள்ளப்படுகின்றது. குழுமத்தின் ஆரம்ப எதிர்பார்ப்புகளிலிருந்து மாறுபட்டு ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னரான காசுப் பாய்ச்சல்கள் பெறப்பட்டால் குழுமமானது வணிக மாதிரியினுள் வைத்திருக்கும் எஞ்சிய நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை மாற்றாது. ஆனால், முன்னோக்கி செல்லும்போது புதிதாக உருவாக்கப்பட்ட அல்லது கொள்வனவு செய்த நிதிச் சொத்துக்களை மதிப்பீடு செய்யும்போது அத்தகைய தகவல்களை ஒருங்கிணைக்கின்றது.

**ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டி கொடுப்பனவுகள் மாத்திரமா என்ற மதிப்பீடு (முவகொமா பரிசீலனை)**
குழுமமானது அதன் வகைப்படுத்தல் செயல்முறையின் இரண்டாவது கட்டமாக அவை முவகொமா பரிசீலனையினை சந்திக்கின்றதா என இனங்காண்பதற்காக ஒப்பந்த நியதிகளை மதிப்பீடு செய்கின்றது.

இந்த மதிப்பீட்டு நோக்கத்திற்காக “முதல்” என்பது ஆரம்ப அங்கீகாரத்தில் நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதி மற்றும் நிதிச் சொத்தின் வாழ்நாளில் மாற்றமடையலாம் என்ற வரைவிலக்கணத்தினை கொண்டுள்ளது (உதாரணமாக, முதலின் மீள்செலுத்தல் அல்லது வட்டம்/ கழிவின் பெறுமதி குறைப்பு).

ஓர் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலுவையிலுள்ள முதல் தொகையுடன் இணைக்கப்பட்டுள்ள கடன் இடர்நேர்கைக்காக மற்றும் பணத்திற்கான நேரப் பெறுமதிக்கான மறுபயன் என “வட்டி” வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. இவை ஏனைய அடிப்படை கடன் வழங்கல் இடர்நேர்கைகள் மற்றும் கிரயங்களுடன் இலாப வரம்பு ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

முரணாக, ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களில் இடர்நேர்கைகள் அல்லது தளம்பலுக்கு ஆகக்குறைந்த வெளிப்பாட்டிற்கும் அதிகமானவற்றை அறிமுகப்படுத்தும் ஒப்பந்த நியதிகள் அடிப்படை கடன் வழங்கல் ஏற்பாட்டுடன் தொடர்பற்று மற்றும் நிலுவையிலுள்ள முதல் தொகையில் முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் காணப்படும் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை உருவாக்குதல். அத்தகைய விடயத்தில், நிதிச் சொத்தானது இநநிபெ இல் அளவிடப்படல் வேண்டும்.

ஒப்பந்த காசுப் பாய்ச்சல்கள் நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மாத்திரமா என மதிப்பிடுவதில் குழுமமானது கருவியின் ஒப்பந்த நியதிகளை கருத்திலெடுக்கின்றது. இது நிதிச் சொத்தானது ஓர் ஒப்பந்த நியதியினை உள்ளடக்கியுள்ளதா என்ற மதிப்பீட்டினை அல்லது இந்த நிலையினை சந்திக்காத ஒப்பந்த காசுப் பாய்ச்சலின் நேரம் மற்றும் தொகையினை மாற்றலாம். இந்த மதிப்பீட்டினை மேற்கொள்வதில் குழுமமானது பின்வருவனவற்றை கவனத்திலெடுக்கின்றது. :

- காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் நேரத்தினை மாற்றக்கூடிய ஐயப்பாடான நிகழ்வுகள்
- கடன் மூலதன பண்புகள்
- முற்கொடுப்பனவு மற்றும் நீட்டல் நியதிகள்
- குறிப்பிட்ட சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கு குழுமத்தின் கோரல்களை கட்டுப்படுத்தும் நியதிகள் மற்றும்
- பணத்தின் நேரப்பெறுமதியின் பெறுகையின் மாற்றியமைக்கும் பண்புகள்

குழுமமானது நீண்டகால நிலையான வட்டிவீத கடன் தேக்கங்களை வைத்திருப்பதுடன், இவற்றில் குழுமமானது வட்டி வீதத்தினை காலாகால மீட்டமைப்பு திகதிகளில் திருத்தியமைப்பதனை முன்மொழிவதற்கான தெரிவினைக் கொண்டுள்ளது. இந்த மீட்டமைப்பு உரிமைகள் திருத்தியமைக்கப்படும்போதுள்ள சந்தை வட்டி வீதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கடன் பெற்றவர்கள் திருத்தியமைக்கப்பட்ட வட்டி வீதத்தினை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது ஏதேனும் தண்டமின்றி கடனை முகப்பெறுமதியில் மீட்டெடுப்பதற்கான தெரிவினை கொண்டுள்ளார்கள். இந்த கடன்களின் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டி கொடுப்பனவு மாத்திரம் என குழுமம் தீர்மானித்துள்ளது. ஏனெனில் தெரிவானது நிலுவையிலுள்ள முதல் தொகையுடன் இணைந்துள்ள ஏனைய அடிப்படை கடன் வழங்கல் இடர்நேர்கைகள் மற்றும் கிரயங்கள், கடன் இடர்நேர்கை, பணத்தின் நேரப்பெறுமதி என்பவற்றுக்கான பெறுகையிலான வட்டி வீதத்தினை மாற்றுவதனாலாகும்.

நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட வெவ்வேறு விதமான நிதிச் சொத்துக்களின் விபரங்கள்.

**பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்**
பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் சந்திக்கும் ஓர் நிதிச் சொத்தானது பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது மற்றும் இநநிபெ இல் குறிப்பிடப்படவில்லை:

- ஓர் வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் சொத்தானது அதன் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை திரட்டும் நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுகின்றது˙ மற்றும்
- நிதிச் சொத்தின் ஒப்பந்த நியதிகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சலை எழுப்புவதுடன் அவை நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டி கொடுப்பனவினை மாத்திரம் கொண்டிருந்தால்.

பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் பக்கங்கள் 248,249,251,267,269 மற்றும் 283 மதல் 293 வரை காணப்படும் குறிப்புகள் 22,23,25,26,28 மற்றும் 35 முதல் 41 வரை வழங்கப்பட்டுள்ளன.

**ஏவிவநிபெ இல் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்**
ஏவிவநிபெ இல் உள்ள நிதி சொத்துக்கள் கடன் மற்றும் உரித்துவ கருவிகளை உள்ளடக்குவதுடன் இவை நியாயப் பெறுமதியில் ஏனைய விரிவான வருமானத்தினூடாக அளவீடு செய்யப்படுகின்றன. ஏவிவநிபெ இல் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் பக்கம் 268 இலுள்ள குறிப்பு 27 இல் வழங்கப்பட்டுள்ளது

**இநநிபெ இல் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்**
SLFRS 9 இன் பிரகாரம், பெறுமதி குறைப்புக் கிரயத்தில் வகைப்படுத்தப்பட்ட அல்லது ஏவிவநிபெ இல் வகைப்படுத்தப்பட்டவை தவிர அனைத்து நிதிச் சொத்துக்களும் இநநிபெ இல் அளவிடப்படுவதாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் உள்ள நிதிச் சொத்துக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படும் அல்லது முகாமைப்படுத்தப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் அவற்றின் செயற்திறனானது நியாயப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது, ஏனெனில் இவை ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை திரட்டுவதற்காகவோ அல்லது ஒப்பந்த காசுப் பாயச்சல்களை திரட்டுவதற்கு வைத்திருக்கப்படாத மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கோ வைத்திருக்கப்படாதவை மற்றும் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் பக்கம் 249 இல் காணப்படும் குறிப்பு 24இல் கலந்துரையாடப்பட்டுள்ளன.

**இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்**
SLFRS 9 இன் பிரகாரம், ஆரம்ப அங்கீகாரத்தில் குழுவானது ஓர் நிதிச் சொத்தினை மாற்றவியலாதவாறு இநநிபெ இல் குறிப்பிட்டிருக்கலாம். இல்லையெனில் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அல்லது ஏவிவநிபெ இல் அளவிடுவதற்கான தேவைப்பாடுகளை சந்திந்திருக்கலாம், அத்தகைய குறிப்பிடலானது ஓர் கணக்கீட்டு பொருந்தாமையினை நீக்கலாம் அல்லது கணிசமானளவு குறைக்கலாம். இல்லையெனில் ஓர் வித்தியாசமான அடிப்படையில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை அல்லது இலாபங்கள் அல்லது நட்டங்களை அளவிடுவதிலிருந்து எழலாம்.

குழுமமானது அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் ஏதேனும் நிதிச் சொத்துக்களை ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் பெயரிடவில்லை.

### 3.5.3 நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களை அங்கீகாரத்திலிருந்து அகற்றுதல்

**நிதிச் சொத்துக்கள்**
ஒரு நிதிச் சொத்தானது (அல்லது பொருத்தமானவாறு ஒரு நிதிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துக்கள் குழுவின் பகுதி ) பின்வரும் சமயத்தில் அங்கீகார அகற்றல் செய்யப்படுகின்றது ;

- சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமையானது முடிவுற்றுள்ளது ;
- கம்பனி மற்றும் குழுமமானது சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான அதன் உரிமையினை மாற்றல் செய்திருந்தால் அல்லது ஓர் கடந்து-செல்லும் உடன்படிக்கையின் கீழ் ஓர் மூன்றாம் தரப்பிற்கு பொருண்மையான தாமதமின்றி பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்களை செலுத்துவதற்கான ஓர் கடப்பாட்டினை பொறுப்பேற்றிருந்தால்' மற்றும் இவற்றுள் ஒன்று
  - சொத்தின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை கம்பனி மற்றும் குழுமமானது கணிசமானளவு மாற்றல் செய்திருந்தால் அல்லது
  - கம்பனி மற்றும் குழுமமானது சொத்தின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவு மாற்றல் செய்யாத அல்லது தக்கவைக்காத, ஆனால் சொத்தின் கட்டுப்பாடு மாற்றல் செய்யப்பட்டுள்ளது.

ஒரு நிதிச் சொத்தின் அங்கீகார அகற்றலில், சொத்தின் கொண்டுசெல்லல் தொகைக்கும் (அல்லது மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் ஒரு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கொண்டுசெல்லல் தொகை) பெறப்பட்ட மறுபயனுக்கும் இடையேயான வித்தியாசம் மற்றும் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

கம்பனி அல்லது குழுமமானது ஒரு சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமையினை மாற்றல் செய்திருப்பின் அல்லது ஒரு கடந்து-செல்லல் உடன்படிக்கையில் ஈடுபட்டிருந்தால் மற்றும் சொத்தின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவு மாற்றல் செய்யாதிருந்தால் அல்லது தக்கவைத்திராதிருந்தால், அல்லது சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றல் செய்யாதிருந்தால், சொத்தில் கம்பனியின் மற்றும் குழுமத்தின் தொடர்ச்சியான ஈடுபாடு காணப்படும் அளவிற்கு சொத்தானது அங்கீகரிக்கப்படுகின்றது. அந்த சந்தர்ப்பத்தில் குழுமமானது ஒரு இணைந்த பொறுப்பினை அங்கீகரிக்கின்றது. மாற்றல் செய்யப்பட்ட சொத்தும் அதனுடனிணைந்த பொறுப்பும் குழுமம் தக்கவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளைப் பிரதிபலிக்கும் ஒரு அடிப்படையில் அளவீடு செய்யப்படுகின்றது.

மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் மீது ஓர் உத்தரவாத வடிவத்தினை எடுக்கும் தொடர்ச்சியான ஈடுபாடானது சொத்தின் ஆரம்ப கொண்டுசெல்லும் தொகையில் குறைந்தது எதுவோ மற்றும் குழுமத்தினால் மீள்செலுத்த வேண்டிய ஆகக்கூடிய மறுபயன் தொகையில் அளவிடப்படுகின்றது.

**நிதிப் பொறுப்புக்கள்**
பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் அல்லது முடிவுற்றால் ஓர் நிதிப் பொறுப்பானது அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றது. நடைமுறையிலுள்ள ஓர் நிதிப் பொறுப்பானது அதே கடன் வழங்குநரினால் கருதத்தக்க வேறு ஏற்பாட்டில் மாற்றீடு செய்யப்பட்டால் அல்லது நடைமுறையிலுள்ள ஓர் பொறுப்பானது கணிசமானளவு திருத்தியமைக்கப்பட்டால், அத்தகைய ஓர் பரிமாற்றல் அல்லது திருத்தமானது ஆரம்ப பொறுப்பு அங்கீகரிப்பிலிருந்து அகற்றப்பட்டு ஓர் புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்டுகின்றது. ஆரம்ப நிதிப் பொறுப்பின் கொண்டு செல்லல் பெறுமதிக்கும் செலுத்தப்பட்ட மறுபயனுக்கும் இடையேயான வித்தியாசமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது

### 3.5.4 நிதிக் கருவிகளின் ஈடுகட்டல்

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு தேறிய தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படும், இது காணப்பட்டால் மாத்திரம், தற்போது அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுகட்டுவதற்கான வலியுறுத்தத்தக்க சட்டரீதியான உரிமை காணப்படுவதுடன், ஓர் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான ஓர் நோக்கம் காணப்படுகின்றது அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை காசாக்கி பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்தல். பெரும் ஈடுகட்டல் ஏற்பாடுகளுடன் இது பொதுவாக காணப்படுவதில்லை, எனவே தொடர்புபட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் மொத்த அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

LKAS / SLFRS இன் கீழ் அனுமதிக்கப்பட்டால் மாத்திரமே வருமானம் மற்றும் செலவினங்கள் ஓர் தேறிய அடிப்படையில் முனினலைப்படுத்துகின்றது அல்லது ஒத்த கொடுக்கல் வாங்கல் குழுவிலிருந்து எழும், குழுமத்தின் வர்த்தக நடவடிக்கைகள் போன்றவை, இலாபங்கள் மற்றும் நட்டத்திற்கு.

### 3.5.5 நியாயப் பெறுமதியின் தீர்மானம்

அறிக்கையிடப்படும் திகதியில் துடிப்பான சந்தைகளில் வர்த்தகம் செய்யப்பட்ட நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதியானது ஏதேனும் கொடுக்கல் வாங்கல் கிரயத்தினை கழிக்காது அவற்றின் எடுத்துரைக்கப்பட்ட சந்தை விலை அல்லது வர்த்தகரது விலைக்குறிப்பின் (நீள் நிலைப்பாட்டிற்கு ஏற்பு விலை மற்றும் குறைவணிக நிலைப்பாட்டிற்கு கேட்பு விலை) அடிப்படையிலாகும்.

நிதிக் கருவிகளில் நியாயப் பெறுமதியிலான ஓர் பகுப்பாய்வு மற்றும் எவ்வாறு அவை அளவீடு செய்யப்படுகின்றன போன்ற மேலதிக தகவல்கள் பக்கம் 241 இல் காணப்படும் குறிப்பு 21 இல் வழங்கப்பட்டுள்ளது.

### 3.6 நிதியல்லாத சொத்துக்களின் வலுக்குன்றல்

ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் தவிர்ந்த குழுமத்தின் நிதியல்லாத சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் தினத்திலும் ஒரு சொத்தானது வலுக்குன்றலைடைந்துள்ளதாக ஒரு குறிகாட்டி காணப்படுகின்றதா என்று பார்ப்பதற்காக மீளாய்வு செய்யப்படுகின்றது. ஏதேனும் குறிகாட்டி தென்பட்டால், அல்லது ஒரு சொத்தின் வருடாந்த வலுக்குன்றல் சோதனை தேவைப்படின், குழுமமானது சொத்தின் மீட்கத்தக்க தொகையினை மதிப்பீடு செய்கின்றது. ஒரு சொத்தின் மீட்கத்தக்க பெறுமதியானது சொத்திய உயர்ந்த அல்லது காசு உருவாக்கும் அலகின் நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைச் செலவினம் மற்றும் பயன்பாட்டிலுள்ள அதன் பெறுமதி கழிக்கப்பட்டு வரும் தொகையாகும். ஒரு சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதி அல்லது காசு உருவாக்கும் அலகானது அதன் மிட்கத்தக்க தொகையினை விஞ்சியிருந்தால் சொத்தானது வலுக்குன்றியுள்ளதாக கருதப்பட்டு அதன் மீட்கத்தக்க பெறுமதிக்கு குறைத்தெழுதப்படுகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

பயன்பாட்டிலுள்ள பெறுமதியினை மதிப்பீடு செய்யும்போது, எதிர்பார்க்கும் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள், பணத்தின் நேரப் பெறுமதியின் நடைமுறை சந்தை மதிப்பீடுகள் மற்றும் சொத்திற்கான குறித்த இடர்நோக்கை என்பவற்றை பிரதபலிக்கும் வரிக்கு முந்திய ஓர் கழிவிறக்க வீதத்தினை பயன்படுத்தி அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்கு கழிவிறக்கம் செய்யப்படுகின்றன. விற்பனைச் செலவினத்தைக் கழித்து நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதில், ஓர் பொருத்தமான பெறுமதியிடல் மாதிரியானது பயன்படுத்தப்படுகின்றது. இந்த கணிப்பீடுகள் பெறுமதியிடல் பெருக்கங்களினால் ஆதரவளிக்கப்படுவதுடன், பொதுவாக வர்த்தகம் செய்யப்படும் துணைக்கம்பனியின் பங்குகளுக்கு சாற்றிய பங்கு விலையிலும்,அல்லது கிடைக்கக்கூடிய ஏனைய நியாயப் பெறுமதி குறிகாட்டிகளிலும் பெறுமதியிடப்படுகின்றது.

நன்மதிப்பு நீங்கலான சொத்துக்களுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட வலுக்குன்றல் நட்டங்கள் குறைந்துள்ளதா என்பதனை தீர்மானிப்பதற்காக ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய ஓர் குறிகாட்டி காணப்படுமாயின், குழுமமானது சொத்தின் அல்லது காசு உருவாக்கும் அலகுகளின் மீட்கக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது. முன்னர் அங்கீகரிக்கப்பட்ட வலுக்குன்றல் நட்டங்கள், இறுதியாக வலுக்குன்றல் நட்டம் அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து சொத்தின் மீட்கக்கூடிய தொகையினை தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அனுமானங்களில் ஏதேனும் மாற்றம் காணப்பட்டால் மாத்திரம் திருப்பப்படுகின்றது. இத்திருப்பலானது சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதி அதன் மீட்கக்கூடிய தொகையினை விஞ்சாதிருத்தல், அல்லது பெறுமானத்தேய்வு / பெறுமிதகுறைப்பு நிகர்செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்ட கொண்டுசெல்லல் தொகையினை விஞ்சியிருத்தலாகாது, முன்னைய ஆண்டுகளில் சொத்திற்கு எவ்விதமான வலுக்குன்றல் நட்டங்களும் அங்கீகரிக்கப்படவில்லை என்பதற்கு வரையறை செய்யப்பட்டுள்ளது. அத்தகை திருப்பலானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 3.7 ஏற்பாடுகள்

ஓர் ஏற்பாடானது நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. இது குழுமமானது ஓர் கடந்த நிகழ்வின் விளைவாக ஓர் (சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான) கடப்பாட்டினை கொண்டிருக்கும்போது மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களின் ஓர் வெளிப்பாய்ச்சல் தேவைப்படும் என்று நிகழக்கூடும் என்று கருதினால் அங்கீகரிக்கப்படுகின்றது. கடப்பாட்டின் தொகையானது இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 37 – 'ஏற்பாடுகள், ஐயப்பாடான பொறுப்புக்கள் மற்றும் வருநிகழ்வு சொத்துக்கள்' இன் பிரகாரம் நம்பகமாக மதிப்பீடு செய்யலாம். நிதி நிலைமைக் கூற்று தினத்தில் தற்போதைய கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்காக தேவைப்படும் தொகையின் சிறந்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்ட தொகையாக காணப்படுகின்றது. இதற்கு அந்த திகதியில் கடப்பாட்டினை சூழ்ந்து காணப்படும் இடர்நோக்கைகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் கணக்கிலெடுக்கப்படுகின்றன. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஏதேனும் செலவீடு நிகர் செய்யப்பட்டு முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

### 3.8 கடன் பெறுகைக் கிரயங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 23 "கடன் பெறுகைக் கிரயம்" இன் பிரகாரம் குழுமமானது கையகப்படுத்தல், கட்டுமானம், அல்லது சொத்தின் கிரயத்தின் ஒரு பகுதியாக தகமையுள்ள சொத்தின் உற்பத்திக்கு நேரடியாக உடையாக்கத்தக்கவையாகும். ஓர் தகமையுடைய சொத்தென்பது அதன் நோக்குடைய பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு கணிசமானளவு காலத்தை எடுக்கும் சொத்தாகும். ஏனைய கடன் பெறுகைக் கிரயங்கள் அவை ஆட்படும் காலங்களில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

GRI | 207-1, 207-2, 207-4

### 3.9 வருமான வரி

"வருமான வரிச் செலவினத்தின்" விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 235 இல் காணப்படும குறிப்பு 17 இல வழங்கப்பட்டுள்ளது

GRI | 207-1, 207-2, 207-4

### 3.10 ஒத்திவைக்கப்பட்ட வரி

"ஒத்திவைக்கப்பட்ட வரி" இனது விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 297 இல் காணப்படும் குறிப்பு 44 இல் காணப்படுகின்றது.

### 3.11 பயிர் காப்புறுதி கட்டணம் (ப.கா.க.)

2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 இன் ஏற்பாடுகளுக்கமைய, ப.கா.க. ஆனது 1 ஏப்ரல் 2013 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். தற்போது வரிக்கு பிந்திய இலாபத்தில் 1% ப.கா.ப. ஆக செலுத்தப்படல் வேண்டும்.

### 3.12 நிதிச் சேவைகளிலான வரி

பெ.சே.வ., தே.க.வ. மற்றும் நிதிச் சேவைகளிலான கடன் மீள்செலுத்துகை கட்டணம் என்பவற்றின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 234 இல் காணப்படும் குறிப்பு 16 இல் வழங்கப்பட்டுள்ளது.

## 4. வழங்கப்பட்ட நியமங்கள் ஆனால் அமுலுக்கு வராதவை

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பொருள்விளக்கங்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்டதுடன் 31 மார்ச் 2022 இல் இன்னமும் அமுலுக்கு வரவில்லை. இதன்பிரகாரம், இந்த கணக்கீட்டு நியமங்கள் 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பிரயோகிக்கப்படவில்லை. பின்வரும் திருத்தங்கள் எதிர்வரும் காலங்களில் கம்பனி / குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில் ஒரு பொருண்மையான தாக்கத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கவில்லை.

**SLFRS 17 காப்புறுதி ஒப்பந்தங்கள்**

SLFRS 17 பின்வருவனவற்றை உள்ளடக்கும் காப்புறுதி ஒப்பந்தங்களுக்கான ஓர் விரிவான புதிய கணக்கீட்டு நியமமாகும். இது அங்கீகாரம் மற்றும் அளவீடு, முன்னிலைப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்தல் என்பனவாகும். அமுலுக்கு வரும்போது, SLFRS 17 IFRS 4 காப்புறுதி ஒப்பந்தங்களை மாற்றீடு செய்யும். SLFRS 17 அனைத்து வகையான காப்புறுதி ஒப்பந்தக்களுக்கும் (ஆயுள், ஆயுளல்லாதவை, நேரடி காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி) அதனை வழங்கும் நிறுவனங்களை பொருட்படுத்தாது செல்லுபடியாகும். அத்துடன் சில உத்தரவாதங்கள் மற்றும் நிதிக் கருவிகள் விருப்புரிமையான பங்குபற்றல் அம்சங்களைக் கொண்டுள்ளன.

SLFRS 17 01 ஜனவரி 2023 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பமாகும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலங்களுக்கு நடைமுறைக்கு வரும். நிறுவனமானது இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 9 "நிதிக் கருவிகள்" மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 15 "வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருவாய்" ஆகிய இரண்டையும் பிரயோகித்திருந்தால் அது முதற் தடவையாக SLFRS 17 இனை பயன்படுத்தும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் முன்பாகவே பிரயோகம் அனுமதிக்கப்படும்.

**SLFRS 1 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் முதற்தடவை கடைப்பிடித்தல் - துணைக்கம்பனி முதற்தடவை கடைப்பிடிப்பவராக**

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகமானது SLFRS நியமங்களின் செய்கைமுறைக்கான அதன் 2018-2020 வருடாந்த மேம்படுத்தல்களின் ஒரு பகுதியாக சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களின் SLFRS 1 இற்கான முதற்தடவை கடைப்பிடித்தலுக்கு ஒரு திருத்தத்தினை வழங்கியது (SLFRS 1). திருத்தமானது SLFRS 1 இன் பந்தி D16 (a) இனை பிரயோகிப்பதற்கு தெரிவு செய்யும் ஒரு துணை நிறுவனத்தினை, SLFRS இற்கான தாய் நிறுவனத்தின் நிலைமாற்றல் திகதியின் அடிப்படையில் தாய் நிறுவனத்தினால் அறிக்கையிடப்பட்ட தொகைகளை பயன்படுத்தி திரண்ட பரிமாற்றல் வித்தியாசத்தினை அளவிடுவதற்கு அனுமதிக்கின்றது. இந்த திருத்தமானது SLFRS 1 இன் பந்தி D16 (a) இனை பிரயோகிப்பதற்கு தெரிவுசெய்யும் ஒரு இணை நிறுவனத்திற்கு அல்லது கூட்டு முயற்சிக்கும் பிரயோகிக்கப்படுகின்றன.

இத்திருத்தமானது 1 ஜனவரி 2022 இல் அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடல் காலங்களுக்குச் செல்லுபடியாவதுடன், முன்னராக கடைப்பிடித்தல் அனுமதிக்கப்படுகின்றது.

**SLFRS 9 நிதிக் கருவிகள் – நிதிப் பொறுப்புக்களின் அங்கீகார அகற்றலுக்கான "10 சதவீத" கட்டணப் பரிசோதனை**

SLFRS நியமங்கள் செய்கைமுறையின் 2018-2020 வருடாந்த மேம்பாடுகளின் ஒரு பகுதியாக, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகமானது SLFRS 9 நிதிக் கருவிகளுக்கு ஒரு திருத்தத்தினை வழங்கியது (SLFRS 9). இத்திருத்தமானது ஒரு புதிய அல்லது திருத்தப்பட்ட நிதிப் பொறுப்பானது ஆரம்ப நிதிப் பொறுப்பின் நியதிகளிலிருந்து கணிசமானளவு வித்தியாசப்படுகின்றதா என்பதை மதிப்பிடுவதில் ஒரு நிறுவனம் உள்ளடக்கும்

கட்டணத்தினை தெளிவுபடுத்துகின்றது. இந்த கட்டணங்கள் மற்றவரின் சார்பில் கடன்பெற்றவரால் அல்லது கடன் வழங்கியவரால் செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட கட்டணங்கள் உள்ளடங்கலாக கடன் பெற்றவர் மற்றும் கடன் வழங்கியவர்களிடையே செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்டவற்றை மாத்திரம் உள்ளடக்குகின்றது. திருத்தத்தினை முதன்முறையாக பிரயோகித்த வருடாந்த அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் ஆரம்பத்தில் அல்லது அதற்கு பின்னர் திருத்தப்படும் அல்லது பரிமாற்றம் செய்யப்படும் நிதிப் பொறுப்புக்களுக்கு ஒரு நிறுவனம் திருத்தத்தினை பிரயோகிக்கின்றது.

**SLFRS 3 இற்கான திருத்தங்கள்**

இத் திருத்தங்கள் SLFRS 3 இனை இற்றைப்படுத்துவதுடன், அதன் மூலம் இது 1989 இன் வரம்புறுகைக்கு பதிலாக 2018 கருத்துவடிவ வரம்புறுகையினை குறிப்பிடுகின்றது. அவர்கள் SLFRS 3 இற்கு ஒரு தேவைப்பாட்டினை சேர்ப்பதுடன், LKAS 37 இன் நோக்கெல்லையினுள்ளான கடப்பாடுகளுக்காக, கடந்த நிகழ்வுகளின் விளைவாக கையகப்படுத்தல் தினத்தில் ஒரு நடைமுறை கடப்பாடு காணப்படுகின்றதா என்று தீர்மானிப்பதற்காக ஒரு கையகப்படுத்துபவர் LKAS 37 இனை பிரயோகிக்கின்றார். IFRIC 21 கட்டணங்களின் நோக்கெல்லையினுள் காணப்படும் ஒரு கட்டணத்திற்கு கையகப்படுத்துபவர், கையகப்படுத்தல் திகதியளவில் கட்டணத்தினை செலுத்துவதற்கான ஒரு பொறுப்பினை கடப்பாட்டு நிகழ்வானது எழுப்புமா என்று தீர்மானிப்பதற்காக IFRIC 21 இனை பிரயோகிக்கின்றார். இறுதியாக, திருத்தங்கள் ஒரு வணிக கலவையில் கையகப்படுத்தப்பட்ட ஐயப்பாடான சொத்துக்களை ஒரு கையகப்படுத்துபவர் அங்கீகரிக்கப்பதில்லை என்ற வெளிப்படையான ஒரு கூற்றினை சேர்க்கின்றது.

இந்தத் திருத்தங்கள் வணிகப் பிணைப்புகளுக்கு பயன்படுத்தப்படும். இவை கையகப்படுத்தல் திகதி, 01 ஜனவரி 2022 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் முதலாவது வருடாந்த காலப்பகுதியில் அல்லது அதற்கு பின்னர் இடம்பெற்றிருந்தால். நிறுவனம் அனைத்து இற்றைப்படுத்தப்பட்ட குறிப்புகளை அதேசமயத்தில் அல்லது முன்னதாக (இற்றைப்படுததப்பட்ட கருத்துவடிவ வரம்புறுகையுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தால்) பிரயோகித்திருந்தால் முன்னரான பிரயோகம் அனுமதிக்கப்படும். கம்பனி / குழுமமானது தற்போது அதன் நிதிக் கூற்றுக்களில் இந்த திருத்தத்தின் விளைவிலிருந்து எழும் சாத்தியமான தாக்கத்தினை மதிப்பீடு செய்கின்றது.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்: கருதப்படும் பயன்பாட்டிற்கு முன்னரான வருவாய் - LKAS 16 இற்கான திருத்தங்கள்**

மார்ச் 2021 இல் இலங்கை ப.க. நிருவகம் LKAS 16 இற்கான திருத்தங்களை - ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் - கருதப்படும் பயன்பாட்டிற்கு முன்னரான வருவாய், கடைப்பிடித்தது. இது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஒரு உருப்படியின் கொள்விலையிலிருந்து, அந்தச் சொத்தினை இடத்திற்கு கொண்டுவரும்போது மற்றும் முகாமைத்துவத்தினால் கருதப்பட்ட விதத்தில் செயலாற்றும் ஆற்றலுக்கு அவசியமான நிலை என்பவற்றின்போது உருவாக்கப்பட்ட உருப்படிகளை விற்பனை செய்வதிலிருந்து கிடைக்கும் ஏதேனும் வருவாயினை நிறுவனங்கள் கழிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. பதிலாக, ஓர் நிறுவனம் அத்தகைய உருப்படிகளின் விற்பனையிலிருந்தான வருவாய் மற்றும் அந்த உருப்படிகளை உற்பத்தி செய்வதற்கான செலவினம் ஆகியவற்றை இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரித்தல் வேண்டும்.

இந்த திருத்தமானது 01 ஜனவரி 2020 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடும் காலங்களுக்கு பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன் நிறுவனம் முதலாவதாக இத்திருத்தத்தினை பிரயோகிக்கும்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள முன்னரான காலப்பகுதியின் ஆரம்பத்தில் அல்லது அதற்கு பின்னர் பயன்பாட்டிற்கு கிடைக்கும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் உருப்படிகளுக்கு பின்னோக்கிய முறையில் பிரயோகித்தல் வேண்டும். கம்பனி / குழுமமானது இந்த திருத்தங்களின் விளைவாக நிதிக் கூற்றில் எழக்கூடிய சாத்தியமான தாக்கத்தினை தற்போது மதிப்பீடு செய்கின்றது.

**கடினமான ஒப்பந்தங்கள் – ஓர் ஒப்பந்தத்தினை நிறைவேற்றும் கிரயங்கள் – LKAS 37 இற்கான திருத்தங்கள்**

மார்ச் 2021 இல் இலங்கை ப.க. நிருவகம் LKAS 37 இற்கான திருத்தங்களை அமுலாக்கியது. இது ஓர் ஒப்பந்தம் கடினமானதா அல்லது நட்டம் ஈட்டுமா என்பதை மதிப்பீடு செய்யும்போது ஓர் நிறுவனம் எந்த செலவினங்களை உள்ளடக்க வேண்டும் என்று குறிப்பிடுவதற்காகும்.

இத்திருத்தங்கள் “ நேரடியாக தொடர்புடைய கிரய அணுகுமுறை” இனை பிரயோகிக்கின்றது. பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கான ஓர் ஒப்பந்தத்திற்கு நேரடியாக தொடர்புடைய கிரயங்கள், நுண்மாற்ற கிரயங்கள் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகளுடன் தேநரடியாக தொடர்புடைய கிரயங்கள் இரண்டையும் உள்ளடக்கும். பொதுவான மற்றும் நிர்வாகச் செலவுகள் ஓர் ஒப்பந்தத்துடன் நேரடியாக தொடர்புபடாததுடன் அவை எதிர்தரத்தவர் ஒப்பந்தத்தின் கீழ் வெளிப்படையாக விதிக்கத்தக்கதாய் இருந்தால் மாத்திரமே தவிர்க்கப்படலாம்.

இத் திருத்தங்கள் 1 ஜனவரி 2022 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடும் காலங்களுக்கு பயன்படுத்தப்படும். குழுமமானது திருத்தங்களை முதற்தடவையாக பிரயோகிக்கும் வருடாந்த அறிக்கையிடும் காலத்தின் ஆரம்பத்தில் அதன் அனைத்து கடப்பாடுகளை இன்னமும் நிறைவேற்றாத ஒப்பந்தங்களுக்கு இந்த திருத்தங்களை பிரயோகிக்கும். கம்பனி / குழுமமானது இந்த திருத்தங்களின் விளைவாக அதன் நிதிக் கூற்றுக்களில் எழும் சாத்தியமான தாக்கங்களை தற்போது மதிப்பீடு செய்கின்றது.

**LKAS 1 இற்கான திருத்தங்கள் : பொறுப்புக்களை நடைமுறை அல்லது நடைமுறையல்லாதவை என வகைப்படுத்தல்**

மார்ச் 2021 இல் இலங்கை ப.க. நிருவகம் LKAS 1 இன் பந்திகள் 69 முதல் 76 வரைக்குமான திருத்தங்களை அமுல்படுத்தியது. இது பொறுப்புக்களை நடைமுறை அல்லது நடைமுறையல்லாதவை என வகைப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளை குறிப்பிடுகின்றது. இத்திருத்தங்கள் பின்வருவனவற்றை தெளிவாக்குகின்றது:

- தீர்ப்பனவினை ஒத்திவைப்பதற்கான உரிமை என்பதன் பொருள் என்ன
- அறிக்கையிடும் காலத்தின் இறுதியில் ஒத்திவைப்பதற்கான உரிமை காணப்படல் வேண்டும்.
- ஒரு நிறுவனம் அதன் ஒத்திவைப்பதற்கான உரிமையினை பயன்படுத்துவதற்கான நிகழ்வியல்பினால் அந்த வகைப்படுத்தலானது பாதிப்படையாது.
- ஒரு மாற்றக்கூடிய பொறுப்பில் காணப்படும் ஒரு பொதிந்துள்ள மூலாதாரமானது அது ஒரு உரித்துவ கருவியாயிருந்தால் ஒரு பொறுப்பின் நியதிகள் அதன் வபைப்படுத்தலை பாதிக்குமா.

இந்த திருத்தங்கள் 1 ஜனவரி 2022 இல் அல்லது அதற்கு பின்னராக ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலத்திற்கு செல்லுபடியாகும் என்பதுடன் அது பின்னோக்கிய விதத்தில் பிரயோகிக்கப்படல் வேண்டும். கம்பனி / குழுமமானது தற்போது அதன் நிதிக் கூற்றுக்களில் இந்த திருத்தத்தின் விளைவிலிருந்து எழும் சாத்தியமான தாக்கத்தினை மதிப்பீடு செய்கின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 5. மொத்த வருமானம்

**கணக்கீட்டுக் கொள்கை**

வருமானமானது, கம்பனி / குழுமத்திற்கு பொருளாதார நலன்கள் பாயும் என்ற சாத்தியமான அளவிற்கு மற்றும் வருவாயானது நம்பகத்தன்மையுடன் அளவீடுசெய்யப்படலாம் என்றபோது அங்கீகரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வகையான வருமானத்திற்கும் குறிப்பிட்ட அங்கீகார வரன்முறையானது அந்தந்த வருமான குறிப்புகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 6.1 | 225 | 23,881,526 | 24,983,445 | 25,926,792 | 26,821,838 |
| தேறிய உழைக்கப்பட்ட தவணைப்பணம் | 7 | 226 | - | - | 4,939,071 | 5,028,549 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 8 | 227 | 1,876,524 | 1,818,675 | 1,321,513 | 1,198,054 |
| நிதிச் சொத்துக்களிலான இலாபங்கள் /(நட்டங்கள்) - இநஇபெ | 9 | 228 | 26,783 | 162,616 | 86,525 | 228,258 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 10 | 228 | 956,547 | 139,062 | 357,085 | 368,566 |
| மொத்தம் | | | 26,741,380 | 27,103,798 | 32,630,986 | 33,645,265 |

## 6. தேறிய வட்டி வருமானம்

**கணக்கீட்டுக் கொள்கை**

**வருமானம் மற்றும் செலவினங்களின் அங்கீகாரம்**

வருமானமானது, குழுமத்திற்கு பொருளாதார நலன்கள் பாயும் என்ற சாத்தியமான அளவிற்கு மற்றும் வருவாயானது நம்பகத்தன்மையுடன் அளவீடுசெய்யப்படலாம் என்றபோது அங்கீகரிக்கப்படுகின்றது.

**வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள்**

பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படும் அனைத்து நிதியியல் கருவிகளுக்கு வட்டி வருமானம் அல்லது செலவினம் விளைவுறு வட்டி வீதத்தினை (விவவீ) பயன்படுத்தி பதிவுசெய்யப்படுகின்றன. விவவீ என்பது நிதியியல் கருவியின் எதிர்பார்க்கும் வாழ்நாளூடாக அல்லது ஓர் குறுகிய காலத்திற்கு எதிர்பார்க்கும் எதிர்கால காசுப் கொடுப்பனவுகள் அல்லது பெறுகைகளை துல்லியமாக கழிவிறக்கம் செய்யும் வீதமாகும். பொருத்தமானவிடத்து நிதிச் சொத்தின் அல்லது நிதிப் பொறுப்பின் தேறிய கொண்டு செல்லல் தொகைக்குமாகும். கணிப்பீடானது நிதிக் கருவியின் அனைத்து ஒப்பந்த நியதிகளையும் கணக்கிலெடுப்பதுடன் (உதாரணமாக முன்கொடுப்பனவு தெரிவுகள்) மற்றும் கருவிக்கு நேரடியாக உடைமையாக்கத்தக்க ஏதேனும் கட்டணங்கள் அல்லது நுண்மாற்ற கிரயங்களை உள்ளடக்குவதுடன் மற்றும் விவவீ இன் ஓர் ஒருங்கிணைந்த பாகமாயிருத்தல் ஆனால் எதிர்கால நட்டங்கள் காணப்படலாகாது.

குழுமமானது அதன் கொடுப்பனவுகள் அல்லது பெறுகைகளின் மதிப்பீடுகளை திருத்தியமைத்தால் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்து அல்லது நிதிப் பொறுப்பின் தொகையானது திருத்தியமைக்கப்படும். திருத்தியமைக்கப்பட்ட கொண்டு செல்லல் தொகையானது ஆரம்பு விவவீ இன் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுவதுடன் கொண்டு செலல்லப்படும் தொகையிலான மாற்றம் நிதிச் சொத்திற்கு "வட்டி வருமானமாகவும்" நிதிப் பொறுப்பிற்கு "வட்டிச் செலவினமாகவும் " பதிவுசெய்யப்படுகின்றது. எவ்வாறாயினும். ஓர் மீள்வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்திற்கு கம்பனி பின்னர் அதன் எதிர்கால காசுப் பெறுகைகளின் மதிப்பீடுகளை அதிகரித்தால், அந்த காசுப் பெறுகைகளில் மீட்டெடுக்கும் திறன் அதிகரித்தால், அந்த அதிகரிப்பின் விளைவு மதிப்பீட்டின் மாற்றம் ஏற்பட்ட திகதியிலிருந்து விவவீ இற்கான ஓர் செம்மையாக்கலாக அங்கீகரிக்கப்படுகின்றது.

SLFRS 9 இன் கீழ் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட அனைத்து நிதிச் சொத்துக்களுக்கு மற்றும் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட அனைத்து நிதிப் பொறுப்புக்களுக்கு முறையே வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவினம் என்பன விளைவுறு வட்டி வீத முறையினை பயன்படுத்தி பதிவு செய்யப்படுகின்றன.

வருவாயானது கொடுக்கல் வாங்கலுடன் இணைந்த பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு பாயும் சாத்தியம் காணப்படும்போது மாத்திரமே அங்கீகரிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், மீட்பாற்றல் பற்றிய நிச்சயமற்றதன்மை எழும்போது வருவாய் அங்கீகாரமானது நிறுத்தப்படல் வேண்டும். SLFRS 9 - "நிதியியல் கருவி" இன் அமுலாக்கத்துடன் வாடிக்கையாளர் தவறுதல் புள்ளியானது (மீட்பாற்றல் பற்றிய நிச்சயமற்றதன்மை) 90நாட்கள் கடந்துள்ளதாக மாற்றப்படுகின்றது. இதற்கமைய, வட்டி வருமானமானது 90 நாட்கள் காலம் கடந்த அளவுக்கு மாத்திரம் அங்கீகரிக்கப்படலாம்.

**தவணை கடந்த வாடகைகளிலான வட்டி**

தவணை கடந்த வாடகைகளிலிருந்தான வட்டி ஓர் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | 6.1 | 225 | 23,881,526 | 24,983,445 | 25,926,792 | 26,821,838 |
| வட்டிச் செலவினங்கள் | 6.2 | 225 | 10,832,186 | 13,064,310 | 11,205,126 | 13,375,197 |
| தேறிய வட்டி வருமானம் | | | 13,049,340 | 11,919,135 | 14,721,666 | 13,446,641 |

### 6.1 வட்டி வருமானம்

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | | | 159,743 | 73,753 | 176,533 | 103,501 |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான மீதிகள் | | | 443,816 | 340,778 | 587,209 | 471,229 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் | 6.1.1 | 225 | 22,633,122 | 24,190,261 | 24,170,060 | 25,589,345 |
| கடன் கருவி - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் | | | 644,845 | 378,653 | 992,990 | 657,763 |
| மொத்த வட்டி வருமானம் | | | 23,881,526 | 24,983,445 | 25,926,792 | 26,821,838 |

### 6.1.1 வட்டி வருமானம் - கடன்கள் மற்றும் வருமதிகள்

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|
| வருமதியான குத்தகை / இஜாரா | 12,449,735 | 14,176,359 | 12,453,101 | 14,178,588 |
| வருமதியான வாடகைக் கொள்வனவு / முரபஹா | 1,628 | 5,479 | 791,468 | 823,834 |
| தவணைக் கடன்கள் மற்றும் வருமதிகள் | 10,181,759 | 10,008,423 | 10,925,491 | 10,586,923 |
| | 22,633,122 | 24,190,261 | 24,170,060 | 25,589,345 |

### 6.2 வட்டிச் செலவினங்கள்

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | பக்க எண். | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 6.2.1 | 226 | 903,595 | 671,106 | 1,117,531 | 949,639 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 6.2.1 | 226 | 7,802,922 | 10,228,458 | 8,057,701 | 10,316,632 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 6.2.1 | 226 | 1,875,532 | 1,935,761 | 1,859,429 | 1,916,991 |
| SLFRS 16-அதிகரிப்பான கடன் பெறுகைக் கிரயம் | 40 | 292 | 250,137 | 228,985 | 170,465 | 191,935 |
| மொத்த வட்டிச் செலவினங்கள் | | | 10,832,186 | 13,064,310 | 11,205,126 | 13,375,197 |

## 6. தேறிய வட்டி வருமானம் தொடர்ச்சி...

### 6.2.1 வட்டிச் செலவினங்கள் - கருவிவாரியாக

| | | | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|---|
| மாரச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | | பக்க | 2022 | 2021 | 2022 | 2021 |
| | குறிப்பு | எண் | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | | | | | | |
| வங்கி மேலதிகப்பற்றிலான வட்டி | | | 1,027 | 1,272 | 34,866 | 25,769 |
| குறுங்கால கடன்களிலான வட்டி | | | - | 14,963 | 11 | 16,372 |
| தவணைக் கடன்களிலான வட்டி | | | 235,166 | 4,980 | 415,253 | 257,608 |
| பிணையங்களாக்குதலிலான வட்டி | | | 667,402 | 649,891 | 667,401 | 649,890 |
| துணை மொத்தம் | | | 903,595 | 671,106 | 1,117,531 | 949,639 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | | | | | | |
| வைப்புகளிலான வட்டிக் கிரயம் | | | 7,802,922 | 10,228,458 | 8,057,701 | 10,316,632 |
| துணை மொத்தம் | | | 7,802,922 | 10,228,458 | 8,057,701 | 10,316,632 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | | | | | | |
| தொகுதிக் கடன்களிலான வட்டி | 37.1 | 287 | 1,875,532 | 1,935,761 | 1,859,429 | 1,916,991 |
| துணை மொத்தம் | | | 1,875,532 | 1,935,761 | 1,859,429 | 1,916,991 |
| செயற்பாட்டு குத்தகைப் பொறுப்புக்கள் | | | | | | |
| SLFRS 16-அதிகரிக்கும் கடன்பெறல் கிரயம் | | | 250,137 | 228,985 | 170,465 | 191,935 |
| துணை மொத்தம் | | | 250,137 | 228,985 | 170,465 | 191,935 |
| | | | | | | |
| மொத்த வட்டிச் செலவினங்கள் | | | 10,832,186 | 13,064,310 | 11,205,126 | 13,375,197 |

## 7. தேறிய உழைத்த காப்புறுதித் தவணைக்கட்டணம்

**கணக்கீட்டுக் கொள்கை**

**காப்புறுதி மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்களின் கருவி வகைப்படுத்தல்.**

SLFRS 4 - “காப்புறுதி ஒப்பந்தங்கள்” மாற்றல் செய்யப்பட்ட காப்புறுதி இடர்நேர்கையின் மட்டத்தில் சார்ந்து காப்புறுதியாளரினால் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் ஒன்றில், "காப்புறுதி ஒப்பந்தங்கள்" அல்லது "முதலீட்டு ஒப்பந்தங்கள்" என வகைப்படுத்தும் தேவை காணப்படுகின்றது

காப்புறுதி ஒப்பந்தங்கள் பின்வருமாறு விளக்கப்படுகின்றது. ஒப்பந்தங்களில் குழுமமானது (காப்புறுதியானர்) மற்றுமோர் தரப்பிடமிருந்து (காப்புறுதியுறுநர்கள்) குறிப்பிடத்தக்க காப்புறுதி இடர்நேர்கையினை காப்புறுதியுறுநர்களுக்கு இழப்பீடு செய்வதற்கு இணங்குவதன் மூலம் ஏற்றுக்கொண்டுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வு (காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு) காப்புறுதியுறுநர்களை மோசமாக பாதித்திருந்தாலாகும். ஒரு பொதுவான வழிகாட்டியாக, குழுமமானது, காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு இடம்பெறாவிட்டால், செலுத்தப்பட்ட நலன்களை செலுத்தவேண்டிய நலன்களுடன் ஒப்பிடுவதன் மூலம் அது குறிப்பிடத்தக்களவு இடர்நேர்கையினைக் கொண்டுள்ளதா என தீர்மானிக்கின்றது. காப்புறுதி ஒப்பந்தங்கள் நிதியியல் இடர்நேர்கையினையும் மாற்றல் செய்யலாம்.

முதலீட்டு ஒப்பந்தங்கள் என்பன குறிப்பிடத்தக்களவு நிதியியல் இடர்நேர்கையினை மாற்றல் செய்யும் ஒப்பந்தங்கள் மற்றும் இவை எவ்விதமான குறிப்பிடத்தக்க காப்புறுதி இடர்நேர்கையினையும் கொண்டிருப்பதில்லை. நிதியியல் இடர்நேர்கை என்பது பின்வருவனவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதில் சாத்தியமான எதிர்கால மாற்றல் ஏற்படக்கூடிய இடர்நேர்கையாகும், குறிப்பிட்ட வட்டி வீதம், நிதியியல் கருவியின் விலை, பண்டங்களின் விலை, வெளிநாட்டு நாணயமாற்று வீதம், விலை அல்லது வட்டிகளின் சுட்டி, கடன் தரப்படுத்தல் அல்லது கடன் சுட்டி அல்லது ஏனைய மாறிகள் என்பவையாகும். இது நிதியல்லாத மாறிகளைப் பொறுத்தளவில் அந்த மாறியானது ஒப்பந்தத்தின் ஒரு தரத்தவருக்கு குறிப்பிட்டு காணப்படலாகாது

ஒரு ஒப்பந்தம் ஓர் காப்புறுதி ஒப்பந்தமாக வகைப்படுத்தப்பட்டவுடன், அதன் எஞ்சிய வாழ்நாட்களுக்கு காப்புறுதி ஒப்பந்தமாகவே காணப்படும். இது அனைத்து உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் அழிக்கப்பட்டால் அல்லது முதிர்வடைந்தாலொழிய, இந்தக் காலப்பகுதியில் காப்புறுதி இடர்நேர்கை குறைவடைந்தாலும் காப்புறுதி ஒப்பந்தமாகவே காணப்படும். எவ்வாறாயினும், முதலீட்டு ஒப்பந்தங்கள் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் அவற்றிலான காப்புறுதி இடர்நேர்கைகள் கணிசநிலைக்கு வந்தால் காப்புறுதி ஒப்பந்தங்களாக மீள்வகைப்படுத்தப்படும்..

பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி (பீ.லீ.க. இன் துணைக்கம்பனி) இனால் விற்பனை செய்யப்படும் அனைத்து கருவிகளும் காப்புறுதி ஒப்பந்தங்கள் என்பதுடன் எனவே SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்கள் இன் கீழ் காப்புறுதி ஒப்பந்தங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. எனவே, குழுமமானது அறிக்கையிடப்படும் திகதியில் அதன் கருவித் தேக்கத்தில் ஏதேனும் முதலீட்டு ஒப்பந்தங்களைக் கொண்டிருக்கவில்லை.

**மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக்கட்டனத்தின் வருவாய் அங்கீகாரம்**

மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக்கட்டணம் (மொ.எ.கா.த.) இடர்நேர்கைகளை காப்பீடு செய்வதற்காக குழுமத்தினால் அறவிடப்படும் காப்புறுதி தவணைக் கட்டணத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மொ.எ.கா.த. அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றது.

மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக்கட்டணம் கணக்கீட்டுக் காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் மூலம் வழங்கப்படும் முழுக் காலத்திற்குமான பெறப்பட்ட / பெறவேண்டிய மொத்த காப்புறுதி தவணைக்கட்டங்களை உள்ளடக்குவதுடன் காப்புறுதி ஒப்பந்தம் ஆரம்பிக்கும் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றது.

காப்புறுதி தவணைக்கட்டண வீதத்தின் ஓர் பகுதியாக காணப்படும் தள்ளுபடிகள், கோரல் இல்லாததற்கான தள்ளுபடிகள், மொ.எ.கா.த. இலிருந்து கழிக்கப்படுகின்றன.

**காப்புறுதி - வருவாய் அங்கீகாரம் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக்கட்டணம்**

ஆயுளல்லாத காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக்கட்டணம் கணக்கீட்டுக் காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் மூலம் வழங்கப்படும் காப்பீட்டிற்காக பெறவேண்டிய மொத்த காப்புறுதித் தவணைக்கட்டணத்தை உள்ளடக்குவதுடன் காப்புறுதி ஒப்பந்தம் ஆரம்பிக்கும் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**மீள்காப்புறுதி தவணைக்கட்டணம்**

ஆயுளல்லாத காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக்கட்டணம் காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் மூலம் வழங்கப்படும் காப்பீட்டிற்காக செலுத்தவேண்டிய மொத்த காப்புறுதித் தவணைக்கட்டணத்தை உள்ளடக்குவதுடன் காப்புறுதி ஒப்பந்தம் தொடங்கும் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றது. தவணைக்கட்டணங்கள் கணக்கீட்டுக் காலப்பகுதியில் எழுகின்ற ஏதேனும் செம்மையாக்கலை உள்ளடக்குவதுடன் இது முன்னைய கணக்கீட்டு காலப்பகுதியில் தொடங்கிய மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பானவையாகும்.

**உழைக்கப்படாத தவணைக்கட்டண ஒதுக்கம்**

உழைக்கப்படாத தவணைக்கட்டண ஒதுக்கம் வருடத்தில் எழுதப்பட்ட தவணைக்கட்டணத்தின் ஒரு பகுதி ஆனால் முதிர்வடையாத காப்பீட்டுக் காலம் தொடர்பானதாகும் என்பதை பிரதிநிதித்துவம் செய்கின்றது. உழைக்கப்படாத தவணைக்கட்டணங்கள் 365 நாட்கள் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றது.

**உழைக்கப்படாத மீள்காப்புறுதி தவணைக்கட்டண ஒதுக்கம்**

உழைக்கப்படாத மீள்காப்புறுதி தவணைக்கட்டண ஒதுக்கம் என்பது ஒரு வருடத்தில் எழுதப்பட்ட காப்புறுதி தவணைக்கட்டணத்தின் விகிதாசாரம் அறிக்கையிடப்படும் திகதிக்குப் பின்னரான இடர்நேர்கை காலங்கள் தொடர்பானவையாகும். உழைக்கப்படாத மீள்காப்புறுதி தவணைக்கட்டணம் உள்ளார்ந்த நேரடி காப்புறுதி ஒப்பந்தங்களின் காலங்கள் மீது ஒத்திவைக்கப்படுகின்றன.

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 |
| மொத்த எழுதப்பட்ட காப்புறுதித் தவணைக்கட்டணம் | - | - | 6,049,693 | 6,133,052 |
| கழி: மீள்காப்புறுதியாளர்களுக்கு வெலுத்தப்பட்ட தவணைக்கட்டணம் | - | - | 1,142,976 | 956,324 |
| கழி: உழைக்கப்படாத தவணைக்கட்டண ஒதுக்கத்திலான மாற்றம் | - | - | (32,354) | 148,179 |
| மொத்தம் | - | - | 4,939,071 | 5,028,549 |

## 8. கட்டணம் மற்றும் தரகு வருமானம்

**கணக்கீட்டுக் கொள்கை**

கட்டணம் மற்றும் தரகு வருமானம்

குழுமத்தினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட பலவிதமான வீச்சான சேவைகளிலிருந்து கட்டணம் மற்றும் தரகு வருமானம் உழைக்கப்படுகின்றது. தரகு வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. கட்டண வருமானமானது பின்வருமாறு இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்;

**ஓர் குறிப்பிட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்ட சேவைகளிலிருந்து உழைக்கப்படும் கட்டண வருமானம்**

ஓர் காலப்பகுதியியல் வழங்கிய சேவைகளுக்காக உழைத்த கட்டணங்கள் அந்தக் காலப்பகுதியில் அட்டுறு செய்யப்படுகின்றன.

**கொடுக்கல் வாங்கல் சேவைகளை வழங்குவதிலிருந்தான கட்டண வருமானம்**

ஓர் மூன்றாம் தரத்தவருக்கான ஓர் கொடுக்கல் வாங்கலது பேரம்பேசுதலில் பங்குபற்றுதல் அல்லது பேரம்பேசுவதிலிருந்து எழும் கட்டணம், ஆவணங்களது ஏற்பாடுசெயல் மற்றும் வாகனங்களது பரீசீலனை போன்றவை உள்ளார்ந்த கொடுக்கல் வாங்கல் நிறைவடையும்போது அங்கீகரிக்கப்படுகின்றன. ஓர் குறிப்பிடட செயற்திறனுடன் இணைக்கப்பட்ட கட்டணங்கள் அல்லது கட்டணங்களது பிரிவுகள் அந்த குறித்த வரன்முறைகள் நிறைவுசெய்யப்பட்டதன் பின்னர் அங்கீகரிக்கப்படுகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 8. கட்டணம் மற்றும் தரகு வருமானம் (தொடர்ச்சி...)

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 |
| சேவைக் கட்டணங்கள் | 522,316 | 583,452 | 160,404 | 149,021 |
| ஏனைய கட்டணங்கள் மற்றும் தரகு | 1,354,208 | 1,235,223 | 1,161,109 | 1,049,033 |
| மொத்தம் | 1,876,524 | 1,818,675 | 1,321,513 | 1,198,054 |

## 9. நிதிச் சொத்துக்களிலான தேறிய இலாபங்கள் / (நட்டங்கள்) - இநநிபெ

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 |
| நிதிச் சொத்துக்களிலான தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) - இநநிபெ | | | | |
| தேறிய சந்தை மதிப்பிற்கான மாற்றம் (நட்டங்கள்)/இலாபங்கள் | (8,496) | (10,455) | 30,325 | 25,864 |
| தேறிய மூலதன இலாபங்கள் | 35,279 | 173,071 | 56,200 | 202,394 |
| மொத்தம் | 26,783 | 162,616 | 86,525 | 228,258 |

## 10. ஏனைய செயற்பாட்டு வருமானம்

**கணக்கீட்டுக் கொள்கை**

ஏனைய செயற்பாட்டு வருமானம் ஏனைய மூலங்களிலிருந்து உழைத்த வருமானத்தினை உள்ளடக்குவதுடன், இவை குழுமத்தின் வழக்கமான செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புபடாதவையாகும் என்பதுடன் இது அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**பங்கிலாப வருமானம்**

கொடுப்பனவினை பெறுவதற்கான உரிமை நிலைநாட்டப்படும்போது பங்கிலாப வருமானமானது அங்கீகரிக்கப்படுகின்றது.

**மோட்டார் வாகனங்களின் விற்பனையிலிருந்தான தேறிய வர்த்தக வருமானம்**

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் விற்பனையிலிருந்தான வருவாய், வாகனங்களது உரித்துடைமையின் குறிப்பிடத்தக்களவு இடர்நேர்கைக் மற்றும் வெகுமதிகள் கொள்வனவாளருக்கு மாற்றல் செய்யப்படும்போது அங்கீகரிக்கப்படுகின்றது. பொதுவாக வாகனங்களை அனுப்பும்போது.

**செயற்பாட்டு குத்தகை வருமானம்**

செயற்பாட்டு குத்தகைகளிலிருந்து எழுகின்ற வருமானமானது தற்போதைய குத்தகைகளில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுவதுடன் ஏனைய செயற்பாட்டு வருமானமாக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் பதிவு

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான இலாபம் அல்லது நட்டங்கள்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையின் விளைவாக வருகின்ற இலாபங்கள் அல்லது நட்டங்கள், விற்பனை இடம்பெறும் காலத்தில், ஒரு காசு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கணக்கீடு செய்யப்படுகின்றது.

**வாடகைக்கு விடுதல் வருமானம்**

வாடகைக்கு காணப்படும் வாகனங்களிலிருந்து வாடகை வருமானமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உரிமையாளர் மற்றும் வாடகைக்காரருக்கிடையேயான வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**பெறுமதியிடல் வருமானம்**

பெறுமதியிடல் வருமானமானது அவை தீர்வாகியபோது அல்லது தீர்வாகக்கூடியபோது அங்கீகரிக்கப்படுகின்றது.

**காப்புறுதிக் கட்டண வருமானம்**

காப்புறுதியுறுநர்கள் காப்புறுதி ஒப்பந்த நிர்வாகச் சேவைகளுக்காக அறவிடப்படுவதுடன் மற்றும் ஏனைய ஒப்பந்த கட்டணங்களும் அறவிடப்படுகின்றன. இந்தக் கட்டணங்கள் பெறப்படும்போது அல்லது செலுத்தவேண்டியதாக காணப்படும்போது வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**ஏனைய வருமானம்**

ஏனைய வருமானமானது ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான இலாபம் | 17,529 | 22,823 | 55,778 | 74,774 |
| வாடகைக்கு விடுதல் வருமானம் | - | - | 2,436 | 24,939 |
| செயற்பாட்டு குத்தகை வருமானம் | - | - | 25,030 | 27,487 |
| முதலீட்டு ஆதனத்திலிருந்தாக வாடகை வருமானம் | - | - | 75,712 | 72,248 |
| வாகனங்களின் விற்பனையிலிருந்தான தேறிய வர்த்தக வருமானம் | 99 | 4,620 | 99 | 4,620 |
| பெறப்பட்ட பங்கிலாப வருமானம் - ஏவிவநிபெ | 5,591 | 640 | 5,591 | 640 |
| - துணைநிறுவனங்கள் | 930,625 | 110,000 | - | - |
| - இநநிபெ | 625 | 33 | 625 | 278 |
| பெறுமதியிடல் வருமானம் | - | - | 106,662 | 92,166 |
| காப்புறுதிக் கட்டண வருமானம் | - | - | 57,588 | 55,761 |
| ஏனைய வருமானம் | 2,078 | 946 | 27,564 | 15,653 |
| மொத்தம் | 956,547 | 139,062 | 357,085 | 368,566 |

## 11. கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 9 – 'நிதியியல் கருவிகள்' இன் பிரகாரம் மதிப்பிடப்படும் கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் ஏற்பாடுகளிலான மாற்றங்களை கம்பனி மற்றும் குழுமம் அங்கீகரிக்கின்றது. கம்பனி மற்றும் குழுமத்தினால் கடைப்பிடிக்கப்படும் முறையானது இந்த நிதிக்கூற்றுக்களின் பக்கம் 251 இல் காணப்படும் குறிப்பு 25 இல் விளக்கப்பட்டுள்ளது.

**பதிவழித்தல்கள் உள்ளடங்கலான பிணைச் சொத்துக்களின் விற்பனையிலான நட்டம்**

மீட்பதற்கான மெய்யான வாய்ப்பு காணப்படாதபோது கடன்கள் மற்றும் வருமதிகள் (தொடர்புடைய வலுக்குன்றல் தள்ளுபடி கணக்குகளும்) பொதுவாக பகுதியளவில் அல்லது முற்றாக பதிவழிக்கப்படுகின்றது. கடன்கள் மற்றும் வருமதிகள் பிணைசார்ந்து காணப்படும்போது இது பொதுவாக பிணைச்சொத்திலிருந்து ஏதேனும் வருவாய்களைப் பெற்றதன் பின்னராகும்.

**மீட்கப்பட்ட அறவிட முடியாக் கடன்கள்**

அறவிடமுடியா மற்றும் சந்தேகத்திற்கிடமான கடன் என பதிவழிக்கப்பட்ட தொகைகளின் மீட்டல் ஒரு காசு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| தனித்தனியான வலுக்குன்றல் | 11.3/11.4 | 231 | 487,288 | (148,063) | 487,288 | (260,794) |
| கூட்டான வலுக்குன்றல் | 11.3/11.4 | 231 | 132,344 | 665,766 | 442,868 | 971,185 |
| ஏனைய வருமதிகள் | | | 6,760 | 18,672 | (5,623) | 55,707 |
| பதிவழித்தல் உள்ளடங்கலாக பிணைச்சொத்துக்களின் விற்பனையிலான நட்டம் | | | 104,746 | 603,692 | 104,746 | 683,057 |
| பதிவழிக்கப்பட்ட கடன்கள்/விற்பனை நட்டங்களின் மீட்டல் | | | (75,713) | (96,230) | (77,523) | (96,666) |
| மொத்தம் | 11.1/11.2 | 230 | 655,425 | 1,043,837 | 951,756 | 1,352,489 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 11. கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் (தொடர்ச்சி...)

### 11.1 கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான வலுக்குன்றல் கட்டணம் / (திருப்பல்) (விரிவான திரள்) - கம்பனி

| | 2022 | | | |
|---|---|---|---|---|
| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | விற்பனை நட்டம்/ பதிவழிப்புகள் (மீட்டல் நிகராக) ரூ. '000 | கட்டணம் ரூ. '000 | (திருப்பல்) ரூ. '000 | தேறிய தொகை ரூ. '000 |
| குத்தகை / இஜாரா வருமதிகள் | 28,415 | 2,766,525 | (2,187,125) | 607,815 |
| வாடகைக் கொள்வனவு / முரபஹா வருமதிகள் | (6,795) | 17,586 | (10,232) | 559 |
| தவணைக் கடன் மற்றும் வருமதிகள் | 7,413 | 2,078,221 | (2,045,342) | 40,292 |
| ஏனைய வருமதிகள் | - | 389,417 | (382,658) | 6,759 |
| மொத்தம் | 29,033 | 5,251,749 | (4,625,357) | 655,425 |

| | 2021 | | | |
|---|---|---|---|---|
| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | விற்பனை நட்டம்/ பதிவழிப்புகள் (மீட்டல் நிகராக) ரூ. '000 | கட்டணம் ரூ. '000 | (திருப்பல்) ரூ. '000 | தேறிய தொகை ரூ. '000 |
| குத்தகை / இஜாரா வருமதிகள் | 293,766 | 1,538,226 | (1,733,151) | 98,841 |
| வாடகைக் கொள்வனவு / முரபஹா வருமதிகள் | (5,316) | 68,635 | (10,712) | 52,607 |
| தவணைக் கடன் மற்றும் வருமதிகள் | 219,012 | 3,096,373 | (2,441,668) | 873,717 |
| ஏனைய வருமதிகள் | - | 18,672 | - | 18,672 |
| மொத்தம் | 507,462 | 4,721,906 | (4,185,531) | 1,043,837 |

### 11.2 கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான வலுக்குன்றல் கட்டணம் / (திருப்பல்) (விரிவான திரள்) - குழுமம்

| | 2022 | | | |
|---|---|---|---|---|
| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | விற்பனை நட்டம்/ பதிவழிப்புகள் (மீட்டல் நிகராக) ரூ. '000 | கட்டணம் ரூ. '000 | (திருப்பல்) ரூ. '000 | தேறிய தொகை ரூ. '000 |
| குத்தகை / இஜாரா வருமதிகள் | 28,415 | 2,766,525 | (2,187,125) | 607,815 |
| வாடகைக் கொள்வனவு / முரபஹா வருமதிகள் | (6,795) | 73,823 | (10,232) | 56,796 |
- மொ.உ.உ வளர்ச்சி, பணவீக்கம், வட்டி வீதங்கள், பரிமாற்றக வீதங்கள் மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற பாரிய பொருளாதார உள்ளீடுகள் மற்றும் தவறுதல்களுக்காக சாத்தியப்பாட்டின் விளைவு (தசா) தவறுதலிலான வெளிப்பாடு (தவெ) மற்றும் நட்டம் வழங்கப்பட்ட தவறுதல் (நவத) என்பவற்றுக்கிடையேயான இணைப்புக்களைத் தீர்மானித்தல்
- எ.க.ந. மாதிரிகளுக்கான பொருளாதார உள்ளீடுகளைப் பெறுவதற்கான, முன்னோக்கிய பார்வையிலான பாரிய பொருளாதார காட்சிநிலைகள் மற்றும் அவற்றின் சாத்தியப்பாடான நிறையிடல்கள்

ஒரு நிதியியல் கருவியின் கடன் இடர்நேர்கையானது அதன் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கணிசமானளவு அதிகரித்துள்ளதா எனும் ஒரு மதிப்பீட்டினை செயலாற்றுவதற்காக குழுமமானது ஒரு கொள்கையினை நிறுவியுள்ளது. இது நிதியியல் கருவியின் எஞ்சியுள்ள ஆயுட்காலம் மீது தவறுதல் இடர்நேர்கை ஏற்படுவதிலான மாற்றத்தினை கருத்திலெடுப்பதன் மூலமாகும். SLFRS 9 ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் தரத்திலான மாற்றங்களின் அடிப்படையில் வலுக்குன்றலுக்கான “மூன்று கட்ட” மாதிரியினை உருவரையிடுகின்றது.

**கட்டம் 1**
ஆரம்ப அங்கீகாரத்தில் முதலில் கடன் வலுக்குன்றாத கடன்கள் மற்றும் வருமதிகள் கட்டம் 1 ஆக வகைப்படுத்தப்படுகின்றன. கட்டம் 1 இல் காணப்படும் நிதியியல் கருவிகள் அவற்றின் எ.க.ந. பின்வருமாறு அளவிடுகின்றன. அடுத்த 12 மாதங்களினுள் (12மா எகந) சாத்தியமான தவறுதல் நிகழ்வுகளிலிருந்து விளைவிக்கக்கூடிய ஆயுட்கால எதிர்பார்க்கும் கடன் நட்டங்களது (ஆஎகந) விகிதாசாரங்களுக்கு சமனான தொகைக்கு அளவிடப்படுகின்றது.

**கட்டம் 2**
ஆரம்பத்திலிருந்து கடன் இடர்நேர்கையில் ஓர் கணிசமான அதிகரிப்பு இனங்காணப்பட்டால், அது 2ஆம் கட்டத்திற்கு நகர்த்தப்படுவதுடன் குழுமமானது ஆஎகந இற்கு ஓர் தள்ளுபடியாக பதிவுசெய்கின்றது.

**கட்டம் 3**
ஓர் கடனானது கடன் வலுக்குன்றியிருந்தால், அது கட்டம் 3 இற்கு நகர்த்தப்படுவதுடன் மற்றும் குழுமம் ஆஎகந இற்கு 100% தவறுதலுக்கான சாத்தியத்துடன் ஓர் தள்ளுபடியினை அங்கீகரிக்கின்றது.

**கடன் இடர்நேர்கையிலான கணிசமானளவு அதிகரிப்பு**
ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து நிதியியல் கருவியிலான தவறுதல் இடர்நேர்கையானது கணிசமானளவு அதிகரித்துள்ளதா என்பதை தீர்மானிக்கும்போது, குழுமமானது அளவுக்கதிகமான செலவு அல்லது முயற்சியின்றி பொருத்தமான மற்றும் கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் உறுதுணையளிக்கக்கூடிய தகவல்களை கருத்திலெடுக்கும். இது பண்புசார் மற்றும் அளவுசார் தகவல்களது பகுப்பாய்வினை உள்ளடக்குவதுடன் குழுமத்தின் வரலாற்றுரீதியான அனுபவம் மற்றும் முன்னோக்கிய பார்வையான தகவல் உள்ளடங்கலான நிபுணத்துவ கடன் மதிப்பீடு என்பவற்றின் அடிப்படையிலாகும்.

ஒரு வாடிக்கையாளரின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 30 நாட்களுக்கும் அதிகமாக காலம் கடந்திருப்பின் SLFRS 9 இல் காணப்படும் மறுக்கத்தக்க உத்தேசத்தின் பிரகாரம் ஒரு வெளிப்படுத்தலில் கடன் இடர்நேர்கை கணிசமானளவு அதிகரித்துள்ளதாக குழுமம் கருதுகின்றது.

குழுமமானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், ஒரு வெளிப்பாடானது தவறுவதற்கு முன்னர், ஒரு முன்வரையறை செய்யப்பட்ட குறுமட்டத்திற்கும் மேலாக கடன்கள் மற்றும் வருமதிகளின் கடன் இடர்நேர்கைகளை ஆரம்பத்திலிருந்து கணிசமானளவு அதிகரித்துள்ளதா என தனித்தனியாக மீளாய்வு செய்கின்றது.

**தவறிய மற்றும் கடன் வலுக்குன்றிய சொத்துக்களின் வரைவிலக்கணம்**
குழுமமானது ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் பின்வரும் சந்தர்ப்பங்களில், தவறியுள்ளதாக கருதுகின்றது:

1. கடன்பெற்றவர் அவரது கடப்பாடுகளை முழுதாக குழுமத்திற்கு செலுத்துவதற்கு சாத்தியமில்லாது காணப்பட்டால், இது பிணையத்தின் (ஏதேனும் வைத்திருக்கப்பட்டால்) தீர்வு போன்ற குழுமத்தினால் மீட்புரிமையின்றி' அல்லது
2. கடன்பெற்றவர் அவரது ஒப்பந்த கொடுப்பனவுகளில் 90 நாட்கள் காலம் கடந்திருப்பின்.

குழுமமானது பின்வரும் மூன்று கூறுகள் உள்ளடங்கலான பல கூறுகளை பயன்படுத்தி கணிப்பிடுகின்றது' ஓர் தவறுதலுக்கான சாத்தியம் (தசா), ஓர் நட்டம் அளித்த தவறுதல் (நஅத), மற்றும் தவறுதலிலான வெளிப்பாடு (தவெ) என்பவற்றை ஓர் கூட்டு மதிப்பீட்டின் கீழ் கணிப்பிடுகின்றது. இந்த வரைகூறுகள் பொதுவாக உள்வாரியாக விருத்திசெய்யப்பட்ட புள்ளிவிபரவியல் மாதிரிகளிலிருந்து வருவிக்கப்படுவதுடன் முன்னோக்கிய தகவல்களை பிரதிபலிப்பதற்காக வரலாற்று தரவுகள் பின்னர் செம்மையாக்கப்படுகின்றன.

1. தசா – தவறுதலுக்கான சாத்தியமானது ஓர் கடன்பெற்றவர் அவரது நிதியியல் கடப்பாட்டில் தவறுவதற்கான நிகழ்வியல்பினை பிரதிபலிக்கின்றது (மேலே கூறப்பட்ட, “தவறுதல் மற்றும் கடன் வலுக்குன்றிய வரைவிலக்கணம்” இன் பிரகாரம்) இது அடுத்த 12 மாதங்களில் (12மாதசா) அல்லது கடப்பாட்டின் எஞ்சிய ஆயுட்காலத்தில் (ஆயுட்கால தசா) ஆகும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 25. கடன்கள் மற்றும் வருமதிகள் - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் (தொடர்ச்சி...)

எகந கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் இரண்டு வகையான தசா க்கள் பின்வருமாறு :

- 12-மாத தசா - இது அடுத்த 12 மாதங்களில் தவறுதல் இடம்பெறுவதற்கான சாத்தியத்தின் மதிப்பீடாகும் (அல்லது 12 மாதங்களுக்கு குறைவாகக் காணப்பட்டால் நிதியியல் கருவியின் எஞ்சிய ஆயுட்காலத்தில்). இது 12 மாத எகந இனை கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும்.
  - ஆயுட்கால தசா - இது நிதியியல் கருவியின் எஞ்சிய ஆயுட்காலத்தில் தவறுதல் இடம்பெறுவதற்கான சாத்தியத்தின் மதிப்பீடாகும். இது “கட்டம் 2” மற்றும் “கட்டம்3” வெளிப்பாடுகளுக்கான ஆயுட்கால எகந ளை கணிப்பிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்றது.

2. நட்டம் அளித்த தவறுதல் (நஅத) - இது தவறுதலில் எழக்கூடிய நட்டத்தின் ஓர் மதிப்பீடாகும். இது செலுத்தவேண்டிய ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களுக்கும் கடன் வழங்கியவர் பெறுவதற்கு எதிர்பார்ப்பதற்கும் இடையேயான வித்தியாசத்தின் அடிப்படையிலாகும். இது ஏதேனும் பிணைச் சொத்திலிருந்தானவை உள்ளடங்கலாக. இது வழக்கமாக தவறுதலிலான வெளிப்பாட்டின் ஓர் சதவீதமாக வெளிப்படுத்தப்படுகின்றது.
3. தவறுதலிலான வெளிப்பாடு (தவெ) - அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் வெளிப்பாடுகளில் எதிர்பார்க்கும் மாற்றங்களை, ஒப்புவிக்கப்பட்ட கடன் வசதிகளிலான எதிர்பார்க்கப்படும் கடன்நிதிகளது அணுக்கம், முதலின் மீள்செலுத்தல் மற்றும் வட்டிக் கொடுப்பனவு உள்ளடங்கலானவற்றைக் கணக்கிலெடுத்து, ஓர் எதிர்கால தவறுதல் தினத்திலான வெளிப்பாட்டில் மேற்கொள்ளப்படும் ஓர் மதிப்பீடாகும்.
4. கழிவிறக்க வீதம் - ஆரம்ப அங்கீகாரத்தில் விளைவுறு வட்டி வீதத்தினை (விவவீ) பயன்படுத்தி அறிக்கையிடப்படும் திகதியில் ஓர் நிகழ்காலப் பெறுமதிக்கு ஓர் எதிர்பார்க்கப்பட்ட நட்டத்திற்கு கழிவிறக்கம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது.
5. பொருளாதார காரணி செம்மையாக்கல் (பொகாசெ) - முன்னோக்கிய தகவல்களை ஒருங்கிணைக்கும்போது ஓர் நிறுவனமானது எதிர்பார்க்கும் கடன் நட்டங்களை மதிப்பீடு செய்யும்போது எதிர்வுகூறப்பட்ட பாரியபொருளாதார காரணிகளை கருத்திலெடுத்தல் வேண்டும்.

### முன்னோக்கிப் பார்க்கும் தகவல்கள்

குழுமமானது ஓர் நிதியியல் கருவியின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து அதன் கடன் இடர்நேர்கையானது கணிசமானளவு அதிகரித்துள்ளதா என மதிப்பிடும்போதும் மற்றும் அதன் எகந இனை அளவிடும்போதும் முன்னோக்கிப் பார்க்கும் தகவல்களை ஒருங்கிணைக்கின்றது. குழுமமானது ஓர் நடுத்தர மட்டம் மற்றும் மோசமான மட்ட காட்சிநிலையினை உருவாக்குவதற்காக அனுபவம்வாய்ந்த கடன் தீர்மானத்தினையும் பெற்றுக்கொண்டது. நடுத்தர மட்டமானது மிகவும் நிகழக்கூடிய விளைவினை பிரதிபலிப்பதுடன் குழுமத்தினால் மூலோபாய திட்டமிடல் மற்றும் பாதீட்டிற்கு பயன்படுத்தும் தகவல்களுடன் சீரமைந்துள்ளது. குழுமமானது பல்வேறு கடன் தேக்க பிரிவுகளுக்கு பண்புசார் மற்றும் அளவுசார் கடன் இடர்நேர்கைகளின் முக்கிய இயக்கிகளை இனங்கண்டு ஆவணப்படுத்தியுள்ளது. அளவுசார் பொருளாதார காரணிகள் இலங்கை மத்திய வங்கி மற்றும் எல்லைகடந்த நிறுவனங்களான சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றினால் பிரசுரிக்கப்படும் பொருளாதார தரவுகள் மற்றும் எதிர்வுகூறல்களின் அடிப்படையிலாகும்.

| கடன் இடர்களின் அளவுசார் இயக்கிகள் | கடன் இடர்களின் பண்புசார் இயக்கிகள் |
|---|---|
| வட்டி வீதம் (AWPLR) | தொழில்துறை வணிகத்தின் நிலைமை |
| மொ.உ.உ. வளர்ச்சி | முறைமைப்படுத்தல் தாக்கம் |
| பணவீக்கத்தின் வீதம் | அரசாங்கக் கொள்கைகள் |
| வேலையில்லாமை வீதம் | |
| பரிமாற்ற வீதம் | |

நாட்டின் தற்போதைய உறுதியற்ற பாரிய பொருளாதார நிலையினைக் கருத்திற்கொண்டு கம்பனியானது சூழ்நிலை நிறையிடல்களை, மோசமான நிலைக்கு 60%, சிறந்த நிலைமைக்கு 10% மற்றும் அடித்தள நிலைக்கு 30% ஆக திருத்தியமைத்தது.

### சுழற்சியான கடன் வசதிகள்

குழுமமானது விரைவு வழி போன்ற சுழற்சியான கடன் வசதிகளை வழங்குவதுடன், இந்த கடன் வசதிகளில் 12 மாத எகந (12மாதஎகந) இனை மாத்திரம் கணிப்பீடு செய்கின்றது. தவறுதலிலான வெளிப்பாடானது (தவெ) ஒன்றில் கடன் மாற்றுதல் காரணிக்கான செம்மையாக்கப்பட்ட ஒப்பளிப்பு வரையறையின் மற்றும் கடனின் (பயன்படுத்தப்பட்ட தொகை) மொத்த கொண்டுசெல்லல் தொகையில் எது கூடியதோ அதனை எடுப்பதன்மூலம் பெறப்படுகின்றது. கட்டம் 3 ஒப்பந்தங்களின் தவெ என்பன மொத்த கொண்டுசெல்லல் தொகைக்கும் வரையறை செய்யப்பட்டுள்ளதுடன், இது பயன்படுத்தப்பட்ட தொகை ஏனெனில் குழுமமானது அந்த ஒப்பந்தங்களின் பயன்படுத்தப்பட்ட தொகைக்கு அவற்றின் வரையறையினை முடக்குகின்றது. எதிர்பார்க்கப்படும் 12 மாத தவறுதல் சாத்தியங்கள் தவெ க்கு பிரயோகிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நஅத மற்றும் பொகாசெ இனால் பெருக்கி ஓர் அண்ணளவான அசல் விவவீ ஆல் கழிவிறக்கம் செய்யப்படுகின்றது.

### 25.7 இவ்வருடத்திலான தனித்தனியான மற்றும் கூட்டான வலுக்குன்றல் கட்டணங்களிலான அசைவுகள்

வகுப்பு வாரியான, கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் நட்டங்களுக்கான தள்ளுபடியின் ஒரு கணக்கிணக்கம் பின்வருமாறு:

| கம்பனி | குத்தகை ரூ. '000 | வாடகைக் கொள்வனவு ரூ. '000 | இஜாரா ரூ. '000 | தவணைக் கடன்கள் ரூ. '000 | மீள்-நிதியளிப்பு கடன்கள் ரூ. '000 | முரபஹா ரூ. '000 | வர்த்தக முரபஹா ரூ. '000 | காரணியாக்கம் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறானது | 3,170,385 | 112,933 | 242,982 | 4,217,079 | 15,622 | 12,176 | 145,538 | 833,520 | 8,750,235 |
| வருடத்திற்கான செலவு/ (திருப்பல்) | (140,595) | 61,754 | (54,330) | 364,494 | 4,525 | (3,831) | (5,155) | 290,841 | 517,703 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது | 3,029,790 | 174,687 | 188,652 | 4,581,573 | 20,147 | 8,345 | 140,383 | 1,124,361 | 9,267,938 |
| தனித்தனியான வலுக்குன்றல் | | | | | | | | | |
| கட்டம் 1 | - | - | - | - | - | - | - | - | - |
| கட்டம் 2 | - | - | - | - | - | - | - | - | - |
| கட்டம் 3 | - | - | - | 712,308 | 2,403 | - | 3,791 | 449,672 | 1,168,174 |
| மொத்த தனித்தனியான வலுக்குன்றல் | - | - | - | 712,308 | 2,403 | - | 3,791 | 449,672 | 1,168,174 |
| கூட்டான வலுக்குன்றல் | | | | | | | | | |
| கட்டம் 1 | 381,601 | 124 | 25,911 | 400,833 | - | 13 | 2,363 | 20,639 | 831,484 |
| கட்டம் 2 | 606,640 | 646 | 39,648 | 459,226 | - | 25 | 1,674 | 5,515 | 1,113,374 |
| கட்டம் 3 | 2,041,549 | 173,917 | 123,093 | 3,009,206 | 17,744 | 8,307 | 132,555 | 648,535 | 6,154,906 |
| மொத்த கூட்டான வலுக்குன்றல் | 3,029,790 | 174,687 | 188,652 | 3,869,265 | 17,744 | 8,345 | 136,592 | 674,689 | 8,099,764 |
| மொத்தம் | 3,029,790 | 174,687 | 188,652 | 4,581,573 | 20,147 | 8,345 | 140,383 | 1,124,361 | 9,267,938 |

| கம்பனி | குத்தகை ரூ. '000 | வாடகைக் கொள்வனவு ரூ. '000 | இஜாரா ரூ. '000 | தவணைக் கடன்கள் ரூ. '000 | மீள்-நிதியளிப்பு கடன்கள் ரூ. '000 | முரபஹா ரூ. '000 | வர்த்தக முரபஹா ரூ. '000 | காரணியாக்கம் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறானது | 3,029,790 | 174,687 | 188,652 | 4,581,573 | 20,147 | 8,345 | 140,383 | 1,124,361 | 9,267,938 |
| வருடத்திற்கான செலவு / (திருப்பல்) | 656,967 | 8,184 | (77,567) | (157,665) | 3,300 | (830) | 58,672 | 128,571 | 619,632 |
| பதிவழிக்கப்பட்ட தொகைகள் | - | - | - | - | - | - | - | - | - |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறானது | 3,686,757 | 182,871 | 111,085 | 4,423,908 | 23,447 | 7,515 | 199,055 | 1,252,932 | 9,887,570 |
| தனித்தனியான வலுக்குன்றல் | | | | | | | | | |
| கட்டம் 1 | - | - | - | - | - | - | - | - | - |
| கட்டம் 2 | - | - | - | - | - | - | - | - | - |
| கட்டம் 3 | - | - | - | 771,042 | 2,406 | - | 3,456 | 878,558 | 1,655,462 |
| மொத்த தனித்தனியான வலுக்குன்றல் | - | - | - | 771,042 | 2,406 | - | 3,456 | 878,558 | 1,655,462 |
| கூட்டான வலுக்குன்றல் | | | | | | | | | |
| கட்டம் 1 | 804,513 | 15 | 26,549 | 486,203 | - | 8 | 4,311 | 16,624 | 1,338,223 |
| கட்டம் 2 | 628,642 | 214 | 15,101 | 207,247 | - | 9 | 263 | 39,650 | 891,126 |
| கட்டம் 3 | 2,253,602 | 182,642 | 69,435 | 2,959,416 | 21,041 | 7,498 | 191,025 | 318,100 | 6,002,759 |
| மொத்த கூட்டான வலுக்குன்றல் | 3,686,757 | 182,871 | 111,085 | 3,652,866 | 21,041 | 7,515 | 195,599 | 374,374 | 8,232,108 |
| மொத்தம் | 3,686,757 | 182,871 | 111,085 | 4,423,908 | 23,447 | 7,515 | 199,055 | 1,252,932 | 9,887,570 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 25. கடன்கள் மற்றும் வருமதிகள் - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் (தொடர்ச்சி...)

| குழுமம் | குத்தகை ரூ. '000 | வாடகைக் கொள்வனவு ரூ. '000 | இஜாரா ரூ. '000 | தவணைக் கடன்கள் ரூ. '000 | மீள்-நிதியளிப்பு கடன்கள் ரூ. '000 | முரபஹா ரூ. '000 | வர்த்தக முரபஹா ரூ. '000 | காரணியாக்கம் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறானது | 3,170,385 | 397,378 | 242,982 | 4,352,345 | 15,622 | 12,175 | 145,539 | 833,520 | 9,169,946 |
| வருடத்திற்கான செலவு / (திருப்பல்) | (140,595) | 181,976 | (54,330) | 436,960 | 4,525 | (3,830) | (5,156) | 290,841 | 710,391 |
| பதிவழிக்கப்பட்ட தொகைகள் | - | - | - | 1,859 | - | - | - | - | 1,859 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது | 3,029,790 | 579,354 | 188,652 | 4,791,164 | 20,147 | 8,345 | 140,383 | 1,124,361 | 9,882,196 |
| தனித்தனியான வலுக்குன்றல் | | | | | | | | | |
| கட்டம் 1 | - | - | - | - | - | - | - | - | - |
| கட்டம் 2 | - | - | - | - | - | - | - | - | - |
| கட்டம் 3 | - | - | - | 712,308 | 2,403 | - | 3,791 | 449,672 | 1,168,174 |
| மொத்த தனித்தனியான வலுக்குன்றல் | - | - | - | 712,308 | 2,403 | - | 3,791 | 449,672 | 1,168,174 |
| கூட்டான வலுக்குன்றல் | | | | | | | | | |
| கட்டம் 1 | 381,601 | 91,762 | 25,911 | 472,944 | - | 13 | 2,363 | 20,639 | 995,233 |
| கட்டம் 2 | 606,640 | 99,117 | 39,648 | 509,646 | - | 25 | 1,674 | 5,515 | 1,262,265 |
| கட்டம் 3 | 2,041,549 | 388,475 | 123,093 | 3,096,266 | 17,744 | 8,307 | 132,555 | 648,535 | 6,456,524 |
| மொத்த கூட்டான வலுக்குன்றல் | 3,029,790 | 579,354 | 188,652 | 4,078,856 | 17,744 | 8,345 | 136,592 | 674,689 | 8,714,022 |
| மொத்தம் | 3,029,790 | 579,354 | 188,652 | 4,791,164 | 20,147 | 8,345 | 140,383 | 1,124,361 | 9,882,196 |

| குழுமம் | குத்தகை ரூ. '000 | வாடகைக் கொள்வனவு ரூ. '000 | இஜாரா ரூ. '000 | தவணைக் கடன்கள் ரூ. '000 | மீள்-நிதியளிப்பு கடன்கள் ரூ. '000 | முரபஹா ரூ. '000 | வர்த்தக முரபஹா ரூ. '000 | காரணியாக்கம் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறானது | 3,029,790 | 579,354 | 188,652 | 4,791,164 | 20,147 | 8,345 | 140,383 | 1,124,361 | 9,882,196 |
| வருடத்திற்கான செலவு/ (திருப்பல்) | 656,967 | 64,421 | (77,567) | 96,622 | 3,300 | (830) | 58,672 | 128,571 | 930,156 |
| பரிமாற்றல் வீத வேறுபாடு | - | - | - | 29,784 | - | - | - | - | 29,784 |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறானது | 3,686,757 | 643,775 | 111,085 | 4,917,570 | 23,447 | 7,515 | 199,055 | 1,252,932 | 10,842,136 |
| தனித்தனியான வலுக்குன்றல் | | | | | | | | | |
| கட்டம் 1 | - | - | - | - | - | - | - | - | - |
| கட்டம் 2 | - | - | - | - | - | - | - | - | - |
| கட்டம் 3 | - | - | - | 771,042 | 2,406 | | 3,456 | 878,558 | 1,655,462 |
| மொத்த தனித்தனியான வலுக்குன்றல் | - | - | - | 771,042 | 2,406 | - | 3,456 | 878,558 | 1,655,462 |
| கூட்டான வலுக்குன்றல் | | | | | | | | | |
| கட்டம் 1 | 804,513 | 115,806 | 26,549 | 777,931 | - | 8 | 4,311 | 16,624 | 1,745,742 |
| கட்டம் 2 | 628,642 | 121,029 | 15,101 | 231,495 | - | 9 | 263 | 39,650 | 1,036,189 |
| கட்டம் 3 | 2,253,602 | 406,940 | 69,435 | 3,137,102 | 21,041 | 7,498 | 191,025 | 318,100 | 6,404,743 |
| மொத்த கூட்டான வலுக்குன்றல் | 3,686,757 | 643,775 | 111,085 | 4,146,528 | 21,041 | 7,515 | 195,599 | 374,374 | 9,186,674 |
| மொத்தம் | 3,686,757 | 643,775 | 111,085 | 4,917,570 | 23,447 | 7,515 | 199,055 | 1,252,932 | 10,842,136 |

### 25.8 இவ்வருடத்தில் வலுக்குன்றலுக்கான ஏற்பாடுகளிலான அசைவு (SLFRS 9 இன் கீழ்)

2021/22 இற்கான வலுக்குன்றலிலான அசைவு - கம்பனி

| | கட்டம் 1<br>ரூ. '000 | கட்டம் 2<br>ரூ. '000 | கட்டம் 3<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 |
|---|---|---|---|---|
| SLFRS 9 இன் கீழான 1 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான எகந தள்ளுபடி | 831,484 | 1,113,374 | 7,323,080 | 9,267,938 |
| உருவாக்கப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட புதிய சொத்துக்கள் | 556,956 | 76,426 | 442,180 | 1,075,562 |
| அங்கீகாரத்திலிருந்து அகற்றப்பட்ட அல்லது மீள்செலுத்தப்பட்ட சொத்துக்கள் (பதிவழிப்புகள் நீங்கலாக) | (12,530) | (362,278) | (439,651) | (814,459) |
| கட்டம் 2 மற்றும் 3 இற்கான மாற்றல்கள் | (203,085) | 100,684 | 102,401 | - |
| கட்டம் 1 மற்றும் 3 இற்கான மாற்றல்கள் | 9,270 | (105,960) | 115,230 | 18,540 |
| கட்டம் 1 மற்றும் 2 இற்கான மாற்றல்கள் | 81,009 | 27,966 | (108,975) | - |
| வருடத்தில் கட்டங்களுக்கிடையே மாற்றல் செய்யப்பட்ட எகந வெளிப்பாடுகளின் வருட இறுதி தாக்கம் | (231,669) | (24,428) | 28,790 | (227,307) |
| எகந கணிப்பீடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட மாதிரிகள் மற்றும் உள்ளீடுகளுக்கான மாற்றங்கள் | 306,788 | 65,342 | 200,229 | 572,359 |
| பதிவழிக்கப்பட்ட தொகைகள் | - | - | (5,063) | (5,063) |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | 1,338,223 | 891,126 | 7,658,221 | 9,887,570 |

**2020/21 இற்கான வலுக்குன்றலிலான அசைவு - கம்பனி**

| | கட்டம் 1<br>ரூ. '000 | கட்டம் 2<br>ரூ. '000 | கட்டம் 3<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 |
|---|---|---|---|---|
| SLFRS 9 இன் கீழான 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான எகந தள்ளுபடி | 675,172 | 1,183,272 | 6,891,791 | 8,750,235 |
| உருவாக்கப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட புதிய சொத்துக்கள் | 362,358 | 108,938 | 263,483 | 734,779 |
| அங்கீகாரத்திலிருந்து அகற்றப்பட்ட அல்லது மீள்செலுத்தப்பட்ட சொத்துக்கள் (பதிவழிப்புகள் நீங்கலாக) | 360,808 | (366,251) | (275,162) | (280,605) |
| கட்டம் 2 மற்றும் 3 இற்கான மாற்றல்கள் | (761,572) | 289,030 | 472,542 | - |
| கட்டம் 1 மற்றும் 3 இற்கான மாற்றல்கள் | 126,562 | (620,498) | 493,936 | - |
| கட்டம் 1 மற்றும் 2 இற்கான மாற்றல்கள் | 26,289 | 293,663 | (319,952) | - |
| வருடத்தில் கட்டங்களுக்கிடையே மாற்றல் செய்யப்பட்ட எகந வெளிப்பாடுகளின் வருட இறுதி தாக்கம் | (227,219) | (22,819) | 141,534 | (108,504) |
| எகந கணிப்பீடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட மாதிரிகள் மற்றும் உள்ளீடுகளுக்கான மாற்றங்கள் | 269,086 | 248,039 | (272,310) | 244,815 |
| பதிவழிக்கப்பட்ட தொகைகள் | - | - | (72,782) | (72,782) |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 831,484 | 1,113,374 | 7,323,080 | 9,267,938 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 25. கடன்கள் மற்றும் வருமதிகள் - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் (தொடர்ச்சி...)

**2021/22 இற்கான வலுக்குன்றலிலான அசைவு - குழுமம்**

| | கட்டம் 1 ரூ. '000 | கட்டம் 2 ரூ. '000 | கட்டம் 3 ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| SLFRS 9 இன் கீழான 1 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான எகந தள்ளுபடி | 995,233 | 1,262,265 | 7,624,698 | 9,882,196 |
| உருவாக்கப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட புதிய சொத்துக்கள் | 838,601 | 111,603 | 488,498 | 1,438,702 |
| அங்கீகாரத்திலிருந்து அகற்றப்பட்ட அல்லது மீள்செலுத்தப்பட்ட சொத்துக்கள் (பதிவழிப்புகள் நீங்கலாக) | (137,607) | (384,216) | (437,025) | (958,848) |
| கட்டம் 2 மற்றும் 3 இற்கான மாற்றல்கள் | (207,147) | 103,722 | 103,425 | - |
| கட்டம் 1 மற்றும் 3 இற்கான மாற்றல்கள் | 10,196 | (119,665) | 109,469 | - |
| கட்டம் 1 மற்றும் 2 இற்கான மாற்றல்கள் | 89,110 | 14,417 | (103,526) | - |
| வருடத்தில் கட்டங்களுக்கிடையே மாற்றல் செய்யப்பட்ட எகந வெளிப்பாடுகளின் வருட இறுதி தாக்கம் | (236,302) | (24,672) | 29,079 | (231,896) |
| எகந கணிப்பீடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட மாதிரிகள் மற்றும் உள்ளீடுகளுக்கான மாற்றங்கள் | 312,924 | 65,995 | 202,231 | 581,150 |
| பதிவழிக்கப்பட்ட தொகைகள் | - | - | (5,063) | (5,063) |
| அந்நிய செலாவணி செம்மையாக்கல்கள் | 80,733 | 6,740 | 48,420 | 135,894 |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | 1,745,742 | 1,036,189 | 8,060,205 | 10,842,136 |

**2020/21 இற்கான வலுக்குன்றலிலான அசைவு - குழுமம்**

| | கட்டம் 1 ரூ. '000 | கட்டம் 2 ரூ. '000 | கட்டம் 3 ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| SLFRS 9 இன் கீழான 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான எகந தள்ளுபடி | 749,718 | 1,333,159 | 7,087,069 | 9,169,946 |
| உருவாக்கப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட புதிய சொத்துக்கள் | 482,566 | 212,977 | 205,397 | 900,940 |
| அங்கீகாரத்திலிருந்து அகற்றப்பட்ட அல்லது மீள்செலுத்தப்பட்ட சொத்துக்கள் (பதிவழிப்புகள் நீங்கலாக) | 395,853 | (411,288) | (198,112) | (213,547) |
| கட்டம் 2 மற்றும் 3 இற்கான மாற்றல்கள் | (880,310) | 299,071 | 581,239 | - |
| கட்டம் 1 மற்றும் 3 இற்கான மாற்றல்கள் | 125,361 | (738,941) | 613,580 | - |
| கட்டம் 1 மற்றும் 2 இற்கான மாற்றல்கள் | 71,935 | 311,982 | (383,917) | - |
| வருடத்தில் கட்டங்களுக்கிடையே மாற்றல் செய்யப்பட்ட எகந வெளிப்பாடுகளின் வருட இறுதி தாக்கம் | (271,960) | (25,867) | 147,364 | (150,463) |
| எகந கணிப்பீடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட மாதிரிகள் மற்றும் உள்ளீடுகளுக்கான மாற்றங்கள் | 322,070 | 281,172 | (283,528) | 319,714 |
| பதிவழிக்கப்பட்ட தொகைகள் | - | - | (144,394) | (144,394) |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 995,233 | 1,262,265 | 7,624,698 | 9,882,196 |

## 26. வருமதியான காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி

**கணக்கீட்டுக் கொள்கை**

**காப்புறுதி - கருவிகளின் வகைப்படுத்தல்**

காப்புறுதி ஒப்பந்தங்கள் என்பன குழுமமானது (காப்புறுதியாளர்) மற்றுமோர் தரப்பினரிடமிருந்து (காப்புறுதியுறுநர்) குறிப்பிடத்தக்களவு காப்புறுதி இடர்களை, ஓர் குறிப்பிட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வானது (காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு) காப்புறுதியுறுநர்களை மோசமாக பாதிக்கும்போது காப்புறுதியுறுநர்களுக்கு இழப்பீடு செய்வதற்கு உடன்படுவதன்மூலம் ஏற்றுக்கொண்ட ஒப்பந்தங்களாகும். ஓர் பொதுவான வழிகாட்டியாக, காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு இடம்பெறாவிடின் செலுத்தப்பட்ட நலன்களை செலுத்தவேண்டிய நலன்களுடன் ஒப்பிடுவதன் மூலம் அது குறிப்பிடத்தக்களவு காப்புறுதி இடரினைக் கொண்டுள்ளதா என குழுமம் தீர்மானிக்கின்றது. காப்புறுதி ஒப்பந்தங்கள் நிதியியல் இடர்நேர்கையினையும் மாற்றல் செய்யலாம்.

ஓர் ஒப்பந்தமானது ஓர் காப்புறுதி ஒப்பந்தமாக வகைப்படுத்தப்பட்டவுடன், அது அதன் எஞ்சியுள்ள ஆயுட்காலத்தில் காப்புறுதி ஒப்பந்தமாகவே இருக்கும். இது இக்காலப்பகுதியில் காப்புறுதி இடர் குறிப்பிடத்தக்களவு குறைந்திருந்தாலும், அனைத்து உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் அழித்துவிடப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் ஒழிய ஒப்பந்தமாகவே இருக்கும்.

**காப்புறுதி வருமதிகள்**

காப்புறுதி வருமதிகள் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகள் சோதனையினை திருப்திப்படுத்துகின்றன (முவகொமா சோதனை) ஏனெனில் விளைவானது முதல் மற்றும் வட்டியினை மாத்திரமே பிரதிநிதிப்படுத்துவதனாலாகும். காப்புறுதி வருமதிகளுக்கு வட்டி அறவிடல் காணப்படாவிட்டாலும் அவை குறுங்காலமாக கருதப்படுவதனால் முவகொமா சோதனையினை திருப்திப்படுத்துவதுடன் வட்டி அறவிடுவதற்கு கடன் இடர் காணப்படுவதில்லை. முவகொமா சோதனையினை நிறைவுசெய்ததன் பின்னர் முகாமைத்துவமானது ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக வைத்திருக்கப்படும் வணிக மாதிரியினை தெரிவுசெய்ததுடன் இவை குறுங்கால தன்மையினைக் கொண்டுள்ளதனால் இக்கருவியினை பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் அளவிடுகின்றது. இவை நிதியளித்தல் கூறு காணப்படாத குறுங்கால மீதிகள் ஆகையால், பெறுமதிகுறைப்புக் கிரயமானது அதன் கொண்டுசெல்லல் பெறுமதிக்குச் சமனாக காணப்படும். மூன்று கட்டங்களின் அடிப்படையில், செயலாக்கம் (கட்டம் 1), குறைச்செயலாக்கம் (கட்டம் 2), செயலாக்கமற்றவை (கட்டம் 3), கம்பனியானது 12 மாதங்கள் எகந மற்றும் ஆயுட்கால எகந இனை பல்வேறு காட்சிநிலைகளிடையே நிறையிட்டு எகந இனை ஏற்பாடு செய்கின்றது.

**நியதிகள் மற்றும் நிபந்தனைகளிலான கணிசமான திருத்தத்தின் நிமித்தம் அங்கீகாரத்திலிருந்து அகற்றல்**

குழுமமானது வருமதியான காப்புறுதி தவணைக்கட்டணத்தினை பின்வரும் சந்தர்பத்தில் அங்கீகாரத்திலிருந்து அகற்றுகின்றது. அது ஓர் புதிய காப்புறுதி ஒப்பந்தமாகும் வரைக்குமாக கணிசமானளவு அதன் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீள்-பேரம் பேசப்பட்டிருக்ககுமானால், ஏதேனும் வித்தியாசம் ஓர் தனியான சொத்து அல்லது பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகின்றது. புதிதாக அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி ஒப்பந்தங்கள் எகந அளவீட்டு நோக்கங்களுக்காக கட்டம் 1 ஆக வகைப்படுத்தப்படுகின்றது.

ஏனையவற்றுக்கிடையில், ஓர் வருமதியான காப்புறுதி தவணைக்கட்டணத்தை அங்கீகாரத்திலிருந்து அகற்றுவதா அல்லது இல்லையா என்பதை மதிப்பீடு செய்யும்போது. குழுமமானது பின்வரும் காரணிகளை கருத்திலெடுக்கின்றது:

- காப்புறுதி அக்கறையின் இழப்பு
- எதிர்தரத்தவரிலான மாற்றம்

**காப்புறுதி வருமதிகளின் வலுக்குன்றல் மதிப்பீடு**

குழுமமானது எகந முறையின் அடிப்படையில் வலுக்குன்றல் ஏற்பாட்டினை மதிப்பீடு செய்தது.

**மீள்காப்புறுதி வருமதிகள்**

கம்பனியானது வழக்கமான வணிகச் செயற்பாட்டில் காப்புறுதி இடர்நேர்கையினை மீள்காப்புறுதிக்கு ஒப்புவிக்கின்றது. மீள்காப்புறுதி வருமதிகள் காப்புறுதி கம்பனிகளிலிருந்து வரவேண்டிய மீதிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீள்காப்புறுதியாளரிடமிருந்து மீட்கக்கூடிய தொகைகள், நிலுவையிலுள்ள கோரல்கள் ஏற்பாட்டுடன் ஓர் நிலைப்பேருள்ள விதத்தில் அல்லது மீள்காப்புறுதியாளரின் கொள்கைகளுடன் இணைந்த தீர்ப்பனவு செய்யப்பட்ட கோரல்கள் மற்றும் தொடர்புடைய மீள்காப்புறுதி ஒப்பந்தத்திற்கு அமைவாக மதிப்பீடு செய்யப்படுகின்றன.

ஒப்புவிக்கப்பட்ட மீள்காப்புறுதி ஏற்பாடுகள் குழுமத்தினை காப்புறுதியுறுநர்களுக்கான கடப்பாடுகளிலிருந்து விடுவிக்காது.

மீள்காப்புறுதி வருமதிகள் தொடர்பான பண்புகளுக்கமைய கருவிகள் ஒப்பந்த காசுப் பாய்ச்சல் பண்புச் சோதனைக்கு (முவகொமா சோதனை) தகமை பெறுகின்றது ஏனெனில் விளைவானது முதல் மற்றும் வட்டியினை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. வருமதியான மீள்காப்புறுதிக்கு எவ்விதமான வட்டியும் அறவிடப்படுவதில்லையாயினும், அவை குறுங்காலமாக மற்றும் வட்டி அறவிடுவதற்கு கடன் இடர்நேர்கை காணப்படாததாக கருதப்படுவதனால் அவை முவகொமா சோதனையினை திருப்திப்படுத்துகின்றது. முவகொமா சோதனை நிறைவுசெய்ததன் பின்னர், முகாமைத்துவமானது ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக வைத்திருக்கும் வணிக மாதிரியினை மற்றும் இவை குறுங்கால தன்மையினை கொண்டுள்ளதனால் கருவியினை பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடுவதற்கும் தெரிவுசெய்தது. இவை ஓர் நிதியளிப்பு கூறு அற்ற குறுங்கால மீதிகள் ஆகையால், பெறுமதி குறைப்புக் கிரயமானது கொண்டுசெல்லல் பெறுமதிக்குச் சமனாகும்.

**மீள்காப்புறுதி வருமதிகளுக்கான வலுக்குன்றல் மதிப்பீடு**

SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்கள், பிரிவு 20 இன் அடிப்படையில் கம்பனியின் காப்புறுதி வருமதிகள் எகந மாதிரிக்கு தகமை பெறவில்லை. பின்வரும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் மீள்காப்புறுதி வருமதிகளில் வலுக்குன்றல் நட்டங்கள் அங்கீகரிக்கப்படும். பாகுபாடற்ற சான்று காணப்படாவிட்டால், விளைவாக மீள்காப்புறுதி சொத்துக்களது ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் இடம்பெற்றிருப்பின், கம்பனி ஒப்பந்தத்தின் நியதிகளின் கீழ் அதற்கு வரவேண்டிய அனைத்து தொகைகளையும் பெறாதுவிடின், மற்றும் அந்த நிகழ்வானது மீள்காப்புறுதியாளரிடமிருந்து கம்பனி பெறவேண்டிய தொகைகளில் ஓர் நம்பத்தகுந்த அளவிடக்கூடிய தாக்கத்தினை கொண்டிருப்பின்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 26. வருமதியான காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி (தொடர்ச்சி...)

**ஒத்திவைக்கப்பட்ட செலவினங்கள்**

**ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்கள் (ஒகைகி)**

தரகு, காப்புறுதி ஒப்பந்தம், சந்தைப்படுத்தல் மற்றும் காப்புறுதி ஒப்பந்த வழங்கல் செலவினங்கள் உள்ளடங்கலான புதிய வணிகங்களது கையகப்படுத்தல் கிரயமானது மாறுபடலாம் மற்றும் புதிய வணிகங்களது உருவாக்கலுடன் நேரடியாக தொடர்புபட்டவை எதிர்கால தவணைக்கட்டணங்களிலிருந்து மீட்கக் கூடியளவிற்கு இந்தக் கிரயங்கள் ஒத்திவைக்கப்படுகின்றன. ஏனைய அனைத்து கையகப்படுத்தல் கிரயங்களும் ஆட்படும்போது ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்கள் (ஒகைகி), உழைக்கப்படாத தவணைக்கட்டணம் பெறுமதி குறைப்புச் செய்யப்படும் அடிப்படையில், காலப்பகுதியில் பெறுமதி குறைப்புச் செய்யப்படுகின்றன.

சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுட்காலத்தில் அல்லது சொத்தில் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களின் எதிர்பார்க்கும் நுகர்வுப் போக்கிலான மாற்றங்கள் பெறுமதிகுறைப்புக் காலத்தினை மாற்றுவதன் மூலம் கணக்கீடு செய்யப்படுவதுடன் ஒரு கணக்கீட்டு மதிப்பீட்டிலான மாற்றமாக கவனிக்கப்படுகின்றது.

தொடர்புடைய ஒப்பந்தங்கள் முதிர்வடைந்தால் அல்லது ரத்துசெய்யப்பட்டால் ஒகைகி அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றது.

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியில் அல்லது வலுக்குன்றல் எழக்கூடிய ஒரு குறிகாட்டி காணப்படின் அடிக்கடியாக ஒகைகி இலான ஒரு வலுக்குன்றல் மீளாய்வு செயற்படுத்தப்படுகின்றது. கொண்டுசெல்லல் தொகையிலும் பார்க்க மீட்கத்தக்க தொகையானது குறைவாகக் காணப்படும்போது ஒரு வலுக்குன்றல் நட்டமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலத்திற்குமான பொறுப்பு போதுமை சோதனைக்கு ஒகைக உம் கருத்திலெடுக்கப்படுகின்றது.

**மீள்காப்புறுதி தரகு**

வெளிவாரி மீள்காப்புறுதி ஒப்பந்தங்களில் வருமதியான தரகுகள் எதிர்பார்க்கப்படும் தவணைக்கட்டணம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் காலத்தின் மீது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் ஒத்திவைக்கப்பட்டு பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றன.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022 ரூ. '000 | 2021 ரூ. '000 | 2022 ரூ. '000 | 2021 ரூ. '000 |
| வருமதியான மீள்காப்புறுதி | - | - | 606,386 | 277,279 |
| வருமதியான காப்புறுதி | - | - | 716,142 | 747,182 |
| மொத்தம் | - | - | 1,322,528 | 1,024,461 |
| நியாயப் பெறுமதி | - | - | 1,322,528 | 1,024,461 |

## 27. நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில்

**கணக்கீட்டுக் கொள்கை**

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், கம்பனியானது மூலோபாய நோக்கத்திற்காக வைத்திருக்கும் அதன் உரித்துவ முதலீடுகளில் சிலவற்றை அவ்வப்போது, அவை வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாதபோது ஏவிவநிபெ இல் உரித்துவ கருவிகளாக மாற்றவியலாதவாறு அவை LKAS 32 "நிதியியல் கருவிகள்: முன்னிலைப்படுத்தல்" இன் கீழ் உரித்துவ வரையறையினை சந்திக்கும்போது வகைப்படுத்துவதற்கு தெரிவுசெய்கின்றது. அத்தகைய வகைப்படுத்தலானது ஓர் கருவியிலிருந்து கருவி அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

இந்த உரித்துவ கருவிகளிலான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஒருபோதும் மீள்சுழற்சி செய்யப்படுவதில்லை என்பதுடன் அதற்குப் பதிலாக அவை அங்கீகார அகற்றலின்போது நேரடியாக நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு மாற்றல் செய்யப்படுகின்றன. கொடுப்பனவிற்கான உரிமையானது நிலைநாட்டப்படும்போது பங்கிலாபங்கள் ஏனைய செயற்பாட்டு வருமானமாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏவிவநிபெ இல் உள்ள உரித்துவ கருவிகள் ஓர் வலுக்குன்றல் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதில்லை

எய்தப்பெற்றிராத இலாபங்கள் மற்றும் நட்டங்கள் உரித்துவத்தில் ஏவிவ ஊடாக "நியாயப் பெறுமதி ஒதுக்கத்தில்" அங்கீகரிக்கப்படுகின்றன. இந்த நிதியியல் முதலீடுகள் விற்பனைசெய்யப்படும்போது முன்னர் நியாயப் பெறுமதி ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டம் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு மாற்றல் செய்யப்படுகின்றன. நிதியியல் சொத்தினை - ஏவிவநிபெ வைத்திருக்கும்போது உழைக்கப்படும் பங்கிலாபமானது, கொடுப்பனவினை பெறுவதற்கான உரிமை நிலைநாட்டப்படும்போது, வருமானக் கூற்றில் "ஏனைய செயற்பாட்டு வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2022 ரூ. '000 | 2021 ரூ. '000 | 2022 ரூ. '000 | 2021 ரூ. '000 |
| உரித்துவப் பிணையங்கள் | 27.1 | 269 | 231,838 | 309,118 | 231,838 | 309,118 |
| திறைசேரி உண்டியல்கள் | | | - | - | 299,663 | 426,376 |
| தொகுதிக் கடன்கள் | | | 1,101,440 | - | 1,101,440 | - |
| மொத்தம் | | | 1,333,278 | 309,118 | 1,632,941 | 735,494 |
| நியாயப் பெறுமதி | | | 1,333,278 | 309,118 | 1,632,941 | 735,494 |

### 27.1 உரித்துவ முதலீடுகள் மற்றும் தொகுதிக்கடன் முதலீடுகள் - கம்பனி மற்றும் குழுமம்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | | | 2022 | | | 2021 | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குறிப்பு | பக்க எண் | பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டின் கிரயம் ரூ. '000 | சந்தைப் பெறுமதி ரூ. '000 | பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டின் கிரயம் ரூ. '000 | சந்தைப் பெறுமதி ரூ. '000 |
| உரித்துவ முதலீடுகள் | | | | | | | | |
| பீபள்ஸ் மேர்ச்சன்ட் வைனான்ஸ் பிஎல்சி | | | 25,014,002 | 237,633 | 135,076 | 25,014,002 | 237,633 | 180,100 |
| ஆசிரி ஹொஸ்பிட்டல் | | | 500,000 | 20,730 | 18,750 | | | |
| சனச டெவலப்மன்ட் பேங்க் பிஎல்சி | | | 2,271,260 | 213,853 | 67,002 | 2,271,260 | 213,853 | 129,008 |
| | | | | 472,216 | 220,828 | | 451,486 | 309,108 |
| இலங்கை கடன் தகவல் மையம் | 27.2.1 | 269 | 100 | 10 | 10 | 100 | 10 | 10 |
| லங்கா கிரடிட் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி | | | 5,000,000 | 50,000 | 11,000 | 50,000,000 | 50,000 | - |
| துணை மொத்தம் | | | - | - | 231,838 | - | - | 309,118 |
| தொகுதிக்கடன் முதலீடுகள் | | | | | | | | |
| இலங்கை மின்சார சபை | | | 9,180,900 | 1,000,086 | 891,470 | - | - | - |
| சம்பத் வங்கி | | | 2,025,000 | 211,149 | 209,970 | - | - | - |
| மொத்தம் | | | | 1,733,461 | 1,333,278 | | 501,496 | 309,118 |

### 27.2 படிநிலை மட்டம் 3 இன் கீழான பட்டியலிடப்படா உரித்துவ பிணையங்களுக்கான நியாயப் பெறுமதி அளவீட்டின் கணக்கிணக்கம்

#### 27.2.1 இலங்கை கடன் தகவல் மையம்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022 ரூ. '000 | 2021 ரூ. '000 | 2022 ரூ. '000 | 2021 ரூ. '000 |
| ஏப்ரல் 1 இல் உள்ளவாறான மீதி | 10 | 10 | 10 | 10 |
| ஏவிவ இல் அங்கீகரிக்கப்பட்ட மீள்அளவீடு | - | - | - | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 10 | 10 | 10 | 10 |

## 28. கடன் கருவி - பெறுமதி குறைப்புக் கிரயத்தில்

**கணக்கீட்டுக் கொள்கை**

SLFRS 9 இன் பிரகாரம், "நிதியியல் முதலீடுகள்" பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் சந்தித்தால் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படுவதுடன், இநநிபெ இல் வரையறுக்கப்படுவதில்லை:

- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை திரட்டுவதற்காக வைத்திருக்கும் நோக்கத்தினையுடைய வணிக மாதிரியினுள் சொத்து வைத்திருக்கப்படல் வேண்டும் ; மற்றும்
- நிதிச் சொத்தின் ஒப்பந்த நியதிகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப் பாய்ச்சல்களை எழுப்புவதுடன், இவை நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மாத்திரமாயிருத்தல் வேண்டும்.

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், இவை பின்னர் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன (விவவீ இனை பயன்படுத்திய மொத்த கொண்டுசெல்லல் தொகையில் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு கழிக்கப்பட்டதன் பின்னர்). பெறுமதி குறைப்புக் கிரயமானது கையகப்படுத்தலின்போதான ஏதேனும் கழிவு அல்லது வட்டத்தினையும் விவவீ இன் ஒருங்கிணைந்த பாகமாயுள்ள கட்டணங்கள் மற்றும் கிரயங்களையும் கணக்கிலெடுத்து கணிப்பிடப்படுகின்றது. பெறுமதி குறைப்பானது "வட்டி வருமானத்தில்" உள்ளடக்கப்படுவதுடன் வலுக்குன்றலிலிருந்து எழுகின்ற நட்டங்கள் வருமானக் கூற்றில் "கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான வலுக்கன்றல் கட்டணங்கள்" இல் அங்கீகரிக்கப்படுகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 28. கடன் கருவி - பெறுமதி குறைப்புக் கிரயத்தில் (தொடர்ச்சி...)

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | 9,827,221 | 6,319,142 | 9,827,221 | 6,319,142 |
| திறைசேரி முறிகள் | - | 675,064 | 2,750,582 | 1,539,558 |
| பட்டியலிடப்படா முன்னுரிமைப் பங்குகள் | - | - | 918,504 | 734,686 |
| வணிகத் தாள் | - | - | 152,475 | 155,245 |
| தொகுதிக்கடன்கள் | - | - | 2,364,743 | 2,183,083 |
| மொத்தம் | 9,827,221 | 6,994,206 | 16,013,525 | 10,931,714 |
| நியாயப் பெறுமதி | 9,804,639 | 6,984,078 | 15,765,803 | 11,200,604 |

### 28.1 தொகுதிக்கடன்கள்

| | வீதம் | முதிர்வுத் திகதி | குழுமம் 2022 தொகுதிக்கடன்களின் எண்ணிக்கை | குழுமம் 2022 கொண்டுசெல்லல் பெறுமதி ரூ. '000 | குழுமம் 2021 தொகுதிக்கடன்களின் எண்ணிக்கை | குழுமம் 2021 கொண்டுசெல்லல் பெறுமதி ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| சம்பத் பேங்க் பிஎல்சி | 8.25% | 14-Dec-19 | - | - | - | - |
| | 9.90% | 18-Nov-20 | 500,000 | - | 500,000 | - |
| | 12.50% | 20-Mar-23 | 1,000,000 | 100,366 | 1,000,000 | 100,401 |
| | 13.90% | 24-Feb-24 | 1,000,000 | 101,152 | 1,000,000 | 101,152 |
| சியபத்த பைனான்ஸ் பிஎல்சி | 13.33% | 8-Aug-24 | 1,500,000 | 162,630 | 1,500,000 | 162,632 |
| தேசிய சேமிப்பு வங்கி | 11.00% | 10-Sep-22 | 1,000,000 | 105,940 | 1,000,000 | 105,941 |
| நெஷனல் டெவலப்மன்ட் பேங்க் பிஎல்சி | 9.40% | 24-Jun-20 | 282,800 | - | 282,800 | - |
| | 13.95% | 30-Mar-24 | 2,000,000 | 200,149 | 2,000,000 | 200,163 |
| டிஎவ்சிசி பேங்க் பிஎல்சி | 9.40% | 10-Jun-20 | 332,100 | - | 332,100 | - |
| | 12.75% | 9-Nov-23 | 1,000,000 | 104,925 | 1,000,000 | 104,925 |
| | 13.00% | 29-Mar-25 | 844,500 | 84,538 | 844,500 | 84,538 |
| | 13.50% | 28-03-2024 | 1,000,000 | 100,143 | 1,000,000 | 100,143 |
| | 11.00% | 12-Jun-25 | 1,190,000 | 129,415 | 1,190,000 | 128,912 |
| செலான் பேங்க் பிஎல்சி | 12.85% | 29-Mar-23 | 750,000 | 75,026 | 750,000 | 75,051 |
| MTD வோர்க்கர்ஸ் பிஎல்சி | 11.75% | 30-Sep-19 | 254,784 | 26,954 | 254,784 | 26,954 |
| கொமர்ஷல் பேங்க் பிஎல்சி | 10.75% | 8-Mar-21 | 2,000,000 | - | 2,000,000 | - |
| | 12.00% | 27-Oct-21 | - | - | 421,900 | 44,316 |
| | 12.00% | 22-Jul-23 | 881,700 | 90,106 | 881,700 | 90,106 |
| ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி | 11.25% | 28-Mar-21 | 2,000,000 | - | 2,000,000 | - |
| | 13.00% | 1-Nov-23 | 193,300 | 20,332 | 193,300 | 20,332 |
| | 12.30% | 22-Sep-24 | 413,300 | 43,900 | 413,300 | 43,900 |
| நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பிஎல்சி | 12.65% | 8-Nov-21 | - | - | 2,000,000 | 209,851 |
| | 12.80% | 23-Dec-24 | 2,000,000 | 206,553 | 2,000,000 | 206,568 |
| ஹேலீஸ் பிஎல்சி | 12.50% | 31-Jul-23 | 1,000,000 | 101,978 | 1,000,000 | 101,978 |
| இலங்கை மின்சார சபை | 9.35% | 15-Apr-26 | 4,000,000 | 435,694 | | |
| LOLC பிஎல்சி | 10.25% | 24-Feb-26 | 3,000,000 | 302,819 | 3,000,000 | 302,819 |
| துணைமொத்தம் | | | | 2,392,620 | | 2,210,684 |
| கழி: எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களுக்கான தள்ளுபடி | | | | (27,877) | | (27,601) |
| மொத்தம் | | | | 2,364,743 | | 2,183,083 |

எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களுக்கான மொத்த தள்ளுபடியானது 12 மாத எகந இலிருந்து எழுகின்றது ஏனெனில் இந்த பிரிவின் கீழான அனைத்து முதலீடுகளும் முதலீட்டுத் தர கருவிகளாகும்.

## 29. துணைக்கம்பனிகளிலான முதலீடுகள்

**கணக்கீட்டுக் கொள்கை**

துணைக்கம்பனியிலான முதலீடு கிரயத்தில் குறிப்பிடப்படுவதுடன், கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் சாட்டப்பட்ட ஏதேனும் வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - LKAS 27 – ' ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தனியான நிதிக் கூற்றுக்கள்' க்கு ஏற்ப குறிப்பிடப்படுகின்றன.

துணைக்கம்பனிகள் என்பன கம்பனியினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகும். துணைக்கம்பனிகள் கம்பனிக்கு கட்டுப்பாடானது மாற்றல் செய்யப்பட்ட திகதியில் ஒருங்கிணைக்கப்படுவதுடன் அத்தகைய கட்டுப்பாடு நிறுத்தப்படும்வரை தொடர்ந்தும் ஒருங்கிணைக்கப்படும். கம்பனியானது பின்வரும் சந்தர்ப்பங்களில் ஓர் முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்தினை கட்டுப்படுத்துவதாக ஊகிக்கின்றது: அது முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்துடனான அதன் ஈடுபாட்டிலிருந்து மாற்றமடையும் விளைவிற்கு வெளிப்பாடு, அல்லது உரிமையினைக் கொண்டிருந்தால் மற்றும் முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்திலான அதன் அதிகாரத்தினூடாக அந்த விளைவுகளை பாதிக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தால் என்பனவாகும்.

குழுமத்தினுள்ளான மீதிகள், கொடுக்கல் வாங்கல்கள், வருமானம், செலவினங்கள் மற்றும் குழுமத்தினுள்ளான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழும் ஏதேனும் எய்தப்பெறாத இலாபங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்போது அகற்றப்படுகின்றன.

கடடுப்பாடற்ற அக்கறைகள், கம்பனியினால் நேரடியாக அல்லது மறைமுகமாக துணைக்கம்பனியின் சொந்தமில்லாத உரித்துவத்தின் பகுதியினை பிரதிநிதித்துவம் செய்கின்றன.

கட்டுப்பாடற்ற அக்கறைகள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் உரித்துவத்துடன் முன்னிலைப்படுத்தப்படுகின்றன ஆனால் தாய் கம்பனியின் உரித்துடைமையாளர்களின் உரித்துவத்திலிருந்து வேறுபடுத்தி காண்பிக்கப்படும். இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானத்தின் ஒவ்வொரு கூறும் கட்டுப்பாடற்ற அக்கறைக்கு உரித்தானது ஒருங்கிணைக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தனியாக காட்சிப்படுத்தப்படுகின்றது. கட்டுப்பாட்டு அக்கறைக்கு பிரயோகிக்கப்படும் ஏதேனும் நட்டங்கள் ஓர் பற்றாக்குறையான மீதியினை விளைவித்தாலும் கட்டுப்பாடற்ற அக்கறைகளின் அக்கறைக்கு எதிராக ஒதுக்கப்படுகின்றது. கட்டுப்பாடற்ற அக்கறைகளின் கையகப்படுத்தலானது தாய் நிறுவனத்தின் நீடிப்பு முறையினை பயன்படுத்தி கணக்கீடு செய்யப்படுகின்றது, இதன் மூலம் மறுபயனுக்கும் கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துக்களின் பங்கிற்கான நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமானது உரித்துவமாக அங்கீகரிக்கப்படுகின்றது

கம்பனியின் அனைத்து துணைக்கம்பனிகளும் இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன் லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் பங்களாதேஷில் ஒருங்கிணைக்கப்பட்டது. பிரதான நடவடிக்கையின் மூலம் வைத்திருக்கப்படும் விகிதாசாரங்களிலான மாற்றங்களுடன் துணைக்கம்பனிகளின் ஓர் பட்டியலானது பக்கம் 215 இல் காணப்படும் குறிப்பு 1.2 இல் வழங்கப்பட்டுள்ளது.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2022 | | | 2021 | | |
|---|---|---|---|---|---|---|
| கம்பனி | உரித்துவம் % | கிரயம் ரூ. '000 | பணிப்பாளர்களது / சந்தை பெறுமதியிடல் ரூ. '000 | உரித்துவம் % | கிரயம் ரூ. '000 | பணிப்பாளர்களது / சந்தை பெறுமதியிடல் ரூ. '000 |
| பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் | 100.00 | 175,000 | 385,556 | 100.00 | 175,000 | 332,983 |
| பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் | 100.00 | 550,000 | 985,396 | 100.00 | 550,000 | 1,013,914 |
| பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட் | 100.00 | 600,000 | 728,694 | 100.00 | 600,000 | 626,158 |
| பீபள்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிட்டட் | 100.00 | 150,000 | 504,701 | 100.00 | 150,000 | 367,437 |
| பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி | 75.00 | 600,000 | 4,515,000 | 75.00 | 600,000 | 2,955,000 |
| லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட் | 51.00 | 1,138,788 | 2,272,595 | 51.00 | 1,138,788 | 1,482,658 |
| மொத்தம் | | 3,213,788 | 9,391,942 | | 3,213,788 | 6,778,150 |

பீபள் இன்சூரன்ஸ் பிஎல்சி இனைத் தவிர துணைக்கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படவில்லை. துணைக்கம்பனிகளிலான முதலீட்டின் பணிப்பாளர்களது பெறுமதியிடலானது ஒரு தேறிய சொத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி சந்தைப் பெறுமதி அடிப்படையில் பெறுமதியிடப்பட்டுள்ளது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 29. துணைக்கம்பனிகளிலான முதலீடுகள் (தொடர்ச்சி...)

ஒரு பொருண்மையான கட்டுப்பாடற்ற அக்கறையினைக் கொண்ட குழுமத்தின் துணைக்கம்பனி தொடர்பான தகவல்களை பின்வரும் அட்டவணையானது சுருக்கமாக வழங்குகின்றது.

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | 2022 | | | 2021 | | |
|---|---|---|---|---|---|---|
| | பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி ரூ. '000 | லங்கன் எலாயனஸ் வைனான்ஸ் லிமிட்டட் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 | பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி ரூ. '000 | லங்கன் எலாயனஸ் வைனான்ஸ் லிமிட்டட் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
| கட்டுப்பாடற்ற அக்கறையின் (கஅ) சதவீதம் | 25% | 49% | | 25% | 49% | |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | 4,562,288 | 449,753 | 5,012,041 | 5,294,873 | 361,819 | 5,656,692 |
| கழி: செயற்பாட்டு செலவினங்கள் | 4,254,559 | 478,043 | 4,732,602 | 3,728,072 | 303,451 | 4,031,523 |
| வருமான வரிக்கு முந்திய இலாபம் | 307,729 | (28,290) | 279,439 | 1,566,801 | 58,368 | 1,625,169 |
| கழி: வருமான வரிச் செலவினம் | 217,338 | (7,556) | 209,782 | 363,208 | 55,468 | 418,676 |
| வரிக்கு பிந்திய இலாபம் | 90,391 | (20,734) | 69,657 | 1,203,593 | 2,900 | 1,206,493 |
| கட்டுப்பாடற்ற அக்கறைக்கு ஒதுக்கப்பட்ட இலாபம் | 22,598 | (10,160) | 12,438 | 300,898 | 1,421 | 302,319 |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2022 | | | 2021 | | |
|---|---|---|---|---|---|---|
| | பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி ரூ. '000 | லங்கன் எலாயனஸ் வைனான்ஸ் லிமிட்டட் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 | பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி ரூ. '000 | லங்கன் எலாயனஸ் வைனான்ஸ் லிமிட்டட் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | 642,756 | 124,218 | 766,974 | 1,045,082 | 42,604 | 1,087,686 |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான மீதிகள் | 2,561,413 | 1,997,930 | 4,559,343 | 2,815,391 | 505,607 | 3,320,998 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் | 2,709,882 | 10,964,065 | 13,673,947 | 2,558,607 | 4,735,863 | 7,294,470 |
| வருமதியான காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி | 1,931,657 | - | 1,931,657 | 1,643,629 | - | 1,643,629 |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 299,663 | - | 299,663 | 426,376 | - | 426,376 |
| பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கடன் கருவிகள் | 2,750,582 | 918,504 | 3,669,086 | 864,494 | 691,274 | 1,555,768 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்கள் | 106,954 | 183,036 | 289,990 | 182,322 | 147,778 | 330,100 |
| ஏனைய சொத்துக்கள் | 1,099,636 | 356,326 | 1,455,962 | 1,597,954 | 204,811 | 1,802,765 |
| மொத்த சொத்துக்கள் | 12,102,543 | 14,544,079 | 26,646,622 | 11,133,855 | 6,327,937 | 17,461,792 |
| வங்கிகளுக்கு செலுத்துவேண்டியவை | 184,738 | 796,993 | 981,731 | 3,020 | 105,449 | 108,469 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | - | 8,665,037 | 8,665,037 | - | 2,944,262 | 2,944,262 |
| ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 969,610 | 528,323 | 1,497,933 | 691,728 | 273,396 | 965,124 |
| நிதிக் பொறுப்புக்கள் | 216,897 | 97,658 | 314,554 | 482,995 | 97,658 | 580,653 |
| lகாப்புறுதிப் பொறுப்புக்கள் மற்றும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி | 5,982,246 | - | 5,982,246 | 5,089,039 | - | 5,089,039 |
| மொத்த பொறுப்புக்கள் | 7,353,491 | 10,088,011 | 17,441,501 | 6,266,782 | 3,420,765 | 9,687,547 |
| தேறிய சொத்துக்களின் பெறுமதி | 4,749,052 | 4,456,068 | 9,205,120 | 4,867,073 | 2,907,172 | 7,774,245 |
| கட்டுப்பாடற்ற அக்கறைகளின் கொண்டு செல்லல் தொகை | 1,187,263 | 2,183,473 | 3,370,736 | 1,216,768 | 1,424,514 | 2,641,283 |

## 30. முதலீட்டு ஆதனம்

**கணக்கீட்டுக் கொள்கை**

முதலீட்டு ஆதனம் என்பது ஒன்றில் வாடகை வருமானத்தினை உழைப்பதற்காக அல்லது மூலதன மதிப்பேற்றத்திற்கு அல்லது இவ்விரண்டுக்காகவும் வைத்திருக்கப்படுபவை ஆனால் வழக்கமான வணிக நடவடிக்கையின்போது விற்பனைக்காக, பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்திசெய்வதற்கு அல்லது விநியோகிப்பதற்கு அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுபவை அல்ல.

முதலீட்டு ஆதனங்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் முதலீட்டு ஆதனங்கள் நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன் அது நிதி நிலைமைக் கூற்று திகதியில் சந்தை நிலவரத்தினை பிரதிபலிக்கின்றது. நியாயப் பெறுமதியின் மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை எழும் வருடத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

குழுமக் கம்பனிகள் ஒரு துணைநிறுவனத்தின் முதலீட்டு ஆதனத்தின் கணிசமானளவு பகுதியினை அமர்வுகொண்டால், அத்தகைய முதலீட்டு ஆதனமானது ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமாக கவனிக்கப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 16 - "ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்" இன் பிரகாரம் கணக்கிலடப்பட்டுள்ளது.

**அங்கீகாரத்திலிருந்து அகற்றுதல்**

முதலீட்டு ஆதனங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றன. அவை விற்பனை செய்யப்பட்டால் அல்லது முதலீட்டு ஆதனமானது பயன்பாட்டிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டிருந்தால் மற்றும் அதன் விற்பனையிலிருந்து எவ்விதமான எதிர்கால பொருளாதார நலனும் எதிர்பார்க்கப்படாவிட்டால் ஆகும் ஓர் முதலீட்டு ஆதனத்தின் விற்பனை அல்லது ஓய்வுகொடுப்பதிலிருந்தான ஏதேனும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அது ஓய்வுகொடுக்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட வருடத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**முதலீட்டு ஆதனத்திற்கு / த்திலிருந்து பின்னரான மாற்றல்கள்**

முதலீட்டு ஆதனத்திற்கு பயன்பாட்டில் மாற்றம் காணப்பட்டால் மாத்திரமே மாற்றல்கள் செய்யப்படுகின்றன. உரிமையாளரது அமர்வு நிறைவடைந்ததற்கான சான்று, மற்றுமோர் தரப்பினருக்கான ஓர் செயற்பாட்டு குத்தகையின் ஆரம்பம், அல்லது கட்டுமானத்தின் அல்லது அபிவிருத்தியின் நிறைவு.

முதலீட்டு ஆதனத்திலிருந்து பின்வருவன இடம்பெற்றால் மாத்திரமே மாற்றல்கள் செய்யப்படுகின்றன. பயன்பாட்டிலான ஓர் மாற்றம், உரிமையாளர் அமர்வுகொள்ளல் ஆரம்பித்தால் அல்லது விற்பனை செய்யும் நோக்கத்துடன் அபிவிருத்தியினை ஆரம்பித்திருந்தால்.

முதலீட்டு ஆதனத்திலிருந்து உரிமையாளர் அமர்வுகொண்ட ஆதனத்திற்கு அல்லது இருப்புகளுக்கு மாற்றல் செய்வதற்காக, பயன்பாட்டிலான மாற்றல் இடம்பெற்ற திகதியில் பின்னர் கணக்கீடு செய்வதற்காக ஆதனத்தின் கருதப்படக்கூடிய கிரயமானது அதன் நியாயப் பெறுமதியாகும். ஓர் உரிமையாளர் அமர்வுகொண்ட ஆதனமாக கம்பனியினால் அமர்வுகொள்ளப்படும் ஆதனம் காணப்படுமாயின் அது முதலீட்டு ஆதனமாக வருவதுடன் கம்பனியானது பயன்பாட்டிலான மாற்றம் இடம்பெறும் திகதி வரைக்கும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் கீழ் குறிப்பிடப்பட்ட கொள்கையின் பிரகாரம் அத்தகைய ஆதனம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

இருப்புக்களிலிருந்து முதலீட்டு ஆதனத்திற்கான ஓர் மாற்றலுக்கு, அந்த திகதியில் உள்ளவாறான சொத்தின் நியாயப் பெறுமதிக்கும் அதன் முன்னைய கொண்டுசெல்லல் தொகைக்குமான ஏதேனும் வித்தியாசமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. கம்பனி ஒரு சுயமாக நிர்மாணிக்கப்பட்ட முதலீட்டு ஆதனத்தின் கட்டுமானத்தினை அல்லது அபிவிருத்தியினை நிறைவுசெய்திருந்தால் அந்த திகதியிலான ஆதனத்தின் நியாயப் பெறுமதிக்கும் அதன் முன்னைய கொண்டுசெல்லல் தொகைக்கும் இடையேயான ஏதேனும் வித்தியாசமானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**முதலீட்டு ஆதனத்தின் நியாயப் பெறுமதி**

குழுமத்தின் மற்றும் கம்பனியின் முதலீட்டு ஆதனமானது நியாயப்பெறுமதியில் பிரதிபலிக்கப்படுகின்றது. ஒத்த சொத்துக்களின் நடைமுறை சந்தை விலைகள் கிடைக்கப்பெறும்போது, இந்த சொத்துக்களின் நியாயப் பெறுமதிகளை மதிப்பிடுவதில் அத்தகைய சான்றுகள் கருத்திலெடுக்கப்படுகின்றன. அத்தகைய தகவல்கள் கிடைக்காதவிடத்து, ஓர் நியாயமான நியாயப் பெறுமதி மதிப்பீடுகளில் குழுமம் மற்றும் கம்பனியானது நியாயப் பெறுமதிகளாக உடைமையாயக்கத்தக்க தொகைகளை தீர்மானிக்கின்றது. இது மதிப்பீடுகளின் அடிப்படையில் கழிவிறக்கம் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்களின் எதிர்காலக் கணிப்பினை கருத்திலெடுப்பதுடன், ஒத்த ஆதனங்களுக்கான நடைமுறை சந்தை வாடகை போன்ற சான்றுகளிலிருந்து பெறப்பட்டவை மற்றும் காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் நேரம் என்பவற்றிலான நிச்சயமற்றதன்மையினை பிரதிபலிக்கும் கழிவிறக்க வீதங்களை பயன்படுத்தி தீர்மானிக்கின்றது.

**நியாயப் பெறுமதியினை தீர்மானித்தல்**

பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் தகமைகளையுடைய மற்றும் மதிப்பிடப்படும் ஆதனத்தின் வகையில் மற்றும் அது அமைந்துள்ள இடத்தில் சமீபத்தைய அனுபவம் கொண்ட வெளிவாரி மற்றும் சுயாதீன மதிப்பீட்டாளர்கள், ஒவ்வொரு வருடமும் முதலீட்டு ஆதனத் தேக்கத்தினை மதிப்பீடு செய்கின்றார்கள். நிதியியல் காலப்பகுதிகளில், அந்தக் காலப்பகுதியினுள் பணிப்பாளர் சபையினால் நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது.

நியாயப் பெறுமதிகள் சந்தைப் பெறுமதிகளின் அடிப்படையிலாகும் என்பதுடன், பயன்பாட்டிலுள்ள பெறுமதி அல்லது அளவீட்டு திகதியில் சந்தை பங்குபற்றுநர்களுக்கிடையே ஓர் முறையான கொடுக்கல் வாங்கலில் ஆதனம் விற்பனை செய்யக்கூடிய மதிப்பிடப்பட்ட தொகை என்பவற்றிலாகும்.

**குழுமத்தினுள் குத்தகைக்கு விடப்பட்ட முதலீட்டு ஆதனம்**

குழுமத்தின் கண்ணோட்டத்திலிருந்து தாய் நிறுவனத்திற்கு அல்லது துணை நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட ஏதேனும் ஆதனமானது உரிமையாளர் அமர்வுகொண்டதாகக் கருதப்படுவதுடன் ஒருங்கிணைக்கும் நோக்கங்களுக்காக செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**உரிமையாளர் அமர்வுகொண்ட ஆதனங்கள் மற்றும் முதலீட்டு ஆதனம்:**

ஒரு சொத்து முதலீட்டு ஆதனமாக தகமை பெற்றுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதில், குழுமம் / கம்பனி, ஆதனம் சுயாதீன காசுப்பாய்ச்சல்களை உருவாக்குகின்றதா என்பதைத் தீர்மானிப்பதில், ஆதனத்திற்கு மாத்திரமன்றி ஏனைய சொத்துக்களுக்கும் உருவாக்கப்படுகின்றதா என்று தீர்மானிக்கின்றது. துணைச்சேவைகள் கணிசமானதா என்று தீர்மானிப்பதில் கருத்துக்கள் பிரயோகிப்படுதவுடன், இதன் காரணமாக ஆதனம் முதலீட்டு ஆதனமாக தகமை பெறாது.

## 30. முதலீட்டு ஆதனம் (தொடர்ச்சி...)

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | - | - | 820,664 | 1,131,596 |
| வருடத்திலான சேர்க்கைகள் | - | - | - | - |
| வருடத்திலான மாற்றல் | - | - | - | (310,932) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | - | - | 820,664 | 820,664 |

இவ்வருடத்தில் இலக்கம் 7 மற்றும் 9, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5 இலுள்ள காணி மற்றும் கட்டிடமானது பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட் இனால் மக்கள் வங்கி, பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி மற்றும் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி ஆகியவற்றிற்கு வாடகைக்கு விடப்பட்டது. குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில், அத்தகைய ஆதனமானது வேறாக்கப்பட்டு மக்கள் வங்கிக்கு பகுதியளவில் வாடகைக்கு விடப்பட்டு குழுமத்திற்கு முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. வேறுபடுத்தலுக்கான அடிப்படை வாடகைக்கு விடப்பட்ட சதுர அடியின் எண்ணிக்கையின் அடிப்படையிலாகும்.

கம்பனியானது முதலீட்டு ஆதனத்தினை சந்தை விலை கொண்டு செல்கின்றது. மேற்குறிப்பிட்ட முதலீட்டு ஆதனத்தின் சந்தைப் பெறுமதியிடலானது 31 டிசம்பர் 2021 இல் கம்பனியுடன் தொடர்பற்ற சுயாதீன மதிப்பீட்டாளரான திரு. கே.டி.டி. திசேரா, FRICS (Eng) அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட முதலீட்டு ஆதனம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட வாடகை வருமானமானது பக்கம் 228 இல் காணப்படும் குறிப்பு 10 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட முதலீட்டு ஆதனம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நேரடி செயற்பாட்டு செலவினங்கள் பக்கம் 234 இல் காணப்படும் குறிப்பு 15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 31. ஏனைய சொத்துக்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

கம்பனி மற்றும் குழுமமானது அவர்களது அனைத்து ஏனைய சொத்துக்களையும் ஏனைய நிதிச் சொத்துக்களாகவும் ஏனைய நிதியல்லாத சொத்துக்களாகவும் வகைப்படுத்துகின்றன. ஏனைய நிதியல்லாத சொத்துக்கள் பிரதானமாக, முற்பணக் கொடுப்பனவுகள், மீட்கத்தக்க பெசேவ, கையிருப்பு மற்றும் நானாவித வருமதிகளை உள்ளடக்குகின்றன. முற்பணக் கொடுப்பனவுகள் வரலாற்றுக் கிரயத்தில் கொண்டுசெல்லப்படுகின்றன.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2022 | 2021 | 2022 | 2021 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் - காப்புறுதி தரகு | | | 108,493 | 126,949 | - | - |
| நிதியல்லாத சொத்துக்கள் | 31.1 | 274 | 640,661 | 448,711 | 831,826 | 932,458 |
| மொத்தம் | | | 749,154 | 575,660 | 831,826 | 932,458 |

### 31.1 நிதியல்லாத சொத்துக்கள்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2022 | 2021 | 2022 | 2021 |
| | | | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | | | 111,524 | 105,693 | 81,928 | 68,320 |
| வருமதியான பங்கிலாபம் | | | 225,000 | - | - | - |
| இருப்புக்கள் | | | 33,015 | 58,380 | 40,815 | 65,708 |
| முற்செலுத்தப்பட்ட செலவினம் | | | 94,605 | 72,367 | 100,814 | 81,759 |
| பெறுமதிகுறைப்பு செய்யப்படாத கிரயத்தில் பணியாட்டொகுதி கடன்கள் (1 நாள் வித்தியாசம்) | 31.2 | 275 | 54,211 | 78,624 | 54,360 | 78,924 |
| ஒத்திவைக்கப்பட்ட செலவினங்கள் | | | - | - | 151,388 | 210,104 |
| ஏனைய வருமதிகள் | | | 122,306 | 133,647 | 402,521 | 427,643 |
| மொத்தம் | | | 640,661 | 448,711 | 831,826 | 932,458 |

### 31.2 பணியாட்டொகுதி கடன்களிலான பெறுமதிகுறைப்பு செய்யப்படாத கிரயம் (ஒரு நாள் வித்தியாசம்)

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022 ரூ. '000 | 2021 ரூ. '000 | 2022 ரூ. '000 | 2021 ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 78,624 | 123,264 | 78,924 | 123,264 |
| வருடத்திற்கான செலவு | (24,413) | (44,640) | (24,564) | (44,340) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 54,211 | 78,624 | 54,360 | 78,924 |

## 32. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

**கணக்கீட்டுக் கொள்கை**

அங்கீகாரத்தின் அடிப்படை
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன தொட்டுணரக்கூடிய உருப்படிகள் என்பதுடன் இவை சேவைகள் வழங்கலுக்காக அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக மற்றும் ஒரு வருடத்திற்கும் மேலான காலப்பகுதியில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சொத்துடன் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் குழுமத்திற்கு பாய்ச்சப்படும் மற்றும் சொத்தின் கிரயமானது நம்பகமாக அளவிடப்படக்கூடிய சாத்தியம் காணப்படுமாயின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் அங்கீகரிக்கப்படுகின்றது.

**அளவீட்டின் அடிப்படை**
ஓர் சொத்தாக அங்கீகரிக்கப்படும் தகைமையினைக் கொண்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படி ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றது. கிரயமானது சொத்தின் கையகப்படுத்தலுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவினத்தை உள்ளடக்குவதுடன் அதன் பின்னர் ஒரு பகுதியினை சேர்ப்பதற்கு அல்லது மாற்றீடு செய்வதற்காக ஆட்பட்ட செலவினத்தையும் உள்ளடக்கும். சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் மூலப் பொருட்கள் மற்றும் நேரடி உழைப்பு, சொத்தினை அதன் பயன்பாட்டின் நோக்கத்திற்காக அதனை செயற்படும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு நேரடியாக உடைமையாக்கத்தக்க வேறு ஏதேனும் செலவினங்கள் மற்றும் பாகம் பாகமாய் பிரித்தெடுப்பதற்கு மற்றும் உருப்படிகளை கழற்றுவதற்கு மற்றும் தளத்தில் அவற்றை புனருத்தாரணம் செய்வதற்கான செலவினங்கள் மற்றும் மூலதனமாக்கப்பட்ட கடன்பெறல் கிரயங்கள் என்பவற்றை உள்ளடக்கும். தொடர்புடைய உபகரணத்தின் செயற்பாட்டிற்கு ஓர் ஒருங்கிணைந்த பாகமாயுள்ள கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் கணினி உபகரணத்தின் ஓர் பாகமாக மூலதனவாக்கப்படுகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஓர் உருப்படியின் பாகங்கள் வெவ்வேறு பயன்பாட்டு ஆயுட்காலங்களைக் கொண்டிருப்பின், அவை ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் பிரத்தியேக உருப்படிகளாக (பாரிய பிரிவுகள்) கணக்கீடு செய்யப்படுகின்றன.

கம்பனி மற்றும் குழுமமானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு கிரய முறையினை பிரயோகிப்பதுடன் கொள்வனவுக் கிரயம் அல்லது கட்டுமாணத்துடன் அவற்றிலான ஏதேனும் தற்செயலான செலவினங்கள் மற்றும் அதிலிருந்த திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு பதிவு செய்கின்றது.

**அடுத்துவரும் கிரயம்**
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின் ஒரு பகுதியினை மாற்றீடு செய்வதற்கான கிரயம், அப்பகுதியில் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் குழுமத்திற்கு பாயச்சப்படும் மற்றும் அதன் கிரயமானது நம்பகமாக அளவிட இயலும் சாத்தியம் காணப்படுமாயின் கொண்டு செல்லல் தொகையில் அங்கீகரிக்கப்படும். ஆதனம், பொறித்தொகுதி மற்றும் நாளாந்த பழுதுபார்த்தல் செலவானது அது ஆட்படபட்ட சமயத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விதிக்கப்படுகின்றது.

**பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு**
பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பானது அவை ஆட்பட்ட நிதியியல் காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விதிக்கப்படுகின்றது. பாரிய புதுப்பித்தல் செலவினமானது, நடைமுறையிலுள்ள சொத்துக்களின் மிக சமீபத்தில் மதிப்பிடப்பட்ட செயலாற்றல் தரத்திலும் மேலான எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனிக்கு மற்றும் குழுமத்திற்கு பாய்ச்சப்படும் சாத்தியம் காணப்பட்டிருந்தால் மற்றும் புதுப்பித்தலானது சொத்தின் இனங்காணக்கூடிய ஓர் பகுதியினை மாற்றீடு செய்திருந்தால் சொத்தின் கொண்டுசெல்லல் தொகையினுள் உள்ளடக்கப்படும். பாரிய புதுப்பித்தல்கள் தொடர்புடைய சொத்தின் எஞ்சிய பயன்பாட்டுக் காலப்பகுதியில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன

**அங்கீகாரத்திலிருந்து அகற்றல்**
விற்பனை செய்யப்பட்டால் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எந்தவித பொருளாதார நலன்களும் எதிர்பார்க்கப்படாவிட்டால் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றன. சொத்தின் அங்கீகார அகற்றலிலிருந்தான ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது (தேறிய விற்பனை வருவாய் மற்றும் சொத்தின் கொண்டுசெல்லல் தொகைக்கும் இடையேயான வித்தியாசமாக கணிப்பிடப்பட்டது) சொத்தானது அங்கீகார அகற்றம் செய்யப்பட்ட வருடத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ' ஏனைய செயற்பாட்டு வருமானம்' இல் அங்கீகரிக்கப்படுகின்றது.

**பெறுமானத்தேய்வு**
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஓர் உருப்படியின் ஒவ்வொரு பாகமும் அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தில் மீது ஓர் நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனெனில், இந்த முறையானது சொத்தினுள் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களின் எதிர்பார்க்கும் நுகர்வுப் போக்கினை மிகவும் நெருக்கமான பிரதிபலிப்பதனாலாகும். காணியானது பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 32. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி...)

மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலங்கள் பின்வருமாறு;

| சொத்தின் வகுப்பு | % வருடாந்தம் | காலம் |
|---|---|---|
| இறையிலி கட்டிடங்கள் | 2 | 50 வருடங்கள் |
| குத்தகை ஆதனத்தின் மேம்படுத்தல் | 25 | 4 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 12.5 - 20 | 5 - 8 வருடங்கள் |
| கணினி வன்பொருள் | 20 | 5 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 10 - 20 | 5 -10 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 20 | 5 வருடங்கள் |

மேற்குறிப்பிடப்பட்ட வீதங்கள் குழும நிறுவனங்களினால் ஒரே மாதிரியாக பயன்படுத்தப்படுகின்றன. பெறுமானத்தேய்வு வீதங்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஓர் உருப்படியின் ஒவ்வொரு முக்கியமான பகுதிக்கும் தனித்தனியாக தீர்மானிக்கப்படுகின்றன. அத்துடன் சொத்தானது பயன்பாட்டிற்கு கிடைக்கப்பெறும்போது பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்படுகின்றது. அதாவது, முகாமைத்துவம் கருதப்பட்ட முறையில் செயற்படுவதற்கான ஆற்றலுக்கு அவசியமான இடம் மற்றும் நிலைமை காணப்படும்போதாகும். ஓர் சொத்தின் பெறுமானத்தேய்வானது, அச்சொத்தானது விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்ட திகதி அல்லது சொத்து அங்கீகாரத்திலிருந்து அகற்றப்பட்ட திகதி இதில் எது முதலில் வருகின்றதோ அத்திகதி தொடக்கம் நிறுத்தப்படுகின்றது. பெறுமானத்தேய்வு முறைகள், பயன்பாட்டு ஆயுட்காலங்கள் மற்றும் எச்சப் பெறுமதிகள் என்பன ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு பொருத்தமாயின் சீராக்கப்படுகின்றது.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் பயனுள்ள ஆயுட்காலங்கள்**

குழுமம் மற்றும் கம்பனியானது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட்காலத்தில் அவற்றின் மதிப்பிடப்பட்ட எச்சப்பெறுமதிகளை கணக்கிலெடுத்ததன் பின்னர் நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்கின்றது. மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலமானது குழுமத்தின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டிலிருந்து குழுமம் மற்றும் கம்பனியானது எதிர்கால பொருளாதார நலன்களை பெறுவதற்கு எண்ணியுள்ள முகாமைத்துவத்தின் மதிப்பீட்டுக் காலத்தினைப் பிரதிபலிக்கின்றது. எச்சப் பெறுமதியானது குழுமம் / கம்பனி சொத்தின் விற்பனையிலிருந்து தற்போது பெறக்கூடிய தொகையினை முகாமைத்துவத்தின் மதிப்பிடப்பட்ட தொகையானது பிரதிபலிக்கின்றது. இது மதிப்பிடப்பட்ட விற்பனைக் கிரயத்தினை கழித்து, சொத்தானது ஏற்கனவே அதன் பயன்பாட்டு ஆயுட்காலத்தினை அடைந்துள்ளது மற்றும் அப்போது எதிர்பார்க்கும் நிலைமையில் காணப்படுகின்றது என்ற அடிப்படையிலாகும். எதிர்பார்க்கப்படும் மட்டத்திலான பயன்பாடு மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகளிலான மாற்றங்கள் இந்த சொத்துக்களின் பொருளாதாரம், பயன்பாட்டு ஆயுட்காலம் மற்றும் எச்சப் பெறுமதிகளை பாதிக்கலாம். இது அதன் விளைவாக எதிர்கால பெறுமானத்தேய்வு கட்டணத்தில் தாக்கம் ஏற்படுத்தலாம்.

### 32.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் - கம்பனி

| | இறையிலி காணியும் கட்டிடங்களும் ரூ. '000 | குத்தகை ஆதனங்களுக்கான மேம்படுத்தல்கள் ரூ. '000 | மோட்டார் வாகனங்கள் ரூ. '000 | கணினி வன்பொருள் ரூ. '000 | அலுவலக உபகரணங்கள் ரூ. '000 | தளபாடமும் பொருத்திகளும் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|
| கிரயம் | | | | | | | |
| 01 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான மீதி | 573,840 | 56,872 | 225,723 | 760,265 | 683,850 | 459,981 | 2,760,531 |
| சேர்க்கைகள் | 149,702 | - | 215,101 | 122,169 | 39,451 | 8,993 | 535,416 |
| விற்பனைகள் | - | - | (2,020) | (7,327) | (57,335) | (28,476) | (95,158) |
| மாற்றல்கள் | - | - | - | (160) | 160 | - | - |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | 723,542 | 56,872 | 438,804 | 874,947 | 666,126 | 440,498 | 3,200,789 |
| (கழி): திரண்ட பெறுமானத்தேய்வு | | | | | | | |
| 01 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான மீதி | 3,234 | 56,872 | 75,255 | 612,873 | 547,487 | 415,560 | 1,711,281 |
| வருடத்திற்கான கட்டணம் | 471 | - | 23,466 | 69,806 | 55,899 | 18,922 | 168,564 |
| விற்பனைகள் | - | - | (1,052) | (7,016) | (56,294) | (28,470) | (92,832) |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | 3,705 | 56,872 | 97,669 | 675,663 | 547,092 | 406,012 | 1,787,013 |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான தேறிய புத்தக பெறுமதி | 719,837 | - | 341,135 | 199,284 | 119,034 | 34,486 | 1,413,776 |

| | இறையிலி காணியும் கட்டிடங்களும் ரூ. '000 | குத்தகை ஆதனங்களுக்கான மேம்படுத்தல்கள் ரூ. '000 | மோட்டார் வாகனங்கள் ரூ. '000 | கணினி வன்பொருள் ரூ. '000 | அலுவலக உபகரணங்கள் ரூ. '000 | தளபாடமும் பொருத்திகளும் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|
| கிரயம் | | | | | | | |
| 01 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 573,840 | 56,872 | 278,163 | 766,212 | 704,670 | 450,446 | 2,830,203 |
| சேர்க்கைகள் | | - | | 33,922 | 54,104 | 16,664 | 104,690 |
| விற்பனைகள் | - | - | (52,440) | (39,869) | (74,924) | (7,129) | (174,362) |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 573,840 | 56,872 | 225,723 | 760,265 | 683,850 | 459,981 | 2,760,531 |
| (கழி): திரண்ட பெறுமானத்தேய்வு | | | | | | | |
| 01 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 2,763 | 56,794 | 85,461 | 586,278 | 556,502 | 398,476 | 1,686,274 |
| வருடத்திற்கான கட்டணம் | 471 | 78 | 15,841 | 63,242 | 64,589 | 23,139 | 167,360 |
| விற்பனைகள் | - | - | (26,047) | (36,647) | (73,604) | (6,055) | (142,353) |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 3,234 | 56,872 | 75,255 | 612,873 | 547,487 | 415,560 | 1,711,281 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான தேறிய புத்தக பெறுமதி | 570,606 | - | 150,468 | 147,392 | 136,363 | 44,421 | 1,049,250 |

## 32.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் - குழுமம்

| | இறையிலி காணியும் கட்டிடங்களும் ரூ. '000 | குத்தகை ஆதனங்களுக்கான மேம்படுத்தல்கள் ரூ. '000 | மோட்டார் வாகனங்கள் ரூ. '000 | கணினி வன்பொருள் ரூ. '000 | அலுவலக உபகரணங்கள் ரூ. '000 | தளபாடமும் பொருத்திகளும் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|
| கிரயம் | | | | | | | |
| 01 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான மீதி | 3,537,387 | 58,583 | 510,821 | 879,870 | 1,006,726 | 531,985 | 6,525,372 |
| சேர்க்கைகள் | 149,702 | - | 92,205 | 137,696 | 45,225 | 32,330 | 457,158 |
| விற்பனைகள் | - | - | (177,260) | (7,712) | (57,795) | (29,786) | (272,553) |
| மாற்றல்கள் | - | - | - | (160) | 160 | - | - |
| பரிமாற்றக வீத வேறுபாடுகள் | - | - | 6,240 | 9,363 | 4,178 | 10,109 | 29,890 |
| நியாயப் பெறுமதி செம்மையாக்கல்கள் | - | - | - | - | - | - | - |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | 3,687,089 | 58,583 | 432,006 | 1,019,057 | 998,494 | 544,638 | 6,739,867 |
| (கழி): திரண்ட பெறுமானத்தேய்வு | | | | | | | |
| 01 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான மீதி | 381,717 | 57,349 | 175,372 | 700,009 | 709,051 | 467,609 | 2,491,107 |
| வருடத்திற்கான கட்டணம் | 63,805 | - | 43,592 | 84,197 | 72,835 | 32,029 | 296,458 |
| விற்பனைகள் | - | - | (71,508) | (7,016) | (56,294) | (28,470) | (163,288) |
| மாற்றல்கள் | - | - | - | - | - | - | - |
| பரிமாற்றக வீத வேறுபாடுகள் | - | - | 1,105 | 6,210 | 9,999 | 7,594 | 24,908 |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | 445,522 | 57,349 | 148,561 | 783,400 | 735,591 | 478,762 | 2,649,185 |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான தேறிய புத்தக பெறுமதி | 3,241,567 | 1,234 | 283,445 | 235,657 | 262,903 | 65,876 | 4,090,682 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 32. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி...)

| | இறையிலி காணியும் கட்டிடங்களும் ரூ. '000 | குத்தகை ஆதனங்களுக்கான மேம்படுத்தல்கள் ரூ. '000 | மோட்டார் வாகனங்கள் ரூ. '000 | கணினி வன்பொருள் ரூ. '000 | அலுவலக உபகரணங்கள் ரூ. '000 | தளபாடமும் பொருத்திகளும் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|
| கிரயம் | | | | | | | |
| 01 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 3,226,454 | 58,583 | 693,357 | 881,755 | 999,658 | 530,039 | 6,389,846 |
| சேர்க்கைகள் | - | - | 9,440 | 37,085 | 81,547 | 24,252 | 152,324 |
| விற்பனைகள் | (55) | - | (191,976) | (39,869) | (74,924) | (22,599) | (329,423) |
| மாற்றல்கள் / செம்மையாக்கல்கள் | 310,988 | - | - | - | - | - | 310,988 |
| பரிமாற்றக வீத வேறுபாடுகள் | - | - | - | 899 | 445 | 293 | 1,637 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 3,537,387 | 58,583 | 510,821 | 879,870 | 1,006,726 | 531,985 | 6,525,372 |
| (கழி): திரண்ட பெறுமானத்தேய்வு | | | | | | | |
| 01 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 317,912 | 57,271 | 205,642 | 658,593 | 706,349 | 445,709 | 2,391,476 |
| வருடத்திற்கான கட்டணம் | 63,805 | 78 | 44,373 | 74,400 | 75,807 | 33,782 | 292,245 |
| விற்பனைகள் | - | - | (74,643) | (33,611) | (73,604) | (11,980) | (193,838) |
| பரிமாற்றக வீத வேறுபாடுகள் | - | - | - | 627 | 499 | 98 | 1,224 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 381,717 | 57,349 | 175,372 | 700,009 | 709,051 | 467,609 | 2,491,107 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான தேறிய புத்தக பெறுமதி | 3,155,670 | 1,234 | 335,449 | 179,861 | 297,675 | 64,376 | 4,034,265 |

### 32.3 முழுவதுமாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

அறிக்கையிடப்படும் திகதியில் இன்னமும் பயன்பாட்டிலுள்ள, முற்றிலுமான பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் ஆரம்ப கிரயம் பின்வருமாறு:

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|
| குத்தகை ஆதனங்களுக்கான மேம்படுத்தல்கள் | 56,872 | 53,282 | 56,872 | 53,282 |
| மோட்டார் வாகனங்கள் | 33,013 | 37,971 | 33,013 | 37,971 |
| கணினி வன்பொருள் | 489,153 | 440,942 | 548,306 | 490,175 |
| அலுவலக உபகரணம் | 359,878 | 397,383 | 395,812 | 431,165 |
| தளபாடமும் பொருத்திகளும் | 76,861 | 327,178 | 89,089 | 338,727 |
| மொத்தம் | 1,015,777 | 1,256,756 | 1,123,092 | 1,351,320 |

### 32.4 குழுமத்தின் இறையிலி நிலங்கள் மற்றும் கட்டிடங்கள்

| அமைவிடம் | முகவரி | பெறுமதியிடல் திகதி | பெறுமதியிடல் முறை | காணி பரப்பளவு (பேர்ச்ர்ஸ்) | கட்டிடங்களின் எண்ணிக்கை | கட்டிடம் பரப்பளவு (ச.அடி) | 2022 கிரயம் ரூ. '000 | 2022 மீள்மதிப்பீடு ரூ. '000 | 2021 மீள்மதிப்பீடு ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி வாகனத் தோட்டங்கள் | | | | | | | | | |
| மாகொல | இல. 496, மாகொல வடக்கு, மாகொல | 31.12.2019 | MCM | 90 | 1 | 11,600 | 7,632 | 49,000 | 49,000 |
| மாபிம | இல 225/D, நயாகல வீதி, ஹெய்யந்துடுவ, மாபிம | 31.12.2019 | MCM | 330.75 | 1 | 820 | 22,532 | 75,000 | 75,000 |
| மீகாமுல்ல | கந்தேபள்ள, பெலிகமுவ, கலேவல | 31.12.2019 | MCM | 260 | 1 | 1,836 | 27,558 | 24,000 | 24,000 |
| மொனராகல | இல. 10, பொத்துவில் வீதி, மொனராகல | 31.12.2019 | MCM | 125.9 | 1 | 1,376 | 46,905 | 50,000 | 50,000 |
| நிர்வாக நோக்கத்திற்காக | | | | | | | | | |
| பண்டாரவளை | இல. 35/2D, வெலிமட வீதி, பண்டாரவளை | 31.12.2019 | MCM | 8.3 | 1 | 5,194 | 31,257 | 45,000 | 45,000 |
| யாழ்ப்பாணம் | இல. 10, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம் | 31.12.2019 | MCM | 44.72 | - | - | 45,764 | 155,063 | 155,063 |
| மாத்தறை | இல. 367, அநாகரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை | 31.12.2019 | MCM | 40 | - | - | 93,599 | 100,000 | 100,000 |
| கண்டி | இல. 296, சேனாநாயக்க வீதி, கண்டி | 31.12.2019 | MCM | 47.1 | - | - | 142,711 | 183,700 | 183,700 |
| அநுராதபுரம் | இல. 50, மைத்திரிபால சேனாநாயக்க வீதி, அனுராதபுரம் | 31.12.2019 | MCM | 40.51 | - | - | 155,882 | 182,295 | 182,295 |
| கொழும்பு | இல. 10d/8 கடுவலை | 23.03.2021 | MCM | 94.3 | | | 149,702 | 183,885 | - |
| துணைமொத்தம் | | | | | 5 | | 723,542 | 1,047,943 | 864,058 |
| பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பர்ட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் | | | | | | | | | |
| பொரளை | இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 08. | 31.12.2021 | MCM | 104.9 | 2 | 127,621 | 1,532,414 | 2,650,000 | 2,500,000 |
| துணைமொத்தம் | | | | | 2 | | 1,532,414 | 2,650,000 | 2,500,000 |
| பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொப்பர்ட்டீஸ் லிமிட்டட் | | | | | | | | | |
| கொழும்பு 05* | இல. 07, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05.Havelock Road, Colombo 05 | 31.12.2021 | MCM | 111.45 | 1 | 84,024 | 2,059,690 | 2,600,000 | 2,600,000 |
| துணைமொத்தம் | | | | | 1 | | 2,059,690 | 2,600,000 | 2,600,000 |
| மொத்தம் | | | | | 8 | | 4,315,646 | 6,297,943 | 5,964,058 |

MCM : சந்தை ஒப்பிடக்கூடிய முறை

* ரூபா 628,556,600 பெறுமதியான காணியும் கட்டிடமும் முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ரூபா 1,431,133,056 ஆனது குழுமத்தின் நிதிக் கூற்றுக்களில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 32. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் (தொடர்ச்சி...)

மேற்குறிப்பிட்ட காணி மற்றும் கட்டிடங்களின் சந்தைப் பெறுமதியானது கம்பனியுடன் தொடர்பற்ற சுயாதீன பெறுமதியீட்டாளரான திரு. கே.டி.டி.திசேரா FRICS (Eng), அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. பெறுமதியிடலுக்கு முதலீட்டு முறை, ஒப்பந்ததாரரின் பரிசீலனை முறை மற்றும் ஒப்பீட்டளவு முறைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. கம்பனியின் இறையிலி நிலம் மற்றும் கட்டிடங்கள் நியாயப் பெறுமதி படிநிலையில் மட்டம் 3 இன் கீழ் கருதப்பட்டுள்ளன.

**தற்காலிகமாக பயன்படுத்தப்படாத ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

குழுமம் / கம்பனி ஆகியவற்றின் எந்தவிதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமும் 31 மார்ச் 2022 மற்றும் 31 மார்ச் 2021 இல் பயனற்றதாகக் காணப்படவில்லை.

**உயிர்ப்புள்ள பயன்பாட்டிலிருந்து ஓய்வுபெற்ற ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

31 மார்ச் 2022 மற்றும் 31 மார்ச் 2021 இல் குழுமம் / கம்பனியின் எந்தவிதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமும் உயிர்ப்புள்ள பயன்பாட்டிலிருந்து ஓய்வுபெறவில்லை.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களிலான உரித்துவ கட்டுப்பாடு**

31 மார்ச் 2022 மற்றும் 31 மார்ச் 2021 இல் குழுமம் / கம்பனியின் எந்தவிதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்திலும் உரித்துவ கட்டுப்பாடும் காணப்படவில்லை.

**பொறுப்புகளுக்காக பிணையாக ஈடுவைக்கப்பட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

நிதிக் கூற்றுக்களில் பக்கம் 308 இல் குறிப்பு 54 இல் (பிணையீடு வைக்கப்பட்ட சொத்துக்கள்) வெளிப்படுத்தப்பட்டுள்ளது தவிர குழுமத்தின் /கம்பனியின் எந்தவிதமான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணமும் பொறுப்புக்களுக்கு பிணையாக ஈடுவைக்கப்படவில்லை.

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் உருப்படிகளுக்கான மூன்றாம் தரப்பினரிடமிருந்தான இழப்பீடு**

இவ்வருடத்தில் வலுக்குன்றலடைந்த, இழந்த அல்லது விட்டுவிட்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படிகளுக்கு மூன்றாம் தரப்பினரிடமிருந்து எவ்விதமான இழப்பீடும் பெறப்படவில்லை. (2021: பூச்சியம்).

**நியாயப் பெறுமதியினை அளவிடுவதில் பயன்படுத்தப்பட்ட அவதானிக்க இயலாத உள்ளீடுகள்**

நியாயப் பெறுமதி படிநிலையில் மட்டம் 3 ஆக வகைப்படுத்தப்பட்ட நிதியல்லாத சொத்துக்களை அளவிடுவதில் பயன்படுத்தப்பட்ட கணிசமானளவு அவதானிக்க இயலாத உள்ளீடுகள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 241 இல் காணப்படும் குறிப்பு 21.6 இல் வழங்கப்பட்டுள்ளன.

## 33. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

**SLFRS 16 - குத்தகைகள்**

புதுப்பித்தல் மற்றும் முடிவுறுத்தல் தெரிவுரிமைகளைக் கொண்ட குத்தகை ஒப்பந்தங்களுக்கான குத்தகை காலத்தினைத் தீர்மானித்தல் (குழுமம் ஒரு குத்தகைதாரராக) குழுமமானது குத்தகை காலத்தினை குத்தகையின் ரத்துசெய்ய இயலாத காலமாக தீர்மானிப்பதுடன், குத்தகையினை நீட்டுவதற்காக ஒரு தெரிவுரிமையினையினால் காப்பிடும் ஏதேனும் காலங்கள் அவை நிறைவேற்றப்படும் என நியாயாமான நிச்சயம் காணப்படின், அல்லது குத்தகையினை முடிவுறுத்துவதற்கான ஒரு தெரிவுரிமையினால் காப்பிடும் ஏதேனும் காலங்கள் அவை நிறைவேற்றப்படாது என்ற நியாயமான நிச்சயம் காணப்படின் ஆகும். குழுமமானது குத்தகையினை புதுப்பிப்பதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கான தெரிவுரிமைகளை நிறைவேற்றுவதா அல்லது இல்லையா என்பதில் நியாயமான நிச்சயத்தினைக் கொண்டுள்ளதா என பகுத்தறிவினைப் பிரயோகிக்கின்றது. அதாவது, புதுப்பித்தல் அல்லது முடிவுறுத்தல் தெரிவுரிமையினை பயன்படுத்துவதற்கான ஒரு பொருளாதார ஊக்குவிப்பினை உருவாக்கும் அனைத்து பொருத்தமான காரணிகளையும் கருத்திலெடுக்கின்றது. ஆரம்பிக்கப்பட்ட திகதியின் பின்னர், குழுமமானது புதுப்பிப்பதா அல்லது முடிவுறுத்துவதா என்ற தெரிவுரிமையினை செயற்படுத்துதல் அல்லது செயற்படுத்தாதிருத்தலில் அதன் ஆற்றலை பாதிக்கும் ஒரு கணிசமான நிகழ்வு அல்லது சூழ்நிலைகளிலான மாற்றம் அதன் கட்டுப்பாட்டினுள் காணப்பட்டால் குழுமமானது குத்தகை காலத்தினை மீள்மதிப்பீடு செய்கின்றது. (உதாரணமாக, கணிசமானளவு குத்தகை மேம்படுத்தல்களின் நிர்மாணம் அல்லது குத்தகைச் சொத்தின் கணிசமானளவு தனிப்பயனாக்கல்),

காணிப் பயன்பாட்டு உரிமைகளை கையகப்படுத்துவதற்கான செலுத்தப்பட்ட முற்செலுத்தப்பட்ட குத்தகை வாடகைகள் வழங்கப்படும் நலன்களது போக்குகளின் பிரகாரம் குத்தகைக் காலம் மீது பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. காணிப் பயன்பாட்டு உரிமைகளை உள்ளடக்கிய குத்தகை ஆதனம் எஞ்சியுள்ள குத்தகைக் காலம் மீது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது.

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 |
| கிரயம் | | | | |
| ஏப்ரல் 1 இல் உள்ளவாறான மீதி | 3,349,114 | 2,522,565 | 2,290,888 | 2,017,197 |
| ஏனைய சொத்திலிருந்து செய்யப்பட்ட மாற்றல் (முற்செலுத்தப்பட்ட வாடகைகள்) | 52,790 | 50,600 | 52,790 | 50,600 |
| | 3,401,904 | 2,573,165 | 2,343,678 | 2,067,797 |
| சேர்க்கைகள் | 239,437 | 858,510 | 238,105 | 292,305 |
| விற்பனைகள் | (138,773) | (69,214) | (112,147) | (69,214) |
| மாற்றல்கள் | - | (13,347) | - | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 3,502,568 | 3,349,114 | 2,469,636 | 2,290,888 |
| (கழி): திரண்ட பெறுமானக்குறைப்பு | | | | |
| ஏப்ரல் 1 இல் உள்ளவாறான மீதி | 1,106,670 | 583,115 | 699,591 | 377,715 |
| | 1,106,670 | 583,115 | 699,591 | 377,715 |
| பெறுமதிகுறைப்பு | 518,284 | 543,769 | 325,327 | 340,349 |
| குத்தகையில் தேறிய முதலீட்டிற்கான மாற்றல் | - | (1,741) | - | |
| விற்பனைகள் | (94,766) | (18,473) | (94,766) | (18,473) |
| வலுக்குன்றல் | - | - | - | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 1,530,188 | 1,106,670 | 930,152 | 699,591 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி | 1,972,380 | 2,242,444 | 1,539,484 | 1,591,297 |

## 34. நன்மதிப்பு மற்றும் அருவச்சொத்துக்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

குழுமத்தின் அருவச் சொத்துக்கள் நன்மதிப்பு மற்றும் வணிகப் பிணைப்பில் கையகப்படுத்திய வாடிக்கையாளர் பட்டியல் மற்றும் கணினி மென்பொருள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

**அங்கீகாரத்தின் அடிப்படை**

ஓர் அருவச் சொத்தானது அதன் கிரயம் நம்பகமாக அளவிடக்கூடியதாக இருந்தால் மாத்திரம் மற்றும் அதன் உடைமையுள்ள எதிர்பார்க்கும் எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனி மற்றும் குழுமத்திற்கு பாய்ச்சப்படும் சாத்தியம் காணப்பட்டால் இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 38 – 'அருவச் சொத்துக்கள்' இன் பிரகாரம் அங்கீகரிக்கப்படுகின்றது.

தனியாக கையகப்படுத்தப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகாரத்தின்போது கிரயத்தில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், அருவச் சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் கிரயத்திலிருந்து ஏதேனும் திரண்ட பெறுமதி குறைப்புகள் மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் இருப்பின் அவை கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன.

**பிற்பட்ட செலவினம்**

அருவச் சொத்துக்களிலான பிற்பட்ட செலவினம், அது தொடர்புடைய குறித்த சொத்தில் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களை அதிகரித்தால் மாத்திரம் மூலதனமாக்கப்படுகின்றது. ஏனைய அனைத்து செலவினங்களும் ஆட்பட்ட செலவினங்களாக கருதப்படுகின்றன.

**பயனுள்ள பொருளாதார ஆயுட்காலம், பெறுமதிகுறைப்பு மற்றும் வலுக்குன்றல்**

அருவச் சொத்துக்களது பயனுள்ள பொருளாதார ஆயுட்காலமானது ஒன்றில் வரையறையுடையதாக அல்லது வரையறையற்றதாக மதிப்பிடப்படுகின்றது.

வரையறையுடைய ஆயுட்காலத்தினைக் கொண்ட அருவச் சொத்துக்கள் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தின் மீது பெறுமதிகுறைப்பு செய்யப்படுகின்றன. வரையறையுடைய ஆயுட்காலத்தினைக் கொண்ட ஓர் அருவச் சொத்திற்கான பெறுமதி குறைப்புக் காலம் மற்றும் பெறுமதிகுறைப்பு முறையானது ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. சொத்தினுள் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களது எதிர்பார்க்கும் நுகர்வுப் போக்கு அல்லது எதிர்பார்க்கும் பயனுள்ள ஆயுட்காலத்திலான மாற்றங்கள், பொருத்தமானவாறு பெறுமதிகுறைப்புக் காலம் அல்லது முறையினை மாற்றுவதன் மூலம் கணக்கீடு செய்யப்படுகின்றது. மற்றும் அவை LKAS 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மாற்றங்களாக கருதப்படுகின்றது. வரையறையுடைய ஆயுட்காலத்தினைக் கொண்ட அருவச் சொத்துக்களிலான பெறுமதிகுறைப்புச் செலவினமானது அருவச் சொத்தின் செயற்பாட்டுடன் நிலைப்பேருள்ள செலவின வகையினுள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 34. நன்மதிப்பு மற்றும் அருவச்சொத்துக்கள் (தொடர்ச்சி...)

அருவச் சொத்துக்களின் கிரயத்தினை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தின் மீது அவற்றின் எச்சப் பெறுமதிகளுக்கு குறைத்தெழுதுவதற்காக நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கீழ் குறிப்பிட்ட வீதங்களில் பெறுமதிகுறைப்பு கணிப்பிடப்படுகின்றது ;

| சொத்தின் வகுப்பு | % வருடாந்தம் | காலம் |
|---|---|---|
| கணினி மென்பொருள் | 20 | 5 வருடங்கள் |

வரையறையுடைய ஆயுட்காலத்தினைக் கொண்ட அருவச் சொத்துக்களின் பெறுமதி குறைப்பு செய்யப்படாத மீதிகள் வருடாந்தம் வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுவதுடன் வலுக்குன்றலுக்கான ஓர் அறிகுறி தென்படும்போது எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நலன்களிலிருந்த மீட்பதற்கான சாத்தியம் காணப்படாத அளவிற்கு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

துணைக்கம்பனியினை கையகப்படுத்தும்போது எழுகின்ற நன்மதிப்பானது அருவச் சொத்துக்களினுள் உள்ளடக்கப்படுகின்றது. நன்மதிப்பானது ஆரம்பததில் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நன்மதிப்பானது கிரயத்திலிருந்து திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு அளவீடு செய்யப்படுகின்றது. உரித்துவ கணக்கீடு செய்யப்பட்ட முதலீடுசெய்யப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக, நன்மதிப்பின் கொண்டுசெல்லல் தொகையானது முதலீட்டின் கொண்டு செல்லல் தொகையினுள் உள்ளடக்கப்படுகின்றது. அத்துடன் அத்தகைய ஓர் முதலீட்டிலான ஓர் வலுக்குன்றல் நட்டமானது ஏதேனும் சொத்திற்கு ஒதுக்கப்படாததுடன், நன்மதிப்பு உள்ளடங்கலாக, அது உரித்துவ கணக்கீடு செய்யப்பட்ட முதலீட்டின் கொண்டு செல்லல் பெறுமதியின் பாகமாக அமைகின்றது.

வரையறையற்ற ஆயுட்காலத்தினைக் கொண்ட நன்மதிப்பானது வலுக்குன்றலுக்காக வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. வரையறையற்ற ஆயுட்காலத்தின் மதிப்பீடானது வரையற்ற ஆயுட்காலமானது தொடர்ந்தும் துணைபுரியக்கூடியதாயுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

அங்கீகாரத்திலிருந்து அகற்றல்
அருவச் சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டால் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்கால பொருளாதார நலன்கள் எதிர்பார்க்கப்படாவிட்டால் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றன. சொத்தின் அங்கீகார அகற்றலிலிருந்து எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனை வருவாய்க்கும் சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமாக கணிப்பிடப்படுகின்றது) சொத்து அங்கீகார அகற்றல் செய்யப்பட்ட வருடத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

| | கம்பனி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|
| | கணினி மென்பொருள் ரூ. '000 | நன்மதிப்பு ரூ. '000 | மொத்தம் ரூ. '000 | கணினி மென்பொருள் ரூ. '000 | நன்மதிப்பு ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
| கிரயம் | | | | | | |
| 1 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான மீதி | 199,853 | 308,545 | 508,398 | 233,461 | 417,099 | 650,560 |
| சேர்க்கைகள் | 10,325 | - | 10,325 | 12,835 | - | 12,835 |
| விற்பனைகள் | - | - | - | - | - | - |
| பரிமாற்ற வீத வேறுபாடு | - | - | - | 773 | - | 773 |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | 210,178 | 308,545 | 518,723 | 247,069 | 417,099 | 664,168 |
| (கழி): திரண்ட பெறுமதிகுறைப்பு | | | | | | |
| 1 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான மீதி | 175,018 | 186,934 | 361,952 | 198,120 | 186,934 | 385,054 |
| பெறுமதிகுறைப்பு | 13,195 | - | 13,195 | 16,879 | - | 16,879 |
| வலுக்குன்றல் | - | 121,611 | 121,611 | - | 121,611 | 121,611 |
| பரிமாற்ற வீத வேறுபாடு | - | - | - | 1,021 | - | 1,021 |
| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி | 188,213 | 308,545 | 496,758 | 216,020 | 308,545 | 524,565 |
| 31 மார்ச் 2022 உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி | 21,965 | - | 21,965 | 31,049 | 108,554 | 139,603 |
| கிரயம் | | | | | | |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 199,914 | 308,545 | 508,459 | 222,221 | 417,099 | 639,320 |
| சேர்க்கைகள் | 360 | - | 360 | 11,661 | - | 11,661 |
| விற்பனைகள் | 421 | - | 421 | 421 | - | 421 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 199,853 | 308,545 | 508,398 | 233,461 | 417,099 | 650,560 |
| (கழி): திரண்ட பெறுமதிகுறைப்பு | | | | | | |
| 1 ஏப்ரல் 2020 இல் உள்ளவாறான மீதி | 163,153 | 87,725 | 250,878 | 183,021 | 87,725 | 270,746 |
| பெறுமதிகுறைப்பு | 11,865 | - | 11,865 | 15,099 | - | 15,099 |
| வலுக்குன்றல் | - | 99,209 | 99,209 | - | 99,209 | 99,209 |
| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறான மீதி | 175,018 | 186,934 | 361,952 | 198,120 | 186,934 | 385,054 |
| 31 மார்ச் 2021 உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி | 24,835 | 121,611 | 146,446 | 35,341 | 230,165 | 265,506 |

31 மார்ச் 2022 இல் கம்பனியின் அருவச் சொத்துக்கள் முழுவதும் பெறுமதிகுறைப்பு செய்யப்பட்ட ரூபா 147,975,983 தொகையான மென்பொருளையும் குழுமத்தினது மென்பொருள் ரூபா 148,877,483 தொகையினையும் கொண்டுள்ளதுடன் (31 மார்ச் 2021 இல் கம்பனிக்கு ரூபா 139,001,271 மற்றும் குழுமத்திற்கு ரூபா 139,902,771 ஆகும்) இவை அறிக்கையிடப்படும் திகதியில் இன்னமும் பயன்பாட்டில் உள்ளன.

**நன்மதிப்பிற்கான வலுக்குன்றல் சோதனைகள்**

சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் பாதீடுகளின் அடிப்படையில் காசுப் பாய்ச்சல் எதிர்வுகூறல்களைப் பயன்படுத்தி பயன்பாட்டிலுள்ள பெறுமதி கணிப்பீட்டின் அடிப்படையில் குழுமமானது வலுக்குன்றலுக்கான ஒரு வருடாந்த சோதனையினை பொறுப்பேற்கின்றது. கழிவிறக்க வீதமானது கம்பனியின் உரித்துவ கிரயத்தின் ஒரு சராசரி சதவீதத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. ஏதேனும் முக்கிய அனுமானங்களிலான எந்தவிதமான நியாயமான சாத்தியமான மாற்றமும் அலகுகளின் கொண்டுசெல்லல் பெறுமதி அவற்றின் மீட்டக்கூடிய தொகையினை விஞ்சுவதற்கான காரணியாகாது என முகாமைத்துவம் நம்புகின்றது.

அறிக்கையிடப்படும் திகதியில் குழுமத்தின் / கம்பனியின் அருவச் சொத்துக்களின் உரித்துவத்தில் எவ்விதமான கட்டுப்பாடுகளும் காணப்படவில்லை. மேலும், பொறுப்புக்களுக்காக எந்தவொரு உருப்படியும் பிணையாக ஈடுவைக்கப்படவில்லை. 2021/22 வருடத்தில் அருவச் சொத்துக்களின் கையகப்படுத்தல் தொடர்பாக மூலதனவாக்கப்பட்ட கடன்பெறுகைக் கிரயங்கள் எதுவும் காணப்படவில்லை.

## 35. வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை

**கணக்கீட்டுக் கொள்கை**

வங்கிகளுக்கு செலுத்துப்படவேண்டியவைகள் வங்கி மேலதிகப்பற்றுக்கள், மற்றும் நீண்டகால மற்றும் குறுங்கால கடன்களை உள்ளடக்குகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், இவை வி.வ.வீ. முறையினைப் பயன்படுத்தி அவற்றின் பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன. பெறுமதிகுறைப்புக் கிரயமானது விவவீ இன் ஒரு உள்ளார்ந்த பாகமான வழங்கல் மற்றும் செலவினங்களிலான ஏதேனும் கழிவு அல்லது வட்டத்தினை கணக்கிலெடுத்து கணிப்பிடப்படுகின்றன. விவவீ பெறுமதிகுறைப்பானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் “வட்டிச் செலவினங்களில்” உள்ளடக்கப்படுகின்றன. பொறுப்புக்கள் அங்கீகார அகற்றல் செய்யப்படும்போதும் விவீ பெறுமதிகுறைப்பு செயல்முறையினூடான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

2021/22 அல்லது 2020/21 காலப்பகுதியில் வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியசை தொடர்பாக கம்பனி முதல், வட்டியில் எவ்விதமான தவறுதலையோ அல்லது ஏனைய மீறுகைகளையோ கொண்டிருக்கவில்லை.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 |
| மேலதிகப்பற்றுக்கள் | 69,690 | 716,374 | 1,325,500 | 891,879 |
| குறுங்காலக் கடன்கள் | - | - | 796,993 | 105,449 |
| நீண்டகால கடன்கள் | 6,432,218 | - | 7,930,444 | 2,283,609 |
| சொத்தின் பின்னணியிலான பிணையங்கள் | 5,247,424 | 5,722,936 | 5,247,424 | 5,722,936 |
| மொத்தம் | 11,749,332 | 6,439,310 | 15,300,361 | 9,003,873 |
| நியாயப் பெறுமதி | 11,750,052 | 6,936,408 | 15,389,574 | 9,739,721 |

### 35.1 வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகளிலான அசைவுகள்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 |
| ஏப்ரல் 1 இல் உள்ளவாறானது | 5,722,936 | 7,938,185 | 8,111,994 | 10,978,046 |
| இவ்வருடத்தில் கடன்பெறப்பட்ட தொகை | 7,000,000 | 1,000,000 | 7,250,000 | 1,500,000 |
| இவ்வருடத்திலான மீள்செலுத்துகைகள் | (1,946,889) | (3,886,355) | (2,504,664) | (5,315,691) |
| இவ்வருடத்திலான வட்டிச் செலவினங்கள் | 903,595 | 671,106 | 1,117,531 | 949,639 |
| துணைமொத்தம் | 11,679,642 | 5,722,936 | 13,974,861 | 8,111,994 |
| மேலதிகப்பற்றுக்கள் | 69,690 | 716,374 | 1,325,500 | 891,879 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 11,749,332 | 6,439,310 | 15,300,361 | 9,003,873 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 35. வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகள் (தொடர்ச்சி...)

### 35.2 நீண்டகால கடன்களது விபரங்கள்

| கடன் பெறுநர்களின் பெயர் | வழங்கப்பட்ட திகதி | கடன்வசதித் தொகை ரூ. '000 | காலம் | வட்டிவீதம் | பிணை நிலவரம் |
|---|---|---|---|---|---|
| கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 14.07.2015 | 2,000,000 | 04 வருடங்கள் | 7.25% - 10.5% | பிணைசார் |
| கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 08.09.2016 | 1,000,000 | 04 வருடங்கள் | 14.00% | பிணைசார் |
| சம்பத் பேங்க் பிஎல்சி | 31.12.2014 | 2,000,000 | 05 வருடங்கள் | 7.00% - 8.5% | பிணைசார் |
| எக்சிஸ் பேங்க் | 27.03.2017 | 150,000 | 04 வருடங்கள் | AWPLR+1.25% | பிணைசார் |
| எக்சிஸ் பேங்க் | 27.03.2017 | 250,000 | 04 வருடங்கள் | AWPLR+1.25% | பிணைசார் |
| மக்கள் வங்கி | 26.05.2015 | 4,250,000 | 04 வருடங்கள் | 8.50% | பிணைசார் |
| மக்கள் வங்கி | 27.11.2015 | 2,000,000 | 04 வருடங்கள் | 10.00% | பிணைசார் |
| மக்கள் வங்கி | 15.03.2016 | 2,000,000 | 04 வருடங்கள் | AWPLR+1.75% | பிணைசார் |
| மக்கள் வங்கி | 02.06.2016 | 2,500,000 | 04 வருடங்கள் | 06 மாத SLIBOR+1.75% | பிணைசார் |
| இலங்கை வங்கி | 07.07.2016 | 3,000,000 | 04 வருடங்கள் | 11.50% | பிணைசார் |
| ராக் பேங்க் | 27.04.2017 | 5,355,000 | 03 வருடங்கள் | 13.50% | பிணைசார் |
| MCB பேங்க் | 26.09.2017 | 500,000 | 04 வருடங்கள் | AWPLR+1.5% | பிணைசார் |
| கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 11.11.2021 | 3,000,000 | 03 வருடங்கள் | 9.25% | பிணைசார் |
| ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி | 16.11.2021 | 4,000,000 | 03 வருடங்கள் | AWPLR + 0.5% | பிணைசார் |

**சொத்தின் பின்னணியிலான பிணையங்கள்**

| கடன் பெறுநர்களின் பெயர் | வழங்கப்பட்ட திகதி | கடன்வசதித் தொகை ரூ. '000 | காலம் | வட்டிவீதம் * | பிணை நிலவரம் |
|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 30.09.2016 | 2,146,200 | 04 வருடங்கள் | 13.81% | பிணைசார் |
| டொயிஷ் பேங்க் பிஎல்சி | 03.07.2015 | 3,000,000 | 04 வருடங்கள் | 8.82% | பிணைசார் |
| டொயிஷ் பேங்க் பிஎல்சி | 28.10.2016 | 1,769,900 | 04 வருடங்கள் | 14.47% | பிணைசார் |
| டொயிஷ் பேங்க் பிஎல்சி | 25.02.2016 | 4,250,700 | 04 வருடங்கள் | 11.75% | பிணைசார் |
| ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி | 29.06.2018 | 2,000,000 | 05 வருடங்கள் | 12.27% | பிணைசார் |
| ஹட்டன் நெஷனல் பேங்க் பிஎல்சி | 13.03.2019 | 2,000,000 | 05 வருடங்கள் | 13.08% | பிணைசார் |
| மக்கள் வங்கி | 18.08.2016 | 3,000,000 | 04 வருடங்கள் | 13.32% | பிணைசார் |
| மக்கள் வங்கி | 09.02.2018 | 1,000,000 | 02 வருடங்கள் | 11.71% | பிணைசார் |
| மக்கள் வங்கி | 10.09.2018 | 2,000,000 | 02 வருடங்கள் | 13.15% | பிணைசார் |
| மக்கள் வங்கி | 23.05.2019 | 1,000,000 | 03 வருடங்கள் | 11.16% | பிணைசார் |

* ஒவ்வொரு பிணையங்களாக்குதலுக்குமான வட்டி வீதமானது நிறையிடப்பட்ட சராசரி வட்டி வீதமாக வழங்கப்பட்டுள்ளது.

பிணையங்களது விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் பக்கம் 308 இல் காணப்படும் குறிப்பு 54 - "பிணையீடு செய்யப்பட்ட சொத்து" இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 35.3 ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு

#### 35.3.1 வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகளின் எஞ்சிய ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - கம்பனி

| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறானது | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
|---|---|---|---|---|
| மேலதிகப்பற்றுக்கள் | 69,690 | - | - | 69,690 |
| நீண்டகால கடன்கள் | 2,353,092 | 4,079,126 | - | 6,432,218 |
| சொத்தின் பின்னணியிலான பிணையங்கள் | 3,111,337 | 2,136,087 | - | 5,247,424 |
| மொத்தம் | 5,534,119 | 6,215,213 | - | 11,749,332 |

| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
|---|---|---|---|---|
| மேலதிகப்பற்றுக்கள் | 716,374 | - | - | 716,374 |
| சொத்து பின்னணியிலான பிணையங்கள் | 2,249,108 | 3,473,828 | - | 5,722,936 |
| மொத்தம் | 2,965,482 | 3,473,828 | - | 6,439,310 |

### 35.3.2 வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகளின் எஞ்சிய ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - குழுமம்

| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறானது | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
|---|---|---|---|---|
| மேலதிகப்பற்றுக்கள் | 1,325,500 | - | - | 1,325,500 |
| குறுங்காலக் கடன்கள் | 796,993 | - | - | 796,993 |
| நீண்டகாலக் கடன்கள் | 3,113,993 | 4,816,451 | - | 7,930,444 |
| சொத்து பின்னணியிலான பிணையங்கள் | 3,111,337 | 2,136,087 | - | 5,247,424 |
| மொத்தம் | 8,347,823 | 6,952,538 | - | 15,300,361 |

| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
|---|---|---|---|---|
| மேலதிகப்பற்றுக்கள் | 891,879 | - | - | 891,879 |
| குறுங்காலக் கடன்கள் | 105,449 | - | - | 105,449 |
| நீண்டகாலக் கடன்கள் | 936,819 | 1,346,790 | - | 2,283,609 |
| சொத்து பின்னணியிலான பிணையங்கள் | 2,249,108 | 3,473,828 | - | 5,722,936 |
| மொத்தம் | 4,183,255 | 4,820,618 | - | 9,003,873 |

## 36. வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை

**கணக்கீட்டுக் கொள்கை**

வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகள் நிலையான வைப்புகளையும் சேமிப்பு வைப்புகளையும் உள்ளடக்குகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், இவை விளைவுறு வட்டி வீத (விவவீ) முறையினை பயன்படுத்தி அவற்றின் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது. வழங்கலிலான ஏதேனும் கழிவு அல்லது வட்டம் மற்றும் விவவீ இன் ஒரு ஒருங்கிணைந்த பாகமாயுள்ள செலவினங்களையும் கணக்கிலெடுத்து பெறுமதிக்குறைப்புக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. விவவீ பெறுமதிகுறைப்பானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் "வட்டிச் செலவினங்களில் உள்ளடக்கப்படுகின்றது. பொறுப்புக்கள் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படும்போது எழுகின்ற இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

வைப்புக்களுக்கு எதிரான கடன்களுக்காக பிணையாக வைத்திருக்கப்படும் வைப்புக்கள் ரூபா 8.0 பில்லியன் (2020/21 - ரூபா 8.1 பில்லியன்) வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டியவையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2010 இன் 02 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளுக்கான பணிப்புரை (வைப்புப் பொறுப்புக்களுக்கான காப்புறுதி) இற்கு அமைவாக அனைத்து உரிமையுள்ள வைப்புப் பொறுப்புக்களும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் மற்றும் திரவத்தன்மை துணையளித்தல் திட்டத்துடன் காப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இது வாடிக்கையாளர் உரிமைகளையும் நம்பகத்தன்மையினையும் பாதுகாப்பதற்கான ஒரு பாதுகாப்பு வழிமுறையாகும். இவ்வருடத்தில் மேற்குறிப்பிட்ட காப்புறுதித் திட்டத்திற்கு கம்பனியானது ரூபா 148.67 மில்லியனை (2020/21 - ரூபா 151.87 மில்லியன்) காப்புறுதித் தவணைக்கட்டணமாக செலுத்தியுள்ளது.

## 36. வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை (தொடர்ச்சி...)

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|
| நிலையான வைப்புகள் | 95,145,802 | 92,999,765 | 103,375,767 | 95,378,121 |
| சேமிப்பு வைப்புகள் | 8,222,102 | 8,503,166 | 8,077,983 | 8,365,595 |
| மொத்தம் | 103,367,904 | 101,502,931 | 111,453,750 | 103,743,716 |
| நியாயப் பெறுமதி | 102,854,237 | 102,019,672 | 110,876,896 | 104,256,546 |

## 36.1 வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகளின் எஞ்சிய ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - கம்பனி

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2022 ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
|---|---|---|---|---|
| நிலையான வைப்புகள் | 78,112,290 | 17,033,512 | - | 95,145,802 |
| சேமிப்பு வைப்புகள் | 7,973,377 | 75,044 | 173,681 | 8,222,102 |
| மொத்தம் | 86,085,667 | 17,108,556 | 173,681 | 103,367,904 |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
|---|---|---|---|---|
| நிலையான வைப்புகள் | 74,108,732 | 18,891,033 | - | 92,999,765 |
| சேமிப்பு வைப்புகள் | 8,288,671 | 50,466 | 164,029 | 8,503,166 |
| மொத்தம் | 82,397,403 | 18,941,499 | 164,029 | 101,502,931 |

## 36.2 வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகளின் எஞ்சிய ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - குழுமம்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2022 ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
|---|---|---|---|---|
| நிலையான வைப்புகள் | 86,149,370 | 17,226,397 | - | 103,375,767 |
| சேமிப்பு வைப்புகள் | 7,829,258 | 75,044 | 173,681 | 8,077,983 |
| மொத்தம் | 93,978,628 | 17,301,441 | 173,681 | 111,453,750 |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
|---|---|---|---|---|
| நிலையான வைப்புகள் | 76,487,088 | 18,891,033 | - | 95,378,121 |
| சேமிப்பு வைப்புகள் | 8,151,100 | 50,466 | 164,029 | 8,365,595 |
| மொத்தம் | 84,638,188 | 18,941,499 | 164,029 | 103,743,716 |

## 37. வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் கம்பனியினால் மற்றும் குழுமத்தினால் நீண்டகாலத்திற்கு மற்றும் குறுங்கால திரவத்தன்மை நிதித் தேவைப்பாடுகளுக்கும் கடன் பெறப்பட்ட நிதிகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், இவை விவஙீ முறையினைப் பயன்படுத்தி அவற்றின் பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. பெறுமதிகுறைப்புக் கிரயமானது விவஙீ இன் ஒரு உள்ளார்ந்த பாகமான வழங்கல் மற்றும் செலவினங்களிலான ஏதேனும் கழிவு அல்லது வட்டத்தினை கணக்கிலெடுத்து கணிப்பிடப்படுகின்றன. விவஙீ பெறுமதிகுறைப்பானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் “வட்டிச் செலவினங்களில்” உள்ளடக்கப்படுகின்றன. பொறுப்புக்கள் அங்கீகார அகற்றல் செய்யப்படும்போதும் விஙீ பெறுமதிகுறைப்பு செயல்முறையினூடான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 17,244,313 | 13,825,553 | 17,103,223 | 13,684,516 |
| மொத்தம் | 17,244,313 | 13,825,553 | 17,103,223 | 13,684,516 |
| நியாயப் பெறுமதி | 16,266,084 | 14,675,439 | 16,124,318 | 14,522,493 |

### 37.1 வழங்கப்பட்ட கடன் பிணையங்களிலான அசைவு

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 1இல் உள்ளவாறான மீதி | 13,825,553 | 18,479,260 | 13,684,516 | 18,338,039 |
| இவ்வருடத்தில் கடன் பெறப்பட்ட தொகை | 10,000,000 | - | 10,000,000 | - |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்களின் மீட்டல் | (6,798,610) | (4,500,657) | (6,798,610) | (4,500,657) |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்களிலான வட்டிச் செலவினங்கள் | 1,875,532 | 1,935,761 | 1,859,429 | 1,916,991 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி | (1,658,162) | (2,088,811) | (1,642,112) | (2,069,857) |
| மொத்தம் | 17,244,313 | 13,825,553 | 17,103,223 | 13,684,516 |

### 37.2 பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள்

| வழங்கப்பட்ட திகதி | முதிர்வுத் திகதி | முகப் பெறுமதி ரூ. '000 | வட்டி வீதம் | மீள்செலுத்தல் காலம் | வகை | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட, பிணைசாரா, மீட்கத்தக்க, 'AA(-) தரப்படுத்தப்பட்டது | | | | | | | | | |
| 16-Nov-2016 | 16-Nov-2021 | 6,798,610 | 12.60% | அரையாண்டு | வகை C | - | 7,108,347 | - | 7,108,347 |
| 18-Apr-2018 | 18-Apr-2022 | 704,600 | 12.40% | வருடாந்தம் | வகை A | 785,163 | 784,097 | 785,163 | 784,097 |
| 18-Apr-2018 | 18-Apr-2023 | 5,295,400 | 12.80% | வருடாந்தம் | வகை B | 5,941,109 | 5,933,109 | 5,800,019 | 5,792,072 |
| 5-Aug-2021 | 5-Aug-2024 | 2,942,940 | 8.00% | வருடாந்தம் | வகை A | 3,087,136 | - | 3,087,136 | - |
| 5-Aug-2021 | 5-Aug-2024 | 2,419,929 | 8.00% | முதிர்வில் | வகை B | 2,538,385 | - | 2,538,385 | - |
| 5-Aug-2021 | 5-Aug-2026 | 4,272,360 | 9.00% | வருடாந்தம் | வகை C | 4,507,686 | - | 4,507,686 | - |
| 5-Aug-2021 | 5-Aug-2026 | 364,766 | 9.00% | முதிர்வில் | வகை D | 384,834 | - | 384,834 | - |
| | | 29,999,995 | | | | 17,244,313 | 13,825,553 | 17,103,223 | 13,684,516 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 37. வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் (தொடர்ச்சி...)

### 37.2.1 மூலதனச் சந்தையூடான திரட்டப்பட்ட நிதிகளின் பயன்பாடு

| முன்விவரணக் கோவையின் பிரகாரமான குறிக்கோள் | மு.வி.கோ. இன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.'000 | மு.வி.கோ. இன் பிரகாரம் திட்டமிடப்பட்ட பயன்பாட்டின் திகதி | வருவாயிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகை ரூ.'000 (A) | மொத்த வருவாயின் சதவீதம் % | பயன்படுத்தப்பட்ட தொகைகள் ரூ. (B) | ஒதுக்கீட்டிற்கு எதிரான பயன்பாட்டின் சதவீதம் % (B/A) | முழுவதும் பயன்படுத்தாவிடின் நிதி எங்கே முதலீடு செய்யப்பட்டுள்ளது உள்ளடங்கலான விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2015/16 வருடத்தில் வழங்கப்பட்ட, பட்டியலிடப்பட்ட, பிணைசாரா, மீட்கத்தக்க தரப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள்** | | | | | | | |
| இந்தத் தொகுதிகடன் வழங்கலின் மூலம் திரட்டப்பட்ட நிதியானது PLC இன் மத்திய நீண்டகால கடன்வழங்கலுக்கான செயற்பாட்டு மூலதனத்தினை சந்திப்பதற்காக பயன்படுத்தப்படுவதுடன் மற்றும் வட்டி வீத இடரினை குறைப்பதற்கும் ஆகும். | 6,000,000 | ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து அடுத்த 12 மாதங்களினுள் | 6,000,000 | 100 | 6,000,000 | 100 | பொருத்தமற்றது |
| **2016/17 வருடத்தில் வழங்கப்பட்ட, பட்டியலிடப்பட்ட, பிணைசாரா, மீட்கத்தக்க தரப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள்** | | | | | | | |
| இந்தத் தொகுதிகடன் வழங்கலின் மூலம் திரட்டப்பட்ட நிதியானது பாதீடு செய்யப்பட்ட கடன்வழங்கல் தேக்கத்திற்கும செயற்பாட்டு மூலதனத் தேவைப்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படும். | 8,000,000 | ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து அடுத்த 12 மாதங்களினுள் | 8,000,000 | 100 | 8,000,000 | 100 | பொருத்தமற்றது |
| **2018/19 வருடத்தில் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட, சிரேஷ்ட, பிணைசாரா, மீட்கத்தக்க, தரப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள்** | | | | | | | |
| இந்தத் தொகுதிகடன் வழங்கலின் மூலம் திரட்டப்பட்ட நிதியானது 26 மார்ச் 2018 இல் முதிர்வடைந்த தொகுதிக்கடன்களை தீர்ப்பனவு செய்வதற்காக பெறப்பட்ட குறுங்கால கடனை திருப்பிச்செலுத்துவதற்கும் கம்பனியின் செயற்பாட்டு மூலதனத் தேவைப்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. | 6,000,000 | ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து அடுத்த 12 மாதங்களினுள் | 6,000,000 | 100 | 6,000,000 | 100 | பொருத்தமற்றது |
| **2021/22 வருடத்தில் வழங்கப்பட்ட பட்டியலிடப்பட்ட, சிரேஷ்ட, பிணைசாரா, மீட்கத்தக்க, தரப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள்** | | | | | | | |
| இந்தத் தொகுதிகடன் வழங்கலின் மூலம் திரட்டப்பட்ட நிதியானது கம்பனியின் கடன் வழங்கல் தேக்கத்தினை விரிவாக்குவதற்கு பயன்படுத்தப்படும். | 10,000,000 | ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களினுள் | 10,000,000 | 100 | 10,000,000 | 100 | பொருத்தமற்றது |

### கடன் பிணையங்களின் எஞ்சிய ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - கம்பனி

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2022 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கும் மேலானது ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 1,977,853 | 15,266,460 | - | 17,244,313 |
| மொத்தம் | 1,977,853 | 15,266,460 | - | 17,244,313 |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 7,835,316 | 5,990,237 | - | 13,825,553 |
| மொத்தம் | 7,835,316 | 5,990,237 | - | 13,825,553 |

### கடன் பிணையங்களின் எஞ்சிய ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு - குழுமம்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2022 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 1,962,543 | 15,140,680 | - | 17,103,223 |
| மொத்தம் | 1,962,543 | 15,140,680 | - | 17,103,223 |

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021 | | | |
|---|---|---|---|---|
| | ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கு மேல் ரூ. '000 | மொத்தம் ரூ.. '000 |
| பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் | 7,820,059 | 5,864,457 | - | 13,684,516 |
| மொத்தம் | 7,820,059 | 5,864,457 | - | 13,684,516 |

## 38. ஏனைய நிதிப் பொறுப்புக்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

ஏனைய நிதிப் பொறுப்புக்கள் வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய தொகை, செலுத்தவேண்டிய காப்புறுதி, செலுத்தவேண்டிய பங்கிலாபம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளை உள்ளடக்குகின்றன. இந்த பொறுப்புக்கள் வட்டி விதிக்கப்படாதவை மற்றும் அறிக்கையிடப்படும் திகதியில் எதிர்பார்க்கும் செலுத்தவேண்டிய தொகைகளில் பதிவுசெய்யப்படுகின்றது.

ஏனைய அனைத்து நிதிப் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது.

**வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய தொகை**

வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய தொகையானது வழக்கமான வணிகப் போக்கில் வாகன வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய கடப்பாட்டினை உள்ளடக்குகின்றது.

**செலுத்தவேண்டிய காப்புறுதி**

செலுத்தவேண்டிய காப்புறுதியானது வாகனங்கள் தொடர்பாக காப்புறுதிக் கம்பனிகளுக்கு செலுத்தவேண்டிய காப்புறுதித் தவணைக்கட்டணத் தொகைகளை உள்ளடக்குகின்றன.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022 ரூ. '000 | 2021 ரூ. '000 | 2022 ரூ. '000 | 2021 ரூ. '000 |
| வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய தொகை | 2,181,519 | 2,923,794 | 2,243,619 | 2,981,030 |
| செலுத்தவேண்டிய காப்புறுதி | 609,130 | 619,168 | - | - |
| ஏனைய செலுத்தவேண்டியவைகள் | 845,879 | 589,148 | 1,799,703 | 1,130,205 |
| மொத்தம் | 3,636,528 | 4,132,110 | 4,043,322 | 4,111,235 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 39. காப்புறுதிப் பொறுப்புக்கள் மற்றும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி

**கணக்கீட்டுக் கொள்கை**

**தேறிய உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணத்திற்கான ஏற்பாடு**

உழைக்கப்படாது காப்புறுதி தவணைக்கட்டணங்களுக்கான ஏற்பாடானது இன்னமும் முதிர்வடையாத இடர்களுக்காக பெறப்பட்ட காப்புறுதி தவணைக்கட்டணத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. பொதுவாக, ஒதுக்கமானது ஒப்பந்தக் காலத்தில் விடுவிக்கப்படுவதுடன் காப்புறுதி தவணைக்கட்டண வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், குழுமமானது முதிர்வடையாத இடரினை மீளாய்வு செய்து ஒரு பொறுப்பு போதுமை சோதனையினை செயற்படுத்துகின்றது. இது உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணங்கள் மீதான எதிர்பார்க்கும் கோரல்களின் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்களில் ஏதேனும் ஒட்டுமொத்த மிகைகள் காணப்படுகின்றதா என்பதனை தீர்மானிப்பதற்காகும். இந்த கணிப்பீடானது எதிர்கால ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களின் நடைமுறை மதிப்பீடுகளை பயன்படுத்துகின்றது. இது உரிய ஆயுளல்லாத காப்புறுதி நுட்ப ஏற்பாடுகளுடன் தொடர்புடைய சொத்துக்களில் எழுவதற்கு எதிர்பார்க்கப்படும் முதலீட்டு விளைவினை கணக்கிலெடுத்ததன் பின்னராகும். இந்த மதிப்பீடுகள் உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணத்தின் கொண்டு செல்லல் தொகையானது தேவைக்குக் குறைவாக காணப்பட்டால் பொறுப்பு போதுமைக்கான ஒரு ஏற்பாட்டினை உருவாக்குவதன் மூலம் இந்த பற்றாக்குறையானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

SLFRS 4 - காப்புறுதி ஒப்பந்தங்களின் தேவைப்பாட்டின் பிரகாரம், குழுமமானது ஓர் காப்புறுதி கணிப்பீட்டாளரின் துணையுடன் ஆயுளல்லாத ஒப்பந்தப் பொறுப்புக்கள் தொடர்பாக ஓர் பொறுப்பு போதுமை சோதனையினை (பொபோசோ) நடாத்துகின்றது.

**மொத்த நிலுவையிலுள்ள கோரல்களுக்கான ஏற்பாடு**

ஆயுளல்லாத காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்கள் ஒப்பந்தங்களில் ஈடுபட்டு காப்புறுதி தவணைக்கட்டணங்கள் அறவிடப்படும்போது அங்கீகரிக்கப்படுகின்றன. இந்த பொறுப்புக்கள் நிலுவையிலுள்ள கோரல் ஏற்பாடு என தெரிந்துகொள்ளப்படுவதுடன், அறிக்கையிடப்படும் திகதியில் ஆட்பட்ட ஆனால் தீர்ப்பனவு செய்யப்படாத அனைத்து கோரல்களின் மதிப்பிடப்பட்ட இறுதியான கிரயத்தின் அடிப்படையிலாகும். அறிக்கையிடப்பட்டாலோ இல்லையோ, இவற்றுடன் தொடர்புடைய கோரல் கையாளுதல் கிரயங்கள் மற்றும் அழிவுமீட்பு மற்றும் ஏனைய மீட்புகளின் எதிர்பார்க்கப்படும் பெறுமதியிலான குறைப்பினையும் கவனத்திலெடுக்கின்றது.

பொறுப்பானது பணத்தின் நேரப் பெறுமதிக்கு கழிவிறக்கம் செய்யப்படுவதில்லை. சமனாக்குதல் அல்லது பேரழிவு ஒதுக்கங்களுக்கு எவ்விதமான ஏற்பாடும் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஒப்பந்தம் முதிர்வடையும்போது, வெளியேற்றப்படும்போது அல்லது ரத்துசெய்யப்பட்டால் பொறுப்புக்கள் அங்கீகாரத்திலிருந்து அகற்றப்படுகின்றது.

**மொத்த ஆட்பட்ட ஆனால் அறிக்கையிடப்படாத (ஆஆஅ) கோரல்களுக்கான ஏற்பாடு**

சில வகையான கோரல்களின் அறிவித்தல் மற்றும் தீர்ப்பனவில் தாமதங்கள் ஏற்படலாம், எனவே அறிக்கையிடப்படும் திகதியில் இவற்றின் இறுதி கிரயத்தினை நிச்சயமாக தெரிந்துகொள்ள இயலாது. அறிக்கையிடப்படும் திகதியில் பொறுப்பானது வழக்கமான காப்பீட்டுக் கணிப்பு கோரல் எதிர்வுகூறல் நுட்பங்களின் ஓர் வரம்பினை பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது. இது அனுபவ தரவுகள் மற்றும் பாதகமான விலகள்களுக்கான ஓர் ஓரவரம்பினை உள்ளடக்கக்கூடிய நடைமுறை அனுமானங்கள் என்பவற்றின் அடிப்படையிலானாகும்.

ஆயுளல்லாத காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு பின்வருவனவற்றிற்கு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அறிக்கையிடப்படும் திகதியில் அறிக்கையிடப்பட்ட கோரல்களின் எதிபார்த்த இறுதியான கிரயம் மற்றும் அறிக்கையிடப்படும் திகதியில் ஆட்பட்ட ஆனால் இன்னமும் அறிக்கையிடப்படாத (ஆஆஅ) கோரல்களின் எதிர்பார்த்த இறுதியான கிரயம் என்பவற்றில் மதிப்பீடுகளை மேற்கொள்ளல் வேண்டும். இறுதியான கோரல்கள் கிரயத்தினை உறுதிப்பாட்டுடன் நிலைநாட்டுவதற்கு கணிசமானளவு காலம் செல்லலாம் மற்றும் சில வகையான காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் அதிகளவு பொறுப்பானது ஆஆஅ கோரல்களினாலாகும்.

நிலுவையிலுள்ள கோரல்களின் இறுதியான கிரயமானது வழக்கமான காப்பீட்டுக் கணிப்பு கோரல்கள் எதிர்வுகூறல் நுட்பங்களை பயன்படுத்தி மதிப்பிடு செய்யப்படுகின்றது. இவை சங்கிலி ஏணி முறை, போர்ன்ஈயுட்டர்-வேர்கஸன் முறை மற்றும் நிகழ்வெண் /தீவிர முறை என்பனவாகும்.

இந்த நுட்பங்களின் உள்ளாந்த பிரதான அனுமானம் என்னவெனில் கம்பனியின் கடந்தகால கோரல்கள் அபிவிருத்தி அனுபவமானது எதிர்கால கோரல் அபிவிருத்தியினை எதிர்வுகூறுவதற்கு பயன்படுத்தப்படலாம் என்பதுடன் அதன்மூலம் இறுதி கோரல் கிரயங்கள். இதன் காரணமாக, இந்த முறைகள் செலுத்திய மற்றும் ஆட்பட்ட நட்டங்களின் அபிவிருத்தியினை ஊகித்துணர்வதுடன், கோரல் ஒன்றுக்கான சராசரி கிரயம் முன்னைய வருடங்களின் அவதானிக்கப்பட்ட அபிவிருத்தியின் அடிப்படையில் கோரல் எண்ணிக்கைகள் மற்றம் எதிர்பார்க்கப்படும் நட்ட விகிதாசாரங்கள். வரலாற்று கிரயங்கள் அபிவிருத்தியானது பிரதானமாக விபத்து வருடங்களின் மூலம் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. ஆனால் பூகோள பிரதேசங்கள், கணிசமான வணிக வகை மற்றும் கோரல் வகைகள் ரீதியாகவும் மேலும் பகுப்பாய்வு செய்யலாம். பாரிய கோரல்கள் தனியாக விளித்துரைக்கப்படுவதுடன், அவை ஒன்றில் நட்டம் செம்மையாக்கப்பட்ட மதிப்பீடுகளின் முகப் பெறுமதியில் ஒதுக்கப்பட்டு அல்லது அவற்றின் எதிர்கால அபிவிருத்தியினை பிரதிபலிப்பதற்காக தனியாக எதிர்வுகூறல் மேற்கொள்வதாகும். அனேகமான விடயங்களில், எதிர்கால கோரல்களின் சதவீதம், பணவீக்கம் அல்லது நட்ட வீதங்கள் தொடர்பாக வெளிப்படையான அனுமானங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை. பதிலாக, பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் வரலாற்று கோரல்கள் அபிவிருத்தி தரவுகளில் உள்ளடக்கமானதுடன் இவற்றின் அடிப்படையில் எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த போக்குகள் எந்தளவுக்கு எதிர்காலத்திற்கு செல்லுபடியாகாது என்பதை மதிப்பிடுவதற்கு மேலதிக பண்புசார் தீர்மானம் பயன்படுத்தப்பட்டது.(உதாரணமாக, ஒரு தடவை நிகழ்வுகளை பிரதிபலிப்பதற்கு, வெளிவாரி அல்லது சந்தை காரணிகளிலான மாற்றங்கள், கோரல்களுக்கான பொதுமக்களது மனோபாவங்கள், பொருளாதார நிலைமைகள், கோரல் பணவீக்கத்தின் மட்டங்கள், நீதிமுறை தீர்மானங்கள் மற்றும் சட்டவாக்கம், தேக்க கலவை, காப்புறுதி ஒப்பந்த சிறப்புக்கூறுகள் மற்றும் கோரல் கையாளுதல் செயல்முறைகள் போன்ற உள்வாரி காரணிகள் என்பனவாகும்) இது சம்பந்தப்பட்டுள்ள அனைத்து உறுதியின்மைகளை கணக்கிலெடுத்து வீச்சான சாத்தியமான விளைவுகளிலிருந்தான நிகழத்தக்க விளைவினை சமர்ப்பிக்கும் கிரயங்களின் மதிப்பிடப்பட்ட இறுதியான கிரயத்திற்கு வருவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

ஒத்த தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பன உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணத்திற்கான ஏற்பாடுகளின் போதுமையினை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

**காப்புறுதி ஒப்பந்த பொறுப்புக்கள்**

**ஆயுளல்லாத காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்கள்**

ஆயுளல்லாத காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்கள் ஒப்பந்தங்களில் ஈடுபட்டு தவணைக்கட்டணம் அறவிடப்படும்போது அங்கீகரிக்கப்படுகின்றன. இந்த பொறுப்புக்கள் நிலுவையிலுள்ள கோரல் ஏற்பாடுகள் என தெரிந்துகொள்ளப்படுவதுடன், இவை அறிக்கையிடப்படும் திகதியில் தீர்ப்பனவு செய்யப்படாத ஆனால் ஆட்பட்ட அனைத்து கோரல்களின் மதிப்பிடப்பட்ட இறுதி செலவினத்தின் அடிப்படையிலாகும் என்பதுடன் எதிர்பார்க்கப்படும் அழிவுமீட்பு பெறுமதி மற்றும் ஏனைய மீட்டல்களுக்கான குறைப்பு மற்றும் தொடர்புடைய கோரல் கையாளுதல் கிரயங்களுடனாகும். சில வகையான கோரல்களின் அறிவித்தலின் மற்றும் தீர்ப்பனவில் தாமதங்கள் அனுபவிக்கப்படலாம் என்பதுடன், எனவே அறிக்கையிடப்படும் திகதியில் இவற்றின் இறுதியான கிரயம் தெரிந்துகொள்ள இயலாது. அறிக்கையிடப்படும் திகதியில் வழக்கமான காப்பீட்டுக்கணிப்பு கோரல் எதிர்கால நிகழ்வுக்கணிப்பு நுட்பங்களின் வரம்பினை பயன்படுத்தி பொறுப்பானது கணிப்பிடப்படுகின்றது. பொறுப்பானது பணத்தின் நேரப் பெறுமதிக்காக கழிவிறக்கம் செய்யப்படுவதில்லை. சமமாக்கல் அல்லது பேரழிவு ஒதுக்கங்களுக்கு எவ்விதமான ஏற்பாடும் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஒப்பந்தமானது முதிர்வடைந்தால், விடுவிக்கப்பட்டால் அல்லது ரத்துசெய்யப்பட்டால் பொறுப்புக்கள் அங்கீகார அகற்றல் செய்யப்படுகின்றன.

உழைக்கப்படாத காப்புறுதி தவணைக்கட்டணங்களுக்கான ஏற்பாடானது இன்னமும் முதிர்வடையாத இடர்களுக்கு பெறப்பட்ட காப்புறுதித் தவணைக்கட்டணத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. பொதுவாக, ஒதுக்கமானது ஒப்பந்தத்தின் காலப்பகுதி மீது விடுவிக்கப்படுவதுடன் காப்புறுதி தவணைக்கட்டண வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், குழுமமானது அதன் முதிர்வடையாத இடரினை மீளாய்வு செய்வதுடன், உழைக்கப்படாத காப்புறுதித் தவணைக்கட்டணங்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கோரல்கள் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்களது ஏதேனும் ஒட்டுமொத்த மிகைகள் காணப்படுகின்றதா என்று தீர்மானிப்பதற்காக ஒரு பொறுப்பு போதுமை சோதனை செயலாற்றப்படுகின்றது. இந்த கணிப்பீடானது, உரிய ஆயுளல்லாத காப்புறுதி நுட்ப ஏற்பாடுகள் தொடர்பான சொத்துக்களில் எழுவதற்கு எதிர்பார்க்கும் முதலீட்டு விளைவினை கணக்கிலெடுத்ததன் பின்னர் எதிர்கால ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களின் நடைமுறை மதிப்பீடுகளை பயன்படுத்துகின்றது. இந்த மதிப்பீடுகள் உழைக்கப்படாத காப்புறுதித் தவணைக்கட்டணங்களின் கொண்டுசெல்லல் தொகையானது போதுமையானதாக இல்லை எனக் காண்பித்தால், பற்றாக்குறையானது பொறுப்பு போதுமைக்கான ஒரு ஏற்பாட்டினை உருவாக்குவதன் மூலம் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

செலுத்தவேண்டிய காப்புறுதியின் அங்கீகார அகற்றல்

செலுத்தவேண்டிய காப்புறுதிகள் பொறுப்பின் கீழான கடப்பாடானது விடுவிக்கப்பட்டால், ரத்துசெய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் அங்கீகார அகற்றல் செய்யப்படுகின்றது.

**முதிர்வடையாத இடர் ஒதுக்கம்**

காப்புறுதித் தவணைக்கட்டண பொறுப்பின் கணிப்பீடானது, கம்பனியின் உழைக்கப்படாத காப்புறுதித் தவணைக்கட்டண ஒதுக்கங்களிலிருந்து முக்கியமான முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட எதிர்பார்த்த தொகையுடன் ஒத்திவைக்கப்பட்ட கையக்கப்படுத்தல் கிரயம் கழிக்கப்படும் தேவையினை வேண்டுகின்றது. முதிர்வடையாத இடர் பொறுப்பினை மதிப்பிடுவதில், இந்தக் காப்புறுதிக் கொள்கைகள் கோரல்களுக்கான வெளிப்பாட்டினை கொண்டுள்ளவேளை ஆட்பட்ட ஒவ்வொரு வணிக மற்றும் கோரல் முகாமைத்துவ செலவினங்களுக்காக எதிர்பார்க்கப்படும் தேறிய கோரல் விகிதாசாரத்தில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஆயுளல்லாத காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்கள்**

ஆயுளல்லான காப்புறுதி ஒப்பந்தக்களுக்கு, அறிக்கையிடப்படும் திகதியில் அறிக்கையிடப்பட்ட எதிர்பார்க்கப்படும் இறுதியான கோரல்களின் கிரயம் மற்றும் அறிக்கையிடப்படும் திகதியில் ஆட்பட்ட எதிர்பார்த்த இறுதியான கோரல்களின் செலவினங்கள் ஆனால் இன்னமும் அறிக்கையிடப்படாதவை ஆகிய இரண்டிலும் மதிப்பீடுகள் செய்யப்படல் வேண்டும். இறுதியான கோரல் கிரயம் நிச்சயமாக நிறுவப்படுவதற்கு மற்றும் சில வகையான காப்புறுதிக் கொள்கைகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் தேவைப்படலாம்.

நிலுவையிலுள்ள கோரல்களின் இறுதியான கிரயமானது வழக்கமான காப்பீட்டுக் கணிப்பு கோரல்கள் எதிர்வுகூறல் நுட்பங்களை பயன்படுத்தி மதிப்பிடு செய்யப்படுகின்றது. இவை சங்கிலி ஏணி முறை, போர்ன்ஈயுட்டர்-வேர்கஸன் முறை மற்றும் நிகழ்வெண் /தீவிர முறை என்பனவாகும்.

இந்த நுட்பங்களின் உள்ளார்ந்த பிரதான அனுமானம் என்னவெனில் கம்பனியின் கடந்தகால கோரல்கள் அபிவிருத்தி அனுபவமானது எதிர்கால கோரல் அபிவிருத்தியினை எதிர்வுகூறுவதற்கு பயன்படுத்தப்படலாம் என்பதுடன் அதன்மூலம் இறுதி கோரல் கிரயங்கள். இதன் காரணமாக, இந்த முறைகள் செலுத்திய மற்றும் ஆட்பட்ட நட்டங்களின் அபிவிருத்தியினை ஊகித்துணர்வதுடன், கோரல் ஒன்றுக்கான சராசரி கிரயம் முன்னைய வருடங்களின் அவதானிக்கப்பட்ட அபிவிருத்தியின் அடிப்படையில் கோரல் எண்ணிக்கைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் நட்ட விகிதாசாரங்கள். வரலாற்று கிரயங்கள் அபிவிருத்தியானது பிரதானமாக விபத்து வருடங்களின் மூலம் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. ஆனால் பூகோள பிரதேசங்கள், கணிசமான வணிக வகை மற்றும் கோரல் வகைகள் ரீதியாகவும் மேலும் பகுப்பாய்வு செய்யலாம். பாரிய கோரல்கள் தனியாக விளித்துரைக்கப்படுவதுடன், அவை ஒன்றில் நட்டம் செம்மையாக்கப்பட்ட மதிப்பீடுகளின் முகப் பெறுமதியில் ஒதுக்கப்பட்டு அல்லது அவற்றின் எதிர்கால அபிவிருத்தியினை பிரதிபலிப்பதற்காக தனியாக எதிர்வுகூறல் மேற்கொள்வதாகும். அனேகமான விடயங்களில், எதிர்கால கோரல்களின் சதவீதம், பணவீக்கம் அல்லது நட்ட வீதங்கள் தொடர்பாக வெளிப்படையான அனுமானங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை. பதிலாக, பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் வரலாற்று கோரல்கள் அபிவிருத்தி தரவுகளில் உள்ளடக்கமானதுடன் இவற்றின் அடிப்படையில் எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த போக்குகள் எந்தளவுக்கு எதிர்காலத்திற்கு செல்லுபடியாகாது என்பதை மதிப்பிடுவதற்கு மேலதிக பண்புசார் தீர்மானம் பயன்படுத்தப்பட்டது.(உதாரணமாக, ஒரு தடவை நிகழ்வுகளை பிரதிபலிப்பதற்கு, வெளிவாரி அல்லது சந்தை காரணிகளிலான மாற்றங்கள், கோரல்களுக்கான பொதுமக்களது மனோபாவங்கள், பொருளாதார நிலைமைகள், கோரல் பணவீக்கத்தின் மட்டங்கள், நீதிமுறை தீர்மானங்கள் மற்றும் சட்டவாக்கம், தேக்க கலவை, காப்புறுதி ஒப்பந்த சிறப்புக்கூறுகள் மற்றும் கோரல் கையாளுதல் செயல்முறைகள் போன்ற உள்வாரி காரணிகள் என்பனவாகும்) இது சம்பந்தப்பட்டுள்ள அனைத்து உறுதியின்மைகளை கணக்கிலெடுத்து வீச்சான சாத்தியமான விளைவுகளிலிருந்தான நிகழத்தக்க விளைவினை சமர்ப்பிக்கும் கிரயங்களின் மதிப்பிடப்பட்ட இறுதியான கிரயத்திற்கு வருவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

உழைக்கப்படாத காப்புறுதித் தவணைக்கட்டணங்களுக்கான ஏற்பாடுகளின் போதுமையினை மதிப்பிடுவதில் ஒத்த தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நேர ஒதுக்கீடு தவிர்ந்த ஒரு அடிப்படையில் உழைக்கப்படாத தவணைக்கட்டணத்தின் பெறுமதிகுறைப்பினை ஒரு ஒப்பந்தத்தின் மூலம் வழங்கப்பட்ட காப்புறுதிச் சேவையின் போக்கானது வேண்டுகின்றதா என்று தீர்மானிப்பதில் மதிநுட்பம் தேவைப்படுகின்றது.

அனைத்து பொது காப்புறுதி ஒப்பந்தங்களும் ஒரு பொறுப்பு போதுமை சோதனைக்கு (பொ.போ.சோ) உட்படுகின்றன. பொ.போ.சோ. ஆனது நட்வர் என்.எம்.ஜி. வைனான்சியல் சேர்விஸஸ் கொன்சல்டிங் பிரைவேட் லிமிட்டட், சிங்கப்பூர் இனால் மேற்கொள்ளப்பட்டது.

மீள்காப்புறுதி பொறுப்புக்கள் காப்புறுதி கம்பனிகளுக்கு செலுத்தவேண்டிய மீதிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீள்காப்புறுதி சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் ஒப்பந்த உரிமைகள் அழிக்கப்படும்போது அல்லது முதிர்வடைந்தால் அல்லது ஒப்பந்தம் மற்றுமோர் தரப்பிற்கு மாற்றல் செய்யப்பட்டால் அங்கீகார அகற்றல் செய்யப்படுகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 39. காப்புறுதி பொறுப்புக்கள் மற்றும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி (தொடர்ச்சி...)

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| காப்புறுதிப் பொறுப்புக்கள் | 39.1 | 292 | - | - | 5,314,549 | 4,717,294 |
| செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி | | | - | - | 588,814 | 298,591 |
| மொத்தம் | | | - | - | 5,903,363 | 5,015,885 |

### 39.1 காப்புறுதி பொறுப்புக்கள்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|
| காப்புறுதிப் பொறுப்புக்கள் | - | - | 1,652,891 | 1,207,374 |
| செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி | - | - | 3,661,658 | 3,509,920 |
| மொத்தம் | - | - | 5,314,549 | 4,717,294 |

## 40. செயற்பாட்டு குத்தகை பொறுப்புக்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

கம்பனியானது குத்தகை ஆரம்பிக்கப்படும் திகதியில் குத்தகைக் காலப்பகுதி மீது செலுத்தவேண்டிய குத்தகைக் கொடுப்பனவுகளை நிகழ்காலப் பெறுமதியில் அளவிட்டு குத்தகைப் பொறுப்புக்களாக அங்கீகரிக்கின்றது. குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியினை கணிப்பதில் குழுமமானது குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலுள்ள அதன் நுண்மாற்றல் கடன்பெறுதல் வட்டிவீதத்தினைப் பயன்படுத்துகின்றது ஏனெனில் குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதத்தினை உடனடியாக தீர்மானிக்க இயலாததினாலாகும். ஆரம்பிக்கப்பட்ட திகதியின் பின்னர், குத்தகை பொறுப்புக்களின் தொகையானது வட்டியின் திரள்வினை பிரதிபலிப்பதற்காக அதிகரிக்கப்படுவதுடன் மேற்கொள்ளப்பட்ட குத்தகை கொடுப்பனவுகளுக்காக குறைக்கப்படுகின்றது. இதற்கும் மேலாக, குத்தகை பொறுப்புக்களின் கொண்டுசெல்லல் தொகையானது ஓர் திருத்தம், குத்தகை காலத்திலான மாற்றம், குத்தகைக் கொடுப்பனவுகளிலான மாற்றம் காணப்பட்டால் மீள்அளவீடு செய்யப்படுகின்றது.

SLFRS 16 இன் பிரகாரம் பின்னோக்கிய அணுகுமுறையினை பிரயோகித்ததுடன், இந்த நியமத்தை கடைப்பிடிக்கும்போது 12.62% இனை ஓர் நிறையிடப்பட்ட சராசரி நுண்மாற்றல் கடன்பெறுதல் வட்டிவீதமாக பயன்படுத்தியது. இது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை பதிவுசெய்வதற்காகும். (2021 - 12.45%).

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறானது | 2,286,386 | 1,909,098 | 1,614,660 | 1,594,245 |
| இவ்வருடத்தில் செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தங்களின் சேர்க்கைகள் / புதுப்பித்தல்கள் | 239,437 | 858,510 | 238,105 | 292,305 |
| வட்டியின் வளர்ச்சிப்பெருக்கம் | 250,137 | 228,985 | 170,465 | 191,935 |
| குத்தகை கடன்தாரர்களுக்கான கொடுப்பனவுகள் | (667,068) | (655,969) | (385,273) | (409,587) |
| இவ்வாண்டில் செயற்பாட்டு குத்தகை உடன்படிக்கைகளின் முதிர்வு | (49,842) | (54,238) | (49,842) | (54,238) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 2,059,050 | 2,286,386 | 1,588,115 | 1,614,660 |

**குத்தகை பொறுப்பின் உணர்திறன் பகுப்பாய்வு**

குத்தகை பொறுப்பிலான நுண்மாற்ற கடன்பெறுகை வட்டிவீதத்திலான சாத்தியமான மாற்றங்களிலிருந்து எழுகின்ற தாக்கமானது இடர் முகாமைத்துவ வெளிப்படுத்தல் குறிப்பு 56.4.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### குத்தகை பொறுப்பின் எஞ்சியுள்ள ஒப்பந்த முதிர்வுப் பகுப்பாய்வு

| கம்பனி<br>மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2022<br>ஒரு வருடத்தினுள் ரூ. '000 | 1-5 வருடங்கள் ரூ. '000 | 5 வருடங்களுக்கும் மேலானது ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| குத்தகைப் பொறுப்பு | 440,316 | 1,407,356 | 211,378 | 2,059,050 |
| | 440,316 | 1,407,356 | 211,378 | 2,059,050 |

| குழுமம்<br>மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2022<br>ஒரு வருடத்தினுள்<br>ரூ. '000 | 1-5 வருடங்கள்<br>ரூ. '000 | 5 வருடங்களுக்கும் மேலானது<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 |
|---|---|---|---|---|
| குத்தகை பொறுப்பு | 117,807 | 1,267,240 | 203,068 | 1,588,115 |
| | 117,807 | 1,267,240 | 203,068 | 1,588,115 |

| கம்பனி<br>மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021<br>ஒரு வருடத்தினுள்<br>ரூ. '000 | 1-5 வருடங்கள்<br>ரூ. '000 | 5 வருடங்களுக்கும் மேலானது<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 |
|---|---|---|---|---|
| குத்தகை பொறுப்பு | 404,863 | 1,509,462 | 372,061 | 2,286,386 |
| | 404,863 | 1,509,462 | 372,061 | 2,286,386 |

| குழுமம்<br>மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2021<br>ஒரு வருடத்தினுள்<br>ரூ. '000 | 1-5 வருடங்கள்<br>ரூ. '000 | 5 வருடங்களுக்கும் மேலானது<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 |
|---|---|---|---|---|
| குத்தகை பொறுப்பு | 236,268 | 1,038,946 | 339,446 | 1,614,660 |
| | 236,268 | 1,038,946 | 339,446 | 1,614,660 |

GRI | 207-1, 207-2, 207-4

## 41. நடைமுறை வரிப் பொறுப்புக்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

கம்பனி மற்றும் குழுமமானது வருமான வரிகள் மற்றும் நிதிச் சேவைகளிலான பெறுமதி சேர்த்தல் வரி, தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி உள்ளடங்கலான ஏனைய வரிகளுக்கு உட்பட்டதாகும். நடைமுறை, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஏற்பாட்டினை தீர்மானிப்பதற்கு கணிசமானளவு தீர்மானம் தேவைப்படுகின்றது. இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வரிச் சட்டங்களின் பொருந்துதன்மையிலான பொருள் விளக்கம் தொடர்பாக உறுதியற்ற நிலைமைகள் காணப்படுகின்றன.

மேலதிக வரிகள் செலுத்தவேண்டி வருமா என்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் நடைமுறை, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கு குழுமம் மற்றும் கம்பனியானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அங்கீகரிக்கின்றன. இந்த விடயங்களில் இறுதி வரி விளைவுகள் ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்ட தொகைகளிலிருந்து வித்தியாசமாகக் காணப்பட்டால், அத்தகைய வித்தியாசங்கள் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் வருமானம், ஒத்திவைக்கப்பட்ட வரித் தொகைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தும்.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி<br>2022<br>ரூ. '000 | கம்பனி<br>2021<br>ரூ. '000 | குழுமம்<br>2022<br>ரூ. '000 | குழுமம்<br>2021<br>ரூ. '000 |
|---|---|---|---|---|
| செலுத்தவேண்டிய நடைமுறை வரி | 1,851,676 | 362,450 | 2,098,784 | 883,900 |
| மொத்தம் | 1,851,676 | 362,450 | 2,098,784 | 883,900 |

## 41. நடைமுறை வரிப் பொறுப்புக்கள் ( தொடர்ச்சி...)

### 41.1 நடைமுறை வரிப்பொறுப்பு

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 362,450 | 1,803,309 | 883,900 | 2,077,418 |
| வருடத்திற்கான ஏற்பாடு | 2,712,280 | 1,999,971 | 3,221,561 | 2,601,140 |
| முன்னைய ஆண்டு தொடர்பாக குறை / (மிகை) ஏற்பாடு | (47,744) | (90,892) | (47,744) | (95,886) |
| வருமான வரிக் கொடுப்பனவு | (1,175,310) | (3,349,938) | (1,958,933) | (3,534,648) |
| வரி வரவுகள்(*) | - | - | - | - |
| பொருளாதார சேவைக் கட்டணம் | - | - | - | (164,124) |
| மார்ச் 321 இல் உள்ளவாறான மீதி | 1,851,676 | 362,450 | 2,098,784 | 883,900 |

### 41.2 பொருளாதார சேவைக் கட்டணம் (பொ.சே.க.)

2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், மற்றும் அதனிலான திருத்தங்களுடன், பொசேக ஆனது "விலக்களிக்கப்பட்டுள்ள புரள்வில்" 0.5% இனை செலுத்துதல் வேண்டும மற்றும் இது வருமான வரிக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படக்கூடியவையாகும். கோரப்படாத பொசேக ஏதேனும் காணப்படின், முன்கொண்டு செல்லப்பட்டு அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் செலுத்தவேண்டிய வருமான வரிக்கு எதிராக ஈடுகட்டப்படலாம். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 1 ஜனவரி 2020 திகதியிடப்பட்டு பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், பொசேக ஆனது 01 ஜனவரி 2020 முதல் அகற்றப்பட்டுள்ளது.

### 41.3 நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகளிலான பிடித்து வைத்தல் வரி (பிவைவ)

2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 37 இன் பிரகாரம், மற்றும் அதனிலான திருத்தங்களுடன், ஒரு கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட நிலையான வைப்புகள் மற்றும் சேமிப்பு கணக்குகளுக்கான வட்டி வருமானத்தில் கணக்கில் வரவு வைக்கப்படும்போது அல்லது செலுத்தப்படும்போது வருடாந்தம் 10% பிவைவ கழிக்கப்பட்டுள்ளது. 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 84 இன் பிரகாரம், 1 ஏப்ரல் 2018 முதல் ஒரு நபருக்கு செலுத்தப்படும் வட்டி அல்லது கழிவில் பிவைவ 5% ஆக குறைக்கப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 18 பெப்ரவரி 2020 திகதியிடப்பட்டு பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், பிவைவ ஆனது 01 ஜனவரி 2020 முதல் அகற்றப்பட்டுள்ளது.

## 42. ஏனைய பொறுப்புக்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

ஏனைய பொறுப்புக்கள் நிதிச் சேவைகளில் செலுத்தவேண்டிய பெசேவ, செலுத்தவேண்டிய பெறுமதி சேர்த்தல் வரி (பெசேவ) செலுத்தவேண்டிய ஏனைய வரிகள் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளை உள்ளடக்குகின்றது. இந்த நிதியல்லாத பொறுப்புக்கள் தற்போதைய கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்காக பகுத்தறிவாக செலுத்தவேண்டிய அல்லது ஐந்தொகைத் திகதியில் ஒரு மூன்றாம் தரப்பினருக்கு மாற்றல் செய்யவேண்டிய தொகைக்கு அளவீடு செய்யப்படுகின்றன.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 |
| நிதிச் சேவைகளில் செலுத்தவேண்டிய பெசேவ | 428,150 | 351,885 | 441,687 | 367,928 |
| செலுத்தவேண்டிய பெறுமதி சேர்த்தல் வரி (பெசேவ) | 6,985 | 19,590 | 51,216 | 61,394 |
| செலுத்தவேண்டிய பி.வை.வ. | - | 7,192 | 178 | 7,370 |
| செலுத்தவேண்டிய பயிர் காப்புறுதிக் கட்டணம் | 13,595 | 18,372 | 13,595 | 16,132 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டிய தொகை | 498,011 | 320,699 | 498,650 | 321,655 |
| செலுத்தவேண்டிய முத்திரைத் தீர்வை | 62,106 | 61,790 | 64,546 | 64,295 |
| ஏனைய செலுத்தவேண்டியவைகள் | 360,207 | 289,593 | 329,158 | 318,048 |
| மொத்தம் | 1,369,054 | 1,069,121 | 1,399,030 | 1,156,822 |

## 43. ஓய்வுபெறல் நலன் கடப்பாடு

**பணியாட்கள் நலன்கள்**

**ஓய்வுபெறல் நலன் கடப்பாடு - பணிக்கொடை**

பணிக்கொடைக்கான வாக்குறுதியளிக்கப்பட்ட ஓய்வுபெறல் நலன்களின் நிகழ்காலப் பெறுமதியினை குழுமம் / கம்பனி அளவீடு செய்கின்றது. இது இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 19 - "பணியாட்கள் நலன்கள்" இனால் தேவைப்படுமாறு "எதிர்வுகூறப்படும் அலகு வரவு முறையினை " (எஅவமு) பயன்படுத்தி ஒரு சுயாதீன தொழில்சார் காப்பீட்டுக் கணிப்பீட்டாளரது ஆலோசனையுடனான ஒரு ஓய்வுபெறல் நலன் திட்டமாகும்.

2021 இன் 28 ஆம் இலக்க பணியாட்களின் ஆகக்குறைந்த ஓய்வுறல் வயது இனால் சட்டமயமாக்கப்பட்ட ஓய்வுறல் வயதின் அதிகரிப்பின் காரணமாக கம்பனியின் ஓய்வுபெறல் நலன் திட்டமானது திருத்தியமைக்கப்பட்டது.

**காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்களின் அங்கீகாரம்**
குழுமம்/ கம்பனியானது திட்டம் தொடர்பாக கம்பனியின் கடப்பாட்டினை கணிப்பிடுவதிலிருந்து எழுகின்ற மொத்த காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்கள் விரிவான வருமானக் கூற்றில் அது இடம்பெற்ற காலத்தில் அங்கீகரிக்கின்றது.

**நிதியளித்தல் ஏற்பாடுகள்**
பணிக்கொடை பொறுப்பானது வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை.

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்
ஓர் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமானது தொழில் நிறைவடைந்ததன் பின்னரான ஓர் நலன் திட்டமாகும். இதன் கீழ் ஒரு நிறுவனம் நிலையான பங்களிப்புகளை ஓர் தனியான நிறுவனத்திற்கு (ஓர் நிதியம்) செலுத்துகின்றது மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 19 (ஊழியர் நலன்கள்) இல் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு, நடைமுறை மற்றும் முன்னைய காலங்களுக்கான ஊழியர்களது சேவைகள் தொடர்பாக நிதியமானது அனைத்து ஊழியர் நலன்களையும் செலுத்துவதற்கு போதுமான சொத்துக்களை வைத்திருக்காவிட்டால் மேலதிக பங்களிப்புகளைச் செலுத்துவதற்கான எவ்விதமான சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு காணப்படமாட்டாது.

ஓர் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கு செலுத்தப்படவேண்டிய பங்களிப்பானது ஊழியர்களினால் கம்பனிக்கு ஆற்றப்பட்ட சேவைகளின் விகிதாசாரத்தில் காணப்படுவதுடன் அவை செலுத்தவேண்டியேற்படும்போது ஓர் செலவினமாக பதிவுசெய்யப்படுகின்றது. செலுத்தப்படாத பங்களிப்புகள் ஓர் பொறுப்பாக பதிவு செய்யப்படுகின்றது.

குழுமம் / கம்பனி மற்றும் ஊழியர்கள் இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு முறையே 12% மற்றும் 8% ஒவ்வொரு ஊழியரினதும் மொத்த சம்பளத்தில் பங்களிப்பு செய்யப்படுகின்றது.

ஒவ்வொரு ஊழியரினதும் மொத்த சம்பளத்தில் 3% இனை குழுமம்/கம்பனி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு செய்கின்றது.

**ஓய்வுபெறல் நலன் கடப்பாடு**
ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டின கிரயமானது காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது கழிவு வீதங்கள், சொத்துக்களில் எதிர்பார்க்கப்படும் விளைவு வீதம், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால பணிக்கொடை அதிகரிப்புகள் ஆகியவற்றில் அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்கியுள்ளது. அத்தகைய கடப்பாடுகளின் நீண்டகால தன்மையின் காரணமாக, இந்த மதிப்பீடுகள் கணிசமான நிச்சயமற்றதன்மைக்கு உட்படுகின்றன. அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியில் மீளாய்வு செய்யப்படுகின்றன.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்க எண். | கம்பனி 2021/22 ரூ. '000 | கம்பனி 2020/21 ரூ. '000 | குழுமம் 2021/22 ரூ. '000 | குழுமம் 2020/21 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | | | 587,257 | 592,871 | 657,778 | 647,929 |
| இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 43.1 | 295 | 82,893 | 111,742 | 102,203 | 129,888 |
| விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட தொகை | 43.2 | 296 | 31,732 | (107,003) | 28,272 | (106,891) |
| இவ்வருடத்தில் செலுத்தப்பட்ட நலன்கள் | | | (33,471) | (10,353) | (39,309) | (13,148) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | | | 668,411 | 587,257 | 748,944 | 657,778 |

## 43.1 இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட தொகை

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|
| கடந்த சேவைக்கால கிரயம் | (20,736) | - | (23,590) | - |
| நடைமுறை சேவைக்கால கிரயம் | 57,412 | 52,455 | 94,744 | 69,823 |
| தேறிய நிர்ணயிக்கப்பட்ட பொறுப்பிலான தேறிய வட்டி | 46,217 | 59,287 | 51,785 | 60,065 |
| இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீரிக்கப்பட்ட மொத்த தொகை | 82,893 | 111,742 | 102,203 | 129,888 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 43. ஓய்வுபெறல் நலன் கடப்பாடு (தொடர்ச்சி...)
### 43.2 விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட தொகை

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 | 2022<br>ரூ. '000 | 2021<br>ரூ. '000 |
| அனுமானங்களிலான மாற்றங்களின் காரணமான நட்டங்கள் / (இலாபங்கள்) | 9,555 | (38,363) | 22 | (42,779) |
| இவ்வருடத்தில் எழுகின்ற அனுபவ இழப்புகள் / (இலாபங்கள்) | 22,177 | (68,640) | 28,250 | (64,112) |
| விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த காப்பீட்டுக் கணிப்பு (நட்டங்கள்)/ இலாபங்கள் | 31,732 | (107,003) | 28,272 | (106,891) |

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டிலான ஒரு காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது நட்வர் எக்சூயேரியல் அன்ட் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்ட்டியனால், ஒரு தொழில்சார் காப்பீட்டுக் கணிப்பு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது (31 மார்ச் 2021 இல் நட்வர் எக்சூயேரியல் அன்ட் மெனேஜ்மன்ட் கொன்சல்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்ட்). பொறுப்பினை பெறுமதியிடுவதற்கு காப்பீட்டுக் கணிப்பீட்டாளரினால் பயன்படுத்தப்படும் பெறுமதியிடல் முறையானது இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 19 - “பணியாட்கள் நலன்கள்” இனால் பரிந்துரைக்கப்பட்ட முறையான “எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு” முறையாகும்.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2022 | 2021 |
|---|---|---|
| கம்பனி / குழுமம் | | |
| காப்பீட்டுக் கணிப்பு அனுமானங்கள் | | |
| கழிவு வீதம் | 15.00% | 7.87% |
| எதிர்கால சம்பள வீதம் | 13.00% | 6.00% |
| இறப்பு | ஒரு 1967/70 இறுதி இறப்பு | ஒரு 1967/70 இறுதி இறப்பு |
| இயலாமை | வழக்கமான RI வீதங்கள் | |
| ஓய்வுபெறல் வயது | 60 வருடங்கள் | 55 வருடங்கள் |

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான துடிப்பான பங்குபற்றுனர்களின் எதிர்பார்க்கப்படும் சராசரி தொழில் வாழ்க்கை 8.58 வருடங்களாகும் (10.68 - 2021)

### 43.3 காப்பீட்டுக் கணிப்பில் ஈடுபடுத்தப்பட்ட அனுமானங்களின் உணர்திறன்

பணிக்கொள்ளல் நலன் பொறுப்பு வழிமுறைகளில் ஏனைய அனைத்து மாறிகளும் நிலையாக காணப்படும்போது பயன்படுத்தப்பட்ட முக்கிய அனுமானங்களிலான ஒரு நியாயமான சாத்தியமான மாற்றத்தின் உணர்திறனை பின்வரும் அட்டவணையானது காட்சிப்படுத்துகின்றது.

விரிவான வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று ஆகியவற்றின் உணர்திறனானது, வருடத்திற்கான பணிக்கொள்ளல் நலன் கடப்பாட்டிலான கழிவிறக்க வீதம் மற்றும் சம்பள அதிகரிப்பு வீதம் ஆகியவற்றிலான ஊகம்செய்யப்பட்ட மாற்றங்களின் விளைவாகும்.

| | | 2022 | | 2021 | |
|---|---|---|---|---|---|
| | | விரிவான வருமானக் கூற்றிலான விளைவு வருடத்தின் விளைவிலான அதிகரிப்பு/ (குறைப்பு)<br>ரூ. '000 | பணியாள் நலன் கடப்பாட்டிலான விளைவு பொறுப்பிலான அதிகரிப்பு/ (குறைப்பு)<br>ரூ. '000 | விரிவான வருமானக் கூற்றிலான விளைவு வருடத்தின் விளைவிலான அதிகரிப்பு/ (குறைப்பு)<br>ரூ. '000 | பணியாள் நலன் கடப்பாட்டிலான விளைவு பொறுப்பிலான அதிகரிப்பு/ (குறைப்பு)<br>ரூ. '000 |
| கழிவிறக்க வீதத்திலான அதிகரிப்பு / (குறைப்பு) | 1% | 46,958 | (46,958) | 37,667 | (37,667) |
| | -1% | (53,552) | 53,552 | (42,606) | 42,606 |
| சம்பள அதிகரிப்பிலான அதிகரிப்பு / (குறைப்பு) | 1% | (53,830) | 53,830 | (42,735) | 42,735 |
| | -1% | 47,935 | (47,935) | 38,416 | (38,416) |

### 43.4 முதிர்வுத் தோற்றுருவத்தின் பிரகாரமான ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டின் பகுப்பாய்வு

பின்வரும் குறிப்பானது ஒவ்வொரு தனியான பணியாளதும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால தொழில் வாழ்க்கை நேரத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டினை பகுப்பாய்வு செய்தது. எதிர்பார்க்கப்படும் எதிர்கால தொழில் வாழ்க்கையானது ஓய்வுபெறுவதற்கு முன்னர் விலகல்கள், இறப்பு அல்லது ஊனமடைதல் என்பவற்றின் நிமித்தமான ஒரு வெளியேறுகையின் சாத்தியத்தினை கருத்திலெடுக்கின்றது.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| அடுத்த 12 மாதங்களினுள் | 54,921 | 90,630 | 62,636 | 92,778 |
| 1 முதல் 5 வருடங்கள் வரை | 246,811 | 197,715 | 275,960 | 223,127 |
| 5 வருடங்களுக்கு அப்பால் | 366,679 | 298,912 | 410,348 | 341,873 |
| மொத்தம் | 668,411 | 587,257 | 748,944 | 657,778 |

GRI | 207-1, 207-2, 207-4

## 44. ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள்/ சொத்துக்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

ஒத்திவைக்கப்பட்ட வரியானது அறிக்கையிடப்படும் திகதியில் காணப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடித்தளங்கள் மற்றும் நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்காக கொண்டு செல்லப்படும் தொகைகளுக்கும் இடையேயான தற்காலிக வித்தியாசத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. பின்வருவன தவிர்த்த, ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களுக்கும் அங்கீகரிக்கப்படுகின்றன:

- நன்மதிப்பின் ஆரம்ப அங்கீகாரத்தில் அல்லது ஓர் வணிக பிணைப்பற்ற ஓர் கொடுக்கல் வாங்கலிலான ஓர் சொத்து அல்லது பொறுப்பு ஆகியவற்றிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு எழும்போது, மற்றும் கொடுக்கல் வாங்கலின்போது கணக்கீட்டு இலாபத்தையோ அல்லது வரிவிதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டத்தையோ பாதிக்காதவை : மற்றும்
- துணைக் கம்பனிகளிலான முதலீடுகளுடன் இணைந்த வரிவிதிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பாக, தற்காலிக வித்தியாசங்களது திருப்பலின் நேரமானது கட்டுப்படுத்தக்கூடியது மற்றும் தற்காலிக வித்தியாசங்கள் எதிர்வரும் எதிர்காலத்தில் திருப்பப்படாததற்கான சாத்தியம் காணப்படின்.

கழிக்கத்தக்க அனைத்து தற்காலிக வித்தியாசங்களுக்கு, பயன்படுத்தப்படாத வரி வரவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களது கொண்டு செல்லல் என்பவற்றுக்கான ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. இது வரிவிதிக்கத்தக்க இலாபம் கழிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்கள், மற்றும் கொண்டு செல்லப்படும் பயன்படுத்தப்படாத வரி வரவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களுக்கு எதிராக பயன்படுத்துவதற்கு கிடைக்கும் அளவிற்கு, அதற்கு விதிவிலக்காக,

- ஓர் வணிக பிணைப்பு அல்லாத கொடுக்கல் வாங்கலில் ஓர் சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து எழுகின்ற கழிக்கப்படக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வரியானது, கொடுக்கல் வாங்கலின்போது கணக்கீட்டு இலாபத்தையோ அல்லது வரிவிதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டத்தினை பாதிக்காதவை: மற்றும்

- துணைக் கம்பனிகளிலான முதலீடுகளுடன் இணைந்த கழிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பாக ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் எதிர்வரும் எதிர்காலங்களில் தற்காலிக வித்தியாசங்கள் திருப்பப்படும் சாத்தியமான அளவிற்கு மாத்திரம் அங்கீகரிக்கப்படுவதுடன் மற்றும் வரிவிதிக்கத்தக்க இலாபமானது தற்காலிக வித்தியாசங்களை பயன்படுத்துவதற்கு கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகையானது, அனைத்தும் அல்லது பகுதியளவிலான ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தினை பயன்படுத்துவதற்கு போதுமான வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கும் என்பது சாத்தியமற்றுக் காணப்படும் அளவிற்கு குறைக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்படாத ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபமானது ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தினை மீட்கக்கூடிய சாத்தியம் வரும் அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றது.

ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், சொத்து தீர்வாகிய அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்பட்ட வருடத்தில் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் அளவீடு செய்யப்படுகின்றது. இது அறிக்கையிடப்படும் திகதியில் சட்டமயமாக்கப்பட்ட அல்லது பொருண்மையாக சட்டமாக்கப்பட்ட வரி வீதங்களின் (வரிச் சட்டங்கள்) அடிப்படையினாலாகும்.

உரித்துவத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட உருப்படிகள் தொடர்பாக நடைமுறை வரி மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரி என்பன இலாபம் அல்லது நட்டக் கூற்றிலின்றி உரித்துவத்திலேயே அங்கீகரிக்கப்படுகின்றது.

ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்களும் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்களும், நடைமுறை வரிச் சொத்துக்களை நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக ஈடுசெய்வதற்கான ஓர் சட்டரீதியாக வலியுறுத்தத்தக்க உரிமை காணப்படுமாயின், மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரிகள் அதே வரிவிதிக்கத்தக்க நிறுவனம் மற்றும் அதே வரிவிதிப்பு அதிகாரசபையுடன் தொடர்புபட்டிருந்தால், ஈடுகட்டப்படுகின்றது.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| சொத்துக்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவை | (1,146,726) | (415,841) | (1,444,813) | (594,495) |
| பொறுப்புக்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவை | - | - | 323,621 | 297,568 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு / சொத்து | (1,146,726) | (415,841) | (1,121,192) | (296,927) |

ஒரு நிறுவனத்தின் தேறிய ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் இன்னுமோர் நிறுவனத்தின் சொத்துக்கள் / பொறுப்புக்களுடன் ஈடுசெய்யப்படலாகாது ஏனெனில் ஈடுசெய்வதற்கான சட்டரீதியான வலியுறுத்தத்தக்க உரிமை இல்லாததனாலாகும். எனவே, வெவ்வேறு நிறுவனங்களின் தேறிய ஒத்திவைக்கப்பட்ட வாசி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் தனித்தனியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 44. ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள்/ (சொத்துக்கள்) ( தொடர்ச்சி...)

### 44.1 ஒத்திவைக்கப்பட்ட வரியிலான அசைவுகள்

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | (415,841) | (376,291) | (296,924) | (53,709) |
| வருடத்திற்கான செலவினம் | (673,452) | (69,511) | (766,656) | (270,905) |
| விரிவான வருமானக் கூற்றின் கூறுகள் தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வரி மாற்றம் | (57,433) | 29,961 | (57,612) | 27,690 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | (1,146,726) | (415,841) | (1,121,192) | (296,924) |

| 31 மார்ச் 2022 இல் உள்ளவாறானது | கம்பனி | | | | | குழுமம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ரூ '000 | ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் ரூ. '000 | இலாபம் அல்லது நட்டக் கூற்று ரூ. '000 | விரிவான வருமானக் கூற்று ரூ. '000 | உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று ரூ. '000 | ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ரூ. '000 | ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் ரூ. '000 | இலாபம் அல்லது நட்டக் கூற்று ரூ. '000 | விரிவான வருமானக் கூற்று ரூ. '000 | உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று ரூ. '000 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 127,122 | - | 39,501 | (7,616) | (7,616) | 242,236 | - | (234,413) | (7,795 ) | (7,795 ) |
| முன்கொண்டுசெல்லப்பட்ட வரி நட்டங்கள் | - | - | - | - | - | - | - | 171,164 | - | - |
| வருமதியான கடன்களுக்கான வலுக்குன்றல் தள்ளுபடி | 1,936,823 | 787,070 | 178,514 | - | - | 2,127,250 | 787,071 | 306,055 | - | - |
| நிலைமாற்றல் செம்மையாக்கலிலான ஒத்திவைக்கப்பட்ட வரி | 214,911 | - | - | - | - | 214,911 | - | 13,512 | - | - |
| வரி நோக்கத்திற்காக விரைவு படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு தள்ளுபடி (குத்தகை) | - | 382,094 | (862,128) | - | - | - | 382,094 | (862,128) | - | - |
| வரி நோக்கத்திற்காக விரைவு படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு தள்ளுபடி (ஆபொஉ) | - | 26,322 | (6,363) | - | - | - | 201,939 | (22,111) | - | - |
| SLFRS 16 இலான ஒத்திவைக்கப்பட்ட வரி | 49,677 | 36,138 | (22,976) | - | - | 49,677 | 36,138 | (59,114) | - | - |
| ஏவிவறிபெ இல் ஒத்திவைக்கப்பட்ட வரி | 49,817 | - | - | (49,817) | (49,817) | 49,817 | - | - | (49,817) | (49,817) |
| நியாயப் பெறுமதி இலாபங்கள்/ நட்டங்கள் - முதலீட்டு ஆதனம் | - | - | - | - | - | - | 155,457 | (79,621) | - | - |
| | 2,378,350 | 1,231,624 | (673,452) | (57,433) | (57,433) | 2,683,891 | 1,562,699 | (766,656) | (57,612) | (57,612) |
| வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தில் மற்றும் ஏனைய விரிவான வருமானத்திலான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | | | (673,452) | (57,433) | | | | (766,656) | (57,612) | |
| உரித்துவத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவை | | | | | (57,433) | | | | | (57,612) |
| சொத்துக்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவை | | (1,146,726) | | | | | (1,444,813) | | | |
| பொறுப்புக்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவை | | - | | | | | 323,621 | | | |
| மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | | (1,146,726) | | | | | (1,121,192) | | | |

| 31 மார்ச் 2021 இல் உள்ளவாறானது | கம்பனி | | | | | குழுமம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ரூ '000 | ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் ரூ. '000 | இலாபம் அல்லது நட்டக் கூற்று ரூ. '000 | விரிவான வருமானக் கூற்று ரூ. '000 | உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று ரூ. '000 | ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ரூ '000 | ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் ரூ. '000 | இலாபம் அல்லது நட்டக் கூற்று ரூ. '000 | விரிவான வருமானக் கூற்று ரூ. '000 | உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று ரூ. '000 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 166,597 | - | (30,564) | 29,961 | 29,961 | 171,164 | - | 18,973 | 27,690 | 27,690 |
| முன்கொண்டுசெல்லப்பட்ட வரி நட்டங்கள் | - | - | - | - | - | - | - | 268 | - | - |
| வருமதியான கடன்களுக்கான வலுக்குன்றல் தள்ளுபடி | 1,786,426 | 465,774 | 172,933 | - | - | 2,078,889 | 465,774 | 59,002 | - | - |
| நிலைமாற்றல் செம்மையாக்கலிலான ஒத்திவைக்கப்பட்ட வரி | 214,911 | - | 35,818 | - | 250,729 | 228,423 | - | 38,071 | - | - |
| வரி நோக்கத்திற்காக விரைவு படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு தள்ளுபடி (குத்தகை) | - | 1,244,197 | (243,171) | - | - | - | 1,244,197 | (243,171) | - | - |
| வரி நோக்கத்திற்காக விரைவு படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு தள்ளுபடி (ஆபொஉ) | - | 32,685 | 28,197 | - | - | - | 224,050 | 92,393 | - | - |
| SLFRS 16 இலான ஒத்திவைக்கப்பட்ட வரி | 26,701 | 36,138 | (32,724) | - | - | 26,701 | 36,138 | (37,787) | - | - |
| நியாயப் பெறுமதி இலாபங்கள்/ நட்டங்கள் - முதலீட்டு ஆதனம் | - | - | - | - | - | 51,899 | 289,990 | (198,654) | - | - |
| | 2,194,635 | 1,778,794 | (69,511) | 29,961 | 280,690 | 2,557,076 | 2,260,149 | (270,905) | 27,690 | 27,690 |
| வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தில் மற்றும் ஏனைய விரிவான வருமானத்திலான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | | | (69,511) | 29,961 | | | | (270,905) | 27,690 | |
| உரித்துவத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவை | | | | | 280,690 | | | | | 27,690 |
| சொத்துக்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவை | | (415,841) | | | | | (594,495) | | | |
| பொறுப்புக்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவை | | - | | | | | 297,568 | | | |
| மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் / (சொத்துக்கள்) | | (415,841) | | | | | (296,927) | | | |

ஒவ்வொரு கம்பனிக்கும் குறிப்பிட்ட வீதத்தில் ஒத்திவைக்கப்பட்ட சொத்துக்கள் / பொறுப்புக்கள் கணிப்பிடப்பட்டுள்ளன.

## 45. கூறப்பட்ட மூலதனம்

**மூலதனம்**

கம்பனியானது வணிகத்தில் புதைந்துள்ள இடர்நேர்வுகளைக் காப்பதற்காக ஓர் துடிப்பான முகாமைப்படுத்தப்படும் மூலதன அடித்தளத்தினை பராமரிப்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் மூலதனப் போதுமை தேவைப்பாடுகளையும் சந்திக்கின்றது. கம்பனியின் மூலதனத்தின் போதுமையானது, ஏனைய வழிமுறைகளின் மத்தியில், இலங்கை மத்திய வங்கியினால் நிலைநாட்டப்பட்ட விதிகள் மற்றும் விகிதாசாரங்களை பயன்படுத்தி கண்காணிக்கப்படுகின்றது.

கம்பனியானது அதன் மூலதனக் கட்டமைப்பினை முகாமைப்படுத்துகின்றது மற்றும் பொருளாதார நிலைமைகள் மற்றும் அதன் நடவடிக்கைகளின் இடர் சிறப்பியல்புகளின் மாற்றங்களின பிரகாரம் திருத்தங்களை மேற்கொள்கின்றது. மூலதனக் கட்டமைப்பினை பராமரிப்பதற்கு அல்லது செம்மையாக்குவதற்காக கம்பனியானது பங்குதாரர்களுக்கான அதன் பங்கிலாபக் கொடுப்பனவு தொகையினை திருத்தியமைக்கும், பங்குதாரர்களுக்கு மூலதனத்தினை திருப்பிக்கொடுக்கும் அல்லது மூலதனப் பிணையங்களை வழங்கும்.

**மூலதன முகாமைத்துவம்**

கம்பனியின் மூலதன முகாமைத்துவக் கொள்கையினது பிரதான குறிக்கோள்கள் கம்பனி வெளிவாரியாக விதிக்கப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்தல் மற்றும் அதன் வணிகத்திற்கு துணையளிப்பதற்கு மற்றும் பங்குதாரர் பெறுமதியினை உச்சநிலைப்படுத்துவதற்காக. திடமான கடன் தரப்படுத்தல்கள் மற்றும் ஆரோக்கியமான மூலதன விகிதாசாரங்களை பராமரித்தல் என்பவையாகும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 45. கூறப்பட்ட மூலதனம் (தொடர்ச்சி...)

| | கம்பனி/குழுமம் 2022 | | கம்பனி/குழுமம் 2021 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | ரூ. '000 | எண்ணிக்கை | ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறானது | 1,704,602,760 | 14,892,036 | 1,627,703,388 | 13,915,414 |
| பத்திரப் பங்கிலாபம் | 182,592,242 | 2,179,925 | 76,899,372 | 976,622 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 1,887,195,002 | 17,071,961 | 1,704,602,760 | 14,892,036 |

**மூலதன வகுப்புகளின் உரிமைகள், முன்னுரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கம்பனியின் சாதாரண பங்குகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ளன. சாதாரண பங்குகளின் உரித்துடைமையாளர்கள் காலாகாலம் பிரகடனம் செய்யப்படும் பங்கிலாபங்களை பெறுவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளதுடன் கம்பனியின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கொன்றிற்கு ஒரு வாக்கிற்கு உரிமையுள்ளவர்களாவார்கள்.

**முறைமைப்படுத்தல் மூலதனம்**

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | 2022 | | 2021 | |
|---|---|---|---|---|
| | மெய்யானது ரூ. '000 | தேவையானது ரூ. '000 | மெய்யானது ரூ. '000 | தேவையானது ரூ. '000 |
| அடுக்கு 1 மூலதனம்/ மைய மூலதனம் | 36,445,056 | 2,000,000 | 33,109,148 | 2,000,000 |
| அடுக்கு 1 மூலதன விகிதம்/ மைய மூலதன விகிதம் | 18.76% | 7.00% | 17.72% | 7.00% |
| மொத்த மூலதன விகிதம்/ மொத்த இடர் நிறையிடப்பட்ட மூலதன விகிதம் | 19.67% | 11.00% | 18.58% | 11.00% |

2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பணிப்புரையின் பிரகாரம், முறைமைப்படுத்தல் மூலதனமானது அடுக்கு 1 மூலதனத்தினை உள்ளடக்குவதுடன் இது கூறப்பட்ட மூலதனம், சட்டரீதியான ஒதுக்க நிதியம், நடைமுறையாண்டு இலாபம் உள்ளடங்களான நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள், பொது மற்றும் ஏனைய ஒதுக்கங்களிலிருந்து நன்மதிப்பு கழிக்கப்பட்டு, ஏனைய அருவச் சொத்துக்கள், ஏனைய விரிவான வருமான நட்டங்கள், ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள், மொத்த ஏற்பாடுகளுக்கான திரண்ட வலுக்குன்றலின் பற்றாக்குறை மற்றும் தொங்கலிலுள்ள வட்டி மற்றும் வங்கியியல் மற்றும் நிதியியல் கம்பனிகளிலான முதலீட்டின் 50% இனை உள்ளடக்கியதாகும்.

2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பணிப்புரையானது 1 ஜனவரி 2021 அளவில் ஒவ்வொரு உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனியும் மைய மூலதனமாக ரூபா 2.5 பில்லியனுக்குக் குறையாத தொகையினை வைத்திருக்கும் தேவைப்பாடு காணப்பட்டபோதிலும், இலங்கை மத்திய வங்கியின் 31 மார்ச் 2020 திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட கடிதத்தினூடாக பின்வரும் தலைப்பின் கீழ்,"இலங்கை மத்திய வங்கியினால் கொரோனா வைரஸ் தொற்று (கோவிட்-19) பரவலின் காரணமாக பாதிக்கப்பட்ட வணிகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு துணைபுரிவதற்காக உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு நெகிழ்வுத்தன்மையினை வழங்குவதற்காக எடுக்கப்பட்ட முறைமைப்படுத்தல் வழிமுறைகள்" மேம்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த மைய மூலதனத் தேவைப்பாடான ரூபா 2.5 பில்லியனை 1 ஜனவரி 2022 வரை ஒத்திவைப்பதற்கான சலுகைகள் வழங்கப்பட்டன. மேலும், அத்தகைய கடிதமானது 01.07.2020 மற்றும் 01.07.2021 இல் சந்திக்கத் தேவையான ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை 2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பணிப்புரை - மூலதனப் போதுமை தேவைப்பாடுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் மூலதனப் போதுமை தேவைப்பாட்டினை பராமரிப்பதனை முறையே 01.07.2021 மற்றும் 01.07.2022 வரை ஒத்திவைக்கின்றது.

## 46. சட்டரீதியான ஒதுக்க நிதியம்

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 2,406,995 | 2,205,344 | 2,464,951 | 2,235,077 |
| வருடத்திலான மாற்றல்கள் | 232,951 | 201,651 | 264,400 | 229,874 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 2,639,946 | 2,406,995 | 2,729,351 | 2,464,951 |

**பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி**

2003 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் பணிப்புரையின் பந்தி 3 (ஏ) இன் பிரகாரம், ஒவ்வொரு நிதிக் கம்பனியும் ஓர் ஒதுக்க நிதியத்தினை பராமரித்தல் வேண்டும் மற்றும் அதே பணிப்புரையின் பந்தி 3 (பி) (i) இன் பிரகாரம் மூலதன நிதியங்கள் மொத்த வைப்புப் பொறுப்புக்களின் இருபத்து ஐந்து சதவீதத்திற்கு குறையாது இருக்கும் வரையில், தேறிய இலாபத்தின் ஐந்து (5) சதவீதத்திற்கும் குறையாத ஒரு தொகையினை ஒவ்வொரு வருடமும் ஒதுக்க நிதியத்திற்கு மாற்றல் செய்தல் வேண்டும்.

மூலதன நிதியங்கள் மொத்த வைப்புப் பொறுப்புக்களின் இருபத்து ஐந்து (25) சதவீதத்திற்கும் குறையாது காணப்படுவதனால், கம்பனி தேறிய இலாபத்தின் ஐந்து (5) சதவீதத்தினை ஒதுக்க நிதியத்திற்கு மாற்றல் செய்துள்ளது.

**லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட்**

பங்களாதேஷின் 1994 ஆம் ஆண்டின் நிதியியல் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஒவ்வொரு வங்கியல்லாத நிதி நிறுவனமும் அதன் நடைமுறையாண்டின் இலாபத்தின் ஆகக்குறைந்தது 20% இனை ஒதுக்க நிதியம் போன்ற நிதியத்திற்கு மாற்றல் செய்யுமாறு வேண்டுகின்றது. இது அதன் செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் பங்கு வட்டத்திற்கு (ஏதேனும் இருப்பின்) சமனாக இருத்தல் வேண்டும். இந்த தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்காக கம்பனி தேறிய இலாபத்தின் 20% இனை பங்கிலாபம் பிரகடனம் செய்வதற்கு முன்னர் சட்டரீதியான ஒதுக்கத்திற்கு மாற்றல் செய்தது.

## 47. நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள்

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 17,159,777 | 14,227,988 | 20,682,106 | 16,517,824 |
| வருடத்திற்கான இலாபம் | 4,659,009 | 4,033,020 | 4,805,731 | 5,294,015 |
| விரிவான வருமானம் | 25,701 | 77,042 | 29,340 | 76,763 |
| ஒதுக்கங்களுக்கான மாற்றல்கள் | (182,950) | (201,651) | (214,401) | (229,874) |
| ஒதுக்கங்களிலிருந்தான மாற்றல்கள் | - | - | - | - |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (2,179,925) | (976,622) | (2,179,925) | (976,622) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 19,481,611 | 17,159,777 | 23,122,852 | 20,682,106 |

## 48. ஏனைய ஒதுக்கங்கள்

**உரித்துவ ஒதுக்கங்கள்**

நிதி நிலைமைக் கூற்றில் உரித்துவத்தில் (விரிவான வருமானக் கூற்று) பதிவுசெய்யப்பட்ட ஒதுக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன;

- நியாயப் பெறுமதி ஒதுக்கமானது ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியிலான திரண்ட தேறிய மாற்றங்களை உள்ளடக்குகின்றது. (பக்கம் 302 இல் காணப்படும் குறிப்பு 48.3 இனை பார்க்கவும்).
- பொது ஒதுக்கமானது பொதுப் பிரயோகத்திற்காக பணிப்பாளர்களினால் வேறுபடுத்தப்பட்ட தொகைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. பொது ஒதுக்கத்தினை உருவாக்குவதன் நோக்கம் சாத்தியமான எதிர்கால அறியப்படாத பொறுப்புக்களைச் சந்திப்பதற்காகும்.
- வரி சமனாக்குதல் ஒதுக்கமானது எதிர்காலத்தில் எழக்கூடிய ஏதேனும் வரிப் பொறுப்புக்களை சந்திப்பதற்காக பணிப்பாளர்களினால் வேறுபடுத்தப்பட்ட தொகைகளை உள்ளடக்குகின்றது.
- மீள்மதிப்பீட்டு ஒதுக்கமானது ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்ட முதலீட்டு ஆதனத்திற்கான மீள்மதிப்பீடு செம்மையாக்கல் தொடர்பானதாகும்.
- வெளிநாட்டு நாணய பரிமாற்றல் ஒதுக்கம்

அறிக்கையிடப்படும் திகதியில், கம்பனியின் துணைநிறுவனமான லங்கன் எலாயன்ஸ் வைனான்ஸ் லிமிட்டட்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் திகதியில் அமுலிலுள்ள நாணயமாற்று வீதத்தில் முன்னிலைப்படுத்தல் நாணயத்திற்கு (இலங்கை ரூபாவிற்கு) பரிமாற்றல் செய்யப்பட்டது. இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றும் காலத்திற்கான சராசரி பரிமாற்றக வீதத்தில் மாற்றல் செய்யப்பட்டது. இந்த நிதிக் கூற்றுக்களை பரிமாற்றல் செய்யும்போது எழுகின்ற பரிமாற்ற வித்தியாசமானது ஏனைய விரிவான வருமானத்தினூடாக வெளிநாட்டு நாணய பரிமாற்றல் ஒதுக்கத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. (பக்கம் 302 இல் காணப்படும் குறிப்பு 48.4 இனை பார்க்கவும்).

### 48.1 நடைமுறையாண்டு 2022

| | | | கம்பனி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குறிப்பு | பக்க எண் | 01-04-2021 இல் உள்ளவாறான ஆரம்ப மீதி ரூ. '000 | அசைவுகள்/ மாற்றல்கள் ரூ. '000 | 31.03.2022 இல் உள்ளவாறான இறுதி மீதி ரூ '000 | 01-04-2021 இல் உள்ளவாறான ஆரம்ப மீதி ரூ. '000 | அசைவுகள்/ மாற்றல்கள் ரூ. '000 | 31.03.2022 இல் உள்ளவாறான இறுதி மீதி ரூ '000 |
| நியாயப் பெறுமதி ஒதுக்கம் | 48.3 | 302 | (117,377) | (257,831) | (375,208) | (121,517) | (257,831) | (379,348) |
| வெளிநாட்டு நாணய பரிமாற்றல் ஒதுக்கம் | 48.4 | 302 | - | - | - | 542,836 | 733,623 | 1,276,459 |
| மொத்தம் | | | (117,377) | (257,831) | (375,208) | 421,319 | 475,792 | 897,111 |

### 48.2 முன்னைய ஆண்டு 2021

| | | | கம்பனி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குறிப்பு | பக்க எண் | 01-04-2020 இல் உள்ளவாறான ஆரம்ப மீதி ரூ. '000 | அசைவுகள் / மாற்றல்கள் ரூ. '000 | 31.03.2021 இல் உள்ளவாறான இறுதி மீதி ரூ '000 | 01-04-2020 இல் உள்ளவாறான ஆரம்ப மீதி ரூ. '000 | அசைவுகள் / மாற்றல்கள் ரூ. '000 | 31.03.2021 இல் உள்ளவாறான இறுதி மீதி ரூ '000 |
| நியாயப் பெறுமதி ஒதுக்கம் | 48.3 | 302 | (102,114) | (15,263) | (117,377) | (116,005) | (5,512) | (121,517) |
| வெளிநாட்டு நாணய பரிமாற்றல் ஒதுக்கம் | 48.4 | 302 | - | - | - | 401,108 | 141,728 | 542,836 |
| மொத்தம் | | | (102,114) | (15,263) | (117,377) | 285,103 | 136,216 | 421,319 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 48. ஏனைய ஒதுக்கங்கள் (தொடர்ச்சி...)

### 48.3 நியாயப் பெறுமதி ஒதுக்கம்

நியாயப் பெறுமதி ஒதுக்கமானது ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியிலான திரண்ட தேறிய மாற்றங்களை, அத்தகைய முதலீடுகள் அங்கீகார அகற்றல் அல்லது வலுக்குன்றலடையும் வரைக்கும் உள்ளடக்குகின்றது.

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | (117,377) | (102,114) | (121,517) | (116,005) |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகளிலிருந்தான மாற்றல் | (50,000) | - | (50,000) | - |
| நிதியியல் முதலீடுகளை மீள்அளவிடுவதிலான தேறிய நியாயப் பெறுமதி இலாபங்கள்/(நட்டங்கள்) | (207,831) | (15,263) | (207,831) | (5,512) |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | (375,208) | (117,377) | (379,348) | (121,517) |

### 48.4 வெளிநாட்டு நாணய பரிமாற்றல் ஒதுக்கம்

வெளிநாட்டு நாணய பரிமாற்றல் ஒதுக்கமானது வெளிநாட்டு துணைநிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களின் பரிமாற்றலிலிருந்து எழுகின்ற அனைத்து வெளிநாட்டு நாணய வித்தியாசங்களை உள்ளடக்குகின்றது.

| | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | - | - | 542,836 | 401,108 |
| நிதிக் கூற்றுக்களின் பரிமாற்றலிலிருந்து எழுகின்ற தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) | - | - | 1,439,171 | 141,728 |
| க.அ. க்கான மாற்றல் | | | (705,548) | |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | - | - | 1,276,459 | 542,836 |

## 49. கட்டுப்பாடற்ற அக்கறை

கட்டுப்பாடற்ற அக்கறையானது கையகப்படுத்தப்பட்ட திகதியில் கைப்பற்றப்பட்ட நிறுவனத்தின் இனங்காணப்படக்கூடிய தேறிய சொத்துக்களின் விகிதாசாரப் பங்கில் அளவீடு செய்யப்படுகின்றது. . கட்டுப்பாட்டினை இழக்காது விளைவிக்கும் துணைக்கம்பனியில் குழுமத்தின் அக்கறையிலான மாற்றங்கள் உரித்துவ கொடுக்கல் வாங்கலாக கணக்கீடு செய்யப்படுகின்றன. கட்டுப்பாடற்ற அக்கறையானது துணைக்கம்பனி பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சியின் தேறிய சொத்தின் 25% இனை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், துணைக்கம்பனி லங்கன் எலாயன்ஸ் பைனான்ஸ் லிமிட்டட்டின் தேறிய சொத்துக்களின் 49% ,னை பிரதநிதித்துவப்படுத்துகின்றது.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குழுமம் | |
|---|---|---|
| | 2021/22 ரூ. '000 | 2020/21 ரூ. '000 |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 2,661,541 | 2,356,784 |
| வருடத்திற்கான இலாபம் | 12,438 | 302,319 |
| ஏனைய விரிவான வருமானம் | 705,548 | 2,438 |
| இவ்வருடத்திற்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (225,000) | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 3,154,527 | 2,661,541 |

## 50. எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்

**கணக்கீட்டுக் கொள்கை**

கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராதவைகள்

எதிர்பாரா பொறுப்புக்கள் என்பது உறுதியற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்போதைய கடப்பாடுகள் என்பவற்றினால் மாத்திரம் சாத்தியமான கடப்பாடுகளது பிரசன்னம் உறுதிப்படுத்தப்படுகின்றது. இங்கு பொருளாதார நலனின் மாற்றல் சாத்தியமற்றது மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 37 - "ஏற்பாடுகள், எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாரா சொத்துக்களில்" வரையறை செய்யப்பட்டுள்ளவாறு உடனடியாக அளவிடப்பட இயலாதவை ஆகும். எதிர்பாரா பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதில்லை ஆனால் அதன் நிகழ்வு மிகவும் அரிதாயிருந்தாலொழிய ஆகும்.

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | குறிப்பு | பக்க எண் | கம்பனி 2022 ரூ. '000 | கம்பனி 2021 ரூ. '000 | குழுமம் 2022 ரூ. '000 | குழுமம் 2021 ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| எதிர்பாரா பொறுப்புக்கள் | 50.1 | 303 | 469,000 | 697,502 | 515,989 | 744,491 |
| கடப்பாடுகள் | 50.2 | 304 | 6,383,234 | 10,300,609 | 6,383,234 | 10,300,609 |
| மொத்தம் | | | 6,852,234 | 10,998,111 | 6,899,223 | 11,045,100 |

### 50.1 எதிர்பாரா பொறுப்புக்கள்

| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 735,494 | - | 426,376 | - | - | - | - | 309,118 |
| கடன் கருவிகள் - பெறுமதிகுறைப்பக் கிரயத்தில் | 10,931,714 | 156,625 | 5,621,571 | 2,319,808 | 1,410,868 | 1,375,976 | 46,866 | - |
| மொத்தம் | 173,053,221 | 12,348,764 | 36,347,890 | 43,050,707 | 68,899,943 | 16,446,755 | 497,768 | 5,343,589 |
| பொறுப்புக்கள் | | | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகள் | 9,003,873 | 2,224,999 | 350,755 | 1,469,659 | 4,611,372 | 347,088 | - | - |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகள் | 103,743,716 | 12,883,575 | 26,307,059 | 45,356,462 | 15,450,062 | 3,572,101 | 174,457 | - |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 13,684,516 | 1,031,957 | - | 6,788,102 | 5,864,457 | - | - | - |
| ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 4,111,235 | - | - | - | - | - | - | 4,111,235 |
| குத்தகைப் பொறுப்புக்கள் | 1,614,660 | - | 54,905 | 181,364 | 561,176 | 477,770 | 339,446 | - |
| காப்புறுதி பொறுப்புக்கள் மற்றும் மீள்காப்புறுதி செலுத்தவேண்டியவைகள் | 5,015,885 | - | - | - | - | - | - | 5,015,885 |
| மொத்தம் | 137,173,885 | 16,140,531 | 26,712,719 | 53,795,587 | 26,487,067 | 4,396,959 | 513,903 | 9,127,120 |
| மொத்த வட்டி உணர்திறன் இடைவெளி | 35,879,336 | (3,791,767) | 9,635,171 | (10,744,880) | 42,412,876 | 12,049,796 | (16,135) | |

### 56.4.2 நாணய இடர்

நாணய இடர் என்பது வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களிலான மாற்றங்களின் காரணமாக நிதியியல் கருவியின் பெறுமதியானது தளம்பலடையும் இடராகும்.

அமெரிக்க டொலர்களிலான முதலீடுகள் குறைவாக இருப்பதனால், கம்பனி / குழுமத்தின் நாணய இடர் மிகவும் குறைவானதாகும்.

கீழ்காணும் அட்டவணையானது 31 மார்ச் 2022 இல் கம்பனி குறிப்பிடத்தக்களவு வெளிபாட்டினை கொண்ட நாணயங்களை குறிப்பிடுவதுடன், சந்தை நாணயமாற்று வீதங்கள் 1% உயர்வடைந்தால் /குறைவடைந்தால் இலாபங்கள் / நட்டங்களுக்கான விளைவினையும் குறிப்பிடுகின்றது. இந்த பகுப்பாய்வானது ஓர் நியாயமான சாத்தியமான இலங்கை ரூபாவிற்கு எதிராக நாணயத்திலான அசைவினது, ஏனைய அனைத்து மாறிகளும் நிலையாக வைத்திருக்கப்படும்போது, இலாபம் அல்லது நட்டக் கூற்றிலான விளைவுகளை கணிப்பீடு செய்கின்றது, (வர்த்தகம் செய்யப்படாத பணரீதியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நாணய உணர்திறனின் நியாயப் பெறுமதியின் நிமித்தம்)

**பரிமாற்றக வீத அதிர்ச்சிகளின் காரணமாக இலாபம் அல்லது நட்டக் கூற்றிலான தாக்கம்.**

| | | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| | | 2022 | 2021 | 2022 | 2021 |
| | நாணய வீதத்திலான மாற்றம் % இல் ரூ. '000 | வரிக்கு முந்திய இலாபத்திலான விளைவு ரூ. '000 | வரிக்கு முந்திய இலாபத்திலான விளைவு ரூ. '000 | வரிக்கு முந்திய இலாபத்திலான விளைவு ரூ. '000 | வரிக்கு முந்திய இலாபத்திலான விளைவு ரூ. '000 |
| USD | 1 | - | - | 972 | 375 |
| USD | -1 | - | - | (972) | (375) |

### 56.4.3 உரித்துவ விலை இடர்

உரித்துவ இடரின் உணர்திறன் பகுப்பாய்வானது எவ்வாறு அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள உரித்துவப் பிணையங்களின் நியாயப் பெறுமதியிலான மாற்றங்கள் உரித்துவ சந்தை விலைகளிலான அனுமானிக்கப்பட்ட மாற்றங்களின் விளைவாக தளம்பலடையும் என்பதை பிரதிபலிக்கின்றது. உரித்துவப் பிணையங்களின் நியாயப் பெறுமதியிலான அசைவுகள் பின்வருமாறு கண்காணிக்கப்படுகின்றது. முதலீட்டுத் தேக்கததில் வைத்திருக்கப்படும் உரித்துவப் பிணையங்களின் நியாயப் பெறுமதியிலான எதிர்வுகூறப்பட்ட மாற்றங்களை அனுமானிக்கப்பட்ட உரித்துவ விலை அசைவுகளின் /-1% பதில்உணர்வாக மதிப்பிடுதல் மூலமாகும்.

| உரித்துவச் சந்தை விலைகளில் 1% அதிகரிப்பு / குறைவு | 2022 | | | 2021 | | |
|---|---|---|---|---|---|---|
| | தேறிய சொத்தின் பெறுமதியிலான விளைவு ரூ. '000 | வரிக்கு முந்திய இலாபத்திலான விளைவு ரூ. '000 | விரிவான வருமானத்திலான விளைவு ரூ. '000 | தேறிய சொத்தின் பெறுமதியிலான விளைவு ரூ. '000 | வரிக்கு முந்திய இலாபத்திலான விளைவு ரூ. '000 | விரிவான வருமானத்திலான விளைவு ரூ. '000 |
| கம்பனி | | | | | | |
| நிதிச் சொத்துக்கள் -இநநிபெ | 251 | 251 | - | 136 | 136 | - |
| நிதிச் சொத்துக்கள் - ஏவிவநிபெ | 2,208 | - | 2,208 | 3,244 | - | 3,244 |
| குழுமம் | | | | | | |
| நிதிச் சொத்துக்கள் -இநநிபெ | 1,748 | 1,748 | - | 272 | 272 | - |
| நிதிச் சொத்துக்கள் - ஏவிவநிபெ | 2,208 | - | 2,208 | 3,244 | - | 3,244 |

### 56.4.4 பண்டங்களின் விலை இடர்

பண்டங்களின் விலை இடர் என்பது பண்டங்களின் விலை தளம்பல்களின் காரணமாக எதிர்கால சந்தை பெறுமதி மற்றும் எதிர்கால வருமான அளவுகோலின் உறுதியற்றதன்மையினை குறிப்பிடுகின்றது. குழுமத்தின் தங்கக் கடனின் முக்கியத்துவத்தினை கருதி, தங்கத்தின் விலையிலான விரைவான மாற்றங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றினை மோசமாக பாதிக்கலாம். தங்கத்தின் விலையிலான தளம்பல்கள் சந்தை இடருக்கு இட்டுச்செல்லும் என்பதுடன் இது இந்தக் கருவியுடன் இணைந்துள்ள பிரதான கடன் இடர் மூலமாகும்.

தங்கத்தின் விலைகளிலான மோசமான மாற்றங்களிலிருந்து எழுகின்ற கடன் மற்றும் சந்தை இடர்களை முகாமைப்படுத்துவதற்கு பின்வரும் மூலோபாயங்களை குழுமம் பயன்படுத்துகின்றது.

- பெறுமதிக்கான கடன் (பெக) - ஒவ்வொரு தங்கப் பவுணுக்குமான முற்பணக் கொடுப்பனவுகளை மாற்றியமைக்கும் ஓர் செயல்முறையினை குழுமம் அமுல்படுத்துகின்றது. இது ஓர் குறிக்கோளான பெறுமதிக்கான கடன் விகிதாசாரத்தினை பராமரிப்பதற்காகும்.
- கருவியின் வாழ்நாள் - ஓர் கடன் இடர் முகாமைத்துவ மூலோபாயமாக குழுமமானது சேவைகளை குறைவான நேரத்தில் விநியோகித்தல் ஓர் விரைவான மீட்டல் செயல்முறையினை இயலுமையாக்குகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 56. இடர் முகாமைத்துவம் (கம்பனி/குழுமம்) (தொடர்ச்சி...)

### 56.5 செயற்பாட்டு இடர்

செயற்பாட்டு இடர் என்பது முறைமை காரியத்தவறுகள், மனித பிழைகள், மோசடி அல்லது வெளிவாரி நிகழ்வுகளிலிருந்து எழுகின்ற நட்ட இடராகும். கட்டுப்பாடுகள் வினைத்திறனுடன் செயற்படுவதற்கு தவறும்போது, செயற்பாட்டு இடரானது நற்பெயரில் பாதிப்பினை ஏற்படுத்தலாம், சட்ட அல்லது முறைமைப்படுத்தல் விளைவுகளைக் கொண்டிருக்கலாம் அல்லது நிதியியல் நட்டத்திற்கு இட்டுச்செல்லலாம்.

கம்பனியின் செயற்பாட்டு இடரானது சபை அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை கட்டுப்பாட்டு வரம்புறுகையினூடாக முகாமைப்படுத்தப்படுவதுடன் இது சாத்தியமான இடர்களை கண்காணித்தல் மற்றும் விடையளித்தல் என்பவற்றை உள்ளடக்கும்.

### 56.6 காப்புறுதி இடர்கள்

பீபள்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி (பீஇ) கம்பனியின் ஓர் துணைக்கம்பனி என்பதுடன் அதன் பிரதான வணிகம் பொதுவான காப்புறுதி வணிகத்தினை மேற்கொள்வதாகும். பீஇ இன் சட்டரீதியான 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த வருடத்திற்கான எழுகின்ற இடர்கள் மற்றும் அவற்றின் முகாமைத்துவம் பின்வருமாறு.

#### 56.6.1 முறைமைப்படுத்தல் வரம்புறுகை

முறைமைப்படுத்துபவர்கள் பிரதானமாக காப்புறுதியுறுநர்களின் உரிமைகளை பாதுகாப்பதில் அக்கறையுடையவர்களாய் இருப்பதுடன் காப்புறுதியுறுநர்களின் நலன்களுக்காக பீஇ திருப்திகரமாக நடவடிக்கைகளை முகாமைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக நெருக்கமாக கண்காணிக்கின்றது. அதேசமயம், பொருளாதார அதிர்ச்சிகள் அல்லது இயற்கை அனர்த்தங்களிலிருந்து எழுகின்ற எதிர்பாராத பொறுப்புக்களை சந்திப்பதற்கு பீஇ ஓர் பொருத்தமான கடன்தீர்வுத்திறன் நிலைமையினை உறுதிப்படுத்துவதிலும் அக்கறையாயுள்ளது.

ஓர் காப்புறுதியாளர் என்ற வகையில், பீஇ இனது செயற்பாடுகள் இலங்கை காப்புறுதிச் சபையின் முறைமைப்படுத்தல் மேற்பார்வைக்கு உட்படுகின்றது. பீஇ பொருத்தமான ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காண்பதற்காக அவசியமான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதுடன் இவ்வருடம் முழுவதும் அவற்றுடன் இணங்கியுள்ளன.

#### 56.6.2 காப்புறுதி ஒப்பந்தங்களிலிருந்து எழுகின்ற இடர்களின் தன்மை மற்றும் எல்லை

**காப்புறுதி ஒப்பந்தங்களிலிருந்து எழுகின்ற இடர்களை முகாமைப்படுத்துவதற்கான குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் செயல்முறைகள்**

பீஇ அதன் பிரதான பெறுமதி உருவாக்கல் நடவடிக்கையின் காரணமாக ஏனைய நிறுவனங்களது இடர்களை விருப்பத்துடன் பொறுப்பேற்கின்றது. இது காப்புறுதி வணிகத்தின் மையமாகும் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட இடரிலான சாத்தியமான தாக்கத்தை மதிப்பிடுவதற்கான எவ்விதமான முழுநிறைவான முறையும் இல்லை. ஆயுளல்லாத காப்புறுதி வணிகத்திற்கு மிகவும் கணிசமான இடர்கள் காலநிலை மாற்றங்கள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் என்பவையாகும்.

மேற்கூறப்பட்ட இடர் வெளிப்பாடானது காப்புறுதி ஒப்பந்தங்களின் ஓர் பாரிய தேக்கத்தினிடையே மற்றும் பூகோள பிரிவுவாரியாக பன்முகப்படுத்துவதனூடாக குறைக்கப்படுகின்றது. பீஇ இன் இடர் முகாமைத்துவ வரம்புறுகையானது மூலோபாய இடர், அனுமானிக்கப்பட்ட இடர்கள் மற்றும் சாத்தியமான இடர்களில் முன்னிறுத்தம் செய்கின்றது. பீஇ இடர்களை அவற்றின் மூலம், பீஇ இல் அவற்றின் தாக்கம் போன்றவற்றில் இடர்களை இனங்கண்டு வகைப்படுத்துவதுடன் அவற்றைக் கையாளுவதற்கான தெரிவான மூலோபாயங்களையும் மேற்கொள்கின்றது.

**இடர்களை முகாமைப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் முறை**

***இடர் ஆர்வம் மற்றும் இடர் சகிப்புத்தன்மை***

பீஇ காப்புறுதிச் சந்தையின் சராசரிக்கும் மேலாக ஓர் மிதமான இடர் ஆர்வத்தினை பராமரிப்பதற்கான ஓர் மூலோபாய தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளது. ஏனெனில் அது ஓர் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடர் மட்டத்தில் பங்குதாரர் பெறுதியினை உருவாக்குவதற்கான சிறப்பான சாத்தியத்திற்கு அனுமதிப்பதனாலாகும். பீஇ பன்முகப்படுத்தலூடாக நிலையற்றதன்மை மற்றும் சாத்தியமான கீழ்நோக்கிய இடரினை முகாமைப்படுத்துகின்றது.

***அதிர்ச்சி நட்டங்களை இனங்காணுதல்***

பீஇ தற்போது பாரியளவு சாத்தியமான அதிர்ச்சி நட்டங்களையுடையதாக இனங்காணப்பட்ட பொருளாதார பெறுமதியினை கணிசமானளவு பாதிக்கக்கூடிய சாத்தியமான மூன்று இடர்கள் காணப்படுகின்றன. அவை பேரழிவு, ஒதுக்குதல் மற்றும் உரித்துவ முதலீட்டு இடர் என்பவையாகும். பீஇ அதிர்ச்சி நட்டங்களது இடரினை குறிப்பிட்ட இடர்களுக்கான சகிப்புத்தன்மை மற்றும் பீஇ வெளிப்பாடிட விரும்பும் மூலதன தொகையிலான வரையறைகளை உருவாக்குவதன் மூலம் முகாமைப்படுத்துகின்றது.

ஒப்பந்த வகைவாரியாக ஆயுளல்லாத காப்புறுதி ஒப்பந்த பொறுப்புக்களின் செறிவினை கீழ்காணும் அட்டவணையானது குறிப்பிடுகின்றது.

| | 31 மார்ச் 22 | | | 31 மார்ச் 21 | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த பொறுப்புக்கள் ரூ. '000 | வருமதியான மீள்காப்புறுதி ரூ. '000 | தேறிய பொறுப்பக்கள் ரூ. '000 | மொத்த பொறுப்புக்கள் ரூ. '000 | வருமதியான மீள்காப்புறுதி ரூ. '000 | தேறிய பொறுப்பக்கள் ரூ. '000 |
| மோட்டார் | 789,121 | 18,464 | 770,657 | 655,925 | 70,757 | 585,168 |
| கடல்காப்பீடு | 32,253 | 19,809 | 12,444 | 5,792 | 5,607 | 185 |
| தீ | 159,013 | 99,139 | 59,874 | 96,986 | 120,000 | (23,014) |
| நானாவிதமானவை | 310,487 | 134,685 | 175,802 | 182,361 | 80,914 | 101,447 |
| மொத்தம் | 1,290,874 | 272,096 | 1,018,778 | 941,064 | 277,278 | 663,786 |

**கோரல்கள் அபிவிருத்தி அட்டவணை**

பின்வரும் அட்டவணையானது ஒவ்வொரு காலாண்டுக்குமான திரண்ட ஆட்பட்ட கோரல்களது மதிப்பீட்டுடன் இற்றைக்கு வரைக்குமான திரண்ட கொடுப்பனவுகளையும் காண்பிக்கின்றது.

**2022 க்கான நிலுவையிலுள்ள மொத்த ஆயுளல்லாத காப்புறுதிக் கோரல்கள் ஏற்பாடு**

| விபத்துக் காலம் | ஆட்பட்ட திரண்ட கோரல்களின் நடைமுறை மதிப்பீடு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010/11<br>ரூ. '000 | 2011/12<br>ரூ. '000 | 2012/13<br>ரூ. '000 | 2013/14<br>ரூ. '000 | 2014/15<br>ரூ. '000 | 2015/16<br>ரூ. '000 | 2016/17<br>ரூ. '000 | 2017/18<br>ரூ. '000 | 2018/19<br>ரூ. '000 | 2019/20<br>ரூ. '000 | 2020/21<br>ரூ. '000 | 2021/22<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 |
| 2021/22 | (189) | (3,008) | 15,126 | 7,408 | 146 | 222 | 999 | 1,026 | 591 | 16,315 | 111,109 | 3,268,431 | 3,418,177 |
| 2020/21 | 193 | 10,771 | 1,012 | 685 | 539 | 2,236 | 10,692 | 11,085 | 32,949 | 3,072 | 3,536,534 | - | 3,609,768 |
| 2019/20 | - | 42,085 | 5,515 | 1,591 | 1,014 | 2,662 | 4,183 | 31,282 | 92,881 | 3,803,005 | - | - | 3,984,218 |
| 2018/19 | (120) | 11,385 | 51 | (8,584) | 4,918 | (9,647) | 21,099 | 73,912 | 3,165,480 | - | - | - | 3,258,494 |
| 2017/18 | (844) | 4,738 | (608) | 8,298 | 5,704 | 21,071 | 33,255 | 2,792,805 | - | - | - | - | 2,864,419 |
| 2016/17 | (945) | (113) | (17,006) | (8,555) | 5,397 | 50,267 | 2,635,203 | - | - | - | - | - | 2,664,248 |
| 2015/16 | 1,703 | 6,377 | (5,165) | 35,874 | 31,044 | 2,182,704 | - | - | - | - | - | - | 2,252,537 |
| 2014/15 | 1,465 | 1,577 | 28,391 | (15,126) | 2,040,473 | - | - | - | - | - | - | - | 2,056,780 |
| 2013/14 | 3,148 | 50,297 | (167,837) | 2,042,094 | - | - | - | - | - | - | - | - | 1,927,702 |
| 2012/13 | 4,224 | (58,704) | 2,042,934 | - | - | - | - | - | - | - | - | - | 1,988,454 |
| 2011/12 | 2,762 | 1,396,938 | - | - | - | - | - | - | - | - | - | - | 1,399,700 |
| 2010/11 | 213,653 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 213,653 |
| ஆட்பட்ட திரண்ட கோரல்களுக்கான நடைமுறை மதிப்பீடு | 225,051 | 1,462,343 | 1,902,413 | 2,063,685 | 2,089,235 | 2,249,515 | 2,705,431 | 2,910,110 | 3,291,901 | 3,822,392 | 3,647,643 | 3,268,431 | 29,638,150 |

| விபத்துக் காலம் | இதுநாள் வரைக்குமான திரண்ட கொடுப்பனவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010/11<br>ரூ. '000 | 2011/12<br>ரூ. '000 | 2012/13<br>ரூ. '000 | 2013/14<br>ரூ. '000 | 2014/15<br>ரூ. '000 | 2015/16<br>ரூ. '000 | 2016/17<br>ரூ. '000 | 2017/18<br>ரூ. '000 | 2018/19<br>ரூ. '000 | 2019/20<br>ரூ. '000 | 2020/21<br>ரூ. '000 | 2021/22<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 |
| 2021/22 | - | (58) | (18,331) | (8,800) | (4,385) | (4,003) | (6,113) | (7,021) | (9,262) | (6,619) | (528,921) | (2,475,612) | (3,069,125) |
| 2020/21 | (193) | (3,154) | (9,536) | (6,513) | (8,510) | (11,979) | (16,068) | (19,079) | (33,096) | (761,838) | (3,025,348) | - | (3,895,314) |
| 2019/20 | - | (84,791) | (9,222) | (4,101) | (13,820) | (21,259) | (15,975) | (39,809) | (551,787) | (2,956,804) | - | - | (3,697,568) |
| 2018/19 | - | (16,329) | (5,532) | (14,079) | (15,396) | (26,780) | (26,927) | (515,478) | (2,646,682) | - | - | - | (3,267,202) |
| 2017/18 | (2,129) | (8,627) | (10,057) | (10,447) | (13,186) | (30,768) | (468,923) | (2,267,584) | - | - | - | - | (2,811,721) |
| 2016/17 | (390) | (8,262) | (16,478) | (12,958) | (23,979) | (389,878) | (2,129,944) | - | - | - | - | - | (2,581,889) |
| 2015/16 | (1,718) | (16,664) | (53,691) | (28,525) | (395,617) | (1,743,315) | - | - | - | - | - | - | (2,239,530) |
| 2014/15 | (2,329) | (19,215) | (29,760) | (329,993) | (1,586,379) | - | - | - | - | - | - | - | (1,967,676) |
| 2013/14 | (3,495) | (57,574) | (252,384) | (1,621,312) | - | - | - | - | - | - | - | - | (1,934,765) |
| 2012/13 | (5,154) | (311,763) | (1,465,582) | - | - | - | - | - | - | - | - | - | (1,782,499) |
| 2011/12 | (72,227) | (893,615) | - | - | - | - | - | - | - | - | - | - | (965,842) |
| 2010/11 | (134,902) | - | - | - | - | - | - | - | - | - | - | - | (134,902) |
| இதுநாள் வரைக்குமான திரண்ட கொடுப்பனவுகள் | (222,537) | (1,420,052) | (1,870,573) | (2,036,728) | (2,061,272) | (2,227,982) | (2,663,950) | (2,848,971) | (3,240,827) | (3,725,261) | (3,554,269) | (2,475,612) | (28,348,034) |
| நிலுவையிலுள்ள மொத்த கோரல்கள் | 2,514 | 42,292 | 31,840 | 26,957 | 27,963 | 21,533 | 41,481 | 61,139 | 51,074 | 97,130 | 93,374 | 792,820 | 1,290,117 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 56. இடர் முகாமைத்துவம் (கம்பனி/குழுமம்) (தொடர்ச்சி...)

**2022 க்கான நிலுவையிலுள்ள மொத்த ஆயுளல்லாத காப்புறுதிக் கோரல்கள் ஏற்பாடு**

| விபத்துக் காலம் | ஆட்பட்ட திரண்ட கோரல்களின் நடைமுறை மதிப்பீடு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010/11<br>ரூ. '000 | 2011/12<br>ரூ. '000 | 2012/13<br>ரூ. '000 | 2013/14<br>ரூ. '000 | 2014/15<br>ரூ. '000 | 2015/16<br>ரூ. '000 | 2016/17<br>ரூ. '000 | 2017/18<br>ரூ. '000 | 2018/19<br>ரூ. '000 | 2019/20<br>ரூ. '000 | 2020/21<br>ரூ. '000 | 2021/22<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 |
| 2021/22 | - | (7.65) | 15,126 | 7,408 | 1,541 | 1,712 | 2,478 | 2,220 | 5,946 | 31,291 | 170,895 | 2,860,271 | 3,098,882 |
| 2020/21 | 193 | 10,771 | 1,012 | 685 | 539 | 2,236 | 10,139 | 12,479 | 34,119 | 88,484 | 3,339,422 | - | 3,500,079 |
| 2019/20 | - | 321 | 5,515 | 1,591 | 1,014 | 2,667 | 4,325 | 37,666 | 79,873 | 3,398,413 | - | - | 3,531,385 |
| 2018/19 | (120) | 11,400 | 51 | (11,575) | 5,037 | (3,500) | 24,501 | 77,270 | 3,106,289 | - | - | - | 3,209,354 |
| 2017/18 | (844) | 9,001 | (608) | 14,290 | 5,742 | 15,721 | 37,716 | 2,692,279 | - | - | - | - | 2,773,296 |
| 2016/17 | (945) | (128) | (16,949) | (10,511) | 6,864 | 59,287 | 2,549,666 | - | - | - | - | - | 2,587,284 |
| 2015/16 | 1,599 | 6,454 | (3,982) | 34,203 | 16,076 | 2,100,737 | - | - | - | - | - | - | 2,155,087 |
| 2014/15 | 1,465 | 2,382 | 28,151 | (15,127) | 2,023,094 | - | - | - | - | - | - | - | 2,039,965 |
| 2013/14 | 3,157 | 51,344 | (158,485) | 2,034,121 | - | - | - | - | - | - | - | - | 1,930,137 |
| 2012/13 | 4,239 | (15,515) | 1,976,422 | - | - | - | - | - | - | - | - | - | 1,965,146 |
| 2011/12 | 4,621 | 1,224,086 | - | - | - | - | - | - | - | - | - | - | 1,228,707 |
| 2010/11 | 209,132 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 209,132 |
| ஆட்பட்ட திரண்ட கோரல்களின் நடைமுறைப் பெறுமதி | 222,497 | 1,300,116 | 1,831,127 | 2,047,677 | 2,058,366 | 2,177,148 | 2,626,347 | 2,819,694 | 3,220,281 | 3,486,897 | 3,339,422 | 2,860,271 | 28,228,454 |

| விபத்துக் காலம் | இதுநாள் வரைக்குமான திரண்ட கொடுப்பனவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010/11<br>ரூ. '000 | 2011/12<br>ரூ. '000 | 2012/13<br>ரூ. '000 | 2013/14<br>ரூ. '000 | 2014/15<br>ரூ. '000 | 2015/16<br>ரூ. '000 | 2016/17<br>ரூ. '000 | 2017/18<br>ரூ. '000 | 2018/19<br>ரூ. '000 | 2019/20<br>ரூ. '000 | 2020/21<br>ரூ. '000 | 2021/22<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 |
| 2021/22 | - | (57) | (17,574) | (8,800) | (4,385) | (4,002) | (6,112) | (7,020) | (9,256) | 3,385 | (509,417) | (2,371,210) | (2,934,450) |
| 2020/21 | (193) | (3,154) | (9,536) | (6,513) | (8,510) | (11,979) | (15,515) | (18,797) | (19,011) | (508,359) | (2,938,267) | - | (3,539,834) |
| 2019/20 | - | (13,201) | (9,222) | (4,101) | (13,820) | (21,259) | (15,969) | (32,630) | (521,977) | (2,902,120) | - | - | (3,534,299) |
| 2018/19 | - | (16,329) | (5,532) | (11,079) | (15,396) | (26,799) | (25,385) | (492,761) | (2,619,040) | - | - | - | (3,212,322) |
| 2017/18 | (2,129) | (8,627) | (10,057) | (10,432) | (13,132) | (30,608) | (446,918) | (2,209,836) | - | - | - | - | (2,731,738) |
| 2016/17 | (390) | (8,244) | (16,282) | (12,833) | (23,866) | (387,579) | (2,075,965) | - | - | - | - | - | (2,525,159) |
| 2015/16 | (1,614) | (16,664) | (31,860) | (27,883) | (369,486) | (1,756,890) | - | - | - | - | - | - | (2,204,397) |
| 2014/15 | (2,329) | (17,417) | (29,152) | (329,883) | (1,564,956) | - | - | - | - | - | - | - | (1,943,737) |
| 2013/14 | (3,495) | (32,280) | (226,969) | (1,593,260) | - | - | - | - | - | - | - | - | (1,856,004) |
| 2012/13 | (5,123) | (248,760) | (1,424,239) | - | - | - | - | - | - | - | - | - | (1,678,122) |
| 2011/12 | (71,904) | (881,711) | - | - | - | - | - | - | - | - | - | - | (953,615) |
| 2010/11 | (131,282) | - | - | - | - | - | - | - | - | - | - | - | (131,282) |
| இதுநாள் வரைக்குமான திரண்ட கொடுப்பனவுகள் | (218,459) | (1,246,387) | (1,762,849) | (1,995,984) | (2,009,166) | (2,235,114) | (2,579,752) | (2,754,024) | (3,160,028) | (3,410,479) | (2,938,267) | (2,371,210) | (27,244,959) |
| நிலுவையிலுள்ள மொத்த தேறிய கோரல்கள் | 4,038 | 53,729 | 68,278 | 51,693 | 49,200 | (57,966) | 46,595 | 65,670 | 60,253 | 76,418 | 401,155 | 489,061 | 983,495 |

## 57. ஒப்பீட்டுத் தகவல்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 01 – 'நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்' இன் பிரகாரம் கம்பனி மற்றும் குழுமமானது முன்னைய நிதியாண்டில் பிரயோகித்த கணக்கீட்டு கொள்கைகளை தொடர்ச்சியாக பிரயோகித்துள்ளது. அளவுசார், விவரண மற்றும் விளக்கமான தகவல்கள் உள்ளடங்கலான ஒப்பீட்டுத் தகவல்கள் முன்னைய காலம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இது நடைமுறையாண்டின் நிதிக் கூற்றுக்களது புரிந்துணர்வினை மேம்படுத்துவதற்கும் காலங்களுக்கிடையேயான ஒப்பிடுதலை மேம்படுத்துவதற்குமாகும். முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தலானது நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடுவதற்காகவும் சிறப்பான முன்னிலைப்படுத்தலுக்காகவும் பொருத்தமானவிடத்து திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களில் பின்வரும் உருப்படிகளின் முன்னிலைப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தலானது நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

| | குழுமம் | | |
|---|---|---|---|
| | முன்னர் வெளிப்படுத்தியுள்ளவாறு ரூ. '000 | நடைமுறை முன்னிலைப்படுத்தல் ரூ. '000 | செம்மையாக்கல் ரூ. '000 |
| நிதி நிலைமைக் கூற்று | | | |
| கடன்களும் வருமதிகளும் - பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் | 149,342,332 | 147,004,004 | (2,338,328) |
| கடன் கருவிகள் - பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் | 8,593,386 | 10,931,714 | 2,338,328 |

கடன்கள் மற்றும் வருமதிகளில் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகுதிக்கடன்கள் பெறுமதிகுறைப்புக் கிரயத்திலான கடன் கருவிகளாக மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 58. அறிக்கையிடப்படும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்

கீழே குறிப்பிட்டவை தவிர, நிதிக் கூற்றுக்களில் திருத்தங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் தேவைப்படும் சூழ்நிலைகள் எதுவும் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து எழவில்லை.

### 58.1 இறுதிப் பங்கிலாபம்

அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர், கம்பனியின் பணிப்பாளர்கள் சபையானது 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்காக ஒரு இறுதிப் பங்கிலாபக் கொடுப்பனவாக பங்கொன்றிற்கு ரூ. 0.50 இனை பத்திரப் பங்கிலாப வடிவில் பரிந்துரைத்துள்ளார்கள். இறுதிப் பங்கிலாபமானது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இன்னமும் அங்கீகரிக்கப்படவேண்டியுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமம் – LKAS 10 (அறிக்கையிடப்படும் காலத்தின் பின்னரான நிகழ்வுகள்) இன் பிரகாரம், 31 மார்ச் 2022 இல் இந்த முன்மொழியப்படும் இறுதிப் பங்கிலாபமானது ஒரு பொறுப்பாக அங்கீகரிக்கப்படவில்லை.

### 58.2 மேல் வரி

இலங்கை அரசாங்கமானது 2022 இற்கான அதன் பாதீட்டில் ஒரு முறை வரியாக, மேல் வரி என குறிப்பிடப்படுகின்றது, 2020ீ2021 வரி மதிப்பீட்டாண்டில் ஒரு வரிவிதிக்கத்தக்க வருமானமாக ரூ. 2,000 மில்லியனிலும் அதிகமாக உழைத்திருக்கும் கம்பனியில் 25% வீதத்தில் விதிக்கப்படும். 2022 இன் 14 ஆம் இலக்க மேல் வரிச் சட்டத்தினால் விதிக்கப்படும் வரியானது 7 ஏப்ரல் 2022 இல் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. அறிக்கையிடப்பட்ட காலத்தின் இறுதிக்கு பின்னர் மேல் வரியினை விதிக்கும் சட்டமானது சட்டமயமாக்கப்பட்டதன் காரணமாக, 31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் வரிப் பொறுப்பினை பிரதிபலிக்கவில்லை என்பதுடன், இதன் விளைவாக எழக்கூடிய வரியின் சிறந்த மதிப்பீட்டுத் தொகையானது ரூ. 1,947,166,890 ஆகும்.

# துணை அறிக்கைகள்

காலாண்டுப் பகுப்பாய்வு 341
பத்து வருடச் சுருக்கம் 343
US $ இல் இலாபம் அல்லது நட்டக் கூற்று 345
US $ இல் நிதி நிலைமைக் கூற்று 346
நிலைபேறுள்ள அறிக்கையிடலிலான சுயாதீன உறுதிமொழி அறிக்கை 347
உஅமு உள்ளடக்கச் சுட்டி 349
சுருக்கக்குறியீடு 352
விகிதாசாரங்களின் அடிப்படை 354
கூட்டாண்மைத் தகவல்கள் 355
கூட்டத்திற்கான அறிவித்தல் 356
பதிலாள் படிவம் 357

# காலாண்டு பகுப்பாய்வு

## வருமானக் கூற்று

| ரு. மில்லியன் | கம்பனி | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 ஆம் காலாண்டு ஏப்ரல்-ஜுன் | | 2 ஆம் காலாண்டு ஜுலை-செப். | | 3 ஆம் காலாண்டு ஒக்.-டிசம். | | 4 ஆம் காலாண்டு ஜன.-மார்ச் | | மொத்தம் | |
| | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2022 | 2021 | 2021/22 | 2020/21 |
| வட்டி வருமானம் | 5,348 | 6,001 | 5,619 | 6,112 | 6,177 | 6,304 | 6,738 | 6,566 | 23,882 | 24,983 |
| கழி: வட்டிச் செலவினம் | 2,642 | 3,561 | 2,636 | 3,432 | 2,746 | 3,223 | 2,808 | 2,848 | 10,832 | 13,064 |
| தேறிய வட்டி வருமானம் | 2,706 | 2,440 | 2,983 | 2,680 | 3,431 | 3,081 | 3,929 | 3,718 | 13,049 | 11,919 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 320 | 275 | 505 | 563 | 500 | 445 | 552 | 536 | 1,877 | 1,819 |
| நிதிச் சொத்துக்களிலான தேறிய இலாபங்கள்/ (நட்டங்கள்)-இநநிபெ | 11 | 14 | 19 | 37 | 4 | 73 | (7) | 39 | 27 | 163 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 455 | - | 4 | 14 | 4 | 3 | 494 | 122 | 957 | 139 |
| மொத்த செயற்பாட்டு வருமானம் | 3,492 | 2,729 | 3,511 | 3,294 | 3,939 | 3,602 | 4,967 | 4,415 | 15,909 | 14,040 |
| கழி: கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்கன்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் | 1,499 | 1,052 | 313 | 349 | (205) | 1,539 | (952) | (1,896) | 655 | 1,044 |
| நன்மதிப்புக்கான வலுக்குன்றல் கட்டணங்கள் | - | - | - | - | - | - | | 99 | 122 | 99 |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | 1,993 | 1,677 | 3,198 | 2,945 | 4,144 | 2,063 | 5,797 | 6,212 | 15,132 | 12,897 |
| கழி: செலவினங்கள் | | | | | | | | | | |
| ஆளணிச் செலவினங்கள் | 914 | 699 | 918 | 731 | 987 | 791 | 1,183 | 1,244 | 4,002 | 3,465 |
| பெறுமானத்தேய்வும் பெறுமதிகுறைப்பும் | 204 | 200 | 203 | 200 | 204 | 198 | 89 | 125 | 700 | 723 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 410 | 348 | 526 | 464 | 599 | 449 | 599 | 352 | 2,134 | 1,613 |
| மொத்த செயற்பாட்டு செலவினங்கள் | 1,528 | 1,247 | 1,647 | 1,395 | 1,790 | 1,438 | 1,872 | 1,721 | 6,837 | 5,801 |
| நிதிச் சேவைகளிலான வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபம் | 465 | 430 | 1,551 | 1,550 | 2,354 | 625 | 3,925 | 4,491 | 8,295 | 7,096 |
| கழி: நிதிச் சேவைகளிலான வரி | 174 | 160 | 317 | 298 | 433 | 172 | 721 | 593 | 1,645 | 1,223 |
| வருமான வரிச் செலவினத்திற்கு முந்திய இலாபம் | 291 | 270 | 1,234 | 1,252 | 1,921 | 453 | 3,204 | 3,898 | 6,650 | 5,873 |
| கழி: வருமான வரிச் செலவினம் | 91 | 96 | 386 | 443 | 602 | 160 | 912 | 1,141 | 1,991 | 1,840 |
| காலத்திற்கான இலாபம் | 200 | 174 | 848 | 809 | 1,319 | 293 | 2,292 | 2,757 | 4,659 | 4,033 |

### வரிக்கு பிந்திய இலாபம்




### மொத்த சொத்துக்கள்




### தேறிய வட்டி வருமானம்



# காலாண்டு பகுப்பாய்வு

## நிதி நிலைமைக் கூற்று

| நிதி நிலைமைக் கூற்று | கம்பனி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1ஆம் காலாண்டு ஜூன் 30 இல் | | 2ஆம் காலாண்டு செப். 30 இல் | | 3ஆம் காலாண்டு டிசம். 31 இல் | | 4ஆம் காலாண்டு மார்ச் 31 இல் | |
| ரூ. மில்லியன் | 2021 | 2020 | 2021 | 2020 | 2021 | 2020 | 2022 | 2021 |
| **சொத்துக்கள்** | | | | | | | | |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 3,049 | 2,153 | 1,583 | 4,186 | 6,829 | 2,710 | 4,669 | 2,703 |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான மீதிகள் | 1,634 | 4,337 | 12,239 | 6,534 | 8,733 | 7,071 | 5,118 | 5,399 |
| நிதிச் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 2,520 | 512 | 1,036 | 2,994 | 13 | 5,548 | 25 | 110 |
| கடன்களும் வருமதிகளும் - பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் | 137,521 | 145,712 | 140,524 | 140,415 | 146,449 | 134,395 | 151,274 | 141,388 |
| காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வருமதிகள் | - | - | - | - | - | - | - | - |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் | 1,230 | 338 | 1,210 | 375 | 1,162 | 347 | 1,333 | 309 |
| கடன் கருவிகள் - பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் | 6,696 | 7,412 | 9,985 | 8,208 | 9,940 | 6,950 | 9,827 | 6,994 |
| வருமதியான நடைமுறை வரி | - | - | - | 69 | - | 263 | - | - |
| துணை நிறுவனங்களிலான முதலீடுகள் | 3,214 | 3,214 | 3,214 | 3,214 | 3,214 | 3,214 | 3,214 | 3,214 |
| ஏனைய சொத்துக்கள் | 1,145 | 1,090 | 759 | 923 | 1,074 | 920 | 749 | 576 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 1,180 | 1,117 | 1,368 | 1,090 | 1,391 | 1,074 | 1,414 | 1,049 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 2,117 | 1,805 | 1,979 | 1,714 | 1,798 | 1,591 | 1,972 | 2,242 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | 389 | 413 | 595 | - | 211 | 274 | 1,147 | 416 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 114 | 233 | 83 | 209 | 57 | 186 | 22 | 146 |
| மொத்தச் சொத்துக்கள் | 160,809 | 168,336 | 174,575 | 169,931 | 180,871 | 164,543 | 180,765 | 164,546 |
| **பொறுப்புக்கள்** | | | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகள் | 5,705 | 6,699 | 6,742 | 5,979 | 12,699 | 6,022 | 11,749 | 6,439 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகள் | 100,741 | 106,416 | 100,149 | 108,253 | 106,473 | 107,222 | 103,368 | 101,503 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 13,049 | 17,753 | 23,544 | 18,275 | 16,836 | 13,447 | 17,244 | 13,826 |
| ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 2,557 | 1,833 | 4,533 | 2,867 | 4,270 | 3,123 | 3,637 | 4,135 |
| குத்தகை பொறுப்புக்கள் | 2,194 | 1,811 | 2,183 | 1,733 | 1,959 | 1,611 | 2,059 | 2,286 |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 424 | 1,576 | 595 | - | 224 | - | 1,852 | 362 |
| ஏனைய பொறுப்புக்கள் | 966 | 1,815 | 790 | 1,484 | 1,143 | 1,571 | 1,369 | 1,653 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடு | 643 | - | 694 | - | 666 | - | 668 | - |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | - | - | - | 59 | - | - | - | - |
| மொத்த பொறுப்புக்கள் | 126,279 | 137,903 | 139,230 | 138,650 | 144,270 | 132,996 | 141,946 | 130,204 |
| **உரித்துவம்** | | | | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 14,892 | 13,915 | 16,170 | 13,915 | 17,072 | 14,892 | 17,072 | 14,892 |
| சட்டரீதியான ஒதுக்க நிதியம் | 2,407 | 2,205 | 2,407 | 2,205 | 2,407 | 2,205 | 2,640 | 2,407 |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் | 17,363 | 14,402 | 16,942 | 15,212 | 17,365 | 14,529 | 19,482 | 17,160 |
| ஏனைய ஒதுக்கங்கள் | (132) | (89) | (174) | (51) | (243) | (79) | (375) | (117) |
| மொத்த உரித்துவம் | 34,530 | 30,433 | 35,345 | 31,281 | 36,601 | 31,547 | 38,818 | 34,342 |
| மொத்த பொறுப்புக்களும உரித்துவமும் | 160,809 | 168,336 | 174,575 | 169,931 | 180,871 | 164,543 | 180,765 | 164,546 |

# பத்துவருட சுருக்கம்

| | கம்பனி | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021/22 | 2020/21 | 2019/20 | 2018/19 | 2017/18 | 2016/17 | 2015/16 | 2014/15 | 2013/14 | 2012/13 |
| **நிதியியல் மூலதனம்** | | | | | | | | | | |
| **செயற்பாட்டு விளைவு** | | | | | | | | | | |
| வருமானம் (ரூ.மில்லியன்) | 26,741 | 27,104 | 33,599 | 32,736 | 28,603 | 23,859 | 19,186 | 20,542 | 20,628 | 18,205 |
| வட்டி வருமானம் (ரூ.மில்லியன்) | 23,882 | 24,983 | 31,459 | 30,836 | 26,705 | 22,041 | 17,876 | 19,248 | 19,534 | 17,245 |
| வட்டிச் செலவினம் (ரூ.மில்லியன்) | 10,832 | 13,064 | 15,787 | 15,646 | 14,500 | 11,830 | 7,941 | 9,248 | 11,266 | 10,140 |
| தேறிய வட்டி வருமானம் (ரூ.மில்லியன்) | 13,049 | 11,919 | 15,672 | 15,190 | 12,204 | 10,212 | 9,935 | 10,000 | 8,268 | 7,105 |
| வட்டியல்லாத வருமானம் (ரூ.மில்லியன்) | 2,860 | 2,120 | 2,140 | 1,899 | 1,898 | 1,818 | 1,310 | 1,294 | 1,094 | 960 |
| வலுக்குன்றல் மற்றும் ஏனைய நட்டங்கள் (ரூ.மில்லியன்) | 777 | 1,143 | 4,752 | 1,955 | 1,430 | 216 | 258 | 1,645 | 1,218 | 698 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் (குறிப்பு1) (ரூ.மில்லியன்) | 8,482 | 7,024 | 8,509 | 8,549 | 6,903 | 6,338 | 4,844 | 4,274 | 3,757 | 3,232 |
| வரிக்கு முந்திய இலாபம் (PBT) (ரூ.மில்லியன்) | 6,650 | 5,873 | 4,552 | 6,585 | 5,770 | 5,476 | 6,143 | 5,375 | 4,387 | 4,135 |
| வருமான வரிச் செலவினம் (ரூ.மில்லியன்) | 1,991 | 1,840 | 1,609 | 2,169 | 1,460 | 1,467 | 1,796 | 1,622 | 1,263 | 1,285 |
| வரிக்கு பிந்திய இலாபம் (PAT) (ரூ.மில்லியன்) | 4,659 | 4,033 | 2,943 | 4,416 | 4,309 | 4,009 | 4,347 | 3,753 | 3,124 | 2,850 |
| சொத்துக்களிலான விளைவு (ROA) (%) | 3.85 | 3.49 | 2.64 | 3.95 | 3.71 | 3.99 | 5.19 | 4.75 | 4.15 | 4.70 |
| வருமானத்திற்கான கிரயம் (%) | 43.74 | 42.03 | 36.53 | 37.81 | 39.73 | 45.01 | 37.24 | 34.63 | 37.01 | 36.54 |
| தேறிய வட்டி விடுமிகை (NIM) (%) | 8.10 | 7.58 | 9.68 | 9.70 | 8.38 | 7.89 | 8.92 | 9.37 | 8.30 | 8.65 |
| உரித்துவத்திற்கு மொத்தச் சொத்துக்கள் (மடங்குகள்) | 4.66 | 4.79 | 5.68 | 6.03 | 5.94 | 6.09 | 5.46 | 5.31 | 5.93 | 5.41 |
| புத்தகப் பெறுமதிக்கு விலை (PBV) (மடங்குகள்) | 0.39 | 0.59 | 0.66 | 0.74 | 0.92 | 1.00 | 1.11 | 1.65 | 1.18 | 1.13 |
| **நிதியியல் நிலைமை** | | | | | | | | | | |
| காசு, வங்கிகளுடனான மீதிகள் மற்றும் மறுதலை மீள்கொள்வனவு (ரூ. மில்லியன்) | 9,787 | 8,102 | 10,372 | 6,699 | 8,783 | 7,681 | 4,054 | 3,465 | 14,783 | 4,705 |
| கடன்களும் வருமதிகளும் (ரூ.மில்லியன்) | 151,274 | 141,388 | 147,748 | 151,708 | 140,165 | 134,055 | 109,872 | 98,411 | 90,218 | 88,404 |
| துணைநிறுவனங்களிலான முதலீடுகள் (ரூ.மில்லியன்) | 3,214 | 3,214 | 3,214 | 3,214 | 3,214 | 2,075 | 1,875 | 1,875 | 1,475 | 1,475 |
| அரசாங்க திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளிலான முதலீடுகள் (ரூ.மில்லியன்) | 9,827 | 6,994 | 4,107 | 8,003 | 4,890 | 2,968 | 4,930 | 5,266 | 4,747 | 540 |
| மொத்த சொத்துக்கள் (ரூ.மில்லியன்) | 180,765 | 164,546 | 171,660 | 172,541 | 160,694 | 150,457 | 124,336 | 112,323 | 113,776 | 97,437 |
| கடன் பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 28,994 | 20,265 | 26,417 | 48,549 | 55,705 | 74,258 | 60,819 | 49,848 | 48,605 | 56,232 |
| வாடிக்கையாளரிடமிருந்தான வைப்புகள் (குறிப்பு2) (ரூ.மில்லியன்) | 103,368 | 101,503 | 106,701 | 88,369 | 69,763 | 44,723 | 33,836 | 34,094 | 40,921 | 18,847 |
| மொத்த உரித்துவம் (ரூ.மில்லியன்) | 38,818 | 34,341 | 30,247 | 28,603 | 27,030 | 24,697 | 22,772 | 21,136 | 19,196 | 18,023 |
| மொத்த பொறுப்புக்களும் பங்குதாரர் நிதியங்களும் (ரூ.மில்லியன்) | 180,765 | 164,546 | 171,660 | 172,541 | 160,694 | 150,457 | 124,336 | 112,323 | 113,776 | 97,437 |
| **நிதியியல் காசு உட்பாய்ச்சல்கள் / (வெளிப்பாய்ச்சல்கள்)** | | | | | | | | | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் (ரூ.மில்லியன்) | (3,602) | 4,264 | 31,615 | 15,944 | 27,691 | (998) | (8,533) | (7,351) | 17,218 | 6,819 |
| முதலீட்டு நடவடிக்கைகள் (ரூ.மில்லியன்) | (382) | 60 | (106) | 302 | (802) | (159) | (397) | (231) | (170) | (89) |
| நிதியளித்தல் நடவடிக்கைகள் (ரூ.மில்லியன்) | 6,596 | (9,477) | (27,310) | (16,452) | (28,716) | 2,926 | 9,156 | (738) | (8,927) | (4,007) |
| தேறிய காசுப் பாய்ச்சல்கள் (ரூ.மில்லியன்) | 2,612 | (5,153) | 4,198 | (206) | (1,827) | 1,769 | 227 | (8,320) | 8,121 | 2,723 |
| **மனித மூலதனம்** | | | | | | | | | | |
| பணியாட்கள் (எண்ணிக்கை) | 2,245 | 2,343 | 2,401 | 2,329 | 2,085 | 2,085 | 1,834 | 1,666 | 1,575 | 1,184 |
| பணியாளொருவருக்கான வ.மு.இ. (ரூ.மில்லியன்) | 2.90 | 2.48 | 1.92 | 2.98 | 2.77 | 2.79 | 3.51 | 3.32 | 3.18 | 3.70 |
| பணியாளொருவருக்கான மொத்த சொத்துக்கள் (ரூ.மில்லியன்) | 80.52 | 70.23 | 71.50 | 74.08 | 77.07 | 72.16 | 67.79 | 67.42 | 72.24 | 82.29 |
| பணியாட்களின் வேதனம் மற்றும் நலன்கள் (ரூ.மில்லியன்) | 3,738 | 3,465 | 3,701 | 3,438 | 2,974 | 2,556 | 1,807 | 1,565 | 1,338 | 1,026 |
| **இயற்கை மூலதனம்** | | | | | | | | | | |
| சூழல் பாதுகாப்பிலான முதலீடு (ரூ.மில்லியன்) | 1.87 | 2.77 | 3.32 | 1.94 | 2.19 | 3.37 | 3.36 | 1.17 | 0.52 | 7.10 |
| கம்பனியின் கரியமில அடிச்சுவடு (Tones of $CO_2$ equivalent) [Note 3] | 4,682 | 3,811 | 5,836 | 5,338 | 6,046 | 6,236 | 3,059 | 2,770 | - | - |

# பத்துவருட சுருக்கம்

| | கம்பனி | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021/22 | 2020/21 | 2019/20 | 2018/19 | 2017/18 | 2016/17 | 2015/16 | 2014/15 | 2013/14 | 2012/13 |
| **சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்** | | | | | | | | | | |
| பங்குதாரர்கள் (எண்ணிக்கை) | 10,926 | 10,027 | 8,644 | 8,961 | 8,801 | 9,176 | 9,407 | 8,880 | 10,054 | 9,488 |
| சாதாரண பங்குகளின் எண்ணிக்கை( எண்கள் மில்லியன்) | 1,887 | 1,705 | 1,628 | 1,580 | 1,580 | 1,580 | 1,580 | 1,580 | 1,580 | 1,560 |
| பங்கொன்றிற்கான உழைப்பு (EPS) (ரூ.) | 2.47 | 2.37 | 1.73 | 2.80 | 2.73 | 2.54 | 2.75 | 2.38 | 1.98 | 1.83 |
| பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் (NAPS) (ரூ.) | 20.57 | 20.15 | 18.58 | 18.10 | 17.11 | 15.63 | 14.41 | 13.38 | 12.15 | 11.55 |
| பங்கொன்றிற்கான சந்தை விலை (ரூ.) (குறிப்பு 5) | | | | | | | | | | |
| அதி உயர்ந்தது | 13.80 | 15.40 | 18.30 | 17.30 | 19.20 | 20.10 | 26.50 | 28.00 | 15.70 | 16.70 |
| ஆகக் குறைந்தது | 8.00 | 9.10 | 12.00 | 12.90 | 15.50 | 15.30 | 15.40 | 14.20 | 13.00 | 10.30 |
| நிறைவு | 8.10 | 11.80 | 12.20 | 13.40 | 15.80 | 15.60 | 16.00 | 22.10 | 14.30 | 13.10 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூ.மில்லியன்) | 15,286 | 20,114 | 19,858 | 21,170 | 24,962 | 24,646 | 25,278 | 34,915 | 22,592 | 20,436 |
| விலை உழைப்பு விகிதம் (PE) (மடங்குகள்) | 3.28 | 4.99 | 6.67 | 4.79 | 5.79 | 6.14 | 5.82 | 9.29 | 7.22 | 7.16 |
| பங்கொன்றிற்கான பங்கிலாபம் (DPS) (ரூ.) | 1.25 | 0.60 | 1.20 | 1.25 | 1.25 | 1.25 | 1.25 | 1.25 | 1.25 | 1.25 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் (ரூ.மில்லியன்) | 2,180 | 977 | 1,929 | 1,975 | 1,975 | 1,975 | 1,975 | 1,975 | 1,975 | 1,950 |
| பங்கிலாப விளைவு (%) | 15.43 | 5.08 | 9.84 | 9.33 | 7.91 | 8.01 | 7.81 | 5.66 | 8.74 | 9.54 |
| பங்கிலாபக் காப்பு (மடங்குகள்) | 2.14 | 4.13 | 1.53 | 2.24 | 2.18 | 2.03 | 2.20 | 1.90 | 1.58 | 1.46 |
| பங்கிலாபம் செலுத்தப்பட்ட (%) | 46.79 | 24.22 | 65.57 | 44.72 | 45.83 | 49.26 | 45.43 | 52.62 | 63.22 | 68.42 |
| உரித்துவத்திலான விளைவு (ROE) (%) | 12.74 | 12.49 | 10.00 | 15.88 | 16.66 | 16.89 | 19.80 | 18.61 | 16.79 | 16.36 |
| பயன்படுத்தப்பட்ட மூலதனத்திலான விளைவு (ROCE) (%) | 10.68 | 11.86 | 12.37 | 13.98 | 13.69 | 12.04 | 11.99 | 13.92 | 14.40 | 15.33 |
| உரித்துவத்திற்கான கடன் (வைப்புக்கள் நீங்கலாக) (மடங்குகள்) | 0.75 | 0.59 | 0.87 | 1.70 | 2.06 | 3.01 | 2.67 | 2.36 | 2.53 | 3.12 |
| உரித்துவத்திற்கான கடன் எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் (மடங்குகள்) | 0.92 | 0.91 | 1.05 | 1.97 | 2.34 | 3.25 | 2.77 | 2.57 | 2.80 | 3.39 |
| நடைமுறை விகிதம் (மடங்குகள்) | 0.79 | 0.76 | 0.83 | 0.82 | 0.80 | 0.84 | 0.85 | 0.93 | 0.88 | 0.85 |
| வட்டிக் காப்பு (மடங்குகள்) | 1.61 | 1.45 | 1.29 | 1.42 | 1.40 | 1.46 | 1.77 | 1.58 | 1.39 | 1.41 |
| அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரிகள் (ரூ.மில்லியன்) | 2,792 | 4,203 | 5,712 | 2,942 | 2,109 | 2,828 | 2,915 | 1,793 | 581 | 848 |
| அரசாங்கம் சார்பில் திரட்டப்பட்ட வரிகள் (ரூ.மில்லியன்) | 322 | 294 | 1,137 | 1,434 | 1,151 | 1,048 | 1,313 | 1,250 | 1,411 | 908 |
| சமூக வெளிக்கள கூ.ச.பொ. முதலீடுகள் (ரூ.மில்லியன்) | 27.53 | 17.60 | 55.53 | 120.29 | 101.53 | 187.64 | 76.25 | 71.68 | 55.96 | 32.90 |
| **மூலதனப் போதுமை விகிதாசாரங்கள்** | | | | | | | | | | |
| அடுக்கு 1 மூலதனம் / மைய மூலதன விகிதம் (குறிப்பு 4) | 18.76 | 17.72 | 15.12 | 14.36 | 18.38 | 17.56 | 19.56 | 20.22 | 19.12 | 21.15 |
| தேவையான அடுக்கு 1 மூலதனம் / மைய மூலதன விகிதம் (%) [குறிப்பு 4) | 8.00 | 7.00 | 7.00 | 6.00 | 5.00 | 5.00 | 5.00 | 5.00 | 5.00 | 5.00 |
| மொத்த மூலதன விகிதம் / மொத்த இடர் நிறையிடப்பட்ட மூலதன விகிதம் (%) [குறிப்பு 4) | 19.67 | 18.58 | 15.99 | 15.20 | 16.46 | 16.37 | 18.14 | 19.04 | 18.05 | 20.06 |
| தேவையான ஆகக்குறைந்த மொத்த மூலதன விகிதம்/ மொத்த இடர் நிறையிடப்பட்ட மூலதன விகிதம் (%) [குறிப்பு 4) | 12.00 | 11.00 | 11.00 | 10.00 | 10.00 | 10.00 | 10.00 | 10.00 | 10.00 | 10.00 |
| **உற்பத்திசெய்யப்பட்ட மற்றும் அறிவுசார் மூலதனம்** | | | | | | | | | | |
| கிளைகள் (எண்ணிக்கை) | 111 | 104 | 103 | 103 | 103 | 103 | 92 | 89 | 85 | 33 |
| **கடன் தரப்படுத்தல் முக்கிய பாராட்டுக்கள்** | | | | | | | | | | |
| விட்ச் ரேட்டிங்ஸ் லங்கா | A+ (lka) | A+ (lka) | A+ (lka) | AA-(lka) | AA-(lka) | AA-(lka) | AA-(lka) | AA-(lka) | AA-(lka) | AA-(lka) |
| பிஸினஸ் டுடே - முதல் 40 பட்டியலிடப்பட்ட கூட்டாண்மை நிறுவனங்கள் (குறிப்பு 5)' | 27th நிலை | 18th நிலை | 13th நிலை | 13th நிலை | 15th நிலை | 14th நிலை | 17th நிலை | 14th நிலை | 18th நிலை | - |

1. எண்கள் மொத்த செயற்பாட்டு செலவினங்கள் மற்றும் நிதிச் சேவைகளிலான வரியினை உள்ளடக்குகின்றது (கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்களை உள்ளடக்கவில்லை)
2. 2012 இல் நிதியியல் உரிமத்தினை பெற்றதன் பின்னர் கம்பனி நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு ஆரம்பித்தது.
3. 2014 இலிருந்த கரியமில உமிழ்வினை மதிப்பீடு செய்வதனை கம்பனி முன்னெடுத்தது.
4. இலங்கை மத்திய வங்கியானது 01 ஜுலை 2018 முதல் 2018 இன் 3 ஆம் இலக்க நிதி வணிகச் சட்டத்தின் பணிப்புரைகள் மூலதனப் போதுமை தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தியது.
5. பிஸினஸ் டுடே இனுள் பரப்புதல் - முதல் 40 பட்டியலிடப்பட்ட கூட்டாண்மை நிறுவனங்கள்

# இலாபம் அல்லது நட்டக் கூற்று US $ இல்

| மார்ச் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 |
| | US $ '000 | US $ '000 | US $ '000 | US $ '000 |
| வருமானம் | 89,436 | 136,173 | 109,134 | 169,038 |
| வட்டி வருமானம் | 79,871 | 125,520 | 86,712 | 134,756 |
| கழி: வட்டிச் செலவினங்கள் | 36,228 | 65,637 | 37,475 | 67,199 |
| தேறிய வட்டி வருமானம் | 43,643 | 59,883 | 49,237 | 67,557 |
| தேறிய உழைத்த காப்புறுதித் தவணைப்பணங்கள் | - | - | 16,519 | 25,264 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 6,276 | 9,137 | 4,420 | 6,019 |
| தேறிய வர்த்தக வருமானம் | 90 | 817 | 289 | 1,147 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 3,199 | 699 | 1,194 | 1,852 |
| மொத்த செயற்பாட்டு வருமானம் | 53,208 | 70,536 | 71,659 | 101,839 |
| கழி: கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான வலுக்குன்றல் கட்டணங்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் | 2,192 | 5,245 | 3,183 | 6,795 |
| இணை நிறுவனத்திலான முதலீட்டிற்கான வலுக்குன்றல் கட்டணங்கள் | - | - | - | - |
| நன்மதிப்பிற்கான வலுக்கன்றல் கட்டணங்கள் | 407 | 498 | 407 | 498 |
| தேறிய செயற்பாட்டு வருமானம் | 50,609 | 64,793 | 68,069 | 94,546 |
| கழி: | | | | |
| ஆளணிச் செலவினங்கள் | 13,386 | 17,410 | 16,544 | 21,878 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களிலான பெறுமானத்தேய்வு | 2,341 | 3,632 | 2,136 | 3,254 |
| அருவச் சொத்துக்களின் பெறுமதிகுறைப்பு | - | - | - | - |
| நலன்கள், கோரல்கள் மற்றும் காப்புறுதி ஒப்பந்தச் செலவினங்கள் | - | - | 10,798 | 13,381 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | 7,139 | 8,104 | 8,721 | 10,290 |
| மொத்த செயற்பாட்டு செலவினங்கள் | 22,866 | 29,146 | 38,199 | 48,803 |
| நிதிச் சேவைகளிலான வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபம் | 27,743 | 35,647 | 29,870 | 45,743 |
| கழி: நிதிச் சேவைகளிலான வரி | 5,502 | 6,143 | 5,705 | 6,401 |
| நிதிச் சேவைகளிலான வரிக்கு பிந்திய செயற்பாட்டு இலாபம் | 22,241 | 29,504 | 24,165 | 39,342 |
| ஒரு இணை நிறுவனத்தின் இலாப / (நட்டப்) பங்கு (வரி நிகராக) | - | - | - | - |
| வருமான வரிக்குச் செலவினத்திற்கு முன்னரான இலாபம் | 22,241 | 29,504 | 24,165 | 39,342 |
| கழி: வருமான வரிச் செலவினம் | 6,659 | 9,242 | 8,051 | 11,225 |
| வருடத்திற்கான இலாபம் | 15,582 | 20,262 | 16,114 | 28,117 |

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான US$ இன் பரிமாற்றல் வீதம் ரூ. 299.00 (31 மார்ச் 2021 இல் ரூ. 199.04).

இந்த இலாபம் அல்லது நட்டக் கூற்றானது பங்காளிகளது (பங்குதாரர்கள், முதலீட்டாளர்கள், வங்கியாளர்கள் மற்றும நிதிக் கூற்றுக்களின் ஏனைய பயனாளர்கள்) வசதிக்கு மாத்திரமேயன்றி நிதிக் கூற்றுக்களின் பாகமாய் இருப்பதில்லை.

# நிதி நிலைமைக் கூற்று US $ இல்

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021 | 2022 | 2021 |
| | US $ '000 | US $ '000 | US $ '000 | US $ '000 |
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவைகள் | 15,615 | 13,580 | 18,069 | 19,316 |
| வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடனான மீதிகள் | 17,117 | 27,126 | 31,871 | 41,354 |
| நிதிச் சொத்துக்கள் - இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் / வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுபவை | 84 | 552 | 2,840 | 6,440 |
| கடன்களும் வருமதிகளும் | 505,935 | 710,349 | 546,224 | 738,565 |
| காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வருமதிகள் | - | - | 4,423 | 5,147 |
| நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் / விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை | 4,459 | 1,553 | 5,461 | 3,695 |
| பெறுமதிகுறைப்புக் கிரயத்தில் கடன் கருவிகள் / முதிர்வுரை வைத்திருக்கப்படுபவை | 32,867 | 35,140 | 53,557 | 54,922 |
| துணைநிறுவனங்களிலான முதலீடுகள் | 10,748 | 16,146 | - | - |
| ஏனைய சொத்துக்கள் | 2,506 | 2,892 | 2,782 | 4,684 |
| முதலீட்டு ஆதனம் | - | - | 2,745 | 4,123 |
| ஆதனம். பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 4,728 | 5,272 | 13,681 | 20,269 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 6,597 | 11,266 | 5,149 | 7,995 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | 3,835 | 2,089 | 4,832 | 2,987 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 73 | 736 | 467 | 1,334 |
| **மொத்த சொத்துக்கள்** | 604,564 | 826,701 | 692,101 | 910,831 |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகள் | 39,295 | 32,352 | 51,172 | 45,237 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவைகள் | 345,712 | 509,962 | 372,755 | 521,220 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 57,673 | 69,461 | 57,201 | 68,753 |
| ஏனைய நிதிப் பொறுப்புக்கள் | 12,162 | 20,760 | 13,523 | 20,655 |
| காப்புறுதிப் பொறுப்புக்கள் மற்றும் செலுத்தவேண்டிய மீள்காப்புறுதி | - | - | 19,744 | 25,200 |
| செயற்பாட்டு குத்தகைப் பொறுப்புக்கள் | 6,886 | 11,487 | 5,311 | 8,112 |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 6,193 | 1,821 | 7,019 | 4,441 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | - | - | 1,082 | 1,495 |
| ஏனைய பொறுப்புக்கள் | 4,581 | 5,374 | 4,680 | 5,812 |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாடுகள் | 2,235 | 2,949 | 2,505 | 3,305 |
| **மொத்த பொறுப்புக்கள்** | 474,737 | 654,166 | 534,992 | 704,230 |
| **உரித்துவம்** | | | | |
| மூலதனம் | 57,097 | 74,819 | 57,097 | 74,819 |
| சட்டரீதியான ஒதுக்க நிதியம் | 8,829 | 12,093 | 9,128 | 12,384 |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் | 65,156 | 86,213 | 77,334 | 103,909 |
| ஏனைய ஒதுக்கங்கள் | (1,255) | (590) | 3,000 | 2,117 |
| மொத்த பங்குதாரர் உரித்துவம் | 129,827 | 172,535 | 146,559 | 193,229 |
| கட்டுப்பாடற்ற அக்கறை | - | - | 10,550 | 13,372 |
| **மொத்த உரித்துவம்** | 129,827 | 172,535 | 157,109 | 206,601 |
| **மொத்த பொறுப்புக்களும் உரித்துவமும்** | 604,564 | 826,701 | 692,101 | 910,831 |
| **எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்** | 22,917 | 55,256 | 23,074 | 55,492 |

31 மார்ச் 2022 இல் உள்ளவாறான US$ இன் பரிமாற்றல் வீதம் ரூ. 299.00 (31 மார்ச் 2021 இல் ரூ. 199.04).

இந்த நிதி நிலைமைக் கூற்றானது பங்காளிகளது (பங்குதாரர்கள், முதலீட்டாளர்கள், வங்கியாளர்கள் மற்றும நிதிக் கூற்றுக்களின் ஏனைய பயனாளர்கள்) வசதிக்கு மாத்திரமேயன்றி நிதிக் கூற்றுக்களின் பாகமாய் இருப்பதில்லை.

# நிலைபேறுள்ள அறிக்கையிடலிலான சுயாதீன உறுதிமொழி அறிக்கை

Ernst & Young
Chartered Accountants
201, De Saram Place
P.O. Box 101
Colombo 10, Sri Lanka

Tel: +94 11 246 3500
Fax (Gen): +94 11 269 7369
Fax (Tax): +94 11 557 8180
Email: eysl@lk.ey.com
ey.com

Building a better working world

**2021/22 - ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலைபேறுள்ள அறிக்கையிடல் வரன்முறையிலான பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர்கள் சபைக்ககான சுயாதீன உறுதிமொழி அறிக்கை**

**நோக்கெல்லை**

31 மார்ச் 2022 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையில் (அறிக்கை) முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலைபேறுள்ள அறிக்கையிடல் வரன்முறையிலான, உறுதிமொழி ஈடுபாடுகளில் இலங்கை நியமத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு, ஒரு உறுதிமொழி ஈடுபாட்டினை செயலாற்றுமாறு நாம் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் (கம்பனி) முகாமைத்துவத்தினால் ஈடுபடுத்தப்பட்டுள்ளோம்.

- அறிக்கையின் பக்கங்கள் 7 முதல் 8 வரை குறிப்பிட்டுள்ளவாறு நிதிச் செயற்திறனிலான தகவல்களில் நியாயமான உறுதிமொழி.
- உஅமு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள ஏனைய தகவல்களில் வரையறையான உறுதிமொழி.

**பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இனால் பிரயோகிக்கப்பட்டுள்ள வரன்முறை**

அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலைபேறுள்ள அறிக்கையிடல் வரன்முறையானது உலக அறிக்கையிடல் முன்னெடுப்புகளின் (உஅமு) நிலைபேறுள்ள அறிக்கையிடல் வழிகாட்டிகளுக்கமைய, உஅமு உலகளாவிய இணையத்தளமான **www.globalreporting.org** இல் கிடைக்கக்கூடியதாயுள்ளது, தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது உஅமு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

**பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி இன் பொறுப்புக்கள்**

பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பஎல்சி இன் முகாமைத்துவமானது வரன்முறையினை தெரிவுசெய்வதற்கும் மற்றும் குறித்த வரன்முறைக்கு அமைவாக, அனைத்து பொருண்மையான வகையிலும், முன்னிலைப்படுத்துவதற்கு பொறுப்பாளியாகும். இந்த பொறுப்பானது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. உள்ளகக் கட்டுப்பாடுகளை நிறுவிப் பராமரித்தல், போதுமையான பதிவுகளை பராமரித்தல் மற்றும் அறிக்கையின் நிலைபேறுள்ள அறிக்கையிடல் செய்கைமுறைக்கு துணைபுரிவதற்கு பொருத்தமான மதிப்பீடுகளை மேற்கொள்ளல் என்பதுடன், மோசடி அல்லது பிழையின் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருத்தல் வேண்டும்.

**ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் இன் பொறுப்புக்கள்**

எமது பொறுப்பானது பெற்றுக்கொண்ட சான்றுகளின் அடிப்படையில் உஅமு நியமங்களுக்கு அமைவாக அறிக்கையின் முன்னிலைப்படுத்தலில் ஒரு முடிவினை தெரிவிப்பதாகும்.

நாம் எமது ஈடுபாட்டினை பின்வருவனவற்றிற்கு அமைவாக நடாத்தினோம். உறுதிமொழி ஈடுபாடுகளிலான இலங்கை நியமம் SLSAE 3000; இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட கணக்காய்வுகள் அல்லது வரலாற்று நிதியியல் தகவல்களின் மீளாய்வுகள் தவிர்த்த உறுதிமொழி ஈடுபாடுகள் மற்றும் 25 ஜுன் 2022 திகதியிடப்பட்ட ஈடுபாட்டு கடிதத்தில் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி உடன் உடன்பாடுகண்ட இந்த ஈடுபாட்டிற்கான வரையறை நியதிகள் என்பவையாகும்.

இந்த நியமங்கள், வரன்முறைக்கு அமைவாக வருவதற்காக அறிக்கைக்கு ஏதேனும் பொருண்மையான திருத்தங்கள் தேவைப்படுகின்றது என நாம் தெரிந்துள்ளோமா என ஒரு முடிவினை தெரிவிப்பதற்காக மற்றும் ஒரு அறிக்கையினை வழங்குவதற்காக நாம் எமது ஈடுபாட்டினை திட்டமிட்டு செயலாற்றல் வேண்டும் என வேண்டுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட செயன்முறைகளின் தன்மை, நேரம் மற்றும் அளவு என்பன எமது தீர்மானம், மோசடி அல்லது பிழையின் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்று இடரில் ஒரு மதிப்பீடு உள்ளடங்கலாக, என்பவற்றில் தங்கியுள்ளது.

எமது சுயாதீன உறுதிமொழி முடிவிற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு நாம் பெற்றுக்கொண்ட சான்றுகள் போதுமானது மற்றும் பொருத்தமானது என நாம் நம்புகின்றோம்.

**எமது சுயாதீனம் மற்றும் தரக் கட்டுப்பாடு**

நாம் எமது சுயாதீனத்தன்மையினை பராமரித்துள்ளோம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட தொழில்சார் கணக்காளர்களுக்கான நெறிமுறைக் கோவையின் தேவைப்பாடுகளை நாம் சந்தித்துள்ளோம் எனவும் இந்த உறுதிமொழி ஈடுபாட்டினை நடாத்துவதற்கு தேவையாக திறமைகள் மற்றும் அனுபவத்தினைக் கொண்டுள்ளோம் எனவும் உறுதிப்படுத்துகின்றோம்.

Partners: H M A Jayesinghe FCA FCMA, R N de Saram ACA FCMA, Ms. N A De Silva FCA, W R H De Silva FCA ACMA, Ms. Y A De Silva FCA, Ms. K R M Fernando FCA ACMA, N Y R L Fernando ACA, W K B S P Fernando FCA FCMA, Ms. L K H L Fonseka FCA, D N Gamage ACA ACMA, A P A Gunasekera FCA FCMA, A Herath FCA, D K Hulangamuwa FCA FCMA LLB (London), Ms. A A Ludowyke FCA FCMA, Ms. G G S Manatunga FCA, A A J R Perera ACA ACMA, Ms. P V K N Sajeewani FCA N M Sulaiman ACA ACMA, B E Wijesuriya FCA FCMA, C A Yalagala ACA ACMA

Principals: G B Goudian ACMA, Ms. P S Paranavitane ACMA LLB (Colombo), T P M Ruberu FCMA FCCA

A member firm of Ernst & Young Global Limited

# நிலைபேறுள்ள அறிக்கையிடலிலான சுயாதீன உறுதிமொழி அறிக்கை

EY பின்வருவனவற்றையும் பிரயோகிக்கின்றது, தரக் கட்டுப்பாட்டிலான இலங்கை நியமம் (SLSQC 1), வரலாற்று நிதியியல் தகவல்களில் கணக்காய்வுகள் மற்றும் மீளாய்வுகளை செயலாற்றும் நிறுவனங்களுக்கான தரக் கட்டுப்பாடு, மற்றும் ஏனைய உறுதிமொழி மற்றும தொடர்புடைய சேவைகள் ஈடுபாடுகள். இதன் பிரகாரம், பின்வருவன உள்ளடங்கலான ஒரு விரிவான தரக்கட்டுப்பாட்டு முறைமையினை பராமரிக்கின்றது. நெறிமுறை தேவைப்பாடுகள், தொழில்சார் நியமங்கள் என்பவற்றுடன் இணக்கப்பாடு தொடர்பான ஆவணப்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள்.

### செயலாற்றப்பட் செயன்முறைகளின் விவரணை

SLSAE 3000 இற்கு அமைவாக ஒரு சுயாதீன உறுதிமொழியினை வழங்குவதற்காக நாம் எமது செயன்முறைகளை செயலாற்றினோம்.

